வெளியீடு—5—1—1972]
Issued—5—1—1972]

# தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை 1971 ஜூலை 27

Tuesday 27th July 1971

தொகுதி X - எண் 1

Volume X —No. 1

தமிழ் நாடு அரசு
1971

GOVERNMENT OF TAMIL NADU
1971

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9

Legislative Assembly Department
Fort St. George, Madras-9.

விலை 50 காசுகள்]
Price 50 Paise]

61545

## உள்ளடக்கம்.


| | |
|---|---|
| | பக்கங்கள். |
| 1 வினாக்கள்—விடைகள் .. .. .. .. .. | 1–29 |
| 2 கவன ஈர்ப்பு— | |
| கீழ்ப்பாக்கம் மருத்துவமனை செவிலியர் தவறாக மன நோய் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டதும், மருத்துவ மனைப் பணியாளரிடையே ஏற்பட்டுள்ள அமைதியின்மையும் .. .. .. .. .. | 29–32 |
| 3 அறிவிப்புகள்— | |
| (அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு .. .. | 33 |
| 4 அரசினர் சட்ட முன்வடிவுகள்— | |
| (அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு .. .. | 33 |
| (ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோக தாரர்கள் (உரிமை வழங்கல்) சட்ட முன்வடிவு .. | 33 |
| (இ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மை பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு .. .. .. | 33–80 |
| (ஈ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு .. .. .. .. .. | 80 |
| 5 பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. | 80–93 |

## உள்ளடக்கம்.


பக்கங்கள்.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு—
   முன்னாள் உறுப்பினர் திரு. வி. கே. பழனிசாமி கவுண்டர் மறைவு குறித்து .. .. .. 187

2. வினாக்கள்—விடைகள் .. .. .. .. .. 187–266

3. நடைமுறைக் கேள்வி—
   அண்ணாமலைப் பல்கலைக் கழக நிகழ்ச்சிகள் குறித்து தகவல் கோரல் .. .. .. .. .. 266

4. முதலமைச்சரின் விளக்க உரை— .. .. ..
   அண்ணாமலைப் பல்கலைக் கழக நிகழ்ச்சிகள் குறித்து .. 267–269

5. ஒற்றிவைப்புத் தீர்மானம்—
   உதகை போட்டோ ஃபில்ம்ஸ் தொழிலாளர் கைதானதும், அதனால் ஏற்பட்டுள்ள வேலை நிறுத்தமும் .. 270

6. கவன ஈர்ப்பு—
   (அ) பேச்சிப்பாறை ஏரியில் ஏற்பட்ட விபத்தும், அதனால் ஏற்பட்டுள்ள உயிர்ச் சேதமும் குறித்து.
   (ஆ) சில்லரை அங்காடிகளில் அரிசி விலை உயர்வும், அதன் விளைவாக ஏற்பட்டுள்ள கிளர்ச்சிகள் குறித்து .. .. .. .. .. 271–274

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—
   (அ) 1971-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த பதவி கால நீட்டிப்பு) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண். 27/1971) .. .. 274–275
   (ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண். 28/1971) .. .. .. ..
   (இ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நகர–நாட்டுப்புற அமைப்பு சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண். 1/1971) கூட்டாய்வுக் குழு திருத்தியமைத்தவாறு .. .. ..
   (ஈ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 25/1971) .. .. 275–334
   (உ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஒருங்கிணைந்த மருத்துவப் பயிற்சியாளர்கள் பதிவு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண். 26/1971) .. .. ..
   (ஊ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை–வாடகைக் கட்டுப்பாடு) நடவடிக்கைகளைச் செல்திறன் ஆக்குதல் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண். 17/1971) .. .. .. .. .. ..
   (எ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை–வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாம் திருத்த சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண். 24/1971) .. .. .. ..

8. அறிவிப்புகள்—

(அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 25/1971) .. ..

(ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஒருங்கிணைந்த மருத்துவப் பயிற்சியாளர்கள் பதிவு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன் வடிவு 26/1971) .. .. .. .. 277–334

(இ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாம் திருத்த சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 24/1971) .. .. ..

9. அரசினர் தீர்மானம்—

அலுவல் வரிசையில் மாற்றம் .. .. .. 329

10. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. 334–335


உள்ளடக்கம்.

பக்கங்கள்.


1. வினாக்கள்—விடைகள் .. .. .. .. .. 353–354

2. ஒத்திவைப்புத் தீர்மானம்—

எண்ணூரிலுள்ள மீன் உறைய வைக்கும் தொழிற்சாலை (ஃப்ரீஸிங் ப்ளாண்ட்) மூடி இருப்பதும் அதன் விளைவுகள் குறித்தும் .. .. 385–388

3. அரசினர் தீர்மானங்கள்—

(அ) விதி 41(3) ஐ தளர்த்தல் .. .. ..
(ஆ) தமிழ்நாடு 1931-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் விவர அட்டவணைகளைத் திருத்த அரசு பிறப்பிக்கவிருக்கும் வரைவு விதிகள் .. .. .. .. ..
(இ) தமிழ்நாடு 1966-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின்கீழ் வெளியிடப்பவிருக்கும் வரைவு அறிவிப்பு .. .. .. .. ..

388–474

4. கவன ஈர்ப்பு—

(அ) குன்னூரில் குடிநீர் கிடைக்காமையும், அரசு எடுக்கவேண்டிய நடவடிக்கை குறித்தும் ..
(ஆ) இராசபாளையம் திரு. பெ. சு. கந்தையா கொலை செய்யப்பட்டதும் அதன் விளைவுகளும் .
(இ) திருமணி தொழுநோய் நிறுவன ஊழியர்கள் நடத்தும் போராட்டம் குறித்து .. ..

388–394

5. அறிக்கை அளித்தல்—

தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மீதான மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை .. .. .. 394

6. அரசினர் சட்டமுன்வடிவுகள்—

(அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1971)
(ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு விற்பனை வரி (மேல்வரி) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண். 22/1971) .. ..
(இ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண். 29/1971) .. . .. .. .. ..
(ஈ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நீதிமன்றக் கட்டணங்கள் வழக்குகள் மதிப்பீடுகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண். 23/1971) .. .. .. .. ..
(உ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண். 31/1971) .. ..

394–464

(ஊ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு—ரயத்துவாரியாக மாற்றல்) திருத்த சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண். 15/1971) .. .. .. ..
(எ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சிறு இனும்கள் (எடுத்து விடுதல், ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்டமுன்வடிவு (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு எண். 34/1971) .. .. ..
(ஏ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்கல்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை முன்வடிவு எண். 30/1971) .. .. .. .. .. .. } 476–477

7. அறிவிப்புகள்—
(அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்கல்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 30/1971) .. .. .. .. ..
(ஆ) வரவு—செலவுக் கூட்டத் தொடரில் பேரவை நிகழ்ச்சிகள் பற்றிய புள்ளி விவரங்கள் .. } 464–473

8. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. 477–478

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்.

திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (முதலமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, செய்தி, விளம்பரம், திரைப்படச் சட்டம், பயண அனுமதிச் சீட்டுகள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, சரக்குகளின் விலைகள்—வழங்கல் குறித்த சட்டம், தமிழ்நாடு கழிவுநீர்-குடிநீர் வாரியம், குடிசைமாற்று வாரியம்.

2. **மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் (கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சட்டமன்றம்.

3. **மாண்புமிகு திரு. க. அன்பழகன் (பொதுநலத் துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுச் சுகாதாரம், மருத்துவம், கால்நடை வளர்ப்பு.

4. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிலாளர், எழுது-பொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், சிரணி, எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், பத்திரப் பதிவு.

5. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

6. **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உணவு-வருவாய்த் துறை அமைச்சர்):** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—உணவு, வணிக வரிகள், வருவாய், மாவட்ட துணை ஆட்சித் தலைவர்கள், வருவாய்த்துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள்.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப்பொருள்கள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப் பணித் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக்கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—கூட்டுறவு, துறைமுகங்கள், வேளாண்மை, மறுநிதி உதவி, மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள் நீங்கலாக வேளாண்மை இயக்கத்தின் வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம்.

10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (வேளாண்மைத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—வேளாண்மை, உணவு உற்பத்தி.

11. மாண்புமிகு திரு. க. இராசாராம் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பின்தங்கிய வகுப்பினர் நலன், சுற்றுலா, வீட்டு வசதி, இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.

13. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

14. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—அறக்கட்டளைகள், பால் வழங்கு துறை, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான-கிராமதான இயக்கங்கள்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## Governor of Tamil Nadu

Thiru KODARDAS KALIDAS SHAH

1. The Hon. Thiru M. KARUNANIDHI (Chief Minister) : Minister in-charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers, Police, Elections, Prohibition, Information and Publicity, Cinematograph Act, Passports, Newsprints Control, Prices and Supplies of Goods Act, Tamil Nadu Drainage and Water Board and Slum Clearance Board.

2. The Hon. Thiru V. R. NEDUNCHEZHIYAN (Minister for Education and Local Administration) : Minister in-charge of Education including Technical Education, Official Language, Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions and Legislature.

3. The Hon. Thiru K. ANBAZHAGAN (Minister for Public Health) : Minister in-charge of Public Health, Medicine and Animal Husbandry.

4. The Hon. Thiru N. V. NATARAJAN (Minister for Labour) : Minister in-charge of Labour, Stationery and Printing, Government Press, Prosperity Brigade, Legislation on Weights and Measures, Statistics and Registration.

5. The Hon. Dr. (Thirumathi) SATYAVANIMUTHU (Minister for Harijan Welfare) : Minister in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indians Overseas, Refugees and Evacuees.

6. The Hon. Thiru P. U. SHANMUGAM : (Minister for Food and Revenue) : Minister in-charge of Food, Commercial Taxes, Revenue Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

7. The Hon. Thiru S. MADHAVAN (Minister for Industries) : Minister in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. The Hon. Thiru S. J. SADIQ PASHA (Minister for Public Works) : Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Waqfs.

9. The Hon. Thiru Si. Pa. ADITANAR (Minister for Co-operation): Minister in-charge of Co-operation, Ports, Agricultural Refinance, Agricultural Engineering Wing of the Directorate of Agriculture except Soil Conservation Schemes, Khadi and Village Industries and Rural Industries Project.

10. The Hon. Thiru A. P. DHARMALINGAM (Minister for Agriculture): Minister in-charge of Agriculture and Food Production.

11. The Hon. Thiru K. RAJARAM (Minister for Backward Classes): Minister in-charge of Backward Classes, Tourism, Housing and Accommodation Control.

12. The Hon. Thiru O. P. RAMAN (Minister for Electricity): Minister in-charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

13. The Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Transport): Minister in-charge of Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

14. The Hon. Thiru M. KANNAPPAN (Minister for Religious Endowments): Minister in-charge of Religious Endowments, Milk, Ex-Servicemen, Bhoodan and Gramdan.

## தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

---

**பேரவைத் தலைவர்:**

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்

**பேரவைத் துணைத் தலைவர்:**

மாண்புமிகு திரு. பெ. சீனிவாசன்

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

திரு. மா. வெ. கரிவேங்கடம்
திருமதி ஜோதி வெங்கடாசலம்
திரு. நா. வீராசாமி
திரு. நீ. அன்புச்செழியன்
திரு. என். கே. பழனிசாமி
திரு. எம். ஏ. லத்தீப்

**சட்டப் பேரவைச் செயலாளர்**

திரு. சா. து. நடராசன், எம்.ஏ., பி.எல்.

**துணைச் செயலாளர்**

திரு. கு. புஜங்க ராவ், பி.ஏ., எல்.எல்.பி.

**உதவிச் செயலாளர்கள்**

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி)
திரு. ஜி. இராகவன்
திரு. சி. கே. இராமசாமி, பி.ஏ., பி.எல்.
திரு. ஆர். மாணிக்கம், பி. எஸ்ஸி., பி.எல்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி (2) |
|---|---|
| 1 அண்ணாமலை, திரு. சி. வி. எம். .. | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். எ. .. .. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை. .. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 அழகமுத்து, திரு. து. ப. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியப்புரம். |
| 6 அழகர்சாமி, திரு. சோ. .. .. | கோவில்பட்டி. |
| 7 அழகுத்தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 8 அனந்தநாயகி, திருமதி த. ந. .. | மயிலாப்பூர். |
| 9 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைசசர்). .. | புரசைவாக்கம். |
| 10 அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 11 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.) |
| 12 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 13 ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 14 ஆல்டா எம். ஃபௌலர் திருமதி .. | நியமன உறுப்பினர். |
| 15 ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 16 ஆறுமுகம், திரு. எஸ். .. .. .. | வீரபாண்டி. |
| 17 ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 18 இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திகுளம். |
| 19 இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 20 இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி (செ.வ.) |
| 21 இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 22 இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை. |
| 23 இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 24 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம்-II. |
| 25 இராசு, திரு. ஜே. எஸ். .. .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 26 இராதாகிருட்டிணன், திரு. எம். எஸ். .. | தண்டராம்பட்டு. |
| 27 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |
| 28 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |
| 29 இராமநாதன், திரு. சி. .. .. | அறந்தாங்கி. |
| 30 இராமலிங்கம், திரு. இரா. .. .. | தூத்துக்குடி. |
| 31 இராமலிங்கம், திரு. செ. .. .. | கடலாடி (செ.வ.) |
| 32 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ வ) |
| 33 இராமன், திரு. மூ. .. .. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 34 இராஜாங்கம், திரு. என். .. .. | குறிஞ்சிப்பாடி (செ.வ.) |
| 35 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. .. | கன்னியாகுமரி. |
| 36 இளங்கோவன், திரு. கோ. .. .. | திருவையாறு. |
| 37 இளஞ்செழியன், திரு. வீ. சா. .. .. | விராலிமலை. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 38 எட்டியப்பன், திரு. பூ. | பெரணமல்லூர். |
| 39 எட்டியண்ணன், திரு. க. உரோ. | திருச்செந்தூர். |
| 40 கணபதி, திரு. நா. | பாபநாசம். |
| 41 கணபதி, திரு. டி. | நாங்குனேரி. |
| 42 கணேசன், திரு. எல். | ஒரத்தநாடு. |
| 43 கணேசன், திரு. சி. | குற்றாலம். |
| 44 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | கிணத்துக்கடவு. |
| 45 கண்ணன், திரு. எம். ஆர். | பேஸின்பிரிட்ஜ். |
| 46 கதிரவன், திரு. கா. மு. | தென்காசி. |
| 47 கந்தசாமி, திரு. கே. பி. | சாத்தான்குளம் |
| 48 கந்தசாமி, திரு. எம். | குளித்தலை. |
| 49 கந்தப்பன், திரு. செ. | திருச்செங்கோடு. |
| 50 கரிவெங்கடம், திரு. மா. வெ. | பாலக்கோடு. |
| 51 கருணாநிதி. மாண்புமிகு திரு. மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 52 கருணாநிதி, திரு. தாழை மு. | திருவாரூர் (செ.வ.) |
| 53 கருணைநாதன், திரு. சோ. | கூனூர். |
| 54 கருப்பையா, திரு. ஆ. | கங்கைகொண்டான் (செ.வ.). |
| 55 காசிராமன், திரு. நா. | கும்பகோணம் |
| 56 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி, திரு | முதுகளத்தூர். |
| 57 காமாட்சி, திரு. கு. | திருவரம்பூர். |
| 58 கார்த்திசேன், திரு. வீ. | இராதாபுரம். |
| 59 காவேரிமணியம், திரு. சொ. | திருப்பரங்குன்றம். |
| 60 காளிமுத்து, திரு. கா. | சிவகாசி. |
| 61 கிட்டப்பா, திரு. என். | மாயூரம். |
| 62 கிருட்டிணன், திரு. நா. | பேரணம்பட்டு, (செ. வ.) |
| 63 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம். |
| 64 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. | திருச்சிராப்பள்ளி-1. |
| 65 கிருஷ்ணன், திரு. கே. ஆர். | ஊத்தங்கரை. |
| 66 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 67 குமாரசாமி, திரு. அ. சே. | திருக்கோயிலூர். |
| 68 குமாரசாமி. திரு. கே. என். | பல்லடம். |
| 69 குருசாமி, திரு. நா. வெ. | ஆண்டிப்பட்டி. |
| 70 கேசவலு, திரு. தே. | கள்ளக்குறிச்சி. |
| 71 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். | உதனப்பள்ளி. |
| 72 கோபால், திரு. எம். | குன்னத்தூர், (செ. வ.) |
| 73 கோபால், திரு. கே. பி. | கம்பம். |
| 74 கோபால், திரு. பி. | கோயம்புத்தூர் மேற்கு. |
| 75 கோவிந்தசாமி, திரு. வி. செ. | காவேரிப்பட்டினம் |
| 76 கோவிந்தராசன், திரு. ஆர். | கடலூர். |
| 77 கோவிந்தராசன் துரை, திரு. | கந்தர்வகோட்டை. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 78 கோவிந்தன், புலவர் கா. | செய்யாறு. |
| 79 கோவை செழியன், திரு. | காங்கேயம். |
| 80 சகாதேவன், திரு. எஸ். | செஞ்சி. |
| 81 சங்குமுத்து தேவர், திரு. ச. | அம்பாசமுத்திரம். |
| 82 சதாசிவம், திரு. சே. | ஆண்டிமடம். |
| 83 சண்முகசுந்தரம், திரு. அ. ப. | பொள்ளாச்சி. |
| 84 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 85 சண்முகம் திரு. பெரி. | திருவாடானை. |
| 86 சண்முகம், திரு. மு. | விழுப்புரம். |
| 87 சத்தியமூர்த்தி, திரு. மு. | புதுக்கோட்டை. |
| 88 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு டாக்டர் (திருமதி) (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.) |
| 89 சந்தியேந்திரன், திரு. எம். எஸ். கே. | இராமநாதபுரம். |
| 90 சம்பத், திரு. டி. வி. | செம்பனார்கோயில். |
| 91 சாதிக்பாட்சா, மாண்புமிகு திரு. எஸ். ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 92 சாரதி, திரு. மா. பா. | வேலூர். |
| 93 சிதம்பரம், திரு. சித. | காரைக்குடி. |
| 94 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. | சேரன்மகாதேவி. |
| 95 சிவபெருமாள், திரு. கோ. | அரியலூர். |
| 96 சிறைமீட்டான், திரு. தொ. க. | பரமக்குடி, (செ. வ.) |
| 97 சீனிவாசன், திரு. பெ. (பேரவைத் துணைத் தலைவர்). | விருதுநகர். |
| 98 சீனிவாசன், திரு. தொ. ப. | போளூர். |
| 99 சின்னசாமி, திரு. அ. | செயங்கொண்டன் (செ.வ.) |
| 100 சின்னசாமி, திரு. ஆர். | தர்மபுரி. |
| 101 சின்னசாமி, திரு. மு. | மொடக்குறிச்சி. |
| 102 சின்னசாமி, டாக்டர் வ. | ஏற்காடு (ஆ.வா.). |
| 103 சின்னராசு, டாக்டர் ச. அ. | ஹரூர், (செ.வ.) |
| 104 சின்ன வெள்ளையன், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ.வ.) |
| 105 சுந்தரம், திரு. ஒ. என். | திண்டுக்கல். |
| 106 சுப்ரமணியம், திரு. எஸ். கே. | சத்யமங்கலம். |
| 107 சுப்பிரமணியம், திரு. கே. எம். | தியாகராயநகர். |
| 108 சுப்பிரமணியன், திரு. மா. | ஈரோடு. |
| 109 சுப்பு, திரு. க. | ராஜபாளையம். |
| 110 சுப்பையா, திரு. ஆ. கு. | கோட்டூர் (செ.வ.). |
| 111 சுப்பையா, திரு. கே. வி. | ஆலங்குடி. |
| 112 சுப்பையா, திரு. ச. | சங்கரன்கோயில் (செ.வ.) |
| 113 சுப்பையா, திரு. எ. ஆர். | கடயநல்லூர். |
| 114 சுப்பிரமணியம், திரு. எ. | சிங்கநல்லூர். |
| 115 சுப்பிரமணியன், திரு. வீ. | உளுந்தூர்பேட்டை. |
| 116 சுருளிவேல், திரு. மு. | போடிநாயக்கனூர். |
| 117 சுரேந்திரன், திரு. எம். | மேட்டூர். |
| 118 சுவாமிதாஸ், திரு. எ. | பத்மநாபபுரம். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 119 செபமாலை, திரு. கோ. .. .. .. | மங்களூர் (செ.வ.). |
| 120 ஜெயராமன், திரு. இ. .. .. .. | சேலம்-1. |
| 121 செல்லதுரை, திரு. வீ. .. .. .. | ஓமலூர் (செ.வ.). |
| 122 செல்லையா, திரு. குழ. .. .. | பேராவூரணி. |
| 123 செல்வராஜ், திரு. எம். .. .. .. | விருத்தாசலம். |
| 124 சேதுராமன், திரு. சி. .. .. .. | சிவகங்கை. |
| 125 சோனையா, திரு. த. .. .. .. | மானாமதுரை. |
| 126 சோமசுந்தரம், திரு. ந. .. .. .. | வலங்கைமான் (செ.வ.). |
| 127 சௌடி சுந்தரபாரதி, திரு. .. .. | அருப்புக்கோட்டை. |
| 128 சௌந்திரபாண்டியன், திரு. பெ. .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 129 டென்னிஸ், திரு. என். .. .. | கிள்ளியூர். |
| 130 தங்கமணி, திரு. கே. டி. கே. .. .. | மதுரை மேற்கு. |
| 131 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 132 தருமலிங்கம், திரு. ந. .. .. .. | ரிஷிவந்தியம் (செ.வ.). |
| 133 தவமணித் தேவர், திரு. வி. .. .. | சேடபட்டி. |
| 134 திம்மராயக் கவுண்டர், திரு. டி சி. .. | நாட்ரம்பள்ளி. |
| 135 தியாகராசன், திரு. அ. .. .. .. | திருமயம். |
| 136 தியாகராசன், திரு. இ. எஸ். .. .. | திருத்தணி. |
| 137 திருப்பதி, திரு. கு. .. .. .. | மதுரை சென்ட்ரல். |
| 138 துரைசாமி, திரு. எ. க. .. .. .. | குடியாத்தம். |
| 139 துரைசாமி, திரு. சு. .. .. .. | திருப்பூர். |
| 140 துரைமுருகன், திரு. .. .. .. | காட்பாடி. |
| 141 துரைராஜ், திரு. சு. ம. .. .. | திருவள்ளூர் (செ.வ.). |
| 142 தூயமணி, திரு. மே. சி. .. .. | மேட்டுப்பாளையம். |
| 143 தேவராசன், திரு. எம். .. .. | உதகமண்டலம். |
| 144 தேவேந்திரன், திரு. அ. .. .. | நன்னிலம் (செ.வ.). |
| 145 தோப்பூர் திருவேங்கடம், திரு. .. | கணியம்பாடி. |
| 146 நடராசன், திரு. ஈ. எம். .. .. | அந்தியூர். |
| 147 நடராசன், திரு. எஸ். .. .. .. | தஞ்சாவூர். |
| 148 நரசிம்மன், திரு. எ. சி. .. .. | ஆரணி. |
| 149 நல்லசாமி, திரு. எஸ். .. .. .. | கரூர். |
| 150 நாகராஜன், திரு. க. .. .. .. | வடமதுரை. |
| 151 நாகலிங்கம், திரு. பா. .. .. .. | பொன்னேரி (செ.வ.). |
| 152 நாச்சிமுத்து, திரு. நா. .. .. | ஒட்டஞ்சத்திரம். |
| 153 நாச்சியப்பன், திரு. எ. எம். டி. .. | ஆத்தூர். |
| 154 நாச்சியப்பன், திரு. ந. .. .. .. | சங்கராபுரம். |
| 155 நாராயணசாமி, திரு. மா. வே. .. | திருவொற்றியூர். |
| 156 நெடுஞ்செழியன், மாண்புமிகு திரு. இரா. (அமைச்சர்—பேரவை முன்னவர்). | திருவல்லிக்கேணி. |
| 157 நைனுமலை, திரு. இரா. .. .. | ராசிபுரம். |
| 158 பத்மநாபன், திரு. பொ. .. .. | திருநெல்வேலி. |
| 159 பத்மாவதி, திருமதி எ. கோ. .. .. | முசையூர். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். | தொகுதி |
|---|---|
| (1) | (2) |
| 160 பரந்தாமன், திரு. ஆ. .. .. .. | கடம்பத்தூர். |
| 161 பரமசிவம், திரு. எம. .. .. .. | தாரமங்கலம் |
| 162 பலராமன், திரு. என். எஸ். .. .. | அரக்கோணம். |
| 163 பழனிசாமி, திரு. நா. .. .. .. | பொங்கலூர். |
| 164 பழனிசாமி, திரு. என். கே. .. .. | பெருந்துறை. |
| 165 பழனிசாமி, திரு. மு. .. .. .. | வெள்ளகோயில். |
| 166 பழனிச்சாமி, புலவர். சி. .. .. | பழனி (செ.வ.). |
| 167 பழனியப்பன், டாக்டர் ச. மு. .. .. | கோபிசெட்டிபாளையம். |
| 168 பழனியம்மாள், திருமதி வி. ப. .. | தாராபுரம். |
| 169 பழனிவேலன், திரு. க. .. .. | வரகூர். |
| 170 பழனிவேலன், திரு. மு. .. .. | நாமக்கல். |
| 171 பழனிவேலு, திரு. வி. .. .. .. | ஆத்தூர். |
| 172 பழனிவேல் ராஜன், திரு. .. .. | தேனி. |
| 173 பன்னீர்செல்வம், திரு. எம். .. .. | ஆம்பூர் (செ.வ.). |
| 174 பாண்டுரங்கம், திரு. சி. .. .. | செங்கம் (செ.வ.). |
| 175 பாலகிருட்டிணன், திரு. கு. .. .. | மன்னார்குடி. |
| 176 பாலசுந்தரம், திரு. வை. .. .. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 177 பாலையா, திரு. எ. .. .. .. | கொளச்சல். |
| 178 பெரியசாமி, திரு. கு. .. .. .. | கொடவாசல். |
| 179 பெரியசாமி, திரு. தி. ஈ. .. .. | அவிநாசி. |
| 180 பெருமாள், திரு. செ. .. .. .. | காட்டுமன்னார்கோயில். |
| 181 பெருமாள், திரு. எ. ஆர். .. .. | காரியப்பட்டி. |
| 182 பொம்மன், திரு. கு. அ. .. .. | கூடலூர் (செ.வ.). |
| 183 பொன் சொக்கலிங்கம், திரு. பி. .. .. | சிதம்பரம். |
| 184 பொன்னப்ப நாடார், திரு. ஆர். .. | விளவங்கோடு. |
| 185 பொன்னுமலை, திரு. தி. .. .. | பனைமரத்துப்பட்டி. |
| 186 பொன்னுரங்கம், திரு. எ. எம். .. | சோளிங்கபுரம். |
| 187 மணலி கந்தசாமி, திரு. சி. .. .. | திருத்துறைப்பூண்டி. |
| 188 மணியன், திரு. பி. எஸ். .. .. | சோழவந்தான். |
| 189 மதியழகன், மாண்புமிகு திரு. கே. எ. (பேரவைத் தலைவர்). | ஆயிரம் விளக்கு. |
| 190 மருதாசலம், திரு. என். .. .. | பேரூர் (செ.வ.). |
| 191 மலைக்கண்ணன், திரு. வீ. .. .. | இளையாங்குடி. |
| 192 மலைச்சாமி, திரு. பெ. .. .. .. | மேலூர் வடக்கு. |
| 193 மன்னியப்பன், திரு. சி. .. .. .. | கிருஷ்ணகிரி. |
| 194 மாணிக்கம், திரு. என். .. .. | பென்னகரம். |
| 195 மாணிக்கவாசகம், திரு. இரா. .. .. | தொண்டாமுத்தூர். |
| 196 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். |
| 197 மாரிமுத்து, திரு. எ. ஆர். .. .. | பட்டுக்கோட்டை. |
| 198 மாரிமுத்து, திரு. மூ, .. .. .. | தலைவாசல் (செ.வ.). |
| 199 மீனாட்சிசுந்தரம், திரு. மா. .. .. | வேதாரண்யம். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 200 முகமது காதர் முகைதீன், திரு. எஸ். .. | மேலப்பாளையம். |
| 201 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. .. | லால்குடி. |
| 202 முத்து, திரு. வ. .. .. .. | சங்கரி (செ.வ.) |
| 203 முத்துசாமி, திரு. ப. .. .. .. | வேடசந்தூர். |
| 204 முத்துச்செல்வன், திரு. பு. செ. .. | முசிறி. |
| 205 முத்துவேல், திரு. ந. .. .. . | வானூர் (செ.வ.). |
| 206 முத்தையா, திரு. கே. கே. .. .. | கடலூர். |
| 207 முத்தையா, திரு. எம். .. .. . | ஒட்டப்பிடாரம் (செ.வ.). |
| 208 முருகையன், திரு. எஸ். . . | கலசப்பாக்கம். |
| 209 முனியாண்டி, திரு. ஆ. .. .. .. | நிலக்கோட்டை (செ.வ.). |
| 210 முனுஆதி, திரு. மு. .. .. . | திருப்போரூர். |
| 211 முனுசாமி, திரு. ரா. ரா. .. .. | மேல்மலையனூர். |
| 212 மொய்தீன், திரு. திருப்பூர் ஏ. எம். .. | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 213 மோசஸ், திரு. ம. .. .. .. | நாகர்கோவில். |
| 214 ரங்கநாதன், திரு. கே. .. .. .. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 215 ராமசாமி, திரு. இ. .. .. .. | வால்பாறை. |
| 216 ராமசாமி, திரு. ஜி. .. .. .. | திருப்பத்தூர். |
| 217 ராமராசன், திரு. வ. க. .. .. .. | பவானிசாகர் (செ.வ.). |
| 218 ராஜா, திரு. ஏ. எம். .. .. .. | பவானி. |
| 219 ராஜாராம், திரு. ஜி. .. .. .. | திண்டிவனம். |
| 220 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |
| 221 லத்தீப், திரு. எம். ஏ. .. .. .. | வாணியம்பாடி. |
| 222 வகாப், திரு. கே. ஏ. .. .. .. | ராணிப்பேட்டை. |
| 223 வடிவேலு, திரு. சி. க. .. .. .. | தோட்டியம். |
| 224 வடிவேல், திரு. எஸ். .. .. .. | சீர்காழி (செ.வ.). |
| 225 விசுவநாதன், திரு. செ. கோ. .. | செங்கல்பட்டு. |
| 226 வீராசாமி, திரு. நா. .. .. .. | ஆற்காடு. |
| 227 வெங்கடசாமி, திரு. பி. .. .. | ஹோசூர். |
| 228 வெள்ளத்துரை, திரு. அ. .. .. | வாசுதேவநல்லூர். |
| 229 வேதாசலம், திரு. மு. .. .. .. | வண்ணாரப்பேட்டை. (சென்னை நகரம்). |
| 230 வேலப்பன், திரு. சி. வே. .. .. | கபிலமலை. |
| 231 வேழவேந்தன், திரு. கா. .. .. | கும்மிடிபூண்டி. |
| 232 ஜேம்ஸ், திரு. ஜே. .. .. .. | திருவட்டார். |
| 233 ஜோதி வெங்கடாசலம், திருமதி .. | ஸ்ரீரங்கம் (செ.வ.). |
| 234 ஹாண்டே, டாக்டர் எச். வி. .. .. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |
| 235 வெற்றிடம் .. .. .. .. | உசிலம்பட்டி. |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.**

| தொடர் எண்ணும், பெயரும். | |
|---|---|
| 1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன் .. | அமைச்சர். |
| திரு. எஸ். கோவிந்த் சுவாமிநாதன் .. | தலைமை வழக்கறிஞர். |

# தமிழ் நாடு சட்டப் பேரவை.

---

*செவ்வாய்க்கிழமை, 1971 ஜூலை 27.*

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

வணிகப் பாடங்களுக்கானத் தேர்வுகள்

**465 வினா—திரு. நா. வீராசாமி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தட்டெழுத்து, சுருக்கெழுத்து போன்ற வணிகப் பாடங்களுக்கான அரசுத் தேர்வு மே மாதம் 15-ம் தேதியே முடிந்ததும், விடைத் தாள்கள் தேர்வாளர்களுக்கு 14—6—1971 வரை அனுப்பப்படவில்லை என்பது உண்மையா?*

*(இ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?*

*(உ) அதன்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?*

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.*

*(இ) சுமார் 40,000 நபர்கள் வணிகப் பாடங்களுக்கான தேர்வுகள் எழுதினர். அவர்களது விடைத்தாள்களை மத்திய அலுவலகத்திற்கு வரவழைக்கப்பட்டு அதன் பின்னர், விடைத்தாள் திருத்துபவர்களுக்கு 3—6—1971 முதல் பகுதிப் பகுதியாக அனுப்பப்பட்டு 16—6—1971-ல் கடைசிப்பகுதி அனுப்பப்பட்டது. மற்றும், பள்ளியிறுதி தேர்வு முடிவுகள் வெளியிடும் அலுவலில் அலுவலக ஊழியர் அனைவரும் ஈடுபட்டிருந்த காரணத்தால், 3—6—1971 முதல்தான் விடைத்தாள்கள் திருத்துபவர்களுக்கு பகுதிகளாக அனுப்ப முடிந்தன.*

*(உ) கேள்விக்கு இடமில்லை.*

*திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, இந்த வணிகப் பாடங்களுக்கான தேர்வுகள் ஆண்டுக்கு இரு முறை நடப்பது வழக்கம். இப்படிக் காலம் கடந்து விடைத் தாள்களை அனுப்பிய காரணத்தால் முடிவுகள் வருவதற்குக் கால தாமதம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. இந்த மாதத்திலே அடுத்த தேர்வுக்குப் பணம் கட்ட வேண்டும். ஆனால், இதுவரையில் 'ரிஸல்ட்' வரவில்லை. எனவே, இப்படிப்பட்ட 'டிலே' அந்த இலாக்காவில் உண்டாகிக் கொண்டிருக்கிறது.*

இதை உணர்ந்து நம்முடைய அரசாங்கம் வேறொரு இலாக்காவிற்கு இதை மாற்றுவதற்கான திட்டங்களை இப்பொழுது ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது என்று அறிகிறேன். வேறொரு துறைக்கு இதை மாற்றுவதற்குப் பதிலாக, தனியாகவே ஒரு இயக்குநரை நியமிக்குமா? ஆண்டுக்கு 80,000 பேர் எழுதக் கூடிய ஒரு தேர்வுக்கு தனி இயக்குநரை நியமிக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இப்படிப் பட்ட காலத்தாழ்வு மூலமாக ஏற்படுகிற சங்கடங்கள் அறியப்படுகின்றன. கால தாமதம் ஏற்படாத வகையில் திருத்த என்ன ஏற்பாடுகளைச் செய்யலாமோ அந்த ஏற்பாடுகளைச் செய்யலாம். அதற்கு என்ன மாற்றுத் திட்டங்கள் என்று கண்டறிந்து தாமதத்தைத் தவிர்ப்பதற்கான முயற்சி எடுக்கப்படும்.

## *S.I.E.T College for Women at Madras*

* 466 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether it is a fact that the gas cylinder in the S.I.E.T. College, Madras burst about the 13th February 1971 causing injuries to a number of students?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** 1971-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 13-ஆம் நாளன்று, கல்லூரி நீச்சல் குளத்தின் அருகே திறந்த வெளியில் வைக்கப்பட்டிருந்த, பெரும்பாலும் காலியாயிருந்த குளோரின் வாயு உருளையி லிருந்து வாயு சிறிது கசிந்து வெளியேறியது. எனவே, வாயு உருளை எதுவும் வெடிக்கவில்லை. இதற்கு அருகில் இருந்த சுமார் 100 மாணவிகள் இவ் வாயுவை உள்ளிழுத்ததன் காரணமாக, அவர்களுக்கு மூச்சுத் திணறியது. அவர்கள் மருத்துவ மனையில் சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர் அனுப்பப்பட்டனர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 467, 468, 469 ஆகிய எண்கள் உள்ள வினாக்கள் சேர்ந்தாற்போல் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

* 467 **வினா—திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை S.I.E.T. பெண்கள் கல்லூரிக்கு அரசு அளித்து வரும் ஆசிரியர் மானியத் தொகை கடந்த மூன்று ஆண்டுகளாகத் தரப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில். அதன் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம். (இ) S.I.E.T. கல்லூரி 1969-70-ம் ஆண்டிற்கு அப்பொழுது இருந்து வந்த ஒரு மாணவிக்கு ஒரு பருதிக்கு ரூ. 70 என்ற புகுமுக வகுப்புக்கான கட்டண ஈட்டை, விவாதத்திற்குப் பிறகு ஒப்புக் கொண்டது. இக் கல்லூரிக்கு ரூ. 1.81 லட்சம் கட்டண ஈடாகவும் வழங்கப்பட்டது. இக்கல்லூரி ஏற்கெனவே ஒரு





மாணவிக்கு ஒரு பகுதிக்கு ரூ. 80 என்ற அடிப்படையில் கட்டணம் வசூலித் திருந்தால், அரசு அதை மாணவிகளுக்குத் திருப்பித் தந்துவிடும்படியும் அவ்வாறு கொடுக்கப்பட்ட மாணவிகளின் பட்டியல் ஒன்றைக் கொடுக்கும் படியும் கேட்டிருந்தது. கல்லூரிக் கல்வி இயக்குனருக்கு மேற்படி பட்டியலைக் கொடுக்க இக் கல்லூரி மறுத்துவிட்டது. மேலும், கல்வி மான்யம் பெறுவதற் கான இதன் கோரிக்கையும் உரிய முறையில் இல்லை. மேற்படிக் காரணங் களுக்காக 1969-70, 1970-71 ஆண்டுகளுக்கான கல்வி மான்யம் வழங்கப்பட வில்லை. 1969-70-க்கு பி.யு.சி. வகுப்புக்கான கட்டண ஈடாக வழங்கிய ரூ. 1.84 லட்சத்தை ஆட்சேபணைக் கணக்கில் வைத்துள்ளது.

*468 **வினா—திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை S.I.E.T. மகளிர் கல்லூரி மாணவிகளைச் சேர்க்கும் முறையில் அரசு ஏதாவது ஆட்சேபணை தெரிவித்துள்ளதா?

(இ) ஆம் எனில், எந்த அடிப்படையில்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) : மாணவிகளைச் சேர்க்கும் முறைபற்றி எத்தகைய எதிர்ப்பும் எழுப்பப்படவில்லை. புகுமுக வகுப்புகளில் இலவசக் கல்வி அளிக்கும் முறை பற்றி அரசு வெளியிட்டுள்ள எல்லாத் தனியார் கல்லூரிகளுக்கும் பொருந்துகின்ற விதிகளையும் ஆணைகளையும் இக் கல்லூரி பின்பற்ற வேண்டும் என்று அரசு விரும்பியது.

*469 **வினா—திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை S.I.E.T. மகளிர் கல்லூரியில் மாணவிகளிடமிருந்து வசூலிக்கப்பட்ட ட்யூஷன் பீஸ் விஷயமாக அரசு ஆட்சேபனை ஏதும் தெரிவித்துள்ளதா?

(இ) ஆம் எனில், எந்த அடிப்படையில்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) எல்லா நிலைகளிலும் இலவசக் கல்வி அளித்தல் என்ற கொள்கையை ஒட்டி, அரசு, 1969-70-லிருந்து புகுமுக வகுப்புகளுக்கு இலவசக் கல்வி அளிக்கும் முறையை விரிவாக்கவும், கல்லூரிகளுக்குக் கட்டணம் வசூலிக்காமையால் ஏற்படும் இழப்பை ஈடு செய்யவும் ஆணைகள் வெளியிட்டது. S.I.E.T மகளிர் கல்லூரி அரசின் மேற்படி ஆணைகளைப் பின்பற்றாமல் 1969-70, 1970-71-ம் ஆண்டுகளில் புகுமுக வகுப்பு மாணவிகளிடமிருந்து முன் பணமாகக் கட்டணம் வசூலித்தது. அரசினிடமும் இதற்கு ஈடு கேட்டது. அரசிலிடம் உதவித் தொகை பெறும் கல்லூரி என்ற முறையில் அரசின் சட்டங்களுக்கு இக் கல்லூரி உட்பட்டதே ஆகும். ஆகவே புகுமுக வகுப்பு களில் இலவசக் கல்வித் திட்டத்தை இக் கல்லூரியிலும் பின்பற்றியிருக்க வேண்டும். 1969-70, 1970-71-ம் ஆண்டுகளில் புகுமுக வகுப்புக் கல்விக் கட்டணம் வசூலித்திருக்கக் கூடாது. முன்பணமாக மாணவிகளிடமிருந்து கட்டணம் வசூலித்ததுமல்லாமல் 1969-70-ம் ஆண்டிற்குரிய புகுமுக வகுப்பிற்குரிய

ரூ. 1.81 லட்சம் பெறுமானமுள்ள கட்டண ஈட்டை அரசு வழங்கியபோதிலும், அவ் வாண்டில் இக்கல்லூரி யார் யாரிடமிருந்து கட்டணம் வசூலித்தது, பின்பு திருப்பித் தந்தது என்ற பட்டியல்களையும் கொடுக்க மறுத்துவிட்டது. இக்காரணங்களுக்காக S.I.E.T. கல்லூரி புகுமுக வகுப்பு மாணவிகளிடமிருந்து கட்டணம் வசூலித்த செயலை அரசு வன்மையாகக் கண்டித்தது.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவர் அவர்களே, எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியானது நல்ல கல்லூரிகளில் ஒன்று என்று முன்பு நம்முடைய அரசால் பாராட்டப் பெற்றது. ஆனால், இப்பொழுது அவர்கள் ஏதாவது தவறுகள் செய்திருந்தால் கூட, அரசு அவர்களிடத்தில் நேரடித் தொடர்பு கொண்டு, அல்லது அவர்கள் அரசிடத்தில் வருவதற்கு முயற்சித்தால் அவர்கள் வந்து பார்ப்பதற்கு வாய்ப்பளித்து, அதற்கு வேண்டிய சுமுகமான சூழ்நிலைகளை ஏற்படுத்தி, நல்ல கல்வி ஸ்தாபனம் தொடர்ந்து நல்ல முறையில் நடைபெற அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, சில நேரத்தில் அதிகாரிகளிடத்தில் அவர்கள் இன்டர்வ்யூ கேட்டபோது கிடைக்கவில்லை என்ற குறைபாடு இருக்கிற காரணத்தால் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கல்வித் துறையில் மிகவும் அக்கறை உடையவர்கள் என்ற காரணத்தால், இது நல்ல கல்வி ஸ்தாபனம் என்ற காரணத்தால், சுமுகமான முறையில் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கச் சந்தர்ப்பம் அளித்து ஆவன செய்ய உதவுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற அத்தகைய கருத்தின் அடிப்படையில் நிர்வாகத்தினர் நடந்து கொண்டிருப்பார்களேயானால் அது மகிழ்ச்சி தரத்தக்கதாக இருக்கும். தனியார்க் கல்லூரிகள் 118 இருக்கின்றன. 117 கல்லூரிகளைப் பொறுத்த வரையில் நாம் விதித்திருக்கிற விதிமுறைகளைக் கையாண்டு, கல்வி மானியம் பெறுவதிலே சுமுகமாக நடந்து கொண்டு வருகிறார்கள். அவர்களை எவ்வளவோ அழைத்து வைத்துப் பேசினாலுங்கூட அவர்கள் இணங்கிவர மறுக்கிறார்கள். நானும் தொழிலமைச்சரும் உடன் இருந்து அந்த அளவு நிர்வாகத்தோடு ஒரு தகராறு இல்லாத அளவுக்குத்தான் ஒரு ஏற்பாடு செய்தோம். 80 ரூபாய் அவர்கள் வசூலித்துவிட்டார்கள். 70 ரூபாய்தான் வசூலிக்க வேண்டும். ஆகவே, 70 ரூபாய்க் கட்டணத்திற்கு ஈடாக அரசு தரத் தயாராக இருக்கிறது. ஆனால், 80 ரூபாயை மாணவியருக்குத் திருப்பித் தந்தாக வேண்டும். ஒரு லட்சத்து 81 ஆயிரம் ரூபாய்த் தொகையைக் கல்லூரிக்குக் கட்டண ஈடாகக் கொடுத்து விட்டு, 80 ரூபாயை மாணவிகளுக்குத் திருப்பித் தந்துவிடுங்கள் என்றோம். நீங்கள் தராவிட்டால் அரசாங்கத்திடம் மாணவிக்கு 80 ரூபாய் வீதம் கொடுத்துவிடுங்கள், நாங்கள் மாணவியர்களுக்குத் தந்துவிடுகிறோம் என்று சொன்னோம். அவர்களும் அவ்வாறே தருவதாகச் சொன்னார்கள். 'தந்து விடுகிறோம்' என்று எங்களிடத்தில் ஒப்புக்கொண்டு சென்றார்கள். ஒப்புக் கொண்டு ரூ. 1.81 லட்சம் வாங்கிக் கொண்டார்கள். ஆனால், மாணவியர்கள் சிலரிடத்தில் 70 ரூபாய் தந்தார்கள். 80 ரூபாய் தரவில்லை. பட்டியல்கூடத் தரவில்லை. பட்டியல் கொடுங்கள் என்று கேட்டதற்கு பட்டியலைத் தர மறுக்கிறார்கள். பட்டியலைத் தரும்படிக் கேட்டு எழுதிய கடிதத்திற்கு அவர்கள் என்ன பதில் எழுதுகிறார்கள்?



"Furnishing details will be sheer waste of time, energy and stationery".

என்று அரசுக்கு அவர்கள் பதில் எழுதுகிறார்கள். மாணவியர்கள் பட்டியலைத் தாருங்கள் என்றால் தருவதற்கு மறுக்கிறார்கள். மாணவியர்களுக்குக் கொடுத்தீர்களா என்று சொல்லுங்கள், மீதி இருந்தால் அரசாங்கத்திடம் ஒப்படையுங்கள், நாங்கள் தந்துவிடுகிறோம் என்றோம். முகவரி கிடைக்கவில்லை என்று அவர்கள் சொல்வதற்கில்லை. ஏனென்றால், ஒரு கல்லூரிக்கு மாணவர்கள் வந்து சேருகிறபோது அவர்களுடைய பெற்றோர்களின் நிலையான முகவரியையும் தற்காலிக முகவரியையும் வாங்கிக் கொள்ளுகிறார்கள். மாணவியருடைய முகவரியைத் தேடுவது என்பது கடினமான ஒன்றல்ல. மாணவியரிடமிருந்து கல்லூரிக்குப் பணம் போய்ச்சேர முடியும் என்றால் முகவரி தெளிவாகக் கிடைத்துவிடுகிறது. கல்லூரி மாணவியருக்குப் பணத்தைத் திருப்பித் தரவேண்டும் என்றால் முகவரி கிடைக்கமாட்டேன் என்கிறது. இப்படிப்பட்ட நிலை இருக்கிற காரணமே தவிர வேறல்ல. மற்றைய 117 கல்லூரிகளுக்கு எப்படித் தருகிறோமோ அதே வகையில் இந்தக் கல்லூரிக்கும் தர இருக்கிறோம். அந்தக் கல்லூரி நல்ல நிலையில் வளர்ந்து கொண்டு வருகிறது என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆனால், அதனுடைய நிர்வாகத்தைப் பொறுத்து இப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பதால் அங்கே 1969-70, 1970-71-ம் ஆண்டுகளைப் பொறுத்து தகராறு இருக்கிறது. இந்த ஆண்டும் 80 ரூபாய் வசூல் செய்யத் தொடங்கினார்கள். நாம் உடனே பத்திரிகைகளில் அறிக்கை விட்டோம். அதற்குப் பிறகு அரசாங்கத்திற்குத் தெரிவிக்கிறபோது, 'வசூலிக்கவில்லை' என்றார்கள். 1969-70, 1970-71-ம் ஆண்டு குறித்து பிரச்சினையாக இருக்கிறதே தவிர, இந்த ஆண்டு மாணவியரிடமிருந்து அந்தத் தொகையை வசூலிக்கவில்லை யென்றால் அதற்குரிய கட்டணத்தை நாங்கள் தர ஆயத்தமாக இருக்கிறோம் என்று அரசு தெரிவித்திருக்கிறது. அந்த நிலை இருப்பதால், அவர்களே வந்து முறைப்படி நடந்து கொண்டால் முறைப்படி மானியம் வழங்குவதற்குத் தகராறு இல்லை. தற்காலிகமாக ரூ. 1.81 லட்சம் மானியம் 'அப்ஜெக்ஷன்' ஆக வைக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொகையை அவர்களுக்குக் கொடுத்தாகிவிட்டது. 'ஆட்சேபணைக்குரியது' என்ற அளவுக்குத் தான் இருந்து கொண்டிருக்கிறது.

**திரு. எஸ். முருகையன் :** தலைவர் அவர்களே, அவர்கள் அரசாங்கத்தினுடைய உத்தரவுக்கு எதிராகக் கட்டணம் வசூலிப்பதோடு மாத்திரம் இல்லாமல் நன்கொடை என்ற பெயரால் ஏழை எளிய பிள்ளைகளிடம் ஆயிரம், இரண்டாயிரம் கொடுத்தால் தான் அட்மிஷன் என்பதாகச் சொல்லி வாங்கி பிள்ளைகளைச் சேர்த்து வருகிறார்களே, இது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதைப்பற்றி ஏற்கனவே இந்த மன்றத்தில் பலமுறை பேசப்பட்டது. யாரும் நன்கொடை என்பதாகக் கொடுக்க வேண்டியதில்லை. ஆனால் எப்படியும் இடம் பெற்றுவிட வேண்டும் என்பவர்கள் கொடுப்பதும், அவர்களும் நன்கொடை என்பதாகவே ரசீது கொடுப்பதும் நடக்கிறது. கோர்ட்டுக்குப் போனாலும் நன்கொடை என்ற ரசீதைக் காட்டுவதால் நன்கொடை என்று தெரிந்துகொடுத்ததற்கு ஒன்றும் செய்ய முடியாமல் போகிறது. பல்கலைக்கழகத்திற்கு எடுத்துச் சொன்னாலும் அவர்கள் நிதிநிலைமையில் நாங்கள் தலையிடுவதற்கில்லை. எங்களுக்கு அக்கடமிக்

கண்டிரோல் தான் என்கிறார்கள். ஆகவே நான் எந்த முறையில் சட்டத்தில் திருத்தம் செய்யலாம் என்பதாக அரசு பரிசீலித்து வருகிறது. திருத்தம் கொண்டு வந்த பிறகு நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. நா. வீராசாமி :** எஸ்.ஐ.இ.டி. கல்லூரி நல்ல கல்லூரியாக இருக்கலாம். ஆனால் அரசாங்கக் கொள்கையை நிறைவேற்றத் தவறியிருக்கிறது. ஏதாவது கேட்டாலும் வீண் கால விரயம், ஸ்டேஷனரி வேஸ்ட் என்ற அளவில் பதில் எழுதுகிறது. இதன் காரணமாக மற்ற கல்லூரிகளும் கெட்டுவிடாதிருக்க இதற்குக் கொடுக்கப்பட்ட அங்கீகாரத்தை ரத்து செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அங்கீகாரத்தை ரத்து செய்வது என்பது பல்கலைக் கழகத்தைச் சார்ந்ததாகும். நாம் செய்யக்கூடியது கொடுக்கிற மானியத்தைத்தான் நிறுத்தலாம். அப்படி நிறுத்துவதற்குக் கூட அரசியல் சட்டப்படி அரசுக்கு அதிகாரம் இல்லை என்று அவர்கள் வாதிடுகிறார்கள். கட்டணம் வசூல் செய்ய அவர்களுக்கு உரிமை உண்டு என்கிறார்கள். மாநிலத்தில் உள்ள மற்ற 117 கல்லூரிகள் பின்பற்றுகிற முறைப்படிதான் இதுவும் நடைபெற வேண்டும் என்கிற அடிப்படையில்தான் நாம் இப்போது அதற்குக் கொடுத்த மானியத்தை நிறுத்தியிருக்கிறோம்.

DR. H. V. HANDE : May I know how the Government is going to cut the Gordian knot? Is it not possible to get by an official order, by a sort of compulsion, the list of addresses and directly ask them to come to Government and get the money? The Hon. Minister in his reply said that the college refuses to give the list of addresses? Is there no law by which it is possible to get the list of addresses forcibly by compulsion from the college?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதனால்தான் அந்தப் பட்டியலைத் தருகிற வரையில் மானியம் தருவதற்கில்லை என்று கூறப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இந்த மாதிரிகூடச் செய்ய முடியாது இருந்தது. ஆகவே எம்.இ.ஆர்.-ஐத் திருத்தியிருக்கிறோம். இதன்படி மானியத்தை நிறுத்தி வைத்திருக்கிறோம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இந்த ஆண்டு எஸ்.ஐ.இ.டி. கல்லூரியில் ரசீது கொடுத்தும், கொடுக்காமலும் வசூலிக்கப்பட்டிருக்கிற நன்கொடை எவ்வளவு என்கிற விவரத்தை அவர்களிடம் கேட்டு அறிய முடியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விவரம் இல்லை. கேட்டால் தருவார்களா என்பதும் தெரியவில்லை. யாராவது விண்ணப்பம் தந்தால் அதை அனுப்பிக் கேட்டுப் பார்க்கலாம்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவர் அவர்களே, இந்த நன்கொடை முஸ்லீம் அல்லாத மாணவியர்களிடத்தில்தான் வசூலிக்கப்படுகிறது என்பது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அது விவரம் இல்லை. நன்கொடை என்பதாக எல்லோரும் வசூலிக்கிறார்கள். ஆனால் அட்மிஷன் நேரத்தில் நன்கொடை கொடுத்தால்தான் இடம் என்பதானது நன்கொடையாகாது. கட்டாயப்படுத்துகிற ஒன்றாகவேதான் இருக்கிறது.

**திரு. கே. ஏ. வகாப் :** இந்த நன்கொடை என்பது எஸ.ஐ.இ.டி. கல்லூரியில் மட்டும் அல்ல—எல்லாக் கல்லூரிகளிலும் வாங்கப்படுகிறது. ஒரு சுற்றறிக்கை மூலம் எந்த எந்தக் கல்லூரி எவ்வளவு நன்கொடை வசூலித்திருக்கிறது என்கிற விவரத்தை கேட்டறிவார்களா? மேலும் எஸ்.ஐ.இ.டி. கல்லூரி நிர்வாகிகள் அமைச்சரைப் பேட்டி காண மிகவும் விரும்புகிற காரணத்தினால் அவர்களுக்குப் பேட்டி அளிக்கிற வாய்ப்பை ஏற்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பேட்டி கேட்டால் பேட்டி கொடுப்பதில் ஒன்றும் இல்லை. ஆனால் இதுபோன்ற தகராறுகள் பல இருக்கிற காரணத்தினால் முறையாக கல்வி இயக்குநரைச் சந்தித்துப் பேசி ஒரு முடிவுக்கு வந்தபின் ஏதாவது தெரிவிக்க வேண்டியிருந்தால் என்னிடம் வரலாம் என்று சொல்லியிருக்கிறேன்.

**திரு. வா. மை அப்துல் ஜப்பார் :** தலைவர் அவர்களே, எஸ்.ஐ.இ.டி. கல்லூரியில் முஸ்லிம் அல்லாதவர்களிடத்தில்தான் நன்கொடை வசூலிக்கப் படுகிறது என்று சொன்ன உறுப்பினர் அதற்கு ஆதாரம் ஏதாவது கொடுக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** உறுப்பினர் அமைச்சரிடத்தில்தான் கேட்க முடியும். உறுப்பினரைக் கேட்க முடியாது. அது போல பல்வேறிடத்தில் பல்வேறு கருத்துக்கள் பரவியிருக்கிற காரணத்தினால்தான் உறுப்பினர் அதுபோலக் கேள்வி கேட்டார்.

**திரு. எம். செல்வராஜ் :** எஸ்.ஐ.இ.டி. கல்லூரியின் நிர்வாகிகள் அரசுப் போக்குக்கு விரோதமாக நடந்து கொண்டு வருகிற காரணத்தினால் அரசாங்கமே அதன் நிர்வாகத்தை ஏற்று நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்போதிருக்கிற சட்ட திட்டங்களும், அரசியல் சட்டமும் அதற்கு இடம் தராது.

**திரு. இ. எஸ். தியாகராசன் :** தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரி மற்றக் கல்லூரிகளைவிட அதிகமான அளவில் ஃபீஸ் வசூலிப்பது அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதிகம் 80 ரூபாய்க்கு மேல் போகக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் 80 ரூபாய் வசூலிப்பதாகத் தெரிகிறது. அதைத் திருப்பிக் கொடுப்பதிலேதான் தகராறு இருக்கிறது.

திரு. எ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, கல்லூரி நிர்வாகிகள், தாங்கள் மாணவியரிடமிருந்து கட்டணத்தை வசூலித்தே கல்லூரியை நடத்திக் கொள்கிறோம் என்று முன்வந்தால், அரசு அதற்கு இசைவு தருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பி.யு.சி. வரை எல்லா நிலைகளிலும் இலவசக் கல்வி அளித்தல் என்ற கொள்கை நிலை நாட்டப்பட்டிருக்கிறது. அதற்கு மாறுபாடான வகையில் செல்வதற்கு எவருக்கும் அரசு அனுமதி வழங்காது.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, எஸ்.ஐ.இ.டி. கல்லூரி மாணவியரிடமிருந்து 1.81 லட்சம் ரூபாய் வசூலித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ரெவின்யூ ரெகவரி ஆக்டின்கீழ் அந்தப் பணத்தை அவர்களிடமிருந்து அரசு வசூல் செய்யமுன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் அதற்குப் பொருந்தி வராது.

### ஊராட்சி ஒன்றிய பணியாளர்களின் மாற்றம்

* 470 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் பணிபுரியும் எழுத்தர்களை, கடைநிலை ஊழியர்களை வெவ்வேறு ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாறுதல் செய்யும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, இப்போது ஊராட்சி ஒன்றியங்களிலே தீர்மானங்கள் போட்டால்தான் ஊராட்சி ஒன்றிய பணியாளர்களை மாற்ற முடியும் என்று விதி இருக்கிறது. அதை மாற்றி, நிர்வாக வசதிக்கேற்ப மாவட்டக் கலெக்டர் மாறுதல் செய்யலாம என்ற முறையும், அவர்களை மாவட்ட அளவில் சீனியாரிடி பட்டியல் வைத்து, சீனியாரிடி கெட்டுப் போகாத அளவிற்கு மாறுதல் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தப் பணியாளர்களை மாற்றுகிற பொறுப்பை ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கின்றதில் சில சங்கடங்கள் இருக்கின்றன. ஒரு சில இடங்களில் ஒன்றியங்களின் முழு ஒப்புதலும் கிடைக்கின்றது. மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மாவட்டத்திற்குள்ளே, ஒருவர் ஒரு இடத்தில் மூன்று ஆண்டுகள், ஐந்து ஆண்டுகள் என்று பணியாற்றியிருந்தால் அவரை மாற்றுகின்ற பொறுப்பை ஒப்படைக்கலாம் என்று திருச்சிராப்பள்ளி தெற்கு மாவட்ட வளர்ச்சி மன்றமும், தென் ஆர்க்காடு மாவட்ட வளர்ச்சி மன்றமும் தீர்மானம் போட்டு அரசுக்கு அனுப்பியிருக்கிறது. எந்தவகையிலே இதைச் செய்யலாம் என்று அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. விரைவில் நல்ல முடிவை அரசு எடுக்கும்.



திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, ஆசிரியர்களை மாற்றுகின்ற உரிமைகளை அட்ஹாக் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டு, அது ஆர்.டி.ஓ. வின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. ஆர்.டி.ஓ. சட்ட மன்ற உறுப்பினர்கள் கூறுகின்ற அபிப்பிராயங்களை ஏற்றுக்கொள்வதில்லை. ஆகவே, சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களின் தலைமையின்கீழ் இந்த அட்ஹாக் கமிட்டியை அமைக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முதலிலே அந்தப் பொறுப்பு ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்குத்தான் இருந்தது. பிறகு ஆர்.டி.ஓ., பி.டி.ஓ. க்கு வந்தது. சென்ற ஆண்டு சட்டமன்ற உறுப்பினர்களையும் இணைத்துவிட்டார்கள். இந்தக் கமிட்டியில் டி.ஓ., பி.டி.ஓ, இருவரும் வாக்களிக்க முடியாத உறுப்பினர்கள். ஆர்.டி.ஓ. ஊராட்சி ஒன்றியங்களின் தலைவராகவும், அட்ஹாக் கமிட்டியின் தலைவராகவும் இருக்கிறார். வேறு எந்தத் துறைக்கும் இல்லாத அளவிற்கு ஆசிரியர்களை மட்டும் மாற்றுவதற்காக இப்படிப்பட்ட ஒரு கமிட்டி இருக்க வேண்டுமா என்ற அபிப்பிராயம் ஒன்று இருக்கிறது. மற்ற துறைகளில் செய்வதைப்போல் ஆசிரியர்களையும் செய்யலாம் என்று சொல்லி, நிர்வாக சீர்திருத்தக் குழுவுக்கும் அந்தக் கருத்து வைக்கப்பட இருக்கிறது. முக்கியமானவர்களைக் கலந்து கொண்டு, நல்ல முடிவுகளை எடுக்கலாம் என்று அரசு இருக்கிறது.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களின் அலுவலகங்களில் பணியாற்றும் எழுத்தர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மாற்றுகிறார்கள். ஒருவர் ஒரு இடத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றினால் அவர்களை மாற்றுகிறார்கள். ஆனால் சிலர் அப்படி மூன்று ஆண்டுகள், அதற்கு மேற்பட்ட ஆண்டுகளானாலும் மாற்றப்படாமல் தொடர்ந்து ஒரே இடத்தில் இருந்து வருகிறார்கள். அரசு தலையிட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அப்படிப்பட்டவர்களை அந்த ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து மாற்ற வேண்டுமென்று உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கட்டாயமாக மூன்று ஆண்டுகளுக்கு மேல் இருந்தால் மாற்றியே தீரவேண்டுமென்கிற, வற்புறுத்துகின்ற சூழ்நிலையை ஏற்படுத்த முடியாது. சில குறிப்பிட்ட துறைகளில் அதாவது காவல் துறை போன்றவைகளில் பணியாற்றுபவர்கள் மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒரு இடத்தில் இருந்தால் அவர்களுக்குச் சில சலுகைகள் ஏற்படலாம் என்கிற ஒரு கருத்து எழாமல் இருப்பதற்காகத்தான் அவர்களை அப்படி மாற்றுகிறார்கள். மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்ற வேண்டுமென்று இருந்தால் தாலுக்கா ஆபீஸ், டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் ஆபீஸ் போன்றவற்றில் பல பேர்களை மாற்ற வேண்டியிருக்கும். மூன்று ஆண்டுக் காலத்திற்கு மேல் அலுவலகத்தில் சிலபல தகாறுகள், மேலதிகாரிகளுக்குக் கீழ்ப்படியாமை, மேலதிகாரிகளுக்கும் கீழ்நிலையில் உள்ளவர்களுக்கும் தொடர்பு இல்லாத நிலைமை போன்றவை இருந்தால் அப்படிப்பட்டவர்களுக்கு என்று ஒரு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்களைக் கேட்டுச் செய்ய வேண்டியிருக்கிறது.. ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவரே செய்யலாம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. மா. பா. சாரதி: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்படுத்தக்கூடிய அட்ஹாக் கமிட்டியில் ஆர்.டி.ஓ.க்கு அதிக அதிகாரம் அளிக்கப்பட்டிருப்பதால், அட்ஹாக் கமிட்டியை ரத்து செய்துவிட அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, வேறு ஒரு சிறப்பான முறையைக் கண்டுபிடித்த பிறகு ரத்து செய்துவிடலாம். அதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது.

திரு. இ. எஸ். தியாகராசன்: தலைவர் அவர்களே, வட்டார வளர்ச்சித் துறையை ரீ-ஆர்கனைசேஷன் செய்ய உத்தேசம் இருக்கிறதா? அது எப்போது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதுபற்றி நிர்வாகச் சீர்திருத்தக் குழுவிலே ஊராட்சி ஒன்றியங்கள் போன்றவற்றை எப்படி அமைக்கலாம் என்று கேட்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஆராய்ந்து யோசனை சொன்ன பிறகு பரிசீலிக்கப்படும்.

திரு. ப. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்தில் யூனியன் 'ஸ்டாஃப் என்றும், கவர்ன்மென்ட் ஸ்டாஃப் என்றும் இரண்டு வகையாகப் பிரித்திருக்கிறார்கள். எழுத்தர்கள் போன்ற கவர்ன்மென்ட் ஸ்டாஃப்புகளை மாற்ற வேண்டுமென்றால் யூனியன் ஒப்புதலைப் பெற்றுத்தான் மாற்ற வேண்டுமா? அல்லது மாவட்ட ஆட்சித் தலைவருக்கே மாற்றும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, முதல் கேள்விக்கே நான் பதில் சொன்னேன். ஆணையர், இளநிலை, மேல்நிலை கணக்காயர், ஜீப் டிரைவர் போன்றவர்கள் அரசுப் பணியாளர்கள். தலைமை எழுத்தர், சிற்றெழுத்தர், கடைநிலை ஊழியர், ஆசிரியர் இவர்கள் யூனியன் பணியாளர்கள்.

இவர்களை மாற்ற வேண்டுமென்றால், ஊராட்சி ஒன்றியம் தீர்மானம் போட்டு மாற்ற வேண்டும். அதில் சிலபல சங்கடங்கள் இருக்கின்றன. இந்தச் சங்கடங்களை உணர்ந்துதான் திருச்சிராப்பள்ளி, தென் ஆர்க்காடு மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் இதற்கான யோசனைகளைத் தெரிவித்திருக்கிறது. அரசாங்கம் அதைப் பரிசீலித்து வருகிறது. பின்னர் நல்ல முடிவு எடுக்கும்.

திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரிகிறவர்களை வேறு ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்றுவதற்கு விதி இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த விதிக்கு உட்படாத முறையிலே திருநெல்வேலியிலிருந்து 172 பேர்களை மாற்றியிருக்கிறார்கள் என்ற புகார் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா? அப்படி மாற்றியதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொன்னபடி ஆணையர், இளநிலை, மேல்நிலை கணக்காயர், ஜீப் டிரைவர் போன்றவர்கள் அரசுப் பணியாளர்கள். இவர்களை மாற்ற மாவட்ட





ஆட்சித் தலைவருக்கு, சிற்றூர் வளர்ச்சி இயக்குநருக்கு உரிமை இருக்கிறது. ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் வருகிறவர்களை மாற்றுகின்ற அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஊராட்சி மன்றங்களின் ஒப்புதலைப் பெற்றுத்தான் இவர்களை மாற்றலாம் என்று இருக்கிறது.

திரு. பெ. சௌந்திரபாண்டியன்: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில், ஒன்றியப் பணியாளர்கள், அரசுப் பணியாளர்கள் என்று இரண்டுவகையான பணியாளர்கள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அனைவரையுமே அரசுப் பணியாளர்களாக அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அப்படி ஏற்றால், நியமிக்கப்படுகின்ற பொறுப்பு அரசாங்கத்திற்கே வரும். அப்படிச் செய்யும்போது இப்பொழுது ஊராட்சி ஒன்றியத்திற்கு இருக்கும் அதிகாரத்தை அரசாங்கம் பறித்துக் கொள்கிறது என்ற கருத்துக்கும் இடம் ஏற்படும்.

## பஞ்சாயத்து அதிகாரிகள்

*21 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பெருநகரப் பஞ்சாயத்துக்களில் Executive officers இருப்பதைப் போல் ஐந்து பஞ்சாயத்துக்களை இணைத்து அந்த இணைப்புக்கு ஒரு அரசு ஊழியர் (Executive officer) நியமிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, சிலபல ஊராட்சி மன்றங்களிலே நிர்வாகங்களிலே ஏற்படும் குறைபாடுகளைத் தவிர்க்க இனியேனும் இத்தகைய அலுவலர்களை நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கருத்துத் தெரிவிக்கப்பட்டு அது ஆராயப்பட்டு அதனால் பலசங்கடங்கள் மற்றவைகள் ஏற்படக்கூடும் என்று தெரிந்தது. 5 ஊராட்சி ஒன்றியங்களை ஒரு நிர்வாக அதிகாரி இருந்து பார்ப்பது என்பது பொருந்தி வராது. இப்பொழுதே அந்தந்த ஊராட்சி மன்றத் தலைவர்களே நிர்வாக அதிகாரியினுடைய அதிகாரத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தேவைப்படுகின்றபொழுது 10 ரூபாய் முதல் 50 ரூபாய்வரை கொடுத்து எழுத்தாளர்களை நியமித்துக் கொண்டு பணிகளைச் செய்துகொள்கிறார்கள். அதேபோன்று வரிவசூலைப் பொறுத்தவரையில் கிராம அதிகாரிகள் வசூலித்து வருகின்றார்கள், அதற்காக அவர்களுக்குத் தனிப்படி வழங்கப்படுகிறது. ஆகவே ஐந்தாறு ஊராட்சி மன்றங்களை ஒரு நிர்வாக அதிகாரியைப் போடுவதன் மூலம் நிர்வகிப்பதில் சங்கடங்கள் ஏற்படுமென்ற காரணத்தினால் இப்பொழுது இருக்கின்ற முறையே நீடிக்க வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டு இருக்கிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, பேரூராட்சி நிர்வாகத்தில் எக்ஸிகியூடிவ் ஆபீசர்களும், ஊராட்சி நிர்வாகத்தில் அந்தந்தத் தலைவர்களும் நிதி சம்பந்தப்பட்ட காரியங்களைக் கவனித்து வருகின்றார்கள். ஊராட்சி நிர்வாகத்தைப் பொறுத்து E O. P) யும் தலைவரும் பேரூராட்சியில் அந்தந்தத் தலைவரும், எக்ஸிக்யூடிவ் ஆபிசரும் கையொப்பமிட்ட பிறகு தான் செலவினங்களைச் செய்யவேண்டுமென்று அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட நடைமுறையைப் பார்த்துத்தான் செய்ய வேண்டும். அது பரிசீலிக்கப் படவேண்டிய ஒன்று.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திற்கும் நிர்வாக அதிகாரிகள் நியமிக்கின்ற உத்தேசம் இப்பொழுது இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஊராட்சி மன்றத் தலைவர்கள் தெருக்களுக்கு மின்விளக்குகள் போடுவதற்குரிய சால்வன்ஸி வாங்கு வதற்கு ஊராட்சி ஒன்றிய அலுவலர்களைத்தான் நாட வேண்டியிருக்கிறது. இதிலே சிக்கல்கள் இருக்கின்றன. ஆகவே அந்த அதிகாரத்தை ஊராட்சி மன்றத் தலைவருக்கே வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இது தனியாகப் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று. தனியாக இதை எழுதி அனுப்பினாலோ அல்லது கவனத்திற்குக் கொண்டுவந்தாலோ அதைப்பற்றி ஆராய்ந்து அதன்மூலம் எளிமையான நிர்வாக முறை ஏற்படுமானால் அதைப் பற்றிக் கவனிக்கலாம்.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே வரி வசூலிக்கின்ற உரிமையை முன்சிப், கணக்குப்பிள்ளை இவர்களிடம் கொடுக்கப்பட்டிருப்பதால் அவர்கள் பெரும்பான்மை வரியை வசூலிக்காமல் அதன் காரணமாக ஊராட்சி மன்றங்கள் அவதிப்படுகின்றன என்பது அரசுக்குத் தெரியுமா? எனவே முன்சிப் போன்றவர்கள் அதைச் செய்யாமல் தனியாக அதற்காகப் பில் கலெக்டர்கள் போட்டு வசூல் செய்வதற்கு அரசாங்கம் ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கிராம அதிகாரிகள் அந்த வரி வசூலிப்பதில் தீவிரம் காட்ட வேண்டும், அதிலே கவனஞ் செலுத்தி வரி வசூலித்துத் தீரவேண்டும் என்று வருவாய்த் துறையின் மூலமாக அவர்களுக்குத் தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த வரி வசூலைச் செய்வதற்குத் தனியாக ஆட்களை நியமிக்கின்ற நிலைமை ஏற்படுமானால் அதனால் ஊராட்சி மன்றங்களுக்குத்தான் செலவினங்கள் அதிகமாக ஏற்படக்கூடும். இப்பொழுதே அவைகளைப் பொறுத்த வரையில் நிதிவசதி போதுமானதாக இல்லை. கிராம அதிகாரிகளுக்கு அந்த வரியை வசூல் செய்வதற்காக என்று 30 ரூபாய் படி தரப்படுகிறது. தனியாக வைத்தோம் என்றால் அதற்காக மாதம் நூற்றுக்கணக்கான ரூபாய்கள் சம்பளம் முதலிய வற்றில் செலவாகும். மற்றைய வரி வசூல்களை அவர்கள் செய்கின்ற திறமை போடு அவர்கள் பெற்றிருக்கின்ற அனுபவத்தோடு அந்த வசூலையும்





செய்வதற்கு எளிமையாக இருக்கும். பல இடங்களிலே வசூலிக்காமல் இருக்கின்ற தொகையை வசூலிக்க வேண்டுமென்று வருவாய்த் துறை அவர் களுக்குத் தாக்கீது அனுப்பியிருக்கிறது.

*Obscene books in Madras City.*

* 463. Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether a number of persons have been arrested in connection with the exhibition of obscene pictures and books in Madras City about the 9th June 1970; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) (1) 8—6—1970 அன்று மூர் அங்காடியில் உள்ள மூன்று கடைகள் காவலர்களால் திடீர்ச் சோதனையிடப்பட்டு ஆபாச நூல்கள் கைப்பற்றப் பட்டன. இ.பி.கோ. 292-வது பிரிவின் கீழ் கடைச் சொந்தக்காரர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. குற்றம் சாட்டப்பட்டவர்கள் குறித்து 9-வது மாநகர மாஜிஸ்திரேட் நீதி மன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அவர் அவர்களைக் குற்றமிழைத்ததாகத் தீர்ப்பளித்து ஒவ்வொருவரும் 150 ரூபாய் அபராதத் தொகை செலுத்துமாறு கட்டளையிடப் பட்டது.

(2) 11—6—1970 அன்று, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சாலையில் 'மைபோட்டோ ஸ்டுடியோ' திடீர்ச் சோதனையிடப்பட்டு, ஆபாசமான புகைப் படங்கள் கைப்பற்றப்பட்டன. இது தொடர்பாக மூவர் கைது செய்யப்பட் டுள்ளனர். குற்றம் சாட்டப்பட்டவர்களில் இருவர் குறித்து சென்னை, ஜார்ஜ் டவுன் 4-வது மாநகர மாஜிஸ்திரேட் நீதி மன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அவர்களை குற்றவாளிகள் என மாஜிஸ்திரேட் தீர்மானித்து அவர்கள் ஒவ்வொருவரும் 50 ரூபாய் அபராதத் தொகை செலுத்துமாறு தீர்ப்பளித்தார்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, may I know from the Hon. Chief Minister whether this Government would take steps to prevent obscene and sexy cinema posters being displayed in certain areas of Mount Road in the city?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சென்னையிலே இப்படி ஒட்டப்படு கின்ற அந்தச் சுவரொட்டிகளைத் தடுப்பதற்கும் காவல்துறை மூலமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆபாசச் சுவரொட்டிகள், படங்கள் மாத்திரமல்ல—பத்திரிகைகளில் கூட—புனிதத்தைப் போதிக்கின்ற பல பத்திரிகைகளில் கூட—அப்படிப்பட்ட படங்கள் வெளி வருகின்றன, அவற்றையும் கண்காணிக்கின்ற பொறுப்பு அரசுக்கு ஏற்படும் என்று கருது கிறேன்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஆபாசம் என்பது அவரவர்கள், பார்ப்பவர்களுடைய மனப்பான்மையைப் பொறுத்தது. போஸ்டர்களில் பெண்களுக்கு மேலாடை இல்லாமலிருந்தால் அதை ஆபாசம் என்று சில

பேர் கருதுகிறார்கள், சில பேர்கள் அதை ஆபாசமாகக் கருதுவதில்லை. எனவே ஆபாசம் என்பதற்கு அதிகாரிகளுக்கு எந்தவிதத்திலே நம்முடைய அரசு கொள்கை வகுத்துக் கொடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** சிலபேர்கள் ஆபாசம் என்று சொல்கிறார்கள்; சில பேர்கள் ஆபாசம்! என்று சொல்கிறார்கள் (சிரிப்பு).

**திரு. எம். தேவராசன்:** தலைவர் அவர்களே, சில பெரிய மாளிகைகளில் பணக்காரர்களுக்கு 50 ரூபாய் 60 ரூபாய் என்று கட்டணம் வசூலித்துக் கொண்டு ஆபாசமான திரைப் படங்கள் போட்டுக் காட்டுவதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா? அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ஓரளவுக்கு உண்மைதான். அது குறித்து 26—5—1970 அன்றுகூட போலீஸாருக்கு ஒரு தகவல் கிடைத்து தம்பு செட்டித் தெருவில் அப்படியொரு உடலுறவு ஆபாசப்படம் காட்டுவதற்கு 10 ரூபாய், 20 ரூபாய் என்று கட்டணம் வசூலிப்பதாகத் தெரிந்து அதிலே சம்பந்தப்பட்டவர் கைது செய்யப்பட்டு வழக்குத் தொடரப்பட்டு அந்த வழக்கு விசாரணையில் இருக்கிறது.

**திரு. கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, கூளப்பநாயக்கன் காதல், விறலிவிடு தூது போன்ற இலக்கியங்களும் ஆபாசம் என்ற பெயரால் தடை செய்யப்பட்டுள்ளனவா? அவை இன்றைக்கு கிடைக்கவில்லையே காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அவைகள் தடை செய்யப்பட்டுள்ளனவா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அதுவும் அளவுக்கு மீறி இருக்குமானால் தடைசெய்யப்பட வேண்டியதுதான்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவர் அவர்களே, உடலுறவு பற்றிய ஆபாசமான படம் போட்டுக் காட்டுவதற்கு அண்மையிலே நம்முடைய மாநகராட்சியைச் சேர்ந்த புரஜக்டர் பயன்படுத்தப்பட்டதா? அதைப்பற்றிய குறிப்பு ஏதாவது அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இதிலே கைது செய்யப்பட்டவர் சென்னை மாநகராட்சியிலே திரைப் படம் காட்டுபவர் என்ற தகவல் மட்டும் அரசுக்குக் கிடைத்திருக்கிறது.

**திரு. முனு ஆதி:** தலைவர் அவர்களே, கலைக்கொட்டிகளில் மட்டும் அல்லாது கலை என்ற பெயரால் கல்வெட்டுக்களிலே ஆபாசம் உள்ள படங்கள் இருப்பதையும் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தங்களுடைய கேள்வியிலேயே கலை என்ற பெயரால் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

### மக்கள் சபையில் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட இடங்கள்

* 464 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

குடும்பக் கட்டுப்பாடு திட்டம் தீவிரமாக அமல் நடத்தப்படுவதால், நாடாளுமன்றத்தில், தமிழ்நாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை குறைவதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** 1951 மக்கட் தொகைக் கணக்கெடுப்புக்குப் பிறகு மக்கட் சபையில் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் அப்படியே வைத்துக் கொள்ள வேண்டும் என்று இந்த அரசு ஏற்கனவே மத்திய அரசைக் கேட்டுக் கொண்டது. மத்திய அரசு இவ்வரசின் கருத்தை ஏற்கவில்லை. இருப்பினும், 1971 மக்கட் தொகையின் கணக்கெடுப்பு அதிகார பூர்வமாகக் கிடைத்த பிறகு மறுபடியும் இதுபற்றி மத்திய அரசிடம் விண்ணப்பிக்க ஆலோசனை இருந்து வருகின்றது.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைத் தீவிரமாக தமிழகத்திலே செயல்படுத்துவதால், நமக்குக் குறைந்து போயிருக்கிற மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கை எத்தனை? தொடர்ந்து நம்முடைய அரசு இதிலே மேற்கொள்ள இருக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** மக்கள் தொகை கணக்கின் அடிப்படையிலே குறைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொகை இரண்டு.

**Dr. H. V. Hande:** Is it not better to pursue family planning in spite of the risks involved, viz., reduction in number of seats? Will the Government come forward to pursue family planning in spite of this? May I know from the Hon. Chief Minister the number of voters per parliament seat? On what basis is the parliament seat decided? What are the details?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவரவர்களே, அந்த விவரங்கள் இப்பொழுது என்னிடத்தில் முழுமையாக இல்லை. ஆனாலும், ஒவ்வொருமுறையும், 10 ஆண்டுக்கு ஒருமுறை இருக்கின்ற மக்கள் தொகையின் அடிப்படைக் கணக்கிலே இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. அதற்கேற்றவாறு அரசியலமைப்புச் சட்டம் இப்போதிருக்கிறது. மாநிலத்தின் சார்பாகக் கேட்கப்பட்டிருக்கிறது, 1951-ஆம் ஆண்டு என்ன அளவிற்கு நாடாளுமன்றத்தில் இருந்தார்களோ, ஒவ்வொரு மாநிலத்திற்கும் எந்த வகையில் பிரிக்கப்பட்டிருந்தார்களோ அந்த மக்கள் தொகையின் கணக்கிலே இப்பொழுதும் பிரிக்கப்பட வேண்டும், அதற்கேற்ற முறையில் அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். ஆனால் மத்திய சர்க்காருடைய பதிலில் அது மக்கள் தொகை கணக்கு என்பது குடும்ப நலத் திட்டம் நிறைவேற்றப்படுகின்ற அந்த அடிப்படையை மட்டும் வைத்துக் கணக்கில் எடுக்க இயலாது என்ற கருத்தைக் கூறியிருக்கிறார்கள். ஆனாலும் மீண்டும் மீண்டும் அதை நாம் வலியுறுத்தி வருகிறோம்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவரவர்களே, முன்பு 41 உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் தமிழகத்தின் சார்பாக அங்கம் வகித்தார்கள். இப்பொழுது நம்முடைய ஜனத்தொகை குறைந்ததால், அது 39 ஆகக் குறைந்திருக்கிறது. குடும்பக் கட்டுப்பாட்டைத் தீவிரமாக நடத்துவது என்றால் இந்த முறையை மாற்றி ஜனத்தொகையின் அடிப்படை எதுவாக இருந்தாலும் நம்முடைய அங்கத்தினர்கள் எப்பொழுதும் 41 ஆகவே இருக்க வேண்டுமென்று மத்திய அரசுக்குத் தமிழக அரசு ஏதாவது குறிப்பு அனுப்பியிருக்கிறதா? அதற்கு அந்த அரசு அளித்த பதில் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, இதைத்தான் முதலிலேயே சொன்னேன். அதுபோன்ற குறிப்பு ஒன்று தமிழக அரசின் சார்பாக மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. நாடாளுமன்றத்திலே ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டு பிறகு அந்தத் தீர்மானம் நிறைவேற்றப் படவில்லை. ஏற்கனவே 41 ஆக இருந்தது 39 ஆக ஆகிவிட்டிருக்கிறது. மக்கள் தொகை அதிகம் ஆகிறது என்ற கணக்கை மட்டும் வைத்துக் கொள்ளாமல் அகில இந்திய அடிப்படையிலே சராசரி விகிதத்தைப் பார்த்துத் தான் அந்த வகையிலே இடங்களை ஒதுக்குகிறார்கள். நம்முடைய மாநிலத்தைப் போலவே ஆந்திர மாநிலத்திற்கும் இந்த மக்கள் தொகை கணக்கின் காரணமாக இடங்கள் குறைந்திருக்கின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், மக்கள் தொகை அடிப்படையாகவும், ஆனால் அதேநேரத்தில் சில மாநிலங்களுக்குக் குறைந்த மக்கள் தொகையிருந்தாலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொடுக்கப்படுகிறார்கள், பாண்டிச்சேரியிலே. அதைப்போன்று மாநில அளவிலே அரசியல் சட்டத்தைத் திருத்த தேவையான அளவு நமது அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஏற்கனவே இதற்கேற்றவாறு அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்றுதான் எழுதியிருக்கிறோம். மீண்டும் எடுக்கப்பட்ட இந்தக் கணக்குகள் அதிகாரபூர்வமாக வெளியிடப்பட இருப்பதால் மறுபடியும் தமிழக அரசின் சார்பாக இதை வலியுறுத்தி மத்திய அரசுக்கு எழுத யோசனையில் இருக்கிறோம்.

திரு. சோ. கருணாநாதன்: தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்தில் குடும்பக் கட்டுப்பாட்டைத் தீவிரப்படுத்துவதைப்போல் மற்ற மாநிலங்களில் அப்படித் தீவிரப்படுத்துகிறார்களா என்ற தகவலை அமைச்சரவர்கள் அறிந்திருக்கிறார்களா?

Mr. SPEAKER : It is not the concern of the Hon. Minister.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, இந்தியா முழுமையும் தீவிரப்படுத்தப்பட வேண்டுமென்ற அந்த ஆர்வம் இருக்கிறது. ஆனால் நம்முடைய மாநில அளவில் மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுச் சொல்வதற்கான குறிப்புகள் இப்பொழுது என்னிடத்தில் இல்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைத் தீவிரமாக்க வேண்டுமென்று நம்முடைய நாட்டிலே இருந்தாலும் கூட இரட்டைப் பிள்ளைகளாகவும் மூன்று பிள்ளைகளாகவும் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தோடு போட்டி போடுகின்ற அளவில் பெறுகின்றார்கள். Competing with Family Planning, children are arriving in twins and triplets என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இது அந்தத் தாய்மார்களுடைய வலுவையும், திறமையையும் பொறுத்த விஷயம்.

Thiru K. M. SUBRAMANIAN : In view of the fact that in certain Assembly constituencies the number of voters are increasing in spite of the family planning (particularly in the constituency of the Hon. Chief Minister in Madras City), may I know whether there is any proposal to increase the number of Assembly seats?



Mr. SPEAKER : It is for the Election Commission and Delimitation Commission to decide. How can the Hon. Chief Minister answer? The Delimitation Commission is constituted once in ten years after census. It is for them to determine the criteria.

Thiru K. M. SUBRAMANIAN : I am waiting for an answer from the Hon. Chief Minister.

Mr. SPEAKER : It is not permitted.

### இளையான்குடி ஊராட்சி ஒன்றிய மருத்துவமனை

* 472 வினா—திரு. வி. மலைக்கண்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், இளையான்குடியில் உள்ள ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனையை அரசு ஏற்று நடத்த வேண்டுமென கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) அரசு ஆணை (நிலை) எண் 1778, சுகாதாரத்துறை, தேதி 5-7-1971-ல் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள இளையான்குடி ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தை அரசு எடுத்துக் கொள்ள ஆணை பிறபிக்கப்பட்டுள்ளது.

### *Panchayat Union Dispensary at Denkanikota*

* 478 Q.—Thiru B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to upgrade the Denkanikota Panchayat Union Dispensary into a Government Hospital; and

(b) if so, when it will be upgraded?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) தேன்கனிக்கோட்டை பஞ்சாயத்து ஒன்றிய மருந்தகத்தை அரசு நடத்தும் திட்டம் 1971-72-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் பிரிவில் பரிசீலிக்க ஒத்திப் போடப்பட்டுள்ளது.

Thiru B. VENKATASWAMY : From the answer given by the Hon. Minister it is understood that this has been postponed. In view of the fact that it is a taluk headquarters with hilly areas and with a large population, may I know whether the Government would come forward to consider this case sympathetically and upgrade this hospital into a Government hospital?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Government is considering such cases sympathetically. But anyhow the Finance Department is not able to provide funds at the time when it is necessary. Therefore this has been postponed for the Part II scheme of 1971-72. The cost involved in the proposal is Rs. 61,400 per annum recurring expenditure and Rs. 10,000 is the non-recurring expenditure. Therefore the proposal to undertake it is postponed till after six months.

### மாயூரத்திலுள்ள மகப்பேறு மருத்துவமனை

* 474 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாயூரத்தில் நகராட்சியின் பராமரிப்பிலுள்ள மகப்பேறு மருத்துவ மனையினை அரசாங்கமே ஏற்று நடத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாயூரம் நகராட்சி இரண்டு நகராட்சி உயர்நிலைப்பள்ளிகளை நடத்த வேண்டிய நிலைமையிருப்பதால் நிதி வசதி போதாமல் இருக்கிறது. எனவே, மகப்பேறு மருத்துவமனையைச் சரிவர நடத்த இயலவில்லையாதலால் இனிமேலாவது அரசு மேற்கொண்டு நடத்த ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அப்படி நகராட்சிகளாலே ஏற்கனவே நடத்தப்பட்டு வருகிற மருத்துவ மனைகளை அரசப் பொறுப்பிலே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வேண்டுகோள் இருக்கிறது. ஆனால் அரசு ஏற்கனவே அப்படிப்பட்ட மருத்துவ மனைகளுக்கு ஆகின்றவற்றில் நான்கில் ஒரு பங்கை கிராண்டாக வழங்குகிறது. இந்த மகப்பேறு குழந்தைகள் மருத்துவ மனைக்கு 67-68-இல் 5,989 ரூபாயும், 68-69-இல் 6,415 ரூபாயும், 69-70-இல் 6,456 ரூபாயும் அரசாங்கத்தின் மூலமாக அதற்கான நிதி உதவி வழங்கப்பட்டிருக்கிறது. எனவே இப்படி நிதி உதவியிலே இயங்கும் பல்வேறு மருத்துவ மனைகள் நாட்டிலேயிருப்பதால் அவற்றை யெல்லாம் உடனடியாகப் பொறுப்பேற்றுக் கொள்ள அரசாங்கத்திற்குப் போதுமான நிதி வசதி இல்லை.

### முதுநிலை மருத்துவ அதிகாரிகள்

* 475 வினா—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கிராமப்புறங்களில் மருத்துவச் சிகிச்சையை மேம்படுத்துவதற்காகச் சென்னை மாநகரில் நீண்டகாலமாகப் பணியாற்றி வரும் முதுநிலை மருத்துவ அதிகாரிகளை வெளியூர்களுக்கு மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.





திரு. கி. ஜெயராமன் : தலைவரவர்களே, மாவட்டத் தலை நகரங்களிலுள்ள மருத்துவமனைகளில் சிறப்புப் பட்டங்களை அல்லது டிப்ளமா பெற்றவர்கள் பல பேர்களை, அனுபவம் பெற்றவர்களைத் தவறாமல் நியமிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மிகச் சிறப்பு வாய்ந்த தகுதிகளுடைய மருத்துவ நிபுணர்கள் அதற்கேற்ற எல்லா வசதிகளுடைய மருத்துவ மனைகளிலே யிருந்தால்தான் அவர்களது அறிவும் திறனும் மக்களுக்குப் பயன்படும். specialists in certain departments என்று சிறப்பிக்கப்படுகிற அப்படிப்பட்ட தகுதியுடையவர்களை அரசாங்கம் அதற்கான முழு வசதிகள் இல்லாத மாவட்ட மருத்துவ மனைகளுக்கு அனுப்புவது ஏற்ற செயல் அல்ல. ஆனால் அதே நோக்கில் சிறப்புப் பட்டம் பெற்றவர்கள் Post-graduate degree பெற்றவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக வருகிறார்களோ அந்த அளவில் மாவட்ட மருத்துவ மனைகளில் இடம்பெறச் செய்ய ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

THIRU K. M. SUBRAMANIAN : If such medical officers are transferred because of their efficiency and seniority to mofussil hosptials, will it not result in suffering and inefficiency in city hospitals?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தக் கேள்வியினுடைய உட்பொருள் அவ்வளவு பொருத்தமானது அல்ல. யார் யார் எந்தெந்த இடத்திலே மக்களுக்கு நன்மைகளை வழங்குகிறார்களோ, அந்த நன்மைகள் வளரும் அடிப்படையிலே வைத்து அந்தந்த இடத்திலே அமைக்கப்படுகிறார்கள். எப்பொழுது மிகுதியாகத் தேர்வு பெற்றவர்கள் கிடைக்கிறார்களோ, அப்பொழுது பரவலாகப் பயன்படுத்தப்படுவார்கள்.

### *Children's Care Homes in rural areas*

* 476 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :

(*a*) whether there is any proposal to start Children's Care Homes in rural areas of the State; and

(*b*) if so, when the proposal will be given effect to?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

THIRU B. VENKAṬASWAMY : In the rural areas there is great necessity to open Children Care Homes. The answer given by the Hon. Minister is that there are no such proposals to open Children Care Homes in rural areas. May I know from the Hon. Minister whether this Government will consider sympathetically and open at least a few Children Care Homes in rural areas?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : சில்ட்ரன் கேர் ஹோம்ஸ் வேறு, ஆர்பனேஜஸ், ஹோம் ஃபார் டெஸ்டிட்யூட்ஸ் என்பது வேறு. கேர் ஹோம் என்ற அடிப்படையில் இப்பொழுது டாக்டர் ஆப்

அப்ரூவ்ட் ஸ்கூல்ஸ் தலைமையின்கீழ் இரண்டு விடுதிகள் இருக்கின்றன. குற்றம் செய்கிற இளம் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்ட பிறகு இங்கே அவர்களுக்கு சில நல்ல பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. பயிற்சி காலம் முடிவதற்குள்ளாக தண்டனைக் காலம் முடிந்துவிட்டால் ஆஃப்டர் கேர் ஹோமில் அரசாங்கத்தின் சார்பில் விடப்படுகிறது. தனியாக அனாதைக் குழந்தைகளுக்கென்ற முறையில் அத்தகைய இல்லங்கள் அரசாங்கத்தின் சார்பில் இல்லை. அப்படி பல தனிப்பட்டவர்கள் நடத்துகிறார்கள். அவற்றுக்கு அரசாங்கத்தால் மானியம் கொடுக்கப்படுகிறது. அரசாங்கத்தின் சார்பில் அத்தகைய இல்லங்கள் தோற்றுவிக்கும் திட்டம் தற்போது இல்லை யென்று சொன்னேன்.

### *Training in Typewriting to Scheduled Caste students*

* 477 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :

(a) whether the Government have any proposal to introduce a scheme for giving training to Scheduled Caste and Schedulel Tribes students in Typewriting and Scheduled during 1970–72; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) & (இ), தட்டச்சு, சுருக்கெழுத்து ஆகியஅற்றில் அரிசன, பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் 1971-72-ல் கொண்டு வரப்பட்டுள்ளது. இத் திட்டம் பற்றிய விவரங்கள் பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளன.

DR. H. V. HANDE : While I am thankful for the Hon. Minister for giving a detailed report, may I know the number of persons who actually availed of this opportunity during 1970–71?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : 1970-71-ம் ஆண்டில் மாணவர்கள் யாரும் சேர்க்கப்படவில்லை. 1971-72-ல் தான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். திட்டங்களை உருவாக்குவதற்குத்தான் கடந்த ஆண்டு பரிசிலனை செய்யப்பட்டது. தட்டச்சு 250 பேரும், சுருக்கெழுத்து 125 பேரும் சேர்க்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண்கள் 478 முதல் 484 வரை, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டு கோளுக்கிணங்க, தள்ளி வைக்கப்படுகின்றன.

### *George Town Co-operative Bank*

* 485 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(a) whether it is a fact that the Management of the George Town Co-operative Bank has been declaring bonus on recurring deposit accumulations in violation of Rule 46 (4) of the Madras Co-operative Societies Rules, 1963;

@ ...ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



(b) if so, the loss sustained by the society under this Head from the year 1961-62 to 1970-71; and

(c) the action which the Government propose to take against those responsible for the mismanagement?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) இல்லை.

(இ) & (உ) வினா எழவில்லை.

DR. H. V. HANDE : Is it not a fact that any society other than a credit society which is a co-operative stores is allowed to give bonus? May I know whether George Town Co-operative Bank Limited is an urban credit society and as per Rule 46 (4) the George Town Co-operative Urban Bank Limited, being a credit society, is prohibited from payiny any bonus to any member? The Hon. Minister said that no bonus has been declared. But here I have got a book which clearly shows bonus to subscribers at 2 paise was Rs. 1,64,684–60. How then bonus was declared and under what Rule was it declared?

THE HON. SI. PA. ADITANAR : The Regulations have been permitted to be amended to read "rebate on subscriptions". The word 'bonus' has been omitted. In the oll Regulations framed by the Society the word 'bonus' occurred. But Law will loon into the pith and substance of the matter, not merely relating to the wording, but the substance of the matter. So, those who paid into the savings fund were given a rebate on their subscriptions. Some 10,000 members were so given. That is a thing to be encouraged. It was really a rebate on the subscription. Therefore, permission was given to change the wording from bonus to rebate on subscription. Although the word 'bonus' occurs in the Rules and also in the Act, the meaning of the word 'bouns' was different in the Regulations.

DR. H. V. HANDE : Am I to learn from the Hon. Minister that the Rules have been changed by bringing the Rules before the Assembly or whether the Act has been changed? It is clearly a violation of Rule 46 (4). Hon. Minister says that bonus is being given and he further says that it has been amended. But when was it amended? Under what Rule was it amended? May I know whether it is possible for the Hon. Minister to quote exactly the point where the Rule was amended and give the whole details to this House?

THE HON. SI. PA. ADITANAR : I do not say that the Rule was amended. I said that the Regulations were amended. There are four different kinds of control in the co-operatives. One is the Act. The next is the Rules. The third is the Bye-laws. The fourth is the Regulations. The Regulation was amended.

DR. H. V. HANDE : Is this the Regulation? Is it not against the Bye-Law? That is my point. I want to know whether the Hon. Minister has armed himself with sufficient statutory powers?

MR. SPEAKER : You can address the Chair, Dr. Hande.

DR. H. V. HANDE : I would like to know whether the Hon. Minister has armed himself with sufficient powers because is this Regulation not violative of Rule 16 (4)? That is my question. Unless he has brought it before the House, how can be say arbitrarily that the Rule was amended? It has to be brought before the House. It has to be given statutory recognition. This Regulation 36 (3) under Bye-Law 7-A of the George Town Co-operative Bank, is it not in direct violation of Rule 46 (4)? It has clearly and unambiguously prohibited any credit society or bank from giving bonus to members.

MR. SPEAKER : It is not a bonus. He says it is a rebate.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : What was amended, I said, was the Regulations and the Registrar permitted the amendment. The word 'bonus' occurs in the Act and the Rules. But when the Regulations were framed by the Society, they used the word 'bonus' in the Regulations. But as I said, the law will look into the pith and substance of the matter and not the wording. On looking into the whole thing, we find that although the word 'bonus' was used in the Regulations framed by the members of the Bank, it was really a rebate on the subscriptions. Therefore, the General Body passed a resolution changing the word 'bonus' to 'rebate' and that has been permitted by us.

DR. H. V. HANDE : On a point of order, Sir. Is it possible for the Government to bring any Regulation violative of Acts passed in the Legislature, that is my only submission. I request the Hon. Speaker to let us know whether any powers had been given by this House to bring any different Regulation violative of the Act? Then what is the purpose of a legislation? What is the purpose of Assembly? What is the purpose of the Rules? May I know whether it is in order for the Minister to say in this House that the entire law-making body is completely ignored? What is the purpose? We come here and pass enactments. I would request the Hon. Speaker to intervene in this matter.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : The Act is something passed by this House and the other House. The Rules are placed before the House of Legislature. The Bye-laws are not placed before us and the Regulations are changed by the members of the Bank themselves. ... ... ...

MR. SPEAKER : I have not yet disposed of the point of order raised by Dr Hande. Rule 31 (6) clearly says as follows :

" In order that a question may be admissible, it must satisfy the following conditions, namely—



. . . . . (6) it must not ask for an expression of opinion or the solution of an abstract legal question or of a hypothetical proposition. "

So, the hon. Member can raise the matter in some other discussion and not during question hour. The Hon. Minister can answer.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : The Government have not paid any share money nor have the Government given any subsidy or any other form of monetary help. This Bank is making a profit of Rs. 4½ lakhs per year and they have organised what is known as the Monthly Savings Fund. It is a habit very much to be encouraged. I know that the word 'bonus' occurred in the Regulations. You are referring to the Regulations. But when the members used the word 'bonus', they did not use the word in the sense in which the Act and the Rules used the word 'bonus'. It was in fact a rebate on the subscripton. There are over 14,000 members who contribute to the Monthly Savings Fund and receive the rebate. It is a thing to be encouraged. Looking at the substance of it, we find that it is merely a rebate on the subscriptions and not a bonus. That is why we permitted the Regulation to be changed. The members changed the Regulations.

MR. SPEAKER : According to the Hon. Minister it is the content and not the form that has to be looked into. The matter is over.

DR. H. V. HANDE : It is a factural error. . . . .

MR. SPEAKER : Even if it is violative, you cannot question it during question hour.

DR. H. V. HANDE : There is an error in the statement of the Hon. Minister இந்தப் புத்தகத்தில் 'bonus' என்று போட்டப்பட்டிருக்கிறது.

MR. SPEAKER : The Minister has clearly stated that it is a rebate. You will have to look into the content. The Minister has repeatedly answered it.

பவானி வட்டத்தில் வேளாண்மை பொறியியல் பிரிவு.

*486. வினா—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா— மு.ப. 10-00

(அ) பவானி வட்டத்தில், ஒரு வேளாண்மைத் துறை பொறியியல் பிரிவு (Agricultural Engineering Sub-division) ஏற்படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

**உதகையில் மண்வள பரிசோதனை ஆய்வுக்கூடம்.**

*487. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உதகமண்டலத்தில் மண்வள சோதனை ஆராய்ச்சிக் கூடம் ஒன்று நிறுவப்படவிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இல்லை.

இந்தியா-ஜெர்மனி திட்டத்தின் தேவைகளை நிறைவு செய்வதற்கென்றே மண்வளப் பரிசோதனை ஆய்வுக் கூடம் ஒன்று உதகமண்டலத்தில் உள்ளது. நீலகிரி மாவட்டத்திற்கான மண்வளப் பரிசோதனைப் பணிகளை கோயம்புத்தூரில் உள்ள மண்வளப் பரிசோதனை ஆய்வுக் கூடம் கவனித்து வருகிறது.

**தஞ்சாவூர் மாவட்டத்தில் ஹெலிகாப்டர் மூலம் பூச்சி மருந்து தெளிப்பு.**

*488. வினா—திரு. சி. கணேசன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் 1970-ம் ஆண்டில் ஹெலிகாப்டர் மூலம் பூச்சி மருந்து தெளிக்கப்பட்ட நிலங்களின் பரப்பளவு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தஞ்சை மாவட்டத்தில் 1970-ம் ஆண்டில் ஹெலிகாப்டர் மூலம் பூச்சி மருந்து தெளிக்கப்பட்ட நிலப்பரப்பின் அளவு 58,900 ஏக்கர்.

**திரு. சி. கணேசன் :** இந்த ஹெலிகாப்டர் மூலம் பூச்சி மருந்து தெளிப்பதை மாவட்டத்திலுள்ள சில விவசாயிகள் விரும்புவதில்லை. காரணம் இதை விட விசைத் தெளிப்பான்கள் மூலம் தெளிப்பதுதான் பலன் தருகிறது என்று கருதுகிறார்கள். ஆனால் அரசுத் துறை அதிகாரிகள் ஹெலிகாப்டர் மூலம் பூச்சி மருந்து தெளிக்க வேண்டுமென்று ஆங்காங்குள்ள ஊராட்சி மன்றத் தலைவர்களைக் கேட்கிறார்கள். அதற்குரிய கட்டணத்தை வசூல் செய்யும்போது அதை விவசாயிகள் எதிர்க்கத் தலைப்படுகிறார்கள். அரசாங்கம் என்ன கருதுகிறது? ஹெலிகாப்டர் மூலம் மருந்து தெளிப்பது பலன் அளிப்பதாக அரசு கருதுகிறதா? அதைக் கட்டாயப்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிப்பதை அரசு எந்த ஊராட்சிமன்றத் தலைவர்கள் பேரிலும் அல்லது விவசாயிகள் பேரிலும் கட்டாயமாகத் திணிப்பதில்லை. அப்படித் தெளிப்பதற்கு முன்பு ஊராட்சி ஒன்றியங்கள் அனுமதி பெற்று அதற்குப் பிறகு அனுமதி வழங்கிய ஒன்றியங்களில்தான் தெளிக்கப்பட்டு வருகின்றன. பொதுவாக தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் விமானம் மூலம் தெளிப்பதன் மூலம் உணவு உற்பத்தி பெருக்கப்பட்டிருக்கிறது என்பது நன்கு தெரியும். எனவே அந்த வகையில் விமானம் மூலம் தெளிப்பதில் அரசு யாரையும் கட்டாயப்படுத்தாமல் அதை ஒரு முறையாக வைத்திருக்கிறது.





**திரு. கோ. இளங்கோவன் :** அரசு இதற்கான தொகையை வசூலிக்க முன் வந்தபோது தஞ்சை வட்டத்திலுள்ள பிள்ளைவாய்க்கால் மிராசுதார்கள் சங்கம் அதைத் தர மறுத்து நீதிமன்றத்தில் வழக்கு போடப்பட்டுள்ளதா? அப்படியானால் அதன் முடிவு என்ன?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** யாரோ ஒருவர் நீதிமன்றத்திற்குச் சென்றிருப்பதாக தெரிய வருகிறது. இன்னும் முடிவு தெரியவில்லை எந்த நல்ல காரியங்களுக்கும் நீதிமன்றத்திலே இடைக்கால தடை உத்தரவு கொடுக்கப்படுகிறது என்பதை உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** இந்த விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிப்பதில் ஏக்கர் ஒன்றுக்கு எவ்வளவு செலவாகிறது? இந்தச் செலவு பூராவையும் விவசாயி கட்டவேண்டியிருக்கிறதா? அல்லது மானியம் எவ்வளவு சேர்க்கப்படுகிறது? ஊராட்சி ஒன்றியங்கள் அல்லது ஊராட்சி மன்றங்கள் இவற்றின் தலைவர்களின் கையெழுத்தை வாங்கிக்கொண்டு கிராமம் பூராவும் அல்லது யூனியன் பூராவும் விமானம் மூலம் பூச்சி மரும்து தெளித்து விட்டு கட்டணம் வசூலிக்கிறார்கள். பலர் இதைச் செலுத்த முடியாமல் வேண்டாம் என்று சொல்லக் கூடியவர்களிடமிருந்து கட்டாயப்படுத்தி வசூலிப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல் பவர் ஸ்ப்ரேயேர்ஸ் வைத்து அடிப்பது இதைவிட நல்லது என்று கருதுகிறார்கள். அதைப்பற்றி அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஒரு ஏக்கருக்கு ஒரு விவசாயியினிடமிருந்து ரூ. 13,64 காசு வசூல் செய்யப்படுகிறது. பூச்சி மருந்து தெளிக்க வாடகை ரூ. 9. அதில் அரசுப் பங்கு ரூ. 4. விவசாயிகள் பங்கு ரூ. 5. மருந்து விலை ரூ. 9.20 அதில் அரசு 15%. அதற்கு உதவித் தொகை கொடுப்பது ரூ. 1.38. பாக்கி ரூ. 7,82, மருந்தின் மேல் விற்பனை வரி 32 காசு, நிர்வாகச் செலவு 50 காசு. ஆக ரூ. 13.64 வசூலிக்கப்படுகிறது. இது தெளிக்கப்பட்ட பிறகும் கூட அந்த நோய்கள் பூரணமாகக் குணமடையவில்லை என்று சொல்கிற விவசாயிகள் தெளிப்பான்கள் மூலம் தெளித்துக்கொண்டு வருகிறார்கள். தனித்தனியாக தெளித்துக்கொள்வார்கள் என்று விட்டுவிட்டால் மற்றவர்கள், அதாவது பூச்சி மருந்து தெளித்து நல்ல முறையில் விவசாயம் செய்பவர்கள் நிலத்திற்கும் அது தெளிக்காத நிலத்திலிருந்து பூச்சிகள் வந்து மேற் சொன்ன விவசாயிகளின் அதாவது மருந்து தெளித்துள்ள விவசாயிகளின் நிலங்களுக்கும் நோய் பரவ ஏது இருப்பதால் பொதுவாகத் தெளிப்பது நல்லமுறை என்று இது செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒருசில விவசாயிகள் இதுகுறித்து குறை சொல்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் சிலர் எதிர்த்தாலும் கூட அங்கு தெளிப்பதை நிறுத்திவிட்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு நல்ல முறையில் பயன் பட்டதால் இந்த ஆண்டு பெரும்பாலான ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து ஒருமனதாக தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பப்பட்டிருக்கின்றன.

**திரு. கு. காமாட்சி :** சாதாரணமாக ஒரு ஏக்கருக்கு பூச்சி மருந்து தெளிக்க ஐந்து ரூபாய் செலவாகிறது. ஆனால் அதே நேரத்தில் விமானம் மூலம் தெளிக்கும்போது ரூ. 13, ரூ. 14 என்று வசூல் செய்யப்படுகிறது.

விமானம் மூலம் தெளிப்பது நல்லதுதான். ஆகவே இந்த ஐந்து ரூபாய் போக பாக்கியுள்ளதை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஐந்து ரூபாய் கட்டணத்தை இப்போது நாம் ஏற்றுக்கொள்வதில்லை. அதற்கு இப்போது நான்கு ரூபாய் கொடுக்கப்படுகிறது. விவசாயிகள் தனித்தனியாக ஆள்களை வைத்து அவர்களே மருந்து தெளிக்கும்போது ஒரு ஏக்கருக்கு ஐந்து ரூபாய்க்கு மேல் செலவாகிறது. நல்ல விவசாயிகள் நான்கு தடவைகள் கூட தெளிப்பான் மூலம் தெளிப்பது உறுப்பினர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன்.

திரு. தொ. ப. சீனிவாசன்: விவசாயிகள் விமானம் மூலம் பூச்சி மருந்து அடிப்பது, அந்த விமானம் அரசுக்குச் சொந்தமானதா அல்லது தனியார் துறையைச் சேர்ந்ததா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இப்போது தனிப்பட்ட கம்பெனியார் மூலம் தெளிக்கப்பட்டு வருகிறது. தனியாக இந்த ஆண்டுதான், நமது முதல் அமைச்சர் அவர்கள் நமக்கு தனியாக விமானங்கள் வாங்கலாம் என்று இரண்டு விமானங்கள் வாங்குவதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். அது இந்த ஆண்டு வந்து சேராது. ஆகவே முன்போலவே வாடகை விமானம் மூலம் தெளிக்க உத்தரவு இடப்பட்டிருக்கிறது.

திரு. அ. இராசமாணிக்கம்: இந்த விமானம் மூலம் தெளிப்பது பயிர்களில் படுவதில்லை, அவர்கள் ஏதோ ஏமாற்று வேலை செய்கிறார்கள் என்று மக்கள் கருதுகிறார்கள். ஆகவே இதைப் பரிசீலனை செய்து நல்லபடியாக அடிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: விமானம் மூலம் மருந்து தெளிக்கும்போது நிலத்தில் அவர்கள் ஆங்காங்கே கொடிகள் நட்டு சரியாக விழுகிறதா என்பதை பரிசோதனை செய்து பார்க்கிறார்கள். அப்படியில்லாவிட்டால் மறுமுறை தெளிக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இந்த மருந்து தெளிக்க வாங்கும் ஹெலிகாப்டர் விமானங்களில் மந்திரிகளும் சுற்றுப்பயணம் செய்வார்களா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: உறுப்பினர் அவர்கள் விரும்பினால் கொடுக்கிறேன். ஆனால் அந்த விமாம் 'ஹனுமான்கள்' போல் இருக்காது, இது ஹெலிகாப்டர் விமானம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. கணேசன்: அம்மை நோய் வந்தால் அரசுச் செலவில் அது தடுக்கப்படுகிறது. அதேபோல் காலரா வந்தால் அதுவும் அரசுச் செலவில் அரசாங்க அதிகாரிகள் வந்து நோயைப் போக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளுகிறார்கள். அதேபோல் பயிர்களுக்கு வரும் நோயையும் நீக்க அரசுத் துறையில் இந்த பூச்சிமருந்துகளைத் தெளிப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: உயிர்களைக் காப்பாற்ற இலவசமாக அளிக்கப்படுகிறது. பயிர்களைக் காப்பாற்றுவதற்கு இப்போது இல்லை.



### Salary for employees of State Transport Department

* 489 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether any section of the employees of the State Transport Department have not been paid the salary for January, February and March 1971; and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

### Madras-Tirupathy Bus Service

* 490 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Transport be pleased to state whether the State Transport Services have been affected in any way by the introduction of a fast-moving train between Madras City and Tirupathy?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: இல்லை.

திரு. இ. எஸ். தியாகராசன்: திருப்பதிக்குச் செல்லும் எக்ஸ்பிரஸ் பஸ்களில் இப்போது நெரிசல் இருப்பதால் மேலும் இரண்டு பஸ்கள் விட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: திருப்பதிக்கு அதிக பஸ்கள் விடுவதற்காக இப்போது ஆந்திரா மாநிலத்தைச் சேர்ந்த போக்குவரத்து அமைச்சரோடு இதுபற்றி பேசி இங்கு எவ்வளவு மைல்கள் ஓடுகிறதோ அந்த அளவிற்கு பஸ்களை அதிகப்படுத்தி ஆந்திரப் பகுதியில் ஓட்டுவதற்கான ஒரு ஒப்பந்தம் இப்போது தயாராக இருக்கிறது. ஆகவே அதன் மூலம் அதிக பஸ்கள் விடும் வாய்ப்பிருக்கிறது.

### ஓட்டுநர்களிடம் பேருந்துப்பொறுப்பை ஒப்படைத்தல்

* 491. வினா—திரு. ஏ. எம். இராஜா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஓட்டுநர் இருவரிடம் ஒவ்வொரு பேருந்தின் பொறுப்பும் ஒப்படைக்கப்படும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: வலவர்கள் இருவரின் பொறுப்பில் ஒரு பேருந்தை ஒப்படைக்கும் முறைமை தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறையின் செயற்குறிப்பில் இருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, தற்போது அரசாங்கப் பேருந்துகளில் ஒவ்வொரு நாளும் வெவ்வேறு டிரைவர்களை மாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு பஸ்ஸின் மேல் இருக்கும் பொறுப்பு குறைந்து விடுகிறது. என்னென்ன மாதிரி தவறு நடந்து இருக்கிறது என்று அடுத்த நாள் அவர்கள் பொறுப்பேற்காததால் கவனிக்காமல் விட்டு விடுகிறார்கள். அதோடு ஒரு வண்டியிலிருந்து இன்னொரு வண்டிக்கு ஸ்பேர் பார்ட்ஸ் எடுத்துப் போடுகிறார்கள். ஆகவே, இவைகளை நீக்கும் வகையில்,

அந்த டிரைவர்கள் பொறுப்பாக செயல்படும் வகையில் ஒவ்வொரு டிரைவருக்கும் ஒரு பஸ் ஒப்படைப்பதன் மூலம் நல்லபடி அந்த நிர்வாகத்தை நடத்தலாம் என்பதை அரசு தெரிந்து கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை ஒட்டித்தான் இரண்டு டிரைவர்களிடத்தில் ஒரு பஸ் ஒப்படைப்பது என்று அரசாங்கம் ஒரு திட்டத்தை பரிசீலித்துக்கொண்டு இருக்கிறது. அதிலே ஒவ்வொரு ரூட்டுக்கும் ஒரு பஸ் இருக்கிறது. ஆகவே வேறு ரூட்டில் டிரைவர்கள் மாற்றம் செய்யும்பொழுது அந்த பஸ்களை வேறு ஒருவரிடத்தில் ஒப்படைக்கப்படுகிறது. வண்டிகள் பழுதடைந்து விடும் போதும் டிரைவர்களை வேறு இடத்திற்கு மாற்றவேண்டியிருக்கிறது. ஆனால் முதல் கட்டமாக சென்னை மாநகரத்திலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் கிட்டத்தட்ட அரசு பஸ்களே அதிகமாக ஓடுவதால், அங்கே இருக்கும் டிரைவர்களுக்கு அவர்களுடைய சர்வீஸ் வரைக்கும், அவர்களுக்கே அந்த பஸ்ஸை ஒப்படைக்கும் திட்டத்தை அமுல் நடத்த அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. நா. வீராசாமி: பேரவைத் தலைவரவர்களே, டிரைவர்களிடத்தில் பஸ்ஸை ஒப்படைக்கும் செயற்குறிப்பு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பஸ்ஸை ஒப்படைத்தால் மட்டும் போதாது. அந்த பஸ்ஸுக்கு வேண்டிய ஸ்டெப்னி, ஸ்பேனர்கள் முதலியவைகள் ஒப்படைத்தால்தான் நீண்ட தூரம் செல்லும் பஸ்களில் பழுது அடைந்து விட்டால் பழுது பார்க்க முடியும். இப்படிப்பட்ட கருவிகள் ஒப்படைப்பது பற்றி அரசின் செயற்குறிப்பில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நீண்ட தூரப் பேருந்துகளுக்கு இப்படிப்பட்ட கருவிகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. 10 பஸ்ஸுக்கு ஒரு மெயின்டனன்ஸ் குரூப் என்று போட்டு, 10 பஸ்ஸுக்கான 30 டிரைவர்கள் என்ற வகையில் ஒரு குழு அமைப்பது என்று அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது.

### கோயில் அறங்காவலர் நியமனத்தில் உச்சவரம்பு

* 492. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோயில்களுக்கு அறங்காவலர் நியமிப்பதில் உச்சவரம்பு நிர்ணயிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தமிழ்நாடு 1959-ம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டத்தின் 47-வது பிரிவின் கீழ் பட்டியல் படுத்தப்பட்ட நிறுவனங்கள் தொடர்பாக மூன்று பேர்களுக்கு குறையாமலும் ஐந்து பேர்களுக்கு மேற்படாமலும் அறங்காவலர் குழு ஒன்றை அமைக்க ஆணையாளர் தகுதிபடைத்த அதிகாரியாவார். 49-வது பிரிவின்கீழ் பட்டியல் படுத்தப்படாத நிறுவனங்கள் தொடர்பாக உதவி ஆணையாளர் மேற்கூறியவாறு அறங்காவலர் குழுவை அமைக்கலாம். அவர் ஒரேவொரு அறங்காவலரையும் நியமிக்கலாம். ஐந்து அறங்காவலர்கள் என்றும் வரையறை நியமன அறங்காவலருக்குப் பொருந்தும். இப்போதுள்ள விதித்துறையில் மாறுதல் ஏதும் செய்யக் கருதப்படவில்லை.



திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, ஒரு சிலர் 7-8 கோவில்களுக்குக் கூட டிரஸ்டிகளாக நியமிக்கப்படுகிறார்கள். அதைப் பரவலாக்கி பலருக்கும் வாய்ப்பளிக்கும் வகையில் அடுத்த டிரஸ்டி இப்போது வேண்டாம், இரண்டுக்கு பிறகு எப்போதும் வேண்டாம் என்று அரசு முடிவு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : குடும்ப நலத்திட்டத்திற்கு எப்படி அந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர்களே முடிவு எடுக்கவேண்டுமோ அது போல் அறங்காவலர்களாக நியமிக்கப்படுபவர்களும் போதும் என்று சொல்ல வேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, இப்படி ஆலயங்களுக்கு அறங்காவலர்கள் நியமிக்கும்போது பெண்களுக்குச் சலுகைஅளிக்கப்படுமா ? காரணம் பெண்கள் ஆண்களைக் காட்டிலும் தெய்வ பக்தி அதிகம் உள்ளவர்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அம்மன் கோவில்களுக்கு டிரஸ்டிகள் நியமிக்கப்படும்போது இது கருத்தில் கொள்ளப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அம்மன் கோவில் என்ன, ஈஸ்வரன் கோவிலைப் பராமரிப்பதற்குக் கூட சக்தி, 'சக்திகளுக்கு' உண்டு என்பது தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 'சக்தி' ஈஸ்வரர்களையே ஆட்டிப் படைப்பவர்கள் என்பது எங்களுக்குத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறியிடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### (1) கவன ஈர்ப்பு

**கீழ்ப்பாக்கம் மருத்துவமனை செவிலியர் தவறாக மனநோய் மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டதும், மருத்துவமனைப் பணியாளரிடையே ஏற்பட்டுள்ள அமைதியின்மையும்.**

THIRU K. T. K. THANGAMANI : Sir, under Rule 41 of the Assembly Rules, I call the attention of the Hon. Minister for Public Health to a matter of urgent public importance, namely, the action of the Kilpauk Hospital authorities in sending wrongfully one of the Nurses to the Mental Hospital and the consequent unrest among the Hospital employees.

* மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவரவர்களே, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைச் செவிலியர் பணியாளர்களில் ஒருவராகிய செல்வி ஏ. வசந்தா ரத்தினபாய் என்பவரை அம்மருத்துவ மனையைச்சேர்ந்த ஆண் ஊழியர்கள் கை கால்களைக் கட்டி வன்முறையில் ஆம்புலன்ஸ் வண்டிக்குள் தள்ளி சென்னை மனநோய் மருத்துவமனைக்கு அனுப்பியதாக செவிலியர்கள் கேள்விபட்டதால் அவர்கள் கலக்கமடைந்தனர் என்று, உறைவிட உதவி மருத்துவ அதிகாரியால் சென்னை, அரசினர் கீழ்ப்

[திரு. க. அன்பழகன்]

பாக்கம் அரசினர் 'மருத்துவக் கல்லூரி—மருத்துவமனைத் தலைவருக்கு 10-7-1971 அன்று காலை சுமார் 7-30 மணிக்கு அறிவிக்கப்பட்டது. மருத்துவ மனைத் தலைவர், மேட்ரன் அலுவலகத்திற்குச் சென்று செல்வி வசந்தா ரத்தினு பாய் அருகில் ஆண் ஊழியர்கள் எவருமிலர் என்பதை மேட்ரனிடமிருந்தும் தலைமைச் செவிலியரிடமிருந்தும் தெரிந்துக் கொண்டார். செல்வி வசந்தா ரத்தினுபாய் வண்டியில் ஏறிக்கொள்ளுமாறு மேட்ரனும், தலைமைச் செவிலியரும் நயமாகவேதான் கேட்டுக்கொண்டதாகவும், தெரிந்து கொண்டார். வண்டியின் பின் சென்ற சார்ஜன்டும், ஆண் செவிலி உதவி யாளரும் தொலைவிலேயே சென்று கொண்டிருந்தனர். உறைவிட மருத்துவ அதிகாரி செவிலியர்களுக்கு நிலைமையை விளக்கி இதைச் சுமுகமாகத் தீர்த்து வைத்தார். செவிலியரும் வார்டுகளுக்குத் திரும்பினர்.

மருத்துவமனைத் தலைவரும், செவிலியர் பணியாளரை அழைத்து விசாரித்தார். ஆண் ஊழியர்கள் செல்வி வசந்தா ரத்தினுபாயிடம் முரட்டுத் தனமாக நடந்து கொண்டதாகத் தங்களுக்கு கூறப்பட்டது என்று செவிலியர் பணியாளர்கள் கூறினர். ஆனல் விசாரணை செய்ததன் பேரில் அவர்களில் எவரும் அந்த நிகழ்ச்சியைப் பார்த்ததாகத் தெரியவில்லை. முறையாக முறையீடு செய்து கொள்வதே சரியான வழிமுறையாகும் என்றும், மேட்ரன் அலுவலகத்தின் முன்பு கூட்டங்கூடக்கூடாது என்றும் மருத்துவ மனைத் தலைவர் அவர்களுக்குக் கூறினர். அவர்கள் தங்கள் குறைகளை எழுதி விரிவான முறையீடு ஒன்றைத் தமக்குக் கொடுக்குமாறு அவர்களைக் கேட்டுக்கொண்டு இது குறித்துத் தாம் நாட்டமுடன் பரிசீலித்து ஆவன செய்வதாக அவர் களுக்கு உறுதியும் அளித்தார். அவரவர் வேலைகளைச் சென்று கவனிக்குமாறு அவர்களை அவர் மேலும் கேட்டுக்கொண்டார். அவர்களும் அவ்வாறே செய்தனர்.

கீழ்ப்பாக்கம் உறைவிட மருத்துவ அதிகாரியும், உறைவிட உதவி மருத்துவ அதிகாரியும் செவிலியர் விடுதியில் 10-7-1971 அன்று பிற்பகலில் செவிலியர்களைச் சந்தித்துப் பேசி இந்தப் பிரச்னையைத் தீர்த்துவைத்தனர். பணியாளர் செவிலியரில் முதுநிலைப் பிரதிநிதிகளைத் தலைவர் 12-7-71 அன்று பிற்பகல் சந்தித்துப் பேசினர். செல்வி வசந்தா ரத்தினுபாய் முறையாக சிகிச்சையளிக்கப்படவேண்டுமென்றும் அவர்களது நலம் குறித்து மட்டுமே தாங்கள் கவலைப்படுவதாகவும் உண்மை நிலையைத் தாங்கள் அறிந்து கொண்டதால் மேற்கொண்டு விசாரணை எதுவும் தேவையில்லை என்றும் அவரிடம் அப்போது கூறினர்கள்.

இந்த நிலைமை ஏற்பட்டதற்கு உண்மையாகவே காரணம், அதற்கு முன்னுல் 3-4 திங்களுக்கு முன்னுல் அவர்கள் மதுரையில் இருந்தபோது அந்த அம்மையார் மன நோய் காரணமாக பல்வேறு வகையில் நடந்துக் கொண்டு அதன் காரணமாக அவர்களுக்கு மன நோய் சிகிச்சை அளிக்க மன நோய் மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டார். மருத்துவத் துறை மனநோய் பேராசிரியர் அவர்களை சோதித்து விட்டு, அவர்களுக்கு ஏற்பட்டு இருக்கும் மன நோய் "முரண் மூளை நோய்' என்றும் (Schizo-phrenia or split responality)



[திரு. க. அன்பழகன்]

அப்படிப்பட்ட மனநோய் ஏற்பட்டு இருப்பதால் மருத்துவ மனையில் ஓரளவு சிகிச்சை அளிக்கவேண்டுமென்பதற்காகத்தான் இப்படி அழைத்து சென்று இருக்கிறார்கள். இரண்டு மாதம் விடுமுறை பெற்று இருப்பதாக அறிகிறேன். விவரம் முழுவதும் வேண்டுமானலும் படிக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, மருத்துவக் கல்லூரியில் பெண்கள் மத்தியில் எல்லோருக்கும் ஆத்திரம் ஏற்பட்டது என்ற விஷயத்தை அவர்கள் சொன்னர்கள். நான் அறிய விரும்பியது இந்த நர்ஸ் வசந்தா அவர்கள் மேட்ரன் போன்றவர்களின் முயற்சியால் தான் இந்த மென்டல் ஹாஸ்பிடலுக்கு அனுப்பப்பட்டார்கள் என்றும், மென்டல் ஹாஸ்பிடல் அதிகாரிகள் அந்த நர்சுக்கு எந்த விதமான மூளைக்கோளாறு இல்லை என்றும் சொன்னதாக நான் அறிகிறேன். இந்த நிலைமை மூளைக்கோளாறல் ஏற்பட்டதா அல்லது வேறு சில காரணங்களுக்காக ஏற்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தயவு செய்து மிகப்பெரிய பொறுப்பு உள்ள அங்கத்தினர் அவர்கள் இத்தகைய முறையில் சொல்வது சரியல்ல. எவ்வளவோ நர்சுகள் இருக்கிறபோது ஒரு நர்சுக்கு மாத்திரம் இப்படிப்பட்ட பரிதாபகரமான நிலைமை ஏற்படுவதற்கு நாங்கள் விடமாட்டோம். அதற்கான முழுக் காரணத்தையும் விவரத்தையும் சொல்கிறேன்.

சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி—மருத்துவ மனைச் செவிலி செல்வி வசந்தா ரத்தினுபாய், 31—1—70 வரை மதுரை அரசு எர்ஸ்கின் மருத்துவ மனையைச் சேர்ந்தவர். மதுரை அரசு எர்ஸ்கின் மருத்துவமனையில் இருந்தபோது 4—11—69 அன்று, அழுக்கடைந்த, அசுத்தமான நிகாடை அணிந்து செவிலியர் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நுழைந்து, இரவு அலுவல பார்க்கமுடியாது என்று உரத்தகுரலில் திமிராகப் பேசினர். அப்போது இரண்டாம் நிலை செவிலியர் கண்காணிப்பாளரும், மருத்துவ மனையைச் சேர்ந்த கடைநிலை ஊழியர்கள் சிலரும் அங்கிருந்தனர். அடிக்கடி எச்சரிக்கை விடுத்தும், இவர் எப்போதும் அழுக்கடைந்த அசுத்தமான நிகாடையே அணிந்து வந்தார். செவிலியர் இல்லத்து விதிகளையும் இவர் மீறினர். இவர் எப்போதும் எதிர்த்துப் பேசுவார். கீழ்ப்படிவது கிடையாது. இவர் துடுக்குத்தனமாகப் பேசுவதோடு வேலையிலும் அசட்டையாக இருப்பவர். மேற்சொன்ன காரணங்களுக்காக, மதுரை அரசினர் எர்ஸ்கின் மருத்துவ மனைத் தலைவர் அவரிடம் விளக்கம் கேட்டார். செவிலியர் கண்காணிப்பாளரிட மிருந்து மூன்று தடவைகளில் இவர் விளக்கம் கேட்கும் குறிப்பாணையை வாங்கிக் கொள்ள மறுத்து விட்டார். ஒப்புறுதிப் பதிவு அஞ்சல் மூலமாக அவருக்கு விளக்கம் கேட்கும் குறிப்பாணை அனுப்பப்பட்டது. அந்த ஆணை அவரிடம் சேர்ப்பிக்கப்படாமல் "ஏற்றுக்கொள்ள மறுக்கப்பட்டதால் அனுப்பியவருக்குத் திருப்பப்பட்டது" என்று அஞ்சல் அலுவலக மேற் குறிப்புடன் தலைவரிடமே திரும்பி வந்தது. இவர் அரசினர் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி—மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இவர், 10—2—1970 அன்று முற்பகல், கீழ்ப்பாக்கம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பணி செய்ய வந்து சேர்ந்ததாக அறிவித்தார்.

[திரு. க. அன்பழகன்]

10—7—71 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியைப் பொறுத்தமட்டில் செல்வி வசந்தா ரத்தினுபாய், சிலமாதங்களாகவே ஒழுங்காகவே நடந்துகொள்வதில்லை என்றும், ஆணைகளுக்குக் கீழ்ப்படிவதில்லை அல்லது குறிப்பாணைகளை வாங்கிக் கொள்வதில்லை அல்லது செவிலியர்க் கண்காணிப்பாளரைச் சந்திக்குமாறு பிறப்பிக்கப்படும் ஆணைகளுக்குக் கீழ்ப்படிவதில்லை என்றும் கீழ்ப்பாக்கம் மருத்துவமனைத் தலைவர் அறிவித்துள்ளார். மட்டு மீறிய மனக்கோளாறு காரணமாக அவர் அவ்வாறு நடந்துகொண்டிருக்கலாம் என்று தலைவர் கருதினர். மருத்துவக் கல்வி இயக்குநர் கட்டளைகளின்படி, மனநோய்ச் சிறப்புப் பேராசிரியர், செல்வி வசந்தா ரத்தினுபாயைச் சோதித்துப் பார்க்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார். இந்தச் செவிலியர் நியமிக்கப்பட்ட வார்டில் அலுவல் அறையில் அவரது நடமாட்டங்களைக் கவனித்துப் பார்த்த பிறகு, செல்வி வசந்தா ரத்தினுபாய், மனநோய் மருத்துவமனையில் சேர்க்கப் படுவதற்குப் பொருத்தமானவரே என்று தாம் கருதுவதாக சிறப்புப் பேராசிரியர் கீழ்ப்பாக்கம் மருத்துவமனை செவிலியர் கண்காணிப்பாளரிடம் கூறி, அவரைச் சென்னை அரசினர் மனநோய் மருத்துவமனையில் சேர்ப்பதற்கு அவரது பெற்றோர்களிடம் அனுமதி பெறுமாறு கருத்துத் தெரிவித்தார். இவர் முரண் மூளைநோயினுல் பாதிக்கப்பட்டிருப்பதால் ( schizo-phrenia ) மருத்துவமனையிலேயே தங்கி உடனடியாக சிகிச்சை பெறுவது அவசியம் என்பதும் சிறப்புப் பேராசிரியரது கருத்தாகும்.

இதன்படி, மன்னுர்குடியில் வசிப்பவரும் பணியாளர் செல்வி வசந்தா ரத்தினுபாயின் தகப்பனுருமாகிய திரு. ஆரான் சாமுவேல், அவரது மகள் நலத்தைக் குறித்துத் தகுந்த அக்கறை எடுத்துக்கொள்ளவோ, மனநோய் மருத்துவமனையில் மகளைச் சேர்ப்பதற்கு அனுமதி கொடுக்கவோ வேண்டுமென்று தந்திமூலம் அறிவிக்கப்பட்டார். கீழ்ப்பாக்கம் அரசினர் மனநோய் மருத்துவமனையில் தமது மகளைச் சேர்த்துவிட செல்வி வசந்தா ரத்தினுபாயின் தகப்பனுர் திரு. ஆரான் சாமுவேல் தந்திமூலம் தனது இசைவைத் தெரிவித்தார். இதற்கு மேலும் விவரங்கள் வேண்டுமானுல் படிக்கத் தயாராக இருக்கிறேன். இதற்குப் பிறகு தன் மகளை தகப்பனுர் அழைத்துச் சென்றிருக்கிருர். இப்படிப்பட்ட மனக்கோளாறுகள் யாருக்கு இருந்தாலும், பக்கத்தில் உள்ளவர்கள் முறையாகச் சிகிச்சை பெறும் இடத்திற்கு அனுப்புவதுதான் அவர்களுக்குச் செய்கிற உதவியாக ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : நான் அறியவிரும்புவது, இந்த அம்மையார் மேட்ரன் போன்ற மேல் அதிகாரிகள் சொல்வதைக் கேட்காமல் கொஞ்சம் கடுமையாக நடந்துக் கொண்டார்கள் என்பதற்காக ஒரு பனிஷ்மெண்ட் போல் மெண்டல் ஆஸ்பத்திரிக்கு அனுப்பினுர்கள் என்கிற தகவல் எனக்கு வந்திருக்கிறது. அது பற்றி ஏதாவது விசாரணையில் தெரிந்ததா என்பதைத் தான் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் விசாரிக்கச் சொன்னதன் காரணமாக மனநோய் மருத்துவமனைத் தலைவருக்கு நான் டெலிபோன் செய்து விசாரித்ததன் பேரில், அவர் அந்த நோய் உடையவராகத்தான் காணப்படுகிருர்கள் என்று தெரிவித்திருக்கிருர்.



### (3) அறிவிப்புகள்.

#### (அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனைவரி (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிருர்கள்.

### (4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

#### (அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய பேரவையின் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பட்டிருக்கிறது.

#### (ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்கல்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, 1971-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்கல்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பட்டிருக்கிறது.

#### (இ) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மை பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மை பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பட்டிருக்கிறது.

(5) 1971-72-ம் ஆண்டுக்கான நிதி கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) நிதிக் கோரிக்கை எண் 8-A—பால் வழங்கு திட்டங்கள்.

(ஆ) நிதிக்கோரிக்கை எண் 9-A 1959-ம் ஆண்டு தமிழ் நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

கோரிக்கை எண் 8-A—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,07,86,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, மாவட்ட வாரியாக பால் பண்ணைகள் பெரிய அளவில் ஆரம்பிக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க. "கோரிக்கை எண் 8-A—பால் வழங்கு திட்டங்கள்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,07,86,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்று பிரேரேபிக்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவர் அவர்களே, பால் உற்பத்தி பெருக்கத்திற்கு மேய்ச்சல் காடுகளை விரிவுபடுத்துவதுபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 8-A—பால் வழங்கு திட்டங்கள்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படவிருக்கும் ரூ. 4,07,86,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்று கோருகிறேன்.

Dr. H. V. HANDE : Sir, to point out the need to streamline the working of the Madhavaram Milk Project, I move the cut motion standing in my name, namely :—

"That the allotment of Rs. 4,07,86,800 under Demand No. 8-A—Milk Supply Schemes be reduced by Rs. 100".

Thiru A. SUBRAMANIAM : Sir, to discuss the inadequacy of milk supply schemes, I move the cut motion standing in my name, namely :—

"That the allotment of Rs. 4,07,86,800 under Demand No. 8-A—Milk Supply Schemes be reduced by Rs. 100".

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்:

கோரிக்கை எண் 9. A—1959-ம் ஆண்டு தமிழ் நாடு இந்து சமய அறக் கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம்—என்ற தலைப்பின் கீழ் ரூ. 52,72,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"



Thiru R. PONNAPPA NADAR : Sir, to discuss policy, I move the cut motion standing in my namely :—

"That the allotment of Rs. 52,72,400 under Demand No. 9-A—Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 be reduced by Rs. 100."

Thiru K. T. K. THANGAMANI : Sir, to discuss the need of distribute temple and mutt lands to cultivators and cash supplied for temple worship, I move the cut motion standing in my name, namely :—

"That the allotment of Rs. 52,72,400 under Demand No. 9-A—Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 be reduced by Rs. 100."

Dr. H. V. HANDE : Sir, to discuss the need for the Government not to interfere with the manner and forms of workship by the devotees attending the various temples in our State, I move the cut motion standing in my name, namely :—

"That the allotment of Rs 52,72,400 under Demand No. 9-A—Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endownments Act, 1959 be reduced by Rs. 100."

Thiru A. SUBRAMANIAM : Sir, to discuss the need to utilise the unused funds of temples for social welfare purposes, I move the cut motion standing in my name, namely :—

"That the allotment of Rs. 52,72,400 under Demand No. 9-A—Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 be reduced by Rs. 100."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு மானியக் கோரிக்கைமீது வாக்கெடுப்பு கடைசிநாள் ஆனபடியால், 155(3) விதிப்படி, பிற்பகல் ஒரு மு.ப. 10-30
மணிக்கு விவாதம் முடிவுற்று வாக்கெடுப்பு நடைபெறும் என்பதை உறுப்பினர் களுக்கு நினைவுபடுத்துகிறேன். இரண்டு மானியங்களையும் ஒன்றாக எடுத்துக் கொள்ளலாமா, அல்லது தனித் தனியாக எடுத்துக் கொள்ளலாமா? ஒன்றாகவே எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

* மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவரவர்களே, பால் பண்ணை வளர்ச்சித் துறை, 1959-ஆம் ஆண்டு தமிழ் நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம் ஆகியவை பற்றிய கொள்கை விளக்கங்கள் @ மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அவைகளின்மீது உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை வழங்கலாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

Thiru K. M. SUBRAMANIAN : Mr. Speaker, Sir, I am confining my speech to the Hindu Religious Endowment Board.

---

@ பால் பண்ணை வளர்ச்சித்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 84-88-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாகவும், இந்து சமய அறநிலையச் சட்ட நிர்வாகம் பற்றிய குறிப்பு 88-93-ம் பக்கங்களில் மூன்றும் இணைப்பாகவும், அச்சிடப்பட்டுள்ளன.

[Thiru K. M. Subramanian]

Sir, to me the most important portfolios in any Government particularly in a developing and backward country are education and Hindu Religious Endowment Board. There is no need to lay stress on the importance of education which is very essential for all walks of life particularly at the present juncture. Religion has to pay a very important part in moulding the character of **the people** and I do not mean the Hindu religion at all. All religions are necessary.

Coming to the Hindu Religious Endowments Act, this Act was enacted for the purpose of having—according to the Note on the Demand—' complete control over the temples in the matter of their administration so as to augment the income of the temples and prevent misuse of temple funds . . .

The intention of the framers of this Act is not to interfere with the daily rituals of the temples and to see that the administration of temples goes on well and there is no swindling of funds and accounts are property maintained according to the rules framed for the purpose.

Sir, it is well-known that we are just passing through very difficult times and now under the excuse of progress we are actually interfering with the rituals of the temples. Wherever we go wrong it is right that we should interfere but without any reason whatsoever just to satisfy certain ideals, if we are going to interfere with the rituals of temples, temples will become museums and gods in the temples will become statues.

Sir, I have travelled at least 28 times in my business capacity throughout the country and everywhere not only Tamil Nadu has been considered most famous for temple administration and religious worship but also Tamilians have been considered as the most cultured people. That is because thousands of temples exist in Tamil Nadu and the great religious philosophy that the Tamilians have imbibed.

Sir, temples in Tamil Nadu are not the properties of only Tamilians but they are also the properties of the people of the entire country. If we go to temples in Madurai or Palani or for that matter any temple, we will see more visitors from outside the State than local visitors. Also these temples observe national customs and not Tamilian customs. Even the Agama Sastra and the Pancharathva Sastra relating to temple worship originated from Tamil Nadu and then spread to other parts of the country. So, if we bring in any hasty legislaton on the rituals or other forms of worship, I think there will be serious repercussions among the people.

(Thiru N. Veerasami in the Chair.)

Then it has been stated that there has been bad ministration of temples and I do not dispute it at all. Then a question has been asked with regard to the property including lands held by the temples. I say that if the Government want to take the



[Thiru K. M. Subramaniam]

entire lands belonging to the temples, let them take them and pay the cash amount to the banks to be kept under a fixed deposit so that the proceeds from that deposit can be spent on the temples. Now the temple funds are being diverted for various purposes.

(Mr. Chairman sounded the gong)

I am speaking on a very important subject and other Members of my party are not going to speak on this subject. So, I request the Chairman to allow more time.

MR. CHAIRMAN (THIRU N. VEERASAMI) : I will allow five more minutes.

THIRU K. M. SUBRAMANIAN : Thank you. I will not repeat one extra word.

Sir, only on 10th July the Chief Minister of Orissa had stated in Hyderabad that temple funds should not be diverted for non-Hindu purposes. It is a secular State and so the contributions made by the Hindus who form 83 per cent of the people should be safeguarded. I know some people may misunderstand me in this respect but facts are facts. The amount contributed by Hindus should be used for the Hindus only. Thiru Biswanath Das, Chief Minister of Orissa, it seems, has written letters to other Chief Ministers in this regard and I do not know whether our Chief Minister has received it. Perhaps in his reply the Hon. Minister may refer to it.

In this connection, I wish to point out the new arrangement made by the Kerala Government with regard to the administration of temples. They have formed a Devaswom Board consisting of five members, two of them from outside are elected by the legislators. I feel that our Government also should follow that example and the people who have faith in temple worship and rituals should be elected by the legislators of both the Houses. At least two members should be elected by the Madathipathis who have got a vital interest in the management of temples. I also suggest that among the members to be nominated, one of them may be Shri Sankaracharya of Kanchi Kamakoti Peedam who has got an abiding interest in the management of temples and rituals. Therefore I suggest that a Religious Endowments Board, an independent body, be set up to look after the affairs of temples. If they go wrong, there is always the Government to see that they are punished. Such an enactment may be made.

My suggestions are therefore as follows :—

(1) Not to interfere with temple management so far as rituals and worship are concerned.

(2) Make temple management in such a way that there is some reverence and divinity attached to it, so that temples will

[Thiru K. M. Subramaniam]

serve as centres for imparting religion, culture, morals, and other things that are necessary for a Nation.

(3) Hindu temple funds should not be diverted for other purposes.

In Kerala, Devaswom Board, an independent agency, is in charge of all temples. I have suggested an independent body like that in Tamil Nadu also so that it will be independent of Government. They will do what is required under Hindu religious sentiments. If there is mismanagement in any temple, it must be put down immediately. These are not days when we can look upon anybody to mismanage any institution, nay any religious institution. Anyone who mismanages should be punished I know I am sometimes dubbed as 'polibhaktha' I think the Hon. Chief Minister does not mean any offence to me when I refer to such things. I am of course a 'polibhaktha' and not a 'bhaktha'. If I am a true 'braktha' I won't be here in this House but somewhere else saying 'Loka Samastha Sukino Bhavanthu'. viz., let the world be happy. I have not reahed that stage. I am only making these suggestions so that the great name of Tamilian Hindu religious tradition may be maintained and that Tamilians will prove that they are better than any other race in India so far as culture, religion, power and discipline are concerned. Thank you, very much.

திரு. எம். செல்வராஜ்: தலைவரவர்களே, இன்று அறநிலையம் பற்றிக் கோரப்பட்டுள்ள மான்யத்தின்மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நமது தமிழக அரசு கடந்த நான்காண்டு காலமாக இத்துறையில் நல்ல பல காரியங்களைச் செய்து, பல விதத்தில் இத்துறையின் வருவாயைப் பெருக்கி மிகச் சிறப்பாக இத்துறையை நடத்திக்கொண்டு வருகின்றார்கள். கடந்த 22 ஆண்டு காலமாக ஓடாதிருந்த தேரை நமது அரசு வந்ததற்குப் பிறகுதான் பெரு முயற்சி எடுத்து அதை ஓட்டி வைத்தார்கள்.

இது மட்டும்தானா என்றால் பன்னெடுங்காலமாகப் பாழடைந்திருந்த கோவில்களையும் கோவில் கோபுரங்களையும் புதுப்பிப்பதற்கான திருப்பணிகளை ஏற்று வெற்றிகரமாகச் செய்திருக்கிறார்கள்.

இதைவிட மேலாக பல ஆண்டுகாலமாக எங்கே இருக்கிறது, யார் அனுபவித்துக்கொண்டிருக்கின்றார்கள் என்று தெரியாமல் இருந்த கோவில் நிலங்கள், சுமார் 65,000 ஏக்கர் நிலங்களில் அதற்கென தனி அதிகாரிகளை நியமித்து சுமார் 10,000 ஏக்கர் நிலங்களைக் கண்டுபிடித்து அவற்றை அறநிலையத்தின்கீழ் கொண்டு வந்திருக்கின்றார்கள். இப்படிப் பல முறைகளில் நிர்வாகத்தினைச் சீரும் சிறப்புமாகச் செய்துகொண்டு வரும் நேரத்தில் இன்னும் செய்யவேண்டியவை பற்றி ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

ஆண்டவன் முன்னால் அனைவரும் சமமே என்பதற்கு ஏற்ப ஜாதிபேதமின்றி அனைவருமே கோவில் அர்ச்சகர்களாக இருக்கலாம் என்று நமது அரசு கொண்டு வந்த ஏற்பாட்டை இன்று எதிர்க்கும் முறையில் நீதிமன்றத்திற்கு



[திரு. எம். செல்வராஜ்]

எடுத்துச்சென்று ஒரு குறிப்பிட்ட வகுப்பினர்தான் அர்ச்சகர்களாக இருக்கலாம் என்று கோரியிருக்கிறார்கள். அது நீதிமன்றத்தின் முன் இருக்கிறது.

அதுபோன்றே இந்துக்கள் அல்லாதவர்களும் கோவிலுக்குள் சென்று அங்குள்ள சிற்பங்களை தரிசிக்கலாம் என்று இருந்ததை எதிர்க்கும் வகையில் சிலர் நீதி மன்றத்திற்குச் சென்று இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் நீடிக்கத்தான் வேண்டுமா என்று அரசு பரிசீலனை செய்ய வேண்டும்.

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல தமிழகத்தில்தான் கோவில்கள் மிகச் சிறப்பாக இருக்கின்றன என்பது உண்மைதான். மன்னர்கள் ஆண்ட காலத்திலே பெருமை மிக்க பல கோவில்களைக் கட்டித்தந்தார்கள் தமிழகத்திலே. ஆனால் அவற்றில் பலவற்றை மத்திய அரசு தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவனங்கள் மூலம் அப்படிப்பட்ட பல கோவில்களை அத்துறையின்கீழ் எடுத்துக்கொண்டு இருக்கின்றார்கள். அவற்றை அவர்கள் பராமரிக்கின்றார்களா என்றால் இல்லை. நாம் அவற்றை எடுத்துக்கொள்ளலாமா என்றால் அவற்றைத் தரவும் சம்மதிப்பதில்லை. பாழடைந்த அத்தகைய கோவில்களிலே காரை பூசுவதற்குக்கூட நமது அரசுக்கு அதிகாரம் இல்லை என்று சொல்லுகின்றார்கள். தஞ்சைக் கோவிலைக் கட்டிய ராஜராஜசோழன் சிலையை அக்கோவிலில் வைப்பதற்கு மத்திய அரசு அனுமதி மறுத்துவிட்டது நமக்குத் தெரியும். இந்நிலை மாற வேண்டும். இப்படிப்பட்ட நிலை நீடிக்கத்தான் வேண்டுமா என்று அரசு பரிசீலனை செய்ய வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டுக் கொள்ளுகிறேன். உள்ள செல்வங்களைப் பாதுகாப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும்தான் மத்திய அரசு இருக்கிறதே தவிர அவற்றின் அபிவிருத்தி வேலைகளுக்கு இடைஞ்சலாக இருப்பதற்கு இல்லை என்றே நான் உறுதியாக நம்புகிறேன்.

மேலும் இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன், கோவில்களுக்குள்ள நிர்வாகத்தைச் சீர்திருத்த வேண்டும் என்று. பல கோவில்களில் பரம்பரை டிரஸ்டி என்ற முறையில் சட்டத்தின் துணைகொண்டு தாங்களே இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு பல்வேறு முறைகளில் கோவில் சொத்துக்களைப் பாழ்படுத்திக்கொண்டு வருகின்றார்கள், இவற்றை மாற்றி யமைப்பதற்கான வழி முறைகளை, சட்டங்களைக் கொண்டு வரவேண்டும். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள், கோவில் நிதியிலிருந்து வேறு எதற்கும் செலவிடக்கூடாது என்று. நமது அரசு வந்த பிறகு இத்துறையில் பல நல்ல காரியங்களைச் செய்திருக்கின்றார்கள். அதாவது கல்வித்துறையில் செலவிட்டிருக்கின்றார்கள். எங்கள் வட்டத்தில் உள்ள கொளிஞ்சியப்பர் கோவில் நிதியிலிருந்து ரூ. 3 லட்சம் எடுத்து அங்கே கலைக் கல்லூரி ஒன்றை நடத்தி வருகின்றார்கள். இதுபோன்றே பழனியில் ரூ. 30 லட்சம் செலவிலே ஒரு கல்லூரியை மிக நல்ல முறையிலே இத்துறையின்கீழ் நடத்திவருகின்றார்கள். இன்னும் யாத்திரீகர்களுக்குத் தனி விடுதிகள் கட்டிக் கொண்டு வருகிறார்கள். திருச்செந்தூரில் 96 விடுதிகள் கட்டுவதற்கு ஏற்பாடாகி கொண்டு இருகிறார்கள். திருச்செந்தூரில் 96 விடுதிகள் கட்டுவதற்கு ஏற்பாடாகி

[திரு. எம். செல்வராஜ்]

வேலைப்பளு அதிகமாகிக் கொண்டே வருவதால் இப்போது மாவட்டத்திற்கு ஒரு அஸிஸ்டெண்டு கமிஷனர் என்று இருப்பதை மாவட்டத்திற்கு இரண்டு அஸிஸ்டெண்டு கமிஷனர்களை நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் எங்கள் வட்டத்திலுள்ள கொளுஞ்சியப்பர் கோவில் நிதியிலிருந்து மகளிர் கல்லூரி ஒன்றினைக் கட்ட வேண்டும் என்று அறங்காவலர்கள் தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கின்றார்கள். இதை அரசு பரிசீலித்து இதை அமைத்துத் தரவேண்டும் என்று சொல்லிக்கொண்டு இப்படி மிக நல்ல முறையில் செயல் பட்டுவரும் இத்துறையையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் பாராட்டுவதோடு இன்னும் ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் கோவில் நிலங்களைக் குத்தகைக்கு எடுத்துக்கொண்டவர்கள் பன்னெடுங் காலமாக ஒரே அளவினை மிகக்குறைந்த அளவினைக் கொடுத்துவருகின்றார்கள். இதை அதிகப்படுத்த வேண்டுமானால் அவ்ர்கள் சட்டத்தின் உதவியை நாடுகின்றார்கள். எனவே இதை ஏற்றுவதற்கான வழிமுறையை அரசு செய்து தந்தால் கோவில்களின் நிதி மேலும் பெருகும். எனவே அதற்கான நடைமுறைகளை அரசு வகுத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இம்மான்யக் கோரிக்கையை வரவேற்று அமருகிறேன். வணக்கம்.

*திரு. மணலி சி. கந்தசாமி: தலைவர் அவர்களே, இப்போது சபையின் முன்னுள்ள இரண்டு மானியக் கோரிக்கைகள் மீது பேசவேண்டியிருப்பதால், முதலில் பால் வழங்குத்துறை சம்பந்தமாக இரண்டொரு முக்கியமான கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இன்று நாட்டு மக்கள் போஷாக்கு இல்லாதவர்களாக இருப்பதால் அவர்களை மிக எளிய முறையில் அவர்களைப் பலமுள்ளவர்களாக ஆக்குவதற்கு அவர்களுக்கு வேண்டிய பாலை வழங்குவது கடமை என்பதைக் கருத்தில் கொண்டு எல்லா முனிசிபாலிடிகளிலும் இதைச் செயல்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். சுத்தமான சத்தான பால் கொடுக்க வேண்டுமானால் பசுவிற்கு சத்துள்ள தீவனம் கொடுப்பது அவசியம். எனவே சத்துள்ள தீவனத்தைத் தருவதற்கு அரசு ஏற்பாடு செய்யவேண்டும். வருங்காலத்தில் மக்கள் திடசாலிகளாகவும் அறிவாளிகளாகவும் இருக்கவேண்டியது அவசியமாதலால் இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இத்துறையை ஏன் வெடரினரி இலாகாவோடு சேர்த்துக்கொள்ளக் கூடாது, இது ஏன் தனித் துறையாக இருக்க வேண்டும், இந்த மூன்று துறைகளையும் ஒரே அமைச்சரின் கீழ் கொண்டுவந்தால் பொருத்தமாக இருக்குமா என்று யோசித்துப்பார்க்க வேண்டும்.

அடுத்தபடியாக, கோவில்களுக்கு வருகிறேன். கோயில்கள் சம்பந்தப்பட்ட வரை அதற்கென்று ஒரு தனி இலாக்கா இருக்கவேண்டியது அவசியம், அது பற்றி சட்டசபையில் பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதில் இருந்தே அத்துறையில் அரசு தலையிடக் கூடாது என்பது பொருத்தமற்றதாகிறது. இன்று இருக்கக்கூடிய அரசு மாத்திரம் அல்ல—வெள்ளைக்காரன் காலத்தில் இருந்தே இதற்கென்று ஒரு தனித்துறை இருந்திருக்கிறது என்றால் கோயில் நிர்வாகம் திறம்பட இருக்க வேண்டும், அதில் உள்ள குறைபாடுகளைக் களையப்



[திரு. மணலி கந்தசாமி]

படவேண்டும் என்பதுதான்—இந்த நிலையில் கோயில் நிர்வாகத்தில் தலையிடக் கூடாது என்பது சரியல்ல. பெரும்பான்மையான கோயில் நிர்வாகம் ஒழுங்காக நடைபெறவில்லை. நான் உண்மையான பக்தர்களைப் பற்றிச் சொல்லவில்லை. அவர்கள் தெய்வத்தை வழிபடுவதற்கு ஆட்சேபணையில்லை. உண்மையான பக்தர்கள் தெய்வத்தை வழிபடுவதற்கு முடியாமல் தலையிடுவது என்பதும் சரியல்ல.

ஆனால் இன்றைக்கு இருக்கக்கூடிய பிரச்சினை பணம் படைத்த கோயில்களில், அதிகமான நிலச் சொத்துப் படைத்த இடங்களில் எந்த அளவுக்குத் தவறான காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. என்பதை அரசு கண்டறிந்து தகுந்த நடவடிக்கை எடுத்தாகவேண்டும். பத்தாயிரத்திற்கு மேல் வருமானம் உள்ள கோயில்கள் 561 இருக்கின்றன. ஆயிரம் முதல் பத்தாயிரம் வரை வருமானம் உள்ள கோயில்கள் 4,583 இருக்கின்றன என்றால் இவை எந்த நோக்கத்திற்காக இருக்கின்றனவோ அந்த நோக்கம் நிறைவேற வழிவகை செய்தாகவேண்டும். அந்தப் பொறுப்பு அரசுக்கும் இருக்கிறது, சமுதாயத்திற்கும் இருக்கிறது. பலர் பலவிதமாக கோயில் சொத்துக்களைச் சூறையாடிக்கொண்டிருக்கிறபோது பழையகால ஆகமங்களைப்பற்றிப் பேசிப் பயன் இல்லை. அரசு தலையிட்டு நடக்கிற அட்டூழியங்கள் தடுக்கப்பட்டே ஆகவேண்டும்.

கோயில் நிலங்களை எடுத்துக்கொள்ளுங்கள். அந்த நிலங்கள் நியாயமான குத்தகைக்கு விடப்படவேண்டும். அதில் கிடைக்கிற வருமானத்தைக்கொண்டு நியாயமான பூசைகள் நடைபெறுவதற்கு வழிவகை செய்தாக வேண்டும். அதற்கும்மேல் பணம் இருந்தால் அதைக்கொண்டு பள்ளிக்கூடம் வைப்பது, வைத்திய வசதி செய்துகொடுப்பது, கலாசார பண்பாட்டை வளர்ப்பதற்குச் செலவிடுவது ஆகிய நற்பணிகளில் செலவிடுவதுதான் சமுதாயத்திற்கும், கடவுளுக்கும் செய்கிற நல்ல தொண்டாகும். இது எந்த மதத்திற்கும், எந்தக் கடவுளருக்கும் புறம்பானது அல்ல.

அதேசமயம் அரசு கோயில் நிலங்களைச் சாகுபடி செய்கிறவர்களுக்கு எந்த விதமான ஆபத்தும் ஏற்படாது சாசுவத சாகுபடி உரிமையை வழங்க வேண்டும். எனக்குத் தெரியும் சேத்தூரில் தேவஸ்தானத்தில் 52 ஏக்கரா அரசாங்க விதைப்பண்ணைக்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் ஒரு 52 ஏக்கராவை விவசாயிகள் சாகுபடி செய்து வருகிறார்கள். அங்குள்ள தர்மகர்த்தர்கள் இந்த 52 ஏக்கராவையும் சர்க்கார் விதைப்பண்ணைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்கிறார்கள். அரசாங்கம் எடுத்துக்கொள்வது முக்கியமல்ல. இந்த நிலத்தில் இன்றையதினம் சாகுபடி செய்து வருகிறவர்கள் வெளியேற்றப்படவேண்டும் என்பதுதான் அவர்களது எண்ணம். இதுபோன்ற தவறான எண்ணங்களுக்கு அரசு இடம் கொடுக்கக்கூடாது. கோயில் நிலங்களில் சாகுபடி செய்கிறவர்களிடம் இருந்து ஒழுங்காக குத்தகை வசூலிக்கப்படட்டும். ஆனால் அந்த நிலத்தை அந்த விவசாயிகளிடமே சாசுவத குத்தகைக்கு விடவேண்டும்.

மேலும் கோயில்களில் நடக்கும் வீண் ஆடம்பரச் செலவுகள் குறைக்கப்பட வேண்டிய காலம் வந்துவிட்டது. குடும்பங்களிலேயே ஆடம்பரச் செலவைக் குறைத்துக்கொண்டு வந்துவிட்டோம். இரண்டு கல்யாணம் பண்ண வேண்டுமா,

[திரு. மணலி கந்தசாமி]

தூக்கிக்கொண்டு தெரு சுற்றி வரவேண்டுமா, இதை எல்லாம் நிறுத்துவதில் என்ன தப்பு? இன்றைக்கு மதத்தின் அடிப்படையில் நமது கோயில்களில் பக்தி உறை ஏற்றுவதாக இருக்கிறதே தவிர—உண்மையாக அமைதியாக தெய்வத்தை வழிபட வாய்ப்பில்லை. உடுக்கடிப்பதும், கோவிந்தா போடுவதும், சாமி ஆடுவதும் அவசியம்தானா? பக்தர்கள் இதைச் சிந்தித்து நிறுத்த முயல வேண்டும்.

அடுத்து, சட்டசபை அங்கத்தினர்கள் கோயில் தர்மகர்த்தர்களாக வரக் கூடாது. இவ்வளவு உயர்ந்த நிலையில் இருந்துகொண்டுள்ள நாம் கோயில் பஞ்சாயத்துகளில் தலையிடுவது, உள்ளே நுழைவது என்பது எல்லாம் நமக்கே குறைவானது. ஆகவே சட்டமன்ற உறுப்பினர்கள்யாரும் அதில் நுழைந்து இழுக்கைத் தேடிவிடக்கூடாது என்றும் வேண்டிக் கொள்கிறேன்.

மேலும் ஆலயங்களில் பொன்னுக, வெள்ளியாக—இதுபோன்ற உலோகங் களாக அளிக்கப்படுகிற காணிக்கைகள் எல்லாம் மார்க்கெட்டில் விற்பதைத் தடுத்து, அவை நமக்கு அந்நியச் செலாவணியைத் தேடித் தருவதனால் அரசாங்கமே எடுத்துக் கொள்ளவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

முடிவாக கோயில் நிலங்கள் எல்லாம் நியாயமாக நிரந்தரக் குத்தகைக்கு விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டு, அதில் வருகிற வருமானத்தைக் கொண்டு கோயில் பூஜைக்கு நியாயமாகச் செலவிட்டு, மற்றதைச் சமுதாயப் பணிகளுக்குத் திருப்பவேண்டும் என்று தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் ச. மு. பழனியப்பன்:** தலைவர் அவர்களே, இந்த அறநிலைய மானியக் கோரிக்கையின்மீது ஒருசில கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன். சாதாரணமாக மக்கள் கோயிலை நாடிச் செல்வதே உள்ளத் தூய்மை பெறுவதற்காகத்தான். அப்படி இருக்கிற நேரத்தில் இன்றையதினம் பல கோயில்கள் புறத்தூய்மையற்றதாக இருக்கிறது. புறத்தூய்மையற்ற நிலையில் அகத்தூய்மை ஏற்படுவது சற்றுக் கடினம். ஆகவே கோயில்கள் எல்லாம் நல்ல முறையில் துப்புரவாக இருக்க ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

இன்றையதினம் 5½ கோடி அளவுக்கு கோயில் வருமானம் இருக்கிறது. சரியான முறையில் கண்காணிக்கப்பட்டால் இந்த வருமானம் இன்னும் பல கோடி ரூபாய் அளவுக்கு இருக்கும். பல லட்சக்கணக்கான ஏக்கரா கோயில் நிலங்கள் எல்லாம் இன்னும் தனிப்பட்டவர்கள் கையில் இருக்கிறது. அந்த நிலங்களைக் கண்டுபிடித்து கோயில் நிர்வாகத்தின்கீழ் கொண்டுவந்தாக வேண்டும். அதுபோல பல கோயில்களுக்கு பொன் ஆபரணங்களாகவும், பட்டுப் புடவைகளாகவும் அளிக்கப்படுகிற காணிக்கைகளுக்கு எல்லாம் ரசீது போடுவதில்லை. அவற்றைக் கோயில் கணக்கில் கொண்டுவராது தனிப்பட்டவர் களிடம் சேர்ந்து விடுகிறது. இதை எல்லாம் நல்ல முறையில் சிறப்பாகக் கண்காணிக்கவேண்டும். இதுபோல எனக்குத் தெரிந்த ஒரு சில கோயில்களில் கூட ரசீது போட்டு பல காணிக்கைகளைக் கோயில் கணக்கில் கொண்டு வருவதில்லை. மக்கள் அளிக்கிற காணிக்கைகள் எல்லாம் ரசீது போடப்பட்டு கோயில் கணக்கில் வர ஆவன செய்யவேண்டும்.





[டாக்டர் ச. மு. பழனியப்பன்]

குறிப்பாக, திருவிழாக் காலங்களிலே கோயில்களிலேயும், சுற்றுப் மு.ப. 11-30
புறங்களிலேயும் தூய்மை இருக்க வேண்டும். சுகாதார ஏற்பாடுகள் சிறப்பான முறையில் செய்யப்பட வேண்டும். நமது கோயில்கள் எல்லாம் பெரும்பாலும் ஆற்றங்கரைகளின் ஓரத்திலும், வாய்க்கால்களின் ஓரத்திலும்தான் அமைந் திருக்கின்றன. திருவிழாக் காலங்களில் லட்சக்கணக்கான மக்கள் அங்கு செல்கின்ற காரணத்தால் சிறப்பான சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து, அந்த மக்களை தொத்து நோய்களிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இல்லாவிட்டால், தொத்து நோய்கள் ஏற்பட வழிவகை பிறக்கும். ஆகவே, சுகாதார அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு அங்கு வருகின்ற மக்களுக்கு நல்ல குடிதண்ணீர் கிடைக்கவும், மற்ற சுகாதார வசதிகளைச் செய்துகொடுக்கவும் வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் கோயில்களிலே நல்ல வரும்படி இருக்கிறது. இப்படி வருகின்ற வரும்படியை பல ஆடம்பரமான வழிகளில் செலவு செய்து விடுகிறார்கள். இந்த ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து, அவற்றை நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்த வேண்டும். அதிகமான வருமானத்தைக் கொண்டு நிறைய கல்விக் கூடங்களைத் திறப்பதிலும், திருமண மண்டபத்தைக் கட்டி பராமரிப்பதிலும் செலவு செய்யலாம். இப்படி கல்விக்கூடங்களை ஏற்படுத்துவதையும், திருமண மண்டபம் கட்டுவதையும் சட்டபூர்வமாகவே செய்துவிட வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கோயில்களோடு இணைக்கப்பட்ட திருமண மண்டபத்தை எளிய வாடகைக்கு ஏழை, எளிய மக்களுக்குக் கொடுத்து உதவி செய்யலாம். இதற்கு வேண்டிய காரியங்களில் அறக்கட்டளைத் துறை கவனம் செலுத்த வேண்டும். மேலும், வருமானம் அதிகமாக இருக்கும் இடங்களில் வைத்திய வசதிகளையும் செய்து கொடுக்கலாம். இவற்றையெல்லாம் சிறப்புற அறநிலையத் துறை செய்து கொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, பால் சத்துள்ள உணவு என்பது எல்லோரும் அறிந்ததே. ஆனால் பால் இன்னும் மக்களுக்குக் கிடைக்காத பொருளாகவே இருக்கிறது. பாலில் தண்ணீர் கலப்படம் சகஜமாக இருக்கிறது. தண்ணீர் கலக்காத பால் கிடைப்பதில்லை. தண்ணீர் கலப்படம் செய்யப்படாத முறையைக் கண்டுபிடிக்க வேண்டும். சென்னையிலும், மதுரையிலும் மட்டும் பால் வழங்கும் திட்டம் இருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு பால் பண்ணை என்ற அளவிலே ஏற்படுத்தி, புரதச் சத்து நிறைந்துள்ள பால் எல்லா மக்களுக்கும் கிடைக்கக்கூடிய வழிவகைகளைச் செய்ய வேண்டும். இப்படிச் செய்வதற்கு அதிகமான அளவில் செலவானாலும் மக்களின் நலனை முன்னிட்டு இதை ஏற்படுத்துவது அவசியம். குழந்தைகளுக்குப் பாலைவிடச் சிறந்த உணவு இல்லையென்கிற காரணத்தால் பால் அதிகமான அளவில் வழங்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. எ. வகாப்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால் வழங்கு திட்டங்கள் குறித்த மானியத்தை வரவேற்றுப் பேசுகின்ற முகத்தான் ஒருசில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

[திரு. கே. ஏ. வகாப்]

நல்ல விதைகள் நல்ல நாற்றாக ஆக முடியும், நல்ல நாற்றுதான் நல்ல பயிராக ஆக முடியும், நல்ல பயிர்தான் நல்ல மகசூலைத்தர முடியும். இப்படி நாட்டின் எதிர்காலம் நல்லபடியாக விளங்க வேண்டுமானால், வீரிய விதைகளாக, நாற்றுகளாக, பயிர்களாக இருக்கிற குழந்தைகள் வளம் உள்ளவர்களாக இருந்தால்தான் எதிர்காலத்தில் வீரர்கள், அறிஞர்கள், கலைஞர்கள், நாவலர்கள் இப்படிப்பட்ட பேராசிரியர்களாக எல்லாம் தோன்ற முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். குழந்தைகள் எல்லாம் வளமாக இருக்க வேண்டுமென்கிற அக்கறை கொள்கிற நோக்கில், பால் பற்றாக்குறை இருப்பதை ஒழிப்பதற்காக அரசு எடுத்து வருகின்ற முயற்சிகளைப் பாராட்டுகிறேன்.

இன்றைக்குக் குழந்தைகளுக்குக்கூட பால் இல்லாத நிலைமையில், வெளிநாடுகளிலிருந்து பாலைக்கூட பரிசாக வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையை மாற்ற அரசு சிறப்பான திட்டங்கள் தீட்ட வேண்டும். குறிப்பாக தங்களுடைய குழந்தைகளுக்குப் பால் கொடுப்பதற்குக்கூட பால் இல்லாத வறட்சித்தன்மை இந்த நாட்டுத் தாய்மார்களிடத்தில் இருக்கிறது. அப்படிப் பால் கொடுக்கும் சக்தியுடைய தாய்மார்களும் தங்கள் குழந்தைகளுக்குப் பால் கொடுப்பதில்லை. குழந்தைகளுக்குப் பால் கொடுப்பது அநாகரிகம் என்றும், பால் கொடுத்தால் உடல் அழகு கெட்டுவிடுகிறது என்கிற காரணத்தாலும் குழந்தைகளுக்குப் பசும்பாலையும் மற்ற புட்டிப்பால்களையும் கொடுக்கிறார்கள். பொதுவாக குழந்தைகளுக்கு நல்ல பால் கிடைப்பதில்லை. இப்படிப்பட்ட நிலைமையில் குழந்தைகளை வளர்க்க வேண்டிய நிலையில் நாடு இருக்கிறது. இதனால் குழந்தைகள் நாளடைவில் சோகை பிடித்தவர்களாகவும், சோனியர்களாகவும் ஆகிவிடுகிறார்கள்.

நல்ல பால் கிடைக்கவேண்டுமென்றால், நல்ல காட்டு வளம் இருக்க வேண்டும். மாடுகள் மேய்வதற்கு மேய்ச்சல் புல்வெளிகள் இருக்க வேண்டும். நல்ல கால்நடைவளம் இருக்க வேண்டும். நல்ல கால்நடைகளை வளர்க்க அரசு ஆவன செய்யவேண்டும். பாலைப்பற்றி எத்தனையோ நகைச்சுவை நிகழ்ச்சிகள் உள்ளன. காளமேகப் புலவர் மோரைப் பற்றிய பாடலில்,

“ கார்என்று பேர் படைத்தாய் கானகத்து உறும்போது
நீர்என்று பேர் படைத்தார் நீள்நிலத்தில் வந்ததன்பின்
பால்என்று பேர் படைத்தாய் பட்டணத்தில் வந்ததன்பின் ”

என்று சொல்லியிருப்பது இந்தக் காலத்திற்குப் பொருந்துவதாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பால் பற்றி, உதாரணத்திற்கு ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சட்டமன்ற விடுதிக்கு வந்தால் அங்கே இருப்பது பாலா, நீரா என்று நிச்சயமாகத் தெரிந்துகொள்ள முடியாத அளவுக்குப் பாலின் தரம் அமைந்திருக்கிறது. பாலில் ஏராளமான அளவில் நீரைக் கலந்துவிடுகிறார்கள். கொஞ்சம் மனிதாபிமான உணர்ச்சியோடு பால் விற்பவர்கள் நடக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன்.

தனிப்பட்டோர் கடைகளை நடத்தி, பால் சப்ளை செய்வதோடு, அரசு தயாரிக்கின்ற பாலிலே சத்து நிறைந்த அளவிலே பால் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிப்பட்ட முயற்சிகளில் அக்கறை செலுத்தி,





[திரு கே. எ. வஹாப்]

இந்த நாட்டிலேயுள்ள ஏழை, எளிய மக்கள் நலம் பெறுவதற்காக ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாதவரத்திலுள்ள பால்பண்ணையில் வேலைசெய்கின்ற 500 பேருக்கு அடிப்படைச் சம்பளம் 20 ரூபாய்தான் வழங்கப்படுகிறது என்று தெரிகிறது. அவர்களுடைய சம்பள விகிதத்தை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கோள்கிறேன். பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றிகூறி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ஏ. சுப்பிரமணியம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு மானியக் கோரிக்கைகளின்மீது எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தி, ஒருசில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முதலாவது பால் வழங்குவதைப் பொறுத்தவரையில், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பில், “பால்வளத் துறையின் தலையாய பணி இத்துறையைச் சேர்ந்த சென்னையிலும், மதுரையிலும் நிறுவப்பட்டுள்ள பால் வழங்குத் திட்டங்கள் இரண்டினையும் செவ்விய முறையில் நடத்துவதேயாகும். சென்னை, மதுரை மாநகர மக்களின் தேவைகளை நிறைவு செய்வதே இவற்றின் நோக்கமாகும்” என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நோக்கத்தையே மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் சொன்னதைப் போல், பால் என்பது எல்லா மக்களுக்கும், குறிப்பாக குழந்தைகளுக்கும் தேவையான உணவுப் பொருள். இந்த நாட்டு மக்களுடைய உடல்வளத்திற்கு இது இன்றியமையாதது என்பதாகும். ஏனைய நாடுகளில் எல்லாம் பால் சப்ளையைப் பொறுத்தவரையில், எல்லா மக்களுக்கும் உடல் நலத்திற்காகக் கிடைக்கும்படிச் செய்வதற்கு வேண்டியதைச் செய்கிறார்கள். அதற்கேற்ற வகையில் நம்முடைய அரசு மதுரை, சென்னை இரண்டு நகரங்களில் மட்டும் இருப்பவர்கள் “பேறு பெற்றவர்கள்” என்று இல்லாமல் எல்லா மக்களுக்கும் குறிப்பாக குழந்தைகளுக்கு நல்ல பால் தேவையான அளவு கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதைக் குறிக்கோளாக வைத்துக்கொண்டு திட்டங்களைத் தீட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது இந்த பட்ஜெட்டிலேகூட குறைவாகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அபிவிருத்தித் திட்டத்திற்கு 5 கோடியே 34 லட்சம் ரூபாய் ஐந்தாண்டுகளுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். முதல் மூன்று ஆண்டுக்கு 160 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். மீதியிருக்கும் 374 லட்சம் ரூபாயை இரண்டு ஆண்டுகளில் செலவிட வேண்டும். பட்ஜெட்டில் பணம் ஒதுக்கியதே குறைவு. அப்படி ஒதுக்கிய பணத்திலே செலவு செய்வது இன்னும் குறைவாக இருக்கிறது.

அடுத்தபடியாக, பால்வழங்கு திட்டத்திற்கு மொத்தம் பட்ஜெட்டில் 4.7 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். 1970–71-ல் 80 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 14 லட்சம் ரூபாய்தான் கூடுதலாயிருக்கிறது. பால்வழங்குவதை முக்கியமான குறிக்கோளாக கொண்டு அதிகமான பணம் ஒதுக்கி நல்ல பால், தரமான பால் கிடைக்க, அதுவும் தமிழகம் * முழுவதற்கும் கிடைக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

[1971 ஜூலை 27

[திரு. வ. சுப்பிரமணியம்]

மாவட்டத்திற்கு ஒருபால் பண்ணையாவது ஏற்படுத்த வேண்டும். அப்போது தான் இந்தத் திட்டத்தை ஒழுங்குறச் செய்ய முடியும். விஞ்ஞான முறைகள் எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பயன்படுத்தி விரைவில் பால் தேவை பூர்த்தியடைய வழி செய்ய வேண்டும்.

இந்த அறிக்கையைப் பார்க்கும்போது பால் வழங்கு சொசைட்டிகள் 1,261 செயல்படுகின்றன என்றும், 1,298 சங்கங்கள் இயங்காமலும் இருக்கின்றவென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பாதிக்குமேல் சங்கங்கள் ஏன் இயங்காமல் இருக்கின்றனவென்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆராய வேண்டும். அவைகள் இயங்க வழிவகைகள் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, கோயில்களைப்பற்றிச் சொல்லும்போது, கோயில் நிலங்களுக்கு உச்சவரம்பு சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலங்களில் பாடுபடுகின்ற விவசாயிகள் மட்டும் என்ன பாவம் செய்தார்கள் என்று புரியவில்லை. வசதியற்ற கோயில்களைப் பராமரிக்கின்ற பொறுப்புகளை அரசாங்கம் ஏற்று, இந்த ஆண்டு 4 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கும்போது, பல கோயில்களுக்கு அதிகமான சொத்து சேர்ந்திருக்கும் நிலையில் கோயில் நிலங்கள் எல்லாம் ஏன் வைத்திருக்க வேண்டும்? உச்சவரம்பு சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கக்கூடாது. ஆகவே, வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லி, கோயில் நிலங்களுக்கு விதிவிலக்கு இருப்பதை நீக்கி, உபரி நிலங்களை விவசாயிகளுக்குப் பகிர்ந்து தர வேண்டும்.

அடுத்தபடியாக, ஏராளமான நிலங்கள் சிலரால் பதுக்கப்பட்டிருந்தது இப்போது 10 ஆயிரம் ஏக்கர் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைத் திரும்பப் பெறுவதற்கான நிலைமை அதில் காணவில்லை. அவற்றை உடனடியாகக் கண்டுபிடித்து, திரும்பப் பெறவேண்டும். ஏற்கெனவே விழுங்கியதைக் கறப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, கோயில்களின் உபரி சொத்துக்களை கல்வி போன்ற பணிகளுக்குச் செலவிட வேண்டும். மேலும், அங்கஹீனமாக உள்ள பிள்ளைகளுக்குத் தொழில் பயிற்சியளிக்கவும், அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காகவும் அந்தப் பணத்தைக் கொண்டு வகை செய்தால் மிகவும் சிறப்பாக இருக்கும். தமிழகத்தின் பண்டைய கிராமிய இசைக்கலைகளை வளர்ப்பதற்கும் இதைப் பயன்படுத்தலாம்.

அடுத்தபடியாக, யுனஸ்கோ உதவிபெற்று சில கோயில்களை ஸ்ரீரங்கம் கோயில், வரதராஜர் கோயில் இவைகளையெல்லாம் சீர்படுத்தத் திட்டமிட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதிலே பேரூர் கோயிலையும்—அந்தக் கோயில் பெருமைபெற்றது, பாடல் பெற்றது—சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒரே ஒரு கருத்தைமட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒலி-ஒளி அமைப்புப்பற்றி அண்மையிலே செய்திகளைப் பார்த்தேன். இத்தாலியிலே ரோம் நகரத்திலே தொல்பொருள் ஆராய்ச்சி வல்லுநர்கள் கோயில்களில் ஒலி-ஒளி அமைப்பு வைக்கப்படுவதன்மூலம் அவற்றிற்கு அபாயம் ஏற்படுகிறது என்று கண்டுபிடித்து இருப்பதாகச் செய்தியைப் பார்த்தேன். அமைச்சர் அவர்களும் பார்த்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.



1971 ஜூலை 27]

[திரு. வ. சுப்பிரமணியம்]

இந்த ஒலி-ஒளி அமைப்பை மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலே அமைப்பதாகத் தெரிகிறது. அப்படிச் செய்யப்படுவதால் அங்கேயிருக்கின்ற சிற்பங்களுக்கு ஆபத்துவந்துவிடுமா என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : துணைத் தலைவர் அவர்களே, அவையின்முன்னுள்ள அறநிலையப் பாதுகாப்பு மானியக்கோரிக்கையின்மீது சில வார்த்தைகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பத்தாயிரம் அறநிலையங்களை ஒரு தனித் துறையின்கீழ் மிகச் சிறப்பாகவும், சீரோடும் நடத்தி வருகின்ற இந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்களையும் அந்தத் துறையைச் சிறப்பாக நிர்வகித்து வருகின்ற ஆணையர் அவர்களையும் இந்த நேரத்தில் நிச்சயமாகப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

ரூபாய் ஐந்து கோடியே ஐம்பத்தோரு லட்சத்து அறுபத்தைந்தாயிரத்து நானூற்று பத்தொன்பது ரூபாயை வருவாயாகப் பெற்றிருக்கின்ற அறநிலையங்களில் நமது அரசு நல்ல பல திட்டங்களை உருவாக்கிக் கோயில் பணத்தை நல்ல முறையிலே செலவிடுவதற்கான நல்ல திட்டங்களை ஏற்படுத்துவதற்கு நாம் நன்றிக்கடன் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். நூற்றி ஐம்பத்தாறு மடங்களும் 9,052 கோயில்களும் 832 அறக்கட்டளைகளும் அதிலே சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கின்றன. இந்த மானியக் கோரிக்கையிலே பரம்பரை அர்ச்சகர் முறையை மாற்றியமைப்பதற்காக அரசு மேற்கொண்டிருக்கிற நல்ல நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்டி அதற்கான எதிர்ப்பு வழக்குகள் நீதிமன்றங்களிலே இருப்பதையும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இத்தகைய இடையூறுகள் நேரிட்டாலும் பரம்பரை அர்ச்சகர் முறையை ஒழித்து குறிப்பிட்ட வகுப்பினர்தான் இதிலே கோலோச்சிக் கொண்டிருக்க முடியும் என்ற நிலைமையை மாற்றி எல்லோருக்கும் சம வாய்ப்பு இருக்கவேண்டுமென்ற முறையிலே நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அறநிலையத் துறையின்மூலமாகக் கோயில்கள், மடங்கள் இவற்றில் யாத்ரீகர்கள் விடுதிகளையும் திருமண மண்டபங்களையும் சிறப்பாக அமைக்கப்பட இருப்பதாகத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. திருமண மண்டபங்கள் அமைக்கப்படும்பொழுது ஏழை எளிய மக்கள் அதிகமாக உள்ள பகுதிகளிலே திருமண மண்டபங்களை அதிகமாக உருவாக்கித்தர இந்தத் துறையினர் அதிகமாகச் சிரத்தை காட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாயூரம் திருவழுந்தூர் பரிமளரங்கநாதர் தேவஸ்தானம். அங்கே ஒரு திருமண மண்டபம் கட்டப்படவேண்டுமென்ற முயற்சி 5 ஆண்டுகள், 6 ஆண்டுகளாக எடுக்கப்பட்டும் நிறைவேற்றப்படாத நிலைமையில் இருக்கின்றது. எனவே அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோயில்கள். மடங்களின் நிலங்களை அரசே மேற்கொள்ளுகின்ற அடிப்படையிலே அவற்றிலே தற்போது உழுதுபயிரிடுகின்ற விவசாயிகளுக்கு அவற்றையெல்லாம் உரிமையாக்கித் தருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டுமென்று பல உறுப்பினர்கள் இங்கே எடுத்துப் பேசியிருக்கிறார்கள். கோயில், மடங்களின் நிலங்கள் எந்த அளவுக்கு அதிகமாக பினாமி வகையிலே செயல்பட்டு வருகிறது என்று இங்கே பல நேரங்களிலே நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன் என்றாலும் மாண்புமிகு உறுப்பினர்களும் இங்கே பேசும்

[திரு. என். கிட்டப்பா]

பொழுது சுட்டிக்காட்டியதைப்போல் ஏராளமான நிலங்களை வைத்திருக்கிற அவற்றிலே நியாயமான தேவைபோக எஞ்சியவற்றினை தற்போது உழுது பயிரிடுகின்ற விவசாயிகளுக்கு 25 ஆண்டுகள், 30 ஆண்டுகள் என்ற காலக் கணக்கில் உரிமையாக்கித்தர நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அப்படிப்பட்ட நிலங்களிலே உழுதுபயிரிட்டு வருகின்ற பல ஆயிரக் கணக்கான விவசாயிகள் பல ஆண்டுகளாகக் குத்தகையாக்கி செலுத்த முடியாத நிலைமையில் இருப்பதை நம்முடைய அரசு உணர்ந்து பார்த்து அத்தகைய பாக்கிகளை முழுமையாகவேணும் அல்லது ஒரு கணிசமான அளவுக் கேனும் தள்ளுபடி செய்து கொடுத்து அதற்காகச் சட்டத்தில் இடம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தெய்விகப் பேரவை மாயூரத்தின் பழம்பெயராகிய மயிலாடு துறை என்ற பெயரை மாயூரத்திற்கு வைக்கவேண்டுமென்று முயற்சி எடுத்துவருகிறது. அது இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. எனவே மாயூரத்திற்கு அதனுடைய பழம்பெரும் பெயராகிய மயிலாடு துறை என்ற பெயரை வழங் குவதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

திரு. பி. வெங்கடசாமி தெலுங்கில் பேசினார்.

MR. DEPUTY SPEAKER: Why don't you speak in English? We are not against Telugu. Personally we are not against Telugu. But by your speaking in Telugu, the purpose is not served.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அன்றைக்கே அவையினுடைய முன்னவர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத் திலே தெரிவித்துள்ளார்கள். முதல் தடவையாக இருப்பதால் எழுதிக் கொடுக்காமல் இருந்தாலும் பரவாயில்லை. அடுத்தடுத்துத் தெலுங்கிலே பேசும்பொழுது முன்கூட்டியே எழுதிக் கொடுத்துவிட்டால் சபை நடவடிக்கைப் பதிவேட்டிலே இடம் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கும். ஆனால் மீண்டும் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப் பேசுவதால் அவர்கள் ஒருவருக்குத்தான் புரியும். பதில் சொல்லுகின்ற அமைச்சர் அவர்கள் புரிந்துகொள்ளமுடியாது. முன்கூட்டியே எழுதிக் கொடுக்கப்பட்டா னால் அமைச்சர் அவர்கள் படித்துவிட்டு பதில் சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும். அப்படியில்லாமல் எதற்குமே பயன்படாமல் விழலுக்கு இறைத்த நீராக இருக்கக்கூடாது. அப்படிச் செய்யாமல் பேசிக்கொண்டிருப்பது சபையினுடைய நேரத்தைக் கெடுப்பதாகத்தான் இருக்கும்.

THIRU B. VENKATASWAMY: I have already expressed my inability. What I am going to speak, I cannot anticipate. So I can give a gist. I cannot express my ideas in English very clearly. Today I shall try to express in Englsh.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவர்கள் ஆங்கிலத்திலே பேசினால் தெலுங்கிலே பேசுவதை நாங்கள் புரிந்துகொள்வதைவிட புரிந்துகொள்வது சுலபமாக இருக்கும்.



MR. DEPUTY SPEAKER: You want to express clearly. But what you express is not understood by the Ministers. I think I will be the only man to understand what you say. There is no use. Better try to speak in English.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய நிலைமையிலே இருக்கிறார்கள். நாங்கள் பதில் சொல்லக்கூடிய நிலைமையிலே இல்லை.

THIRU B. VENKATASWAMY: I will try to talk in English today. My English is not good, I think.

As regards construction of rest houses, I think it has to be improved and more rest houses for lower class people should be constructed.

With regard to assignment of temple lands, a large extent of temple lands has been assigned in the name of individuals who have got vested interests instead of in the name of Gods. As the lands were previously in the name of Gods, these lands should be assigned in the name of Gods.

Also a large extent of lands have not been accounted for and many people are enjoying it without giving anything to the temples. So, such kind of lands should be taken over from them and used for the purpose of temples.

Then I come to the Chandra-Sureswar temple at Hosur. I am thankful to the Hon. Minister for sanctioning Rs. 1 lakh and also Rs. 40,000 for renovation and other purposes

Regarding Milk Supply Schemes, I would like to bring to the notice of the Hon. Minister one vital matter. About Rs 22 lakhs have been sanctioned for cattle and other items but it is not sufficient because now we do not have adequate supply of milk.

As regards milk co-operative societies, they are not functioning well because the loan given by the Government is only about Rs. 1,000 which is not sufficient to purchase a good animal. So, I request the Hon Minister to enhance the amount.

Regarding the price of milk, it is very low. In the border State, Mysore State, they are giving Rs. 1-30 per litre but here the Government pay only 60 or 70 paise. It is a most uneconomic rate and it should be revised. With these words, I conclude my speech.

*திரு. பூ. எட்டியப்பன்: துணைத் தலைவரவர்களே, இன்று இந்த மானியத்தின் மீது சில கருத்துக்களைக் கூற முற்பட்டிருக்கிறேன். குறிப்பாக பால் பண்ணையைப்பற்றிச் சொன்னார்கள். பால்பண்ணை மிகச் சிறப்பான முறை யிலே கூட்டுறவிலே நடைபெற்று வருவதைக் கண் கூடாகக் கண்டுகொண்டு இருக்கிறோம். என்றாலும் அரிசன மக்களுக்காகத் தனியாகக் கூட்டுறவு பால் வழங்கு சங்கம் வேண்டுமென்று பலமுறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எழுதியும் எங்கள் தொகுதியிலே, குறிப்பாக நிலமற்ற ஏழை விவசாயிகள், கால்நடைகள் வளர்ப்பதிலே தீவிர அக்கறை கொண்டவர்கள் அப்படிப்பட்ட வர்களுக்குத் தனியாகக் கூட்டுறவுப் பால்வழங்கு சங்கம் வேண்டுமென்று பல

[திரு. பூ. எட்டியப்பன்]

முறை விண்ணப்பித்தும் அனுசரணையான வார்த்தையில் எவ்விதப் பதிலும் இல்லாமலிருக்கிறது. இதேபோல் பல பெரிய அரிசன காலனிகளில், ஏறத்தாழ 600, 700 மக்களுக்கு மேல் வசிக்கும் காலனிகளி லெல்லாம் நிறையக் கூட்டுறவு மூலமாகப் பால்பண்ணையை அபிவிருத்தி செய்ய வேண்டும், அதன் மூலம் கால்நடைகள் வளர வேண்டும். அதன்மூலம் அவர்கள் வாழ்க்கை நடத்த வேண்டுமென்று பெருவாரியானவர்கள் இருப்பதால் அப்படிப்பட்ட மனுக்கள் வரும்பொழுது உடனடியாக நடவடிக்கை எடுத்து கூட்டுறவு பால் வழங்கு சங்கங்களை அரிசனங்களுக்கும், ஏழை எளியவர்களுக்கும் ஏற்படுத்திக் கொடுக்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு அமைச்சரவர்களை மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இந்த புல் வளர்ச்சித் திட்டம் சம்பந்தமாக, காலையிலே அழகாகப் பேசினார்கள். புல் வளர்ப்புத் திட்ட திற்கென்று கிராமாந்தரங்களிலே ஒருசில நிலங்களைப் பிறர் ஆக்கிரமித்துக் கொண்டு, இருப்பதாக நிலவசதி உள்ளவர்களும், அதை ஆக்கிரமித்துக் கொண்டு, அதற்குச் சில கிராம அதிகாரிகளும் உடந்தையாகயிருந்து கொண்டு நல்லமுறையில் பேணிக்காத்த கால்நடைகளுக்குத் தீவனம் கிடைக்காத நிலை இருக்கிறது. எனவே பால் திட்டத்தைத் தீவிரமாக ஆக்குகின்ற பொழுது அதே நேரத்தில் புல் வளர்ப்புத் திட்டத்திற்காக நிறைய ஆக்கமும், ஊக்கமும் அளித்து ஆதரவு தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அரிசனங்களுக்கு இந்த வீட்டு வசதியைப்பற்றி ஏற்கனவே பலர் சொன்னார்கள். அவர்களுக்கு வீடு கட்டிக் கொண்டிருக்கும் இடங்களைக் கூடச் சிலர் ஆக்கிரமித்துக்கொண்டு அவர்களை வெளியேற்றும் வகையிலே சில அதிகாரிகளும் உடந்தையாகயிருந்து தொந்தரவு கொடுக்கிறார்கள் என்பதை மிகத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் பல கிராமங்களிலே இந்த விவசாய மக்கள், குறிப்பாக, தங்களுக்கு நிலமில்லாமல் மற்றவர்களிடத்தில் பயிரிடக்கூடிய வசதியற்ற அந்த மக்கள், தங்களுடைய பயிரைச் செய்கின்ற காலத்திலே மற்றவர்களுடைய அதிகாரத்தின் கீழ் அவர்கள் அந்த வாய்க்கால்களில் தண்ணீர் கொண்டு போகும்பொழுதும், வாய்க்கால்களை வெட்டும்பொழுதும் பக்கத்திலே உள்ளவர்களால் மிகவும் கடுமையான அவஸ்தைக்கு உள்ளாகிறார்கள். அந்தத் திட்டங்களையெல்லாம் மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர எண்ணுகிறேன். அப்படிப்பட்ட ரிப்போர்ட்டுகள் வரும்பொழுது ரெவின்யூ இலாக்கா உடனடியாக அதற்குத் தக்க நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டுமென்று மிகவும் பணிவன்புடன் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் திட்டமானது உண்மையிலேயே மக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு இன்றியமையாத வரப் பிரசாதமாக இருப்பதால் மக்களிடத்திலே ஒரு நல்லெண்ணம் பரவியிருப்பதாலே, மேலும் அதற்கு மானியம் அளித்து நல்ல முறையிலே செயல்பட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, காலையிலே கேள்வி நேரத்திலே பேசும்பொழுது, ஹெலிகாப்டர் மூலம் பயிர்களுக்குப் பூச்சி மருந்து தெளிக்கும் வகையைப்பற்றி சொல்லப் பட்டது. இதுபற்றி நான் ஒன்று சொல்ல முற்படுகிறேன், கிராமாந்தரங்களில்



[திரு. பூ. எட்டியப்பன்]

பூச்சி மருந்து தெளிக்க வேண்டுமென்று ஹெலிகாப்டர்களுக்கு பஞ்சாயத்து யூனியன்கள் தீர்மானம் போட்டு அனுப்பினாலும்கூட அது குறித்த காலத்திலே கிடைக்காமல் போகிறது. குறிப்பாக ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். என்னவென்றால், பயிர்கள் பூச்சிகளால் பாதிக்கப்படக்கூடிய நேரத்திலே ஹெலிகாப்டர் வேண்டுமென்று கேட்கும் நேரத்தில் வராத காரணத்தால் மக்கள் அதை விரும்பாத நிலை அறுவடை காலத்தில் வருவதால் ஏற்படுகிறது என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, அது காலத்திலே கிடைத்தால் மக்கள் வரவேற்பார்கள் என்பதை மீண்டும் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே இப்படிப்பட்ட ஒரு திட்டத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றிகூறி விடை பெறுகிறேன், வணக்கம்.

* திரு. சோ. அழகர்சாமி: துணைத் தலைவரவர்களே, பால் உற்பத்தியைப் பெருக்க இந்த மானியத்தின்கீழ் பல யோசனைகள் சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக நம்முடைய நாட்டில் அதிகமாகப் பாலை உற்பத்தி செய்து சாதாரணமாக அனைவரும் அருந்தக்கூடிய வகையிலே இன்னும் தீவிரமாகச் செய்ய வேண்டுமென்றால் இப்பொழுது ஒதுக்கப்பட்டிருக்கும் பணம் போதாது, இன்னும் அதிகமாக ஒதுக்கியிருக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பால் உற்பத்தியாளர்களுக்கு அளிக்கும் ஊக்கம் அதிக அளவிலே அமைய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது இருக்கும் சங்கங்களிலே 1,298 சங்கங்கள், கிராமத்திலே உள்ள பால் உற்பத்திச் சங்கங்கள் சரியாகச் செயல்படவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. காரணம் என்னவென்றால், உற்பத்தியாளர்களுக்குக் கிடைக்கும் விலை போதுமான விலையாக இல்லை. அதுமட்டுமல்ல, மற்ற விலைகளெல்லாம், உற்பத்திக்கு வேண்டிய, மாடுகளுக்கு வேண்டிய தீவனங்களும் விலை உயர்ந்துவிட்டபடியால் விலையைக் கொஞ்சம் அதிகமாகக் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேநேரத்தில், செயல்படாத சங்கங்களைச் செயல்படுத்த வேண்டுமென்றால் பங்கு மூலதனங்களையோ அல்லது வேறு அதிகப்படியான உதவிகளையோ செய்து சீராகச் செயல்பட ஏற்பாடு செய்தால் நாம் எதிர்பார்க்கும் உற்பத்தியைப் பெருக்க முடியும். இப்பொழுது கடன்கள் வழங்கும்போது, மழைக் காலங்களில் அலாட்மெண்ட் கொடுக்கிறோம். அதே நேரத்தில் குறைவாக பால் உற்பத்தியாகிற கோடைகாலங்களில் மாடுகள் வாங்கப் பணம் கடன் கொடுப்பதில்லை. யூனியன்களாக யிருந்தாலும் சரி, பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களாக யிருந்தாலும் சரி கோடை காலங்களில், பால் உற்பத்தியை அதிகமாகப் பெருக்குகின்ற வகையில் எந்தக் காலங்களிலாகிலும் சரி கூட்டுறவு சங்கங்களோ யூனியன்களோ கேட்கும் நேரத்தில் கறவைமாடுகள் வாங்கக் கடன் கொடுக்கும் ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், யூனியன்களைப் பொறுத்தவரையில், சிறந்த அதிகப்படியான பால் தரும் மாடுகளை வாங்க யூனியன்களுக்குக் கடன் வழங்க வேண்டும். 50, அல்லது 100 மாடுகளை வைத்துக்கொள்ளும் அளவில், பராமரிப்பிலே நாட்டம் கொள்ளும் முறையில் எல்லா பால் விநியோக ஒன்றியங்களுக்கும் கடன் வழங்கும் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

[1971 ஜூலை 27

[திரு. சோ. அழகர்சாமி]

கடைசியாகப் பால் வற்றிய பின்னால் மாடுகளைப் பராமரிப்பதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். உற்பத்தியாளர்களும், கூட்டுறவு சங்கங்களும். மாடுகளைப் பராமரிப்பதற்கான முயற்சிகளை ஏற்படுத்தி மகசூல் செய்யத் தகுதியற்ற அரசாங்கப் புறம்போக்கு நிலங்களையும், தரிசு நிலங்களையும் மேய்ச்சல் காடு களாகப் பராமரித்து பால் வற்றிய மாடுகளை, கறவையில்லாத மாடுகளை அந்தப் பண்ணையிலே குறைந்த கட்டணத்தை வாங்கிக் கொண்டு திரும்பவும் பால் கறக்கும் காலம் வரையிலும் பராமரித்துத் திரும்ப அந்த நபருக்கே கொடுக்கும் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று யூனியன்களுக்கு குளிர் சாதன இயந்திரங்கள் கொடுத்து உதவ வேண்டும். அது இல்லாததால் தேவையான நேரத்தில் பாலை சப்ளை செய்ய முடியாத நிலை இருக்கிறது. வருகிற பாலை தேவையான நேரத்தில் பதப் படுத்திக் கொடுக்கும் ஏற்பாடுகளுக்குக் கடனும், மானியமும் கொடுத்து உதவ வேண்டும்.

பொதுவாக, இது இன்று கிராமப் பகுதிகளில் உப தொழிலாக, விவசாயி களுக்கு வருமானம் வரக்கூடிய தொழிலாக இருப்பதால் விவசாயிகளுக்கு மாடு வாங்குவதற்காகக் கொடுக்கக்கூடிய கடன்களைத் தாராளமாகக் கொடுக்க ஏற்பாடு செய்வதோடு தொகையும் அதிகமாகக் கொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, அறநிலையம் சம்பந்தமாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அறநிலையத்தைப் பொருத்த மட்டில் பல மனுக்கள் கொடுத்து ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் பைசலாகாமல் இருக்கிறது. பல கூட்டுறவுச் சங்கங்கள் கோயில் நிலங்களில் சாகுபடி செய்யக்கூடிய சாகுபடி தாரர்களாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தச் சங்கங்களில் இருந்து ஒரு காலத்தில் மழை இல்லாத நிலையில் பஞ்சம் ஏற்பட்டு வரி வஜா செய்ய வேண்டுமென்று கேட்டு அந்த மனுக்கள் ஐந்தாண்டுகளுக்கு மேலாகியும் பைசலாகாமல் இருக்கிறது. ஒரு மந்திரி சபையின் காலமே ஐந்தாண்டுகள் தான். ஆகவே, இப்படி காலதாமதம் செய்யாமல் மனுக்கள் வந்தால் ஓராண்டுக்குள்ளாக முடிவு ஏற்படும் முறையில் வழி செய்ய வேண்டும்.

முக்கியமாக தண்ணீர் இல்லாமல் சாகுபடி மிகவும் பாதிக்கப்படுகிறது. ஒன்று, கம்யூனிடி வெல் வெட்டி அந்தக் கிணறுகளின் மூலம் தண்ணீர் பாய்ச்சி அதற்குத் தீர்வை ஏதேனும் வசூல் செய்து கொள்ளலாம். அல்லது கோயில் நிர்வாகத்திலிருந்து கடன் கொடுத்து அந்த வட்டியைக் கூட சாகு படியாளரிடமிருந்து வசூல் செய்து கொள்ளலாம் என்ற முறையில் வகை செய்யலாம். இப்படிக் கிணறுகள் வெட்டிக் கொடுக்க வேண்டுமென்று பல சங்கங்களில் இருந்து கோரிக்கைகள் வந்திருக்கின்றன. ஒன்று சமுதாயக் கிணறு வெட்டியோ அல்லது கிணறு வெட்டுவதற்குக் கடன் கொடுத்து அதற் குரிய வட்டியை மட்டும் விவசாயிகளிடமிருந்து பெற்றோ ஈடு செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. சொ. காவேரிமணியம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அறத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.



1971 ஜூலை 27]

[திரு. சொ. காவேரிமணியம்]

திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்பதற்கு முன்னால், இந்த அரசு பொறுப்பேற்றால் எந்த அளவுக்கு இந்தத் துறையில் ஈடுபட்டு வேண்டாத, விரும்பாதவற்றை எல்லாம் செய்து விடுவோர்களோ என்பது பற்றித் தவறான பிரசாரங்கள் நாட்டில் பரப்பப்பட்டன.

1967-க்குப் பிறகு இந்தத் துறையில் இந்த அரசு எவ்வளவு கவனம் செலுத்தி இருக்கிறது என்பது கொடுக்கப்பட்டிருக்கும் அறிக்கைகளின் மூல மாகவும், புள்ளி விவரங்கள் மூலமாகவும் தெளிவாக மாண்புமிகு அமைச்சர் அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. ஒன்றை மட்டும் குறிப்பாக இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1967-க்கு முன்னால் கட்டப் பட்ட கோபுரங்கள், உருவாக்கப்பட்ட மண்டபங்கள், புனிதப்படுத்தப்பட்ட கோயில்கள் எத்தனை என்பதையும், 1967-ல் இருந்து 1970 முடிய கட்டப்பட்ட கோபுரங்கள், அதிலே ஏற்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் எவ்வளவு என்பது பற்றியும் ஆராய்ந்து பார்த்தால் நமக்கு உண்மை மிக நன்றாகத் தெரியும்.

திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தின் அரசுப் பொறுப்பை ஏற்ற பிறகு வேண்டாத முறையில் இந்த நிர்வாகத்தில் தலையிடவில்லை; விரும்புகின்ற முறையில்தான், இந்த நாட்டில் இருக்கக்கூடிய கோடானுகோடி மக்களுடைய உள்ளத்தைத் திருப்திப்படுத்தும் வகையிலேதான் இந்த நிர்வாகத்திலே தலை யிட்டிருக்கிறது. இந்த நிர்வாகத்திலே தலையிடுகின்ற நேரத்தில் வாழையடி வாழையாகப் பின்பற்றிய கொள்கைகள், மரபுகள் கெடாத அளவுக்குத்தான் இதில் தலையிடப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிய வேண்டுமென்று மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாமன்றத்திலே 1970-ம் ஆண்டு இரண்டு சிறந்த சீர்திருத்தங்களை, சட்டத் திருத்தங்களை இந்தப் பேரவை முன் கொண்டு வந்து அந்தச் சட்டத் திருத்தங்களுக்கான ஒப்புதலும் அளிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத் திருத்தங்களின் மூலமாகப் பெரும் பெரும் ஆலயங்களில் உள்ள கலைச் செல்வங்களையும், வழிபாட்டு முறைகளையும், வண்ணக் கலைகளையும் மாற் றார்களும் கண்டு களிக்கக்கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. நம்முடைய மதத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமல்லாது மற்ற மதத்தைச் சார்ந் தவர்களும், வெளிநாட்டவர்களும் யாராக இருந்தாலும் உள்ளே நுழைந்து காணத்தக்க அளவுக்குத் திருத்தம் வழி செய்கிறது. அதே போன்று அர்ச்ச கர்கள் எந்தக் குடியில் பிறந்தாலும் அந்த எல்லைக் கோடுகளை எல்லாம் தாண்டி நியமிக்கப்பட வேண்டுமென்ற கருத்துப்படி கற்றவர்களை, ஆகமங்களை முறையாகப் படித்தவர்களை யாராக இருந்தாலும் நியமிக்கலாம் என்ற முறை யில் ஒரு திருத்தம் கொண்டு வந்தார்கள். இந்த இரண்டு திருத்தங்களையும் பொருத்து இன்று உயர்நீதி மன்றத்தில் வழக்கு இருக்கிற காரணத்தால் அது பற்றி அதிகமான விரிவுரைகள் தேவையில்லையென்று கருதி இத்துடன் அதை நிறுத்திக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒன்றை மட்டும் கூற ஆசைப்படுகிறேன். யூனெஸ்கோ நிறுவனத்தால் நம்முடைய புராதன கோயில்களை, பழங்கால வரலாற்றுச் சிறப்புமிக்க கோயில்களைப் பார்த்து உதவித் தொகை வழங்கி வருகிறார்கள். இந்த அரசிடம் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்—தென்னகத்தைப் பொறுத்தவரை குறிப்பாக மதுரை, இராமநாதபுரம் மாவட்டத்தில் கலைச்

[1971 ஜூலை 27

[திரு. சொ. காவேரிமணியம்]

செல்வங்கள் நிறைந்த கோயில்கள் பல இருக்கின்றன. இராமநாதபுரம் என்று சொல்லுகின்ற நேரத்தில் இராமேஸ்வரத்தில் உள்ள இராமநாத சுவாமி கோயிலை இரண்டாவது கட்டமாக பூம்புகார் நிறுவனத்தார் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அந்தக் குழுவிடத்தில் இந்த இடங்களை எல்லாம் சுற்றிக் காண்பித்து நம்முடைய புராதனச் செல்வங்களைப் பாதுகாக்கக் கூடிய அளவுக்கு அவர்கள் கொடுக்கக்கூடிய மானியத் தொகை, மற்றப் பொருள்களை எல்லாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை சிறப்பு மிக்க வருமானம் படைத்த கோயில்கள் இருக்கின்றன. அவைகளுக்கு உரிமையான நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களில் இருந்து வரக்கூடிய வருவாய் எந்த அளவுக்கு வருகிறது என்பதைப் பற்றி உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். தனிப்பட்ட ஒருவருக்கு இருக்கக் கூடிய ஒரு ஏக்கர் நிலத்தில் வரக்கூடிய வருமானம் கோயில் நிலமாக இருக்கக்கூடிய ஒரு ஏக்கர் நிலத்தில் வருவது இல்லை; விகிதம் எவ்வளவு குறைந்திருக்கிறது என்பதைக் கண்டு பிடித்து அதற்கான நிர்வாகச் சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கடைசியாக என்னுடைய தொகுதியைப் பற்றி இந்த நேரத்தில் ஒன்று சொல்லுவது முறை என்று கருதுகிறேன். குறிப்பாக, கேள்வி நேரத்தில் கூட, நேற்று அல்லது முன்தினம் நான் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அது நடைமுறையில் ஆலோசிக்கப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். அதைப் பற்றி இங்கு ஒரு சில வார்த்தைகள் கூறி என்னுடைய உரையை முடிக்கலாம் என்று கருதுகிறேன்.

எனது தொகுதியில் உள்ள ஒரே ஒரு கோவில் சுப்பிரமணியர் கோவில். திருப்பரங்குன்றத்தில் இருக்கக்கூடிய கோவில் அது. திருப்பரங்குன்றம் ஒரு பேரூராட்சி மன்றமாகும். அங்குள்ள பெரும்பாலான நிலங்கள் அந்தக் கோவிலுக்குச் சொந்தமானது. ஆனால் இதே கோவில் மதுரை மீனாட்சியம்மன் கோவிலோடு, மீனாட்சியம்மன் தேவஸ்தானத்தோடு ஒன்றி இருக்கிறது. அது ஒன்றியிருப்பது தவறு என்று நான் வாதாடவில்லை. ஆனால் அது ஏன் பிரிக்கப்பட வேண்டும் என்பதற்குச் சொல்கிற காரணங்களை அருள் கூர்ந்து இந்த அரசு கவனிக்க வேண்டும். ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ ஏழு லட்சம் ரூபாய்க்குமேல் வருமானத்தைப் பெற்றுத் தருகிறது அந்த சுப்பிரமணியர் கோவில். ஆனால் அதற்குத் தக்கபடியான வசதிகள் இருக்கின்றனவா என்றால் நான் மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன், வசதிகள் மிக மிகக் குறைவாக இருக்கின்றன. நான் கேள்வி நேரத்தில் துணைக் கேள்வியின் மூலம் ஒன்றைக் கேட்டேன்.

அங்கிருக்கக்கூடிய ஊராட்சி மன்றமும், எனக்கு முன்னால் இங்கு அத் தொகுதி உறுப்பினராக இருந்த திரு. அக்னிராஜு அவர்களும், மற்றும் அந்த நிர்வாகத்தில் பங்கு கொண்டுள்ளவர்களும் எவ்வளவோ முறைகள் இதுபற்றிய விண்ணப்பங்களை எல்லாம் தெரிவித்திருக்கிறார்கள். நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இவ்வாறு விண்ணப்பங்களும், மனுக்களும், வேண்டுகோள்களும் தெரிவிக்கப்பட்ட பிறகும் கூட அது இன்னும் "பரிசிலனை



1971 ஜூலை 27]

[திரு. சொ. காவேரிமணியம்]

யில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அந்தப் பரிசிலனை எனக்குச் சாதகமாக அமைய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். ஏன் இதைக் கூறுகிறேன் என்றால் வாரந்தோறும் அங்கு திருவிழாக்கள் நடைபெறுகின்றன. ஆண்டுதோறும் இரண்டு பெரிய சிறப்புத் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. முதல் நாள் திருக்கல்யாணம், இரண்டாவது நாள் தேரோட்டம் என்றும் நடைபெறுகிறது. திருக்கல்யாணம் சுமுகமாக முடிந்து விடுகிறது. தேரோட்டம் என்றால் தேரோட்டம் சுமுகமாக அங்கு நடைபெறுவதில்லை. சுமுகமாக நடைபெறுவதில்லை என்றால் ஏதோ கலவரம் ஏற்படுகிறது என்பது பொருள் அல்ல. திருக்கல்யாணம் முடிந்த பிறகு ஆண்டவனும் பக்கத்திலுள்ள அம்மையாரும் பவனி வருவார்கள். அப்படி பவனி வரக்கூடிய ரோடு தேவஸ்தானத்தின் பொறுப்பில் இருக்கிறது. அப்படி தேவஸ்தானத்தின் பொறுப்பிலுள்ள அந்த ரோடு சரியாகப் பழுதுபார்க்கப்படாத காரணத்தினால் ஓட வேண்டிய தேர் அசைந்து அசைந்து செல்கிறது. ஒரு நாளில் ஊரைச் சுற்றித் திரும்ப வேண்டிய தேர் திரும்பி வருவதற்குப் பல நாட்கள் ஆகின்றன. ஆகவே அங்குள்ள இந்த முறைகள் எல்லாம் மாற்றியமைக்கப்பட வேண்டும். ஆகவே சுப்பிரமணியர் கோவிலை தனியாக ஒரு தேவஸ்தானமாக்கிவிட வேண்டுமென்ற முறையீடுகள் பல வந்துள்ளன.

அதோடு தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும், அகில பாரதத்திலுள்ள பல பகுதிகளிலிருந்தும் திருப்பரங்குன்றத்திற்கு அங்குள்ள சுப்பிரமணியரை வணங்குவதற்காகப் பல பக்தர்கள் வருகிறார்கள். அவர்கள் தங்குவதற்கும் ஓய்வு எடுப்பதற்கும் நல்ல வசதியான ஓய்வு விடுதிகள் இல்லை. ஆகவே நல்ல ஓய்வு விடுதிகளைக் கட்டித் தருவதற்கும், தேர் ஒழுங்காக பவனி வருவதற்கும், அங்குள்ள நிர்வாகத்தை நல்லமுறையில் செயல்படுத்துவதற்கும் உறுதுணையாக இருக்கும் வகையில் அந்த சுப்பிரமணியர் கோவிலை ஒரு தனி தேவஸ்தானமாக ஆக்க வேண்டுமென்று நான் அறநிலைய அமைச்சர் அவர்களையும், எனது பெருமதிப்பிற்குரிய தலைவரும், முதல் அமைச்சருமான அண்ணன் கலைஞர் அவர்களையும் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றை மட்டும் கூறி என் உரையை முடிக்கலாம் என்று கருதுகிறேன். இப்போதுள்ள பெரும் பெரும் கோவில்களையெல்லாம் நாம் சுற்றிப் பார்த்தால் சில கோவில்களில் முறுக்கு நன்றாகயிருக்கிறது, தோசை நன்றாகயிருக்கிறது, பொங்கல் நன்றாகயிருக்கிறது என்று சொல்கிறார்கள். அவைகள் எல்லாம் நன்றாக இருப்பதை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் சில பெரிய கோவில்களில் இருக்கக்கூடிய வருமானத்தை வைத்துக் கொண்டு நம் பண்டைய இலக்கியங்களான தேவாரம், திருவாசகம் போன்ற இலக்கிய நூல்களை அந்த தேவஸ்தானங்கள் வெளியிட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு இந்தளவிற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. 1971-72-ம் ஆண்டுக்கான அறநிலைய மானியக் கோரிக்கை மீது என் கருத்துக்கள் சிலவற்றைக் கூறலாம் என்று ஆசைப்படுகிறேன்.

[1971 ஜூலை 27

[திரு. நா. வெ. குருசாமி]

மதுரை, பழனி, காஞ்சிபுரம், திருச்செந்தூர் போன்ற கோவில்களில், அந்த மாதிரி முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ள கோவில்களில் சம்ஸ்கிரதத்தில் அர்ச்சனை போன்றவை நடைபெறுவதால் வெளி மாநிலத்தவர்களை அக் கோவில்கள் ஈர்க்கக்கூடிய சக்தி உள்ளதாக இருக்கின்றன. ஆகவே எக்காரணத்தைக் கொண்டும் இங்குள்ள பழம்பெரும் சம்பிரதாயங்களையும், அங்குள்ள நடைமுறைகளையும் மாற்றக் கூடாது. அதோடு அவைகளில் சம்ஸ்கிருதத்தில் நடைபெற்று வருவதையும் மாற்றியமைக்க வேண்டாம் என்று மிக உறுதியாக இந்த மன்றத்தில் கூறுவதற்கு நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

கோவில்களில் பூஜைகள் செய்வது, அர்ச்சனைகள் செய்வது போன்ற முறைகளில் அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டு கோவில்களில் தங்கள் கருத்துக்களை வற்புறுத்துவதை விட அவற்றை யெல்லாம் பக்தர்களுக்கே விட்டுவிடுவது நல்லது என்று நான் கருதுகிறேன், அகில இந்தியாவின், நாட்டின் ஒருமைப் பாட்டிற்கு நம் கோவில்கள் சிறந்ததொரு வழிகாட்டியாக இருக்கிறது என்பது யாரும் மறுக்க முடியாத ஒரு உண்மையாகும். இன்று யு.பி. யில் இருக்கக் கூடியவர்கள் ராமேஸ்வரம் போன்ற கோவில்களுக்கு வருவதில் நாட்டம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். அதேபோல் தென்னாட்டில் உள்ளவர்கள் வடநாட்டிலுள்ள . . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சமஸ்கிருதத் தோத்திரங்கள் ஆண்டவனுக்குப் புரிகிறதா அல்லது பக்தர்களுக்குப் புரிகிறதா? எந்தக் காரணத்தால் சமஸ்கிருதத் தோத்திரங்கள் இருக்க வேண்டும் என்று உறுப்பினர் அவர்கள் விரும்புகிறார்கள்?

திரு. நா. வெ. குருசாமி: பக்தர்களுக்குப் புரிய வேண்டுமென்றுதான் கூறுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பக்தர்களுக்குத் தமிழ் புரிகிற அளவிற்கு சமஸ்கிருதம் புரிவதில்லை.

DR. H. V. HANDE: The hon. Member was explaining that Sanskrit archanas are a common factor in all the States. He was trying to explain that it would contribute to more persons from other States visiting our temples. It has no connection with persons in Tamil Nadu. He also clarified that especially in major temples which attract large number of devotees and wherein there are Sanskrit archanas, more persons are coming from North India. That is a common binding factor.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படியானால் தமிழ்நாட்டுக்காரர்கள் வடநாட்டிலுள்ள கோவில்களுக்குப் போகும்போது தமிழ் நாட்டுப் பக்தர்களுக்குப் புரிகிற அளவிற்கு அங்கு தமிழில் அர்ச்சனை செய்யப்படுகிறதா? அப்படியானால் எல்லாப் பக்தர்களும் தெரிந்து கொள்ள இனிமேல் ஆங்கிலத்திலும் அர்ச்சனை செய்யப்பட வேண்டுமென்று விரும்புகிறீர்களா?

DR. H. V. HANDE: There is a sort of misunderstanding. One common link is Sanskrit archana. You take Andhra, Mysore or Kerala or any other State, the common link is Sanskrit. Even the name Rameswaram, whether you like it or not, is Sanskrit name. Even the name of the Chief Minister, the meaning of it is known to people; they know the meaning of 'Karuna' and 'Nithi''. It has sanskrit origin. The sanskrit archana is a thing which is in practice. What I say is, why should we interfere with the existing practice. The Hon. Chief Minister was saying that if you want Sanskrit archana it will be done. Why should you go on interfering with present practice? This practice of Sanskrit archana is there in all States. Take Tirupathi also. So many from so many States are going there.



1971 ஜூலை 27]

[Dr. H. V. Hande]

Some hon. Member was requesting the other day that more people should also come to Tiruttani. This is a general practice (this sanskrit archana) which is in vogue and which is a common link. That particular thing need not be disturbed. That is what I am saying. Even persons coming from Kanyakumari are able to understand the song sung in Tirupathi. Tirupathi songs are known to people all over the country.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படியானால் ஏற்கனவே இருந்ததை மாற்றவே கூடாது என்றால் முன்பெல்லாம் திருவாரூர் தேரை 17,000 ஆட்கள் பெரிய பெரிய வடங்களைக் கொண்டு, கயிறுகளைக் கொண்டு இழுத்து வந்தார்கள். இப்போது அதை இயந்திரத்தைக் கொண்டு இழுக்கிறார்கள். அதுகூட ஆண்டவனுக்கு விரோதமாகத்தான் இருக்கும்.

DR. H. V. HANDE: I did not say that. That is a different aspect. You have to paint it, modernise it, give electric connection and so on. Even in Tirupathi they are thinking of providing exhaust fans because of the crowd. From ancient times, this is the binding factor. (Sanskrit archana). Persons from all over India come to Meenakshi temple. What is the meaning of the word 'Meenakshi'. It means the 'eye of fish'. That sanskrit origin is there. The same case is with 'Kamakshi'. Whether you like it or not, it is there. That common binding factor. What we are saying and what the hon. Member was trying to explain is that only binding factor need not be disturbed. I am requesting the Hon. Chief Minister to take an objective view of the matter and not in a spirit of competition, as though we are trying to belittle anything.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தமிழில் அர்ச்சனை செய்யப்படுகிற நேரத்தில் ஆண்டவனுடைய பெயர்கள், ஏற்கனவே அறிமுகமாகியுள்ள பெயர்களில் எதையும் மாற்றுவதில்லை. அந்தப் பெயர்களை வைத்துத்தான் தமிழிலும் அர்ச்சனை செய்யப்படுகிறது. தமிழில் அர்ச்சனை செய்யும்போது புரோகிதர் என்ன சொல்லி ஆண்டவனைப் போற்றுகிறார் என்பது புரிகிறது. வேறுயிடங்களில் அது புரிவதில்லை. மறைந்த நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் ஒருமுறை சொன்னார்கள். அவரது திருமணம் புரோகித முறையில் நடைபெற்றதாம். இவருக்கு சமஸ்கிருதம் தெரியாது என்று நினைத்து புரோகிதர் மந்திரங்களைச் சொல்லிக் கொண்டிருந்தாராம். இவருக்கு அது

[திரு. மு. கருணாநிதி]

தெரிந்து அந்தப் புரோகிதரைப் பிடித்துக் கேட்டாராம், கருமாதிக்குச் செய்ய வேண்டிய மந்திரங்களை கல்யாணத்திற்குச் செய்கிறாயே என்று. ஆகவே, வட மொழி மற்றவர்களுக்குத் தெரியாத காரணத்தினால், அதில் நல்ல பயிற்சி பெறாதவர்கள் எதையும் சொல்லிவிட முடியும். ஆகவே அனைவருக்கும் புரியும் மொழியில் வழிபடும் நிலை இருந்தால்தான், எந்த மொழியில் ஆண்டவனை தோத்திரம் செய்கிறோம் என்று இவர்களுக்கும் தெரியும், ஆண்டவனுக்கும் புரியும்.

DR. H. V. HANDE : I am sorry I have been misunderstood. I am only saying that Sanskrit words are not just Sanskrit words, but they are common. I am trying it to explain to the Hon. Chief Minister. Most of the words used in Andhra Pradesh and Delhi are the same and similar words. There is a common under-current, a common unity, bondage of unity. Even in Andhra Telugu words—most of the words used—are mainly Sanskrit words. There is only slight deviation to a certain extent and in Tamil also the same thing. Even here there is a common link. My submission is, large number of persons are coming to Tamil Nadu. Let us not construe Tamil Nadu alone.

Though temples are mainly intended for Tamil Nadu people, we are also interested in the tourists coming to Tamil Nadu. If it is removed, I have no objection. Personally for your information I never go to temples. I am very frank about it. I have not been going to temples. My wife goes. I do not go. The point is this. There is a common sort of bondage which I would like the Hon. Chief Minister to consider in the interest of attracting more and more tourists. It is an objective thing. I do not want to take cudgels against the Chief Minister. I say it dispassionately. Please think it over.

If you interfere with the Muslim Religion, will the Muslim Religion tolerate it? If you interfere wth the Christian Religion, will the Christian Religion tolerate it? They would not tolerate interference by Government agencies. I am only requesting the Hon. Chief Minister to consider this point because we are a secular State.

* மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஆண்டவனைப் போற்றுவதற்குப் புதிதாக போற்றுதல்கள் ஒன்றும் ஏற்படுத்தவில்லை. ஏற்கெனவே உள்ள திருவாசகம், திருவாய்மொழியைத்தான் பயன்படுத்த வேண்டுமென்று சொல்கிறோம். டூரிஸ்ட்களைக் கவரக் கூடியது என்று சொன்னால், அவர்களைக் கவரக் கூடியது சமஸ்கிருத அர்ச்சனை மட்டுமல்ல. வேறு பல அம்சங்களும் இருக்கின்றன. நான் கூட அவர்களைப் போல் பக்தியோடு செல்லவில்லை, பார்ப்பதற்காக கோவிலுக்குப் சென்றபோது, அங்கே சொல்லப்பட்ட தமிழ் அர்ச்சனைக் கேட்டபோது, கேட்பதற்கு உள்ளபடியே இனிமையாக இருந்தது. சமஸ்கிருதத்தில் அர்ச்சிக்கும்போது தான் அது உண்மையிலேயே ஒரு மொழி சொல்வது போல் காதிற்கு கேட்கிறதே தவிர, கருத்துக்கு ஒன்றும் புரியவில்லை. அந்த காரணத்திற்காகத்தான் . . . (குறுக்கீடு).





[திரு. மு. கருணாநிதி]

எல்லோருக்கும் புரிகிற வகையில் இந்தியா முழுமைக்கும் இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். நீங்கள் சொல்கிறபடி பார்த்தால் இந்தியா முழுவதிலுமுள்ள ஆண்டவனுக்கு சமஸ்கிருதம் தான் தெரியும், சமஸ்கிருதத்தில் சொன்னால் தான் ஆண்டவனுக்குப் புரியும், சமஸ்கிருதம் தான் தேவபாஷை, தேவனுக்குரிய பாஷை சமஸ்கிருதம் தான் என்ற நம்பிக்கை நம் நாட்டில் புகுத்தப்பட்டிருக்கிறது. சமஸ்கிருதம் மட்டும் தேவபாஷை அல்ல, தமிழுக்கும் தேவ பாஷை அந்தஸ்து உண்டு என்று சொல்லிக் கொள்கிறேன். அப்பர் பாடின பாடலுக்கு செத்தவர் மீண்டது, தமிழ்ப் பாடலால்தான். ஆகவே, தெய்வீகம் தமிழ் மொழிக்கும் உண்டு என்று புராணிகர்கள் இடத்திலே வாதிடுவதற்குக் கூட நான் தயாராக இருக்கிறேன். சமஸ்கிருதம் ஒன்று தான் தேவ பாஷை என்று சொன்னால், தமிழுக்கும் அந்த ஆற்றல் உண்டு என்று சொல்வதற்கு நிரூபிப்பதற்கு, எனக்கு முடியும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

DR. H. V. HANDE : I am not disputing it. I do not know what language is required by God. I do not know what God is. I am not discussing here about God. We are not here to discuss what language is loved by God. I fully agree with the Hon. Chief Minister. It cannot be discovered by the Chief Minister or myself. It cannot be agreed to by even any of the scientists. It is a separate question.

I am only saying that the people are coming to Rameswaram and Palani. They also go to Tirupathi. Things are going on smoothly. My love for Tamil is well-known. There is no one who loves Tamil more than myself. I have got tremendous love for Tamil and I am making rapid progress as far as Tamil is concerned. There is no question about it. I have great regard and love for Tamil. Why should we disturb the present set-up? Why should we try to project our views? This is the only point I am trying to make. Of course, if it is done, I have no objection. I am only presenting my views. Nothing should be done lest the link should be broken. That is all my submission.

I do not say God likes this language or that language. There is no Deva Basha. There is only a human Basha. How can the very conception of God and the particular language. He likes be discussed here? If at all there is God, he is supposed to understand things even without seeing. We do not know in what form God is. These are all not questions which can be discussed in the Legislative Assembly. I am not in that domain. I fully share the views of the Chief Minister.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: வழிபடுகிற முறை எல்லா இடத்திலும் ஒரே மாதிரியாக இருப்பதாக ஒப்புக் கொள்ள முடியாது. காசி விஸ்வநாதர் கோவிலில் சாமியைத் தொட்டு வழிபடலாம் என்று இருக்கிறது. இங்கே இருக்கும் ஆண்டவனைத் தொட்டு வழிபடுவதில்லை. ஆகவே, வழிபடுகிற முறையில் மாறுபாடு இருப்பது போல், அர்ச்சனை முறையிலும் மாறுபாடு இருப்பதில் தவறு இல்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவரவர்களே, சடங்குகளில் நம்முடைய மொழியில் செய்வதை வரவேற்கலாம். ஆனால் அர்ச்சனை செய்யும் போது ஆண்டவன் திருநாமத்தைச் சொல்கிறார்கள். பத்தவத்சலாய நம; என்று சொன்னால், பக்தர்கள் அந்த ஆண்டவன் திருநாமத்தை புரிந்து கொள்ள முடியும். ஆண்டவன் திருநாமத்தை சமஸ்கிருதத்தில் சொல்கிறார்களே, அது புரியாது என்று சொல்வது தவறு. ஆண்டவன் திருநாமத்தை எந்த மொழியில் சொன்னாலும் புரிந்து கொள்ள முடியும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அம்மையார் அவர்கள் யாரையோ அர்ச்சிக்க வேண்டுமென்று நினைத்து இங்கே அர்ச்சித்து இருக்கிறார்கள். (சிரிப்பு) அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. ஆனால் ஆண்டவன் பெயர்கள் தமிழிலும் இருக்கின்றன.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மதுரையிலே இருக்கக்கூடிய மீனாட்சி கோவிலில் தமிழிலேயே இப்போது அர்ச்சனை செய்கிறார்கள். ரொம்பக் காலமாக தமிழிலே எதும் செய்யப்படாமல், இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் தமிழிலே அர்ச்சனை செய்ய ஆரம்பித்து இருக்கிறார்கள். அவற்றை ஆண்டவனோ, மற்ற பக்தர்களோ, கோபம் கொண்டு தடுத்ததாகத் தெரியவில்லை. பொதுவாக இன்று பழநியில் அர்ச்சனை தமிழில் தான் நடந்து வருகிறது. எந்தவிதமான குறைபாடும் ஏற்படவில்லை. அந்தந்த மொழியில் பேசும்போது, ஆண்டவனுக்குப் புரியும் படியாக அந்தந்த மொழியில் அர்ச்சனை செய்வது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

DR. H. V. HANDE: My only submission is, leave it to the devotees. Let us not go on interfering. We do not do it in Muslim Religion or Christian Religion. I am not a devotee. Let us leave it to devotees.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நான் இதிலே குறுக்கிட்டதற்குக் காரணம், பேசிக் கொண்டிருந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்களையே நாம் மறந்து விட்டோம், மாண்புமிகு உறுப்பினர் பேசியபோது அண்மையில் கல்கி தலையங்கத்தில் தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டுமென்பது 'தி.மு.க.-வின் குயுக்தி' என்று — (DR. H. V. Hande: I am not responsible). நீங்கள் பொறுப்பு என்று நான் சொல்லவில்லை, அந்த அடிப்படையில் பேசிக் கொண்டிருக்கிறார்கள்—எழுதப்பட்டிருக்கிறது, அந்தத் தலையங்கத்திற்குப் பதில் சொல்கிற வகையில் தான் நான் இதைக் கூறிக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE: We are explaining the views on behalf of the Swatantra party. We are not responsible. I do not know whether he has read it. I do not know what is stated in Kalki. There is no point in unnecessarily dragging any one of us. We are not responsible.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். சாமிக்கு அர்ச்சனை எந்த மொழியில் செய்வது என்று பேச ஆரம்பித்து சுமார் 20 நிமிடம் போய்விட்டது. மீதியுள்ளவர்களுக்குப் பேச எப்படி டைம் கொடுக்கப் போகிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.**





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆதிகாலம் தொட்டு இருக்கும் ஆண்டவனுக்கு 20 நிமிடம் கொடுப்பதில் தவறு இல்லை. ஆண்டவன் நீண்ட நாட்களாக இருப்பவர்.

* **திரு. நா. வெ. குருசாமி:** அதே போன்று வட நாட்டுக்கு நமது தென் நாட்டவர் காசிக்கு, பத்ரிநாத்துக்கு விரும்பிச் செல்கிறார்கள். பொதுமக்கள் தாங்கள் விரும்பும் முறையில் பக்தி செய்ய உகந்த வகையில் அர்ச்சனைகள் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டிப்பட்டிக்கு அருகே வைகை அணை அருகே ஐம்புலபுத்தூரில் நரசிங்கப்பெருமாள் கோவில் என்று ஒன்று இருக்கிறது. அந்தக் கோவிலுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 900 அரசாங்கத்தால் கொடுக்கப்படுகிறது. தமிழ் நாட்டிலேயே அது ஒன்றுதான் ஏழைக் கோவில். அந்தக் கோவில் வருஷத்தில் 10 நாட்கள் திருவிழாவும் நடைபெறுகிறது. அந்த ரூ. 900-ல் ஒன்றும் செய்ய முடியவில்லை. அந்தக் கோவிலுக்கு அதிகப் பணத்தை ஒதுக்கித் தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. மா. வே. நாராயணசாமி:** சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, பால் வழங்கு துறை மானியக் கோரிக்கையையும் அற நிலையத் துறை மானியக் கோரிக்கையையும் ஆதரித்து எனது சில கருத்துக்களை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். பொதுவாக நாட்டு மக்களுக்குப் பால் உணவு பரவலாக கிடைத்திட வேண்டுமென்ற குறிக்கோளோடு நம்முடைய தமிழக அரசு பால் பண்ணைகள் நிறுவி அதன் மூலமாகப் பால் உற்பத்தி செய்து, பாலை முறையாக வினியோகம் செய்ய ஏற்பாடு செய்து வருகிறார்கள். இதிலே குறிப்பாக மாதவரம் பால் பண்ணை எனது தொகுதியில் இருக்கிறது. அது சீராகவும், சிறப்பாகவும், லாபம் தரக் கூடிய வகையில் நடைபெற அந்த வட்டத்திலுள்ள பொது மக்களும் குறிப்பாக மாதவரம் பால் பண்ணையில் பணியாற்றும் தொழிலாளர்களும் பல யோசனைகளை தெரிவித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆகையால், அந்த பால் பண்ணை இன்னும் சிறப்பான முறையில் இயங்குவதற்காக அந்த பால் வழங்கும் துறைக்கு ஆலோசனை அளிக்கும் வகையில், தொழிலாளர் பிரதிநிதிகள், நிர்வாகத்தின் பிரதிநிதிகள், பொதுவாக பால் வழங்குதுறை பால் உற்பத்தித் துறையில் அனுபவம் பெற்று உள்ளவர்கள், ஆக இவர்களைக் கொண்ட ஒரு குழுவை நம்முடைய அரசு அமைக்க வேண்டுமென்று என்னுடைய ஆலோசனையாக தெரிவிக்க விரும்புகிறேன். இந்தக் குழு பல்வேறு பிரச்சினைகளை அலசி ஆராய்வதற்கும், நல்ல ஆலோசனைகளை அரசுக்கு வழங்குவதற்கும் அது வழிவகை செய்ய உதவிகரமாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன். அதே நேரத்தில், பால் பண்ணையிலே பணியாற்றும் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை நல்ல முறையில் அமைக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். நம்முடைய கழக அரசு கலைஞர் அவர்களின் தலைமையில் மிகச் சிறப்பான முறையில் பணியாற்றி வருகிற அரசு, பால் பண்ணைத் தொழிலாளர்களின் கோரிக்கையை அனுதாபத்தோடு கவனிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் ஏற்கனவே சென்னை மாநகரத்தில் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேல் என்று சொல்லலாம் அந்த அளவுக்கு பழைமை வாய்ந்த கூட்டுறவுப் பால் வழங்கு சங்கம் இன்றையதினம் ஐஸ்வரத்தில் இருந்து வருகிறது. இது மிகவும் பரிதாபகரமான நிலையில்

[1971 ஜூலை 27

[திரு. மா. வே. நாராயணசாமி]

இருந்து வருகிறது. தொழிலாளர்களுக்குக் கூட ஊதியம் கொடுக்க முடியாத நிலையில் இருப்பதாகவும், தங்கள் பாலை விரிவாக சப்ளை செய்ய முடியாத நிலையில் இருப்பதாகவும் தெரிகிறது. இதற்குக் காரணம், மாதவரம் பால் பண்ணை துவக்கப்பட்டபிறகு, ஐனாவரம் மில்க் சப்ளை யூனியன் கவனிக்கப் படாமல் போய் இருக்கிறது. தொழிலாளர்கள் நன்மையைக் கருதியாவது, கூட்டுறவுத் துறையில் 40 ஆண்டுகளுக்கு மேலாக பால் வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ள இந்த சொசைடி நல்லமுறையில் இயங்கத் தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். இதற்கு முன்னால் இவர்கள் மருத்துவ மனைகளுக்குப் பால் சப்ளை செய்து வந்தார்கள். அந்த நிலைமை அவர்களுக்கு முன்போல் ஏற்படுத்தித் தரப்படவேண்டும் என்று நம்முடைய அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அறநிலையத் துறையைப் பற்றிச் சொல்லும்போது, என் தொகுதியில் உள்ள கோவில்களுக்கு நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. குறிப்பாக நகராட்சி மன்றங்களுக்குள் இயங்கும் கோவில் நிலங்களில் 20, 30 ஆண்டுக்காலமாக குடியிருப்பு பகுதிகளாக மக்கள் பயன்படுத்திக் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படிப் பயன்படுத்தப்படும் இடத்தில் சாலைகள் முறையாக அமைக்க நகராட்சிகளுக்கு முடிவதில்லை. அவர்கள் சாலைகளை அபிவிருத்தி செய்ய முடியாமல் இருக்கிறார்கள். 20, 30 ஆண்டு காலமாக மக்கள் அவற்றில் வசதி செய்து தரவேண்டும் என்று கோரிக்கை கொடுத்துக் கொண்டிருந்தாலும், செப்பனிட்டு வசதி செய்து கொடுக்க முடியவில்லை. தேவைப்பட்டால் அறநிலையச் சட்டத்தைத் திருத்தியேனும், நகராட்சி மன்றங்களுக்கு மக்கள் நன்மையைக் கருதி கோவில் நிலங்களை அவர்கள் உபயோகிக்கும் அளவில் ஏற்பாடுகள் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதி திருவொற்றியூரில் தியாகராஜ சுவாமி கோவிலுக்கு ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. அங்கு மக்கள் 30, 40 ஆண்டுக்காலமாக வாழ்கிறார்கள். நகராட்சியின் மூலமாக எந்த வசதிகளும் செய்து கொடுக்க முடியவில்லை. அதைத் தவிர்த்து, அமைச்சர் தக்க நடவடிக்கை எடுத்து சட்டத்தை வேண்டுமானாலும் திருத்தி, நகராட்சியின் மூலம் சாலைகளை புதுப்பிக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மனை வாடகை என்று ஏதோ தந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் அந்த மனைகளைச் சொந்தமாக்கிக் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்து கொடுத்தால், அவர்கள் கூட்டுறவுத் துறை மூலமாக வீடுகளைக் கட்டிக் கொள்ள வாய்ப்பினை உருவாக்க முடியும். அப்படி நம்முடைய அரசு செய்து கொடுக்கும் என்கிற நம்பிக்கையில் மக்கள் இருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்லி, என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திருமதி த. ந. அனந்தநாயகி: மதிப்பிற்குரிய துணைச் சபாநாயகர் அவர்களே, அறநிலையப் பாதுகாப்பு, இன்னும் பால் வழங்கும் துறை, இவற்றிற்கான மானியக் கோரிக்கைகள் மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன்.

அறநிலையங்களை ஒழுங்கு படுத்த வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு ஓரளவுக்கு இந்தச் சட்டத்தை அமுல் படுத்திக் கொண்டு வருகிறோம். அதில் பல கஷ்டங்களைப் பார்க்க முடிகிறது. குறிப்பாக, அறநிலையங்களுக்கு எத்தனை



1971 ஜூலை 27]

[திருமதி த. ந. அனந்தநாயகி]

சொத்துக்கள் இருக்கின்றன என்பதை வரையறுத்துக் கணக்கு வைக்கப் பட்டிருக்கிறதா என்றால், 'ப்ராபர்ட்டி ரிஜிஸ்டர்'-ல் ஆலயங்களின் சொத்துக்கள் கணக்கில் வைக்கப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. அப்படிப் பட்ட ரிஜிஸ்டர்கள் ஏற்படுத்தப் படவேயில்லை. ஆலயங்களில் அறங்காவலர்கள் இன்னும் இ.ஓ.-கள் இவற்றை செய்யமுடிவதில்லை. இவர்கள் இவற்றைக் கண்டு பிடிக்க முற்பட்டால், அவர்கள் மாற்றப் பட்டுவிடுகிறார்கள். பல ஆலயங்களில் எக்ஸிக்யூடிவ் ஆபிசர்கள், 3 மாதத்தில், 6 மாதத்தில், 9 மாதத்தில் மாற்றப் பட்டுவிடுகிறார்கள். குறைந்தது, 3 வருஷமோ அல்லது 5 வருஷமோ ஒரு இடத்தில் இவர்கள் இருந்தால்தான், ஆலயத்திற்கு என்ன என்ன சொத்துக்கள் இருக்கின்றன, என்ன என்ன வகைகளில் வருவாயைப் பெருக்கலாம், எப்படி எப்படி நல்ல முறையில் இயங்கமுடியும் என்பதையெல்லாம் பரிசீலனை செய்து அதற்கான வழிகளில் பணியாற்ற முடியும். மூன்று, ஆறு மாதங்களில் மாற்றப் பட்டுவிட்டால், அவர்களுக்கு சார்ஜ் கொடுக்கவும், சார்ஜ் வாங்கவும் தான் நேரம் இருக்கும். மற்ற காரியங்களைச் செய்ய அவர்களுக்கு நேரம் இல்லை. ஆலயங்களின் முன்னேற்றத்திற்கு என்ன வழி வகைகளைக் காணமுடியும்.

டிரஸ்டிகளை போடுவதில், 5 வருஷத்தில் முயற்சிகள் செய்யப்படுகின்றன என்றாலும், சமயங்களில் புதிய டிரஸ்டிகளைப் போடுவதில் தயக்கம் இருக்கிறது. உடனடியாகப் போடுவது கிடையாது. இரண்டு ஆண்டு, இரண்டரை ஆண்டு காலமாகியும் இன்னும் புதிதாக டிரஸ்டிகள் போடாமல் இருக்கிறது. என் பகுதியில் பைராகி கோவில் என்று ஒன்று இருக்கிறது. அதற்கு டிரஸ்டிகள் போடவே இல்லை. காலதாமதம் ஏன் என்பதைப் பற்றி யோசித்துப் பார்க்க வேண்டும். ஆலயங்களில் வழிபாட்டிற்கு என்று பொதுமக்கள் கொடுக்கும் சொத்துக்களை பராமரிக்கக் கூட பிரதிநிதிகள் டிரஸ்டிகள் இல்லாமல் இருந்தால் எப்படி? இன்னும் அறங்காவலர்கள் போடுவதில், ஆலயங்களில் நம்பிக்கையுள்ளவர்களை கோவில் வழிபாட்டில் நம்பிக்கை உள்ளவர்களைப் போடவேண்டும். நான் ஆண்டவனையே வழிபடுவதில்லை, ஆண்டவனிடம் எனக்கு நம்பிக்கை இல்லை என்று சொல்பவர்களையெல்லாம் டிரஸ்டிகளாகப் போடுவது நல்லதல்ல. அப்படிப்பட்டவர்களை நியமிப்பதால், இந்த அரசு ஆஸ்திகர்களுடைய மனதைப் புண்படச் செய்கிறார்கள். இது ஆஸ்திக உணர்ச்சியிலும் வழிபாட்டிலும் தலையிடுவதாகத்தான் எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அரசாங்கத்திற்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அதே போன்று இன்றைக்குப் பல கோவில்களில் திருப்பணிகள் முறையாக நடப்பதில்லை. திருப்பணிகளில் ஆர்வம் உள்ள அறங்காவலர்கள் வருவதில்லை. இதை மக்கள் தவறாக எடுத்துக் கொண்டு, அரசாங்கத்தினால் தவறு செய்யப் படுகிறது என்று மக்கள் அச்சப்படுகிறார்கள். திருப்பணிகள் மூலம் பெரிய கோவில்களுடைய வருவாயைக் கொண்டு ஏழைக் கோவில்களுக்கு உதவி செய்து, நல்ல முறையில் பணிகள் செய்ய வேண்டும். அதேபோன்று தான் கோவில் குளங்கள். இவை நல்ல முறையில் பராமரிக்கப் படுவதில்லை. கரைகள் உடைந்து, பாழடைந்து போயிருக்கின்றன. நான் மைலாப்பூர் கவுன்சிலராக இருந்தபோது, முயற்சி எடுத்து சித்திர குளம் செப்பனிடப்பட்டது. அதை இப்பொழுது யாரும் பராமரிக்கக் கூட இல்லை. எச்.ஆர்.ஈ.-யும் செய்யவில்லை, கார்ப்பொரேஷனும் செய்யவில்லை. இன்னும் என்னுடைய தொகுதியில் உலகப்

[1971 ஜூலை 27

[திருமதி த. ந. அனந்தநாயகி]

பெருமை பெற்ற திருவள்ளுவர் கோவில் இருக்கிறது. என்ன நிலையில் இருக்கிறது ? உள்ளே போனால், பழைமையான மண்டபம், மேலே மாடிகூட இல்லாமல், வருந்தத்தக்க நிலையில் இருக்கிறது. வள்ளுவர், வள்ளுவர் என்று பாராட்டுகிறோம். அப்படிப் பாராட்டும் இந்த ஆட்சி வள்ளுவர் கோவில் திருப்பணியை உடனடியாகச் செய்து, உலகம் போற்றும் அளவில் செய்து, யாவரும் வந்து பார்க்கக் கூடிய நிலையில் அதை வைக்க வேண்டும், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று பல ஆலயங்கள் இந்த அர்பன் லாண்ட் டாக்ஸினால் பாதிக்கப்படுகின்றன. நல்லவேளையாக விதிவிலக்கு அளிப்பதை அரசாங்கம் தன் கையில் வைத்துக் கொண்டிருக்கிறது. வெறுமனே கையில் வைத்துக் கொண்டால் மட்டும் போதாது. கனம் முதலமைச்சரவர்களையும், அந்தத் துறை அமைச்சரையும் விதிவிலக்கை அமுல் நடத்துவதில் ஆலயங்களுக்கு தாராளமாக தள்ளிக்கொடுத்து, தாராளமனப்பான்மையோடு அர்பன் லாண்ட் டாக்ஸ் எக்ஸம்ப்ஷன் கொடுக்க வேண்டும், அந்த வகையில் ஆலயங்களைப் பாதுகாக்க முன் வரவேண்டும். காரணம், வருமானம் வருவதை வைத்துத்தான் அந்த அந்த ஆலயங்கள் நடத்தப்படுகின்றன.

அர்ச்சனைபற்றி எல்லோரும் பேசினார்கள். வடமொழியில், தமிழில் என்றெல்லாம் சொன்னார்கள். எந்த மொழியில் அர்ச்சனை செய்தாலும் முதலில் ஆலயங்களை நல்லமுறையில் பராமரிக்க அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். வேறு வகைகளில் பாதகம் ஏற்படாமல், பாதுகாப்பு அளித்து ஆஸ்திகர்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்பு கொடுக்கும் உறுதியைக் காட்ட வேண்டும்.

அடுத்தபடியாக வரும்பொழுது இரண்டு திருத்த சட்டங்களை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். இந்தத் திருத்தச் சட்டங்களில் அவசியமா என்று பார்க்க வேண்டும். வெளி நாட்டினர் நம்முடைய கோயிலுக்குள்ளே போய் தரிசிக்க அனுமதி வழங்கப்பட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். வெளிநாட்டினரே வரக் கூடாது என்று நான் சொல்லவில்லை. கோயில்களிலே இருக்கின்ற கலைச் செல்வங்களை எல்லாம் அவர்கள் அனுபவிக்கலாம். ஆனால், கர்ப்ப கிரகங்களுக்கு மாத்திரம் அவர்கள் வரக் கூடாது. கோயிலுக்குள்ளே சென்று ஆண்டவனைத் தான் பார்க்கலாமே தவிர, அங்கே அவர்கள் வந்து கலைச் செல்வத்தைப் பார்க்க முடியாது. அப்படி நம்முடைய கலைச் செல்வத்தை எல்லாம் அவர்கள் கர்ப்ப கிரகத்திற்கு வெளியே தான் பார்க்க வேண்டும். ஆண்டவனைப் பார்க்க வருபவர்களுக்கு, பக்தி இருக்கிறதா என்றுதான் பார்க்க வேண்டும். அப்படி பக்தி இல்லாதவர்கள் கர்ப்ப கிரகத்திற்கு வருகிறார்கள் என்றால், அது சரியில்லை. "ஆர்ட் பீசை" பார்க்க வருபவர்களைக் கோயிலுக்குள்ளே அனுமதிக்கலாம். ஆனால், கோயிலின் கர்ப்ப கிரகத்திற்குள்ளே எந்த அந்நியரையும் அனுமதிப்பது சரியில்லை, அது ஆஸ்த்திகர்களின் நெஞ்சத்தை பெரிதும் புண்படுத்தும் என்று சொல்லி, அப்படிப்பட்ட நிலைமைகளை தவிர்க்கும் வகையிலே இந்த அரசு வழி வகைகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி அவர்களை கர்ப்ப கிரகத்திற்குள்ளே விட்டு, அவர்களால் நம்முடைய சம்பிரதாயங்கள் அவமானப்படுத்தும் வகையிலே ஏதாவது நிகழ்ச்சி நடந்துவிட்டால், அது ஆஸ்த்திகர்களின் மனதை பெரிதும் புண்படுத்திவிடும்.



1971 ஜூலை 27]

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தெய்வ பக்தி இல்லாத அந்நியர்களை அனுமதிக்கக் கூடாது என்று அம்மையார் அவர்கள் சொல்லுவார்களானால், அப்படி தெய்வ பக்தி இல்லாத இந்தியர்களை மாத்திரம் உள்ளே அனுமதிக்கலாமா ?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அவர்களும் கூட அனுமதிக்கப்படலாம், தெய்வ பக்தி உடையவர்களாக் இருந்தால்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பல முறை பண்டித நேரு அவர்கள் ஆண்டவன் இருக்கும் கர்ப்ப கிரகத்திற்குள்ளே சென்றிருக்கிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அவர் அப்படி சென்றது, இந்த நாட்டிலே இருக்கிற "ரைட் ஆப் ஒர்ஷிப்" என்பதை வைத்துக் கொண்டு சென்றிருக்கலாம். ஆனால், அந்நிய நாட்டினர்களுக்கு அப்படிப்பட்ட ஒரு உரிமையை கொடுக்க வேண்டிய அவசியம் என்ன என்று தான் எனக்குத் தெரியவில்லை. அந்நியர்களுக்கும் நம்முடைய கடவுள்களின் உருவ வழிபாட்டிலே நம்பிக்கை வைத்து உள்ளே வந்து ஆண்டவனை தரிசித்தால், அதிலே நமக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் அங்கே போய் கொடுக்கின்ற திருநீரை வாங்கி வீசி எறியும் நிலை வந்து விட்டால், அதனால் ஆஸ்த்திகர்களின் மனம் புண்படும் என்று சொல்லிக் கொள்கிறேன். எனவே, அப்படிப்பட்ட நிலையினை உருவாக்கி நம்முடைய ஆஸ்த்திகர்களின் மனதை புண்படும்படியான காரியங்களை செய்யக் கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்நியர்கள் நம்முடைய கோயில்களிலே கர்ப்ப கிரகம் வரையில் போகலாம் என்ற ஒரு சட்ட திருத்தம் செய்திருக்கிறார்களா ?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அப்படிச் செய்யவில்லை என்றால் சரி. அந்த அந்நியர்கள் கோயிலுக்கு வெளியே சுற்றி நம்முடைய கலைப் பொருள்களை ரசிக்கலாம் என்றால் போதுமானது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கோயிலுக்கு போனதில்லை என்று நினைக்கிறேன். கோயில்களிலே இதுவரையில் தாராளமாக போகலாம், இதற்கு அப்பால் போகக் கூடாது என்ற வரையறை இருக்கிறது. அதாவது ஒரு "ஸ்பெசிபிக் பிலேஸுக்கு" போகக் கூடாது என்றிருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் சில கோயில்களிலே இந்துக்களிலே கூட சிலரை உள்ளே விட மாட்டார்கள். அதாவது கர்ப்ப கிரகம் வரை அவர்களை அனுமதிக்க மாட்டார்கள் என்று சொல்லுகிறேன். ஆகவே, அந்நியர்களை வெளியே அனுமதித்தால் யாருக்கும் ஆட்சேபனை இல்லை ; தாராளமாக அவர்கள் வந்து, நம்முடைய கலைச் செல்வத்தை அனுபவிக்கலாம். நாம் அவர்களை நல்ல முறையிலே நடத்த தயாராக இருக்கிறோம். எனவே, அந்நியர்களை கர்ப்பக் கிரகம் வரை அனுமதிக்கப்படக் கூடாது என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அர்ச்சகர்கள். எந்த ஜாதியினர் ஆயினும் அர்ச்சகர் பயிற்சி பெற்றிருந்தால் கோயிலுக்குள்ளே சென்று அர்ச்சனை செய்யலாம் என்றால் என்ன அர்த்தம்? இதற்கு என்ன அவ்வளவு அவசரம் ? எல்லா கோயில்களிலுமே அந்தணர் என்பவர் தான் அர்ச்சகராக இருக்கிறார்கள் என்ற நிலைமை இன்றைக்கு இல்லை. சில இடங்களிலே "ஆதி சைவர்கள்" என்று அழைக்கப்படுபவர்கள் எல்லாம் அர்ச்சகர்களாக பணிபுரிகிறார்கள். ஆனால்,

[திருமதி த. ந. அனந்தநாயகி]

இந்த அரசாங்கம் எல்லோருக்கும் இந்த உரிமையை வழங்குவது பாதிரி காரியங்களை செய்கின்றார்கள் என்றால், அர்ச்சகர் பதவி என்ன ஐ.ஏ.எஸ். பதவியா. அர்ச்சகர் வேலை ஒருவர் செய்கிறார் என்றால், அதை ஒரு பெரிய தியாகம் என்று சொல்ல வேண்டும். அவர்களுக்கு போதிய ஊதியம் கிடையாது. பல சிரமங்கள். கடவுளுக்கு தொண்டு செய்யும் ஒரு பணியை அந்தணர் இனத்தைச் சார்ந்தவர்கள் வழி, வழியாக செய்து வருகிறார்கள் என்றால், ஏன் அதிலே போய் நாம் கை வைக்க வேண்டும்? நல்ல பழக்க, வழக்கங்களை கொண்டவர்கள் அந்தத் தொழிலைச் செய்கிறார்கள் என்றால், இவர்கள் ஏதோ "புரட்சி செய்து" கோயில்களிலே எந்த ஜாதியினராக இருந்தாலும் அர்ச்சனை செய்யலாம் என்றால், என்ன அர்த்தம்? அப்படி அர்ச்சனை செய்பவர்களிலே நல்ல பழக்க வழக்கங்களை கொண்ட சைவர்களும் இருக்கலாம். அப்படி இல்லாமல் அசைவர்களும் இருக்கலாம். அப்படிப்பட்ட அசைவர்கள் வந்ததற்குப் பிறகு 'மந்திரங்களை' கற்றுக் கொள்ளலாம். இந்த பதவிகளுக்கு எல்லாம், பி.ஏ., பி.காம். படிப்பதைப் போல், அவர்களுடைய தகுதி என்ன என்பதை பார்க்க வேண்டியதில்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பழக்க வழக்கங்களுக்கு அம்மையார் அவர்கள் முக்கியத்துவம் கொடுத்துப் பேசுகிறார். அதனால், கர்ப்ப கிரகங்களின் புனிதத் தன்மை போய்விடும் என்கிறார். தீண்டாமை ஒழிப்பை நாம் சட்டத்தின் மூலம் நிறைவேற்றி, அந்த ஆதி திராவிட மக்கள் கோயிலுக்குள்ளே இன்றைக்கு போகும் பொழுது, அந்தப் பழக்க வழக்கங்களை காட்டி ஒரு ஹோட்டல் உரிமையாளர் அவர்களை ஹோட்டலுக்குள்ளே அனுமதிக்காமல் தடுத்துவிட முடியும். எனவே, ஜாதி முறை ஒழிய வேண்டும் என்பதற்காகத் தான், இந்த அர்ச்சனை செய்வதிலே தேர்ச்சி பெற்றவர்கள் யாராக இருந்தாலும் போடப்படலாம் என்று சொல்லப்படுகிறது.

அம்மையார் அவர்கள் நாங்கள் ஏதோ இப்படி செய்து புரட்சி செய்துவிட்டதாக கருதுவதாக குறிப்பிட்டார்கள். மகாத்மா காந்தி அவர்களின் வழியிலே வந்த காங்கிரஸ் உறுப்பினர் அவர்கள் கோயிலிலே "ஜாதி" இருக்க வேண்டும் என்று கூறுவதுதான் புரட்சியாக இருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஜாதி ஒழிய வேண்டுமென்று நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். எங்களுடைய காந்திதான் ஹரிஜனங்களை கோயிலுக்குள்ளே விட்டார்கள். ஆனால், இந்த அர்ச்சகர் பணியை செய்வதற்கு ஒருவர் பழக்க வழக்கங்களையும், யார் அந்த பணியை சிறப்பாக செய்ய முடியும் என்பதையும்தான் யோசிக்க வேண்டும். "அருவருப்பான பழக்கங்கள்" கொண்டவர்கள் என்று நான் சொல்லுகிறேன், என்றால், அது "ஹரிஜன மக்களைத்தான்" அப்படி சொல்லுகிறேன் என்று எங்களை முதலமைச்சர் அவர்கள் மாட்டிவிடப் பார்க்க வேண்டாம். அருவருப்பான பழக்கம் என்று சொன்னால், அசைவர்களாக இருப்பவர்கள் இறைச்சி, மீன் போன்றவைகளை சாப்பிட்டுவிட்டு கோயிலுக்கு போய் ஆண்டவனை தொழுவது மாதிரி. எனவேதான் நான் சொல்லுகிறேன், சில பழக்க, வழக்கங்களிலே, சம்பிரதாயங்களிலே நாம் அநாவசியமாக தலையிட வேண்டாம் என்கிறேன். எனவே, இப்படி எல்லா ஜாதிக்காரர்களும் அர்ச்சகராக பணிபுரியலாம் என்று சொல்லி, ஏதோ ஒரு பெரிய புரட்சி செய்துவிட்டதாக நினைக்க வேண்டாம்.





**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அம்மையார் அவர்கள் சொன்னது போல், பிடாரி கோயிலிலேயும், மாரியம்மன் கோயிலிலேயும் அர்ச்சகராக பணி புரியும் பண்டாரங்கள் எல்லாம் சைவர்களாக இருக்கிறார்களா?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** எனக்குத் தெரிந்தவரையில் அவர்கள் சைவர்களாக இருந்துதான் அவர்களுடைய சேவைகளை நல்ல முறையிலே செய்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆனால், கனம் முதலமைச்சர் அவர்களுக்கு அப்படிப்பட்ட நிலையிலே இல்லாதவர்களும் அர்ச்சகர்களாக இருக்கிறார்கள் என்ற செய்தி வந்திருக்குமோ என்னவோ, அது எனக்குத் தெரியாது. அத்தோடு, 'பண்டாரம்' என்பவர் பிராமணர் அல்ல, என்பதையும் முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. கு. இராசமாணிக்கம்:** "பாயின்ட் ஆப் ஆர்டர்". மீன், இறைச்சி சாப்பிடுவது 'அருவருப்பான வழக்கங்கள்' என்று கூறுகிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நான் அப்படி சாப்பிடுவதே அருவருப்பான வழக்கம் என்று சொல்லவில்லை. நான் கூடத்தான் அவைகளை சாப்பிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இறைச்சி சாப்பிடுவது எப்படி அருவருப்பான வழக்கம் ஆகும்?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஆண்டவன் சன்னதிக்கு போகும்பொழுது சிலவற்றை நாம் எதிர்பார்க்கிறோம். சாதாரணமாக, இறைச்சி சாப்பிடுவது, மீன் சாப்பிடுவது அருவருப்பான பழக்கம் என்று நான் சொல்லமாட்டேன்.

**திரு. ஏ. ஆர். பெருமாள்:** அம்மையார் அவர்கள் சில விளக்கங்களை கூற வேண்டும். கோயிலுக்கு போகிறவர்களிலே சைவர், அசைவர் என்ற வித்தியாசம் இல்லை. ஆண்டவன் ஒருவர் சைவராக இருந்தாலும், அல்லது அசைவராக இருந்தாலும், மேல் மகனாக இருந்தாலும், அல்லது கீழ் மகனாக இருந்தாலும், அவன் தூய்மையான உள்ளத்தோடு நம்மை நினைக்கிறானா என்று தான் பார்ப்பார். கண்ணப்பர் அவர்கள் எப்படி தன்னுடைய கண்ணையே இறைவனுக்கு அர்ப்பணித்தார் என்பதை நாம் பார்க்க வேண்டும். எனவே, ஒருவருடைய உள்ளம் தான் முக்கியம். எனவே, ஆண்டவன் முன்னிலையிலே சைவம், அசைவம், நாஸ்திகன் ஆஸ்திகன் என்ற பிரச்சினைக்கே இடமில்லை.

**திரு. என். இராஜாங்கம்:** தலைவரவர்களே, இந்த அர்ச்சகர் பதவி என்ன ஐ.ஏ.எஸ். பதவியா என்கிறார்கள் அம்மையார் அவர்கள். ஐ.ஏ.எஸ். அதிகாரி யாரையும் இங்கே நில், அங்கே நில் என்று சொல்ல மாட்டார்கள். ஆனால், ஆண்டவன் இருக்குமிடத்திலே அர்ச்சகர்கள் இதைச் செய்கிறார்கள். ஜாதி ஒழிய மிக முக்கியமான அடிப்படைக் காரணமே, கோயிலிலே எல்லோரும் சமத்துவம் என்று உணர்ந்துதான். இதை இந்த அரசாங்கம் செய்கிறது. ஆகவே, அப்படி எல்லா ஜாதிக்காரர்களுக்கும் அர்ச்சகர் பதவி கொடுப்பது என்பதை தமிழ் நாட்டிலே உள்ள எல்லா மக்களும் வரவேற்கிறார்கள். எனவே, இந்த அரசு கொண்டு வந்திருக்கும் அந்தச் சட்டத் திருத்தம் அப்படியே இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இது அவருடைய விளக்கம். நான் என்னுடைய எண்ணத்தைத்தான் இந்த அவையிலே எதிர் ஒலித்துக் கொண்டிருக்கிறேன். எனவே, இந்தச் சாதாரண பழக்க வழக்கங்களிலே ஏன் நாம் கை வைக்க வேண்டும் என்பதைத்தான் பார்க்க வேண்டும். மேலும் அந்த விஷயம் "சப்ஜூடிஸ்" ஆக இருக்கிறது. அதனுடைய "மெரிட்ஸ் அன்ட்டு டிமெரிட்ஸை" பற்றி எல்லாம் நீதி மன்றத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் என்ன முடிவைச் சொல்லவிருக்கிறார்களோ, அதை நாம் ஏற்க இருக்கிறோம். இப்படி எவ்வளவோ சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்ற இந்த நேரத்திலே கோவில்களிலும் குளங்களிலும் கவனம் செலுத்தி, அதிலே ஆர்வம் காட்டுகிறதை விட்டுவிட்டு அவசியமான காரியங்களை மேற்கொள்ளலாம். இப்படி சிக்கலான பிரச்சனைகளில் சிக்கிக்கொண்டு அவஸ்தைப் படவேண்டாம்.

அடுத்து, பலபேர் கோவில் சொத்துக்களை முறையற்ற விதத்தில் அனுபவித்துக்கொண்டு இருக்கின்றார்கள். இப்படி கோவில் நிலங்களை அனுபவித்துக் கொண்டு பட்டணங்களிலே பங்களாக்களைக் கட்டிக்கொண்டு வாழ்பவர்கள் பலர் இருக்கின்றார்கள். 'கோவில் சொத்துக்கள் தானே, குறைவாகக் கொடுத்தால் யார் கேட்கப்போகின்றார்கள்' என்ற அளவில் அவர்கள் குறைவாகவே கொடுத்து தங்கள் செல்வத்தைப் பெருக்கிக்கொள்ளுகின்றார்கள். குறிப்பிட்ட ஒரு சில பணிகளுக்காகத்தான் இப்படிப்பட்ட சொத்துக்கள் அல்லது நிலங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இச்சொத்துக்களினால் வரக்கூடிய வருமானம் முறையாக வராமல் போய்விட்டால், எதற்காக அச்சொத்துக்கள் வைக்கப்பட்டனவோ, அதன்நோக்கமே ஈடேறாது போய்விடும். கோவில்களிலேயே நம்பிக்கை இல்லாதவர்கள்தான் இவற்றை தாராளமாக அனுபவித்துக்கொண்டு வருகின்றார்கள். எனவே இதைத் தடுப்பதற்குத் தகுந்த துரிதமான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இப்படி வைக்கப்பட்டுள்ள சொத்துக்களின் அல்லது நிலங்களின் வருமானங்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் விதத்தில் இந்த இலாகா வேலை செய்ய வேண்டும். பேசாமல் இருந்து விட்டால் அவற்றின் பலன்கள் கிடைக்காமற போய்விடும்.

இதுபோல 'லிஸ்டெட் டெம்பிள்ஸ்' என்று சொல்லப்படும் ஆலயங்களியே பலனுள்ள காரியங்களைச் செய்ய முன்வரவேண்டும். இந்த சமுதாயத்திலே எண்ணற்ற ஏழைப்பிள்ளைகள் அனாதைச் சிறுவர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு என இல்லங்களை அமைத்து அவர்களைப் பாதுகாக்க இதில் வழி செய்யலாம். மணலி அவர்கள் குறிப்பிட்டார்கள், 'இது என்ன, உற்சவமும் திருவிழாக்களும்' என்று. இந்தக்காலத்திலே ஆசாமிகளுக்கே உற்சவமும் ஊர்வலங்களும் திருவிழாக்களும் எடுக்கும்போது சாமிக்கு இருக்கக்கூடாதா? எனவே, இப்படிப்பட்ட கோவில் நிதிகளிலிருந்து நல்ல காரியங்கள் செய்யலாம். எனவே அவர்கள் இதில் தலையிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கோவில் வழிபாட்டுக்கு எனச் செல்லும் இந்துக்களுக்கு நல்ல வசதிகளைச் செய்து கொடுக்கலாம். 'லிஸ்டெட் டெம்பிள்ஸ்'-களைப் பொறுத்த வரையில் இவற்றைச் செய்யலாம். கோவில் வழிபாட்டுக்குச் செல்லும் இந்துக்களுக்கு நல்ல வசதி செய்து தர முடியும் என்றால், அது மிக மிக அவசியம். இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள்கூட 'பெக்கர் ப்ராப்ளத்'-திற்காக நிதி திரட்டுகிறார். அதற்கென கோவில்கள் கொடுக்கின்றன. மடாலயங்கள்



கொடுக்கின்றன. எம்.எல்.ஏ.-க்களான நாம்கூட சம்பளத்திலிருந்து கொடுத்திருக்கிறோம். இப்படி அதற்கான நிதியைப் பெருக்குவதற்கு- எவ்வளவோ செய்வதுபோல இந்த நிதிவசதியையும் பெருக்க முன்வந்தால் சாலச் சிறந்ததாக இருக்கும். உண்டிகளைக் கோவில்களில் வைக்கலாம். பிச்சைக்காரர்களின் சம்ரக்ஷணைக்காக என்று. இப்போது கோவில் வாசலில் போனால் 'காசுபோடு, காசுபோடு' என்று ஏராளமான பிச்சைக்காரர்கள் கோவில் வழிபாட்டிற்காக வருகின்றவர்களைத் தொல்லைப்படுத்துகின்றார்கள். கோவிலைப் பார்க்கவேண்டும் என்று வரும் பல யாத்ரீகர்கள்கூட இந்தத் தொல்லைக்குப் பயந்து வருவதேயில்லை. இப்படி உண்டி வைத்து விட்டால் போடாதவர்கள் கூட அதிகமாகப்போட முன்வருவார்கள்.

இப்படி யாத்திரை முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு குடிதண்ணீர் வசதி, சாக்கடைத் திட்டம் இவைகளுக்கு முதலிடம் கொடுத்து இவற்றை அமைக்கவேண்டும். பல க்ஷேத்திரங்களிலே இன்றைக்கு இந்த அத்தியாவசியமான வாடர் சப்ளை, ட்ரெய்னேஜ் கிடையாது. இவை இரண்டும் இல்லாத காரணத்தினால், அப்படிப்பட்ட இடங்கள் அடிக்கடி தொத்துநோய்க்குள்ளாகின்றன. இதுபோன்று கோவில்களில் திருவிழாக் காலங்களிலே அங்கே எல்லாம் இனிப்புப் பண்டங்களையும் மற்ற மற்ற தின்பண்டங்களையும் பலர் கொண்டு வந்து விற்கின்றார்கள். அவை அனைத்துமே சுகாதாரமற்ற முறையில் தயாரிக்கப்பட்டு, செய்த பண்டங்களை மூடியும் வைக்காமல் திறந்துவைத்து ஈக்கள் மொய்க்கும்படி வைத்துக்கொண்டு விற்பனை செய்கின்றார்கள். இதுவும் பல தொத்துநோய்களுக்குக் காரணமாகின்றன. எனவே திருவிழாக் காலங்களிலே அறநிலையப் பாதுகாப்பு அதிகாரிக்கும் ஹெல்த் டிபார்ட்மெண்டு அதிகாரிகளும் சேர்ந்து சுகாதாரமற்ற முறையில் இப்படிப்பட்ட தின்பண்டங்கள் தயாரித்து, விற்கப்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது அவசியம் என்று கூறி பால் வழங்கும் திட்டத்தின்மீது ஒரே ஒரு கருத்தை மட்டும் கூற விரும்புகிறேன்.

கடலில் கரைத்த பெருங்காயம் போல லட்சக்கணக்கான மக்கள் வாழும் சென்னை நகரத்திற்கு மாதவரம் பால் பண்ணை ஒன்று மட்டும் இருந்து வருகிறது. சென்னை மக்களின் பால் தேவைக்கு மிகமிகக் குறைவாகவே பால் கிடைக்கிறது. பால்பண்ணை ஆரம்பித்தபோது சென்னையிலுள்ள மாடுகளையெல்லாம் அங்கே கொண்டுபோய் நல்ல முறையில் பாதுகாத்து பால் செல்வத்தை அதிகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை, சென்னையிலுள்ள பால்காரர்கள் எல்லாம் சென்னையிலேயேதான் இருக்கின்றார்கள். ஒரு யூனிட் வைப்பது என்றால் 10 அல்லது 20 மாடுகள் வேண்டும். ஆனாலும் அதில் சேருவதற்கு யாரும் முன்வரவில்லை. முதலில் சிலர் வந்தார்களேதவிர, பிறகு அவர்களும் சென்னைக்கே திரும்பி வந்துவிட்டார்கள். அந்தத் துறையில் ஏதோ சிக்கல் இருக்கிறது. அது என்ன என்று மீண்டும் அந்தப் பால்காரர்களையெல்லாம் அழைத்து வந்து கேட்க முன்வரவேண்டும். ஈரோட்டிலிருந்து பால் வருகிறது, கோயம்புத்தூரிலிருந்து பால் வருகின்றது என்று இருக்கிறதேதவிர, சென்னையிலுள்ள பால்காரர்கள் அங்கே போவதற்கு பயப்படுகின்றார்கள். அது என்ன காரணம் என்று யோசித்துப் பார்க்க வேண்டும்.

[1971 ஜூலை 27

[திருமதி த. ந. அனந்தநாயகி]

இந்தப் பாலை எடுத்துச்செல்வதற்கு 26 லாரிகளைப் பயன்படுத்துகின்றார்கள் இந்தத் துறையில். அவற்றில் இரண்டொரு லாரிகள்தான் சுகாதார முறையை அனுசரித்து அமைக்கப்பட்டிருக்கிறதேதவிர, மிச்சம் உள்ளவற்றையெல்லாம் 'டார்பாலின்' போட்டு மூடுகின்றார்கள். அவற்றில் எடுத்துச் செல்லப்படும் புட்டிகளில் தூசிவிழுவதற்கு வாய்ப்பிருக்கிறது. இருக்கும் புட்டிகளையும் வழியிலே எப்படியோ சாமர்த்தியமாகத் திறந்து தண்ணீரைக் கலந்துவிட முடியும் என்ற நிலை இருக்கிறது. இப்படியில்லாமல் லாரிகள் எல்லாம் அனுப்பப் படும்போது பூட்டப்பட்டு அவை போய்ச் சேரும் இடத்தில் அவர்கள் அதைத் திறந்துகொள்ளத்தக்க ஏற்பாடு இருக்கவேண்டும். தகுந்த 'லாக்கிங் டிவைஸ்' இருக்கவேண்டியது மிகமிக அவசியம்.

திருவிழாக்காலங்களிலே பார்த்திருக்கின்றேன், டஜன் கணக்கில் குளங்களில் புட்டிகள் மிதப்பதை, தகுந்த பாதுகாப்புமுறை இருக்கவேண்டும். ஏன் இப்படியெல்லாம் நேருகிறது என்று பார்த்தால் இத் துறையில் பணியாற்றுகின்றவர்களுக்குப் போதிய உற்சாகமும் ஊக்கமும் இல்லை. இருபது ரூபாய் அடிப்படைச் சம்பளம் கொடுத்தால், யாருக்கு ஊக்கம் இருக்கும்? 120 ரூபாய் என்று சொன்னார்கள். ஆனால் அடிப்படைச் சம்பளம் ரூ. 20 தான். இப்படியிருந்தால் யாருக்கு ஊக்கம் இருக்கும் என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** என்ன வேலை செய்கின்றவர்களுக்கு இந்தச் சம்பளம் கொடுக்கின்றார்கள் என்று தெரிவிக்க வேண்டும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** எந்தவேலை செய்தால் என்ன? அடிப்படைச் சம்பளம் ரூ. 20 என்று இருப்பதையே எதிர்க்கிறோம். வாட்ச்மேனுக்குக் கூட 20 ரூபாய் அடிப்படைச் சம்பளம் என்றால் பற்றாது. எனவே அதிகமான சம்பளம் கொடுக்க முன்வரவேண்டும்.

**திரு. நா. வீராசாமி:** பேரவைத் தலைவரவர்களே, நடைமுறைக் கேள்வி என்ற முறையில் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். மாற்றியமைக்கப்பட்ட சம்பள விகிதங்களிலே எந்த ஒரு அரசாங்கச் சிப்பந்திக்கும் ரூ. 20 அடிப்படைச் சம்பளம் என்ற விகிதம் கொடுக்கப்படவில்லை. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரூ. 20 அடிப்படைச் சம்பளமாகக் கொடுக்கப் படுகிறது என்பது மன்றத்திற்குத் தவறான தகவலைத் தருவதாகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பேரவைத் தலைவர் அவர்களே, எது தவறான தகவல்? நீங்கள்தான் சம்பளம் கொடுக்கின்றீர்கள். எங்களுக்குத் தகவல் வருகிறது. எங்களுக்குக் கிடைத்த தகவல் இது. அறிக்கையில் இருக்கலாம் அடிப்படைச் சம்பளம் 20 ஆக இருக்கக்கூடாது என்று. அமுல்படுத்தாமலும் இருக்கலாம். எனவே அடிப்படைச் சம்பளம் உயர்த்தப்படவேண்டும். பலர் நிரந்தரமாக்கப்படாமல் இன்னும் பல ஆண்டுகளுக்குப் பிறகும் தாற்காலிக ஊழியர்களாகவே வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் நிரந்தரமாக்கப்படவேண்டும்.

இன்னும் பால்பண்ணையை விரிவுபடுத்தவேண்டும். தென்சென்னைக்கு என்று ஒரு பால்பண்ணையை ஆரம்பிக்கலாம். அதை 'ஜாயிண்ட் செக்டாராக' வைத்துக்கொள்ளலாம். நீங்கள்தான் ஜாயிண்ட் செக்டாரை ஆதரிக்கின்றவர்கள் ஆயிற்றே? அதில் எவ்வளவு லாபம் வருகிறது, மாதவரம் பண்ணையில் ஏன் இவ்வளவு நஷ்டம் வருகிறது என்று அப்போது தெரியும்.



1971 ஜூலை 27]

[திருமதி த. ந. அனந்தநாயகி]

கொடுங்கையூரில் உள்ள புல்பண்ணை போதாது. சென்னைக்கு மூன்று புல்பண்ணைகள் வேண்டும். பம்பிங் ஸ்டேஷனிலிருந்து போகும் கழிவு நீரைக் கடலில் விடுவதற்குப் பதிலாக திருப்பிவிட்டால், அவற்றின் வண்டலைக்கொண்டு நல்ல முறையில் புல்பண்ணைகளை வைக்கலாம். இப்படி எது எது அவசியமோ அவசரமோ அவற்றையெல்லாம் துரிதமாக எடுத்து நிறைவேற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இதைவிட்டால் வேறு வழியில்லை என்ற மனப்பான்மையில் போனால் பலனைக்காண முடியாது. இன்னும் சென்னையிலேயே ஏழைகள் வாழும் பகுதிகளில் போதிய அளவிற்கு பால் சப்ளை செய்வதற்கான 'கியாஸ்க்கள்' அமைக்க வேண்டும். இவற்றையெல்லாம் செய்து சென்னை மக்களின் பால் தேவையை சிறந்த முறையில் பூர்த்திசெய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமருகிறேன்.

THE HON. THIRU P. U. SHANMUGHAM: A Last Grade servant is getting Rs. 50 plus Rs. 60 whereas a person belonging to the Contingency Staff gets a basic pay of Rs. 20 and his total emolument is Rs. 115.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I want the basic pay to be revised.

THE HON. THIRU P. U. SHANMUGHAM: Whether it is Rs. 50 plus Rs. 60 or Rs. 20 plus Rs. 90, it is the same.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: But he can get other benefits. He can get higher pension, etc. So his basic pay must be revised.

THE HON. THIRU P. U. SHANMUGHAM: Contingency staff are not expected to be made permanent.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: After five years they can be made permanent.

THE HON. THIRU P. U. SHANMUGHAM: It is not possible to do so in the case of the contingency staff. Contingency staff are always contingency staff.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Their services should be provincialised.

***மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே பால் வளர்ச்சித் துறையின் சார்பிலும், அறநிலையத் துறையின் சார்பிலும் கொண்டுவரப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகளின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தங்கள் மேலான கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மிகுந்த அக்கறையோடு சீரிய பல கருத்துக்களை எடுத்து வழங்கியவர்களுக்கு எல்லாம் நான் என்னுடைய நன்றியைத் தெரி வித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். பி.ப. 12-30

(திரு. நா. வீராசாமி தலைமை)

முதலாவதாக பால் வளர்ச்சித் துறையைப் பொறுத்தவரையில்—பால் நல்ல சத்துள்ள உணவு, குழந்தைகளின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது, நகர்ப்

[திரு. மு. கண்ணப்பன்]

புறங்கள் மட்டும் அல்ல, கிராமப் பகுதியில் உள்ள மக்களுக்கும் இந்தத் துறை மூலமாக பால் சப்ளை செய்யப்படவேண்டும் என்றார்கள்.

குறிப்பாக திரு. மணலி கந்தசாமி அவர்கள் அதிகமான அளவில் பால் கிடைக்க வேண்டுமென்றால், கால்நடைகள் தேவைப்படுகிறது, கால்நடை வளர்ச்சிக்கு ஏற்றவகையில் தீவனத்தைப் பெருக்கவும் முயற்சி செய்ய வேண்டும் என்றார்கள். கால்நடைகளுக்கு அங்கங்கே மேய்ச்சல் தரைகள், மேய்ச்சல் தரை இல்லாத பகுதிகளில் புற்களை வளர்த்து கால்நடைகளுக்குத் தீவனம் வழங்கப்படவேண்டும் என்றார்கள். அந்த அடிப்படையில் தான் கூட்டுறவு சங்கங்களுக்கு எல்லாம் உற்பத்தியை அதிகப்படுத்துகிற வகையில் அதிகப்படியான கடன் கொடுத்து பால் உற்பத்தியைப் பெருக்கவும் முறையாகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

சென்னை, மதுரை ஆகிய இடங்களில் மக்கள் தொகை அதிகமாக இருக்கிற காரணத்தினால், இந்தப் பெரிய நகரங்களின் தேவையைப் பூர்த்தி செய்கிற வகையில் இப்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த நான்கைந்து ஆண்டு புள்ளிவிவரங்களை எடுத்துப்பார்த்தால், எப்படி இந்தத் துறை அதிகமான அளவுக்கு பால் வழங்கி வருகிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

நமது மாதவரம் பால்பண்ணையின் கொள்ளளவு 50 ஆயிரம் லிட்டராக இருந்தாலும், நாள் ஒன்றுக்கு இன்றையதினம் 64 ஆயிரம் லிட்டருக்கு மேல் சேகரிக்கப்பட்டு, நகர மக்களுக்கு விநியோகம் செய்து வருகிறது. இந்தப் பண்ணையில் 1967-68-இல் 33 ஆயிரம் லிட்டர்கள் தான் விநியோகம் செய்யப்பட்டன. அன்றையதினம் நகரம் பூராவுக்குமாக 77 டெப்போக்கள் தான் இருந்தன. ஆனால் இன்றையதினம் 1971-72-ம் ஆண்டு கணக்கைப் பார்த்தால், நாள் ஒன்றுக்கு 64,600 லிட்டர் பால் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அதுமாத்திரம் அல்ல. முன்பு 77 டெப்போக்கள் தான் இருந்தன என்றால், இன்றையதினம் 200 டெப்போக்கள் மூலம் நகரத்தில் உள்ள மக்களுக்கு ஆங்காங்கே பால் சப்ளை செய்துகொண்டு வருகிறோம்.

ஆனால், சென்னைமாநகரத்தின் தேவையை நாம் முழுக்க பூர்த்தி செய்வது என்றால் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப்போல இந்தத் துறையை மேலும் பல வகையில் விஸ்தரித்தாகவேண்டும். சென்னைமாநகரின் தேவை நாள் ஒன்றுக்கு 3 லட்சம் லிட்டர் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மாதவரம் பால் பண்ணையின் கொள்ளளவு 50 ஆயிரம் லிட்டர்தான் என்பதை நாளாவட்டத்தில் மாற்றி அதை 1 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்டதாக அமைத்தாகவேண்டும். அதையும் அரசு பரிசீலனை செய்துகொண்டு வருகிறது.

மேலும் தென் சென்னையில் ஒரு பால்பண்ணையைத் துவக்கவேண்டும் என்பதாக மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். தென் சென்னையில் ஒரு பால் பண்ணை துவங்கும் திட்டத்திற்கு 55 லட்சம் ரூபாய் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. அதற்கான இடத்தை இப்போது பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள். இடம் தீர்மானமானவுடன் அந்தத் திட்டத்திற்கான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இதன்மூலம் லட்சக்கணக்கான மக்களுக்கு பால் வழங்குகிற



[திரு. மு. கண்ணப்பன்]

நிலைமையை ஏற்படுத்த முடியும் என்று நாம் எல்லாம் நம்பிக்கொண்டிருக்கிறோம்.

அதேபோல மதுரையை எடுத்துக்கொண்டால் 1967-68-இல் அன்றாடம் 10 ஆயிரம் லிட்டர் தான் விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றையதினம்—1971-72-இல்—16 ஆயிரம் லிட்டர் பாலை அந்நகர மக்களுக்கு வழங்கி வருகிறோம். அதேபோல அன்றையதினம் 34 டெப்போக்கள் தான் மதுரையில் இருந்தன என்றால் இன்றையதினம் 58 டெப்போக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இப்படி மதுரையை எடுத்துக்கொண்டாலும், சென்னை நகரை எடுத்துக்கொண்டாலும் மக்களுக்கு சௌகர்யமான முறையில் ஆங்காங்கு டெப்போக்கள் நிறுவப்பட்டு பால் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவு பால் சொசைடிகளைப் பற்றிச் சொன்னார்கள். அதை நானே குறிப்பில் கொடுத்திருக்கிறேன். நம்முடைய மாநிலத்தில் 2,539 சொசைடிகள் இருக்கின்றன என்றால், அவற்றில் நல்லமுறையில் செயல்படுவது 1,182 சொசைடிகள் தான். இவற்றிலும் லாபகரமாக நல்லமுறையில் 603 சொசைடிகள் தான் நடந்துகொண்டிருக்கின்றன. செயல்படாமல் இருக்கிற சொசைடிகள் 1,407 ஆகும். இவற்றை ஒருமைப்படுத்தி—ஒருங்கிணைந்த முறையில் செயல்படுத்துவதற்கு ஒரு திட்டம் இப்போது பரிசீலனை செய்யப்பட்டு முடிவு எடுக்கிற நிலையில் இருக்கிறோம்.

It is proposed to reorganise the existing societies into 1,107 viable units. The following guidelines are proposed to be followed for the formation of viable units :—

1. A viable unit should have a minimum initial membership of 250 producer-members which should be increased to 500 producer-members in course of time.

2. The minimum initial share capital should be Rs. 5,000 which should be increased to Rs. 10,000 in about 3 years.

3. It should cover all the villages within a radius of 5 miles from the Headquarters of the society.

4. The minimum production should be 500 litres per day.

5. All the agriculturists residing in the area of operations of the society who are willing to take up dairying as a subsidiary occupation should be enrolled as members.

6. Collection centres should be opened in all villages, where there is a minimum production of 100 litres per day.

7. The society should be managed by a person who has undergone "Co-operative Training".

இப்படிப்பட்ட முறையில் ஒருங்கிணைந்து நல்லமுறையில் செயல்படுகிற வகையில் திட்டமிட்டு நாம் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம்.

[திரு. மு. கண்ணப்பன்]

[1971 ஜூலை 27

இதேமாதிரி நகரப்புறங்கள் மட்டும் அல்ல கிராமப் புறங்களுக்கும் பால் விநியோகம் செய்ய முயற்சி செய்யவேண்டும் என்றார்கள். இப்படிப்பட்ட நகரங்களின் தேவையைப் பூர்த்தி செய்துவிட்டு தாலுக்கா தலைநகரங்கள், கிராமங்கள் ஆகியவற்றுக்கும் பால் விநியோகம் செய்ய முயற்சி செய்யலாம்.

கோவையைப் பொறுத்தவரை அங்கேயுள்ள பால் சப்ளை யூனியன் மாநிலத்திலேயே லாபகரமாக நடப்பதில் ஒன்று. அப்படிப்பட்ட சங்கங்கள் கோவையில் மட்டுமல்ல—பல்வேறு கிராமப் பகுதிகளிலும் கிளைச் சங்கங்களை ஏற்படுத்தி, உழவர் பெருமக்களுக்கு துணைத் தொழிலாகப் பயன்படுகின்ற முறையில் செயல்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில் நாடு பூராவும் இருக்கிற விவசாயிகளுக்கு விவசாயத் தொழிலோடு, பால் உற்பத்தியைத் துணைத் தொழிலாக வைத்துக்கொள்கிற அளவில் எதிர்காலத்தில் இத்துறையை விஸ்தரிக்க நம் அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக முக்கியமாகப் பேசப்பட்ட மானியம் அறநிலையங்களைப் பற்றியது. அறநிலையங்கள் பற்றியும், கோவில் நிலங்கள் பற்றியும் அரசுக்கு உறுப்பினர்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா பொறுப்பேற்ற காலத்தில் இருந்து—திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கடவுள் நம்பிக்கை கிடையாது என்று பேசினார்கள். இந்தத் தேர்தல் முடிந்த பிறகும் இவர்கள் ஆட்சிக்கு வந்தால் கோயில்கள் எல்லாம் என்ன ஆகுமோ என்று பயந்துகொண்டிருந்தார்கள்.

ஆனால், அப்படிப் பயந்தவர்கள் எல்லாம் இன்றையதினம் பேசாமல் இருக்கும் அளவிற்கு, எந்தவிதமான குறைவும் இல்லாத அளவிற்கு, எந்தவித குறைபாடும் காணாத அளவிற்கு இந்த ஐந்தாண்டுக் காலத்தில் சீரான முறையில் செம்மையான வகையில் நடவடிக்கைகளை நடத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவர். எதிர்க்கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள், "கோயில்களின் சொத்துக்கள் நல்ல முறையில் பாதுகாக்கப்படவில்லை, கோயில் திருப்பணி வேலைகள் நன்றாக நடைபெறவில்லை" என்பதாகச் சொன்னார்கள். ஏதாவது குறை சொல்ல வேண்டுமென்பதற்காக அப்படிச் சொன்னார்களோ, என்னவோ தெரியவில்லை. இங்கே வைக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பை பார்த்திருந்தால் இந்தக் குறைகளை நிச்சயமாகச் சொல்லியிருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்பது எங்கள் கொள்கையாக ஏற்றுக் கொண்டிருந்தாலும், நாட்டு மக்களின் நம்பிக்கையைப் பெற்றுவந்தவர்களாகிய நாங்கள், நாட்டு மக்கள்—அவர்கள் இந்துக்களாயிருந்தாலும், முஸ்லீம்களாயிருந்தாலும், கிறிஸ்தவர்களாயிருந்தாலும்—மத சம்பிரதாயங்களில் தலையிடாமல் ஒதுங்கியிருக்கிறோம். மத விஷயங்களில் குறுக்கிடாமல், அவர்களுக்கு எந்த வகையில் உறுதுணையாக இருக்க வேண்டுமோ அந்த வகையில் திட்டமிட்டுப் பணியாற்றிக் கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது மதச் சார்பற்ற அரசு என்ற முறையில்



[திரு. மு. கண்ணப்பன்]

1971 ஜூலை 27]

எந்தவிதமான வேற்றுமைகளும் காட்டாமல் பணியாற்றிக் கொண்டு வருகிறோம்.

இந்துமத அறக்கட்டளையைப் பொறுத்தவரையில் கடந்த காலத்தைவிட இப்போது நாம் திருப்பணிகளை நடத்துவதிலும், கோயில் வருமானத்தை அதிகப்படுத்துவதிலும் அதிக கண்ணுங்கருத்துமாக இருந்து வருகிறோம். அறநிலையத் துறையின் சார்பில் நல்ல பணிகளைச் செய்து வருகிறோம். ஆனால் இங்கே பேசிய திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களும், திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களும் பேசுகிற நேரத்தில் 'கோயில்கள் நன்கு பாதுகாக்கப்படவில்லை, சொத்துக்கள் பாதுகாக்கப்படவில்லை' என்று சொன்னார்கள். கோயில் காரியங்களில் தலையிடுவதாக வேறு சொன்னார்கள்.

நாங்கள் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர் எல்லாக் காரியங்களும் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1966-67-ல் தமிழகத்திலே இருக்கின்ற அறநிலையங்களின்மூலம் நமக்குக் கிடைத்த வருமானம் 4,14 கோடி ரூபாய் ஆகும். ஆனால் இன்றையதினம் மூன்று ஆண்டுகள் கழித்த பின்னர் காணும்போது அது 5.52 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்திருக்கிறது. மேலும், அறநிலையங்களின் வளர்ச்சியைக் கணக்கில் எடுத்துக்கொண்டாலும் 1967-ல் 9,345 ஆக அறநிலையங்கள் கணக்கில் இருந்தது. அது இன்றையதினம் 10,040 என்ற அளவிற்கு வளர்ந்திருப்பதைப் பார்க்கும்போது, நம்முடைய துறை எந்த அளவிற்கு வளர்ந்திருக்கிறது, நாம் எவ்வளவு அருமையாகக் காரியங்களைச் செய்திருக்கிறோம் என்பது நன்கு விளங்கும்.

ஆலயங்கள் நன்கு பேணி பாதுகாக்கப்படவில்லை என்று சொன்னார்கள். ஆலயங்களுக்காக வருகின்ற நிதியிலிருந்து ஆலயங்களுக்காகச் செலவிடாமல் மற்ற வேறு காரியங்களுக்குச் செலவிடுகிறார்கள் என்றெல்லாம் கூறினார்கள். 1967-ம் ஆண்டுக்கு முன் காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்த காலத்தில் கோயில் திருப்பணிக்காக 1,74,854 ரூபாய்தான் ஒதுக்கப்பட்டது. ஆனால் இன்றைக்குக் கழகம் ஆட்சி செய்து கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் 1970-ம் ஆண்டில் 6,30,624 ரூபாய் கோயில் திருப்பணிக்காக செலவு செய்திருக்கிறோம். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் செலவு செய்ததைவிட 5 லட்சம் ரூபாய் அதிகமாகச் செலவு செய்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தேர்தல் காலங்களில் எல்லாம், சுமார் ஐந்தாறு மாதங்களுக்கு முன்னால்கூட எங்களைப் பார்த்து, 'நாத்திகவாதம் பேசுகிறவர்கள்' என்றெல்லாம் குற்றம் சாட்டினார்கள். நான்கு ஆண்டுகளுக்குப் பின்னால் பார்க்கின்ற பொழுது, நாங்கள் எந்த அளவிற்கு முன்னேற்றம் செய்திருக்கிறோம், சீர்திருத்தம் செய்திருக்கிறோம் என்பது நன்கு விளங்கும். ஆண்டவனின் சொத்துக்கள், நிலங்கள் எல்லாம் பெரிய பெரிய நிலச்சுவான்கள், மிட்டாதார்களின் கையில் இருந்துகொண்டு, அவர்கள் சாப்பிட்டுக் கொண்டு வந்ததை நாங்கள் கண்டுபிடித்திருக்கிறோம். கோயில்களின் உபரி நிதியிலிருந்து ஏராளமான ஆக்கப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. கோயில்களின் உபரி நிதியிலிருந்து கோயில் திருப்பணி வேலைக்காக 1970-ம் ஆண்டிலே 6,30,624 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1970-ம் ஆண்டில்

[திரு. மு. கண்ணப்பன்]

[1971 ஜூலை 27

திருப்பணி வேலைகளுக்காக மட்டும் 85 கோயில் மற்றும் அறநிலையங்களின் உபரிநிதி 62,22,263 ரூபாய் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உபரி நிதியிலிருந்து ஏழை, எளியவர்களுக்கு—' ஆண்டவனால் படைக்கப்பட்ட ' அனாதைகளுக்கு—சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டோர், முதலியவர்களுக்கு வாழ்க்கை அளிப்பதற்கு இந்தத் துறையின் மூலமாக நல்ல காரியங்களைச் செய்தாக வேண்டுமென்கிற நோக்கத்தோடு கல்வி, சுகாதாரம், மருத்துவம் போன்றவற்றில் சிறப்பான காரியங்களைச் செய்திருக்கிறோம். குறிப்பாகக் கல்வித் துறையில் 1967-ல் 5,61,552 ரூபாய் கல்விக்காகச் செலவு செய்திருந்தார்கள். ஆனால் இன்றையதினம் நாங்கள் செலவழித்தது 28,39,635 ரூபாய் கல்விக்காக செலவு செய்து, ஏழை, எளிய குழந்தைகளுக்குப் பலன் தருகின்ற வகையில் செய்திருக்கிறோம் என்பதை உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அதுமட்டுமல்ல, தாய்-தந்தையற்ற அனாதையாக வீதிகளிலே பிச்சை எடுத்துக்கொண்டு, ஆண்டவனைப் பார்த்துத்தான் அவர்களுக்குச் சோறு படைக்க வேண்டுமென்கிற நிலையில் உள்ள குழந்தைகள், அனாதை ஏழைக் குழந்தைகளுக்கு அனாதை இல்லங்களை ஏற்படுத்தி, அவர்களுக்குப் புகலிடம் தந்திருக்கிறோம். அனாதை இல்லங்களுக்காக 1967-லே காங்கிரஸ் ஆட்சி செய்த காலத்தில் 1,04,512 ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் இன்றையதினம் அனாதை இல்லங்களுக்காக 1,09,868 ரூபாய் செலவு செய்கிறோம்.

அடுத்தபடியாக மருத்துவத்தை எடுத்துக்கொண்டால், அது சித்த வைத்தியமாக இருந்தாலும், பொது மருத்துவமாக இருந்தாலும் முன்னைவிட அதிக அளவில் முன்னேற்றம் அடையச் செய்திருக்கிறோம். 1967-ல் மருத்துவத்திற்கு 1 ரூபாய் கூட கொடுக்கப்படவில்லை. ஆனால் இன்றைக்கு நாம் 1,09,000 ரூபாய் மருத்துவ மனை கட்டுவதற்கு ஒதுக்கித் தந்திருக்கிறோம்.

அடுத்தபடியாக, ஏழைக் குழந்தைகளுக்கு பராமரிப்பு இல்லங்கள் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. சுமார் நான்கு, ஐந்து வயதுடைய குழந்தைகளுடைய பெற்றோர்கள் கூலி வேலைக்குச் செல்லுங்கால், தங்கள் குழந்தைகளை அந்தப் பள்ளிகளிலே கொண்டுவந்துவிட்டு, பின்பு மாலையில் வேலையிலிருந்து திரும்பும்போது அழைத்துக் கொண்டு வரும்படியான முறையில் இந்த பராமரிப்பு இல்லங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. 1967-ல் ஒன்றும் கிடையாது. ஆனால் 1970-ல் நாம் நான்கு குழந்தை இல்லங்களைக் கோயில்களின்மூலம் நடத்தி வருகிறோம்.

நாம் மேலும், நான்கு கலைக் கல்லூரிகளையும், இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி இரண்டும், உயர்நிலைப் பள்ளி 8-ம் நடத்தி வருகிறோம். கடந்த வாரத்தில் மருதமலை தேவஸ்தானத்தார் சார்பில் புதிதாக ஒரு உயர்நிலைப் பள்ளி திறந்து வைக்கப்பட்டது. ஆக மொத்தம் இப்போது 9 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. இதுதவிர, வேத ஆகம பாடசாலைகள் நான்கினை நடத்தி வருகிறோம். தமிழ்நாட்டின் கலாசாரத் துறையில் இசைக்கலையான நாதசுரப் பள்ளி இரண்டு நடத்தி வருகிறோம்.



[திரு. மு. கண்ணப்பன்]

1971 ஜூலை 27]

அதோடு 8 அனாதை இல்லங்களையும் சித்த வைத்தியத்தில் 11 மருத்துவ மனைகளையும் நடத்திக்கொண்டு வருகிறோம். சமுதாயத்தில் மிகத் தாழ்த்தப்பட்டவர்கள், பிச்சைக்காரர்கள், குஷ்டரோகிகள் ஆகியோருக்கு மறுவாழ்வு தர வேண்டுமென்கிற வகையில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அருமையான ஒரு திட்டத்தை உருவாக்கிய நேரத்தில் தமிழ்நாட்டுக் கோயில்கள் தங்களுடைய உபரி நிதியிலிருந்து 1½ லட்சம் ரூபாய்க்கு மேலாக நிதி வழங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நாட்டு ஏழைகளுக்கு, பிச்சைக்காரர்களுக்கு, குஷ்டரோகிகளுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டுமென்கிற நோக்கத்தோடு முதல் தவணையாக இந்தத் தொகையை அளித்திருக்கிறோம்.

அடுத்தபடியாக, ஏழைக் குழந்தைகளுக்கு நோட்டுப் புத்தகங்கள் வாங்குவதற்கும், சிலேட்டுகள் வாங்குவதற்கும் காசில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட குழந்தைகளுக்கு கடந்த வாரத்தில் நாம் 10 ஆயிரம் நோட்டுப் புத்தகங்களையும், 1,000 சிலேட்டுகளையும் மாண்புமிகு நாவலர் அவர்களின் கையிலே தந்திருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட காரியங்களையெல்லாம் ஏழை எளியவர்களுக்குப் பயன்படுகின்ற காரியங்களை, சமுதாயத்திற்குப் பயன்படுகின்ற காரியங்களையெல்லாம் நாம் செய்துகொண்டு வருகிறோம். சமுதாயத் துறையிலே ஏழை எளிய மக்களுக்குப் பயன்படுகிற காரியங்களை நாம் ஆற்றுவதிலே எந்தவிதமான தவறும் இருப்பதாக யாரும் சுட்டிக்காட்ட முடியாது. உலகத்தைப் படைத்த ஆண்டவன்கூட எல்லா ஜீவராசிகளும் நலமாக இருக்கவேண்டுமென்றுதான் விரும்புகிறார். ஏன் இப்படிப்பட்ட காரியங்களுக்காகப் பணத்தைச் செலவழிக்கிறார்கள் என்று கேட்கிறார்கள், ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்கிறோம் என்ற நல்ல தத்துவத்தின் அடிப்படையிலேதான் நாம் அப்படிப்பட்ட நல்ல காரியங்களைச் செய்துகொண்டு வருகிறோம். கோயில் சொத்துக்கள், நிலங்கள் இவற்றையெல்லாம் தனியார்கள் அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அதையெல்லாம் கண்டுபிடிப்பதற்காக ஒரு சிறப்பு அதிகாரியும் அவருக்குக் கீழே பல அலுவலர்களையும் போட்டு யார் யார் அம்மாதிரித் தனிப்பட்டவர்கள் கோயில் நிலங்களை அனுபவித்துக் கொண்டுவருகிறார்கள் என்று கண்டுபிடித்து அதன்மூலம் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அவற்றையெல்லாம் இந்தத் துறையின் கீழே கொண்டுவருவதற்கு நாம் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறோம். அதற்காக நாம் சிறப்பு அதிகாரியும் பல துணை அதிகாரிகளையும் போட்டு அந்த வகையிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். நிலமற்ற விவசாயிகளுக்குக் கோயில் நிலங்களைத் தரவேண்டுமென்று சொன்னார்கள். கோயில் நிலங்களுக்கு உச்சவரம்பு கட்டவேண்டுமென்று சொன்னார்கள். நில உச்சவரம்புச் சட்டத்திலே ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருந்த விதிவிலக்குகளைப் பற்றி என்ன செய்யவேண்டுமென்பதை ஆராய்வதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவிலே நல்ல முடிவை எடுப்பார்கள் என்று நாமெல்லாம் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறோம்.

[திரு. மு. கண்ணப்பன்]

[1971 ஜூலை 27

குறிப்பாக தமிழ் அரச்சனை பற்றிச் சொன்னார்கள். எந்த அளவுக்கு தமிழ் மக்கள் அதனை ஆர்வத்தோடும் உற்சாகத்தோடும் வரவேற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். யாரோ சிலர் பத்திரிகையிலே எழுதினார்கள், யாரோ சில சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அதை எதிர்த்தார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். இப்படிப்பட்ட காரியத்தைத் துவக்கி வைத்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழக அரசு அல்ல. பல ஆண்டுகளுக்கு முன்பாகவே மதிப்பிற்குரிய குன்றக்குடி அடிகளார் அவர்கள் கோயம்புத்தூரிலே தமிழ் அர்ச்சனையைத் துவங்கி வைத்தார்கள். தமிழ் நாட்டிலே தமிழிலே அர்ச்சனை செய்ய வேண்டும், தமிழர்கள் எல்லாம் முருகனைக் கடவுளாக ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள், தமிழ் இனிமையான மொழி, எனவே அதிலே அர்ச்சனை நடைபெறவேண்டும், தமிழிலே இருக்கின்ற நல்ல பாடல்கள் மூலமாக அர்ச்சனைகள் செய்வதற்கு முயலவேண்டுமென்ற முறையிலே நம்முடைய அடிகளார் அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே அந்த நல்ல காரியத்தைச் செய்து வைத்தார்கள். அதைப் பின்பற்றித் தான் நாம் தொடர்ந்து அதனைச் செய்துகொண்டு வருகிறோம். கிட்டத்தட்ட 112 கோயில்களிலே தமிழ் அர்ச்சனை முறை நடைபெற்றுக் கொண்டுவருகிறது. இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை தமிழகத்திலே உள்ள அத்தனை கோயில்களிலும் தமிழில் அர்ச்சனை செய்தாக வேண்டுமென்ற நோக்கத்தின்படி மக்களுடைய விருப்பத்தின்படி, அறங்காவலர்களுடைய விருப்பத்தின்படி அந்தந்த நிர்வாகிகளை நாம் கேட்டுக் கொண்டோம். அறங்காவலர்களைக் கேட்டுக் கொண்டோம். அப்படி நாம் கேட்டுக் கொண்டதற்கிணங்க நேற்றுவரை அதாவது 26—7—1971 வரையில் 1,341 கோயில்களிலே தமிழில் அர்ச்சனை நடைபெற்றுக் கொண்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே தான் தெரிவித்துக் கொள்கிறேன். வருகின்ற ஆகஸ்டு மாதம் 15-ம் தேதிக்குள் தமிழகத்திலே உள்ள எல்லா ஆலயங்களிலும் தமிழிலே அர்ச்சனை நடைபெற வேண்டுமென்று நாம் வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். சம்ஸ்கிருதம் பற்றிச் சொன்னார்கள். சம்ஸ்கிருதம் வேண்டும், தமிழ் வேண்டாம் என்று சொல்கிறவர்களைப்பற்றி நமக்குக கவலையில்லை. சம்ஸ்கிருதத்தில்தான் விருப்பம், தமிழிலே விருப்பம் இல்லை என்று சொன்னால் நாம் அதற்குத் தடையாக இல்லை. யார் மீதும் தமிழ் அர்ச்சனையைத் திணிக்கவேண்டுமென்ற முறையிலே நாம் செய்யவில்லை. தமிழிலே அர்ச்சனை நடைபெற வேண்டுமென்ற முறையிலே நாம் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறோம்.

தமிழ்நாட்டில் உள்ள, தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ள இடங்களைச் சீர்படுத்துவதற்கும், ராஜராஜன் சிலையை வேறு இடத்திலே வைப்பதற்கும் நாம் மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறோம், ஆனால் இன்றுவரை பதில் இல்லை. பல கோயில்கள் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின்கீழ் இருப்பவை பழுதடைந்து இருக்கின்றன, அவற்றைச் சீர்படுத்துவதற்கும், தமிழ் மன்னனுடைய சிலையை வேறு இடத்திலே மாற்றிவைப்பதற்கும் மத்திய அரசாங்கத்தின் ஒப்புதல் அளிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம், அவர்களுடைய பதிலை நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இறுதியாக அறநிலைத் துறையில் புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கிற திட்டங்களைச் சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்ளலாம் என்று



[திரு. மு. கண்ணப்பன்]

1971 ஜூலை 27]

கருதுகிறேன். கோயில்களுடைய உபரி நிதியில் இருந்து ஏழை எளியவர்களுக்கு பயன்படுகின்றவகையிலே இதற்கு முன் இல்லாத முறையிலே செவிடர்களுக்காகவும், கண்ணற்றோர்களுக்காகவும், ஊமைகளுக்காகவும் செலவழிக்க முடிவு செய்திருக்கிறோம். அப்படிப்பட்ட குழந்தைகளைப் பேணுகின்ற வகையிலே பழனி முருகன் கோயில்சார்பிலும், சமயபுரம் மாரியம்மன் கோயில் சார்பிலும் இரண்டு பள்ளிகளைத் துவக்க ஏற்பாடு செய்கிறோம் என்ற செய்தியினை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதேமாதிரி இரண்டு லட்சத்திற்கு மேல் வருமானம் எந்த எந்தக் கோயில்களிலிருந்து வருகின்றதோ அந்தக் கோயில்களின் நிதியிலிருந்து அனாதை இல்லங்கள் 50 ஏற்படுத்த முடிவு செய்திருக்கிறோம். அதற்கான காரியங்களைச் செய்வதிலே இந்தத் துறை ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நல்ல காரியங்களைச் செய்துகொண்டு இருக்கிறோம்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் இவை அத்தனையையும் பொது மக்களிடத்திலே நல்ல முறையிலே எடுத்துச் சொல்லி மேலும் இந்தத் துறையிலே சீர்திருத்தம் ஏற்படுகின்ற வகையிலே ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு பல்வேறு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள், அவர்கள் எல்லாம் நல்ல ஆலோசனைகளைச் சொல்வதற்காகத்தான் கொடுத்திருக்கிறார்கள் என்று நான் என்னைப் பொறுத்தவரையில் நினைக்கிறேன். அவைகளையெல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த மானியங்களை ஏகமனதாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் இத்துடன் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு.

Demand No. 8-A, Milk Supply Schemes.

திருவாளர்கள் ஜேம்ஸ், ஏ. சுப்பிரமணியம், டாக்டர் ஹாண்டே ஆகியவர்கள் அவையில் இல்லாததால் கோரிக்கை 8- க்கு அவர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திரு. ஆ. கு. சுப்பையா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 4,07,86,800 under Demand No. 8-A Milk Supply Schemes."

The Demand was put and carried and the Grant was made.

கோரிக்கை 9- க்கு திருவாளர்கள் ஆர். பொன்னப்ப நாடார், கே. டி. கே. தங்கமணி ஆகியவர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

திரு. ஏ. சுப்பிரமணியம், டாக்டர் ஹாண்டே ஆகியவர்கள் அவையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

Mr. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 52,72,400 under Demand 9-A—Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959".

The Demand was put and carried and the Grant was made.

*(இ) நிதிக் கோரிக்கை எண் 46—அரசு வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு.*

Mr. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 20,96,29,000 under Demand No. 46—Capital outlay on Schemes of Government Trading".

The Demand was put and carried and the Grant was made.

*3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.*

*(ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு.*

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

*4. அரசினர் சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி.*

*(அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு.*

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவை இப்பேரவை முன் அறிமுகப் படுத்த அனுமதி கோருகிறேன்.*

*தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.*

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இச்சட்டமுன்வடிவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்டமுன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.*

*பேரவையின் அலுவல்கள் இன்று இத்துடன் முடிவுற்றன. மீண்டும் பேரவை*
பி.ப. 1-00 *நாளைக் காலை 9 மணிக்குக் கூடும். வணக்கம்.*

*பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.*

*(5) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.*

*A. Statutory Rules and Orders.*

180. Notification issued with Roc. No. 175547/70-E1, dated the 3rd April 1971, in regard to exclusion of Avaniapuram area

@ 94-98-ம் பக்கங்களில் நான்காம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



for constitution of a separate panchayat. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

*B. Reports, Notifications and Other Papers.*

181. Erratum issued with Roc. No. 196292/69-P1, dated the 4th March 1970 to the notification relating to bifurcation of Uthukadu Panchayat of Chingleput district.

182. Erratum issued with Roc. No. 181290/69-P1, dated the 6th March 1970 to the notification relating to exclusion of Maliakkadu area for constitution of a separate panchayat.

183. Notification issued with G.O. Ms. No. 161, Labour, dated the 10th February 1971, in regard to certain amendments to the Tamil Nadu Factories Rules, 1950 as subsequently amended.

@ 184. Policy note on Demand No. 25—Welfare of Schedule Tribes and Castes and Other Backward Classes 1971-72 (Tamil)

@ 185. Policy note on Dairy Development Department 1971-72 (English and Tamil).

@ 186. Policy note on Demand No. 9-A—Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 (English and Tamil).

@ 187. Policy note on Demand No. 46—Capital outlay on Schemes of Government Trading (Food) (English and Tamil).

*இணைப்பு 1.*

*[ 20-ம் பக்கத்தில் 477-ம் எண்ணுள்ள வினாவிற்குரிய விடையைக் காண்க.]*

*(அ) 1971-72-ல் அரிசன பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கீழ்க்கண்ட நான்கு இடங்களில் தட்டச்சு, சுருக்கெழுத்து ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படலாம்.*

*கீழ்க்கண்டதில் பயிற்சி அளிக்கப்படவிருக்கின்ற அரிசன பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை :—*

| | தட்டச்சு | சுருக்கெழுத்து |
|---|---|---|
| 1. சென்னைமாநகர் | 100 | 50 |
| 2. மதுரை | 50 | 25 |
| 3. திருச்சிராப்பள்ளி | 50 | 25 |
| 4. கோயம்புத்தூர் | 50 | 25 |
| மொத்தம் | 250 | 125 |

@ Despatched to Members on 24th July 1971.

மேற்சொன்ன ஒதுக்கீட்டில் ஏற்படும் பற்றுக்குறையைப் போக்க, பயிற்சிக்கு மனுச் செய்துள்ளவர்களை ஒரு மாவட்டத்திலிருந்து தேவையுள்ள மற்றொரு மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கும் அதிகாரம் அரிசன நலத்துறை இயக்குநருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) மேலே பாரா (அ)-வில் குறிப்பிடப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை தட்டச்சு, சுருக்கெழுத்து இவற்றில் மேல்நிலை, கீழ்நிலைத் தேர்வுகளுக்கு சேர்த்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

(இ) தட்டச்சு கீழ்நிலைத் தேர்வுக்குப் பயிற்சிக் காலம் 10 திங்களாகவும், தட்டச்சு மேல்நிலைத் தேர்வுக்கு (கீழ்நிலைத் தேர்வில் தேறிய மாணவர்களுக்கு) பயிற்சிக் காலம் ஆறு திங்களாகவும், சுருக்கெழுத்தில் கீழ்நிலை, மேல்நிலைத் தேர்வுகளுக்குப் பயிற்சிக் காலம் ஓர் ஆண்டாகவும் இருக்கலாம்.

(ஈ) கீழ்நிலைத் தேர்வில் ஒரு முறை தோல்வி அடையவும், மேல்நிலைத் தேர்வில் இருமுறை தோல்வி அடையவும் இரு படிப்புகளிலும் அனுமதிக்கலாம்.

(உ) அரிசன பழங்குடி வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்கள் (அ) பாராவில் சொல்லப்பட்ட நான்கு நகரங்களில் அங்கீகாரம் பெற்ற வணிகக் கல்வி நிறுவனங்களில் சேர்ந்து தட்டச்சு, சுருக்கெழுத்து ஆகியவற்றில் பயிற்சி பெறலாம். இது தொடர்பான எல்லாச் செலவுகளையும் அரசு ஏற்றுக் கொள்ளும்.

(ஊ) மேலே பாரா (அ)-வில் குறிப்பிட்டுள்ள நான்கு நகரங்களிலிருந்து ஐந்து மைல் தொலைவிற்கு மேல் உள்ள இடங்களில் வசிக்கின்றவர்களும் அந்நான்கு நகரங்களிலுள்ள வணிகக் கல்வி நிறுவனங்களில் சேர்ந்து படிப்பவர்களுமான மாணவர்களுக்கு மட்டும் அந்நகரங்களிலுள்ள அரிசன நல விடுதிகளில் இலவச உணவும் உறையும் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

(எ) சுருக்கெழுத்து, தட்டச்சு ஆகியவற்றில் தேர்ச்சி பெற்ற அரிசன பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் பற்றுக்குறையை கருத்திற் கொண்டு பெற்றோர்களது/காப்பாளர்களது ஆண்டு வருமான வரம்பு வலியுறுத்தப்படுவதில்லை.

(ஏ) தேர்வின் இரண்டு படிப்புகளிலும் முதல் தடவையிலே தேர்வு பெறும் ஒவ்வொரு மாணவருக்கும் கீழ்க்கண்ட வீதத்தில் பரிசுத் தொகை வழங்கலாம் :—

| | ரூ. |
|---|---|
| தட்டச்சு கீழ் நிலைத் தேர்வு | 50 |
| தட்டச்சு மேல் நிலைத் தேர்வு | 100 |
| சுருக்கெழுத்து கீழ் நிலைத் தேர்வு | 75 |
| சுருக்கெழுத்து மேல் நிலைத் தேர்வு | 150 |

(ஐ) அரிசனங்கள், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களைத் தங்கள் நிறுவனங்களில் சேர்த்துக் கொள்ளும்போது அவற்றின் தலைவர்கள் அம்மாணவர்களின் பள்ளி இறுதிச் சான்றிதழைப் பார்த்து அவர்கள் அரிசன, பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவர்கள்தாமா என்பதை உறுதிப் படுத்திக் கொள்ளவேண்டும்.





(ஒ) அத்தகைய மாணவர்களைப் பயிற்சிக்குச் சேர்த்துக் கொண்டவுடன் அந் நிறுவனங்களின் தலைவர்கள், ஒவ்வொரு மாணவரின் பெயர் (அரிசன இனத்தைச் சேர்ந்தவரா அல்லது பழங்குடியினரா என்கிற) வகுப்பு, பயிற்சிக்காகத் தேர்ந்தெடுத்துள்ள பாடம், பயிற்சிக் கால அளவு, பயிற்சித் தொடர்பாக ஆகும் செலவு குறித்த விவரம் ஆகிய விவரங்களைத் தொடர்புள்ள மாவட்ட நல அதிகாரிக்கு அனுப்ப வேண்டும். இந்த விவரங்கள் கிடைக்கப் பெற்றவுடன், மாவட்ட நல அதிகாரி பயிற்சி பெறும் மாணவருக்கான முதல் மாதத்திற்கு உரிய பணத்தை அப்பள்ளித் தலைவருக்கு ஒரு வாரம் அல்லது பத்து நாட்களில் கிடைக்கும் வகையில் அனுப்புவதற்கு ஏற்பாடு செய்வார்.

(ஓ) இரண்டாவது திங்கள் முதல்கொண்டு பயிற்சி பெறும் மாணவர்கள் பயிற்சியில் காட்டும் முன்னேற்றம், அவர்கள் அந்தப் பயிற்சிப் பள்ளியில் தொடர்ந்து பயிற்சி பெறுவது பற்றிய சான்றிதழ் ஒன்றை அதன் தலைவர் மாவட்ட நல அதிகாரிக்கு அனுப்பி, சேரவேண்டிய கட்டணத் தொகையை கோர வேண்டும். மாவட்ட நல அதிகாரி அத்தொகையை ஒரு வாரம் அல்லது 10 நாட்களுக்குள் வழங்குவார்.

பயிற்சி பெறுபவர்களுக்குத் தேவையான எழுதுபொருள், சுருக்கெழுத்துப் புத்தகங்கள் வாங்குவதற்கு உரிய பணத்தையும் அப்பள்ளிகளின் தலைவர்கள் மாவட்ட நல அதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அவர்களுக்குத் தேவையான எழுதுபொருள், சுருக்கெழுத்துப் புத்தகங்களை வாங்கி பள்ளித் தலைவர்கள் வழங்க வேண்டும்.

உரிய படிப்பில், கீழ்நிலை, மேல்நிலைத் தேர்வுகளுக்குச் செல்லும் மாணவர்கள் கட்ட வேண்டிய தேர்வுக் கட்டணங்களையும் அப்பள்ளித் தலைவர்கள் உரிய நேரத்தில் மாவட்ட நல அதிகாரியிடமிருந்து பெற்று இதற்காகப் பயன் படுத்தலாம்.

தட்டச்சு, சுருக்கெழுத்து (கீழ்நிலை, மேல்நிலை) பயிற்சி பெறும் ஒவ்வொரு மாணவருக்கும் மாநில நிதியிலிருந்து பெறவேண்டிய மாதக் கட்டணங்கள், தனிக் கட்டணங்கள், அரசினர் தேர்வுக் கட்டணங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :—

தட்டச்சு—கீழ்நிலை—10 மாதம்—

| | | ரூ. காசு. |
|---|---|---|
| 1. | மாதக் கட்டணங்கள் ரூ. 6×10 | 60·00 |
| 2. | அரசுத் தேர்வுக் கட்டணங்கள் | 8·00 |
| 3. | தனியான பயிற்சி, தட்டச்சுப்பொறி வாடகை ஆகியவை உள்பட நிறுவனத்துக்கான தனிக் கட்டணங்கள். | 27·00 |
| 4. | நிறுவனத்துக்கான தட்டச்சுப் பொறி கல்வி தேர்வு கட்டணம். | 30.00 |
| 5. | எழுதுபொருள் (மாதம் ஒன்றிற்கு ரூ. 5 வீதம்). | 50·00 |
| | மொத்தம் .. | 175·00 |

தட்டச்சு—மேல்நிலை—கீழ்நிலைக்குப் பிறகு 6 மாதம்—

| | | ரூ. காசு. |
|---|---|---|
| 1. | மாதக் கட்டணம் ரூ. 6×6 .. | 36·00 |
| 2. | அரசுத் தேர்வுக் கட்டணங்கள். .. | 14·00 |
| 3. | தனியான பயிற்சி, தட்டச்சுப்பொறி வாடகை உள்பட நிறுவனங்களுக்கான தனிக் கட்டணங்கள். | 31·00 |
| 4. | பள்ளிக்கான தட்டச்சுப் பொறிக் கல்வித் தேர்வுக் கட்டணம். | 40·00 |
| 5. | எழுதுபொருள் (மாதம் ஒன்றிற்கு ரூ. 5 வீதம்) | 30·00 |
| | மொத்தம் .. | 151·00 |

சுருக்கெழுத்து—கீழ்நிலை—ஓர் ஆண்டு—

| | | ரூ. காசு. |
|---|---|---|
| 1. | மாதக் கட்டணம் ரூ. 6×12 .. .. | 72·00 |
| 2. | அரசுத் தேர்வுக் கட்டணம் .. .. | 8·00 |
| 3. | தனிப் பயிற்சி அளிப்பதற்கான தனிக் கட்டணம். | 15·00 |
| 4. | எழுதுபொருள் (மாதம் ஒன்றிற்கு ரூ. 10 வீதம். | 120·00 |
| | மொத்தம் .. | 215·00 |

சுருக்கெழுத்து—மேல்நிலை—ஓர் ஆண்டு—

| | | ரூ. காசு. |
|---|---|---|
| 1. | மாதக் கட்டணம் ரூ. 6×12 .. .. | 72·00 |
| 2. | அரசுத் தேர்வுக் கட்டணம் .. .. | 14·00 |
| 3. | தனிப்பயிற்சிக்கான தனிக் கட்டணம் .. | 25·00 |
| 4. | எழுதுபொருள் (மாதம் ஒன்றிற்கு ரூ. 10 வீதம்). | 120·00 |
| | மொத்தம் | 231.00 |

### இணைப்பு 2.

[35-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.]

**மானியக் கோரிக்கை 8-A பால் வழங்கும் திட்டங்கள்.**

**1971-72- ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு—ரூ. 4,07,86,800.**

**பால் பண்ணை வளர்ச்சித் துறை.**

கொள்கை விளக்கக் குறிப்பு.

பால் வளத்துறையின் தலையாய பணி இத்துறையைச் சேர்ந்த சென்னையிலும், மதுரையிலும் நிறுவப்பட்டுள்ள பால் வழங்குத் திட்டங்கள் இரண்டினையும் செவ்விய முறையில் நடத்துவதேயாகும். சென்னை, மதுரை மாநகர மக்களின் தேவைகளை நிறைவு செய்வதே இவற்றின் நோக்கமாகும். இதற்காகக்



கிராமப்புறங்களிலிருந்து பால் சேகரிக்கப்படுகிறது. இதனால் கிராமத்தில் உள்ள குடியானவர்களுக்கு வருவாய் கிடைக்க வழி ஏற்படுகிறது, தனிப்பட்ட உழவர்களிடமிருந்து ஓரளவுக்கு நேரடியாக பால் வரப்பெறினும், பால் சேகரிப்புப்பணி பெரும்பாலும் கூட்டுறவு சங்கங்களின் மூலமாகவே நடைபெறுகிறது. பால் வளத்துறையின் பொறுப்பு அதிகாரி, பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளராகவும் செயல்படுகிறார். இம்முறையில் துறைசார்ந்த நிலையங்களுக்குப் பால் வழங்குவதற்காக மட்டுமின்றி உள்ளூர் மக்களின் தேவையை நிறைவு செய்வதற்காகவும் பால் சேகரிப்பு விற்பனைப் பணியில் ஈடுபட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் நடவடிக்கைகளை முறைப்படுத்துகிறார். மேலும் பால் தக்க முறையில் கையாளப்பட்டு அது பிற இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதற்காகவும், பால் சேகரிப்புப்பணியைச் சீரிய முறையில் அமைப்பதற்காகவுமான வசதிகள் குறித்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவி வழங்க வகை செய்யும் திட்டங்களையும் நிர்வகிக்கிறார். பால் வளத்தைப் பெருக்குவது என்பது கால்நடை வளர்ப்புத் துறையின் முதன்மையான பொறுப்பாகும். எனினும் பால் விற்பனையைப் பொறுத்த வரையில் இப்பணி பால்பண்ணை வளர்ச்சித் துறையினால் பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கவனிக்கப்பட்டு வருகிறது. தரமான மாடுகளை வாங்குவதற்காகக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குக் கடன்கள் வழங்கப்படுகின்றன. பால் பண்ணைக்கான கட்டிடங்கள் கட்டுவதற்கும், வண்டிகள் வாங்குவதற்கும், தீவனப்பயிர்களை விளைவிப்பதற்கும், பாலைக் கையாள்வதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவி அளிக்கப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களின் நிதி நிலையை வலுப்படுத்துவதற்காக அரசு அவற்றில் பங்கு மூலதன முதலீடு செய்கிறது.

1971-72-ம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூபாய் 54.02 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது. பால் பண்ணைகளை விரிவுபடுத்துவதற்காக ரூபாய் 10.50 லட்சமும், மாடுகள் வாங்குவதற்கான கடன்கள் வகையில் ரூ. 22 லட்சமும், கூட்டுறவுச் சங்கங்கள் வளர்ச்சிக்காக ரூபாய் 12.50 லட்சமும், கால்நடைத் தீவனத்தயாரிப்பு போன்ற பிற திட்டங்களுக்காக ரூ. 9.02 லட்சமும் இதில் அடங்கும்.

துறையைச் சார்ந்த திட்டப்பணிகளிலிருந்து கிடைக்கும் பால் அளவு பெருகிக்கொண்டே வருகிறது. 1969-70-ம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு 49,480 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டிருக்க, 1970-71-ம் ஆண்டில் இப்பாலின் அளவு 57,600 லிட்டராகப் பெருகியுள்ளது. மதுரையில் 1969-70-ம் ஆண்டில் நாளொன்றுக்கு 13,170 லிட்டர் வழங்கப்பட்டிருக்க, 1970-71-ம் ஆண்டில் வழங்கப்பட்ட பாலின் அளவு நாளொன்றுக்கு 17,800 லிட்டராகப் பெருகியது. உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் நிறைவேற்றப்பட்டுவரும் பால் வளமுனைப்புத் திட்டத்தின் ( Operation flood ) காரணமாகவே சென்னை பால் பண்ணையில் பால் வளம் பெருகியது எனலாம். பால் பண்ணையின் பால் வழங்குதிறனைப் பெருக்குவதே இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். உலக உணவுத் திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் ஆடையெடுக்கப்பட்ட பால்மாவு, தூய வெண்ணெய் ( Butter oil ) ஆகியவற்றைக் கொண்டு முதற்கண் பால் வழங்கு நிலை மேம்படுத்தப்படுகின்றது. பின்னர் இவற்றிற்குப் பதிலாக, உள்ளூரிலிருந்து பெறப்படும் பாலைக் கொண்டு பால் வழங்கு நிலை நிலைப்படுத்தப்படும். சென்னை மாநகரில் மாடுகளை வைத்துவரும் பழக்கத்தைக் குறைப்பதே

இதன் நோக்கமாகும். ஏனெனில், மாடுகளை இங்கு வைத்துவருவதனால் சுகாதாரத்திற்குக் கேடு விளைகிறது. தவிர, உரியகாலத்தில் இனப் பெருக்கத்திற்கு வகை செய்யத் தவறுதல், இளங்கன்றுகளை நல்லமுறையில் பேணிவரத் தவறுதல் போன்ற கால்நடை வளர்ச்சிக்குத் தடையாக உள்ள நடைமுறைகள் கையாளப்படுவதற்கும் இது வழிகோலுகின்றது. மாநகரில் மாடுகளை வைத்து வருபவர்களுக்கு அவற்றை கிராமப்பகுதிகளிலுள்ள பண்ணை களுக்கு ஓட்டிச் செல்ல வசதிகள் செய்து கொடுக்கப்படும். இங்கு மாடுகளை மிகச் சிக்கனமான முறையில் பண்ணைகளில் பேணிவரலாம். பால் பண்ணையில் கிடைக்கும் ஆதாயம் பால் விற்பனையிலிருந்து மட்டும் கிடைப்பதல்ல. கறவைகளின் எண்ணிக்கையைப் பெருக்குவதன் மூலமும் சிறந்த இனப் பெருக்க நடைமுறைகளை மேற்கொள்ளுவதனாலும் இந்த ஆதாயம் கிடைக்கிறது. உற்பத்தித் திறனை மேம்படுத்தினால்தான் பால் வளம் தொடர்ந்து பெருக முடியும். இதற்கு மாடுகளின் தரத்தை உயர்த்த வேண்டும். பால் பண்ணைத் தொழிலை முறையாக மேற்கொள்ள முன்வரும் உழவர்களுக்கு இனப்பெருக்க வசதிகள், கால்நடை மருத்துவம், கால்நடைத் தீவனம், பண்ணை நிர்வாகம் குறித்து ஆலோசனை, தீவனப்பயிர் வளர்ப்பதற்கான உதவி போன்ற பலவகைகளில் அவசியமான தேவைப்பொருள்களை வழங்குவதற்கு வகை செய்யும் திட்டமொன்று குறிப்பிட்ட பகுதிகளில் நிறைவேற்றப்படும். இளங் கன்றுகளைக் கவனமாக பேணிவருவது இத்திட்டத்தின் முக்கியக் கூறு ஆகும். சென்னைமாநகரில் விலைவாசி மிகவும் அதிகமாக இருப்பதால், மாடு களின் சொந்தக்காரர்கள் கன்றுகளை வளர்ப்பதிலே அதிகச் செலவிட விருப்ப மில்லாமல் இருக்கலாம். இதன் காரணமாகவே சென்னை மாநகரில் மாடுகளை வைத்து வருவதற்கு ஊக்கம் அளிக்கப்படுவதில்லை.

இத் திட்டத்தின் முதல் படியாக மாதவரம் பால்பண்ணை விரிவுபடுத்தப் படும். 1,00,000 லிட்டர் பால் வழங்கக் கூடிய அளவுக்கு இப்பண்ணையின் திறனைப் பெருக்குவதுதான் இதன் நோக்கமாகும். உலக உணவு திட்ட உதவியின்கீழ் வழங்கப்படும் ஆடை நீக்கப்பட்ட பால்மாவு, தூய வெண்ணெய் ஆகியவற்றுடன் சேர்த்தால் சென்னைமாநகரின் பால் வழங்கு நிலையை மேம்படுத்த முடியும். இரண்டாவது பண்ணையை ஏற்படுத்துவதன்மூலம் பால் வழங்கு நிலையை மேலும் மேம்படுத்தலாம். வேலூர் அருகே சாத்துவாச்சேரியில் கிளைப் பால் பண்ணையொன்றும் நிறுவப்பட்டு வருகின்றது.

ஆடையெடுக்கப்பட்ட பால்மாவு, தூய வெண்ணெய் ஆகியவற்றைப் பயன் படுத்துவதனால் கிடைக்கும் நிதியிலிருந்து இத் திட்டங்களுக்கான நிதி வசதி கிட்டும். இதற்கான உதவித் தொகை 30 சத வீதம் மானியமாகவும், 70 சத வீதம் கடனாகவும் கிடைக்கின்றது. இத் திட்டத்தின்கீழ் சென்னை, பால்பண்ணை 1971 மார்ச் திங்கள் 31-ஆம் நாள் வரை 294.59 டன் ஆடையெடுக்கப்பட்ட பால்மாவையும், 82.274 டன் தூய வெண்ணெயையும் பயன்படுத்தியுள்ளது.

பால் வளத்தைப் பெருக்குவதற்கு முக்கியமாக ஊக்கமளிப்பது அதற்குத் தரப்படும் விலையாகும். பால்பண்ணைத் திட்டத்திற்குக் கிடைக்கும் விலையை யொட்டியே பால் உற்பத்தி செய்பவருக்குக் கொடுக்கப்படும் விலை நிச்சயிக்கப் படுகிறது. இவை அரசு மேற்கொண்டுள்ள திட்டங்களாகும். எனவே பால் பண்ணைத் திட்டங்கள் மிகவும் நியாயமான விலையில் மக்களுக்குப் பால் வழங்க கடமைப்பட்டவையாகும். அதே நேரத்தில் அந்த விலை உற்பத்தியாளரின் தேவைக்கேற்ப, அவருக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலையாகவும் இருக்க



வேண்டும். குறிப்பாக, பால் உற்பத்தியைப் பொறுத்தவரையில், சீராக்கப்பட்ட நடைமுறைகளினால் வேளாண்மையைப் போன்று உடனடியாகப் பலன் கிடைப்பதில்லை. சிறந்த கால்நடைகளை வளர்த்தல் போன்ற பணிகளினால் மாடுகள் வளர்ப்பவருக்கு உடனடியாக வருவாய் பெருகுவதில்லை. எனவே, பால் வளத்தைப் பெருக்குவது குறித்த திட்டங்களை மேற்கொள்ள பால் உற்பத்தியாளருக்கு அளிக்கப்படும் ஊக்கம் இன்னும் அதிக அளவில் அமைய வேண்டும்.

1970 ஆகஸ்டு திங்களில் பால் வழங்கு நடைமுறையில் ஒரு சில மாற்றங்கள் செய்யப்பட்டன. குறிப்பாக, அதிக அளவு தூய வெண்ணெய் பால்மாவு ஆகியவற்றைப் பயன்படுத்தவேண்டிய தேவையையொட்டி இம் மாற்றங்கள் செய்யப்பட்டன. அதன்பின்னர், இத் திட்டம் 4.5 சத வீதம் கொழுப்பும், 8.5 சத வீதம் கொழுப்பு அல்லாத கெட்டிப் பொருள்களும் அடங்கிய தரப்படுத்தப்பட்ட பாலையும், 3 சத வீதம் கொழுப்பும், 8.5 சத வீதம் கொழுப்பு அல்லாத கெட்டிப் பொருள்களும் அடங்கிய பதப்படுத்தப்பட்ட பாலையும், 1.5 சத வீதம் கொழுப்பும், 9 சத வீதம் கொழுப்பு அல்லாத கெட்டிப் பொருள்களும் அடங்கிய இருமுறை பதப்படுத்தப்பட்ட பாலையும் விற்று வருகின்றது. டிசம்பர் மாதம் முதல் மே மாதம் வரை பால் உபரியாகக் கிடைக்கக்கூடிய கால அளவில், பால் அதிகமாக வாங்கப்பட்டு மேற்குறிப்பிட்ட விகிதத்தில் விற்கப்படும் என்பதே இதன் நோக்கமாகும். எஞ்சிய காலத்தில், மேற்குறிப்பிட்ட அளவிலும் அதே விகிதத்திலும் பாலை வழங்கும் பொருட்டு தூய வெண்ணெய், பால்மாவு ஆகியவை பயன்படுத்தப்படும். தரப்படுத்தப் பட்ட பாலின் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூபாய் 1.30 என்று முடிவு செய்யப் பட்டுள்ளது. பதப்படுத்தப்பட்ட பால் லிட்டர் ஒரு ரூபாய் என்றும், இருமுறை பதப்படுத்தப்பட்ட பால் லிட்டர் 70 காசு என்றும் முன்னர் விற்று வந்த விலையிலேயே தொடர்ந்து விற்கப்பட்டு வருகின்றன. பதப்படுத்தப்பட்ட பால் இருமுறை பதப்படுத்தப்பட்ட பால் ஆகியவற்றில் இந்த விலைகளுக்கு உதவித் தொகை கொடுக்க வேண்டியுள்ளது. மதுரையில் தரப்படுத்தப்பட்ட பாலின் விற்பனை விலை லிட்டர் ஒன்றுக்கு ரூபாய் 1.16 ஆகும். பதப்படுத்தப்பட்ட பாலின் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூபாய் 1 ஆகும். இருமுறை பதப்படுத்தப் பட்ட பாலின் விலை லிட்டர் ஒன்றுக்கு 70 காசு ஆகும். பெருமளவில் பால் பயன்படுத்துபவர்களின் வீடுகளுக்குச் சென்று பால் வழங்குவதனால் ஏற்படும் செலவினை ஈடு செய்யும்பொருட்டு அவர்களிடமிருந்து அதிக விலை வசூலிக்கப் படுகிறது.

மாநகரில் உள்ள கால்நடைகளுக்கென்று மாதவரத்தில் தனிக் குடியிருப்பு ஏற்படுத்தப்பட்டது. இதனால் "பால்வள முனைப்புத் திட்டத்தின்" முதல் நிலையைச் செயல்படுத்துவதற்கு வசதியாயிருக்கும். ஆனால் கால்நடைகள் வைத்து வருவதை ஒருங்கிணைப்பது இயலாது. ஏனெனில், குடியிருப்பிலும் தொழுவங்களில் கால்நடைகளுக்குத் தீவனங்கள் வழங்கப்படுகின்றன. எனவே, கால்நடைகளைக் குடியிருப்புக்குக் கொண்டு செல்வதனால் கால் நடைகளுக்கும், பணியாளர்களுக்கும் நல்ல வசதிகள் கிடைக்கும் என்பதைத் தவிர இதனால் வேறு குறிப்பிட்ட நன்மை எதுவும் இல்லை. எனினும், இது போதிய ஊக்க மளிக்கக்கூடியதாக இல்லை. மேலும் எதிர்பார்த்த அளவுக்கு நகரக் கால் நடைச் சொந்தக்காரர்கள் குடியிருப்புக்குச் செல்லவில்லை. இதன் விளைவாக

இக் குடியிருப்பு இக் கால்நடைகளுக்காகக் குறிப்பிட்ட அளவுக்குத்தான் பயன்படுகிறது. எனவே, அரசு பால்பண்ணை ஒன்று 1966-இல் ஏற்படுத்தப் பட்டது. கலப்பினக் கால் நடைகளினால் ஏற்படும் நன்மைகளை விளக்கும் பிரிவாக மட்டுமே இப் பண்ணை இருக்கும். 1971 ஏப்ரல் 1-ஆம் நாள் அன்றுள்ளவாறு உரிமதாரர்கள் 40 பேர் ஆவர். இவர்களுக்கு 571 கால் நடைகள் சொந்தமாக இருந்தன. கன்றுகள் உட்பட அரசுப் பண்ணைக்குச் சொந்தமான கால்நடைகளின் எண்ணிக்கை 921 ஆகும்.

உலக உணவுத் திட்டத்தின் முந்திய ஒரு திட்டத்தின்கீழ், கால் நடைத் தீவனம் தயாரிப்பதற்காக மக்காச் சோளமும் "சொர்கம்" சோளமும் கிடைக்கின்றன. கூட்டுறவுத்துறையில் அமைக்கப்பட்டுள்ள சிறிய பிரிவுகளிலும் மாதவரத்திலுள்ள துறைப்பிரிவிலும் இத்தீவனம் தயாரிக்கப்பட்டு வருகிறது. மாதவரத்தில் பெரிய பிரிவு ஒன்று கட்டப்பட்டு வருகிறது. 1970-71-இல் சென்னையிலிருந்து 1,288.50 டன் கால்நடைத் தீவனமும் மதுரையிலிருந்து 407.93 டன் கால்நடைத் தீவனமும் விற்கப்பட்டன. உலக உணவு திட்டத்தின் கீழ் இலவசமாக வழங்கப்படும் தானியத்திலிருந்து கிடைக்கும் விற்பனைமுதலில் மூன்றில் ஒரு பங்கை தனி நிதியாக வைத்து, மேம்பாட்டுக்காரியங்களுக்காக, முக்கியமாக, தீவன உற்பத்தி, கால்நடைத் தீவனத்தைத் தயாரித்து அதைச் சேமித்து வைப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல், நீட்டிப்புப் பணிகள் முதலிய மேம்பாட்டுப் பணிகளுக்காக இந்நிதி பயன்படுத்தப்படும். மீதமுள்ள மூன்றில் இரண்டு பங்குதொகை, உலக உணவு திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உதவி நிறுத்தப்பட்டவுடன், தானியங்களை வாங்கும் பொருட்டுச் சுழல் நிதியாகப் பயன்படுத்தப்படும். உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப் படும் ஆடை நீக்கப்பட்ட பால் மாவைப் பயன்படுத்துவதனால் கிடைத்த நிதியையும் இதே முறையில் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காகப் பயன் படுத்தலாம். தீவனப் பயிர்களைப் பயிரிடுவதற்கான சில திட்டங்களுக்கும், இந்த நிதிகளைப் பயன்படுத்திக் கிராம அளவில் இனப்பெருக்கப் பணிகளுக் காகவும் கால்நடை மருத்துவத்திற்கு வகை செய்யும் ஒரு முன்னோடித் திட்டத்திற்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. கால்நடை இனப் பெருக்கத்திற்கும் கால்நடை மருத்துவப் பணிகளுக்கும் வகை செய்வதற்காகக் கிராம அளவில் பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்கவும் தகுந்த தகுதியுடைய கால்நடைப் பணியாளர்களால் மேற்பார்வை செய்யப்படும் நிலையங்கள் பலவற்றைத் தொடர்ச்சியாக ஏற்படுத்தவும் இத் திட்டம் வகை செய்கிறது.

1970 டிசம்பர் 31-ஆம் நாள் அன்று 23 கூட்டுறவு ஒன்றியங்களும், 1,261 சங்கங்களும் செயல்பட்டு வந்தன. 1,298 சங்கங்கள் செயல்படவில்லை. இச்சங்கங்கள் தங்களது உறுப்பினர்களுக்குத் திறம்படப் பணிபுரியும் வகையில் இச்சங்கங்களைச் சீரமைத்துத் திறமையுடன் தனித்து இயங்கக்கூடிய பிரிவுகளைச் சிறப்புப் பணியாளர்களுடன் அமைப்பதற்கான திட்டம் ஒன்றுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. தொடக்கத்தில் குறிப்பிட்ட ஒரு கால அளவுக்கு இச்சங்கங்களுக்கு நிர்வாக உதவி செய்ய இத் திட்டத்தில் வகை செய்யப் பட்டுள்ளது.

[35-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க]



## இணைப்பு 3.

[35-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க]

### கோரிக்கை எண் 9- .

### தமிழ் நாடு 1959-ஆம் ஆண்டு

### இந்து சமய அறநிலையச் சட்ட நிர்வாகம்.

இந்து சமய அறக்கட்டளைகள் (நிர்வாகத்) துறையின்கீழ் 10,040 அற நிலையங்கள் பணியாற்றி வருகின்றன. அவற்றின் வருவாய் ரூ. 5,51,65,419 என்று மதிப்பிடப்படுகிறது. இந்த அறநிலையங்களில் 156 மடங்களும் 9,052 கோயில்களும், 832 குறிப்பிட்ட அறக்கட்டளைகளும் அடங்கியுள்ளன. இவற்றின் நிர்வாகம் பகுதிக் குழுமுறை எடுக்கப்பட்டபோது, 1968-ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தினாலும் முறைப்படுத்தப்பட்டது. இத்துறையை நடத்தி வருவதற்கான வருவாய் மேற்படி சட்டத்தின் 92-வது பிரிவின்கீழ் கொடுக்கத்தக்க நன்கொடைகளிலிருந்தும், தனிக்கைக் கட்டணங்களிலிருந்தும் கிடைக்கின்றது. இப்பிரிவின்படி ரூ. 200-க்குக் குறையாத வருவாய் உள்ள ஒவ்வொரு அற நிலையமும் குறிப்பிட்ட தொகை ஒன்றை இத்துறைக்குச் செலுத்த வேண்டும். 561 கோயில்கள் ரூ. 10,000-க்கு மேற்பட்ட வருவாயுள்ள வையாகும். 4,583 கோயில்களுக்கு ரூ. 1,000 முதல் ரூ. 10,000 வரை வருவாய் கிடைக்கின்றது. ஆண்டொன்றுக்கு ரூ. 1,000-க்கும் குறைவாக வருவாய் உள்ள கோயில்கள் 4,896 உள்ளன. ஆண்டுதோறும் கிடைக்கும் கோயில் துறை வருவாய் சுமார் ரூ. 49 லட்சம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. கோயில்களின் வருமானத்தைப் பெருக்கவும், கோயில்களின் நிதி தவறாகப் பயன்படுத்தப் படுவதைத் தடுக்கவும் வேண்டி கோயில்களின் நிர்வாகம் இந்து சமய அறக்கட்டளை (நிர்வாகத்) துறையின் முழுக் கட்டுப்பாட்டில் உள்ளது.

2. இணைக்கப்பட்ட பகுதிகளிலும் மாற்றப்பட்ட ஆட்சிப் பகுதிகளிலும் உள்ள கோயில்கள், அற நிலையங்கள்.—1961-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாளுக்கு முன்பு, புதுக்கோட்டையிலுள்ள புதுக்கோட்டை தேவஸ்தானத்திற்கு ஏற்பட்ட செலவு நேரடியாக அரசு நிதியிலிருந்து சரிக்கட்டப்பட்டது. 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் நாள் அன்றும் அது முதற்கொண்டும் கோயில்களைப் பேணிவரும் பொருட்டு தொடர் மானியமாக ரூ. 4 லட்சம் அல்லது கோயில் களுக்கு ஆண்டுதோறும் ஏற்படும் நிகர செலவு, இவற்றில் எது குறைவாக உள்ளதோ அத்தொகைக்கு ஒப்பளிப்பு வழங்கியதன் மூலம் புதுக்கோட்டைப் பகுதியிலுள்ள கோயில்களைப் பேணி வருவதற்கான நேரடிப் பொறுப்புகள் அனைத்தினின்றும் அரசு தன்னை விடுவித்துக் கொண்டது.

மாற்றப்பட்ட ஆட்சிப் பகுதியில் உள்ள இணைக்கப்பட்ட, இணைக்கப்படாத தேவஸ்தானங்கள் அவற்றின் சொத்துக்கள், நிதிகள் ஆகியவற்றின் நிர்வாகம், மேற்பார்வை, கட்டுப்பாடு அனைத்திற்கும் கன்னியாகுமரி தேவாஸ்வ வாரியம் பொறுப்பு வகிக்கிறது. மாற்றப்பட்ட ஆட்சிப் பகுதியில் உள்ள, இணைக்கப் பட்ட, இணைக்கப்படாத தேவாஸ்வம் குறித்து தனி நிர்வாகத்திற்கு வகை செய்யும் பொருட்டு தமிழ் நாடு 1959-ஆம் ஆண்டு 30-வது சட்டம் அதாவது தமிழ் நாடு 1959-ஆம் ஆண்டு (மாற்றப்பட்ட ஆட்சிப் பகுதி) இணைக்கப்பட்ட, இணைக்கப்படாத தேவாஸ்வம் சட்டம் இயற்றப்பட்டது. மாற்றப்பட்ட ஆட்சிப்

பகுதியில் உள்ள அறநிலையங்கள், அறக்கட்டளைகள் உட்பட இந்து பொது அற நிலையங்கள் கட்டளைகள் அனைத்திற்கும் தமிழ் நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் பொருந்துகிறது. தேவாஸ்வ வாரியத்தில் ஒரு தலைவரும், வேறு இரு உறுப்பினர்களும் இருப்பர். இவ்விருவரில் ஒருவர் திருவாங்கூர் மாநில முன்னாள் ஆட்சியாளரால் நியமனம் செய்யப்பட்டு வருகிறார். தலைவரும் மற்றுமொரு உறுப்பினரும் தமிழ் நாடு அரசினால் நியமிக்கப்பட்டு வருகின்றனர். தேவஸ்வங்களைப் பேணி வருதல் முதலியவற்றிற்காக தமிழ் நாடு அரசிடமிருந்து ஆண்டுதோறும் ரூ. 13,68,000 மானியமாக தேவாஸ்வ வாரியம் பெறுகிறது.

3. இந்துக்களல்லாதவரைக் கோயில்களுக்குள் அனுமதித்தல்.—எச் சமயத்தை சார்ந்தவரும் கோயிலுக்குள் நுழைவதை அனுமதிக்கும் நோக்கத்துடன், தமிழ் நாடு 1947-ஆம் ஆண்டு ஆலய நுழைவு அனுமதிச் சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்ட விதிகளை அரசு 1970 ஜனவரியில் திருத்தியுள்ளது. இந்துக் கோயில்களுக்குள் இந்துக்களல்லாதார் நுழைவதற்கு இயலும் வகையில் அரசு பிறப்பித்த ஆணைகளைத் தள்ளி விடும் பொருட்டு, 1970 செப்டம்பரில் ரிட் மனு ஒன்று சென்னை, உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ரிட் மனு முடிவு செய்யப்படும் வரை, அரசு ஆணை செயல்படுவதற்கு உயர்நீதி மன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது. ரிட் மனு விசாரணையில் உள்ளது.

4. அர்ச்சகர் பயிற்சி நிலையங்கள்.—இந்து சமுதாயத்தில் பரம்பரை அர்ச்சகர் முறை இருந்து வருவதை நீக்கவும் அதற்கு மாறாக தேவையான கல்வித் தகுதிகளைக் கொண்டுள்ளவர்கள் அடங்கிய சமய அமைப்பை ஏற்படுத்த அரசுவிரும்பியது. தீண்டாமை, அரிசனங்கள், பொருளாதார கல்வி வளர்ச்சி குறித்த குழுவின் பரிவுரைகளின் அடிப்படையில் அரசு இவ்வாறு செய்ய எண்ணியது. ஏற்பளிக்கப்பட்ட நிலையங்களில் இவர்கள் அர்ச்சகர்களாகப் பயிற்சி பெறலாமென்றும் இதனால் சாதி வேறுபாடின்றி இந்துக்கள் அனைவரும் அர்ச்சகர்களாக வழிகோலும் என்றும் அரசு விரும்பியது. அதன்படி, தமிழ் நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 22/1959) தமிழ் நாடு 1970-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்தச்) சட்டத்தினால் (தமிழ்நாடு சட்டம் 2/1971) திருத்தப்பட்டது. இச் சட்டத்தின் செல்திறனை எதிர்த்து இரு மடாதிபதிகளும், திருவல்லிக்கேணி, திருத்தணி அர்ச்சகர்களும் நான்கு ரிட் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளதோடு ஒருதலையாக தடை ஆணையையும் பெற்றுள்ளனர். இது உச்ச நீதிமன்றத்தில் தற்போது விசாரணையில் உள்ளது. எனவே, அர்ச்சகர் பயிற்சி நிலையம் ஒன்றைத் துவக்கும் செயற்குறிப்பு இன்னும் செயல்வடிவம் கொடுக்கப்படவில்லை.

5. கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்யும் முறையைக் கொண்டு வருதல்.—தமிழ் மொழியில் அர்ச்சனைகள் செய்யும் திட்டம் இதுவரை 112 கோயில்களில் கொண்டு வரப்பட்டுள்ளது. சுமார் 1971-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15-ஆம் நாளுக்குள் எல்லா ஆலயங்களிலும் தமிழில் திருமுறை அர்ச்சனை துவக்கப்படவேண்டுமென்று இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் அறிவுரை வழங்கியுள்ளார். வழிபடுபவர்கள் அவர்களது விருப்பம் போல் தமிழிலேயோ அல்லது வடமொழியிலேயோ அர்ச்சனைகள் செய்து கொள்ளலாம்.



6. யாத்திரீகர்களும் வழிபடுபவர்களுக்கும் வசதிகள்.—யாத்திரீகர், வழிபடுபவர்களின் பயனுக்காக ஓய்வு விடுதிகளையும் யாத்திரீகர்கள் குடியிருப்புகளையும் கட்டும் ஒருங்கிணைப்புத் திட்டம் ஒன்று உள்ளது. இது குறித்துச் சீரான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை பின்வரும் புள்ளி விவரங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம் :—

ஒப்பளிப்பு வழங்கப்பட்ட மதிப்பீடு.

| | ரூபாய். |
|---|---|
| யாத்திரீகர்கள் குடியிருப்புகள் கட்டுதல்— | |
| 1969 | 1,10,700 |
| ஓய்வு விடுதிகளைக் கட்டுதல்— | |
| 1967 | 2,95,400 |
| 1968 | 2,73,200 |
| 1969 | 6,24,000 |
| 1970 | 10,60,000 |

திருச்செந்தூரில் ரூ. 6 லட்சம் செலவில் 96 அறைகளைக் கொண்ட புதிய கட்டிடம் ஒன்று கட்டத் தொடங்கப்பட்டுள்ளது.

7. திருமண மண்டபங்கள் கட்டுதல்.—திருமணம் முதலியவற்றிற்காக திருமண மண்டபங்களைப் பொது மக்கள் குறைவான வீதத்தில் வாடகைக்கு எடுத்துக் கொள்ள வசதி செய்யும் பொருட்டு அதிக அளவில் திருமண மண்டபங்களைக் கட்டும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த மண்டபங்கள் வழிபாட்டுக் கூடங்களாகவும் பயன்படுத்தப்படலாம். இது குறித்து சீரான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு :—

| ஆண்டு | ஒப்பளிப்பு வழங்கப்பட்ட மதிப்பீடு. |
|---|---|
| | ரூபாய். |
| 1967 | 82,000 |
| 1968 | 62,000 |
| 1969 | 4,12,000 |
| 1970 | 16,42,700 |

8. சமய நிறுவனங்களில் வருமானம்.—1377 முதல் 1380 வரையுள்ள விளைச்சல் ஆண்டுகளின்போது சமய நிறுவனங்களின் வருமானம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | | ரூபாய். |
|---|---|---|
| விளைச்சல் ஆண்டு | 1377 | 3,98,52,754 |
| ” | 1378 | 4,99,25,142 |
| ” | 1379 | 4,87,51,314 |
| ” | 1380 | 5,51,66,419 |

*9. கோயில் நிலங்கள்.*—இம் மாநிலத்தில் கோயில் நிலங்கள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக தேவையான நிர்வாகப் பணியாளர்களுடன் நான்கு சிறப்புத் துணை மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட வருவாய் அதிகாரி தரத்தில் ஒரு சிறப்பு அதிகாரி ஆகியோரைக் கொண்ட சிறப்புப் பணியாளர்களை நியமிக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. சமய நிறுவனங்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள, சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான எல்லா இயங்காச் சொத்துகளும், சொத்துகள் பதிவேட்டில் முறையாக பதிவு செய்யப்பட்டிருக்கிறதா என்றும், கோயில்களின் சுவாதீனத்தில் இல்லாத சொத்துக்களும் கணக்கில் கொண்டுவரப்பட்டுள்ளனதா என்றும், அந்தச் சொத்துக்களின் வருமானம் முறையாகக் கணக்கு வைக்கப் படுகிறதா என்றும் இந்த சிறப்புப் பணியாளர் தொகுதி கவனிக்க வேண்டும். ஒவ்வொரு கோயிலுக்கும் சொந்தமான நிலங்கள், கட்டிடங்கள், மனைகள் சரியான குத்தகைக்கு விடப்படுகின்றனவா, அவை உரிமை அல்லாதாரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றனவா, அதிகாரமளிக்கப்படாத அனுபோகத்தில் அல்லது சுவாதீனத்தில் இருக்கின்றனவா என்பது குறித்து கண்டறிவதற்காக அவை குறித்த விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. இது 1970-ஆம் ஆண்டு முதற்கொண்டு செயலுக்குக் கொண்டுவரப்பட்ட ஒரு புது திட்டமாகும். சமய நிறுவனங்களால் பேணி வரப்பட்ட சொத்து பதிவேட்டையொட்டி சுமார் ரூ. 1,90,45,309 மதிப்புள்ள மொத்த வருமானத்தைக் கொடுக்கும் 4,09,356.20 ஏக்கர் நன்செய், புன்செய் நிலங்கள் இருக்கிறதென்று பணியாளர்கள் நிச்சயித்து அறிந்துள்ளனர். நிலங்களிலிருந்து வரும் இந்த வருமானம், தமிழ் நாட்டிலுள்ள சமய நிறுவனங்களால் கிடைக்கும் மொத்த வருமானத்தில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பாகமாகும். மீதியுள்ள வருமானம் கட்டிடங்கள், வீட்டு மனைகளுக்காக வழங்கப்படும் வாடகைகள், உண்டியல் வசூல், பக்தர்களின் காணிக்கைகள் ஆகியவற்றின்மூலம் கிடைக்கிறது. 65,000 ஏக்கர் நிலமுள்ள சுமார் 10,000 நிறுவனங்கள் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இல்லை என்று தெரிய வந்துள்ளது. இந்த நிறுவனங்களைத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு வருவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள சமய நிறுவனங்களுக்குச் சொந்தமாயுள்ளவையும், ஆனால் அவர்களது சுவாதீனத்திலும் அனுபோகத்திலும் காணப்படாதவையுமான சுமார் 10,000 ஏக்கர் நிலங்கள் கண்டறியப் பட்டு கணக்கில் கொண்டுவரப்பட்டன. இத்திட்டத்தின் நோக்கம் முழுவதும் நாளாவட்டத்தில் எய்தப் பெறும்.

*10. கோயில்களைப் பாதுகாத்தலும் புதுப்பித்தலும்.*—வருவாயற்ற, நிதி தேவைப்படும் கோயில்களுக்கு மொத்த மானியங்கள் வழங்குவதன் மூலம் அரசால் நிதியுதவி அளிக்கப்படுகின்றது. இத்தகைய மொத்த மான்யங்கள் வழங்க, ஒவ்வொரு ஆண்டும் ரூ. 4 லட்சம் ஒதுக்கப்பட்டு வருகிறது. அரசு மான்யத்தைத் தவிர, சமய நிறுவனங்கள் தங்கள் உபரி நிதியிலிருந்து மனமுவந்து அளிக்கிற நன்கொடையிலிருந்து அமைக்கப்பட்ட பொதுநல நிதியிலிருந்து, நிதி தேவையான கோயில்களின் பழுதுபார்க்கும், புதுப்பிக்கும், பணிக்காக, இந்து சமய அறக்கட்டளைகள் ஆணையாளர் நிதி வழங்குவார். பொதுநல நிதிக்கு, இந்து சமய அறக்கட்டளைகள் (நிர்வாகம்) நிதியிலுள்ள உபரித் தொகை எதையும் வழங்குவதற்கு அவசியம் ஏற்படும் போதெல்லாம், ஒப்புதலளிக்க அரசும் இசைவளித்து வருகிறது.



*11. "யுனெஸ்கோ" உதவி.*—இம் மாநிலத்திலுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொன்மையான கோயில்கள் சிலவற்றைப் பாதுகாப்பதிலும், புதுப்பிப்பதிலும் "ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான, பண்பாட்டு நிறுவனம்", அக்கறை காட்டி வந்துள்ளது. திருவரங்கத்திலுள்ள அரங்கநாதசுவாமி கோயிலுக்கு இந்நிறுவனம் 12,000 டாலர்களை, இந்தியாவில் தயாரிக்கப்படாத பொருள்களின் வடிவில் அதாவது, பென்டாப்சுலா (ஒரு வகை தெளிக்கும் எண்ணெய்) உட்பட அக்கோயிலின் பண்டைக்காலப் பண்பாடு கெடாத வகையில் சுதை வேலைகளைப் பாதுகாப்பதற்குப் பயன்படும் பொருட்களை வழங்கியுள்ளது. கிழக்குக் கோபுரம், ஆயிரம்கால் மண்டபத்தில் மேல் அடுக்கு, சேஷகிரிராயர் மண்டபம் ஆகியவற்றைப் பழுதுபார்க்கும் பணிகள் இதுவரை முடிந்துள்ளன.

இராமேஸ்வரத்திலுள்ள ஸ்ரீ ராமநாதசுவாமி கோயில் "யுனெஸ்கோ" நிறுவனத்தின் உதவி பெறுவதற்கான இரண்டாவது கோயிலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. "யுனெஸ்கோ" வல்லுநர் திரு. ஜி. ஆர். எச். ரைட் என்பவர் கோயிலை வந்து பார்வையிட்டு, தனது அறிக்கையைக் கொடுத்துள்ளார். இந்த கோயிலுக்குத் தேவையான பொருட்கள் "யுனெஸ்கோ" நிறுவனத்தால் வழங்கப்படவிருக்கிற பொருட்கள் ஆகியவற்றின் பட்டியலும் கொடுக்கப்பட்டுள்ளது. மாநில யுனெஸ்கோ குழு, காஞ்சிபுரத்திலுள்ள ஸ்ரீ வரதராஜசுவாமி கோயிலையும், சிதம்பரத்திலுள்ள ஸ்ரீ நடராசர் கோயிலையும், மூன்றாவது, நான்காவது கோவில்களாக யுனெஸ்கோ நிறுவனத்தின் உதவித் திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுத்துள்ளது.

*12. ஸ்ரீவில்லிபுத்தூர் கோயில் கோபுரத் திருப்பணி.*—ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள ஸ்ரீ வடபத்திரசாயி கோயிலின் பெரிய கோபுரத்தை ரூ. 4 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் செப்பனிட்டுப் புதுப்பிப்பதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு ஏற்பளித்துள்ளது. இப்பணி பொதுப் பணித் துறையிடம் பிறர்க்கான பணியாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்து சமய அறக்கட்டளைகள் ஆணையாளரின் பொது நல நிதியிலிருந்து இதற்கென மொத்தம் ரூ. 3 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மீதியுள்ள தொகை கோயில் நிதியிலிருந்தும், பொது மக்களிடமிருந்து நன்கொடையாகவும் திருப்பணிக் குழுவினால் வழங்கப்படும். மேற்கூறிய புதுப்பிக்கும் பணிக்காக தனிப்பணியாளர்களை நியமிக்கவும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

*13. பழனி கோயில் திருப்பணி.*—யானைப் பாதை, சரவணப் பொய்கை வாயிலுள்ள சுதைப் பணிகள், சரவணப் பொய்கைப் பணிகள், பிற பணிகள் ஆகிய பல பணிகளை கோயில் அதிகாரிகள் நிறைவேற்றி வருகின்றனர். பிரதான கோயிலின் திருப்பணியை மேற்கொள்வது என்பது கோயில் அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளது.

*14. கோயில்களைப் புதுப்பித்தல், அவற்றை சரியான நிலையில் பேணிவருதல், சமய நிறுவனங்களின் வருமானத்தைப் பெருக்குதல், யாத்திரீகர்களுக்கு வசதிகள் வழங்குதல், சொத்துக்களைச் சரிவர நிர்வகித்தல், இதுவரை சரியாகக் கணக்கில் வைத்து வராத சமய நிறுவனங்களின் இயங்காச் சொத்துக்களின் சுவாதீனத்தை துறையின் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு வருதல், இதுவரை அதன் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்படாதவையும் அதிக வருமானம் உள்ளவையுமான சமய நிறுவனங்களை அதன் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு*

வருதல், எல்லோரும் புரிந்து கொண்டு இறை வழிபாட்டில் ஈடுபடுவதற்கு வசதியாகிருக்கும் வகையில் தமிழில் திருமுறை அர்ச்சனை முறையைக் கொண்டுவருதல், பொதுமக்கள் நன்மைக்காக ஏராளமான கல்யாண மண்டபங்களைக் கட்டுதல், கல்விப்பணிகளை ஊக்கப்படுத்துதல் ஆகிய முயற்சிகளில் இத்துறை ஈடுபட்டுள்ளது. இவ்வாறாக, இம் மாநிலத்திலுள்ள சமய நிறுவனங்களின் நிர்வாகம் முழுவதும் இத்துறையால் மேம்படுத்தப் படுகிறது. சமய நிறுவனங்களின் நிர்வாக மேம்பாடு குறித்து நடவடிக்கைகளைத் துறை விரைவாகவும் ஒரே சீராகவும் மேற்கொண்டு வருகின்றது.

## இணைப்பு 4.

### உணவு மானியக் கோரிக்கை.

உணவுத் தானியங்களில் அரசு நடத்துகின்ற வாணிகம், 1970 ஜனவரியில் அரசு மேற்கொண்ட முக்கியக் கொள்கை மாற்றங்களைத் தொடர்ந்து கணிசமான அளவுக்குக் குறைந்துள்ளது. ஈடுசெய் விலையில் அரிசிப் பங்கீட்டை அரசு ஏற்று நடத்துவதை சென்னை மாநகரிலும், கோயம்புத்தூரிலும் மட்டும் வைத்துக்கொண்டு, பிற இடங்களில் மக்களின் தேவைகளை நிறைவேற்று வதற்குத் தனியார் வாணிகத்தை அனுமதித்திருக்கும் கொள்கை பொதுவாக வெற்றிகரமாகவே செயல்பட்டு வந்துள்ளது. உணவுத் தானியங்கள் போதிய அளவுக்குக் கிடைத்து வந்தன. உணவுத் தானியங்களுக்குப் போதிய கிராக்கி இல்லையென்றோ, விலைகள் மிகவும் குறைவாக உள்ளனவென்றோ உற்பத்தியாளர் குறைப்படவும் காரணம் இல்லை. ஈடுசெய் விலையில் சென்னை, கோவை, ஆகிய நகரங்களில் அரிசிப் பங்கீட்டுத் தேவைகளைச் சரிக்கட்டவும், தஞ்சை மாவட்டத்திலிருந்து வெளியில் வரும் நெல்லில் 50 சத வீதத்தையும், ஏனைய மாவட்டங்களில் வணிகர்கள் வாங்கும் நெல்லில் 15 சத வீதத்தையும் சேர்த்து முடையிருப்பு ( Buffer stocker ) கட்டவும் 1970 ஜனவரியில் கொண்டு வரப்பட்ட விதிமுறைக் கொள்முதல் திட்டம் ( Levy system ) தஞ்சை மாவட்டத்தில் 1970 செப்டம்பர் திங்கள் 15-ஆம் நாளிலிருந்தும், ஏனைய பகுதிகளில் 1970 ஆகஸ்ட் திங்கள் 6-ஆம் நாளிலிருந்தும் கைவிடப்பட்டது. 1970-ஆம் ஆண்டில் குறுவைப் பயிருக்கு முன்பு செய்யப்பட்ட கொள்முதல் 1.45 லட்சம் டன்னாகும். 1970-ல் குறுவைப் பருவத்தின்போது, அரசு, தனியார் வாணிகத்திற்கு ஊக்கமளிக்கும் நோக்கத்துடன், விதிமுறைக் கொள்முதலைச் செயல்படுத்தவில்லை. ஆயினும், பெருமழைக்காலங்களில் குறைந்த தேவை காரணமாக விலைகள் சரியக்கூடும் என்பதை எதிர்பார்த்து, தக்க பாதுகாப்பு அளிப்பதற்காக, விலை ஆதரவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. குறுவை விளைச்சலின்போது கொள்முதல் செய்யப்படும் அரிசியில் ஒரு லட்சம் டன் வரை மத்திய தானியத் தொகுப்புக்கு இவ்வாசு அளித்தது. இந்திய உணவுக் கழகம் மத்திய அரசுச் சார்பில் ஏறத்தாழ 40,000 டன்னும், மாநில அரசு சுமார் 8,000 டன்னும் கொள்முதல் செய்தது. இனி வரவிருக்கும் குறுவை அறுவடையின்போதும் இதைப் போன்ற விலை ஆதரவு நடவடிக்கைகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனாலும் அதே நேரத்தில் தனிப்பட்ட வணிகர்களும் நெல்லைக் கொள்முதல் செய்வார்கள். ஈடுசெய் விலையில் உணவுத் தானியப் பங்கீட்டுத் திட்டத்தின் குறைந்த அளவுப்





பொறுப்புகளை ஏற்பதற்காக மட்டுமல்லாமல், விலைவாசிகளை ஓரே நிலையில் மட்டுப்படுத்துவதற்கு முதற்கண் முடையிருப்பு கட்டுவதற்கும், அரசு கொள் முதல் திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்ற வேண்டி உள்ளது. விலைகள் நியாயமான அளவுகளுக்கு மேல் உயரும்போது, அரசு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கவும், வணிகர்கள் நியாயமான அளவிற்கு ஒழுங்குடன் நடந்து கொள்ளவும் முடையிருப்பு கட்டுவது அவசியமாகிறது.

நான்கு உபரி மாவட்டங்களான தஞ்சை, தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களிலிருந்து 'வெளியில்' செல்கிற எல்லா வகை நெல்லிற்கும் 15 சத வீத அளவில் விதிமுறைக் கொள்முதல், தஞ்சை மாவட்டம் நீங்கலாக ஏனைய மூன்று மாவட்டங்களில் 1970 டிசம்பர் திங்கள் 15-ஆம் நாளிலிருந்தும், தஞ்சை மாவட்டத்தில் 1971 ஜனவரி திங்கள் 1-ஆம் நாளிலிருந்தும் செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. கள்ளத்தனமாக நெல் ஏற்றுமதி செய்வதைத் தடுக்கும் வகையில், எல்லா வகையான நெல் கொள் முதலுக்கும் விதிமுறைக் கொள்முதல் முறை 1970 ஏப்ரல் கடைசி வாரத் திலிருந்து பொருந்துமாறு செய்யப்பட்டது. விதிமுறைக் கொள்முதலில் ஏய்ப்பு ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு, மாவட்டங்களிலிருந்து உணவுத் தானியங்கள் எடுத்துச் செல்லப்படுவதை அனுமதிச் சீட்டுகளுக்கு உட்படுத்தப் பட்டிருப்பதால், சோதனைச் சாவடிகள் ஏற்படுத்தப்படவில்லை; உற்பத்தியாளர் களுக்கும், வணிகர்களுக்கும் உண்டாகும் தொல்லையைக் கூடுமான அளவுக்குக் குறைக்கும் பொருட்டு திடீர்ச் சோதனைகள் மூலமாக மட்டுமே, உணவுத் தானியங்களின் ஏற்றுமதி தடுக்கப்படுகிறது. இந்த நான்கு உபரி மாவட்டங்களில் இதுவரை 62,000 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

1970 பிப்ரவரி முதற்கொண்டு, அரசு உணவுத் தானிய பங்கீட்டுப் பணியைக் குறைத்துக் கொண்டதன் விளைவாக, குறுவை அரிசி இருப்பு, கணிசமான அளவுக்கு அரசிடம் தேங்கிவிட்டது. குறுவை நெல் மழைக்காலத்தில் அறுவடையான காரணத்தால், அதில் ஈரப்பசை அதிகமாயிருந்ததோடு, அரிசியும் நாளடைவில் நிறம் மாறியது. பொதுமக்கள் புகார் செய்வதைத் தடுக்கும் பொருட்டு, அத்தகைய அரிசி இருப்புகள் பங்கீட்டு முறையின்கீழ் வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிகளை வாவழைத்து விற்பனை செய்யப்பட்டன. ஆலை அதிபர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட 8,500 டன் அரிசியோடு, ஒப்பந்தப் புள்ளிகள் மூலம் இதுவரை 43,000 டன் அரிசி விற்பனை செய்யப்பட்டுள்ளது.

கொள்முதல் விலைகள் மாற்றியமைக்கப்பட்டு, அதனால் 1970 அக்டோபர் திங்கள் 1-ஆம் நாளிலிருந்து எல்லா ரக நெல்லுக்கும் குவிண்டால் ஒன்றுக்கு ஒரு ரூபாய் உயர்ந்தது. சிறந்த ரக, நடுத்தர ரக, மோட்டா ரக அரிசிக்கு குவிண்டல் ஒன்றுக்குத் தற்போதுள்ள விலைகள் முறையே ரூ. 51, ரூ. 48, ரூ. 46, ஆகும். இத்துடன், ஐ.ஆர். 8 போன்ற மிகுபயன் தரும் நெல் ரகங்களுக்கு குவிண்டல் ஒன்றுக்கு ஒரு ரூபாய் ஊக்கத்தொகையும் கொடுக்கப்படுகிறது. உற்பத்தியாளருக்கு அவரது செலவுகளுக்கேற்ப நியாயவிலை கிடைக்குமாறு செய்வதன் அவசியத்தையும், உற்பத்தியாளர்களுக்குப் போதிய ஊக்க மளிப்பதன் அவசியத்தையும் அரசு எப்போதும் கருத்தில் கொண்டுள்ளது. ஆனால் அதே நேரத்தில், நுகர்வோர் நலனையும் அரசு கவனத்தில் கொண்டுள்ளது.

[1971 ஜூலை 27

அரசு வாணிக வாய்ப்புக் குறைந்துள்ள இச் சந்தர்ப்பத்தில்தான் தானிய விலைகள், இருப்புகள் குறித்த ஒழுங்குமுறை விதிகளைச் செயல்படுத்தும் பணி மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளது. தாராளமாகக் கட்டுபாடுகளின்றி வாணிகம் நடத்த அனுமதிக்கப்பட்டுள்ள தனிப்பட்ட வணிகர்கள் அளவுக்கு மீறி ஆதாயம் பெறுதவாறும் பதுக்கல் செய்யாதவாறும் கவனித்துக் கொள்வதற்கு ஒழுங்குமுறை விதிகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. தானிய இருப்புகளும், விலைவாசிகளும் தொடர்ந்து ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. மாநிலத்திற்கு வெளியே தானியங்களை ஏற்றுமதி செய்வது குறித்துச் செயல்படுத்தப்படும் கட்டுப்பாடுகள் மிகவும் முக்கியமானவை. மாநில எல்லைகளில் சோதனை செய்வதோடு மட்டுமல்லாமல், தானிய இருப்புகளின் மீதும் தானிய போக்குவரத்தின் மீதும் முக்கியமாக எல்லை யோரப் பகுதிகளிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் தானியங்களைக் கண்காணிக்க வேண்டியதாகிறது. இன்றியமையாத பொருள்கள் சட்டத்தின் விதித் துறைகளையும் அவற்றில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளையும் செயல்படுத்தி வருவதற்கும் அனுமதி பெறுத வர்த்தக நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தும் வகையில் தானிய இருப்புகளையும் ஏற்றுமதிகளையும் சோதனையிடுவதற்கும் நியமிக்கப்பட்ட பணியாளர்களுக்காகமட்டும் இத் துறையில் ஆகும் செலவில் ஏறத்தாழ பாதி அளவிற்குச் செலவாகிறது. இச் செலவிற்கும் வணிக நடவடிக்கைகளுக்கு ஏற்படும் செலவிற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.

கொள்முதல் விலைகளை மாற்றியமைத்ததனாலும், ஏனைய தொடர்புள்ள செலவுகள் உயர்ந்ததன் விளைவாக, அரிசியின் கட்டுப்படி விலை உயர்ந்துள்ளது. இதனைக் கருத்தில்கொண்டு, 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1-ஆம் நாள் முதற்கொண்டு சில்லறை விலைகள் பின்வருமாறு முடிவு செய்யப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| புழுங்கல் அரிசி—முதல் ரகம் | கி.கி. ரூ. 1.06 |
| புழுங்கல் அரிசி—இரண்டாம் ரகம் | கி.கி. ரூ. 1.00 |
| பச்சரிசி—முதல் ரகம் | கி.கி. ரூ. 1.12 |
| பச்சரிசி—இரண்டாம் ரகம் | கி.கி. ரூ. 1.06 |

படியரிசித் திட்டத்தின் விளைவாக வெளியீட்டு விலைகளையொட்டிய உதவித் தொகை இரண்டாம் ரக அரிசியைப் பொறுத்தமட்டில், விலை ஏறத்தாழ டன்னுக்கு ரூ. 340-ம் முதல் ரகப் புழுங்கல் அரிசிக்கு ரூபாய் 400-ம் ஆகும். குறுவைப் பயிரின்போது வாங்கிய இருப்புகளையும் விதிமுறைக் கொள்முதலின் கீழ் ஒப்படைக்கப்பட்ட இருப்புகளையும் விற்பனை செய்ய ஈடுசெய் விலைத் திட்டத்தின்கீழ் முதல் ரக அரிசியும் ஓரளவுக்கு வழங்கப்படுகிறது. ஈடுசெய் விலையில் அரிசிப் பங்கீட்டுத் திட்டம் ஏழை, எளிய மக்களுக்கு உதவி செய்வதற்கான ஓர் ஏற்பாடாகும். தேவைகளில் ஒரு பகுதியை எப்போதுமே ஈடுசெய்துவரும் வெளிச் சந்தைகளில் விலைகள் குறையத் தொடங்கியதும், ஈடுசெய் விலையில் அரிசி வழங்குவதன் அவசியம் குறையலாம். போலி அரிசிப் பங்கீட்டு அட்டைகளினால் அரிசிச் செலவு கணிசமான அளவு பெருகியது. இதனால் ஏழை எளியவருக்கென்று வகுக்கப்பட்ட இத் திட்டத்தின் பலன் அவர்களுக்குக் கிட்டவில்லை. எனவே, அரசு, இத்தகைய போலி அட்டைகளின் புழக்கத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கை எடுத்துள்ளது. இத்தகைய ஏற்பாடுகளின் பலனாக, அரிசிப் பங்கீட்டு அட்டைகளின் எண்ணிக்கையில் சுமார் 10 சத விதம் குறைக்கப்பட்டுள்ளது.



1971 ஜூலை 27]

சர்க்கரை மிகுதியாகக் கிடைத்து வருவதால், பங்கீட்டு அட்டைகள் மூலம் முறைப்படுத்தப்பட்ட வினியோக முறையின் அவசியம் இப்போது அறவே நின்றுவிட்டது. நியாயவிலைக் கடைகள் மூலம் விற்கப்படுகிற சர்க்கரையின் அளவு குறைந்துவிட்டதைக் கருத்தில்கொண்டு, 1970 பிப்ரவரி முதல் விதி முறைக் கொள்முதல் இருப்பை ஆலைகளே விற்பனை செய்துகொள்ள அனுமதிப் பதென்றும் அரசு முடிவு செய்தது. சர்க்கரையைப் பொறுத்த வரையில், அதன் விற்பனை, பங்கீடு ஆகியவற்றிலிருந்து கட்டுப்பாடுகள் முழுவதையும் இந்திய அரசு நீக்கிவிட்டது. ஆலைகளிலிருந்து விற்கப்படும் சர்க்கரைக்கு மட்டுமே இன்னும் கட்டுப்பாடுகள் உள்ளன. விலைகள் உயராவண்ணம் அதேசமயத்தில், ஆண்டு முழுவதும் போதிய அளவு சர்க்கரை கிடைக்கச் செய்யுமாறு கவனித்துக்கொள்ளும் வகையில், இந்திய அரசு ஆலைகளிலிருந்து விற்கப்படும் சர்க்கரையை ஒழுங்குபடுத்தும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இம் மாநிலத்தில் பயிர்விளைச்சல் மூலம் அரிசியும் சிறுதானியங்களும் சீராகக் கிடைத்துவருவதைத் தொடர்ந்து, கோதுமை விற்பனையும் குறைந்துள்ளது. திங்கள் ஒன்றுக்கு 30,000 டன் விதம் இம் மாநிலத்திற்கு ஒதுக்கப்படும் கோதுமை அளவில் பெரும்பாலும் முழு அளவையுமே இம் மாநிலத்து மாவு ஆலைகளுக்கு ஒதுக்கப்படுகிறது. மாவு ஆலைகள் பெருமளவில் கோதுமையை வாங்குவதிலிருந்து கோதுமையாகவே பயன்படுத்துவது அதிகமாக இல்லாது போயினும், கோதுமை பொருள்களை மக்கள் அதிகமாகப் பயன்படுத்துகின்றனர் என்பதை அறியலாம்.

பாசனத் திட்டங்கள் கட்டி முடிக்கப்பட்டிருப்பதாலும், கிணற்றுப் பாசனமும், மும்முர வேளாண்மைத் திட்டங்களும் மேம்பட்டிருப்பதாலும், நெல் உற்பத்தி அளவு பெருகியுள்ளதால் நெல் அரைப்பதற்கான ஆலை வசதிகளை மேன்மேலும் ஏற்படுத்த வேண்டியதின் அவசியத்தை அரசு உணர்ந்துள்ளது. இதற்கிணங்க, அரசு ஆலைத் தொழில் (முறைப்படுத்தல்) சட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் மாநில எல்லைகளில் 15 மைல் சுற்றியுள்ள பகுதிகள் நீங்கலாக ஏனைய பகுதிகளில் உள்ள அரிசி ஆலைகளுக்கு அனுமதிச் சீட்டுகள் பெறவேண்டுமென்கிற நிபந்தனையிலிருந்து 1970 ஆகஸ்டில் விலக்களிக்க அரசு முடிவுசெய்தது. ஆந்திரப் பிரதேசம், மைசூர் மாநிலங்களின் எல்லையோரப் பகுதிகளில் நெல் உற்பத்தியாகும் பகுதிகள் மிகுதியாக உள்ளதைக் கருதி, அந்த இடங்களுக்கு அரிசி ஏற்றுமதி செய்வதில் ஆதாயம் ஏதுவுமில்லை என்னும் காரணமாக கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டிய அவசிய மில்லாததால் அரசு மேற்சொன்ன விதிவிலக்கை இப் பகுதிகளுக்கும் நீட்டித்தது. கேரள எல்லைகளில் மட்டும், அரிசி ஆலைகள் ஏற்படுத்துவது குறித்தும் எல்லையோரப் பகுதிகளில் அரிசி ஏற்றுமதி குறித்தும் கண்டிப்பாகக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. ஏனெனில், கேரளாவில் அரிசிக்கு அதிக விலை கிடைப்பதால் சட்ட விரோதமாக எல்லையைத்தாண்டி அரிசி ஏற்றுமதி செய்யப்படுகிறது. அவ்வாறு சட்ட விரோதமாக அரிசி ஏற்றுமதி செய்வதைத் தடுப்பதில் பொதுமக்கள் ஒத்துழைப்பார்களாயின் இம் மாநிலத்துக்குள்ளே அரிசியின் விலைகள் உயராமல் இருப்பதற்குப் பெரிதும் உதவியாயிருக்கும்.

தாராளமாக உணவு தானியங்கள் கிடைத்துவரும் தற்போதுள்ள நிலைமைகளின்கீழ் உள்ளூர் விலைகள் அவ்வப்போது வேறுபடலாம். அறுவடைக் காலங்களைத் தொடர்ந்து ஒருசில காலத்திற்கு விலைகள் அரசு

விலைகளுக்குக் குறைவாக இல்லாவிட்டாலும் அரசு விலைகளின் அளவில் உள்ளன. இடைப்பட்ட காலங்களில்தான் விலைகளில் ஏறுமுகப்போக்கு உள்ளது. இந்த நிலைமை குறித்து அரசு விழிப்புடன் தொடர்ந்து கண்காணித்து வருகிறது. பேரளவு உயர்ந்த விலைகளைத் தருவதன் மூலமாகவாயினும், அரிசி மிகவும் பற்றுக்குறையாக உள்ள பகுதிகளுக்கு அரசு இருப்புகளை அனுப்பி வைப்பதன் மூலமாகவாயினும், விலைகளைக் குறைக்கும் ஏற்பாடுகளை எடுத்துக் கொள்ள அரசு தயாராக உள்ளது. வாணிகத்தில் கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டும் என்று 1970 ஜனவரியில் அமுலாக்கப்பட்ட கொள்கை மூலம் கிட்டுமென எதிர்பார்க்கப்பட்ட பயன்கள் பொதுவாகக் கிட்டியுள்ளன. நடப்பாண்டில் உணவுத் தானியங்கள் போதுமான அளவுக்கு உற்பத்தியாகி யுள்ளன. அரசு நேரடித் தலையீடு எதுவும் இல்லாமலேயே நியாயமான விலைகளில் அரிசி தொடர்ந்து ஆண்டு முழுவதும் கிடைக்கும் என்றும் அரசு எதிர்பார்க்கிறது. அரசு கட்டுப்பாடில்லாத தாராள வாணிபம் அளிக்கும் ஊக்கங்களின் அடிப்படையில் குடியானவர்கள் உற்பத்தியைப் பெருக்குவதற் கான முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபடுவர் என்றும், உற்பத்தியாளருக்காயினும், துய்ப்போருக்காயினும் தொல்லை எதுவும் இன்றி முறையான வினியோகம் ஏற்படும் வகையில் வணிகர்கள் தொடர்ந்து தங்களது ஒத்துழைப்பை அரசுக்கு நல்குவர் என்றும் அரசு மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளது.

பெருவாரியாகத் துய்க்கின்ற பெரும்பாலான பொருட்களைக் குறித்த மட்டில் இயல்பாக ஏற்படக்கூடிய பருவகால விலை வேறுபாடுகளைக் கருத்தில் கொண்டு பார்த்தால் பொதுவாக விலைகளின் போக்கு சாதகமாகவே இருந்து வந்துள்ளது. கடந்த ஓராண்டில் துய்ப்போர் விலைக் குறியீட்டெண்ணில் ஏற்பட்ட சொற்ப அதிகரிப்புக்குக் காரணம் விறகு விலை அதிகரிப்பும், வேறு மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிற பருப்பு வகைகள் விலை அதிகரிப்பும் ஆகும். நடப்பாண்டில் மாநிலத்துக்குள்ளேயே மேற்கொள்ளப் படும் உற்பத்திப் பெருக்கத்திற்கான திட்டத்தைத் தொடர்ந்து, பருப்பு வகைகளின் உற்பத்தி சீரடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இம் மாநிலம் விறகுத் தேவைக்கு அண்டை மாநிலங்களையே பெரிதும் நம்பியுள்ளது. விறகு அதிக அளவு கிடைப்பதற்கான வழிவகைகள் ஆராயப்பட்டு வருகின்றன. இது குறித்த பலனை பல்லாண்டுக்குப் பின்னரே அடைய முடியும். மண்ணெண்ணெய் அல்லது நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம் விற்பனை செய்யும் 'லிக்கோ' போன்ற பதிலிப் பொருட்கள் போதிய அளவுக்குக் கிடைப்பதால் விறகு விலைவாசிகள் கட்டுப்படுத்தப்படலாம். பற்றுக்குறை நிலைமைகளைத் தொடர்ந்து விதிக்கப்படும் சங்கடமான கட்டுப்பாடுகளினால் பொதுமக்களுக்கு ஏற்படும் தொல்லை முழுவதும் பெருவாரியாகப் பயன்படுத்தும் இன்றியமையாப் பொருட்களின் உற்பத்தியைப் படிப்படியாகப் பெருக்குவதனால் தவிர்க்கப்படும் என்று அரசு உறுதியுடன் நம்புவதோடு, இவ்வகையில் மேற்கொள்ளும் முயற்சிகளுக்குக் கூடுமான ஊக்கங்கள் அனைத்தையும் அளிக்கவும் தயாராக உள்ளது.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

---

### புதன்கிழமை, 1971 ஜூலை, 28.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### *District Educational Officers.*

* 497 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether there is any proposal to appoint one more District Educational Officer for Hosur Division in Dharmapuri district; and

(*b*) if so, when he will be appointed?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (ஆ) இச்செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, considering the hilly and difficult nature of the Dharmapuri district, one District Educational Officer is not sufficient. Since the matter has been pending for a long time, may I request the Hon. Minister to provide one more District Educational Officer for the Dharmapuri district?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்த மாவட்டத்திற்கு ஒரு மாவட்டக் கல்வி அதிகாரி இருப்பதால் இன்னொரு மாவட்டக் கல்வி அதிகாரி போடவேண்டும் என்ற செயற்குறிப்பு அனுப்பப் பட்டிருக்கிறது. அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது. விரைவில் அதுபற்றி முடிவு எடுக்கப்படும்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, தாலுக்காக்கள் அடிப்படையில், மூன்று தாலுக்காக்களுக்கு ஒரு மாவட்டக் கல்வி அதிகாரி என்ற முறையில் தான் இதற்கு முன்னால் அந்த அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள். இப்பொழுது புதிதாகச் சில தாலுக்காக்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. வடார்க்காடு மாவட்டத்தில் இரண்டு புதிய தாலுக்காக்கள் வந்திருக்கின்றன. இதை அடிப் படையாக வைத்து அதிகமாக வடார்க்காடு மாவட்டத்தில் மாவட்டக் கல்வி அதிகாரிகளைப் போடுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதிகமான அளவு மாவட்டக் கல்வி அதிகாரிகளைப் போடவேண்டும் என்று இருந்தாலும், நிதிப் பற்றுக்குறையையொட்டி, அதறகான முயற்சிகள் மெல்ல மெல்லத்தான் மேற்கொள்ளப்படுகின்றன. தர்மபுரி மாவட்டத்தில் ஒரே ஒரு மாவட்டக் கல்வி அதிகாரி இருப்பதால் இன்னொரு மாவட்டக் கல்வி அதிகாரியைப் போட வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் இந்த வினா எழுப்பப் பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : எல்லா மாவட்டங்களுக்கும் சீஃப் எஜுகேஷனல் ஆபீசர்கள் இருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது சேலம்-தருமபுரி இரண்டுக்கும் சேர்ந்து ஒரு சீஃப் எஜுகேஷனல் ஆபீசர் இருப்பதால் தாமதங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு சீஃப் எஜுகேஷனல் ஆபீசர் நியமிக்கப்படுவாரா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பெரிய மாவட்டத்திற்குப் பக்கத்தில் இருக்கும் சிறிய மாவட்டத்தையும் சேர்த்து ஒரே மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார். அந்த வகையில் தான் கோயம்புத்தூருக்கும், நீலகிரிக்கும் சேர்த்து ஒரு தலைமைக் கல்வி அதிகாரியும், திருநெல்வேலிக்கும், கன்னியாகுமரிக்கும் சேர்த்து ஒரு தலைமைக் கல்வி அதிகாரியும், சேலம், தருமபுரி இரண்டுக்கும் சேர்த்து ஒரு தலைமை கல்வி அதிகாரியும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். தருமபுரி மாவட்டத்திற்குத் தனித் தலைமைக் கல்வி அதிகாரி போடவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக் கிறார்கள். அது இனிமேல் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று.

*498 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(a) whether it is a fact that a number of posts of District Educational Officers and Chief Educational Officers have been kept vacant since October 1969; and

(b) if so, he details therefor?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கிடமில்லை.

திரு. எஸ். முருகையன் : வடார்க்காடு மாவட்டத்தில் நான்கு மாவட்டக் கல்வி அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களில் மூன்று பேர்கள் பெண்களாக இருக்கிறார்கள். பெண்களாக இருப்பதால் அவர்கள் பல பகுதிகளுக்கும் சென்று சுற்றிப்பார்கக முடியாத நிலை இருக்கிறது. மாவட்டத்தில் ஒருவர் மட்டும் பெண் கல்வி அதிகாரியாக இருக்கலாம் என்று வைத்துவிட்டு, மற்ற மூவர் ஆண் அதிகாரிகளாக நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பணிகள் எப்படி இருக்கின்றன என்றுதான் பார்க்க வேண்டும். அவர்கள் ஆண்களா, பெண்களா என்று பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. மாவட்டக் கல்வி அதிகாரிப் பொறுப்பேற்றுக்கொண்டிருப்பவர்களுக்கு ஜீப் வழங்கப்பட்டிருக் கிறது. அவர்கள் ஆண்களாக இருந்தாலும் பெண்களாக இருந்தாலும் அவர்கள் பணிகளை சிறப்புச் செய்யலாம். மாவட்டத்திற்கு இத்தனை பேர் தான் பெண்கள், இத்தனை பேர்தான் ஆண்கள் என்று வரையறை செய்ய இயலாது.



V211, 31 'N71
31 N71-10

திரு. ஏ. ஆர். சுப்பையா : ஆண்களைவிட பெண்கள் உண்மையாக உழைப்பார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது அந்தந்த இடங்களைப் பொறுத்தும், அவரவர்களைப் பொறுத்தும் உள்ள அனுபவமாகத்தான் இருந்திருக்கும். (சிரிப்பு)

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த ஆண்டு புதிதாக டிஸ்ட்ரிக்ட் எஜுகேஷனல் ஆபீசர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஏதாவது குறிப்புகள் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அண்மையில் மூன்று மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரிகள் ஓய்வு பெறுகிறார்கள். அதற் கான அளவு அந்த இடங்கள் நிரப்பப்பட வேண்டும். இராமநாதபுரம் மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரி இடமும் இப்பொழுது காலியாக இருக் கிறது. அதற்கும் ஒரு தலைமைக் கல்வி அதிகாரி நியமிக்கப்பட வேண்டும்.

*Bomb explosion in Girls' High School at Madurai.*

*499 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(a) whether a number of girl students were injured on or about the 13th January 1971 in a Girls' High School at Madurai by bomb explosion; and

(b) if so the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

61525

திரு. கே. டி. கே. தங்கமணி : மதுரையில் கேப்[illegible] இருக்கும் பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் ஒரு நாள் வெடிப்பு ஏற்பட்டு [illegible] காயம் ஏற்பட்டதே, அதுசம்பந்தமாகத் தொடர்ந்து புலீஸ் [illegible] நடந்ததே அதற்கும் இதற்கும் சம்பந்தம் உண்டு அல்லவா? தேதியில் வேண்டு மென்றால் சிறிது மாறுதலாக இருக்கலாம். இந்த ஆண்டு ஆரம்பத்தில்தான் நடந்தது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றி அங்கேயிருக்கின்ற இன்ஸ்பெக்டரஸ் ஆஃப் கர்ல்ஸ் ஸ்கூல்ஸ்லை கேட்டதில், 'அப்படிப்பட்ட சம்பவம் ஒன்றும் மதுரைப் பகுதியில் நடைபெறவில்லை' என்றுதான் தகவல் அனுப்பி வைத்திருக்கிறார்.

'It has been reported that no such occurrence took place in any of the Girls' High School in Madurai' என்றுதான் குறிப்பு வந்திருக் கிறது.

*Valuation of S.S.L.C. examination papers.*

*500 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(a) the total number of teaching staff employed for valuing S.S.L.C. papers during April 1971; and

(b) the centres to which they were assigned?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) 6,144 ஆசிரியர்கள் சென்னை நகரில் 16 மையங்களில் தேர்வுத் தாள்களைத் திருத்தும் பணியைச் செய்தனர்.

(இ) இது குறித்து அவைமுன் ஓர் அறிக்கை * வைக்கப்பட்டுள்ளது.

**திரு. பெ. மலைச்சாமி :** இந்த ஆண்டு மதிப்பெண்கள் போடும்போது தாராளமாகக் கொடுக்கப்பட்டது என்று சொல்லப்படுவது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அப்படி தாராளமாகப் போடப் படவேண்டுமென்ற நிலையும் இல்லை, அவர்களுக்கு அழுத்தமாகக் குறைக்க வேண்டுமென்ற தன்மையும் இல்லை. குறிப்பிட்ட தன்மையின் அடிப்படையில் தான் தேர்வுத் தாள்களைத் திருத்துகிறார்கள். இந்த ஆண்டு சதவிகிதம் ஓரளவு கணிசமாக இருக்கிறது.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** இந்தப் பரீட்சைத் தாள்களைத் திருத்த ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் சென்னைக்கு வந்து திருத்துகிறார்கள். அதற்காக அவர்களுக்கு போக்கு வரத்துச் செலவு, தங்கியிருக்கும் நாட்களுக்குப் படிச் செலவு ஆகியவை கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, மாவட்ட ரீதியில் ஒரு தலைமை இடத்தை வைத்து தேவையான ஆசிரியர்களைக் கொண்டு அங்கேயே திருத்த வழிவகை செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஏற்கனவே நான்கு பகுதி களாகப் பிரித்து நான்கு இடங்களில் வைக்கப்பட்டிருந்தது. அந்த நான்கு இடங்களுக்கு அனுப்பப்படுகிற ஆசிரியர்களின் போக்குவரத்துச் செலவு மற்றச் செலவுகள் அளவுக்குத்தான் சென்னையில் வைத்தாலும் ஆகிறது. சென்னை போன்ற ஒரே இடத்தில் வைப்பதால் கண்காணிப்பு மற்றவைகள் சீராக அமையும் என்ற காரணத்தால் சென்னையில் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி :** தேர்வுத் தாள்களை மதிப்பிட சென்னைக்கு வருகின்ற ஆசிரியர்களுக்கு நாள் ஒன்றுக்குத் தரப்படுகின்ற படி இங்குள்ள செலவுகளுக்குப் போதாது என்று சொல்லப்படுகிறது. அதை உயர்த்துவதற்கு அரசுக்கு யோசனை உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவர்களுக்குப் படி ஓரளவு இரண்டாண்டுக் காலத்திற்கு முன்பு குறைந்து இருந்தது. அது குறைவாக இருக்கிறது என்று சொன்னதன் பேரில் இந்த ஆண்டு ஓரளவு உயர்த்தித் தரப்பட்டிருக்கிறது. அதிலே எந்தவிதமான குறைபாடும் இந்த ஆண்டு ஏற்படவில்லை. திருத்துவதற்கு என்று தனியாகக் கட்டணம் தரப்படுகிறது. மதிப்பெண்கள் பதிவு செய்வது போன்ற காரியங்களுக்குத் தனியாகக் கட்ட ணங்கள் தரப்படுகிறது. நாள் ஒன்றுக்குத் தரப்படுகின்ற படி விவரங்கள் இல்லையென்றாலும் அவர்களுக்கு இந்த ஆண்டு உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக் கிறது.

**திரு. இ. ஜெயராமன் :** இந்த ஆசிரியர்கள் எந்த அடிப்படையில் தேர்ந் தெடுக்கப்படுகின்றனர்? இதிலே கம்யூனல் ஜி.ஓ. பின்பற்றப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இதிலே கம்யூனல் ஜி.ஓ. எல்லாம் கடைப்பிடிக்க வேண்டிய அவசியமில்லை. குறிப்பிட்ட ஆண்டு அனுபவத் திற்குப் பிறகு தகுதியுள்ள ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். 6,144 ஆசிரியர்கள் அளவுக்குத் தேர்ந்தெடுக்கும்போது தாரதம்மியம் பார்க்க வேண்டிய அவசியமில்லை. குறிப்பிட்ட அனுபவத்தின் அடிப்படையில் தேர்ந் தெடுக்கப்படுகின்றார்கள்.

* [illegible]ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** ஒரு ஆசிரியர் ஒரு நாளைக்கு எத்தனை விடைத்தாள்கள் திருத்த வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது? மொத்தம் உள்ள விடைத்தாள்களைத் திருத்துவதற்குக் காலக் கெடு வைக்கப் பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** காலையில் மூன்று மணி நேரம், மாலையில் மூன்று மணி நேரம் என்று வைத்திருக்கிறார்கள். 15 தாள்கள் குறைந்த அளவு திருத்த வேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். குறைந் தாலும் கூடினாலும் திருத்தப்பட்ட தாள்களைப் பொருத்துக் கணக்கிட்டுத் தரப் படுகிறது.

**திரு. இ. எஸ். தியாகராசன் :** இப்போது தேர்வு மதிப்பீடு சென்னையில் மட்டும் நடப்பதை மாற்றி இரண்டு மூன்று பெரிய ஊர்களில் வைக்க அரசு முயலுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அப்படி முன்பு வைக்கப் பட்டிருந்தது. கோவை, மதுரை, தஞ்சை, சென்னை என்ற முறையிலே வைக்கப்பட்டிருந்தது. அதற்கு ஆகும் செலவும். சென்னையில் நடத்துவ தற்கு ஆகும் செலவும் ஒரே அளவுதான் இருக்கிறது. அதோடு சென்னையில் அந்த ஆசிரியர்கள் தங்குவதற்கு இடங்கள் வசதியாக கிடைக்கின்றன. பெரிய பெரிய மாணவ விடுதிகள் இருக்கின்றன. திருத்துவதற்கான பெரிய இடங் களும் சென்னையில் வசதியாகக் கிடைக்கிறது. இந்தக் காரணங்களால் சென்னையிலே மட்டும் வைத்துத் திருத்தப்படுகிறது.

**திரு. நா. வீராசாமி :** சென்னை நகரத்தில் 6,144 ஆசிரியர்களும் வந்து தங்கி திருத்துவதற்கு வசதி, வாய்ப்புகள் இருந்தாலும் ஆங்கிலம், தமிழ், ஸயன்ஸ் என்று இருக்கும் ஒவ்வொரு பேப்பரையும் ஒவ்வொரு இடத்தில் திருத்தினால் நல்ல முறையில் தேர்வு முடிவுகளை அறிவிக்க வசதியாக இருக்கு மல்லவா? எனவே, ஆங்கிலம் சென்னையிலும், கணக்கு வேலூரிலும், தமிழ் மதுரையிலும் என்ற முறையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் திருத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சென்னையில் திருத்தப்படும் போதும் பேப்பர்கள் தனித் தனியாக சைதாப்பேட்டையிலும், தங்கம்பாக் கத்திலும், எழும்பூரிலும் என்று இப்படி தனித் தனியாகத்தான் வைத்து திருத்தப்படுகிறது.

DR. H. V. HANDE : Is it not a fact that some teachers were kept at Poonamallee and they also met the Hon. Minister and Director of Public Instruction and gave a memorandum requesting Government to consider their demands sympathetically with regard to daily allowance, etc., since they had to come all the way from Poonamallee. They also represented to me and I gave a copy of the memorandum to the Director of Public Instruction. May I know whether any steps were taken to redress their grievances and will the Government see that their grievances are not repeated at least in the next year?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போல் பூந்தமல்லியில் இருந்து ஆசிரியர்கள் வந்து என்னைச் சந்தித்தாக நினைவு இல்லை. பொதுவாக, முதலிலே அவர்களுக்குக் கொடுக்கப் பட்ட படி அவர்களுக்குப் போதுமானதாக இல்லையென்று குறிப்பிட்டதன் பேரில் ஓரளவு தற்போது உயர்த்தித்தரப்பட்டிருக்கிறது. எவ்வளவு என்ற விவரம் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : டைரக்டர் ஆப் எக்ஸாமினேஷன்ஸ், கமிஷனர் என்ற அடிப்படையில் சென்னையில் மட்டுந்தான் இருக்கிறார்கள். ரீஜனல் கமிஷன் மதுரையில் அமைக்கும் குறிப்பு உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாநிலம் முழுவதும் இரண்டு பல்கலைக் கழகப் பகுதிகளும் சேர்ந்து ஒரே இடமாக இருக்கும் காரணத்தால் ஒரே ஒரு கமிஷனர்தான் இருக்கிறார். மதுரைப் பல்கலைக்கழகம் வேறு, சென்னைப் பல்கலைக்கழகம் வேறு என்ற நிலை ஏற்படும்போது தனி கமிஷனார் ஏற்படுத்தலாம். அந்தப் பணிகள் விரிவடைந்து தனிக் கமிஷனர் தேவை என்ற நிலை ஏற்பட்டால் அப்போது இதுபற்றிப் பரிசீலனை செய்யலாம்.

திரு. இரா. இராமலிங்கம் : தங்கள் குழந்தைகளுக்கு அதிகமாக மார்க் வேண்டுமென்பதற்காக பெற்றோர்கள் சென்னையை நோக்கிப் படையெடுத்து வருகிறார்கள். அப்படி ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் தொடர்பு இல்லாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட குறைபாடுகள் ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் மைய அளவில் திருத்துகின்ற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எந்த விடைத்தாள் எந்த ஆசிரியருக்கு என்ன நேரத்தில் வருகிறது என்பது இப்போது இருக்கும் முறையில் சொல்ல முடியாது. யாரையும் யாரும் அணுக வாய்ப்பு இல்லை.

*National Seminar on Pre-School Children.*

*501 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether any National Seminar on pre-school children was conducted in Madras or or about the 19th December 1970; and

(*b*) if so, the details thereof,

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இந்தியக் குழந்தை நலக் குழு Indian Council for child welfare என்னும் நிறுவனத்தாரால் 14—12—1970 முதல் 19—12—1970 வரை சென்னை ராஜாஜி மண்டபத்தில் பள்ளி செல்லாதான் பருவமுள்ள சிறுவர்களுக்கான (National Seminar for Pre-School Children) தேசிய கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. இதில் சம்பந்தப்பட்ட உலக சுகாதார நிறுவனம், உணவு, வேளாண்மை நிறுவனங்கள் போன்ற தேசிய, சர்வதேச ஸ்தாபனங்களின் முக்கிய பிரதிநிதிகளும், அரசு அலுவலர்களும் பங்கெடுத்துக் கொண்டனர். இதில் கலந்து கொண்ட பல்வேறு நாட்டுப் பிரதிநிதிகளும் பள்ளி செல்வதற்கு முன் பருவமுள்ள சிறுவர்களைப் பற்றிய எல்லாப் பிரச்சினை-



களையும் விவாதித்தனர். தொடக்கக் கல்விக்கு முன்புகட்டப்பட வேண்டிய (Pre Primary Education) கல்வியைப் பற்றியும் பாதுகாப்பு, ஆரோக்கியம், ஊட்டம், குழந்தைகளுக்கு உணவூட்டுதல் போன்ற பல்வேறு பொருள்களைப் பற்றியும் மேற்கூறிய கருத்தரங்கில் விவாதிக்கப்பட்டது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : துணைத் தலைவர் அவர்களே, அந்தக் கருத்தரங்கிலே சில தீர்மானங்கள் போடப்பட்டன என்று அறிகிறேன். அந்தத் தீர்மானங்கள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஆறு வயதுக் குட்பட்ட குழந்தைகளுடைய தன்மையைப் பார்த்தால் 17 சதவிகிதத்தினராக இருக்கிறார்கள். இறப்பு விகிதத்தில் 40 சதவிகிதமாக இந்த வயதுடையவர்கள் இருக்கிறார்கள். இதற்கு அடிப்படையான காரணம் ஊட்டச் சத்து இல்லாததும், சரியான போஷாக்கு இல்லாததும்தான். இதுபற்றியெல்லாம் விரிவாகக் கருத்தரங்கில் விவாதிக்கப்பட்டு அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் முறையில் பல நல்ல கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

To promote health and nutrition throughout this period with highest priority during the first three years (health objectives)

என்றும்

To adopt measures for development of personality (educational objectives)

என்றும்

To provide suitable home and community environments to ensure security, love, acceptance and understanding (social objectives)

என்றும் மூன்று வகைகளில் வைத்து நிறைவேற்ற வேண்டுமென்று பல்வேறு கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். இவற்றை நடைமுறைப்படுத்த அடிப் படையான நிதிவசதி போதுமானதாக இல்லை. நிதிவசதி பெருகப் பெருக இவற்றை நடைமுறைக்குக் கொண்டுவரலாம். அவை அரசாங்கத்தின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. சி. நரசிம்மன் : ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இந்த யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். பள்ளி செல்லும் வயது ஆறு என்று இருப்பது கொஞ்சம் அதிகமாக இருப்பதால், நம்முடைய குழந்தைகள் புத்தி சாலிகளாக இருக்கும் காரணத்தால், பள்ளி செல்லும் வயதை ஐந்து என்று ஆக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆறு வயது அல்ல; ஐந்து வயது முடிய வேண்டுமென்றுதான் வைத்திருக்கிறோம். மேலை நாடுகளில் ஆறு வயது முடியவேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். ஐந்து வயது முடிவதற்கு முன்னால் ப்ரீ ஸ்கூல் முறைகள், கிண்டர்கார்டன் முறைகள் இருக்கின்றன. ஒன்றில் இருந்து மூன்றுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு தேக வளர்ச்சி, மூளை வளர்ச்சிக்குப் பயன்படக்கூடிய அளவுக்கு சத்துத் தன்மை பொருந்திருக்கும் உணவுகள் தயாரிக்கப்பட்டு வழங்கும் முறைகள் ஆங்காங்கு மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. இந்த வகையில் சிறிய யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள், ஐந்து வயது முடிய வேண்டுமென்பதுதான் கணக்கு.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Education whether the authorities who conducted the Seminar have published any Souvenir or special books and the books are available for sale?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இது 'இந்தியன் கவுன்சில் ஃபார் சைல்ட் வெல்பேர்' நிறுவனத்தார் நடத்தினார்கள். சென்னைக் கிளையில் அதுபற்றிய குறிப்புகள் இருக்கக்கூடும். தேவையானால் அதை வாங்கிக் கொள்ளலாம்.

DR. H. V. HANDE : What were the results of this Seminar and what are the effects of the Seminar on the Government's policies and Government's programmes, whether the Government have taken stock of the fact that almost every mother and father want to send their children to kindergarten school and there is practically no kindergarten institution run by the Government? May I know in view of these, whether the Government are prepared to start at least a few kindergarten institutions in some important places as a sort of pilot project?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அந்தக் கருத்தரங்கில் பல் வேறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவும் தனித்தனியாக விரிவான முறையில் அறிக்கைகள் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதுபற்றி, உதாரணமாக,

**In order to expand the services for the pre-school child it is necessary to develop a suitable administrative and physical infrastructure. There should be sufficient number of pre-school institutions with adequate equipment. To enable health functionaries to reach the largest number of pre-school children, one Primary Health Centre should be provided for 25,000 population and one sub-centre for every 5,000 people. Adequate staffing pattern and sufficient budgetary provision for implementation of programmes is required. Job descriptions of all levels of workers should be clearly defined, keeping in view the quantum of workload and their limitations in execution, education and co-ordination. There should be adequate channels of communications of the field staff with administrative authorities at all levels for effective implementation of the programmes.**

என்றெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசு ஆரம்பிக்க வேண்டு மென்று குறிப்பிடப்படவில்லை. தனியார் துறைகளிலும் பொது நன்மை கருதி துவக்குகிறவர்களும் கிண்டர் கார்டன் ஸ்கூல் என்று வைத்திருக் கிறார்கள். அரசு சார்பில் ஆரம்பிப்பது என்பது கடினமானதொன்று. துவக்கப்பள்ளி, உயர்துவக்கப் பள்ளி நிர்வாகமே கடினமாகயிருக்கும்போது அதிலும் அரசாங்கப் பொறுப்பை ஏற்றுக்கொள்வது என்பது கடினமாக யிருக்கும். அதுபற்றிய செயற்குறிப்பு அரசிடம் இல்லை. அப்படிப்பட்ட ஸ்கூல்களுக்கு என்கரேஜ்மெண்ட் தர வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.





### சோழன் கோட்டத்தினருகே ஊசிவாய்க்காலின் குறுக்கே பாலம்.

* 502 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம்-சீர்காழி தாலூக்காக்களுக்கிடையே சோழன்கோட்டம் அருகில் ஊசிவாய்க்காலுக்குக் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பாலம் அமைப்பதற்கான செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

**திரு. என். கிட்டப்பா :** சீர்காழி தாலுகாவையும் மாயூரம் தாலுகாவையும் இணைக்கும் சோழன்கோட்டம் அருகில் ஊசிவாய்க்காலுக்கு குறுக்கே ஒரு பாலம் கட்டுவதற்கு 1964-ம் ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் அன்று ஆட்சித் தலைவராக இருந்த திரு. வேதநாராயணன் அவர்கள் ஒரு அடிக்கல் நாட்டி யுள்ளார். இன்றுவரை ஏழு ஆண்டுகள் முடிந்தும்கூட அந்தப் பாலம் கட்டு வதற்கான வேலை துவங்கப்படவில்லை. அதற்கான காரணங்களை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அந்த வாய்க்காலின்மேல் ஒரு பாலம் அமைக்க தோராயமாக 25,000 ரூபாய் தேவைப்படும் என்று கணக் கெடுக்கப்பட்டுள்ளது. அப்பாலம் அமைப்பில் ஏற்படும் செலவில் மாயூரம், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியங்கள் 50% ஏற்பது என்று தீர்மானிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வாய்க்காலின் நீர் பெருக்குத் தன்மை போன்ற விவரங்கள் பொதுப்பணித் துறையிடமிருந்து ஒப்புதல் அளிக்கப்பட்ட பிறகு பாலம் அமைப்பதற்கான வேலைகள் மேற்கொள்ளப்படும்.

### ஆனந்ததாண்டவபுரம்-மன்னிப்பள்ளம் சாலை

* 503 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், மாயூரம் தாலுக்காவில் ஆனந்ததாண்டவபுரத்தையும் சேத்தூர் மன்னிப்பள்ளத்தையும் இணைக்கும் சாலையை செப்பனிட அரசு உத்தேசித்துள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** இந்த ஆனந்ததாண்டவபுரம்-சேத்தூர் மன்னிப் பள்ளம் சாலையில் விவசாய விளைபொருள்கள் அதிகமாக எடுத்துச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. அங்கு போக்குவரத்து மிகவும் அதிகரித்திருப் பதால் இனியாவது அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்து அந்தச் சாலையை அமைத்துத் தர முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சேத்தூர் மன்னிப்பள்ளம் மாயூரம் ஊராட்சி மன்றத்தில் அடங்கிய ஊராட்சிமன்றச் சாலையாகும். இதை அபிவிருத்தி செய்ய தோராயமாக ரூ. 2,80,000 தேவைப்படுகிறது என்று தெரி விக்கப்பட்டிருக்கிறது. இச்சாலை அபிவிருத்தி வேலைகள் அங்கீகரிக்கப்பட்ட சாலை அபிவிருத்தித் திட்டங்களிலும், நான்காவது ஐந்தாண்டுத் திட்ட நகல்

வேலைப்பட்டியலிலும் இடம் பெறவில்லை. எனவே அபிவிருத்தி வேலைகள், பிற சாலைகள் என்ற தலைப்பின்கீழ் எடுத்துச் செயலாற்ற வேண்டிவரும். திட்டகால வேலைப்பட்டியலில் இந்தச் சாலை அபிவிருத்தி வேலை இடம் பெறவில்லை. வருங்காலத்தில் தயாரிக்கப்படவிருக்கும் சாலை அபிவிருத்தித் திட்டங்களில் நிதிவசதியை அனுசரித்துத்தான் இதையும் சேர்த்து ஆவன செய்யவேண்டி வரும்.

## *Papanad-Sholankarai Bridge.*

* 504 *Q.*—THIRU *N. DENNIS*: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Papanad-Sholankarai bridge in Thanjavur district is to be reconstructed; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) பாலத்தைப் புதுப்பிக்கும் வேலை முடிவடைந்து, போக்குவரத்திற்கு 29—4—1971 அன்று திறந்து விடப்பட்டுள்ளது.

## நகராட்சிகளுக்கு நிதிக் குழுக்கள்

* 505 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சிகளில் புதிதாக நிதிக் குழுக்கள் அமைத்திடக் கோரி தமிழ்நாடு அரசு நகராட்சிகளுக்கு தாக்கீது அனுப்பி உள்ளதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஆம்.

**திரு. என். கிட்டப்பா :** இவ்வாறு நிதிக் குழுக்கள் அமைக்கவேண்டுமென்று நகராட்சிகள் கோரிக்கைகள் விடுத்துள்ளனவா ? அமையவிருக்கும் நிதிக் குழுக்களின் பணிகள் என்னவென்று அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** 1970-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் சென்னையில் நடந்த தமிழக நகரவைத் தலைவர்கள் மற்றும் நகராட்சி ஆணையாளர்களின் கூட்டு மாநாட்டில் அப்போதைய உணவு-உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தனது தலைமை உரையில், நகரவைகள் தங்கள் நிதிநிலையைக் கண்காணிக்கவும் நகராட்சிகளில் உள்ள எல்லாப் பகுதிகளுக்கும் வசதிகள் செய்யப்பட்டனவா என்பதைக் கண்காணிக்கவும் ஒரு நிதிக்குழு அமைத்திட வகை செய்யவும், அக்குழு நகரவையின் தலைவர், ஆணையர் மற்றும் நகரவையால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அங்கத்தினரைக் கொண்டதாக இருக்கலாம் என்ற கருத்தினைத் தெரிவித்தார். நகரவைகள் ஓர் குறிப்பிட்ட வேலையைச் செயல்படுத்த, சட்டத்தில் குறிப்பிடாத ஆலோசனைக் குழுக்களை 1920-ம் வருடத்திய தமிழக மாவட்ட நகராட்சி சட்டத்தின் 23-வது பிரிவின்படி அமைக்க வழியுண்டு. இப்பிரிவின்கீழ், நகரவைகள் மேலே குறிப்பிட்ட நிதிக்குழுக்களை அமைக்க கிராம வளர்ச்சி-உள்ளாட்சித் துறை 17—12—1970-ம் தேதிய அரசாணை எண் 2364-ல் நகரவைகளைக் கேட்டுக் கொள்ளப்பட்டது. இதன்படி நகரவைகள் நிதிக்குழுக்கள் அமைத்துள்ளன. இக்குழுக்களுக்கு நகரவைத் தலைவர் தலைவராக இருப்பார். அதில் ஆணையரும், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு உறுப்பினரும் உறுப்பினர்களாக இருப்பார்கள்.





**திரு. ஏ. சி. நரசிம்மன் :** இந்த நிதிக்குழுக்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ள உத்தரவிடப்படுமா ? ஏற்கனவே ஆசிரியர்களை மாற்றுவதில் பஞ்சாயத்துக்கள் அட்ஹாக் கமிட்டிகளில் சட்டமன்ற உறுப்பினர்களைப் போட்டிருக்கிறார்கள். அதேபோல் இந்தக் குழுக்களிலும் சட்டமன்ற உறுப்பினர்களைப் போட்டால் அவர்கள் தங்கள் ஆலோசனைகளை வழங்க சௌகரியமாக இருக்கும். ஆகவே அரசு இதைப் பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இவை, நகராட்சிகளின் நிர்வாகத்தைப் பற்றிக் கவனிப்பதற்காக அமைக்கப்படுகின்ற குழுக்கள். ஆகவே நகரசபை உறுப்பினர்தான் அதில் இடம் பெற்றிருக்க முடியும். ஆகவே நகராட்சித் தலைவர், ஆணையர், நகராட்சி உறுப்பினர்களாக இருப்பவர்களில் தேர்ந்தெடுக்கப்படுகிற ஒருவர் இருக்கவேண்டுமென்ற நியதி இருக்கிறது. வெளியே இருப்பவர்கள் அதிலே உறுப்பினராக இருக்க இயலாது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இப்படிப்பட்ட நிதிக்குழுக்களை எல்லா நகராட்சிகளும் அமைக்கவேண்டுமென்று குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறதா ? இதுவரையில் எத்தனை நகராட்சிகள் அப்படிப்பட்ட குழுக்களை அமைத்திருக்கிறார்கள் ? அப்படி அமைப்பதற்கு ஏதாவது காலக்கெடு நிச்சயிக்கப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அமைக்கவேண்டுமென்றுதான் 17—12—1970-ல் அரசு ஆணை பிறப்பித்து நகரமன்றங்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறது. காலக்கெடு குறிப்பிடவில்லை. எவ்வளவு நகரமன்றங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதுபற்றி விவரம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் தயாரித்துத் தரலாம்.

## அரக்கோணம் அரசு மருத்துவமனையில் கதிர்வீச்சுப்பிரிவு

* 506 வினா—**திரு. என். எஸ். பலராமன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் அரசாங்க மருத்துவமனையில் எக்ஸ்-ரே யூனிட் அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) & (இ) அரக்கோணம் அரசாங்க மருத்துவமனையில் எக்ஸ்-ரே யூனிட் அமைப்பதற்கான ஒப்புதல் உடனடி வழங்கப்பட்டிருக்கிறது. விரைவில் அமைக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வி, அரக்கோணம்பற்றியது.

**திரு. நா. வீராசாமி :** எக்ஸ்-ரே யூனிட் அமைப்பதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. எக்ஸ்-ரே யூனிட்டும் வந்திருக்கிறது. ஆனால் அதைப் பொருத்துவதற்கு அங்கு கட்டடம் இல்லை. பழைய கட்டடத்தில் அதைப் பொருத்தினால் நிச்சயம் அந்த இயந்திரம் பாழாகிவிடும். எனவே ஒரு புதிய கட்டடத்தை அங்கே அமைக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இந்தத் துறை அவ்வளவு பழைய துறை அல்ல. ஆகவே பழைய கட்டடத்தில் பொருத்துவதற்கு எண்ணம் இல்லை. ரூ. 37,000 கட்டடம் கட்ட, ரூ. 50,000 யூனிட் அமைக்க, ரூ. 8,500 பிற கருவிகளுக்கு என்ற ஏற்பாடு இருக்கிறது.

1971 ஜூலை 28]

**திரு. க. உரொ. எட்மண்ட்:** சில மருத்துவ மனைகளில் இப்பேர்ப்பட்ட ஊடுருவிக் கதிர் இயந்திரங்களை அமைக்க பலவிதமான இடர்பாடுகள் உள்ளன. அவற்றை அமைத்த பிறகு ஏற்படும் ரெக்கரிங் எக்ஸ்பென்டிச்சர், பராமரிப்பதற்கான செலவு, அதற்கான அலுவலர்களைப் போடுவதற்கு ஏற்படும் செலவு இவைகளை காரணமாக போடமறுக்கிறார்கள். . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள். கேள்வி அரக்கோணம் பற்றியது. கேள்வி எக்ஸ்-ரே யூனிட் பற்றியது. எக்ஸ்-ரே யூனிட் என்ன, ஏது என்ற விளக்கங்கள் எல்லாம் இங்கே தேவையில்லை.

THIRU G. R. EDMUND: It is a general question . . .

முற் ல் 9-30 MR. DEPUTY SPEAKER: There is no room for general question now. The main question relates to the Hospital at Arkonam.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** தலைவரவர்களே, பொதுமக்களாகவே முன் வந்து எக்ஸ்-ரே பிளாண்ட் வைக்க முன்வரும்போது, அவற்றை வாங்கி மருத்துவ மனைகளில் வைக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** கேள்வி கேட்ட உறுப்பினர் அப்படி ஒரு 10 எக்ஸ்-ரே பிளாண்ட்க்கு ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**டாக்டர் ச. மு. பழனியப்பன்:** துணைத் தலைவரவர்களே, இதுபோன்ற எக்ஸ்-ரே பிளாண்ட்கள் எந்த அடிப்படையில் அமைக்கப்படுகிறது? ஹாஸ்பிடலில் இருக்கும் படுக்கை எண்ணிக்கைகளைப் பொறுத்தா அல்லது அந்தப் பகுதியிலுள்ள டாக்டர்களின் ரிக்வஸ்ட்டைப் பொறுத்து அமைக்கப் படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, பெரும்பாலான மருத்துவ மனைகளில் 25 படுக்கைக்குக் குறையாமல் இருந்தால் இந்த வசதி செய்து கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். அதை விரிவுபடுத்துவதற்கான முயற்சி எடுக்கிறபோது அந்த எண்ணிக்கையைக் குறைக்க அரசு முன்வரும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பொதுக்கேள்வி குறித்து நல்ல விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அரக்கோணத்தைப்பற்றி துணைக் கேள்விகள் கேட்கவும்.

**திரு. கே. எ. வகாப்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரக்கோணம் எக்ஸ்-ரே மருத்துவ மனையில் ஏதேனும் பணம் வசூல் செய்யப்படுமா? பணம் கொடுத்தால் எக்ஸ்-ரே நிலையம் அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். காயல்பட்டினத்தில் பணம் கொடுத்துள்ளதாக அறிகிறேன், அங்கே ஒரு எக்ஸ்-ரே நிலையம் அமைக்கப்படுமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதற்காகத் தனிக் கேள்வி போட வேண்டும்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, வட்ட தலைமை மருத்துவ மனையில் இந்த ஏற்பாடு செய்யப்படும் என்று சொன்னேன். காயல்பட்டினத்தில் உள்ளது வட்ட தலைமை மருத்துவ மனைதானா என்பது தெரியவில்லை



1971 ஜூலை 28]

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** உப தலைவரவர்களே, இந்த எக்ஸ்-ரே யூனிட் அரக்கோணம் மருத்துவ மனையில் அமைப்பது கேட்டு மிக்க மகிழ்ச்சி. அந்த எக்ஸ்-ரே யூனிட்டுக்குத் தக்கவாறு பிலிம்கள் கொடுப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, அமைச்சராக இருந்தவர்கள் அதை நிச்சயமாக உணர்ந்து இருப்பார்கள்.

When there is non-recurring expenditure, recurring expenditure is also taken into consideration.

### வட்டத்துக்கு ஒரு வலம்வம் மருந்தகம்

*** 507 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாலுக்காவுக்கு ஒன்று வீதம் நடமாடும் மருந்தகம் ஒன்று அமைத்து செயல்பட திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இல்லை.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, இந்த நடமாடும் மருத்துவ மனைக்கு வேண்டிய ஊர்தியும், மருந்தும் அந்தந்த வட்டாரப் பொதுமக்களின் நன்கொடையைப் பெற்று அரசாங்கத்திற்கு அளித்தால், அரசாங்கம் அதை ஏற்று நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** நடமாடும் மருத்துவமனை என்று சொல்கிறபோது மிக எளிதாகவும், அதன் பயனைக் கருதுகிறபோது மிக மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. என்றாலும் அதை நடத்திச் செல்வதற்கு, நடமாட முடியாத சக்தியை நடமாடச் செய்வதுபோல், பெரும் செலவு ஆகிறது. இன்று அந்த நடமாடும் மருந்தகங்கள் மருத்துவக் கல்லூரியோடு இணைக்கப்பட்டு, மருத்துவ மனைகளிலே மட்டும் 2 இடங்களில் மத்திய அரசின் உதவியோடு செயல்படுகிறது. தமிழக அரசு நடமாடும் மருத்துவ மனையை ஆரம்பிப்பதைவிட, மருத்துவ மனைகளைச் சுற்றுப்புறச் சூழ்நிலையில் 25-40 மைல் சுற்றளவில் எங்கும் அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது. மலைப் பகுதியில், காட்டுப்பகுதியில், இப்போது இந்த நடமாடும் மருந்தகங்கள் இருக்கின்றன. இப்போது இருக்கும் இடங்கள்: ஆலங்காயம், வடஆற்காடு மாவட்டம்; கூடலூர், நீலகிரி மாவட்டம்; உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்; செய்யூர், செங்கற்பட்டு மாவட்டம்; அரூர், தருமபுரி மாவட்டம்; ஜெயம் கொண்டான், திருச்சி மாவட்டம்; சங்கரன்கோவில், திருநெல்வேலி மாவட்டம்; இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம்; கொடைக்கானல், மதுரை மாவட்டம் என்று இப்படியாக மலைசூழ்ந்த பகுதியாக இருந்து, மக்களுக்கு வேறு மருத்துவ வசதி இல்லாத இடங்களில் நடமாடும் மருத்துவ மனைகள் அமைக்கிறோம். இன்னின்ன நாட்களில் அந்த நடமாடும் மருந்தகங்கள் அந்தந்த ஊர்களுக்குச் செல்லவேண்டுமென்று இருக்கிறது. இதை விரிவு படுத்தி தமிழகத்தின் கிராமப்புறத்தில் அமைக்கவேண்டிய மிகப்பெரிய அவசியம் இருக்கிறது என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளமுடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் அவர்களின் பதில் மிக விளக்கமாக இருக்கிறது. மேலும் என்ன கேள்வி கேட்கப்போகிறீர்கள்?

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, நடமாடும் மருத்துவ மனை ஆலங்காயத்தில் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் ஒரு வாரத்திற்கு ஒரு முறை அங்கே நடமாடும் மருத்துவ மனை நடமாடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் 6 மாதத்திற்கு ஒரு முறைகூட அந்தப் பகுதியில் அது நடமாடுவது இல்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? அதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இருக்கிற முறைகளைத்தான் குறிப்பிலிருந்து நான் கூற முடியும். ஏற்படுகிற குறைகளை அமைச்சரவர்களுக்கு ஏற்கெனவே தெரிவித்து இருக்கவேண்டும். அமைச்சர் அறிவாரா என்று கேட்கிறபோது, அமைச்சருக்கு அறிவித்தாரா என்று எண்ணிப்பார்க்க வேண்டும்.

**திரு. ஈ. எம். நடராசன் :** தலைவரவர்களே, பவானி வட்டத்தில் உள்ள பர்கூர் மலைப்பகுதி . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்போதுதான் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அமைசசர் அவர்களிடத்தில் அறிவிப்பு கொடுக்காமல் எந்தத் தகவலையும் கேட்பது சரியல்ல.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, as Hosur and Denkanikottah taluks are hilly and difficult areas, may I know whether such mobile dispensaries will be started in those taluks?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Recently the Government considered that the Coimbatore and Dharmapuri districts which are largely covered by hilly terrain should have mobile medical facilities and have sanctioned two mobile units, one for the Coimbatore district and another for the Dharmapuri district. A mobile medical van has been supplied to each of these two districts என்ற குறிப்பு என்னிடத்தில் இருக்கிறது.

### மணல்மேட்டிலுள்ள அரசினர் மருந்தகம்

* 508 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தொகுதி மணல்மேட்டில் உள்ள அரசினர் மருந்தகத்தினை, மருத்துவமனையாக மாற்றி அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, இந்த மணல்மேடு அண்மையில் பேரூராட்சியாக உயர்த்தப்பட்டு இருப்பதாலும் அங்கே மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை இயங்கி, அதிலே அதிகமான தொழிலாளர்கள் பணிசெய்வதாலும், அங்கே உள்ள மருந்தகத்தை, ஒரு மருத்துவமனையாக மாற்றம் செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மணல்மேட்டிலிருந்து 6 மைல் தொலைவில்தான் மாயூரம் நகராட்சி பகுதி இருக்கிறது. அங்கே பெரிய மருத்துவமனை இருக்கிறது. பஞ்சாயத்து ஒன்றியம் தீர்மானம் போட்டு அனுப்பாத இடத்தில் மருத்துவமனை அமைக்க நிதி இடம் தராது.



### அரசு ஊழியர்களுக்கு மருத்துவப்படி

* 509 வினா—**திரு. மா. பா. சாரதி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு ஊழியர்களுக்கு மருத்துவச் செலவுப்படி (Medical Allowance) வழங்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனின், அது எப்போது செயல்படுத்தப்படும் ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) தலைவரவர்களே, அரசு ஊழியர்களுக்கு மருத்துவச் செலவுப்படி வழங்கும் திட்டம் இல்லை. ஆகவே, அந்தக் கேள்வி எழவில்லை.

(இ) மருத்துவச் செலவுப்படி வழங்கும் திட்டம் இல்லாமலே இப்போது அரசாங்கம் ஊழியர்களின் நிலைமைக்கேற்ப மருத்துவச் செலவு நிதி வழங்கப் படுகிறது.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, அரசாங்க ஊழியர்களில் சிலர் தான் இந்த மருத்துவப் படியை பெறுகிறார்கள். அதாவது டாக்டரிடத்தில் சென்று மருந்து வாங்கி, அதற்கான செலவை அரசாங்கத்திலிருந்து பெற்றுக் கொள்கிறார்கள். இதை வாய்ப்புள்ள சிலர்தான் பெற்றுக் கொள்கிறார்கள். வாய்ப்பு இல்லாதவர்கள் அதைப் பெற முடியவில்லை. ஏனெனில் அங்கே ஆதரைஸட் மெடிகல் அட்டென்டென்ட் இருப்பது இல்லை. ஆகவே சராசரியில் அரசாங்கமே செலவைப் பங்கிட்டு ஒரு அரசாங்க ஊழியருக்கு ரூ. 5-10 என்று கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, இது ஒரு தவறான கருத்து. நோய் சராசரியாக வருவது இல்லை. பாதிக்கப்படுபவர்களுக்கு ஆகும் செலவையும் சராசரியாகக் கணக்கிட்டுக் கொடுக்க முடியாது. வியாதியின் அளவையும் சராசரியாகத் தீர்மானிக்க முடியாது. செலவையும் சராசரியாகக் கணக்கிட முடியாது. இந்த அரசாங்கம் நோய்வாய்ப்படுபவர்களைச் சராசரியாகக் கணக்கில் எடுத்துக்கொள்ளத் தயாராக இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, இந்த மருத்துவ வசதி ஓய்வு பெற்ற சர்க்கார் ஊழியர்களுக்கும் கொடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டதே, அது அமுல் செய்யப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** குறிப்பு இப்போது இல்லை.

### சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை

* 510 வினா—**திரு. கே. டி. கே. தங்கமணி :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோகனூரிலுள்ள, சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட்டுக்கும், அதன் தொழிலாளர் சங்கத்திற்குமிடையே, ஊதியங்கள், பூரிப்பூதியங்கள் ஆகியவை குறித்து 18—8—69 அன்று ஏற்பட்ட உடன்பாடு செயல்படுத்தப்பட்டுள்ளதா ?

இ) இல்லையெனில், அதன் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) பணியாளர்களுக்கு ஊதியங்களை மாற்றியமைத்தல் குறித்து, 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 18 (1) பிரிவின்கீழ் 18—8—69-ஆம் நாளிட்ட உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. அவ்வுடன்பாட்டில் பூரிப்பூதியம் குறித்து வகை ஏதும் செய்யப் படவில்லை. இவ்வுடன்பாடு செயல்படுத்தப்படவில்லை.

(இ) தலைவர், தங்களது இசைவு இன்றிச் செயல்பட்டுவிட்டார் எனக் காரணங்காட்டி, இயக்குநர் குழு இவ்வுடன்பாட்டில் கையெழுத்திட்டு உறுதி செய்யவில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, 18—8—1969 அன்று ஏற்பட்ட உடன்பாடு சட்டரீதியான உடன்பாடுதானா? அதன் ஷரத்துக்கள் என்னென்ன? என்னென்ன பகுதிகள் அமுலாக்கப் பட்டிருக்கிறது, என்னென்ன பகுதிகள் அமுலாக்கப்படவில்லை என்பதையும் அறிவிக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** ஊதிய உயர்வு பற்றிய உடன்பாடு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

### *Illicit drinks seized in Madras.*

* 493 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state :

(a) whether a large quantity of illicit drinks was seized from Harbour area and Choolaimedu in Madras City about the 10th October 1970; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) & (இ) 1970-ம் ஆண்டு அக்டோபர் 10-ம் நாள் துறைமுகப்பகுதியிலோ அல்லது சூளைமேட்டிலோ கள்ளச்சாராயம் எதுவும் கைப்பற்றப் படவில்லை. இருப்பினும், 9—10—70 அன்று காலையில் துறைமுக இன்ஸ்பெக்டரும், அவருடைய காவல்படையும் எம்.டி.ஒய். 7559 எண்ணுள்ள காரை இராயபுரம் இருப்புப்பாதை சாலைக்கடவில் இடைமறித்து காரின் பின் பகுதியில் 4 கோணிகளில் மறைத்து வைக்கப் பட்டிருந்த 111 ஜானிவாக்கர், ரெட் லேபிள், ஸ்காட்ச் விஸ்கி புட்டிகளைக் கைப்பற்றினார்கள் என்று காவல் துறை கமிஷனர் தெரிவித்துள்ளார்.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவர் அவர்களே, கள்ளச்சாராயம் மலிந்த இந்தக் காலத்தில், கள்ளுக்கடையை எதிர்த்து காந்தியாக மாறப்பார்க்கிறார்களோ, அதைப் பற்றி அரசு என்ன கருதுகிறது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதைப் பற்றி அரசு எதுவும் கருதவில்லை (சிரிப்பு).

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், வெளிநாட்டுச்சாராயம் இவை என்று தெரிகிறது. அப்படியானால், இது லைசென்ஸ் பெற்று இந்தமாதிரிக் கொண்டு வந்தார்களா அல்லது எப்படிக் கொண்டு வந்தார்கள்?





**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** லைசென்ஸ் எதுவும் இல்லாததால்தான் அவர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். காரிலே சென்ற மனிதேசு, விநாயகம், வர்கீஸ் என்ற மூன்று பேர்கள்மீது வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**திரு. எம். தேவராசன் :** தலைவர் அவர்களே, மதுவிலக்கு ரத்து ஆனதால், வழக்கு மன்றத்திலே இருக்கும் வழக்குகள் திரும்பப் பெறப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஏற்கனவே சாட்டப்பட்ட குற்றங்கள் மீது போடப்பட்ட வழக்குகள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கும்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவர் அவர்களே, இவ்வாறு கள்ளச்சாராயம் பிடிக்கப்பட்டால் அது பயன்படுத்தப்படுகிறதா? விற்பனை செய்யப்படுகிறதா அல்லது அழிக்கப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** வழக்கு விசாரணையில் தீர்ப்பு வழங்கப் பட்டபிறகு, பெரும்பாலும் இவை அழிக்கப்படுகின்றன.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, வெளி நாட்டுச்சாராயம் கொண்டு வரும்போது, பலவிடங்களில் 'செக்' செய்கிறார்களே, அப்படி இருக்கும்போது 100, 115 பாட்டில்கள் எப்படி வருகிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவைகள் ஒன்றும் கால், கை முளைத்து வந்துவிடவில்லை, காரிலேதான் வந்தன.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** தலைவர் அவர்களே, வெளிநாட்டு கள்ளப் பொருள்கள் அங்கே உள்ள கூட்டுறவுப் பண்டகசாலைகளில் விற்பனை செய்யப் படுகிறது. இம்மாதிரியான மதுபானங்களை நீண்டநாட்கள் கழித்து, அழித்து விடுவது என்ற உத்தரவு அளித்து, அதற்குப் பிறகு அழிப்பதற்குப் பதிலாக, கூடியவிரைவில் இப்படிப்பட்ட மதுக்களை விற்பனை செய்ய ஆலோசனை செய்து, லைசென்ஸ் பெற்றவர்கள் மூலம் விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்தச் சங்கடமெல்லாம் இன்னும் ஒரு மாதத்திற்குத்தான்.

**திரு. சொ. காவேரிமணியம் :** இவ்வாறு கள்ளச்சாராயத்தைக் கொண்டு சென்ற வாகனமான கார் கைப்பற்றப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கார் [illegible]ப்பற்றப்பட்டுத்தான், அவர்களெல்லாம் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

### *Seizure of 'Illustrated Weekly of India'*

* 494 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the copies of the "Illustrated Weekly of India" were seized by the police about February—March, 1971; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

### ராஜ்பவனை சுற்றுலா மாளிகையாக்கல்

*495 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போதுள்ள தமிழக ஆளுநரின் மாளிகையை சுற்றுலா மாளிகை யாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதுபற்றிய செயற்குறிப்பு இப்பொழுது எதுவும் இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தற்போது புதிதாக வந்துள்ள ஆளுநர் தனது மாளிகையின் பரப்பளவினைக் குறைத்துக் கொள்வது பற்றிக் கருத்துத் தெரிவித்துள்ளார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாளிகையை மாற்றுவது பற்றி கருத்து தெரிவிக்கவில்லை. ஆனாலும், மாளிகையோடு ஒட்டியிருக்கின்ற நிலப்பரப்பை குறைத்துக்கொள்வது பற்றி கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, உதகையிலுள்ள கவர்னர் மாளிகை ஆண்டுக்கு 10 மாதங்கள் யாரும் உபயோகிக்காமல் இருக்கிறதே, அதை அந்தப் பத்து மாதங்களில் நல்ல காரியத்திற்கு உபயோகப்படுத்த முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பத்து மாதங்களில் நல்ல காரியங்கள் எத்தனைக்கோ பயன்படுகிறது.

திரு. எம். சுரேந்திரன் : ஆளுநர் மாளிகை சம்பந்தமாக அகில இந்திய ரீதியில் கொள்கை வகுத்து, இப்படிப்பட்ட ஆடம்பரமான இடங்களைக் குறைப்பதுபற்றி மத்திய சர்க்காரிலிருந்து ஏதாவது ஆலோசனை வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஆளுநர் ஆடம்பரம் இல்லாத அளவில் இருக்க இவ்வளவு பெரிய இடம் தேவையில்லை என்கிற குறிப்புக்கள் அனுப்பப் பட்டு, இந்த மாளிகை மாற்றப்பட்டு, வேறு இடத்தில் வைக்கப்படலாம் என்று தமிழக அரசு முடிவு செய்து, அதற்கு ஒப்புதலை மத்திய சர்க்காரி டமிருந்து பெற வேண்டிய நிலைமை இருந்ததால், ஒப்புதல் பெற கடிதம் எழுதப் பட்டது. அந்தக் கடிதத்திற்குப் பதில் எழுதியதில், இந்த அரசின் நோக்கத்தைப் பாராட்டுவதாகவும், அதே நேரத்தில் அகில இந்திய ரீதியில் எல்லா இடங்களிலும் மாற்றம் செய்ய வேண்டியிருப்பதால், பொறுத்திருக்க வேண்டும் என்றும் பிரதமர் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, நமது ஆளுநர் மாளிகையை மாற்றும்போது, அந்த மாளிகையை எதற்கு உபயோகிப்பதாக அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அப்படி முடிவு எடுத்து செயல்படும் போது, அந்த மாளிகையை நல்ல காரியத்திற்குப் பயன்படுத்துவதற்கு அரசு யோசனைகள் செய்யும். உடனடியாக இப்பொழுது மாற்றுவதாக இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** ஆளுநர் மாளிகையானது ஐ.ஜி. இருக்கும் மாளிகைக்கு மாற்றப்படும், அதற்காக மத்திய சர்க்காருடைய யோசனையைக் கேட்டிருப்பதாகவும் பத்திரிகைகளில் பார்த்தேன். பிரதமர் அவர்களிடமிருந்து இந்த ஆண்டு இறுதிக்குள் ஒரு முடிவு கிடைக்கக்கூடிய அளவில் குறிப்பு இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அவர்கள் இதில் கவர்னர் மாளிகை மாற்றுவது தமிழ்நாட்டை மட்டும் கலந்து செய்யக் கூடியது அல்ல, எல்லா மாநிலங்களிலும் அதைப் பற்றி ஒரு முடிவு எடுக்க வேண்டும். ஆகவே, இதை அகில இந்திய ரீதியில் இந்தப் பிரச்சினையை ஆராயவேண்டும் என்று எழுதி யிருக்கிறார்கள். விரைவில் ஆராய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

**திரு. கே. எ. வகாப்:** ஆளுநர் மாளிகையைச் சுற்றியுள்ள இடங்களில் மிருகக் காட்சி சாலையாக அமைக்க செயற்குறிப்பு அரசிடம் ஏதாவது இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ஏற்கனவே கவர்னர் அந்த இடத்தை விட்டு வேறு இடத்திற்கு மாறினால், கவர்னர் தங்கியுள்ள இடம்போக மீதமுள்ள இடத்தில் மிருகக் காட்சி சாலை வைக்க இயலுமா என்று அரசு யோசித்துக் கொண்டு இருந்தது. இப்பொழுது அது இயலாத காரியமாகத் தென்படுகிறது.

**திரு. பெ. மலைச்சாமி:** தலைவர் அவர்களே, ஆளுநர் மாளிகை மாநில அரசுக்குச் சொந்தமா அல்லது மத்திய அரசுக்குச் சொந்தமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அந்த மாளிகை மாநில அரசுக்குச் சொந்தம்; கவர்னர் எங்கே குடியிருப்பது என்று சொல்லும் உரிமை மத்திய சர்க்காருக்குச் சொந்தம்.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஆளுநர் மாளிகையை மாற்றுவதில் அகில இந்திய அடிப்படையில் மாற்ற வேண்டும் என்று மத்திய சர்க்கார் கடிதம் எழுதியிருப்பது பற்றிச் சொன்னார்கள். இவ்வளவு பரந்த நிலம் மற்ற மாநிலங்களிலும் இருக்கிறதா என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** மற்ற மாநிலங்களில் நம்முடைய ஆளுநர் இடத்தைவிட மிகக் குறைவானதாகத்தான் இடங்கள் அங்கெல்லாம் இருக்கின்றன.

### பரிசுச்சீட்டு அச்சிட இயந்திரங்கள்

*436 வினா—திரு. மா. பா. சாரதி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரிசுச்சீட்டு அச்சிட வெளிநாட்டிலிருந்து இயந்திரங்கள் வரவழைக்கப்பட்டனவா?

(இ) ஆம் எனில், அதற்கான செலவு என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) ரூபாய் 23.64 இலட்சம்.

திரு. என். கணபதி: தலைவர் அவர்களே, இந்தப் பரிசுச் சீட்டுக்களில் பெரும்பாலும் எண்ணிக்கையைத் திருத்தக்கூடிய சம்பவங்கள் நிறைய நடைபெறுகின்றனவே? அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எண்ணிக்கையைத் திருத்தினாலும், வேறு வகைகளில் கண்டுபிடிக்கக்கூடிய அளவில் குறிப்புக்கள் அச்சடிக்கப் பட்டிருக்கின்றன.

*Destruction of Nylon fishing nets at Oorur Kuppam*

* 511 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state wheher nylon fishing nets were destroyed by fire at Oorur Kuppam near Adyar in Madras City about the 6th April, 1971?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஆம். ஊரூர் குப்பத்தில் 5—4—71 அன்று ஒரு தீ விபத்து ஏற்பட்டது. இத்தீவிபத்தில், திருமதி முத்தம்மாள் என்பவருக்குச் சொந்தமான ரூ. 2,000 மதிப்புடைய இரண்டு நைலான் வலைகள் சேதமடைந்து பயனற்றுப் போய்விட்டன.

*Supply of nylon twine to fishermen.*

* 512 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state:

(a) the grounds on which the Nylon nets are being sold to fishermen in this state; and

(b) the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) & (இ) இம்மாநிலத்திலுள்ள மீனவர்களுக்கு நைலான் வலைகள் வழங்கும் பணியை மாநில மீனளத்துறை மேற்கொண்டிருக்கவில்லை. கீழ்க்கண்ட இரு திட்டங்களின்கீழ் நைலான் மீன்பிடி முறுக்கு நூல் மட்டுமே வழங்கப் படுகிறது:—

(1) ஈடுசெய் விலை அடிப்படையில் மீனவர்களுக்கு மீன்பிடி விசைப் படகுகள் வழங்குதலுடன் கூட நைலான் நூலும் வழங்குதல்.

(2) மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மீனவர்களுக்கு ஈடுசெய் விலையில் நைலான் முறுக்கு நூல் வழங்குதல் முதல் திட்டத்தின்கீழ், மீன்பிடி விசைப் படகுகள் ஒதுக்கம் செய்யப்படும் பொழுது 30 அடி நீளப் படகுக்கு 100 கிலோ நைலான் முறுக்கு நூலும், 32 அடி நீளப்படகுக்கு 150 கிலோ நைலான் முறுக்கு நூலும் வழங்கப்படுகிறது. வழங்கப்படும் நைலான் முறுக்கு நூல் விலையில் 20 சதவீதம் குறைத்து வழங்கப்படுகிறது. எஞ்சிய தொகை, இரண்டாண்டுகால அளவுக்குள் 18 மாதத்தவணைகளில் வசூல் செய்யப் படுகிறது





இரண்டாவது திட்டத்தின் கீழ் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களால் நேரடியாக வாங்கப்பட்டு, நாட்டுப்படகு வைத்திருக்கும் சங்க உறுப்பினர்களான மீனவர்களுக்கு வழங்கப்படுகிற நைலான் முறுக்கு நூலின் விலையில் 20 சதவீதம் உதவித்தொகையாக அளிக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்டவற்றுக்கு மேலாக, இயற்கை இழைக்கும் இன்னல்களால் நைலான் வலைகளை இழந்த மீனவர்களுக்கும், 18 மாதத் தவணைகளில் வசூலிக்கப்படுகின்ற வகையில் முழுவிலை அடிப்படையில் நைலான் முறுக்கு நூல் வழங்கப்படுகிறது.

திரு. எம். சுரேந்திரன்: நைலான் நூல் வழங்குவதில் முன்பு 20 சதவீதம் மானியம் வழங்கப்பட்டதே, அது இப்போது 15 சதவீதமாகக் குறைக்கப் பட்டுவிட்டது என்பது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இல்லை. 20 சதவீதம் மானியத் தொகைதான் அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. கி. ஜெயராமன்: நைலான் நூல் தனிப்பட்டவர்களிடம் இருந்து வாங்கப்படுகிறது என்றால் கூட்டுறவுத்துறையில் ஒரு ஆலையை ஏற்படுத்தி அதன் மூலம் மீனவர்களுக்கு நைலான் நூல் வழங்குவது சரியாக இருக்காதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: மீனவர்களுக்கு தனிப்பட்டவர்களிடம் இருந்து கொடுக்கும்போது குறிப்பிட்ட விலையில்தான் கொடுக்கப்படுகிறது. அவர்கள் வலையாகவே பின்னிக் கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அது பிறகு ஆலோசிக்கப்படும்.

தாழ்த்தப்பட்டோருக்கு சிறுதொழில்கள் தொடங்க கடன்கள்

* 513 வினா—திரு. மா. பா. சாரதி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாழ்த்தப்பட்டோருக்கு சிறுதொழில்கள் தொடங்க வட்டியில்லாக் கடன் (Interest free loan to petty traders belonging to Scheduled Castes) அரசால் வழங்கப்படுகிறதா?

(இ) எந்தெந்த தொழிலுக்கு கடன் வழங்கப்படுகிறது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) கீழ்க்கண்ட சிறு தொழில்களுக்கு வட்டியில்லாக் கடன் கொடுக்கப் படுகிறது:—

(1) அச்சகம் வைக்க.

(2) இயந்திரத்தால் பாத அணி செய்தல்.

(3) இயந்திர கம்மியர் தொழில் (Motor Mechanic).

(4) தகட்டு வேலையும், வர்ணம் பூசுதலும்.

(5) கடைசல் வேலை செய்தல்.

(6) மின்சாரத்தாலும், வாயுவாலும் பற்ற வைத்தல் வேலை செய்தல்.

(7) மளிகைக் கடை, தியாபனில் அரிசிக்கடை வைத்தலும்.

(8) உணவு விடுதி, தேநீர், கொட்டைச்சாறு விடுதி, பிஸ்கட்டுக் கடை, குளிர்பானக்கடை, பலகாரக்கடை உள்பட.

(9) துணிக்கடை, தையல் கடை வைத்தல்.

(10) வாடகை சைக்கிள் கடை, சைக்கிள் மோட்டார், சைக்கிள் பழுது பார்க்கும் கடை.

(11) தோல் பதனிடுதல்.

(12) பழக்கடை, காய்கறிக்கடை, வெற்றிலை பாக்குக் கடை உள்பட.

(13) தட்டெழுத்துப்பயிற்சி நிலையம் வைத்தல.

(14) பொது வாணிபம்.

(15) மருந்தகம்.

(16) விறகுக்கடை, கரிக்கடை.

(17) தச்சு வேலை.

(18) பிரம்பு பின்னும் தொழில்.

(19) எழுதும் பலகை செய்தல் (சிலேட்).

**திரு. கு. அ. பொம்மன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது குறிப்பிட்ட சில தொழில்கள் நடத்துகிறவர்களுக்கு மட்டும் கடன் கொடுப்பதாகச் சொன்னார்கள். இந்தப் பட்டியலில் வாராத தொழில் நடத்துகிறவர்களுக்கும் வட்டியில்லாக் கடன் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அரசாங்கமே எந்த எந்தத் தொழில்களை நடத்தினால் அவர்கள் பலன் அடைய முடியும் என்பதை நன்கு ஆராய்ந்து பார்த்துத்தான் இந்தப் பட்டியலைத் தயாரித்திருக்கிறது. இதில் அடங்காத வேறு தொழிலைச் செய்து அதற்குக் கடன் கொடுப்பது என்பது இயலாத காரியம். அதனால் அவர்களுக்குப் பலன் ஏற்படாமலும் போகலாம். ஆகவே இந்தப் பட்டியலில் கண்டுள்ள தொழில்களில் ஏதாவது ஒன்றை மேற்கொள்ளுகிறவர்களுக்குத்தான் அரசாங்கம் கடன் கொடுக்கிறது.

**திரு. ந. நாச்சியப்பன் :** இதைப்போன்று கடன்பெறுகிறவர்கள் குறிப்பிட்ட காரியங்களுக்குச் செலவிடாமல் வேறுபலவகையில் செலவழித்து விடுகிறார்கள். அப்படிச் செய்யாமலிருக்கக் கண்காணிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இதுபோன்ற புகார்கள் எதுவும் வரவில்லை. ஆங்காங்குள்ள மாவட்ட நலத்துறை அதிகாரிகள் தான் இதைக் கண்காணித்து வருகிறார்கள்.

**திரு. கா. காளிமுத்து :** சொத்து மதிப்பின் அடிப்படையில் இந்தக் கடன் வழங்கப்படுகிறதா? எத்தனை தவணைகளில் திருப்பி அளிக்கும்படி கொடுக்கப் படுகிறது?



**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தாழ்த்தப் பட்டவர்கள் பெரும்பாலும் சொத்து இல்லாதவர்கள்தான். ஆகவே தனிப் பட்ட ஒருவர் கொடுக்கிற ஆயிரம் ரூபாய் ஜாமீன் பேரில்தான் இது வழங்கப் படுகிறது. நூறு மாதத் தவணையில் திரும்பப் பெறப்படுகிறது.

**திரு. துரைமுருகன் :** இப்படித் தரப்படுகிற கடன்—எல்லாத் தொழில் களுக்கும் ஒரேமாதிரி கொடுக்கப்படுகிறதா? அல்லது அந்த அந்தத் தொழிலுக்கு ஏற்ற முறையில் கூட்டியும், குறைத்தும் தரப்படுகிறதா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அந்த அந்த இடங்களுக்கு, அந்த அந்தத் தொழில்களுக்கு ஏற்றமுறையில் கூட்டியும், குறைத்தும்தான் தரப்படுகிறது. உதாரணமாக ப்ரின்டிங் ப்ரஸ் வைப்பதாக இருந்தால் ஐந்தாயிரம், லேத் அண்டு டர்னிங் என்றால் ஆயிரம், மோட்டார் மெக்கானிக் ஷாப் என்றால் 2 ஆயிரம், ஷூ மேகிங் அண்டு மெஷினரி என்றால் 500, கிரோசரி ஷாப், ரேஷன் கடை உட்பட என்றால் 200 என்று தரப்படுகிறது. இதுவே சென்னை நகரமாக இருந்தால் வேறு, தாலுக்காவாக இருந்தால் வேறு என்ற முறையில் அந்த அந்த இடத்திற்கு, அந்த அந்தத் தொழிலுக்கு ஏற்றவாறுதான் கொடுக்கப்படுகிறது.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** ஷூ மேக்கிங்குக்கு 500 ரூபாய் தரப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் ஆரணியில் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஆரணியைப் பற்றிக் கேட்டால் எப்படிச் சொல்ல முடியும்?

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** ஆரணியில் விண்ணப்பம் போட்டவர்களுக்கு எல்லாம் 150 ரூபாய்தான் தரப்பட்டிருக்கிறதே, 500 ரூபாய் என்ற அளவுக் காவது கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** எந்த அடிப்படையில் 150 ரூபாய் என்று கொடுத்தார்கள் என்பது தெரியவில்லை. அது விவரத்தை எழுதி அனுப்பினால் அரசு பரிசிலனை செய்யும். ஷூ மேக்கிங்குக்கு 500 ரூபாய் என்ற அளவில்தான் வகை செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. சோ. கருணைநாதன் :** இந்தக் கடன் குடும்பத்திற்கு ஒருவருக்குத் தான் தரப்படுகிறதா, ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருந்தாலும் தரப் படுகிறதா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** குடும்பத்திற்கு ஒருவர் என்ற முறையில்தான் தரப்படுகிறது, பிரிவினை செய்யப்பட்ட குடும்பமாக இருந்தால் தனித்தனியாக வழங்கப்படும்.

**திரு. வ. சின்னசாமி :** அச்சகம் வைப்பதற்கு இந்தத்துறை மூலம் கடன் வழங்கப்பட்டிருக்கிறதா? ஆம் எனில், எத்தனை அச்சகங்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கின்றன என்கிற விவரத்தை அளிப்பார்களா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வி கடன் கொடுப்பது பற்றியது. யார் யாருக்கு என்கிற விவரங்கள் எல்லாம் எப்படி இருக்க முடியும்?

**Dr. H. V. HANDE :** This is a very, vital and valuable scheme. May I know from the Hon. Minister the number of persons who have already applied for this loan and the number of persons who have been granted . . .

Mr. DEPUTY SPEAKER : You are going into details. This is a question of policy.

Dr. H. V. HANDE : It is a very general question. I will be happy if you kindly hear my question.

Thirumathi T. N. ANANDANAYAKI : It is a very important question. Details of the trades have been furnished in the answer and the question itself is about the details of the small-scale industries for which loans are sanctioned.

Mr. DEPUTY SPEAKER : The hon. Member need not advise the Chair.

Thirumathi T. N. ANANDANAYAKI : I am only drawing the attention of the Chair and it is for the Chair to give a ruling.

Dr. H. V. HANDE : This is a valuable question. I would like to know whether the object of the Government, namely, to help the scheduled castes people, is properly fulfilled, whether large number of applications are coming and whether the Government are also going, to appoint an agency to watch and o see how this loan is utilised, whether it is being watched by any cell or organization or any sort of group of officers so that they will be properly utilising these loans and whether any help will be given as a follow-up action later on as a matter of utilisaion of this amount for these things?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 10 லட்சம் ஒதுக்கி இருப்பதில் இருந்தே இந்தத் திட்டத்திற்கு அவர்களிடத்தில் அதிக வரவேற்பு இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். விண்ணப்பங்கள் நிறைய வருகின்றன. மக்கள் மத்தியில் நல்ல எழுச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. இதற்கு மாவட்ட நல அதிகாரிகள்தான் பொறுப்பேற்றிருக்கிறார்கள் தாசில்தார்களும் கண்காணித்து வருகிறார்கள். கடன் கொடுத்து 2 ஆண்டுக்குப் பிறகே முதல் தவணை வசூலிக்கப்பட இருக்கிறது. கடன் வாங்குகிறவர்கள் திருப்பித் தராமலும் இல்லை. தொழில் நடத்தாமலும் இல்லை. இதுபற்றி மேலும் நல்லமுறையில் கண்காணிப்பு ஏற்படுத்தப்படும்.

Thiru K. M. SUBRAMANIAM : Many persons have applied for a loan of Rs. 500 but cobblers find it difficult to start shops of their own and so, is there any proposal to help them start a common shop to sell their wares ?

பகல் முற் 10-00

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, தனிப்பட்டவர்களுக்கு உதவி செய்து, அவர்கள் அந்தத் தொழிலில் மேம்பாடு அடைய வேண்டுமென்பதுதான் இந்தத் திட்டத்தின் நோக்கம். கூட்டாகச் சேர்ந்து தொழில் செய்வதற்கு இந்தத் திட்டம் அல்ல. தனிப்பட்டவர்களுக்கு 500 ரூபாய் உதவியாகக் கொடுப்பதன் மூலம் அவர்கள் இயந்திரம் வாங்கி, செருப்போ, பூட்ஸோ தைப்பதற்குத்தான் இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. பெரிய தொழிற்சாலைகளை வைப்பதற்காக இத்திட்டம் இல்லை.



திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்தக் கடன்கள் வழங்குவதற்கு என்னென்ன வழிமுறைகள் இருக்க வேண்டும்? அதற்கு ஏதாவது விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றனவா? யாரிடம் விண்ணப்பிக்க வேண்டுமென்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, நலத் துறை இயக்குநர் அவர்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். கடன் வாங்கப்பட்டவர்கள் எப்படித் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும், என்னென்ன அடிப்படைத் தகுதிகள் இருக்க வேண்டும், ஆயிரம் ரூபாய்க்கு ஷ்யூரிட்டி வாங்க வேண்டும், வாங்குகின்ற பொருள்கள் அரசாங்கத்திற்கு ஈடு கட்ட வேண்டும், பாண்டுகள் எழுதிக் கொடுக்க வேண்டும், இரண்டு ஆண்டுக் காலத்திற்குப் பிறகு தவணைகளை ஒழுங்காகக் கட்டி வர வேண்டும் என்பதாக இப்படியெல்லாம் 21 விதிமுறைகள் இருக்கின்றன. தனிக் கேள்வி போட்டால் விதிமுறைகள் பற்றி விளக்கமாக பதில் தரப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, இது ஒரு நல்ல திட்டம், 'காப்ளர்'-களுக்கு உதவி செய்யக்கூடிய திட்டம். மதுரையில் பலர் இத் திட்டத்தின்கீழ் உதவி கேட்டு மனுச் செய்தும் கிடைக்கவில்லை. சபைக்கு முன்னால், மாவட்ட ரீதியாக எவ்வளவு பேர்களுக்கு இந்தக் கடன் உதவி அளிக்கப்பட்டிருக்கிறது என்கிற விவரம் வைக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரம் தரப்படும்.

Thirumathi T. N. ANANDANAYAKI : Sir, is there any time-limit fixed for the consideration of applications and if so, in what time they are sanctioned?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, சாங்ஷனுக்கு எந்த டைமும் வரையறுக்கப்படவில்லை. கடன் கேட்டு விண்ணப்பிக்கிறவர்கள் அதற்கு உரியவர்கள்தானா, திருப்பித்தர அவர்களால் முடியுமா, அந்தத் தொழிலில் அவர்களுக்குப் பரிச்சியம் உண்டா, கடன் கொடுத்தால் நல்ல முறையில் செயல்படுவார்களா என்பவற்றையெல்லாம் நலத் துறை மூலமாக விசாரணை செய்யப்பட்டு, பின்னர்தான் கடன்கள் கொடுக்கிறார்கள்.

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவர் அவர்களே, கலப்புமணம் செய்து கொண்டவர்களுக்கு இந்தத் திட்டத்தின்கீழ் கடன் தரப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, இருவரில் ஒருவர் கட்டாயமாக தாழ்த்தப்பட்டவராக இருக்க வேண்டும். இந்த ஆண்டிலிருந்து தொகையாகத் தராமல், அவர்களே பொருள்களை வாங்கிக் கொண்டு, அதற்கான பில்களைக் கொடுத்தால், அரசு அந்தப் பில்களுக்கான தொகையைக் கொடுத்துவிடும் என்கிற முறையை அனுசரிக்க இருக்கிறோம்.

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, கடன்களுக்காக எத்தனை பேர்கள் விண்ணப்பித்திருக்கிறார்கள்? அவர்களில் எத்தனை பேருக்குக் கடன்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன?

[1971 ஜூலை 28

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகையில், மளிகைக் கடை முதல் டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட் வரைக்கும் கடன்கள் கொடுக்கிறோம் என்ற ஒரு நீண்ட பட்டியல் சொன்னார்கள். இப்படிப்பட்ட பணிகள் பிற மாநிலங்களில் நடைபெறுகிறதா? நம்முடைய மாநிலத்தில் டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட்டுக்காக கடன் கொடுப்பதாகச் சொன்னார்களே, எவ்வளவு பணம் கொடுக்கிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட்டுக்கு 3 ஆயிரம் ரூபாய் தரப்படுகிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்தப் பணம் கிடைக்காது.

மாயூரத்தை திருமயிலாடுதுறை எனப் பெயரிடுதல்

* 514 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாயூரத்திற்கு அதன் பண்டைய தமிழ்ப் பெயரான திருமயிலாடுதுறை எனப் பெயரிடுவது பற்றிய செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இந்த மன்றத்தில் பெயர் மாற்றியமைக்க வேண்டுமென்று முன்பு தெரிவித்திருக்கிறார்கள். பண்டைய தமிழகத்தின் இலக்கிய வரலாறு படைத்த 'திருமயிலாடுதுறை' என்கிற பெயரைச் சூட்டுவதற்கு இனியேனும் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, 'மாயூரம்' என்கிற பெயர் பழக்கப்பட்டுவிட்டதால், இந்தப் பெயரை மாற்றுவதற்கு உத்தேசம் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, அப்படியென்றால், பட்டணத்தில் 'கெல்லீஸ்' என்பதை 'கிள்ளியூர்' என்றும், 'ஹார்பார்' என்பதை 'சிதக்காதி நகர்' என்றும் மாற்றினீர்களே, கெல்லீஸ் என்பதும், ஹார்பார் என்பதும் பழக்கப்பட்ட பெயர்கள்தானே, அதை ஏன் மாற்றினீர்கள்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மாயூரம் என்பது பழக்கமான பெயர். 'கெல்லீஸ்' என்பதும் 'ஹார்பார்' என்பதும் ஆங்கிலப் பெயர்களாக இருந்தது. அதைத் தமிழில் மாற்றியமைத்தோம்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் முதல்வர் கலைஞர் அவர்கள் இந்த மன்றத்தில், 'மாயூரம்' என்பது வடமொழிச் சொல்லாக இருக்கிறது. பண்டைய இலக்கிய வரலாறு படைத்த



1971 ஜூலை 28]

'திருமயிலாடுதுறை' என்ற பெயர் வைக்க வேண்டுமென்று உறுதி சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பெயரைச் சூட்டுவதற்கு இனிமேலாவது அரசு செயல்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 'மாயூரம்' என்ற பெயர் புகைவண்டி நிலையத்தில் மாற்றப்பட்டால்தான் பொருத்தமாக இருக்கும். இதைப்பற்றி நாம் மத்திய அரசுக்கு எழுதி, அவர்கள் அதற்கு ஒப்புக்கொண்டால் அப்படிச் செய்யலாம். இப்போது அங்கே எந்த மயிலும் ஆடிக்கொண்டிருக்கவில்லை.

டாக்டர் ச. அ. சின்னராசு : தலைவர் அவர்களே, ஜாதியின் அடிப்படையில் இருக்கின்ற ஊர்களின் பெயர்களை மாற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகளுக்கான நேரம் முடிவுறுவதால், வினாக்கள்-விடைகளுக்கான நேரத்தை நீட்டிக்க பேரவை அனுமதி அளிக்கிறது என்று கருதுகிறேன்.

தமிழ் நாடு பால், பால் பொருள்கள் உற்பத்தி, விற்பனைச் சங்கம்.

* 515 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) "தமிழ்நாடு மில்க் அண்ட் மில்க் பிராடக்ட்ஸ் மேனுபேக்சரர்ஸ் அண்ட் டீலர்ஸ் அசோசியேஷன், ஊத்துக்குளி" இடமிருந்து விற்பனை வரி குறித்து விண்ணப்பம் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) வெண்ணெய் எடுத்த பாலிலிருந்து தயாரிக்கப்படும் தயிருக்கு விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

மனித முடியை உரமாகப் பயன்படுத்தல்

* 516 வினா—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மனித உரோமத்தை உரமாகப் பயன்படுத்தும் திட்டத்தை அரசு ஆய்வு செய்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை,

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் மக்கள் கோயில்களுக்குச் சென்று மொட்டை அடித்துக்கொள்கிறார்கள். பெண்கள் முடிகள் நல்ல உரமாக இருப்பதால், அதை நிலத்தில் போட்டு உரமாகப் பயன் படுத்தலாம் என்று நிபுணர்கள் சொல்கிறார்கள். இதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட முடிகளைக் கொண்டு சவுரிகளாகவும், டோப்பாக்களாகவும் செய்து நல்ல முறையில் விற்பனை செய்கிறார்கள். இந்த முடிகளில் அதிகம் உரம் இருப்பதாகச் சொன்னார்கள். உரம் இருக்கிறது. ஆனால் 1 முதல் 2 சதவீதம் வரைதான் நைட்ரஜன் இருக்கிறது. ஆகவே, இதை உரமாக உபயோகிக்கின்ற எண்ணம் இல்லை.

*State Transport buses plying in Mylapore area*

* 517 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(a) whether a number of buses plying in Mylapore area were diverted from their normal routes during the first half of April 1971; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) மயிலாப்பூர், கபாலீஸ்வரர் கோவில் ஆண்டு பிரம்மோத்சவத் திருவிழாவின் போது 1—4—1971 முதல் 10—4—1971 வரையில் 'லஸ்' முதல் மந்தைவெளி அஞ்சல் நிலையம் வரையுள்ள இராமகிருஷ்ணர் மடம் சாலையில் பேருந்து போக்குவரத்துக்குக் காவலர்கள் தடை விதித்ததால் பத்தொன்பது வழித்தடப் பேருந்துகளை வேறுவழித் தடங்களில் திருப்பி விட வேண்டிய தாயிற்று. இவ்வாறு வேறு வழித்தடங்களில் பேருந்துகளைத் திருப்பிவிடுவது ஆண்டுதோறும் நடைபெறுகிற ஒரு நிகழ்ச்சியே.

*Complaint book in State Transport Buses*

* 518 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Transport be pleased to state whether suggestions and complaints books are readily made available for the use of the passengers in all State Express Buses?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஆம்.

DR. H. V. HANDE: Sir, is it a fact that complaints have been received that there are no complaint books in some of the buses and if so, what is the action taken by the Government to see that such complaints are not received hereafter?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு பேருந்துக்கும், நெடுந்தொலைவு பேருந்துக்கும் புகார் புத்தகம் வைக்கப் பட்டுள்ளது. புகார் புத்தகம் வைக்கப்படவில்லையென்கிற எந்தப் புகாரும் வரவில்லை. இந்தப் புகார்களை நானே நேரில் பார்த்து ஆய்வு செய்கிறேன். அதில் நல்ல ஆலோசனைகளைக்கூட எடுத்துச் சொல்கிறார்கள்.





திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார் புத்தகங் களில் அரசாங்கத்தைப் பாராட்டி ஏதாவது எழுதியிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கடந்த மூன்று வாரமாக வாரத்திற்கு ஒரு பாராட்டு கிடைத்துக்கொண்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, சாதாரணமாக எழுதப்படுகின்ற புகார்களில் 'அடிக்கடி பஸ்களை தள்ள வேண்டுமென்கிற நிலை' இருக்கிறதென்று புகார்கள் எழுதியிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, புகார் புத்தகம் என்று நாம் சொல்லும்போது, அதில் புகார்கள் மட்டும் வருவதில்லை. அதில் ஆலோசனைகளையும் சொல்கிறார்கள். பஸ்களை தள்ளுகிற நிலைமை இப்போது ஏற்படவில்லை. கடந்த மூன்று வாரகாலமாக ஒருவர் பாராட்டுகின்ற நிலைமை இருந்து வருகிறது. இந்த வாரம் மட்டும் கிட்டத்தட்ட 12 புகார்களும், 19 ஆலோசனைகளும் வந்திருக்கின்றன. ஆகையினாலே, இது நல்ல முறையில் செயல்படுகிற காரணத்தால், அத்தகைய முறை எதுவும் இல்லை.

திரு. எம். சுரேந்திரன்: சார், இந்தப் புகார் புத்தகங்கள் எவ்வளவு நாட்களுக்கு ஒரு தடவை பரிசீலிக்கப்படுகின்றன? அவ்வாறு பரிசீலிக்கப் பட்டதிலே எவ்வளவு நாட்களுக்கு எவ்வளவு புகார்கள் வந்திருக்கின்றன என்பதைச் சொல்லமுடியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஒவ்வொரு வாரமும் அது பரிசீலிக்கப்படுகிறது. வாரத்திற்கு 19 புகார்கள் என்று ஆரம்பித்து 17 ஆகி, 15 ஆகி 13 ஆகி 8 ஆகியிருக்கிறது. ஆலோசனைகள் என்ற முறையில் ஒன்று என்று ஆரம்பித்து 19 ஆகியிருக்கிறது. புகார்கள் குறைவதும், சஜஷன்ஸ், ஆலோசனைகள் அதிகமாகவும் ஆகியிருப்பது வரவேற்கத் தக்கது.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, இந்தப் புகார்ப் புத்தகத்தில் வேண்டுமென்றே சிலர் புகார்கள் எழுதுகிறார்கள் என்று சொல்லப்படு கின்றதே, அதைப்பற்றி அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: புகார் பண்ணிப் பழக்கப்பட்டவர் களுக்கு அந்தப் பழக்கத்தை மாற்றிக்கொள்ள முடியாது.

திரு. கே. எ. வகாப்: புகார் புத்தகங்கள் வெளியூர் பஸ் நிலையங்களிலும் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் வைக்கப்படுமா? பிராட்வே பஸ் நிலையத்தில் புகார் எடுத்துச்சொல்ல முடியவில்லை, வெளியூர் பஸ்நிலையங் களிலும் புகார் புத்தகங்களை வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: புகார் புத்தக முறை படிப்படி யாக நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இப்பொழுது முதற்கட்டமாக நகர வண்டிப் பேருந்து நிலையங்களிலே அவை பயன்பட்டுவருகின்றன, அது நல்ல முறையிலே நடக்குமானால், மேலும் மற்ற இடங்களிலும் வைப்பது பற்றி அரசு ஆலோசனைசெய்து முடிவெடுக்கும்.

DR. H. V. HANDE : The Hon. Minister in his reply said that 12 complaints and 19 suggestions had been received. Suggestions may also contain some complaints with some remedial measures. Out of the 12 complaints what are the major complaints? The most important complaint is that the bus does not reach, in time, several places. What are the details of the complaints? May I also know the remedial measures taken by Government?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்த 12 கம்ப்ளெயின்டில் ஒன்று தான் பிரேக் டவுன் பற்றியது, இன்னென்று ஆக்ஸிடெண்ட்டைப்பற்றி வந்திருக்கிறது. பாடியிலே சத்தம் இருப்பதாக இரண்டும் ஆக மொத்தம் 4 கம்ப்ளெயின்ட்கள் இருக்கின்றன. மற்றவையெல்லாம் சீட்டுகளில் இடம் சரிவர இல்லாமல் இருப்பதுபற்றியும், கால் வைக்க இடமில்லை என்பது பற்றியும், போகும்பொழுது புகைபிடிப்பதற்கு வசதி செய்யவேண்டுமென்றும் வந்திருக்கிறது.

திரு. நா. கணபதி : இந்தப் புகார் புத்தகத்தைப்பற்றிக் கேள்வி கேட்ட டாக்டர் ஹாண்டே அவர்களுடைய புகார் ஏதாவது புகார் புத்தகத்தில் வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

DR. H. V. HANDE : Even now I have got a complaint letter right before me.

MR. DEPUTY SPEAKER : It is unparliamentary. தனிப்பட்ட உறுப்பினரைப்பற்றி நீங்கள் கேட்கக் கூடாது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : உறுப்பினர்கள் பதில்சொல்ல முடியாத நிலையிலே இருக்கும்பொழுது உறுப்பினரைக் கேள்வி கேட்பது சரியல்ல.

சென்னை—நாகப்பட்டினம் பேருந்துப்பணி

*519 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

சென்னை—நாகப்பட்டினம் பாதையில் இரவு நேரங்களில் பஸ் விடும் திட்டம் ஏதேனும் தற்போது அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஆம். சென்னை—நாகப்பட்டினம் வழித்தடம் 538 இல் சென்னையிலிருந்தும் நாகப் பட்டினத்திலிருந்தும் இரவு நேர பேருந்துகள் இரவு ஒன்பதே கால் மணிக்குப் புறப்படும். சென்னை—தஞ்சை 558 வழித் தடத்தில் சென்னையிலிருந்தும், தஞ்சையிலிருந்தும் இரவு ஒன்பதேமுக்கால் மணிக்குப் புறப்படும். சென்னையிலிருந்து புறப்படும் வண்டி 7—8—1971-லிருந்தும் நாகை, தஞ்சையிலிருந்து புறப்படும் வண்டி 8—8—1971 இரவு முதலிருந்தும் அமல்படுத்தப் படும். அந்த வண்டிகள் முறையே குறிப்பிட்ட இடங்களுக்கு ஐந்தேமுக்கால் மணிக்கும் 6 மணிக்கும் வந்து சேரும்,



திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, நாகையிலிருந்து சென்னைக்கும், சென்னையிலிருந்து நாகைக்கும் பாண்டியன் என்ற பெயராலே ஆமனி பஸ்கள் ரெகுலர் சர்வீஸ் போன்று ஓடிக்கொண்டிருக்கின்றன. அதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஆம்னி பஸ்களைத் தடுப்பதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறது. ஆனால் இப்பொழுது இரவு நேரப் பேருந்துகளை அரசாங்கப் போக்குவரத்துத் துறையின் மூலமாக நாகப்பட்டினத்திற்கும் தஞ்சாவூருக்கும் விட ஆகஸ்டு மாதத்தில் உத்தேசித்து இருக்கிறோம்.

* 520 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

சென்னையிலிருந்து நாகப்பட்டினத்திற்குச் செல்லும் அரசுப் பேருந்து களின் ஓடும் நேரத்தைக் குறைக்க ஏதேனும் திட்டம் அரசு பரிசிலனையி லுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தற்போது இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து நாகைக்குப் புறப்படுகின்றவர்களுக்கும் நாகையிலிருந்து சென்னைக்கு நீண்ட தூரப் பயணம் செய்து வரக்கூடியவர்களுக்கும் முதலிடம் தந்து இத்தகைய முறையிலே புறப்படக்கூடிய இடத்திலிருந்து சேரக்கூடிய இடம்வரையில் இடையிலுள்ள ஸ்டாப்புகளில் நிற்காமல் சென்னைக்கும் நாகைக்கும் இடையே பஸ்கள் விட அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 28-லிருந்து 35 வரை ஒரு மணிக்குச் செல்லலாம் கடுந்தொலைவு பேருந்துகள் என்று விதி முறை இருக்கிறது. அதிகமாக வேகம் சென்றால் ஆக்ஸிடெண்டுகள் ஏற்படுமோ என்ற நிலைமை இருக்கிறது. காலதாமதத்தைத் தவிர்க்கின்ற முறையிலே ஆங்காங்கு அனுவசியமாக நிற்கின்ற இடங்களைப் பற்றி மறுபரிசிலனை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாயூரத்தில் அரசு பேருந்து பணிமனை

* 521 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

மாயூரத்தில் அரசு பேருந்து நிலைய பணிமனை ஒன்று அமைத்திடும் திட்டம் ஏதேனும் தற்போது பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தற்போது இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாயூரத்திலே நிறுத்தப்படும் அரசாங்க பஸ்களுக்கு ரிப்பேர், கழுவுதல் போன்றவற்றைச் செய்வதற்காக தனியாரிடத்திலே செல்லவேண்டிய சூழ்நிலையில் அவற்றை அரசே செய்து கொள்ளக்கூடிய முறையிலே அரசே அத்தகைய சாலையை அமைக்கத் திட்டமிடுமா ?

[1971 ஜூலை 28

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாயூரத்தில் இப்பொழுது இரண்டு பேருந்துகள்தான் தங்குகின்றன. மீதிப் பேருந்துகள் மாயூரத்தைத் தொட்டுத்தான் செல்கின்றன. அந்த இரண்டு பேருந்துகளைப் பேணுவதற்காக அருணாசலம் அய்யர் அண்டு சன்ஸ் என்ற தனியாரிடம் விட வேண்டி இருக்கிறது. ஒரு வண்டிக்கு நாள் ஒன்றுக்கு 4 ரூபாய் வீதமும் வாரத்திற்கு 10 ரூபாய் வீதமும் கொடுக்கப்பட்டு பேணுதல் முறை செய்யப் பட்டு வருகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் நாட்டுடைமையாக்கும் திட்டத்தின் மூலம் அதிக பஸ்கள் எடுக்க இருப்பதால், மாயூரத்தில் ஒரு பணிமனை அமைக்கலாமா என்பதை அரசு பின்னாலே பரிசீலிக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தனியாரிடத்திலே ஒரு பஸ் இருந்தால் கூட ஒரு கிளீனர் போட வேண்டுமென்று எல்லாம் அரசாங்கம் சொல்கிறதே, அப்படியிருக்கும்பொழுது அரசாங்கம் தன்னுடைய பஸ்களுக்கு அப்படிச் செய்யமுன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நிதி வசதிகள் பெருகப் பெருக அத்தகைய முறைகளை மேற்கொள்ளலாம்.

திரு. நா. கணபதி: தலைவர் அவர்களே, குடந்தையைத் தொட்டுக் கொண்டு அரசாங்கப் பேருந்துகள் செல்கின்றன. அங்கே எஸ்.ஆர்.வி.எஸ்., ராமன் அண்ட் ராமன் போன்ற கம்பெனிகள் இருக்கின்றன அவற்றை தேசிய மயமாக்குவதற்கு சட்டம் இருக்கிறது. அப்படியிருக்கும் பொழுது அந்த இரண்டு கம்பெனிகளின் தொழிற்கூடங்களையும் அரசாங்கமே மேற்கொள்ள உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நாட்டுடைமை யாக்குகின்ற சட்டம் வரவிருக்கிறது.

சாலை விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு நிதி உதவி

* 522 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சாலை விபத்தில் உயிர் இழந்தவர்களின் குடும்பத்திற்கு உதவி நிதி அளிக்க தமிழ்நாடு அரசு திட்டம் ஏதேனும் வகுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தமிழ்நாடு அரசு தனித்திட்டம் வகுக்கவில்லை. 1939-ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டத்தின் 110 (எ) பிரிவு அதற்கு வகைசெய்கிறது. உதவிநிதி நீதிமன்றங்கள் மூலமாகப் பெறலாம்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, நீதிமன்றங்கள் மூலமாக பெறுவது ஒரு நிலையிலே இருந்தாலும், விபத்துக்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் திக்கற்ற ஏழை எளிய குடும்பங்களாக இருக்கின்ற காரணத்தினால் அவர்களுக்கேனும் அரசு நிதி உதவி செய்ய முன்வருமா?



1971 ஜூலை 28]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: திக்கற்ற குடும்பங்களுக்கும் அந்தச் சட்டத்தின்மூலம் உதவி பெறுவதற்கு நடுவர் மன்றத்திற்கு அனுப்பப் படுகிறது. காவல் துறையினருக்கு—அப்படி பாதிக்கப்பட்ட குடும்பங் களைப்பற்றி விவரங்களையெல்லாம் உடனடியாக அனுப்ப வேண்டுமென்று அரசு ஆணையிட்டிருக்கிறது. எனவே இந்தச் சட்டத்தின் மூலமே அவர்கள் பெறுவதற்கு எல்லா வசதிகளும் இருக்கின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி: ரயில்வே விபத்துக்களில் காயமுற்றவர்கள், உயிரிழந்தவர்கள் இவர்களுக்காக மனுச் செய்வதற்கு முன்பாகவே அவர் களுக்கு அட்வான்ஸ் பணம் என்ற முறையிலே உதவி செய்யப்படுகின்றது. அவர்கள் கிளெய்ம்ஸ் பின்னாலே எவ்வளவு இருந்தாலும் விபத்துக்கள் ஏற்பட்ட உடனே ஒரு குறிப்பிட்ட தொகையை அவர்களுடைய குடும்பங் களுக்குக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறியவிரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, கேஸை இன்வெஸ்டி கேஷன் பண்ணுவதற்கு முன்னாலே அவர்களுக்குப் பணம் தருவது என்பதோ அல்லது எவ்வளவு தருவது என்பதோ பிரச்னைக்குரியதாக இருப்பதனால் அத்தகைய திட்டம் இல்லை.

திரு. சொ. காவேரிமணியம்: தலைவரவர்களே, இவ்வாறு விபத்து ஏற்பட்ட வர்களுக்கு நட்டத் தொகை கொடுப்பதற்கு சட்டத்தின் மூலமாக கால தாமதம் ஆகிறது. அப்படி ஏற்படுகிற கால தாமதத்தைக் குறைப்பதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, கால தாமத மாவதாக உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படியொன்றும் தகவல் இல்லை. விபத்து நடந்தவுடனே, அதற்கான மனுவை அனுப்பினால் அதைப் பற்றி விரைவாக நடவடிக்கைகள் எடுக்க முடியும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, இது வரை எந்த அளவிற்கு நட்டத் தொகை ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டால் கொடுக்கப் பட்டிருக்கிறது? அதிக பட்சம் எந்த கேஸுக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தனிக் கேள்வி போடவும்.

திரு. நா. கணபதி: தலைவரவர்களே, காவல் துறையினர் விபத்திலே சம்பந்தப்பட்டவர்களுக்குத் தகவல் கொடுப்பதற்காக கட்டணத்தை வசூல் செய்கிறார்கள். அதாவது குறிப்பிட்ட தகவலைக் கொடுப்பதற்கு 1½ ரூபாயும் முழுத் தகவல் கொடுப்பதற்கு 11 ரூபாயும் என்ற அளவிலே கட்டணம் இருக்கிறது. இந்தக் கட்டணத்தை நீக்குவதனால் ஏழைகளுக்கு நன்மை பயக்கும். இதைப் பற்றி அரசு ஆராயுமா, நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இது பற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை. ஆனாலும்

The Government accordingly direct in G.O. Ms. No. 1824, Home, dated 27th July 1970 that the local police should help the victims to claim third party insurance claims and render necessary

assistance to the third parties and advise them properly in all cases of death or bodily injury immediately after the accident without waiting for the result of investigation or prosecution.

என்று அரசு தெளிவாக உத்திரவு பிறப்பித்திருக்கிறது. இது போதும் என்று கருதுகிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, இந்த விபத்துக்குள்ளானால் உடனே நஷ்ட ஈடு கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். ஆனால் உயிர் விபத்துக்கள் மட்டுமல்லாமல், கட்டிடங்கள் இடிந்து சேதப்பட்ட விபத்துக்களும் இந்த அரசுப் போக்குவரத்து வண்டியினால் ஏற்பட்டிருக்கின்றன. இப்படி விபத்துக்களுக்கு நஷ்ட ஈடு கோரி போலீசார் வழக்கு முடிந்ததற்குப் பின்னாலும் வெகு நாள் ஆகியும் பணம் கிடைக்கவில்லை என்று கொளத்தூரிலிருந்து சுந்தரம் என்ற பார்பர் வகுப்பைச் சேர்ந்தவர் அரசுக்குப் புகார் செய்திருக்கிறாரா? அம்மாதிரி கேஸ்களை விரைவிலே தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட தகவல் என்னிடத்தில் இப்போது இல்லை. ஆனால் அத்தகைய புகார்கள் வந்தாலும் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

THIRU M. A. LATHEEF : The remedy available under the Act is rather expensive and also beyond the reach of the poorer sections of the community. Besides, there seems to be a complaint that there are large number of intermediaries who come into the picture and by giving promise to these aggrieved people that they would secure money from the Court, they swallow a larger amount from the Award granted by the Motor Accident Claims Tribunal. Therefore, may I request the Hon. Minister to find out a way to enable common people, without going to the Court, to get claims and award from the Government itself directly?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அங்கத்தினரைப் போன்ற நல்லெண்ணம் உள்ள வழக்கறிஞர்கள் இருப்பார்களானால், இத்தகைய கஷ்டங்கள் வராது. இது அரசாங்கமே கொடுப்பது என்பதல்ல. ஆக்ஸிடெண்டு, விபத்து என்று வழக்கு வந்து விட்டால், யார் சம்பந்தப்பட்டவர்கள், குற்றவாளிகள் என்ற முறைகளெல்லாம் ஆராயப்பட வேண்டியிருப்பதால் இது நடுவர் மன்றத்திற்கு அனுப்பப்படுகிறது. மாவட்ட நீதிபதி, செஷன்ஸ் ஜட்ஜு நடுவர் மன்றத்தில் தலைவராக இருக்கிறார். ஆகையினாலே இதிலே எந்த வித பாரபட்சமும் நடைபெறாது என்று கருதுகிறேன். ஆகையினாலே சர்க்காரே அவர்களுக்குப் பணம் கொடுக்கிற முறை தேவையில்லை.

THIRU R. PONNAPPA NADAR : The Awards passed by the Compensation Claims Tribunal are not enforceable as if it were a Decree. So, will this Government take steps to see that suitable amendment in the law is made accordingly?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, it is already provided in the Act. So, I do not know how it cannot be enforced.

8—172-821



திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, சாலை விபத்தில் உயிர் இழந்தவர்களின் குடும்பத்தில் யாராவது போக்குவரத்துத் துறையில் வேலை கேட்டு மனுப்போட்டால் அதை அனுதாபத்தோடு கவனிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தகுதி சமமாக இருக்குமானால் அனுதாபத்தோடு அதைக் கவனிக்கும்.

திரு. நா. கணபதி : தலைவரவர்களே, இந்த விபத்துகளிலே ஏற்படுகின்ற உயிர்ச்சேதம், உடல் ஊனம் போன்றவைகளுக்கு என்று தனிப்பட்ட நீதி மன்றங்களும், மற்றவைகளுக்கு வேறு நீதி மன்றங்களும் இருக்கின்றன. இவைகளை மாற்றி ஒரே நீதி மன்றம் தீர்ப்பளிக்கக் கூடிய வகையில் சட்டத்தைத் திருத்த அரசு முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாவட்டத்திற்கு மாவட்டம் நீதி மன்றம் தான் இதைப் பற்றிப் பரிசீலிப்பதாக இங்கே என்னிடத்தில் உள்ள விவரங்களில் இருக்கின்றன. கனம் உறுப்பினர் சொன்ன கருத்தை ஆராய்ந்து சரி என்றால் ஏற்றுக் கொள்ளப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, பஸ்களையெல்லாம் இந்த அரசாங்கம் இன்ஷ்யூர் செய்கிறார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அரசாங்கப் போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில் ஆக்ஸிடெண்டு ரிசர்வ் பண்டு என்று வைத்து, ஒவ்வொரு பஸ்ஸுக்கும் ஆண்டு ஒன்றுக்கு 100 ரூபாய் என்று போடப்படுகிறது.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, இந்த மாதிரி விபத்துக்கள் தொழிற்சாலை நிறைந்த பகுதிகளில், பள்ளிக்கூட பகுதிகளில் அதிகமாக நிகழ்கின்றன. அந்தப் பகுதிகளில் செல்கின்ற வாகனங்கள் 15 மைலுக்கு மேல் நிச்சயமாக போகக் கூடாது என்பதற்கான ஆணையை அரசு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனை சாலை விதிகளில் ஒன்றாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்

### (அ) கவன ஈர்ப்பு அறிவிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்டப்பேரவையின் 41-வது விதியின் கீழ் அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை திரு. எ. சுப்பிரமணியம் அவர்கள் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

As the hon. Member Thiru A. Subramaniam is not in his seat, the calling attention notice given by him is deemed to have been withdrawn.

### 3. கவன ஈர்ப்பு.

### சென்னை உட்லண்ட்ஸ் ஓட்டல் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் குறித்து.

முற் பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் அவசரப் பொதுமுக்கியமான காரியத்தைத் திரு. கா. வேழு வேந்தன் அவர்கள் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

*　　　*　　　*

**திரு. கா. வேழவேந்தன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் "சென்னை உட்லண்ட்ஸ் ஓட்டல் தொழிலாளரின் நீண்ட நாள் கோரிக்கைகளான உணவு, ஊதியம், சம்பள உயர்வு, சர்வீஸ் தொகை போன்றவற்றைப் பெற முறையாக வேலை நிறுத்த நோட்டீஸ் தந்து, 8—7—71 முதல் அமைதியாக எல்லாத் தொழிலாளரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும்போது, சட்ட விரோதமாக உட்லண்ட்ஸ் நிர்வாகம் வெளி ஆட்களை மறைமுகமாக உள்ளே அழைத்துவந்து, ஓட்டலை நடத்த முயல்வதால், அதைத் தடுத்து நிறுத்த உட்லண்ட்ஸ் நிரந்தரத் தொழிலாளர் தலையிடும்போது ஏற்படும் குழப்பத்தையும், தீய விளைவுகளையும் சட்டம் ஒழுங்கு பற்றிய பிரச்சினைகளையும் பற்றி உடன் தலையிட்டு ஆவன செய்யவேண்டியது பற்றிய அவசரப்பொது முக்கியமான காரியத்தை" மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** பேரவைத் தலைவரவர்களே, சென்னை உட்லண்ட்ஸ் ஓட்டல் தொழிலாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையான ஊதிய உயர்வு, உணவுப்படி மற்றும் பல சலுகைகளுக்கான கோரிக்கைகள்மீது முறையான ஒரு வேலை நிறுத்தத்தில் 8—7—71 முதல் ஈடுபட்டனர்.

மேற்கூறிய தொழிற்தகராறில் முதற்படியான தொழிலாளர் துறை அலுவலர் 4-வது வட்டம், சென்னை முன்னிலையில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. உடன்பாடு ஏற்படாததால் பின்னர் தொழிலாளர் துறை ஆணையாளர் பேச்சு வார்த்தைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. திரு. கருணாகரன் மற்றும் நால்வருடைய வேலை இழப்பு பற்றி கோரிக்கை தொழிலாளர் துறை ஆணையருடைய முன்னிலையில் தீர்த்து வைக்கப்பட்டது. ஏனைய கோரிக்கைகளின்மீது எந்தவிதமான தீர்வும் காண இயலாததால், தொழிலாளர்கள் 8—7—71 தேதி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். தொழிலாளர்துறை ஆணையர் முன்னிலையில் 13—7—71 அன்று நடந்த பேச்சு வார்த்தைகளில் சென்னை உட்லண்ட்ஸ் ஓட்டல் நிர்வாகத்தினர் தொழிலாளிகளுக்கு ரூ. 10 ஊதிய உயர்வும், விடுதியில் தங்குவோரிடமிருந்து வசூலிக்கும் 5 சதவிகித தொண்டுக் கட்டணத்தில் 80 சதவிகிதப் பங்கையும் தருவதற்குத் தயாராக இருந்தனர். மேற்படி சங்கத் தரப்பில் ரூ. 25 ஊதிய உயர்வும், தொண்டுக் கட்டணம் முழுவதும் தரப்படுவதுடன் எல்லா வேலையிழந்த தொழிலாளிகளையும் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளிகளையும் திரும்பவும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





இறுதியாக தொழிலாளர் நல அமைச்சர் என்ற முறையில் அரசின் சார்பில் கீழ்க்கண்டவாறு என் பரிந்துரையைக் கூறினேன் :

(அ) ரூ. 50-ம் அதற்குக் குறைவாக ஊதியம் வாங்கும் தொழிலாளிகளுக்கு ரூ. 15 ஊதிய உயர்வும்,

(இ) ரூ. 50 முதல் ரூ. 75 வரை ஊதியம் வாங்கும் தொழிலாளிகளுக்கு ரூ. 13 ஊதிய உயர்வும்,

(உ) ரூ. 75-க்கு மேல் ஊதியம் பெறுவோருக்கு ரூ. 11 ஊதிய உயர்வும்,

(எ) தொண்டுக் கட்டணத்தில் 5 சதவிகிதத்தில் 80 சதவிகிதமும், மற்றும்

(ஒ) ஏற்கெனவே நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்டுள்ள தொழிலாளிகளின் பிரச்சினைகள் தவிர ஏனைய தொழிலாளிகள் அனைவரையும் திரும்ப வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற உடன்பாடு ஏற்பட்டது. இந்த உடன்பாடு 1—8—71 முதல் மூன்று ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும் என்றும் உடன்பாடு ஏற்பட்டு வேலை நிறுத்தம் முடிவுற்றது. தொழிலாளிகள் 17—7—71-ம் முதல் வேலைக்குத் திரும்பினர்.

*　　　*　　　*

### 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டி உரிமையாளர் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்டமுன்வடிவு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டி உரிமையாளர் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவை தமிழ்நாடு சட்டப் பேரவையில் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் மேதகு ஆளுநர் அவர்கள் பரிந்துரைத்துள்ளார்கள் என்பதை அறிவிக்கிறேன்.

### 4. அரசினர் சட்டமுன்வடிவுகள்.

### (ஆ) 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டி உரிமையாளர் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்டமுன்வடிவு.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ் நாடு 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டி உரிமையாளர் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்டமுன்வடிவை இப்பேரவையில் அறிமுகம் செய்ய நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இச் சட்டமுன்வடிவினை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இச் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

(ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சிறு இனும்கள் (எடுத்து விடுதல், ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்டமுன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சிறு இனும்கள் (எடுத்து விடுதல், ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்டமுன்வடிவை இப்பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோருகின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: துணைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(இ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/1971).

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, "1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/1971) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

* திருமதி த. ந. அனந்தநாயகி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த நிதி ஒதுக்கல் தீர்மானத்தின்மீது இன்னும் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். காரணம், சில கருத்துக்கள் 'டிமாண்டு'-களில் விடப்பட்டு விட்டதால் இப்போது அவற்றைக் கூறவேண்டும் என்று விரும்புகிறேன்.

முதலில் தியாகிகளுக்கு என வழங்கப்படும் உதவிப் பணம் சம்பந்தமாக இவ்வரசாங்கத்தின் கவனத்தினை ஈர்க்க விரும்புகிறேன். காரணம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், 'நாங்கள் தியாகிகளுக்கு தாராளமாக உதவித் தொகைகளை வழங்குகிறோம்' என்று. தொகையையும் குறிப்பிட்டார்கள், 'ரூபாய் 47 லட்சம் இதற்கெனச் செலவழிக்கிறோம்' என்று. உண்மையிலேயே இதற்காக அவர்களைப் பாராட்டுகிறேன். ஆனால் இன்னும் சிலர் விடுபட்டுப் போயிருக்கிறார்கள். 31—3—1970-க்குப்பிறகு புதிதாக யாருக்கும் கொடுக்கப்படப் போவதில்லை. புதிதாக அப்ளிகேஷன் போட்டாலும் அவர்களுக்கும் கிடையாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது ஏறத்தாழ ஐயாயிரம் அல்லது ஆறாயிரம் பேருக்குத் தொகைகளைக் கொடுத்துக் கொண்டு வருகின்றார்கள்; விடுபட்டுப்போயிருப்பவர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவாகத்தான் இருக்கும். மிஞ்சிப்போனால் ஒரு ஆயிரம் பேருக்கு மேல் இருக்கமாட்டார்கள். இவர்களுக்காகவும் கொஞ்சம் செலவழித்தால் நியாயமாகவும், தர்மமாகவும் இருக்கும். அவர்கள் அன்றைக்குச் செய்த தியாகத்தின் பலனாகத்தான் இன்றைக்கு நாட்டிலே ஜனநாயக ஆட்சி ஏற்பட்டிருக்கிறது. எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து எஞ்சியுள்ள ஒரு ஆயிரம் பேருக்கும் தியாகிகள் பென்ஷனை அளிக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.





31—3—70-க்குப்பிறகு பலர் வேலையிலிருந்து ரிடையர் ஆகியிருக்கின்றார்கள். அவர்களுக்குக் கிடைக்கும் ஓய்வு ஊதியம் ரூ. 40 அல்லது 50 தான் இருக்கும். அதோடு தியாகிகள் பென்ஷன் என்று இதையும் சேர்த்துக் கொடுத்தால் அவர்களுக்கு உதவியாக இருக்கும். எனவே 31—3—70-க்குப் பிறகு வந்த மனுக்களையும் மனிதாபிமானத்தோடு பரிசீலித்து, அவர்களுக்கும் வழங்க வேண்டும் என்று வற்புறுத்திக்கூற விரும்புகிறேன்.

அடுத்து திரு. காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது முதியோர் பென்ஷன் என்று வயதான ஒரு சிலருக்கு வழங்கப்பட்டு வந்தது. அது இப்போது மிகவும் குறைந்துகொண்டே வருகிறது. உண்மையாகவே உதவிபெறவேண்டிய நிலையிலுள்ளவர்கள் அப்ளிகேஷன் போட்டாலும் அவர்களுக்குக்கூட இப்போது இது கிடைப்பதில்லை. இத்துறையில் சுறுசுறுப்பாக பணியாற்றுவதாகத் தெரியவில்லை. இதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நாம் கொடுப்பது 20 ரூபாய் உதவித் தொகைதான் என்றாலும், அது அவர்களுக்கு பெரிய வரப்பிரசாதம் போன்றது. எனவே பெரிய மனது வைத்து 'ஸோஷல் செக்யூரிடி ஸ்கீம்' திட்டத்தின்கீழ் இவர்களுக்கு இவ்வுதவி அளிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதேபோல அரசாங்க சிப்பந்திகள் காலம் முழுதும் உழைத்துவிட்டு ஓய்வுபெறும்போது பென்ஷன் அவர்களுக்கு உடனடியாகக் கொடுக்கப் படுவதில்லை. ஓய்வுபெற்று இரண்டு ஆண்டுகாலம்கூட ஆகிறது, சில சமயங்களில் அவர்களுக்கு ஓய்வு ஊதியம் கொடுப்பதில். 55 வயதில் ஒருவர் ரிடையர் ஆகப்போகிறார் என்று தெரியும்போது அவரது 54-வது வயதிலேயே அவருடைய பென்ஷன் பேப்பரை முறைப்படுத்தி, அதற்கான ஏற்பாட்டைச் செய்யலாம் அல்லவா? இதைச் செய்வதாகத் தெரியவில்லை. ஒருவர் ஓய்வு பெற்றால் இரண்டு மாதக் காலத்தில் அவரது ஓய்வு ஊதியம் அவருக்கு வழங்கப்பட வேண்டும் என்ற ஒரு முறை ஏற்பட வேண்டும் என்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்து, இன்றைக்கு இந்துக்களுக்கு 'ஹிந்து ரிலிஜியஸ் எண்டௌமெண்ட் போர்டு' என்றும் முஸ்லீம் பெருமக்களுக்கு 'வாஃப் போர்டு' என்றும் இருப்பதுபோல, இந்திய கிறிஸ்துவ சமூகத்தினருக்கும் 'இண்டியன் கிறிஸ்டியன் போர்டு' என்றோ அல்லது வேறு ஒரு பெயரிலோ ஒரு அமைப்பு இருக்க வேண்டும் என்று கூற விரும்புகிறேன். தற்போதுள்ள பிஷப் அவர்கள் அன்னிய நாட்டினராக இருப்பதால், அவர் இந்திய கிறிஸ்துவர்களை சரியாக நடத்துவதில்லை என்ற புகார் இருந்து வருகிறது. இதனால் அவர்களிடையே குழப்பமும், குமுறலும் இருக்கிறது. இவற்றையெல்லாம் கவனிப்பதற்காக அதிலே இந்த அரசாங்கம் கவனம் செலுத்தி, கிறித்துவர்களுடைய மாதாகோவில்களின் சொத்துக்களைப் பராமரிக்க, போர்டு போடுவது மிகமிக அவசியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மிக முக்கியமான பிரச்சினை. சென்னையிலே அரிசி விலை ஏறிக் கொண்டேயிருக்கிறது. ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட்டு வந்தார்கள். இன்றைக்கு அந்த அளவையும் குறைத்துவிட்டார்கள். அதனால் இப்பொழுது மக்கள் மிகமிகக் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கும் அரிசி [illegible] நாட்கள், 2½ நாட்களுக்குத்தான் வருகிறது. மீதி 4½ நாட்களுக்கு

அவர்கள் வெளியிலே, சந்தையிலே வாங்கச் சென்றால் 2 ரூபாய், 2 ரூபாய் 20 காசு என்று விற்கிறது என்றால், ஏழைகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, இந்தக் குறைந்த அளவை மீண்டும் அதிகரிக்க வழிவகை செய்ய வேண்டும். முடிந்தால் 7 நாட்களுக்கும் 1 ரூபாய்க்கு 1 படி அரிசி போட இந்த அரசாங்கம் முன்வர வேண்டும்.

அதுமட்டுமல்ல, பல இடங்களில் ரேஷன் கார்டுகள் கொடுப்பதிலே தாமதப் படுத்துகிறார்கள். ரேஷன் கார்டுகளில் உள்ள பெயருக்குச் சொந்தமான ஆண் செத்துவிட்டால் அதைப் பெண் பெயரிலே மாற்றுவது என்றால் தாமதம் ஏற்படுகிறது, கொடுக்காமலேயே இழுக்கடிக்கிறார்கள். உண்மையிலே இந்த அரசாங்கம் 1 ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட வேண்டுமென்ற ஆர்வம் படைத்திருக்குமேயானால், அளவைக் குறைக்காமலும், மேலும் அதிகரித்தும், சென்னை வாழ்மக்களுக்கு 7 நாட்களுக்குரிய அளவைக் கொடுக்கவும் இந்த அரசாங்கம் முன்வந்தால் பாராட்டுக்குரியதாக இருக்கும் என்று கூறி, என்னுடைய வார்த்தைகளை முடிக்கிறேன்.

* **THIRUMATHI M. ALDA FOWLER**: Mr. Deputy Speaker, Sir, on the first day of this budget session we were told by the Hon. Chief Minister that he was going to start a Youth Corps. This Youth Corps has not come in for any mention in this House as yet. But I feel that this is a matter of vital importance. We have seen young people come to our country from other countries. Peace Corps workers and members of the Voluntary Overseas Service. One has wondered, when the time would come for our own young people to do these tasks and duties which those people from other countries came to us and did so willingly and so well.

I would like to offer a few suggestions or thoughts on the Youth Corps which is in the making. If we have not heard about it after the first mention, it is only natural because it is as yet in the development stage. The ideas around it are still being formulated. Primarily the Youth Corps may fill the need to bridge the unemployment gap but the effects and benefits of a good youth corps are far-reaching to the State and perhaps to the country. Sir, I consider this scheme to be a break-through and one which calls for imagination and vision. What sort of young people are we going to enroll, what are we going to teach them and what sort of leaders are we going to enlist to train them? These are the thoughts and questions that occupy our minds. Youth is the time of ideas and energies which have to be utilised in some way or the other. Young people are full of wonderful ideas and energies and it is because they cannot use their ideas and energies that they sometimes channel them into wrongful purposes. We have to provide the correct channel for them to use the same energies for purposeful acts.

[திரு. நா. வீராசாமி தலைமை]

It is also the time for emotions uncurbed and uncontrolled, and we have to teach them how to control these emotions and the best way we can do it is to use them to do something creative. It is also through these emotions that we appeal to them to attain the highest and the best. Young people respond easily if you appeal



to them in the right way. They will be so filled with compassion that they will go out of their way to do their utmost for good. So, when the appeal or call goes out to our young folk, it is these young people who will respond the most. So we should train them as the citizens of the future. Our aim will be to train citizens extraordinary and how shall we lead them and what sort of leaders shall we get?

If we expect so much of our young people, we have to look for something more in their leaders. They will have to be hand-picked. If our leaders are going to be any sort of leaders at all, they themselves should not have lost their vision and they will have to be a source of inspiration to these young people continually and not just at the beginning and then fade away.

More than that, they will have to practise what they preach. Young people are shrewd and they know whether a leader preaches one thing and practises another. Practice and precept must come together in the person of the leader who trains them. Also the leader who is over-zealous will over-teach and he should not do that. He should elicit ideas from the younger people whom he trains and he should draw out all their creative abilities.

Now, if we want to do this business of training a good, effective and efficient Youth Corps, the training should actually start earlier when they are very young. Sir, in the schools which have Boy Scouts and Girl Guides troupes, they learn the essentials of citizenship. It is a fact that not all schools provide this training and it is to our advantage to see that more schools have this type of training. For example Boy Scouts and Girl Guides learn to do a good turn every day. If all of us in this House do that sort of training and practise doing one good turn every day, what a difference it would make to Tamil Nadu. We would have thousands of citizens who would be doing a good turn daily. It would make such a difference to us. So, Sir, I commend this scheme most highly. I feel that by this scheme so much of good can be done for Tamil Nadu.

I would like to sound a note of warning. We should never deploy these persons to do anything contrary to what we have already taught them. They would have to do something good. They would have to hold their ideals high. We cannot even deploy them into some course which would be questionable. They must always be on the side of law and order and law and order must always be on the side of that which is good and upright. So, Sir, I feel we could have a corpse of young people who want to serve without asking for rewards, who want to toil and not become weary and who want to labour and not ask for any return. Thank you, Sir.

திரு. கே. டி. கே. தங்கமணி: மிஸ்டர் சேர்மன் சார், நமக்கு முன்னால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கக் கூடிய தமிழ்நாடு அப்ரோப்ரியேஷன் மசோதாவின் பேரிலே விவாதம் நடப்பது என்பது, பொதுவாக இவ்வளவு நாட்களாகப் பல

மானியத்தின் பேரிலே இந்த அரசு செலவழிப்பதற்காக நாம் அனுமதி கொடுத்ததற்குப் பின்னால், ஒவ்வொரு மானியத்தின் அடிப்படையில் ஒதுக்கப் பட்டிருக்கக்கூடிய தொகையானது முறையாகச் செலவழிக்கப்பட வேண்டு மென்பதற்காக உறுப்பினர்கள் அரசுக்கு ஆலோசனை சொல்வதற்கான முக்கிய மான சந்தர்ப்பமாக இது அமைகிறது.

பொதுவாகப் பார்க்கப் போனால், இன்றைக்கு இந்தச் சபையினுடைய அங்கீகாரத்தின் பேரிலே 430 கோடி ரூபாய் வரையிலே செலவழிப்பதற்காக நாம் அனுமதித்திருக்கிறோம். அதே மாதிரியாக நாம் நேரடியாக அனுமதி கொடுக்காமல் போனாலும் கூட, செலவழிக்கலாம் என்ற முறையில் சட்ட ரீதியாக 298 கோடி ரூபாய் வரையிலும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆக மொத்தம் 728 கோடி ரூபாய் வரையிலே 1971-72-ம் ஆண்டுக்கு அரசு செலவழிப்பதற்காக சபைக்கு முன்னால் சமர்ப்பிக்கப்பட்டு, மக்கள் மத்தியில் நாங்கள் பகிரங்கமாக இதைச் செய்கிறோம் என்று அறிவிக்கக்கூடிய இந்தச் சிறந்த பண்பானது நமக்கு அமைந்திருக்கிறது.

ஏற்கனவே பல மானியங்களின் பேரில் பல உறுப்பினர்கள் பேசினார்கள். எங்கள் கட்சியின் சார்பில் பல வெட்டுப் பிரேரணைகள் கொடுத்தாலும் கூட விட்டுப் போன சில விஷயங்களைக் குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன்.

இந்த ஆண்டு நாம் நடத்திய விவாதங்களில் அநேகமாக எல்லா மானியத் தின் பேரிலும் விவாதம் நடந்து வோட்டுப் போட்டிருக்கிறோம். ஆனால மானியம் 46—காபிடல் அவுட்லே ஆன் ஸ்கீம்ஸ் ஆஃப் கவர்ன்மென்ட் டிரேடிங் என்பதன் பேரில் விவாதம் நடத்தவில்லை. அது ஒன்று மட்டுந்தான் கில்லெட் டின் செய்யப்பட்டது. ஆனால் நாம் அந்தத் தலைப்பின் கீழ் ஒதுக்கியிருக்கும் தொகை 20 கோடியே 96 லட்சம் ரூபாய் ஆகும். தொகை அதிகம். அதே நேரத்தில் இந்த நாட்டுமக்களுக்குத் தேவையாக இருக்கக்கூடிய உணவுப் பொருள்கள் எம்முறையில் பங்கீடு செய்யப்பட வேண்டுமென்பதும், எந்த முறையில் உணவுப் பொருள்களை சேகரித்துக் கொள்ள வேண்டுமென்பதும், உணவுப் பொருள்களைச் சேகரிக்க என்ன என்ன நடவடிக்கைகள் எல்லாம் எடுக்க வேண்டுமென்பது எல்லாம் அதன் கீழ் பொதிந்திருக்கிறது.

சமீப காலத்தில் எங்களுக்கு, பல உறுப்பினர்களுக்குக் கடிதங்கள் வந்த வண்ணமாக இருக்கின்றன. பொதுவாக அரிசி எல்லோருக்கும் கிடைக்கிறது என்பது வாஸ்தவந்தான். ஆனால் அரிசி விலையைப் பார்க்கப் போனால் 1½ ரூபாய், 2 ரூபாய் வரையிலும் பல மாவட்டங்களில் உயர்ந்திருக்கிறது என்ற தகவல் வந்திருக்கிறது. சாதாரண மக்களுக்குக் குறைந்த விலையில் அரிசி கிடைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். அந்த மாதிரியான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறதா என்பதைப் பற்றி நாங்கள் அறிந்து கொள்ள இதுவரை வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஆகவே, இந்த விவாதத்தின் முடிவிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விலையைக் குறைப்பதற்கு, எல்லா மக்களுக்கும் குறைந்த விலையில் அரிசி கிடைப்பதற்கு என்னென்ன ஏற்பாடுகள் மாநில ரீதியில் செய்திருக்கிறார்கள், எந்தெந்த மாவட்டத்தில் இதற்கான பிரத்தியேக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றிச் சொல்லுவார்களானால், பேருதவியாக இருக்குமென்று உங்கள் மூலமாகச் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

அடுத்து இன்னொரு முக்கியமான விஷயம். அது நமது மன்றத்திலே விவாதத்திற்கு வந்திருந்தாலும் கூட பல உறுப்பினர்கள் அதைப் பற்றிச் சொல்லவே இல்லை. 47-வது மானியக் கோரிக்கையின் அடிப்படையில் லோன்ஸ் அண்டு அட்வான்சஸ் என்று இருக்கிறது. 43 கோடி ரூபாய் அளவில் பலவிதமான திட்டங்களுக்கெல்லாம் கடன் கொடுக்கிறார்கள். கடன் கொடுப்பதில் ஒரு பகுதி ஹவுஸிங் ஸ்கீம் பற்றியது. நான் ஹவுசிங் ஸ்கீமைப் பற்றிய விவாதத்தை மறுபடியும் தொடங்க விரும்பவில்லை. என்றாலும் இன்றைக்கு நடக்கக்கூடிய பல விஷயங்கள் விரும்பத்தகாத முறையில் நடக்கின்றன. சாதாரண மக்களுக்குப் போதுமான வீடுகள் கிடைப்பதில்லை. அதிலே சில தரப்பினருக்குத்தான் கிடைக்கிறது என்று கம்ப்ளெயின்ட்டுகள் வந்திருக்கின்றன. என்னைப் பொறுத்தவகையில் நான்காம் தரச் சிப்பந்திகளுக்கு வீட்டு வசதி செய்து கொடுப்பதில், ஏதாவது ஒரு இடத்தில் தொடங்குங்கள் என்று கூற விரும்புகிறேன். நம்முடைய சட்ட மன்றத்தில் இருக்கக்கூடிய நான்காம் தர சிப்பந்திகளுக்கு முதலிடம் கொடுப்போம். இந்த ஹவுஸிங் ஸ்கீமைப் பொருத்தவரை இன்னும் சில விரிவான ரிப்போர்ட்டுகள், எந்தெந்த முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைப் பற்றி, விரிவான ரிப்போர்ட்டுகள் கிடைக்குமானால் உதவியாக இருக்கும். நான் கலந்து கொண்ட மட்டில் அதற்கு சந்தர்ப்பம் கிடைக்காமலும், அதைப் பற்றி பதில் சொல்லுவதற்கு அமைச்சருக்குச் சந்தர்ப்பம் இல்லாமலும் போய்விட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பென்ஷன் சம்பந்தமாக எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். எங்களுக்கும் அந்த மாதிரித் தகவல் வந்திருக்கிறது. உண்மையிலேயே காங்கிரஸ் தியாகிகளுக்கு, தேசீயத் தியாகிகளுக்குப் பென்ஷன் தொகை கொடுக்கப்பட்டு வருவது வரவேற்கத்தக்கது. 50 லட்சம் ரூபாய் வரையில் கொடுக்கிறார்கள். ஆனால் அதற்கு மனுச் செய்யும் தேதி 1970, 3-வது மாதத்திற்குள் என்று இருந்ததை 1971-ம் வருடம் டிசம்பர் மாதம் வரையிலே அவர்கள் மனுச் செய்து கொள்ளலாம் என்று மாற்றினால் பலருக்கு உதவியாக இருக்கும்.

இன்னொரு முக்கியமான விஷயம். ஏற்கனவே தியாகிகளாக இருந்தவர்கள் இறந்துவிட்டால், அவர்களுடைய துணைவியாருக்கு மனுச் செய்தவுடன் கிடைக்க ஏற்பாடு இருக்க வேண்டும். இதிலே உள்ள சிரமம் என்னவென்றால், மூன்று மாத காலமாவது அவர்கள் சிறையில் இருந்திருக்கிறார்கள் என்ற சர்டிபிகேட் தேவையாக இருக்கிறது. அந்தக் காலத்தில் நம்முடைய முஸ்லிம் லீக் தலைவர் அவர்கள் ஓரிடத்திலே குறிப்பிட்டது போல் சிறையில் வைத்திருப்பார்கள்; லாக்கப்பில் நாலைந்து மாதங்கள் கூட வைத்திருப்பார்கள். ஜெயில் ரெக்கார்டைப் பார்த்தால் அத்தனை மாதங்கள் இருந்ததற்கான குறிப்பே இருக்காது. ஆகவே, இந்த மாதிரி நிலையில் அந்த ஸ்தாபனத்தில் இருக்கக்கூடிய முக்கியமான தலைவர்கள் உத்தரவாதம் கொடுப்பார்களேயானால், அவர்களுக்கும் இந்த மாதிரி உதவித் தொகை கிடைக்கச் செய்யவேண்டும்.

இப்படி இரண்டு மூன்று சம்பவங்கள் ஏற்கனவே கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அன்றைக்கு இருந்த தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் அவர்கள் 'குறிப்பிட்ட சிலர் ஏற்கனவே சிறை சென்றிருக்கிறார்கள், மூன்று மாதத்திற்கு மேல் சிறை சென்றிருக்கிறார்கள்' என்று சர்டிபிகேட் கொடுத்தி

ருக்கிறார்கள். ஆனால் சிறை ரெக்கார்டுகளில் சில நேரங்களில் அதைப் பார்க்க முடியாது. அவர்களுக்கெல்லாம் கூட பென்ஷன் கொடுப்பதற்கு வழி செய்தால் அந்தக் கொள்கை அமலாகக் கூடிய நேரத்தில் பாராட்டக் கூடிய முறையில் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாதாரணமாக பென்ஷனைப் பொறுத்தவரை ஆரம்பத்தில் பேசுகின்ற போதே சொன்னேன். பணியாற்றக் கூடியவர்களுக்குக் கொடுக்கக் கூடிய வசதியை விட பென்ஷன் பெறக் கூடியவர்களுக்கு வசதி அதிகமாக இருக்க வேண்டும். வயதாகிவிட்ட பிறகு அவர்கள் ஓய்வு பெற்று வேலை பணி செய்ய முடியாது. க்ளாஸ் ஒன் ஆபீசராக இருப்பவர்கள், எஞ்சினியர்களாக இருப்பவர்கள் ரிடையர் ஆனவுடன் தனியார் துறையில் வேலைக்குப் போகிறார்கள். என்னதான் நிபந்தனை போட்டாலும் அவர்கள் தனியார் துறையில் வேலைக்குப் போகிறார்கள். அவர்களுக்கு மேற்கொண்டு வருவாய் வசதி இருக்கிறது. ஆனால் மூன்றாந்தர சிப்பந்திகள் ரிடையர் ஆகிவிட்டால், பென்ஷன் கொடுப்பதில் நல்ல வசதிகள் செய்து கொடுக்க வேண்டும்.

முனிசிபல் சிப்பந்திகளுக்கு 1970-ம் வருஷம் ஜனவரி மாதம் 14-ம் தேதிக்குப் பிறகு பென்ஷன் தொகை கொடுக்கப்படும் என்ற உத்தரவு போடப்பட்டது. ஆனால் இதுவரை யாருக்கும் கொடுக்கப்படவில்லை. உடனே கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அந்தக் குறிப்பிட்ட தேதிக்கு முன்னால் ரிடையர் ஆனவர்கள் 750 பேர்தான் இருக்கிறார்கள் என்று அரசு குறிப்பில் இருந்து அறிகிறேன். அவர்களுக்கும் பென்ஷன் கிடைக்கும்படிச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-00

இன்னும் இரண்டு, மூன்று முக்கிய விஷயங்களைக் குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன். ஜமீந்தார்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்பதற்காக 77 லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று வோட்டு போட்டிருக்கிறோம். அந்த 77 லட்சம் ரூபாயைச் செலவழிக்கும்போது எவ்வளவு சிக்கனமாகக் கொடுக்க முடியும் என்று பார்த்து, அதில் ஓரளவிற்கு மிச்சம் செய்தால் உதவியாகயிருக்கும்.

இன்னொன்று. சாதாரணமாக ரிட்டயரானவர்கள் மேற்கொண்டும் வேலைக்கு வரக்கூடாது என்ற நிலையை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். திரும்பவும் ரிட்டயரானவர்கள் வேலைக்கு வருவதால் அது அடுத்தவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கிறது. எனக்கு சில விவரங்கள் வந்திருக்கின்றன. மதுரை நகரில் ஒரு பேஷ்கார் இருக்கிறார். அவரது பெயரைச் சொல்ல நான் விரும்பவில்லை. அவருக்கு வயது 68. அவருக்கு மேற்கொண்டு இரண்டு ஆண்டுகள் எக்ஸ்டென்ஷன் கொடுத்திருக்கிறார்கள். இந்தமாதிரிச் செய்வது எல்லா இலாக்காக்களையுந்தான் சொல்கிறேன்—கோவிலைப் பொறுத்த வரையில் ரிட்டயரானவர்களின் ஒரு மடமாக அது ஆகிவிடக்கூடாது. ரிட்டயரானவர்கள் பூராவும் வந்து ஆதிக்கம் செலுத்தும் நிலை இருக்கக் கூடாது. இங்கு நாம் ஏற்கனவே விவாதித்திருக்கிறோம். மக்கள் தமிழில் அர்ச்சனை செய்வதை விரும்புகிறார்கள் என்றளவிற்கு வந்திருக்கும்போது, பழைய காலத்து ஆட்கள், 72, 75 வயதானவர்களைப் போடுவது அல்லது ட்ரஸ்டியாக இருப்பது என்ற முறையை மாற்றியமைக்க வேண்டும்.



அங்குள்ள அர்ச்சகர்களும் சாதாரணத் தொழிலாளிகள்தான். அவர்களுக்கு மதுரையில் ஏற்கனவே வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக திட்டமிட்டு அஸ்திவாரக் கல் கூட நாட்டப்பட்டிருக்கிறது. அந்த அஸ்திவாரக் கல் அன்றிருந்த முதல் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களால் போடப்பட்டது. அந்த இடம் இன்றும் காலியாக இருக்கிறது. வீடுகள் கட்டிக் கொடுப்பதாகத் தெரியவில்லை. இவற்றையெல்லாம் கவனித்துச் செய்தால் உதவிகரமாகயிருக்கும்.

அடுத்து, அமைச்சர்கள் பல இலாகாக்களுக்குப் பொறுப்பேற்றிருக்கலாம். ஆனால் குறிப்பிட்ட சில இணைந்த இலாக்காக்களுக்கு ஒரு அமைச்சர் பொறுப்பாக இருப்பது நல்லது. அப்படிச் செய்வது அமைச்சரவையின் பொறுப்பான காரணத்தினால் அதைப் பற்றி மேலும் சொல்ல விரும்பவில்லை.

குறிப்பாக அனிமல் ஹஸ்பன்ட்ரி இருக்கிறது, மில்க் சப்ளை இருக்கிறது. இவை இரண்டும் இணைந்து இருக்க வேண்டும். அதுதான் பொருத்தமானதாகும். இவற்றிற்கு வெவ்வேறு அமைச்சர்கள் இருந்தாலும், இரண்டு அமைச்சர்கள் இருந்தாலும், அந்த இலாக்காக்கள் எந்தளவிற்கு இணைந்து பணியாற்றுகின்றனவோ, அந்தளவிற்கு அவை திறம்படச் செயல்பட முடியும். சொல்லக் கூடாத சில விஷயங்களைப் பற்றிச் சொல்வதாகயிருந்தாலும்கூடச் சொல்கிறேன். இணைந்திருக்கக்கூடிய இலாகாக்கள் கூடுமானவரையில் ஒரே அமைச்சரின்கீழ் இருப்பது உதவிகாமாகயிருக்கும். அப்படிச் செய்யமுடியாவிட்டால் அந்த இலாக்காக்களை இணைத்து ஓரளவிற்கு ஒன்றாகச் செயல்பட ஏற்பாடு செய்வது உதவிகாமாகயிருக்கும்.

அடுத்து, கல்வி சம்பந்தமாக, 83 கோடி ரூபாய் நாம் செலவழிக்க இருக்கிறோம். இது அதிகமான செலவு. நமக்குக் கிடைக்கக்கூடிய வருவாயில் நான்கில் ஒரு பங்கை நாம் கல்விக்காகச் செலவிடுகிறோம் என்பது நமக்கு பெருமை தரக்கூடியது. அதை மக்கள் பாராட்டுகிறார்கள். ஆனால் ஒதுக்கப்படக்கூடிய பணம் சரிவர செலவழிக்கப்பட வேண்டும். நேற்றுகூட விவாதித்தோம். இங்கு கொள்கைகளை நிர்ணயித்தாலும் அதற்கு மாறான விதத்தில் சிலர் நடக்கின்றனர். தனியார் கல்லூரிகள் இருக்கின்றன. பி.யு.சி. யில் பணம்தான் வாங்குவோம் என்று சொல்லக் கூடிய தனியார் கல்லூரிகள் இருக்கின்றன. அந்தத் தனியார் கல்லூரிகளைப் பற்றிய விவரங்களை எங்களால் கொடுக்க முடியும். விவரங்களை வைத்துத்தான் பேசுகிறோம்.

பல தனியார் கல்லூரிகளில் ரசீது கொடுக்காமல் ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய் என்று வாங்கப்படுகிறது. மக்கள் மத்தியில் வைத்தியக் கல்லூரியில் சேருவதற்கு பணம் செலவழிக்கிறார்கள் என்று இம்மாதிரியான விஷயங்கள் தான் அதிகமாக வருகின்றனவே தவிர, தனியார் கல்லூரிகளில் சேரவேண்டுமானாலே பணம் கொடுக்க வேண்டுமென்ற நிலை ஏற்படுகிறது. அந்த விவரங்களை வேண்டுமானால் நான் இரகசியமாக அமைச்சர் அவர்களிடம் கொடுக்கத் தயார். சில பள்ளிகளில் போய் விசாரித்தால் எவ்வளவு மோசமாக நடந்து கொள்கிறார்கள் என்பது தெரிய வரும். அதைத் தடுக்க வேண்டும். அப்பேர்ப்பட்ட கல்லூரிகளின், தயவுதாட்சண்யம் இல்லாமல் அவர்களின் அங்கீகாரத்தை ரத்து செய்வதற்கு பல்கலைக் கழகத்திற்கு நாம் ஏற்பாடு செய்யவேண்டும். அவர்களுக்கு கொடுக்கக்கூடிய நிதியையும் நிறுத்தி வைப்பதில் எந்தவிதமான தவறும் கிடையாது. அடுத்தபடியாக, நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன், தனியார் கல்லூரிகள் அதிகமாகவும், அரசாங்க கல்லூரிகள்

குறைவாகவும் இருக்கின்றன. அரசுக் கல்லூரிகள் அதிகமாகவும். தனியார் கல்லூரிகள் குறைந்தும் இருக்க வேண்டும். உயர்நிலைப் பள்ளிக்கூடங்கள் போன்றவையும், அவைகளையும் தனியார் துறையிலிருந்து அதிகமாகக் குறைக்க வேண்டும். கடைசியாக . . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): பதினைந்து நிமிடங்களாகிவிட்டன. தயவுசெய்து உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே தங்கமணி : அதை முன்பே சொல்லியிருக்கலாம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : கட்சித் தலைவர் என்ற முறையில் பதினைந்து நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் பதினைந்து பேர்கள் பேச வேண்டியிருக்கிறது., தயவுசெய்து உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஒன்றிரண்டு விஷயங்கள் இருந்தாலும் நான் அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. பொதுவாக ஒதுக்கப்பட்டிருக்கும் நிதிகள் பூராவும் முறையாகச் செலவழிக்கப்படும் என்று நான் நம்புகிறேன். செலவழிக்கப்படும் முறையில், எந்தெந்த முறையில் செலவழிக்கப் பட்டிருக்கின்றன என்று எங்களுக்கு அறிவிக்க வேண்டும். பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் பலதுறைகளில் என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன என்பது பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றையும் கவனித்து ஆவன செய்வார்கள் என்று நம்பி, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

THIRU M. A. LATHEEF : Sir, any fiscal policy should be so contrived as to bring about not only an enhancement in production level but there should also be rationalisation and modernisation in the distributive pattern of the public expenditure. The public expenditure should be so contrived as to bring about maximum benefit to all sections of the community. From this point of view I am happy and it is heartening to note that the appropriation pattern of public expenditure has been so contrived by our able Finance Minister that it would definitely bring about happy returns in economic, social and industrial fields in this State. It depends upon social development. Maximum social advantage that the community expects from any fiscal ideology depends upon the distributive pattern of public expenditure. We may produce things. There may be increase in production and production targets may go up. But finance comes into the picture.

The poor sections become poorer and rich sections becomes richer only because of defects in distributive pattern. So much emphasis should be laid and much emphasis should be placed upon the way in which the public expenditure is distributed.

In this connection I would suggest that the Government be quite alive to its responsibility of not only increasing industrial base, not only bringing about increase in production level but also to place a firm foundation for the social overhead facility. That is all the more important to bring about over all improvement and development in society. Now in this appropriation we find that a considerable amount of money has been allocated for the purpose of education, particularly basic education.



There should be what is called the social development. A conscientious and responsible and dedicated society will be a wherewithal for economic development. I congratulate the Government for having allotted such big amount to improve the educational base of the society. Not only that. With particular reference, sir, I would suggest that for all kinds of development, there should be peace in the society. There should be industrial peace, there should be social peace, there should be communal harmony, particularly in a country where different communities live together as brothers. But unfortunately in our country in the name of communities, in the name of moralities, in the name of Dharmas, in the name of these. in the name of religions, dissensions and enmity are created among the different sections of the people. I congratulate the Government for having devoted sufficient attention to curb the activities of the commpnalists. I echo my voice in this connection particularly today, because I come from a place wherein the rigour of such communal feelings have been felt very recently.

On behalf of the constituency which I represent and also through the medium of this House I would say that whatever may be the religion, no religion teaches discard, no religion teaches enmity and no God worth its name says that one brother should fight with the other and one man should discard the other and one man should dislike the other because he happens to profess some other faith or something like that. No religion teaches like that.

Therefore, not only industrial peace is required for industrial development of the State. But for the economic development of the State I would suggest that in a country like India it is our responsibility to infuse confidence in the minds of the people and to bring about what is called social harmony in our country. I congratulate the Hon. Finance Minister for having devoted much attention to curb the activities of the communalists.

Sir, with regard to the Housing Boards, there have been complaints. In Ranipet there is a Co-operative Housing Board Society. I am told that in order to fulfil all the programmes with optimum level and in such a way as to bring fruits, it requires about Rs. 10 lakhs. But because of lack of finance, dearth of finance, it is not able to fulfil all the programmes that it has drawn. Therefore, I would suggest that the suggestion that has been advanced by the authorities concerned there in Ranipet should be properly considered and should be favourably disposed of.

With regard to my constituency, the Vaniambadi constituency, we are for effecting green revolution in our State, we are for bringing about speedy economic growth and we are for giving maximum benefits to the people of this State. Particularly I have been repeatedly drawing the attention of the Government that the western part of Vaniambadi which is completely separated from the main land by the Palar river has not seen the dawn of modernisation, has not realised the benefits of the modern development because there are no roads, no facilities, no bridges. Above all, people living in

42 villages there in the western part of Vaniambdi are completely cut off from the regular stream of social life. Therefore, I request the Government particularly the Hon. Chief Minister to see that some benefits to the people who are living in the western part of the Palar river in my Vaniambadi constituency . . .

(The Chair sounded the going and called the next speaker:)

*மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):* எங்களோடு ஒத்துழைத்தால்தான் எல்லா உறுப்பினர்களும் பேச முடியும். தலைவர்களுக்கு 10 நிமிடம் கொடுத்தால் 15 நிமிடம் எடுத்துக்கொண்டு பேசுகிறார்கள். உறுப்பினர்களுக்கு 5 நிமிடம் என்று சொன்னால், 9 நிமிடம் எடுத்துக்கொண்டு பேசியிருக்கிறார்கள். எல்லா உறுப்பினர்களுக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும். மணியடித்தவுடனே உட்காருவதுதான் இந்த மன்றத்திற்கு அழகு.

* *திரு. கா. மு. கதிரவன்:* மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, 1971-72-ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டை ஆதரித்து, நான் இந்த மன்றத்திலே பேச விழைகிறேன்.

இந்த நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்த அளவிலே நமது முதலமைச்சர் அவர்கள் ஒரு புரட்சிகரமான ஒதுக்கீட்டை இந்த தமிழகத்திற்குப் படைத்திருக்கிறார்கள். இது வரையிலும் வரலாற்றிலே காணாத திட்டங்கள் இந்த ஒதுக்கீட்டிலே இருப்பதைக் கண்டு முதலமைச்சர் அவர்களுக்கு புகழாரத்தை நான் படைத்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியின் தேவைகளை ஒரு சிலவற்றை இந்த நேரத்தில் கூறிக்கொள்ளலாம் என்று கருதுகிறேன். பல்லாண்டுகளாக வேண்டப்பட்ட கண்ணுப்புள்ளி அணைக்கட்டு, அடைவிநயனூர் அணைக்கட்டு, ஆகிய திட்டங்களை இந்த அரசு கவனத்தில் கொண்டு முடிந்த அளவுக்கு சீக்கிரத்தில் நிறைவேற்றி, அந்தப் பகுதி விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வசதி செய்து கொடுக்கும்படி நான், அன்புடன் வேண்டிக் கொள்கிறேன். இந்த நிதி நிலை அறிக்கையிலே மேற்கு மலைத் தொடரிலே பெருகும் நீரை ஒரு ஒருங்கிணைந்த திட்டத்தின் மூலமாக தமிழகத்திற்கு பயன்படுத்தும் திட்டத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்த திட்டத்தை நினைக்கிறபோது அது இராமநாதபுரம் மாவட்டத்தையும், நெல்லை மாவட்டத்தையும் செழிப்பாக்குகிற ஒரு மாபெரும் திட்டமாகும். இத்திட்டத்தின் வடிவிலே தென்காசி தாலுக்காவில் கோள எல்லையை நோக்கி அச்சன் கோவில் என்ற ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. அந்த ஆற்றை திசை திருப்பி, நமது தமிழகத்திற்குக் கொண்டு வந்தால் அது மிகு பாசனக் கொடுக்கும் என்று நான் இந்த அரசை வேண்டிக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், எனது தொகுதியில் இருக்கிற வடகரைக்கும் பொன்பொழிலுக்கும் இடையே உள்ள புலி ஓடை பாலம் பழுது அடைந்து மிகவும் பயங்கரமான நிலையில் இன்றையதினம் இருக்கிறது. அவற்றைச் சரிசெய்து அந்தப் பாலத்தைச் செப்பனிட வேண்டுமென்று இந்த அரசை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, இன்றையதினம் இந்திய அரசின் உதவியோடு கிராம வேலை வாய்ப்பு திட்டம் ஒன்றை புதிதாக ஆரம்பித்து இருக்கிறார்கள். அதற்கு இந்திய அரசின் சார்பாக 15,000 பேருக்கும், தமிழக அரசின்



சார்பாக 15,000 பேருக்குமாக 30,000 பேருக்கு இந்த தமிழகத்தில் வேலை வாய்ப்பு பெறுகிறார்கள். ஆனால், அந்தத் திட்டத்தில் ஒரு சிறிய வேண்டுகோளை நான் முதல்வர் அவர்களிடத்தில் பணிவன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் எனது தொகுதியில் செங்கோட்டை பாலராமவர்ம மில்லை அடைத்து விட்டார்கள் என்ற காரணத்தினாலே தொழிலாளர்கள் வேலை இல்லாது இருக்கிற காரணத்தாலே பரிதவித்துக்கொண்டு இருக்கிறார்கள். தவித்துக் கொண்டிருக்கும் அந்தத் தொழிலாளர்களுக்கு இந்தக் கிராமப்புற வேலை திட்டத்தில் வாய்ப்பளிக்க வேண்டுமென்று நான் முதல் அமைச்சர் அவர்களைப் பார்த்து அன்புடன் வேண்டிக்கொள்கிறேன்.

மருத்துவ மனையில் இடவசதி பெருக்கம் அளிப்பதிலே தென்காசிக்கும் இந்த ஒதுக்கீட்டிலே நிதி ஒதுக்கீடு செய்து இருப்பதை குறித்துஅரசுக்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். செங்கோட்டையில் இருக்கும் மருத்துவ மனையில் படுக்கைகளை விஸ்தரிக்கும் திட்டத்தை சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று இந்த அரசை வேண்டிக் கொள்கிறேன்.

தென்காசிப் பகுதியில் விசுவநாதபுரத்தில் பிரம்பு, மூங்கில் தொழில் குடிசைத் தொழிலாக புதிதாக ஒன்றைத் துவங்கி இருக்கிறார்கள். இந்த அரசு கூட்டுறவு குடிசைத் தொழிலுக்கு ஊக்கமும், ஆக்கமும் அளித்து வருகிறது என்பது வரவேற்கத் தகுந்த திட்டமாகும். அந்தச் சங்கம் இன்றையதினம் மூலப்பொருள்கள் கிடைக்காமல் அந்தக் குடிசைத் தொழிலில் சிறந்த முறையில் உருவாக்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறது. பாரஸ்டில் காண்டிராக்டர்கள் அந்த காண்டிராக்டை எடுத்துக்கொண்டு விடுவதால், அந்த சங்கத்திற்குத் தேவையான மூலப்பொருள்கள், பிரம்பு மூங்கில் முதலியவற்றைக் கொடுக்காமல் செய்து விடுகிறார்கள். ஆகவே, அந்தச் சங்கங்களுக்கு நேரடியாக அரசின் மூலமாக மூலப்பொருள்கள் கிடைக்க வழிவகைகள் செய்து கொடுக்கும்படி இந்த அரசை வேண்டிக்கொள்கிறேன்.

கடந்த 3 ஆண்டுகளிலே ரூ. 438 லட்சத்திற்கு குடிக் தண்ணீருக்கு என்று இந்த அரசு வழங்கியிருக்கிறது. இந்த ஆண்டிலே 124 லட்சமாக பாராட்டத்தக்க அளவுக்கு போற்றத்தக்க அளவுக்கு குடிக் தண்ணீர் திட்டத்தை இந்த அரசு உருவாக்கி செயல்படுத்த இருக்கிறது. இருந்தபோதிலும், தென்காசியில் குடித் தண்ணீர் பிரச்சினையை பெரும் பிரச்சினையாக இருக்கிறது. அந்தக் குடித் தண்ணீர் பிரச்சினையை தீர்ப்பதற்காக ஒரு திட்டம் 67-ம் ஆண்டுக்கு முன்னாலே போடப்பட்ட திட்டமாகும். குற்றாலத்திற்கு வரும் ஆற்றிலிருந்து தென் காசிக்கு தண்ணீர் எடுக்கப்பட்டு, தென்காசி நகர மக்களுக்கு இன்றைய தினம் விநியோகிக்கப்படுகிறது. ஆனால் அந்த காரணத்தாலே ஏறத்தாழ 2000 ஏக்கர்கள் இரு போக நஞ்சை நிலங்கள் ஒரு போக நஞ்சை நிலங்களாக இன்றைய தினம் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்போது மீண்டும் அந்த குடித் தண்ணீர் திட்டத்தை புதுப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த முயற்சி செய்வதன் மூலமாக 2000 ஏக்கர் நஞ்சை நிலங்கள் ஒரு போக நஞ்சை நிலங்களாக பாதிக்கப்படுவதைத் தடுக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த குடித் தண்ணீர்த் திட்டத்தை மாற்றுத் திட்டமாக அமைக்க வேண்டுமென்று இந்த அரசை வேண்டிக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தென்காசி பகுதிக்கு ஒரு தீயணைப்பு படைப்பிரிவு மிகவும் தேவைப்படுகிறது. திருநெல்வேலியில் ஒரு படை இருக்கிறது. தூத்துக்குடியில் ஒரு படையிருக்கிறது. திருநெல்வேலிக்கு மேற்குப் பகுதியில் ஒரு தீயணைப்புப் படை இல்லாத காரணத்தால் பெருத்த சேதங்கள் அந்தப் பகுதியில் திடீரென்று ஏற்பட்டு விடுகிற காரணத்தாலே தென்காசியை மையமாக வைத்து ஒரு தீயணைப்புப் படைப் பிரிவு ஏற்படுத்த வேண்டுமென்று இந்த அரசை நான் வேண்டிக்கொள்கிறேன்

இப்பொழுது மாவட்டந்தோறும், விவசாயப் பயிற்சிப் பள்ளியை ஏற்படுத்தும்போது, திருநெல்வேலியில் கள்ளிகுளம் விவசாயப் பள்ளியை அமைத்திருக்கிறார்கள். அந்தப் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெறும் மாணவர்கள் 20 பேர்கள்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இது போதாததாக இருப்பதால், இந்த 20 பேர்கள் என்பதற்குப் பதிலாக, 40 பேர்கள் என்று உயர்த்தித் தர வேண்டும் என்று அரசை வேண்டிக் கொள்கிறேன்.

மேலும், தென்காசியில் தென்னை நாரை உற்பத்தி செய்யும் தொழில் கூடம் ஒன்று இருக்கிறது. அதற்குப் போதுமான வசதி இல்லை. ஆகவே, அந்த இடத்தில் தென்னை நார்க் கழிவு மலை போலக் குவிந்து கிடந்து, தீ விபத்து ஏற்பட்டு, பக்கத்தில் உள்ள பள்ளி மாணவர்கள் உதவியால் அந்த ஆபத்து தவிர்க்கப்பட்டது. ஆகவே, இதை விஸ்தரிக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த 1970-71-ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடுகளை வரவேற்று, இவற்றைச் சிறப்பாக அமைத்துக் கொடுத்திருக்கும் முதல்வரை முழு அளவிற்குப் பாராட்டி என் உரையை முடிக்கிறேன், வணக்கம்.

* திரு. எம். சுரேந்திரன் : துணைத் தலைவர் அவர்களே 47 தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டிருக்கிற இந்த நிதி ஒதுக்கீடுகளைப் பற்றிப் பேசும்போது, மானியங்களின் மீது பேச விட்டுப்போன சில விவரங்கள் மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

நம்முடைய மாநிலத்தில் புஞ்சை நிலங்களுக்கு நிலவரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல தஞ்சை நிலங்களுக்கும் 5 ஏக்கர் வரையில் விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இப்படி இந்த இரண்டு நிலங்களில், அந்த அந்த நிலங்களுக்கு உரியவர்களுக்கு மட்டும் விலக்கு அளிப்பது என்கின்ற முறையை மாற்றி, எந்த நிலமாக இருந்தாலும் அந்த நிலத்திலே விவசாயம் செய்கிறவர்கள், அவர்களுக்கு அந்த நிலம் உரிமையாக்கப்படுத்தப்பட்ட நிலங்களாக இருந்தாலும், இல்லாவிட்டாலும், அப்படிப்பட்ட நிலங்களுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்ற முறையை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் இப்படிச் சொல்வதன் பொருள், அரசாங்கத்தின் நிலத்தில் புறம்போக்கு நிலங்களிலே பல பேர்கள் நீண்ட நெடுங்காலமாக விவசாயம் செய்து வருகிறார்கள். அங்கே இருக்கின்ற கிராம அதிகாரிகள் அறிவார்கள். அவர்களுக்கு அந்த நிலங்கள் உரிமையாக்கப்படாமல் இருக்கின்றன. அம்மாதிரி இருக்கும் நிலங்களில் விவசாயம் செய்கிறவர்களுக்கு நிலவரியிலிருந்து வஜா





அளிப்பது நியாயமானது. நிலத்தின் மீது வரியை நீக்கி, விவசாயம் செய்கிறவர்கள் மீது இருக்கும் வரியை நீக்காமல் இருக்கிறோம். புறம்போக்கு நிலங்களில் விவசாயம் செய்கிறவர்களுக்கு பல இடங்களில் தண்டத் தீர்வை விதிக்கப்பட்டிருக்கிறது. நிலத்தை பயன்படுத்தாமல் வைத்திருப்பது சட்ட பூர்வமாக தண்டனை கொடுக்கப்படவேண்டியது. இங்கே பயன்படுத்துவதற்கு தண்டனை என்ற வகையில் தீர்வை விதிக்கப்படுகிறது. பொது மராமத்துத் துறைக்கு சொந்தமான நிலங்கள் மேட்டூரில் இருக்கின்றன. அந்த நிலங்களில் அதிக காலமாக விவசாயம் செய்து வருகிறார்கள். நிலங்களை காலியாகப் போட்டுவைப்பது இன்றைய நிலையில் சரியானது அல்ல. பயன்படுத்த, விவசாயம் செய்து, அவர்களும் வாழ்ந்து, மற்றவர்களுக்கும் உணவு அளிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த நிலம் அரசாங்கத்திற்குத் தேவையானதாக இருந்தால், அதை அரசாங்கம் எடுத்துக் கொள்வதிலே ஆட்சேபணையில்லை. அரசுக்குத் தேவையான நிலத்தைப் பயன்றபடுத்துகிறவர்களுக்கு தண்டத் தீர்வை விதிப்பதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் அரசாங்கத்திற்கு உடனடியாகத் தேவை இல்லாமல் வெறுமனே கிடக்கும் நிலங்கள், ஏராளமான ஆண்டுகளாக விவசாயம் செய்யப்பட்டு வந்திருக்கிறது. அதற்கு இப்பொழுது தண்டத் தீர்வை விதிக்கிறார்கள். ஆகவே, தண்டத் தீர்வை போடும் நிலைமைகளையும், தன்மைகளையும், மாற்றும் நிலைகளை உண்டாக்கி, நிலம் எப்படிப் பயன்படுகிறது என்பதைப் பாராமல், அரசாங்க நிலம் என்கின்ற ஒரே காரணத்திற்காக, தண்டத் தீர்வை விதிப்பது . . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, முதல் அமைச்சரவர்கள் மேட்டூருக்குச் சென்று அந்த நிலங்களில் பட்டா கொடுக்கும்படி உத்தரவு போட்டிருப்பது தெரியும். தண்டத் தீர்வை குறைக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. முன்பு அங்கத்தினருக்குத் தெரிந்த ஒன்றை பேசவேண்டாம் என்று சொல்கிறேன். வருவாய்த் துறை மானியத்தின் மீது பேசும் போதுகூட, இப்பொழுது அரசாங்கம் உத்தரவுப்படி, நஞ்சையாக இருந்தால் 1½ ஏக்கர், புஞ்சையாக இருந்தால் 3 ஏக்கர் என்று பட்டா செய்து கொடுக்கப் போகிறோம் என சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அதிகமான நிலங்களை பயிரிட்டார் என்பதற்காக அதை அப்படியே விட்டு விடாமல், அதை எடுத்து நிலமற்ற ஏழைகளுக்குக் கொடுக்க அரசாங்கம் முயற்சி செய்கிறது. ஒருவர் அதிகமாக வைத்துக்கொண்டு 10 ஏக்கர், 20 ஏக்கர் என்று வைத்துக் கொண்டிருந்தால், அதை அவருக்கே அடமானம் செய்துகொடுக்க வேண்டும் என்பது நிச்சயமாக முடியாது. அரசாங்கத்தின் புது உத்தரவுப்படி, நஞ்சை, புஞ்சை எவ்வளவு கொடுக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் பட்டா செய்து கொடுக்கப் போகிறோம். தண்டத் தீர்வையை குறைக்க வேண்டிய அளவில் குறைத்தும் இருக்கிறோம்.

திரு. எம். சுரேந்திரன் : துணைச் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் கூறிய விளக்கத்திற்கு நன்றி தெரிவிக்கிறேன். அமைச்சரவர்கள் ஒரு இடத்தை மனதில் வைத்துக்கொண்டு விளக்கம் கூறியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். 5 ஏக்கருக்கு 3 ஏக்கர், 3 ஏக்கருக்கு 1½ ஏக்கர் என்று செய்திருப்பது, வனவாசி, பக்கநாடு ஃபாரஸ்டு ஏரியாவைப் பொறுத்தது. அதைக் குறிப்பிடவில்லை நான். நான் குறிப்பிடுவது மேட்டூர் நகராட்சியில் பொது மராமத்து இலாகாவிற்குச் சொந்தமான நிலங்கள் பற்றியது. அந்த நிலங்களில் ஒரு பகுதியை வீடு கட்ட வழங்கும் காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறோம்.

விவசாயம் செய்யும் நிலங்களைப் பொறுத்த வரையில், 1954-ல் ஒரு ஸ்பெஷல் ஆபிசரைப் போட்டு, பரிசீலனை செய்து, விவசாயிகளுக்கு குத்தகைக்குக் கொடுக்க வேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டது. 1964 வரையில் அது நிறைவேற்றப்பட்டது. அதற்குப் பிறகு இன்னொரு ஸ்பெஷல் ஆபிசரைப் போட்டு அவர்களைக் குத்தகைகாரர்களாகச் செய்யாமல், தண்டத் தீர்வை போட்டு வந்தார்கள். இந்த ஆண்டில் அதைத்தான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அமைச்சர் குறிப்பிட்ட விவரங்கள் ஏற்கெனவேயே என் நினைவில் இருக்கிறது என்பதையும் தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அதைத்தான் சொன்னேன். வருவாய்த் துறை மானியத்தின் போதே குறிப்பிட்டேன். ஏற்கெனவே அரசாங்கம் ஒவ்வொரு ஸ்கீமாக எடுத்துக் கொண்டு காவிரி டெல்டா என்று தனியாக எடுத்து, வருவாய்த் துறை அதிகாரி ஒருவரைப் போட்டு, தண்டத் தீர்வையை நிறுத்தி, நிலத்தை அடமானம் செய்ய முடியுமா என்பதையெல்லாம் யோசிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறேன். அவர் ரிபோர்ட் வந்த பிறகு மேற்கொண்டு பரிசீலனை செய்யலாம்.

முற்பகல் 11.30 **திரு. எம். சுரேந்திரன்:** துணைச் சபாநாயகர் அவர்களே, இந்த விளக்கத்தின் மீது நான் அதைப் பற்றிக் குறிப்பிட விரும்பவில்லை. அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திலிருந்து நான் ஒன்று நம்புகிறேன். இப்போது போடப்பட்டிருக்கும் தண்டத் தீர்வைகள் தற்போதில்லை, நிறுத்தி வைக்கப்படும். மீண்டும் பரிசீலிக்கப்பட்டு எவ்வளவு போடலாம் என்று தீர்மானிக்கப்பட்டதற்குப் பின்னால் வசூலிக்கப்படும் என்று நம்புகிறேன்.

அடுத்தாற்போல அங்கேயிருக்கிற வீட்டு மனைகளுக்காக நிலங்கள் அளிப்பதற்கு அரசாங்கம் முடிவு செய்து 1954-லிருந்து அது நடந்து கொண்டு இருக்கிறது. இப்போது கூட ஒரு 600, 700 வீட்டு மனைகள் ரெடியாகி அசைன் பண்ணுவதற்குத் தயாராக இருக்கின்றனவென்று, ஸ்தலத்தில் இருக்கிற அதிகாரிகள் சொன்னார்கள். ஆனால் அந்த வீட்டு மனைகளுக்கு விலை இன்றைய மார்கெட்டு விலை மீது நிர்ணயிக்கப்படுகிறது. அப்படி மார்கெட்டு விலையில் நிர்ணயிக்கப்படுகிற போது அவர்களுக்கு வீட்டு மனையாகக் கொடுப்பதற்குப் பதில் விலைக்குக் கொடுப்பதென்ற முறையில் அது ஆகிவிடுகிறது. ஆகவே, இந்தப் பிரச்னையை ஒரு தடவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேட்டூர் வந்தபோது அவர் கவனத்திற்குக் கொண்டு வந்து அவர் அந்த விலையை நான்கில் ஒரு பாகமாக குறைப்பதாக பொதுக்கூட்டத்தில் கூறிவிட்டு வந்தார்கள். பல மாதங்கள் கடந்து விட்டன. இன்னும் அந்த உத்திரவானது நிறைவேற்றப்படவில்லை. அங்கே உள்ள ஸ்தல அதிகாரிகளுக்கு வந்து சேரவில்லை என்பதை இந்த நேரத்தில் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அந்த உத்திரவு வெகு விரைவாக வரும் என்று நினைக்கிறேன். அதோடு மட்டுமல்ல, நம்முடைய அரிஜனங்களுக்கு எல்லா இடங்களிலேயும் வீட்டு மனைகள் வழங்குவதிலேயும், மற்ற காரியங்களிலேயும் சலுகைகள் அளிக்கிறோம். ஆனால் மேட்டூர் நகரத்தில் அம்மாதிரியான சலுகைகள் அவர்களுக்கு அளிக்கப்படவில்லை. இதுவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதிலே உரிய கவனம் செலுத்தி உத்திரவிடுவதாகக் கூறி வந்தார்கள். இதுவும் இன்னும் வந்து சேரவில்லை என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.



இன்றைக்கு விலைவாசிகள் எல்லாம் ஏறிக்கொண்டே வருகின்றன. அரிசியினுடைய விலை, மற்றப் பொருள்களின் விலைகள் எல்லாம் ஏறிக் கொண்டு வருகின்றன. எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் கூடக் கூறினார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** துணைத் தலைவரவர்களே, அரிசி விலையேற்றத்தைப் பற்றி அங்கத்தினர் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே, தங்கமணி அவர்களும், அனந்தநாயகி அவர்களும் குறிப்பிட்டதாக அறிகிறேன். அரிசி விலையேற்றத்தைப் பற்றி கேள்வி ஒன்றுக்கு பதில் சொல்லும்போது சொன்னேன், ஃபுட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா தமிழ் நாட்டுக்கென்று ப்ரொக்யூர் செய்து 15 ஆயிரம் டன் ஸ்டாக் வைத்திருக்கிறார்கள். அவர்கள் அதை வெளி மாநிலத்திற்கு எடுத்துச் செல்லவேண்டுமென்று கேட்டபோது இந்த மாநிலத்திலேயே அதைச் செலவழிக்க வேண்டும் என கூறப்பட்டது. அவர்களுக்கு நஷ்டம் இல்லாத விலையைக் கொடுக்க ஒப்புக் கொண்டு அது நம் கையில் இருக்கிறது. அரசாங்கத்தின் கையிலும் இப்போது போடுகிற படி அரிசி திட்டத்திற்குப் போக 15 ஆயிரம் டன்னுக்கு குறையாமல் இருக்கிறது. ஆக, 30 ஆயிரம் டன் கையில் வைத்திருக்கிறோம். எந்த இடத்தில் விலை ஏறுகிறதோ அந்த இடத்தில் கூட்டுறவு சங்கங்களின் மூலம் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படாதவகையில் விற்கும். அதை அப்படி விற்பதற்குத் தயாராக இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் எல்லா இடங்களிலும் 100 கடைகளுக்குப் பக்கம் திறந்திருக்கிறோம். அப்படி தஞ்சை மாவட்டத்தில் திறந்திருந்தும் கூட தஞ்சை மாவட்டத்தில் ஆஃப் டேக் இல்லை, வாங்குவோர் இல்லாமல் இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டபோது ஆஃப் டேக் இல்லையென்ற செய்தி வந்திருக்கிறது. அதை மக்கள் பயன்படுத்துவார்களானால், 90 பைசா ஒரு லிட்டர் என்று கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஒரு லிட்டர் 90 பைசா என்று கொடுக்கிறோம். இப்போது 1.10 பைசா விலை இருக்கிறதென்று சொன்னார்கள். எந்தெந்த இடத்தில் தேவைப்படுகிறதோ அந்தந்த இடத்தில் விநியோகிப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதற்காக எல்லா இடங்களுக்கும் கொடுக்கவேண்டுமென்ற நியதி இல்லை. எந்த இடத்தில், எந்த மாவட்டத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டு விலை ஏறுகிறதோ அங்கே விலையைக் கீழே இறக்குவதற்கு கையில் உள்ள இருப்பு. உணவு கார்ப்பரேஷனிலிருந்து வாங்கியதும் கிடைக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன்:** அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கம் மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. இம்மாதிரியான காரியத்தை இந்த அரசாங்கம் செய்யும் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நான் இங்கே குறிப்பிட வந்ததெல்லாம் நகரங்களில் சேல்ஸ்டாக்ஸ் சர்சார்ச் போடப்பட்டிருக்கிறதே, அதைப் புனராலோசனை செய்யவேண்டும். இம்மாதிரியான சூழ்நிலையில் இதுவும் சேர்ந்து விலையேற்றத்தை உண்டாக்குவதற்கு உள்ள நிலையில் அரசு இதற்கு உதவிகரமான நிலையில் இருக்கக் கூடாதென்பது தான் என்னுடைய கருத்தாகும்.

அடுத்தாற்போல இந்த ஜில்லா நிர்வாகம் இருக்கிறதே, இந்த ஜில்லா நிர்வாகத்தில் தான் இப்போதிருக்கிற நிலை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எல்லாவிதமான அதிகாரங்களும் அளிக்கப்பட்டிருக்கிறது. ஜனநாயகம் வளர்ந்து வருகிற நிலையில் இது ஜனங்கள் கையிலிருந்து தான் வளர்ந்து வரவேண்டுமென்ப

தில் அங்கேயிருக்கிற நிர்வாக அமைப்புகளில் வளர்ந்து வந்தால்தான் ஜனங்களிடத்தில் ஜனநாயகம் வளர உதவியாக இருக்கும். (மணியடிக்கப்பட்டது) ஆகவே, இருக்கிற அதிகாரங்களைப் பிரித்து இந்த அதிகாரத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போலே ஒரு விஷயத்தைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். மேட்டூரில் உயர் நிலைப் பள்ளி ஒன்று அவசியம் வேண்டும் என்று இதற்கு முன்னாலும் கூறப்பட்டு வந்தது. அங்கே செகண்டரி பள்ளிகள் இரண்டு இருக்கின்றன. அந்தப் பள்ளிகளில் படித்து வருகிறவர்களுக்கு 9, 10, 11 வகுப்புகளில் இடம் கிடைப்பது சிரமமாக இருக்கிறது. ஒரு கேள்விக்கு பதில் சொல்கிற போது கல்வியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 9, 10, 11 வகுப்புகளை ஆரம்பிப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளப் போகிறோம் என்று சொன்னார்கள். அப்படி எடுக்கப்படுகிற போது, அந்தப் பகுதியில் உரிய கவனத்துடன் செய்யவேண்டுமென்பதை நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டது)

என் பகுதியில் பாலமலை என்று 4 ஆயிரம் அடி உயரத்தில் இருக்கிற பகுதி இருக்கிறது. அங்கே பாதை போடவேண்டுமென்று ஒவ்வொரு சட்ட மன்றத்திலேயும் கூறிக் கொண்டு வருகிறேன். அது சம்பந்தமாக உரிய கவனத்தை எடுத்துக் கொள்ளாமல் இருப்பதைக் கண்டு வருத்தப்படுகிறேன். ஏனென்றால் மிகப் பின்தங்கிய வகுப்பினரான அவர்களுக்கு இந்தக் காரியத்தைக்கூட நாம் செய்து கொடுக்கவில்லை என்றால் அவர்களை சமமாகக் கொண்டு வருவதற்கான ஒரு முயற்சியில் நாம் பின் தங்கியிருக்கிறோம் என்ற நிலைமை ஏற்படும். இந்த விஷயத்தையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம் எஸ். இராதாகிருட்டிணன்: துணைத் தலைவரவர்களே, 1971-72 நிதி ஒதுக்கீடு மசோதாவை வரவேற்றுப் பேசுகிற நேரத்தில் என்னுடைய கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

என்னுடைய தண்டராம்பட்டு தொகுதி முழுக்க முழுக்க விவசாயத்தை நம்பி ஈடுபட்டிருக்கிற ஒரு பகுதி. அந்தப் பகுதியில் எந்தத் தொழில் வளமும் வியாபார ஸ்தலமும் கிடையாது. அப்பேர்ப்பட்ட தொகுதியில் விவசாயத்திற்கு சாத்தனூர் அணைக் கால்வாய் பாய்ந்து கொண்டிருக்கிற பகுதிகளில் சாத்தனூர் அணை நிரம்பி அதனுடைய கொள்ளளவு எவ்வளவு இருக்கிறதோ அதைப் போல இரண்டு மடங்கு, மூன்று மடங்கு தண்ணீர் வெளியே வீணாகச் சென்று விடுகிறது. அந்தத் தண்ணீர் நிரம்பி வெளியே போகிற நேரங்களில் இடது புறமாகவும் வலது புறமாகவும் கால்வாய் சர்வே செய்து இருக்கிறார்கள். அந்தக் கால்வாய்களை திருப்பி ஏரிகளில் தண்ணீரை நிரப்ப வைத்தால் ஏரிகளில் இருக்கிற தண்ணீரின் மூலம் கிணற்றில் ஊற்று இறங்கி இந்த விவசாயிகளுக்கு மிக வசதியாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாத்தனூர் அணைக்கட்டில் பவுத்திரம் என்பது ஊராமாக இருக்கிற பகுதி. அந்தப் பகுதி ஆயக்கட்டில் சேர்ந்துள்ள பகுதிகளில் ஒன்று. ஆனால் நிரம்பிய தண்ணீர் அங்கு பாய்வதில்லை. இருந்தாலும் வரி வசூலித்துக் கொண்டு வருகிறார்கள். ஆயக்கட்டில் சேராத பகுதிகளுக்கு தண்ணீர் பாய்



கிறது. அவர்களிடம் அந்த வரி வசூலிப்பதில்லை. எனவே, தண்ணீர் பாயாத இந்த நிலங்களுக்கு வரி விலக்களித்து, தண்ணீர் பாய்கிற அந்த நிலங்களுக்கு வரி வசூலிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தச்சம்பட்டு பகுதியில் இரண்டு அடி, மூன்று அடி உயரமிருக்கிற முட்கள் நிரம்பி ஆயிரத்திற்கு மேற்பட்ட ஏக்கர் நிலம் காடாக இருக்கிறது. அந்த இடத்தில் ஒரு விவசாய பண்ணையையாவது வைக்கவேண்டும். அல்லது அங்கு காட்டை உற்பத்தி செய்யவேண்டும். அல்லது நீண்ட கால குத்தகைக்கு விவசாயிகளுக்கு அந்த இடங்களை ஒப்படைப்போமானால் நல்ல பலன் கிடைக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியனில் பஞ்சாயத்து பணங்கள் போதாததன் காரணமாக சில முக்கியமான வேலைகளெல்லாம் தடைபட்டு நின்று கொண்டிருக்கின்றன. காரணம், பஞ்சாயத்து வரி வசூல்கள் இரண்டு மூன்றாண்டு காலமாக நடைபெறாமல் இருக்கின்றன. அந்தப் பஞ்சாயத்து வரி வசூல் செய்தால் அதற்குத் தகக தொகையை சர்க்காரிலிருந்து கொடுக்கிறார்கள். ஆனால் எந்த பஞ்சாயத்தும பெற முடியவில்லை. அதனால் நல்ல திட்டங்களையும் செய்ய முடியாமல் தவிக்கிறார்கள. எனவே, இந்த வரி வசூலைத் துரிதமாகச் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தானிப்பாடி அரசாங்க மருத்துவ மனைக்காக என்று இடம் ஒதுக்கீடு செய்து ஐந்தாண்டு காலம் ஆகிறது. ஆனால் இதுவரையில் கட்டிடம் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. இதை விரைவில் கட்டி முடிக்க வேண்டியதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து விரையூர், பெருமாளம், விருதுவழங்கினான் போன்ற பகுதியிலே உள்ளவர்கள் நிலம் வாங்கினாலும் விற்றாலும் அவற்றை பதிவு செய்வதற்காக திருவண்ணாமலை வழியாக சப்-ரெஜிஸ்ட்ரார் அலுவலகத்திற்கு வந்து செல்ல வேண்டியுள்ளது. எனவே விரையூரிலேயே ஒரு துணைப்பதிவகத்தை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, திருவண்ணாமலை பஞ்சாயத்து யூனியன் 68 பஞ்சாயத்துக்களைக் கொண்ட பெரிய ஊராட்சி ஒன்றியம். ஆனால் இவ்வளவு கிராமங்களைக்கொண்ட இந்த ஒன்றையத்திற்கு உள்ள ஜீப்பின் உபயோகத்திற்கு 300 லிட்டர் பெட்ரோல் கொடுக்கின்றார்கள். இது 500 லிட்டராக ஆக்கப்படவேண்டும். இதே நேரத்திலே ஆர்.டி.ஓ. அல்லது தாசில்தார் போன்ற அதிகாரிகள் அடிக்கடி இந்த ஜீப்பினை உபயோகித்துக்கொள்ளும் காரணத்தினால் மேலும் இந்த பெட்ரோல் ஒதுக்கீடு அடியோடு போதாமல் போய்விடுகிறது. எனவே ஊராட்சி ஒன்றியத்தின் ஜீப்பினை அவர்கள் உபயோகிக்காமல் இருப்பதற்கான உத்திரவுகள் பிறப்பிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, தண்ராம்பட்டு பஞ்சாயத்து யூனியனில் பொம்மன் ஆறு என்று ஒன்று இருக்கிறது. நான்காண்டு காலத்திற்கு முன்பு அந்த ஆற்றின் குறுக்கே ஒரு அணையைக் கட்டி அதன் பலனை நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி ஏற்படுவதற்கு வழிசெய்து இருக்கின்றார்கள். மேலும் நாவக்கொல்லையாறு, வறட்டாறு ஏரி போன்ற திட்டங்களுக்கு என பல எஸ்டிமேட்டுகள் போடப்பட்டிருக்கின்றன. இவற்றை விரைவில் எடுத்து நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன்]   [1971 ஜூலை 28

அடுத்து, திருவண்ணாமலையிலிருந்து மணலூர்பேட்டை, திருக்கோவலூர், தானிப்பாடி, வாணாவரம், சாத்தனூர் போன்ற இடங்களுக்கு போகவேண்டுமானால் பஸ்களில் இடமே கிடைப்பதில்லை. மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். எனவே இன்னும் போதிய பஸ்கள் விடுவதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்

அடுத்து, தண்டராம்பட்டு, பஞ்சாயத்து யூனியன் தலைநகராகும். இங்கே லோகல் பண்டு டிஸ்பென்சரிதான் இருக்கிறது. அங்கே உள்ள அரசு அலுவலகங்களிலே கிட்டத்தட்ட 300 அரசு அலுவலர்கள் இருக்கின்றார்கள். எனவே அங்கே ஒரு பெரிய மருத்தவ மனை கட்டப்பட்டு அரசினால் அது நடத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இம்மசோதாவினை ஆதரித்து அமருகிறேன், வணக்கம்.

* திரு. துரைமுருகன் : மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இந்த நிதி ஒதுக்கிடு மசோதாவின்மீது என்னுடைய இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

இம்மாமன்றத்திலே பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்தார்கள். என்னைப் பொறுத்த வரையில் என் தொகுதியைபற்றி குறிப்பாகச் சொல்லுகிறதைவிட, ஒதுக்கப்பட்ட நிதி எல்லாம் வருங்கலத்தில் எப்படி எப்படி செலவிடப்பட வேண்டும், அவற்றிலே எவை மிகமிக அத்தியாவசியமானவை என்பதை மட்டும் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

காங்கிரஸ் கட்சி அரசு இருந்தகாலத்திலே இம் மாமன்றத்திலே 192 உறுப்பினர்களும் 9 அமைச்சர்களும்தான் இருந்தார்கள் அந்தக்காலத்திலே. ஆனால் இன்றைக்கு எப்படியிருக்கிறது என்றால் ஏறத்தாழ 14, 15 அமைச்சர்கள் இருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர்களும் சரி, மாண்புமிகு அமைச்சர்களும் சரி. இன்றைக்கு ஒருவரையொருவர் இடித்து நெருக்கி அமர்ந்திருக்க வேண்டிய நிலை. அன்றைக்கு இடம் போதுமானதாக இருந்தது. இன்றைக்கு அப்படியில்லை. அன்றைக்கு இருந்த தேவையின் அடிப்படையில் கட்டப்பட்ட கட்டிடத்திலே நமது அலுவல்களை நடத்திக்கொண்டு இருப்பது சாலச்சிறந்ததா என்ற காரணத்தினாலும், மேலும் பின்னால் அமைச்சரவையை விரிவுபடுத்தினால் கூடுதலாக இடம்பெறுகின்றவர்கள் பின்வரிசையில் தள்ளப்பட வேண்டிய நிலை ஏற்படும் என்ற காரணத்தினாலும் இப்பேரவைக்கு என புதியதொரு கட்டிடத்தைக் கட்ட வேண்டும் என்று மெத்தப்பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

இது மாத்திரம் இல்லாமல் மத்திய அரசில் ஒரு கமிட்டி போட்டு இருக்கின்றார்கள். அதிலே 11 பேருக்கு ஒரு அமைச்சர் இருக்க வேண்டும் என்று சிபாரிசு செய்திருக்கின்றார்கள். அப்படிப்பார்த்தால் நாம் ஏறத்தாழ 234 உறுப்பினர்கள் இருக்கின்றோம். அந்தக்கணக்குப்படி 25 அமைச்சர்கள் இருக்கலாம். எப்படியானாலும் 18 அல்லது 20-யை எட்டிப் பார்க்கும் என்ற காரணத்தினால் அவர்கள் வசதியாக அமர்ந்து அலுவல்களைக் கவனிப்பதற்கு ஏற்றவகையில் இது பெரிதாக அமைக்கப்படவேண்டும்.

மேலும் ஒரே அமைச்சரிடத்தில் பல்வேறு துறைகள் பின்னப்பட்டிருப்பதால் ஒரு அமைச்சரை பல்வேறு காரியங்களுக்காக ஒரு முறை கல்விக்காக என்றும் இன்னொரு முறை உள்ளாட்சித் துறைக்காக என்றும் பிறிதொரு முறை போலீசுக்காக என்றும் இப்படி திரும்பத் திரும்ப அவரிடம் செல்லுவது சாலச்சிறந்ததாக இல்லை. எனவே ஒரு இலாகா ஒரு அமைச்சருக்கு என்று இருந்தால் நல்லதாக இருக்கும் என்று வற்புறுத்திக்கூறக் கடமைப்பட்டவனாகின்றேன்.

இன்னும் ஒன்று, இங்கே உள்ள உறுப்பினர்களுக்கு இரண்டு முறை சம்பளத்தை ஏற்றிக்கொடுத்து இருக்கிறார்கள். முன்பு ரூ. 150 என்று இருந்து ரூ. 250 ஆகி இன்றைக்கு கிட்டத்தட்ட அலவன்சுகள் சேர்த்து 400 என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால் அமைச்சர்களைப் பொறுத்த மட்டில் முதலில் ரூ. 1,000 என்று இருந்தது ரூ. 500 என்று ஆகி மீண்டும் ரூ. 1,000 என்று தான் ஆகியிருக்கிறது. ஐ.ஏ.எஸ். பதவியிலிருப்பவர்கள்கூட ரூ. 1,500 ரூ. 1,600 என்று சம்பளம் வாங்கும் நிலையில், அறுதியிட்டுச் சொல்லுகிறேன், அமைச்சர்கள்தான் நாட்டிலே அதிகமான சம்பளம் வாங்கக்கூடியவர்களாக இருக்கவேண்டும். காரணம், அமைச்சர்கள் வேண்டுமானால் 'நாங்கள் சம்பளத்தைக் குறைத்துக்கொள்ளுகிறோம்' என்று சொல்லலாம். ஆனால் அவர்களுடைய வாழ்க்கை வசதிக்கு ஏற்றதாக . . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இக்கருத்துக்களை யாராவது அமைச்சரே சொல்லச்சொல்லி சொன்னாரா ? அதுபோன்றே அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்படவேண்டும் என்று மாண்புமிகு அங்கத்தினர்கள் யாராவது சொன்னார்களா ?

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, இருக்கும் நிலையைப் பட்டவர்த்தனமாகச் சொல்ல விழைகிறேன். எனவே அமைச்சர்கள் சம்பளம் கூட்டிக் கொடுக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்த இன்றுள்ள நிலையில் பல்வேறு மருத்துவக் கல்லூரிகளில் உள்ள இடங்களின் எண்ணிக்கையைக் குறைத்துக்கொண்டு இருக்கின்றார்கள். குறிப்பாக வடஆற்காடு மாவட்டத்தில் அரசினர் மருத்துவ மனைகள் பல்வேறு இடங்களிலே இல்லாமல் இருக்கின்றன. அவற்றை ஏற்படுத்தினால், டாக்டர்களுடைய எண்ணிக்கையும் அதிகப்படுத்தவேண்டிவரும். வடஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் வேலூரில் கிருஸ்துவ மருத்துவக் கல்லூரி ஒன்றுதான் இருக்கிறது. அரசுக் கல்லூரி இல்லை. மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற முறையில் வட ஆற்காடு மாவட்டத்திற்கும் ஒன்றை அமைத்திடவேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு அரசாங்க மருத்துவ மனை இருத்தல் அவசியம். இவ்வளவு காலமாகியும் எனது தொகுதியான காட்பாடி தொகுதியில் ஒரு மருத்துவ மனை கிடையாது. இதை அமைத்திடவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து தலைமைச்செயலகத்தில் உள்ள ஒரு நிலைகுறித்து இங்கே பேச விரும்புகிறேன். நாட்டிற்கேற்ற பல சட்டதிட்டங்களை உருவாக்கி நாட்டினை ஆள்வதற்கு உறுதுணையாக இருப்பவர்கள் சட்ட இலாகாவினர்தான். ஆனால்

அவர்கள் பணிபுரியும் இடங்களை இங்கே பார்த்தால் மிகவும் வேதனையுறத் தக்கதாக இருக்கிறது. மூலைமுடுக்குகளிலே வேண்டாத இடங்களிலே அவர்களுக்குரிய அலுவலகங்கள் அமைத்துத்தரப்பட்டிருக்கின்றன. துணைச் செயலாளர்கள், உதவிச் செயலாளர்கள் எல்லாம்கூட சிறு சிறு அறைகளிலே ஆஸ்பெஸ்டாஸ் கூரைகள் வேயப்பட்டு வெய்யிலில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் அவல நிலையைத்தான் பார்க்கிறோம். இந்த நிலை மாற்றப்பட்டு, இந்துறையில் உள்ளவர்களுக்கு காற்றோட்டமுள்ள விசாலமான இடங்கள் அளிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, இந்த நிதி ஒதுக்கீட்டுத் தீர்மானத்தின்மீதான ஆய்வின்போது ஒன்றைக்குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும ஐயாயிரம் ரூபாய் வரையில் கடன்பெறுவதற்கான வசதிகளை ஸ்டேட் பாங்கில் அரசு செய்துதர வேண்டும். என்னைப்போலத் திருமணமாகாதவர்களுக்கு திடீரென்று திருமணம் என்று நிச்சயிக்கும்போது பணம் தேவைப்படுகிறது திருமணத்திற்கு. யாரையாவது அணுகிக் கடன் பெறலாமென்றால் மறுநாளே கடன் கொடுத்தவர்கள் ஏதாவது சிபாரிசுக்கு வருகின்றார்கள். எனவே இத்தகைய கடனைப்பெறுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழி செய்துதர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** திரு. துரைமுருகனுக்கு ஏற்கெனவே திருமணத்திற்கு ஏற்பாடாகியிருக்கிறது. அங்கஹீனமுள்ள ஒரு பெண்ணை கலப்புத்திருமண முறையில் தன் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொள்ளுவதற்கு ஏற்பாடாகியிருக்கிறது. அவருக்கு என் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்ளுவதோடு அவர் இத்தகைய கடனுக்குக் காத்திருக்கவேண்டிய அவசியமும் இல்லை என்று கருதுகிறேன். அவர் இப்படிப்பட்ட திருமணத்தைச் செய்துகொண்டு அதன்மூலம் தியாகம் செய்வதற்கு என்னிடம் ஒப்புதல் அளித்திருக்கிறார். ஆனால் சீதனத்தொகை மட்டும் கொஞ்சம் அதிகமாக வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். எனவே இப்போது அவர் யாரையும் எதிர்பார்க்கத் தேவையில்லை.

**திரு. துரைமுருகன் :** அறையில் பேசியது அம்பலத்திற்கு வந்துவிட்டது என்றாலும் என்னுடைய கோரிக்கைகளை மாற்றிக்கொள்ள எண்ணவில்லை. அரசியல் சட்டத்தினையே மாற்றவேண்டும் என்று சொல்லும் இந்தக்காலத்தில், இப்படிப்பட்ட சிறு கோரிக்கைகளை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, என் தொகுதியான காட்பாடியில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து அரசுத்துறை நிறுவனங்களும் வேலூர் பெயரைத் தாங்கியிருக்கிறது.

**திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் :** மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முதலமைச்சர் அவர்களிடம் அளித்த வாக்கை அவர்கள் மீறக்கூடாது. நிச்சயமாக அதன்படிச் செய்து அவர் வழி காட்ட வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன், அவர் மாறக் கூடாது.







**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** முஸ்லீம் லீகின் சார்பிலே பேசும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன், துரைமுருகன் உறுதிமிக்கவர். கொள்கைப்பற்று உடையவர். கழகத் தலைவரிடத்தில் ஒன்றைச் சொல்லிவிட்டு பிறகு மாறுவார் என்று யாரேனும் எதிர்பார்த்தால், நிச்சயமாக இல்லை.

**திரு. துரைமுருகன் :** தலைவரவர்களே, திருமணம் என்ற நிலை ஏற்பட்டால் இதை அந்த நேரத்தில் பரிசீலனை செய்யக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அடுத்து காட்பாடியில் உள்ள அனைத்து அமைப்புகளின் பெயரும் வேலூரின் பெயரைத் தாங்கிநிற்கின்றன. அவ்வளவும் என் தொகுதியின் மையத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் வேலூரின் பெயரைத் தாங்கியிருக்கின்றன. வேலூர் எலெக்ட்ரிசிடி சிஸ்டம், வேலூர் சர்க்கரை ஆலை என்று இப்படி இருக்கின்றன. இடத்தைக் கொடுத்திருப்பது நாங்கள். பெயரைக் கொடுத்திருப்பவர்கள் அவர்கள். எனவே இனியாவது வரும் காலத்தில் அமைக்கப் படும் நிறுவனங்களுக்கு என் தொகுதியின் பெயரிடப்படவேண்டும் என்று விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்படித் தேர்தலுக்குத் தேர்தல் பெயர்களை மாற்றுவது என்று இருந்தால் என்ன நேரும் என்று சற்று யோசித்துப் பார்க்கவேண்டும்.

**திரு. துரைமுருகன் :** காட்பாடி வரலாற்றுச் சிறப்பு படைத்த இடம். அதற்கு ஒன்றும் நேர்ந்துவிடாது.

அடுத்து என் தொகுதியில் பீடித்தொழிலாளர்கள் நிறைய இருக்கின்றார்கள். அவர்களுக்கென நிறைவேற்றப்பட்டுள்ள பல சட்டங்களும் அவர்களுக்கு பலன் தரும்வகையில் அமுலாக்கப் படவேண்டும் என்று கேட்டு, முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இம்மானியத் தீர்மானத்தை ஆதரித்து, இவற்றினால் நாடும் மக்களும் நன்மைகள் பல பெறவேண்டும் என்று கூறி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டி விடைபெறுகிறேன். வணக்கம்.

* **திரு. என். தருமலிங்கம் :** மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, 1971-72-ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு மசோதாவை வரவேற்று இன்று தமிழக அரசு வகுத்துள்ள திட்டங்களை எல்லாம் ஆதரித்து என்னுடைய ஒப்பற்ற தலைவரும், தமிழக முதல்வருமாகிய கலைஞர் அவர்களுக்கு தமிழக 4½ கோடி மக்கள் சார்பில் நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்னுடைய தொகுதியில் பலநாளைய கோரிக்கையான தியாகதுருகம் அருகே மணிமுத்தாறு நதிக்கு மேம்பாலம் ஒன்றையும், மயூரா நதிக்கு மேம்பாலம் ஒன்றையும் கட்டித்தரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக என்னுடைய தொகுதியில் ஹரிஜனங்கள் மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு பொருளாதாரத் துறையிலும், கல்வித் துறையிலும் முன்னேற்றம் அடைய இந்த அரசு எல்லாவகையிலும் உதவி செய்து வருவது வரலாற்றுப் புகழ்மிக்க ஒன்றாகும். மேலும் பல நன்மைகளையும் இந்த அரசு அவர்களுக்குச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, என்னுடைய தொகுதியில் காணுங்காடி என்ற ஊர் இருக்கிறது. அங்கே கனிவளம் கிடைப்பதாக மத்திய அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது. இந்த அரசு மத்திய அரசுக்கு எழுதி அந்தப் பகுதியில் செப்பு கனிவள தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக என்னுடைய தொகுதியில் இன்னும் ஏராளமான ஏழை விவசாயிகள் இருந்து கொண்டு வருகிறார்கள். அவர்களுக்காக பல திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகின்றன. மேலும் பல உதவிகளை அளிக்க இந்த அரசு திட்டமிட வேண்டும். அதோடு இன்றைய தினம் கிராமப்பகுதியில் இருக்கிற தீண்டாமை என்ற நோயைப் போக்க நமது அரசு எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிக்கு நான் பெரிதும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும் இன்னும் தீவிரமான நடவடிக்கை எடுத்து இந்தத் தீண்டாமை என்கிற நோயை அறவே அகற்ற வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய ஒப்பற்ற தலைவர் காலம்சென்ற அண்ணா அவர்களுடைய வழியில் நின்று இந்த ஆட்சியை நடத்திச் செல்கின்ற கலைஞர் அவர்கள் என்னுடைய கள்ளக்குறிச்சி தாலுக்காவில் ஒரு கல்லூரியை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சங்கராபுரம் பகுதியில் கலுவராயன் மலையிருக்கிறது. அங்கே அதிகமான மூங்கில்கள் இருக்கிற காரணத்தினால் அங்கே ஒரு காகிதத் தொழிற்சாலையை ஏற்படுத்தித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. இந்த காலதாமதத்தைத் தவிர்க்க அதிகாரிகள் தக்க நடவடிக்கை உடனுக்குடன் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மழை காலங்களில் என்னுடைய தொகுதி தீவுபோல் காட்சியளிக்கிறது. சங்கராபுரம் ஆற்றின் குறுக்கே ஒரு அணை கட்டிக் கொடுத்தால் 50 ஆயிரம் ஏக்கரா புஞ்சை நிலங்களை நன்செய் நிலங்களாக மாற்ற முடியும். அந்த அணையையும் கட்டித்தரும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் தொழில் பயிற்சி நிலையம் ஒன்றை மாடாம்பூண்டி குறுக்கு ரோடு என்ற சென்டரில் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்களுக்கு 23—7—1971-இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் கொடுத்தார்கள என்றால் அது மிகமிக வரவேற்கத்தக்க ஒன்றாகும். நானும் மாணவனாகத்தான் இருந்தவன். மாணவ சமுதாயமே இதற்காகப் பெருமை அடையவேண்டியதிருக்க நக்சலைட் சார்புள்ள சிலர் அதை எதிர்த்தார்கள் என்பதை அறிந்து வருந்துகிறேன். ஒரு டாக்டர் நான்கைந்து பேர்களுக்கு நலம் பாலித்தார் என்றால் நமது கலைஞர் அவர்கள் 4½ கோடி தமிழ் மக்களுக்கு இன்ப வெள்ளம் ஏற்படுமாறு நலம் பாலித்து வருகிறார் என்றால் அவருக்கு டாக்டர் பட்டம் கொடுப்பது எவ்வளவு சிறப்பானது என்பதை மாணவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதுவரை எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்த உதவித் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.





* திரு. நா. கணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்பகல்
நிதி ஒதுக்க மசோதாவை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். 12·00

நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, கலப்பு மணம் செய்துகொண்டவர்களுக்கு பல்வேறு சலுகைகளைக் கொடுத்திருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கையில் இப்படிப்பட்ட சலுகைகள் காட்டப்பட்டிருக்கின்றன. கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்கள் நம்முடைய சமுதாயத்திலே இன்றையதினம் இருக்கின்ற அமைப்பின் காரணமாக ஒதுக்கப்பட்டவர்களாகத்தான் இருந்துகொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது. கலப்புத் திருமணம் செய்துகொண்ட தம்பதிகளுக்கு, அந்தத் தியாகச் செம்மல்களுக்கு நாம் பல சலுகைகளைச் செய்துதரவேண்டும். முதல்படியாக, தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து, அவர்களுக்கு அத்தனை சலுகைகளும் கிடைக்குமாறு வழிவகை செய்ய வேண்டும். அப்படிச் செய்வதில் எந்தவிதமான தவறும் இருக்க முடியாது என்று கருதுகிறேன். அப்படி கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களில் யாரேனும் ஒருவர் கணவனோ, மனைவியோ தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்திருந்தாலும் சலுகைகள் தரப்படவேண்டும். கணவன் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராயிருந்தால் அவருடைய குழந்தைகளுக்குச் சலுகைகள் கிடைக்கிறது. ஆனால் மனைவி தாழ்த்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்தவராயிருந்தால் அவருடைய குழந்தைகள் சலுகைகள் பெற சட்டம் இடம் கொடுப்பதில்லை. ஆகவே, கலப்பு மணம் செய்துகொண்ட தம்பதிகளின் குழந்தைகளுக்கு அத்தனை சலுகைகளும் கிடைக்க அரசு வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நீதிமன்றங்களின் கடைநிலை சப்-மாஜிஸ்ட்ரேட் குற்றவியல் உப நீதிபதிகளாக இருப்பவர்கள் பி.ஏ., பி.எல். படித்துவிட்டு, இரண்டு ஆண்டுக்காலம் வக்கீலாக இருந்து வருபவர்கள். அதுவும் இரண்டாவது பிரிவு சப்-மாஜிஸ்ட்ரேட்டாகத்தான அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்கள் தங்கள் ஆயுள்காலம் வரையில், பதவி விலகுகின்ற வரையில் சப்-மாஜிஸ்ட்ரேட்டாகவே இருந்து விலகுகின்ற நிலைமை இருக்கிறது. அவர்களுக்குப் போதிய அளவு பதவி உயர்வு அளிக்கப்படுவதில்லை. டிஸ்ட்ரிக்ட் முன்சீப் பதவிக்கு நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அப்படி டிஸ்ட்ரிக்ட் முன்சீப் தேர்ந்தெடுக்கும்போது சப்-மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு ஒரு குறைந்த அளவில்தான் ப்ரமோஷன் வாய்ப்பு கிடைக்கிறது. ஆகவே, ப்ரமோஷன் வாய்ப்பை கொஞ்சம் கூடுதலாக்கி, சப்மாஜிஸ்ட்ரேட்டுகள் பதவி உயர்வுபெற வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது சப்-மாஜிஸ்ட்ரேட்டுகளை கெசடெட் ஆபீசர்களாகச் செய்திருக்கிறார்கள். அந்த மாற்றத்தின் காரணமாக அவர்களுக்கு என்னென்ன சலுகைகள் கிடைத்திருக்கின்றன என்று பார்த்தால், நேர்மையாக, நியாயமாகக் கிடைக்கக்கூடியவை கூட கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. பதவியை கெசடெட் என்று ஆக்கியது மட்டுமல்லாமல் அவர்களுடைய சம்பளத்தை உயர்த்தி அதிகப்படுத்தித்தர வேண்டும்.

அடுத்தப்படியாக, பிற்பட்டோர் நலன் நலக்குழு பரிந்துரைகளைச் செய்திருக்கிறது. 1961 முதல் இந்த நாட்டை அலைக்கழித்துக் கொண்டிருக்கிற செயல் பொற்கொல்லர்களுக்கு வழங்கப்பட்ட கடன் ஆகும். பொற்கொல்லர்கள் [illegible] வாழ்வில் நேரத்தில் பல இடுக்கண்களுக்கும் ஆளாகி, பலதரப்பட்

டோரின் இரக்கத்திற்கும் தயவிற்கும் காத்திருந்து வாங்கிய காரணத்தால், அவர்கள் மாற்றுத் தொழில்கள் நல்லபடியாக அமைத்துக் கொள்ள முடியவில்லை. வாங்கிய கடனைத் திருப்பித் தர அவர்களால் முடியவில்லை. பொற்கொல்லர்கள் வாங்கிய கடனை மத்திய அரசு வஜா செய்ய வேண்டு மென்று அவர்கள் கோரிக்கைகளை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு கலைஞர் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் பலதரப்பட்ட கட்டங்களில் ஆதரவைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் கடனை வஜா செய்து கொடுப்பதற்கு நமது அரசு முயற்சி எடுத்துக்கொண்டு, மத்திய அரசுக்குச் சொல்ல வேண்டும்.

அடுத்தபடியாக, தஞ்சை மாவட்டம் விவசாய மாவட்டம். தஞ்சை மாவட்டம் என்று சொல்லும்போது, அது ஏதோ முற்போக்கான மாவட்டம் என்ற எண்ணம் பலருக்கு இருந்துகொண்டிருக்கிறது. ஆனால் அது உண்மையில் பிற்படுத்தப்பட்ட மாவட்டமாகத்தான் இருக்கிறது. காவேரியில் அணை கட்டப்பட்டு, தண்ணீர் தடுக்கப்பட்டால் தஞ்சை மாவட்டம் வறண்ட மாவட்டமாக ஆகிவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். காவேரியில் அணை கட்டப்படாமல் இருக்க அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

மேலும், மற்றத்தொழில்கள் செய்வதற்கும் அந்த மாவட்டத்தில் வசதி இல்லை. ஆகவே, சிறுதொழில்கள், பெருதொழில்களை அந்த மாவட்டத்தில் அமைத்து, தொழில் மயமாக சிறந்துவிளங்க நல்ல திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று அரசை கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய முதல்வர் அவர் களே தஞ்சை மாவட்டத்துச் சொந்தக்காரர். ஆகவே, முதல்வர் அவர்கள் அதிக அக்கறை எடுத்துக்கொண்டு தஞ்சை மாவட்டத்தை முன்னேற்றப் பாடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பாபநாசம் தொகுதியில் காவேரி, குடமுருட்டி என்ற ஆறுகளின் இடையில் ஒரு திட்டுப் பகுதி இருக்கிறது. உள்ளிக்கடை, வன்னியடி, மணல் மேடு என்ற கிராமங்கள் அந்தப் பகுதியில் இருக்கின்றன. ஆற்றில் நீர் வரு கின்ற நேரத்தில் பல்வேறு காரணங்களுக்காக நகரங்களுக்கு வரவேண்டு மென்றால் அவர்கள் ஒன்று பாபநாசத்திற்கு வரவேண்டும் அல்லது அய்யம் பேட்டைக்கு வரவேண்டும், அல்லது திருவையாறுக்கு வரவேண்டும். அவர்கள் அப்படி வருவதற்கான வசதிகள் இல்லை. அந்தத் திட்டுப்பகுதியை இணைக்கவேண்டும் என்று 1952 முதல் கோரிக்கைகளை எழுப்பிக்கொண்டு வருகிறோம். அந்தத் திட்டுப் பகுதியை இணைத்து கும்பகோணம்-தஞ்சாவூர் ரோடுக்கும், கும்பகோணம்-திருவையாறு ரோடுக்கும் பாலங்கள் கட்டப்பட வேண்டுமென்கிற கோரிக்கை எழுப்பப்பட்டு வருகிறது. உள்ளிக்கடை, ஆடுதுறை பெருமாள்கோவில், உள்ளிக்கடை நெடுந்தெரு இவைகளுக்கு அருகில் இரண்டு பாலங்களை அரசு கட்டிக்கொடுக்க தக்க ஏற்பாடுகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எனக்கு முன்னாலேபேசிய உறுப்பினர் நண்பர் திரு. துரைமுருகன் அவர்கள் கல்யாணத்தைக் காரணமாகக் காட்டி, எம்.எல்.ஏ.க்களுக்கும் கடன் வசதி செய்துதர வேண்டுமென்று கேட்டார்கள். கல்யாணம் மட்டும் காரணமாக இருப்பதில்லை. எம்.எல்.ஏ. க்களுக்கும் பல்வேறு நெருக்கடிகள் இருக்கின்றன. சாதாரண என்.ஜி.ஓ. க்களுக்கு இருக்கிற சலுகைகள்கூட எம்.எல்.ஏ. க்களுக்கு இல்லையென்றால் அது மிகவும் வேதனைப்பட வேண்டிய



நிலைமை. எம்.எல்.ஏ. க்களும் தொடர்ந்து பணியாற்றுபவர்கள்தாம் அவர் களுக்குக் கடனைக் கொடுத்துவிட்டால், கடனைத் திருப்பச் செலுத்த முடியாது, அவர்களிடமிருந்து திரும்ப வசூலிக்க முடியாது என்கிற எண்ணம் அரசாங் கத்திற்கு இருக்கலாம். எம்.எல்.ஏ. க்கள் பணத்தைத் திரும்பக் கட்டிவிடு வார்கள் என்கிற நம்பிக்கையை எங்கள்மீது வைப்பதில் எந்தவித தவறும் இல்லை. சாதாரணமாக எம்.எல்.ஏ. க்கள் பதவி ஐந்தாண்டுக் காலம் என்று குறிப்பிட்டிருந்தாலும், பல்வேறு உறுப்பினர்களை இங்கே பார்க்கிறீர்கள். அவர்கள் எல்லாம் இரண்டு ஐந்தாண்டு, மூன்று ஐந்தாண்டு காலம் உறுப் பினர்களாகப் பணியாற்றி வருகிறார்கள். எம்.எல்.ஏ. க்களுடைய சால்வென் சியில் கவலைப்படாமல், எங்கள்மீது நம்பிக்கை வைத்து, எங்களுக்கும் சலுகைகளை அளிக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. மா. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்க மசோதாவை ஆதரித்து, என்னுடைய தொகுதி யைப்பற்றி ஓரிரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

வேதாரண்யம் தொகுதி சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்கள் வாழ்ந்த தொகுதியாகும். அவர் வாழ்ந்து மறைந்த வரையில் அந்தத் தொகுதியில் ஓரளவு வேலைகள் நடைபெற்று வந்தன. பின்னர் பத்து, பதினைந்து ஆண்டு களாக அரசாங்கத்திலிருந்து எந்தவிதமான வேலைகளும் நடைபெறவில்லை யென்பதைக் கூறிக்கொள்கிறேன். இப்போதுதான் மூன்று நான்கு வருடங் களாக ஓரிரு வேலைகள் நடைபெற்று வருகின்றன. அதற்காக நம்முடைய அரசைப் பாராட்டுகிறேன்.

வேதாரண்யம் தொகுதி பின்தங்கிய பகுதியாகக் காட்சியளிக்கின்ற பகுதி யாகும். அரசாங்கம் அதைப் பின்தங்கிய பகுதியாக அறிவித்து, அந்தத் தொகுதிக்கு பல சலுகைகளை அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். அடுத்தபடியாக, வேதாரண்யம் பகுதியை தனித் தாலுக்காவாகப் பிரித்துத் தரவேண்டும். அப்படி பிரித்தால்தான் அந்தப் பகுதி முன்னுக்கு வர முடியும். அந்தத் தொகுதி வெறும் மணற்பாங்கான தொகுதியானதால் நீர்ப்பாசன வசதிகள் காணப்படாத தொகுதியாக இருக்கிறது. கிட்டத்தட்ட நாற்பது, ஐம்பது கிராமங்களுக்கு உடனடியாக நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது தலைஞாயிறு, வேதாரண்யம் என்ற இரண்டு யூனியன்கள் இருக்கின்றன. அவைகளில் போதுமான நிதி வசதியில்லாத காரணத்தால் சாலைப் போக்குவரத்து, மற்ற வசதிகள் எல்லாம் சரியாக நடைபெறவில்லை. பஞ்சாயத்து ஒன்றியங்களில் நிதிப் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தால் பஞ்சாயத்து வேலைகள் சரியாக நடைபெறவில்லை. ஆகவே, அந்த இரண்டு யூனியன்களுக்கும் அதிக நிதி ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் போக்குவரத்து வசதி, மற்ற வசதிகளையும் செய்து தரவேண்டும்.

அடுத்தபடியாக எங்கள் பகுதியில் புகையிலை சாகுபடி அதிகமாக நடை பெறுகிறது. அதற்குப் போடுகின்ற வரி பூராவும் மத்திய அரசுக்குப் போகிறது.

[திரு. மா. மீனாட்சிசுந்தரன்] [1971 ஜூலை 28

மத்திய அரசுதான் வரி வாங்குகிறது என்கிற காரணத்தால் நம்முடைய அரசு அந்தப் பகுதியைக் கவனிக்க வில்லையோ என்று சந்தேகப்படுகிறேன். புகையிலைச் சாகுபடியினால் கிட்டத்தட்ட வருடத்திற்கு 52 லட்சம் ரூபாய் மத்திய அரசு வரியாகப் பெற்றுக்கொண்டிருக்கிறது. அதிலிருந்து ஒரு பகுதியை நம்முடைய அரசு பெற்று புகையிலை உற்பத்தியாளருக்கு தக்க உதவிகளைச் செய்திடவேண்டும், அதற்கான முயற்சியை இந்த அரசு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உப்பு எடுக்கும் தொழில் என்னுடைய தொகுதியில் அதிகமாக நடைபெறுகிறது. பெரிய பெரிய தனவந்தர்கள் உப்பளங்களை வைத்துக் கொண்டு, அதன் பலன்களை தாங்களே அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள். உப்பளங்களில் நேரடியான வேலைசெய்து, சாகுபடி செய்யக்கூடிய தொழிலாளர்கள் குறைந்த கூலியில் வேலை செய்கிறார்கள். ஆகவே, பெரிய தனவந்தர்களிடமுள்ள உப்பளங்களைக் கைப்பற்றி, நேரடியாக வேலைசெய்யக்கூடிய தொழிலாளர்களுக்குத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நீர்ப்பாசன வசதிகள் செய்துகொடுத்த வாய்மேடு, தகட்டூர், ஆயுமூர், மகாராஜபுரம், தென்னடார் போன்ற கிராமங்களில் நீர்வரி, நிலவரி அதிகமாக வாங்கி வருகிறார்கள். கிட்டத்தட்ட ஏக்கர் ஒன்றுக்கு 50 ரூபாய், 60 ரூபாய் என்று வசூல் செய்கிறார்கள். மேலும், நான்கைந்து வருடங்களாக வசூல் செய்யாமல் விட்டுவிட்ட வரியை ஒன்றாகச் சேர்த்து பூராத் தொகையையும் கட்ட வேண்டுமென்று விவசாயிகளை வற்புறுத்தி வருகிறார்கள். சாகுபடியாளர்கள் பூராவும் விவசாயிகளாக இருக்கின்ற காரணத்தால் அவர்களை அரசாங்கம் காப்பாற்றவேண்டும். காட்டு நிலம் கொஞ்சம் இருக்கிறது. பள்ளிமேடு என்ற கிராமத்திற்கு அருகாமையிலே ஒரு கிராமம் இருக்கிறது. அங்கே நல்லமுறையிலே சாகுபடி செய்யக்கூடிய நிலம் கொஞ்சம் இருக்கிறது. அதையும் ஏழைகளுக்குப் பட்டா செய்து கொடுக்கவேண்டுமென்று இந்த அரசை நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கோடியக்காடு என்ற பகுதியிலே காடு இருக்கிறது, அந்தக் காட்டிலே பல வன விலங்குகள் இருக்கின்றன. மான்களும் நிறைய இருக்கின்றன. சுற்றுலா அமைச்சர் அவர்கள்கூட அதை வந்து பார்த்து இருக்கிறார்கள். அதற்குப் பக்கத்திலே உப்பளம் என்ற லக்கூன் இருக்கிறது. அதில் பறவைகள், வெளிநாட்டுப் பறவைகள்கூட வருகின்றன. எனவே அந்த இரண்டு இடங்களையும் சேர்த்து ஒரு சுற்றுலாப் பகுதியாக அதை ஆக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

வேதாரண்யம் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான நிலங்களில் தொன்று தொட்டு குத்தகை முறையிலே பல விவசாயிகள் சாகுபடி செய்துகொண்டிருக்கிறார்கள். அந்த நிலங்களை அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விசாரணை செய்து அந்த நிலங்களைக் கோவிலுக்குப் பட்டாச் செய்கிறார்கள். 15 ஆயிரம் 20 ஆயிரம் மக்கள் பயனடையக் கூடிய வகையில் அவர்களுக்குப் பட்டா செய்துகொடுக்க ஒரு சிறு சட்டத் திருத்தம் செய்து அவர்களுக்குப் பட்டாச் செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1971 ஜூலை 28] [திரு. மா. மீனாட்சிசுந்தரன்]

மீனவர் குப்பங்கள் அதிகமாகியிருக்கின்றன. அவற்றிற்கிடையே இணை ரோடுகள் திறந்துதர சர்க்காரே அந்தச் செலவை ஏற்றுக்கொண்டு போட்டுத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த இரண்டு மூன்று வருடங்களாக இறைவை மோட்டார்களுக்கு இரண்டு மூன்று வருடங்களுக்கு முன் அப்ளிகேஷன் போட்டிருந்தும் 200, 300 இறைவை மோட்டார்களுக்கு இன்னும் மின்வசதி கிடைக்காமல் அந்த விவசாயிகள் வட்டிகட்டிக்கொண்டு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே விரைவிலே மின் இணைப்புக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வேதாரண்யம் பகுதியிலே இருக்கிற மக்கள் திருவாரூர் தேர் ஓடியதைப் போன்று வேதாரண்யம் தேரும் ஓடவேண்டுமென்று விரும்புகிறார்கள். எனவே அதற்கும் அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

DR. H. V. HANDE : Mr. Deputy Speaker, Sir, I wish to offer a few remarks on behalf of our party.

At the very outset I would like to state that our party opposes this Appropriation Bill clearly under two heads, viz. (1) budgetary irregularities and (2) administrative lapses.

So far as budgetary irregularity is concerned, I would like to briefly mention one or two things. Firstly we find it in the annual financial statement. Nowhere in the history of budgetary provision an income of Rs. 22 crores which comes under revenue head of 'additional mobilisation' is put under 'suspense'. Only by certain taxation measures, we raise, we mobilise additional revenue. Normally it should have been placed in page 2, i.e., revenue and expenditure. In the revenue of Rs. 1,189 crores, this Rs. 22 crores should have found a place. I charge this Ministry of having deliberately done this to confuse this House and give an indication that they have no additional resources except this Rs. 20 and odd crores. But on an examination of the whole thing, we find that there is additional taxation to the tune of Rs. 21 crores, by suspension of prohibition we get Rs. 22 crores, by way of excise duty, etc. we get Rs. 27 crores. So, in other words we are increasing mobilisation of resources to the extent of Rs. 70 crores.

When we get Rs. 70 crores, we should utilise it for particular purposes, for productive, development purposes. To that extent we would be entitled to have development activities. But I am very sorry to state that things are not very bright, in that respect. When we compare the figures, we should normally expect that with so much of additional mobilisation of resources, a major part of it should be properly invested in development and profitable activities. Unless this is done, it will be difficult. I have also got other points. Because I have limited time at my disposal, I will now go to administrative lapses. What I had just now said is an indication. This sort of thing should not be there hereafter. The budget should give us proper indication and it should serve as proper

guideline for Members. Let not hon. Members be treated with contempt. We are here in this House to be properly guided and properly informed.

Another point is the cavalier manner in which answers are given to questions in this House. It is very humiliating to us. We ask straightforward questions. Yesterday you could have seen in the papers, a question was put in Rajya Sabha by a Member, and he wanted the answer within 3 or 4 hours and within that time the answer was got. Bhupesh Gupta of Communist Party said that answer should be obtained within 4 hours since it was late 1 p.m. at that time. Within 5 p.m. the answer was given. That sort of urgency should be there. We are not here to get oblique answers to our questions.

The other day I put a straightforward question to the Hon. Minister for Transport. I put a pinpointed question, whether at a particular place, a particular licence was given to one co-operative society. It took three years before I could get an answer to that question. After I had put the question, within two months, a particular route was given. I asked a pertinent question whether the Government would take action against those erring officials, in case it was found that the officials had erred. I did not go any further. The Hon. Minister did not give a straight reply. It only he had said that in case it was found that the department had erred he would take action against concerned officials, how happy we Members would be. But we did not get such an answer. That is why I say let the members be treated with respect. After all how much of labour we take before putting questions? We draft, redraft and give finishing touches and then put the question. Are we not entitled to get straight answers for them? The way in which some answers are given are humiliating to us. That is why I request the Hon. Chief Minister to give some sort of guidelines to his colleagues in the Cabinet, on how proper answers should be given for questions put by hon. Members. Let him give the guidelines during cabinet meetings.

Let me come to other things. A stage has been reached when the ruling party has deemed it fit to interfere in each and everything, from temple—in which they profess total absence of faith to trade union field where they have made it impossible for any trade union opposing them to exist. Democracy is almost dead in our State. Only fascism of the third type has begun to raise its ugly head. I am going to prove it. It is almost impossible for a person to freely function unless he professes allegiance to the ruling party. Is this democracy or third rate fascism?

THIRU S. KANDAPPAN : Point of Order, Sir. The hon. Member said that democracy is dead in our State and fascism of the third party had raised its ugly head. These are objectionable words and they have to be expunged.

MR. DEPUTY SPEAKER : Let the hon. Member Dr. Hande give his explanation.



THE HON. THIRU P. U. SHANMUGAM : I want to know from the hon. Member Dr. Hande how he could say democracy is dead in our State and how fascism of third degree had raised its ugly head in our State? Perhaps it is there in his imagination and the hon. Member may think so. It will be better if the hon. Member instead of using such words, substantiates it. He must prove it.

MR. DEPUTY SPEAKER : Fascism is too strong a word.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பாசிசத்திலே அது மூன்றும் தரம் என்று சொல்கிறார்கள். ஆகையால் அதிகமான பாசிசம் இல்லை, குறைவானது என்றுதான் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

MR. DEPUTY SPEAKER : It will reflect on the House.

DR. H. V. HANDE : Not on the House, but on the administration.

MR. DEPUTY SPEAKER : You said democracy.

DR. H. V. HANDE : If the Deputy Speaker feels that fascism is an unparliamentary word, I will substitute dictatorship. . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பாசிசம் என்ற வார்த்தை இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சபையிலே என்ன என்ன நடக்கின்றன என்பதை மக்கள் தெரிந்துகொள்ளவேண்டும். பாசிசம், மூன்றும் தரம் என்ற வார்த்தைகள் அப்படியே இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : The amount of violence unleashed on the workers of Simpson Group of Companies is something which no lover of democracy can tolerate. The D.M.K. workers have begun to physically threaten the workers of other parties. It is almost impossible for a person to freely function in Simpson Group of Companies, unless he professes allegience to D.M.K. Is this democracy or whatever it is. I will leave it to the Chair to take a decision.

If the Hon. Ministers want particulars I am prepared to give particulars also. Even now many of Shri K. Gurumurthy's active Union Workers are being harassed and threatened inside the factories by the D.M.K. workers.

THE HON. THIRU K. ANBAZHAGAN : The D.M.K. workers of the Simpson Group of Companies have themselves formed a union. It is only a party affair. It is not the affair of the Government. When the other union people attack the D.M.K. union people, the members of the Union themselves take certain decisions. They are not bound by the Government. The Government have no responsibility. How can the hon. Member argue that this Government have got responsibility in this issue?

DR. H. V. HANDE : Have the Government no responsibility if people are beaten ?

THE HON. THIRU K. ANBAZHAGAN : If people are beaten the police take action whenever it is necessary. But it has not been done by the Government or instigated by the Government.

DR. H. V. HANDE: Is that not the responsibility of the Government? I do not understand the argument of the Hon. Health Minister.

THE HON. THIRU K. ANBAZHAGAN: The Government are not responsible for the activities of the D.M.K. Union in the Simpson Group of companies. The union is a separate body over which the Government have no responsibility directly.

DR. H. V. HANDE: If the Hon. Minister has followed me, he would have understood me correctly. I am accusing the Government for not getting a solution and for not taking action to see that these sorts of things do not take place . . .

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவரவர்களே, சிம்சன் கம்பெனியில் நடைபெற்ற கலவரத்தின்போது இருதரப்பார் மீதும் போலீசார் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதைக் கனம் உறுப்பினர் அவர்கள் அறியவேண்டும்.

DR. H. V. HANDE: Now the Hon. Minister for Labour is more liberal in his answer because he knows the subject and it is his portfolio.

THE HON. THIRU K. ANBAZHAGAN: The Labour Minister has understood the subject. I know the member and the argument.

THIRU RAMA ARANGANNAL: On a point of order . . .

MR. DEPUTY SPEAKER: It is better to avoid direct conversations here.

DR. H. V. HANDE: Who should be pulled up? Who started it first?

MR. DEPUTY SPEAKER: Whoever it is, it is better to avoid such direct conversations.

DR. H. V. HANDE: Now, Sir, I shall quote some instances. Shri Parthasarathy, Electrician, Simpsons Plant III is not yet allowed to enter the factory and attend the work without any reason. This man was assaulted on 22nd April 1971. He met with multiple injuries and fractures and was hospitalised for nearly two months. He was to rejoin duty on 14th of June 1971, but was prevented at the gate by the D.M.K. workers. He is still out of employment and he has written in vain to the Management

Shri Sriramulu working in Simpsons Plant (III) is the Assistant Secretary of the North Madras Congress Committee. On 24th June 1971, he was transferred to Simpson and Co. Plant–III Sembiam, from Plant I, Mount Road. When he went to join duty as per the instructions of the Management, the workers belonging to the ruling party prevented him from entering the factory, dragged him from the premises of the company, assaulted him and also threatened his life. Shri Sriramulu is unable to go to work till date.



Then again three worker-Directors of Simpson and Group Companies Employees' Co-operative Society Limited, namely, Shri Anantharaman of India Pistons, Limited, Madras-11, Shri Jambulingam and Shri Kanakasabapathy of Simpsons Plant III and Plant I respectively were threatened and asked to resign from the directorship of the Society by the ruling party workers. It is to be pointed out that full period of three years as per the provisions of the Madras Co-operative Societies Act and Rules has not expired.

Only Shri Jambulingam resigned out of fear, but all the three have made complaints to the Deputy Registrar of Co-operative Society (Credit), Madras. In spite of his resignation, he was assaulted brutally, on 29th June 1971, inside the factory, while on duty. He is now in the hospital with multiple injuries. He is at present a member of the INTUC Union.

The INTUC workers of Simpson Plant I, Mount Road used to maintain a notice board in front of the Company for several years. But after the D.M.K. leadership took over the Simpson Group Unions, the D.M.K. workers started harassing and threatening INTUC workers and demanded that the INTUC notice board should not be exhibited in future.

On 25th June 1971 at about 7-30 p.m. Mr. Menon, Secretary of the INTUC Union and other Office-bearers were surrounded and threatened by the D.M.K. workers in front of the Company gate.

On 28th and 29th again the ruling party workers have stolen away the notice boards of INTUC . . . . ..

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் நீண்ட நெடும் பட்டியலை, பெயர்களைப் படித்து, வாசற்படியிலே மிரட்டப்படுகிறார்கள், துன்பப்படுத்தப்படுகிறார்கள், இவரையெல்லாம் அடிக்கப்போகிறார்கள் என்ற நீண்ட பட்டியலைப் படிக்கிறார்கள். அதற்கெல்லாம் ஆதாரம் வைத்திருக்கிறார்களா என்று தெரியவில்லை. அடிபட்டவர்களைக் கையில் கொண்டு வந்து காட்டுவார்களோ என்னவோ தெரியவில்லை. இப்படிப் பேசுவது பொருத்தமல்ல. அப்ரோப்ரியேஷன் பில் மீது விவாதம் நடத்திக்கொண்டிருக்கிறோம். அந்த அங்கத்தினர் அடிக்கப்பட்டார், இந்த அங்கத்தினர் அடிக்கப்பட்டார், பயமுறுத்தப்பட்டார்கள் என்றெல்லாம் பேசுவது ஜனநாயகத்தைப்பற்றிப் பேசும் அங்கத்தினர் அவர்கள் இந்த அப்ரோப்ரியேஷன் பில்லில் பேசுவது பொருத்தமல்ல. இதையும் பொருத்தம் என்று சொன்னால் ஒத்துக்கொள்கிறேன்.

மேலும் அங்கத்தினர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, ஒரு யூனியனுக்கும் இன்னொரு யூனியனுக்கும் தகராறு ஏற்பட்டது என்றால், பயமுறுத்துகிறார்கள், ராஜினாமா செய்தார்கள் என்றெல்லாம் சொல்வது தவறு, போலீஸ் இலாக்கா இருக்கிறது, அங்கு சொல்லி நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் ஏன் என்று கேட்கலாமே தவிர, அங்கே எதுவும் செய்யாமல் சட்டமன்றத்தில் பேசினால், அமைச்சருக்குத் தெரியாது, எனவே புகார்களைச் சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லாமல் புகாரை இந்த இடத்திலே சொல்வது என்ன பொருத்தம் என்று தெரியவில்லை.

[1971 ஜூலை 28

DR. H. V. HANDE : The Assembly is here to ventilate our grievances and it is for you to answer. We are here for ventilating our grievances. So many times a number of persons who are involved in these incidents have mentioned. Fortunately the Labour Minister is here. . . .

*மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :* தலைவரவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் ஜனநாயகத்தைப்பற்றியும் மற்ற பண்புகளைப் பற்றியும் விரிவாகப் பேசுகிறார்கள். ஆனால் அடிபட்டவர்கள் என்று குறிப்பிட்ட சில தொழிற்சங்கத்தைச் சார்ந்த தொழிலாளர்களை மட்டும் சொன்னார்களே தவிர, அவர்கள் பரந்த நோக்கம் உடையவர்களாயிருந்தால் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் எத்தனை பேர் அடிப்பட்டார்கள் என்பதையும் அவர்கள் எடுத்துக் கூறியிருக்க வேண்டும். அதுமட்டுமல்ல, அந்தச் சமயத்திலே தொழிற்சாலையில் எவ்வளவு இயந்திரங்கள் பழுதுபட்டன, என்னென்ன நிகழ்ந்தது என்பதை இரு சார்பிலேயும் சொல்லி இப்படிப்பட்ட வன்செயல்கள் கூடாது என்று சொல்லியிருப்பார்களேயானால், அதை வரவேற்றிருக்கலாம். ஆனால் ஒருதலைப்பட்சமாகப் பேசுவது, ஜனநாயத்தின் அடிச்சுவட்டை கூட எட்டிப்பார்க்காமல் இருக்கிறார்கள் என்பதைத்தான் வருத்தத்தோடு சொல்ல வேண்டியிருக்கிறது.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* குறிப்பிட்ட கலவரத்திலே இவர்களை அவர்கள் அடித்தார்கள், அவர்களை இவர்கள் அடித்தார்கள் என்றால், அதெல்லாம் லீகல் ஆக்ஷனிலே கவனிக்கலாம். அதை நம்முடைய மன்றத்தில், திராவிட முன்னேற்றக் கழக ஊழியர்கள் அடித்தார்கள் என்று சொல்வது அவ்வளவு பொருத்தமானதாக எனக்குத் தெரியவில்லை.

*திரு. இராம. அரங்கண்ணல் :* பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். Under Rule 158(2) 'The debate on Appropriation Bill shall be restricted to matters of public importance. I do not want to read the whole thing. நண்பர் ஹாண்டே அவர்கள் பேசுவது பொருத்தமா என்பதற்குத் தாங்கள் தீர்ப்புவழங்க வேண்டுகிறேன்.

(டாக்டர் எச். வி. ஹாண்டே எழுந்தார்)

*மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :* தீர்ப்பு வழங்கவில்லையே. Under Rule 158 (2), 'the debate on an,' Appropriation Bill shall be restricted to matters of public importance or administrative policy implied in the grants covered by the Bill which have not already been raised while the relevant demands for grants were under consideration.'. So it is a vast subject, but anyhow it is better to confine yourself to certain limits.

DR. H. V. HANDE : I would like to submit one point for the consideration of the Hon. Deputy Speaker. In this House there are two sides. One is the opposition. The opposition is in a hopeless minority and we are here to put forth the view points of the persons who are harassed and I would like . . .



1971 ஜூலை 28]

MR. DEPUTY SPEAKER : You are not helpless. The Chair is here to help you.

DR. H. V. HANDE : Thank you very much. We are very much reassured.

THIRU R. PONNAPPA NADAR : I request that the word "hopeless" may be expunged from the proceedings. We are not hopeless.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : The opposition is not hopeless, but it is helpless.

MR. DEPUTY SPEAKER : Then there is the Chair sitting here to help you.

DR. H. V. HANDE : Hopeless minority—that is the expression that is normally used when the number is very small. That is what we usually say. I said ' hopeless minority '. We are here to express the views of one section of the people, naturally to express the views of one particular section who were beaten and the Hon. Minister is there to explain and give a complete picture. There is a huge section in the House which has been talking on behalf of the particular section which was not beaten. But my point is this. The persons, the other section, who were beaten naturally come to us for redressal of their grievances.

My point is that the other section naturally came to us for the redressal of their grievances and I am concerned with the redressal of their grievances and so I am mentioning it. Also last time when I spoke. I did not have facts and so I did not refer to them then. Now I have got more facts. பிற்பகல் 2-30

*மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :* தலைவரவர்களே, எந்தத் தொழிலாளர் அடிப்பட்டாலும் அதற்காக இந்த அரசு அனுதாபமும் அக்கறையும் காட்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். டாக்டர் ஹாண்டே ஆதாரத்தோடு பேசுகிறேன் என்று சொன்னார்கள். கழகத்தைச் சேர்ந்த தொழிலாளர் அடிபட்டிருப்பதைப் புகைப்படத்தோடு காண்பிக்க முடியும்.

DR. H. V. HANDE : Sir, during the question-time on the floor of the House I requested that a one-man or two-man or three-man commission be appointed to examine the whole matter. One section had stated that the D.M.K. workers had been beaten and another section had stated that non-D.M.K. workers had been beaten. Two sections have given divergent views and the best thing is to appoint a commission to go into the whole matter. Even on the 29th June Mr. Menon telephoned to the Control Room of the Police about the matter but I am sorry to say that action has not been taken. Let at least people understand that we are here to do justice. If the Hon. Minister does not look at it in the proper perspective, we will find ourselves in a difficult situation.

Finally, I come to another point relating to incidents which took place at Chidambaram. The Hon. Chief Minister made a statement the other day on these incidents and he evoked the sympathy

of the entire House. We are very much interested in safeguarding the life of the Chief Minister and there is no question of difference of opinion on this point. But I would like to have a categorical answer with regard to this point: Normally Naxalites wave black flags and make a lot of noise demanding jobs and not degrees. This had happened within the Convocation Hall during the last convocation. Even this activity of the naxalites was almost inside the hall, as per the Chief Minister's own statement also. . .

THIRU N. GANAPATHY: Sir, on a point of order. This Government was pleased to order a judicial enquiry into those proceedings and the debate here may tend to influence the decision of the judicial enquiry. So I would request the Chair to avoid such debates in this House.

MR. DEPUTY SPEAKER: It is not *sub-judice*.

DR. H. V. HANDE: It does not come under contempt of court.

There are only two more days and after that we will have no forum to ventilate our grievances and so I want a full-dress discussion on this matter . . .

THIRU M. A. LATHEEF: Sir, on a point of order. When the Commission headed by Mr. Justice Somasundaram enquired into the students-busmen clash, a petition was filed by the Tamil Nadu Congress Committee that the then Chief Minister and the then Public Works Minister should be called to give evidence before the Commission because they made certain observations on the floor of the House. So, I want to know whether it is in order for this House to discuss this matter when the Commission has already been appointed to enquire into it.

MR. DEPUTY SPEAKER: The House is superior.

DR. H. V. HANDE: Sir, on 23rd July 1971 between 9 a.m. and 9-45 a.m. there was a black flag demonstration and the M.L.C.'s car was stopped. This was the signal for starting lathi charge. There was a marshy place before the eastern hostel Students wanted to seek shelter into the hostel through this marshy place. So a few students' chappals were also found there. A lake is also nearby. A few jumped into the lake. The police sitting on the bank pelted stones and prevented the students from getting back. Somehow ultimately the students got back.

Then after 10 p.m. the lathi charges and other violent acts had subsided but around 2 a.m. the police forcibly entered the eastern hostel (for arts and science students) beat them up and took them in lorries to put them away in the outskirts of nearby places. A few students who escaped from the police came out to the western hostel (Engineering Hostel) to seek shelter.

The Student Secretary of the D.M.K. in the campus, Babu Chandrasekar, had told his friends even a week before: "If there is any black flag demonstration, don't go there. There will be heavy lathi-charge". This shows that the whole thing was known



sufficiently earlier and the Police had planned it before the incidents. Sir, regarding mobilisation of the police, I want to know when the order for it was issued and I would be very happy if that is placed on the table of the House.

Then I come to the post-mortem of the student. I want to know whether the death took place at 10 a.m. or 10 p.m. Also whether the undigested food related to breakfast or lunch.

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: காலை ஆறு மணிக்கு பிணத்தைப் பார்த்து பரிசோதித்த டி.எம்.ஓ. அவர்கள் 16 அல்லது 18 மணி நேரத்திற்கு முன்பு தண்ணீரில் விழுந்து இறந்திருக்க வேண்டுமென்று சொன்னதாகத்தான் அன்றே சொன்னேன். கடிகாரத்தில் 10 மணி என்று இருந்தது காலை 10 மணியாகவும் இருக்கலாம் அல்லது இரவு 10 மணியாகவும் இருக்கலாம். டி.எம்.ஓ. பரிசோதித்துக் கூறிய முடிவின்படி இரவு பத்து மணிக்கு இறந்திருக்கலாம் என்று கூறியிருக்கிறார்கள். இந்தப் பிணம் தண்ணியில் 10 மணி நேரம் ஊறி இருக்கலாம் என்று கூறியிருப்பதாகத்தான் நான் சொல்லியிருக்கிறேன்.*

DR. H. V. HANDE: Is is not possible for the doctor to find out whether the undigested material related to breakfast or lunch and also whether it was idli or bread . . . .

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: வயிற்றில் இருந்த பொருள்கள் என்ன, என்ன ஆதாரம் இருந்தது என்பதெல்லாம் ஆராய்ச்சிக்காக அனுப்பப்பட்டிருக்கிறது என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அதைப்பற்றி முடிவு தெரிந்த பிறகுதான் சொல்ல முடியும். திட்டமாக என்ன நடந்தது என்று அன்றைக்கே சொல்லவில்லை. இன்றைக்கும் சொல்லவில்லை. நீதி விசாரணை முடிந்த பிறகுதான் சொல்ல முடியும்.*

DR. H. V. HANDE: Now I would like to know from the Hon. Chief Minister answers for the following questions: How many persons were arrested and out of the arrested persons, how many of them are naxalites. . . .

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பத்து பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய மற்ற அடையாளங்கள் எதுவும், யார், யார், எந்தெந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதெல்லாம் தெரியவில்லை. பத்து பேர்கள் கையில் ஆயுதங்களோடு கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். என்னைக் கொலை செய்ய வந்ததைப் பற்றிக்கூடக் குறிப்பிட்டார்கள். அதிலும் நக்சலைட்ஸ் ஈடு பட்டிருக்கிறார்கள் என்பதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. நான் முழு விவரங்களையும் இங்கு சொன்னால் குற்றவாளிகள் பிடிபடாமல் போய்விடக்கூடும். இந்த முயற்சிக்காக சிதம்பரம் வந்த நக்சலைட்ஸ் எல்லாம் உண்டு. அதைப்பற்றியெல்லாம் வெகு விரைவில் காவல் துறையினர் நாட்டுக்கு அறிவிக்க இருக்கிறார்கள்.*

DR. H. V. HANDE: Is it not a fact that about 200 cycles were crushed there? That is the information I have got from students who met me.

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சைக்கிள்கள் உடைக்கப்பட்டது [illegible] அங்கு வந்த நேரம், [illegible] படையினரின் [illegible].*

DR. H. V. HANDE: The Hon. Chief Minister himself while answering the call-attention notice by Thiru K. T. K. Thangamani said that he was mentioning that information from the details he had got from the police and that it was subject to correction. He himself said it. That means that he seems to have found it difficult to own full authority for certain statement given by his own department, viz. Police. It is on record. He has said "இதுதான் நமக்குக் கிடைத்த தகவல் . . ." . . . ." That means in other words, it is subject to revision.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நான் சொன்னதைப் போல்தான் ஹாண்டே அவர்களும் சொல்கிறார்கள். அவரும் அவருக்குக் கிடைத்த தகவலை வைத்துச் சொல்கிறார். அவர்கள் நேரடியாகப் பார்க்கவில்லை. தகவலை வைத்துச் சொல்கிறார்கள். நானும் தகவலை வைத்துச் சொல்கிறேன். அதோடு நான் நேரில் பார்த்த காட்சிகளும் உண்டு. நான் காரில் அங்கு செல்லும் போது, இங்கே தாய்மார்கள் இருக்கிறார்கள், சொல்வதற்கே கூச்சமாக இருக்கிறது. மேல்சபையில் கூடச் சொன்னேன். மாணவர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள், அந்தக் கூட்டத்திலே உள்ளவர்கள், ஆடைகளைக் களைந்துவிட்டு நிர்வாணமாகக் காட்சி தந்தார்கள். அதோடு நாய்களின் மேல் என் பெயரை ஒட்டி அவை விரட்டியடிக்கப்பட்டன. இவை ஹாண்டே அவர்களுக்கு சந்தோஷமாக இருக்கலாம். அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளலாம்

டாக்டர் எச். வி. ஹாண்டே: எனக்கு சந்தோஷமாக இருக்கிறது என்று சொல்வது மோசமல். இவருக்கு சந்தோஷமா இருக்கிறது போலீஸ் லாத்தி சார்ஜ் என்று நான் சொல்லலாம் அல்லவா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சட்டசபையில் பேசும்போது பரபுகள் தெரியவேண்டும். ஃபாஸிஸம், ஜனநாயகம் என்ற முறைகளைப் பற்றி தெரிந்திருக்கும் ஹாண்டே அவர்கள் "உங்களுக்கு", "எங்களுக்கு" என்று இங்கே பேசக்கூடாது. நான் பேசும்போது "ஹாண்டே அவர்கள்", "ஹாண்டே அவர்களைப் போன்றவர்கள்" என்றுதான் சொன்னேன். அதேபோல் அவர்களும் சொல்லவேண்டும். எந்தக் குற்றச்சாட்டை வேண்டுமானாலும் சொல்லட்டும். எதையும் தாங்கும் இதயம் படைத்தவர்கள் நாங்கள். அவர்கள் தயாரித்துள்ள அனைத்தையும் சொல்லட்டும். எவ்வளவு வேண்டுமானாலும் கொட்டட்டும். கொட்டட்டும் என்றால் அள்ளிக் கொட்டட்டும் என்று சொல்கிறேன்.

DR. H. V. HANDE: I can also say that perhaps persons like our Chief Minister may be happy about the lathi charge on students. But I would not say that. I am not here to hurt the feelings of the Hon. Chief Minister. But the Hon Chief Minister had chosen to hurt our feelings.

I do not want to dilate much on this point. What I say is the police excesses and police lathi charge were too much. These are two issues. I am separating the two issues. Let that be clearly understood. The Hon. Chief Minister is trying to group them together I want the two to be separated and discussed. The excess unleashed by the Police in the operation is the point under issue. Let us see what happened. The police excesses were too much. That is why the hon. Member Thiru Subbu mentioned that



point. Why should you, not, use tear-gas shell for purpose of dispersing the crowd?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நான் கேட்டேன் அங்கேயே. போலீசார் கண்ணீர்ப் புகையைப் பயன்படுத்தியிருந்தால் அங்கு காற்று வீசிய அளவில் அவர்களே கண்ணீர் புகைப் பிரயோகத்திற்கு ஆளாகியிருப்பார்கள் என அறிந்தேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது நீதி விசாரணைக்கு உட்பட்ட ஒரு விவகாரம். மேற்கொண்டு நீங்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொல்வது, முதல் அமைச்சர் அவர்கள் அதற்கு மறுப்பு சொல்வது என்பது நீதி விசாரணையை நிச்சயமாகப் பாதிக்கும் என்று கருதுகிறேன். இந்த விஷயத்தை விட்டுவேறு விஷயத்தைப்பற்றிப் பேசுவது நல்லது.

DR. H. V. HANDE: Only one point and I am finished. How many students were driven out from eastern hostel? Why should this be done. Iam saying . . . .

MR. DEPUTY SPEAKER: These things will come during the judicial enquiry.

DR. H. V. HANDE: The Hon. Chief Minister has given completely his own version. It is up to us to say what we have got to say and we must give out our view-points. Otherwise we will be helpless. The Chief Minister has given a categorical statement three days ago, after the judicial enquiry order was promulgated. . . . .

(THIRU N. GANAPATHY rose)

(THIRU RAMA ARANGANNAL: அவர்களைப் பேச விடுங்கள்.

DR. H. V. HANDE: I shall mention one other point with regard to Dindigul. Day before yesterday I received a trunk call with regard to the worsening situation there. I would request the Hon. Chief Minister to investigate the matter. A no confidence motion has been brought against the Chairman of Dindigul Municipality. Subsequent to this on 23rd July 1971 the Chairman of the Municipality brought some goondas from outside and went to the houses of Mr. Ismail Sait, the Vice-President and other members and harassed them. Even D.M.K. party workers were also threatened with pistol. This was reported to police by the members of the municipality but the police had not taken any action. The police do not want to intervene. I want to know what action the police had taken in the matter. I hope the Hon. Chief Minister would give the reply in his speech.

I am mentioning this because we would not get an opportunity again to raise this issue in this House, and discuss it. With these words, I conclude my speech.

• THIRU R. PONNAPPA NADAR: Mr. Deputy Speaker, Sir. I would like to offer a few remarks regarding the Appropriation Bill. The first and foremost point I would like to stress before this August House is regarding Cauvery Water Dispute. I do not want to enter into any detailed discussion regarding this. This has been discussed threadbare. A decision has been made

by us and it has been communicated to the Central Government. So far as Tamil Nadu people are concerned we are tackling the situation. But so far as Central Government is concerned, they have not rendered full justice to our legitimate claims. We are stressing our claims for limit flows and all parties in this House are agreed on it. It is a vital matter affecting the interests of Tamil Nadu. In this matter the Central Government had not given us proper response. If our requests are not given proper compliance, what would be the fate of Tamil Nadu is a question that we will have to consider. Dark days are ahead of us. I am sure the Hon. Chief Minister will agree with me that we will have to take proper action.

The Chief Minister has convened a meeting of all party leaders shortly. I do not want to embarrass the Government to enter into a discussion now of the matter that will be placed before that meeting of all-party leaders. But suffice it for me to say that this question affects the Tamil Nadu people and I am sure the Central Government would take effective and immediate steps in the matter to allay the fears of Tamil Nadu. We have listened to the letter read out by Hon. Chief Minister, the letter which had been received from the Prime Minister. We do not want to make any aspersion or suggestion against the content of the letter. It is happily worded. English is a sweet language and I am sure the Prime Minister had bestowed much thought while writing that letter ; she had clothed it in the proper form. I do not want to say anything. Mysore is hastening their schemes. Rs. 7.12 crores had been allotted for the irrigation schemes and I am sure that Hamavathi and other projects are in full progress. Government should take effective steps to see and influence the Central Government so that justice is rendered so far as Tamilians are concerned.

Next point is regarding the bye-election at Usilampatti. A vancancy has occurred and neither the State Government nor the Election Commission had taken any action to have the bye-election at an early date. I am sure that election will have to be conducted within six months after the vacancy has been notified. Steps have not so far been taken to conduct the bye-election. Similar vacancies have arisen and steps are benig taken to have a Central Minister get elected. Vacancy has been notified and steps are being taken to conduct the election shortly. Similarly prudence should be shown to conduct the election at Usilampatti also. So far as State election is concerned, immediate action should be taken promptly. I am sure this matter has to be considered on a priority basis by our Government and steps taken to conduct the election at an early date.

So far as food demand is concerned, that has been guillotined and we were not in a position to put our views regarding food policy before the Government. Food policy and fertiliser policy are both included in the Demand. So far as fertiliser policy is concerned, Government of India has been giving some grant. All of a sudden they had stopped that grant. Our Government is incurring huge losses on account of fertiliser deal. They are giving fertilisers to the farmers at low prices than the one fixed by Central Government. That is a matter which will have to be considered on a priority basis and with some more inputs, the fertiliser policy has to be streamlined.



Regarding the food policy, there is a marked increase in the prices of foodgrains in all the districts and a similar increase in price has also been noticed by our adjoining State. In Andhra Pradesh there is also an increase in the prices of foodgrains and that has been taken note of by the Chief Minister of Andhra Pradesh and they have taken some steps. So far as our State is concerned, the Hon. Food Minister stated that we are in a comfortable position and we have got good buffer stocks with us. I am sure in these lean months it would be advisable and better if some more stock is let out in the market, so that the prices may come down.

If the prices soar up, there would be a tendency for more wages and thereby industrial unrest would be likely. So, I am sure that the Hon. Chief Minister would take steps to arrest the rise in prices, so far as food is concerned. There are belt areas in which there is also an inordinate rise in prices and I am sure that the prices would be arrested then and there.

We are surplus in food—that seems to be the tendency that is now available. Will it not be worthwhile and advisable for us to lift all these zonal restrictions, so that there may a free flow of foodgrains in all the four Southern States and the prices may get stabilished. It may be argued that if we lift the zonal arrangements, prices in Tamil Nadu are likely to shoot up. I am sure that if the four southern States co-operate, there will not be any difficulty. I am sure that the Government would bestow sufficient attention and thought to this problem also.

The next point which I want to stress is this. There is also a rise in the prices of consumer goods and to arrest the prices, effective steps may be taken. Of course there are consumer co-operative societies and there are other societies also. I am sure that the rise in the prices of consumer goods is an indication that the living index is rising and if the cost of living index were to rise, there would be great demand for higher wages and also our Government servants may demand revision of their scales of dearness allowance. So, effective steps may be taken to see that the prices of consumer goods are also arrested.

Then, another point which I wanted to mention is regarding the pay scales of B.T. Assistants. It has been stated that the B.T. Assistants only got an increase of Rs. 25 whereas their counterparts in other departments just as demonstrators, etc., got a benefit of Rs. 75. In their case it may be fixed at least at Rs. 75. I am sure an assurance has been given by the Hon. Chief Minister

that their case would be sympathetically considered and we have got sufficient representations from the B.T. Assistants and we have got several telegrams to the effect that their urgent and immediate demand may be heeded to and this matter may be brought to the notice of the Hon. Chief Minister.

Then another point which I want to mention is regarding the closure of the sick textile mills. Of course, it has been stated that effective steps are being taken. But the follow-up action will have to be speeded up and money will have to be got either from the Central Government or the State Government should get sufficient funds to see that the sick mills are open, so that there may be employment opportunities for the labourers who are now without employment for such a long time.

Similarly the Standard Motors is not functioning to the optimum capacity. They have also applied for a loan from the Central Government. I am sure that our State Government would take steps to see that they get the loan in time, so that the Standard Motors may function to its full capacity here and now.

Then, another point which I want to bring to the attention of the Government is regarding the issue of pattas. Several pattas have been issued. But in the district of Chingleput in Sholavaram pattas were not distributed to the people who have built up their houses and they are in a large number. Some steps have been taken for the issue of pattas for the Ceylon repatriates and the Burma repatriates. That has been done by the Government and there was a function held there when the then Revenue Minister went over there and assured the villagers that steps would be taken for the issue of pattas. I am sure that matter also would be attended to by the Government.

There are certain other proposals for the closure of a certain factory. There is a freezing plant at Ennore and that is likely to be closed and 200 workers would be affected. I am sure that the Chief Minister would also take steps to see that the freezing plant at Ennore will not be closed.

Another local demand. There is a TANSI unit at Nagercoil and I have given a representation to the Government. There was some loss last year and that unit is now running at a profit. I am sure that the Government would drop the proposal to close down that unit also.

Another point which I want to bring to the notice of the Hon. Chief Minister is that so far as our projects are concerned, the estimates are not properly prepared and they prepare the estimates at a very low sum, so that clearance may be given by the Government. Subsequently there are periodical revisions and enhancement proposals are being put forward. So far as this aspect is concerned, this matter has come up before the Public Accounts Committee and that has been adversely commented upon. This



practice of preparing estimates without heading to all the details will have to be put an end to because we are voting very large sums for the various departments and in the matter of preparation of these estimates and also in the matter of preparing the details, the officers concerned should take steps to see that accurate and correct figures are given, so that it may not come up once again to the Assembly in the way of Supplementary Demands and other things. This is a matter which should be properly attended to.

Then, another point which I want to bring to the notice of the Hon. Chief Minister is this. Regarding the law and order situation, there has been a complaint that in some places there are anti-social elements who are creating mischief. I am sure that the Police will take very good steps to see that the anti-social elements, whether they belong to the ruling party or to the opposition parties, are dealt with according to law. So far as the administration of law and order is concerned, I would say that the police officers may be suitably instructed to see that preventive steps are taken, instead of indulging in high-handed action and the incident that has been adverted to at Annamalai Nagar is an instance in point. I do not want to go into the details of that incident, but suffice it for me to say that it would be better and useful if the Police Officers and the Local Officers act with prudence and circumspection. They should not be vindictive and they should not harass people. That is a matter which will have to be considered.

In the matter of police administration the Chief Minister is directly in control and the Chief Minister should take prompt steps against the erring officers, whoever he is and however well placed he may be. I am sure that there will be an assurance forthcoming from the Chief Minister that opposition parties would be treated well both here and outside. I am sure that aspect, that sentiments would be appreciated by the Chief Minister. With these remarks I resume my seat.

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்களே, இந்த அவை முன்னால் இருக்கின்ற நிதிநிலை ஒதுக்கீட்டில் மாண்புமிகு உறுப்பினர்களும் கட்சியின் தலைவர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச்சொன்னது மாத்திரம் அல்லாமல், நிதிநிலை அறிக்கையை இந்த மாமன்றத்திலே முன் வைத்தது முதல் அதனுடைய பொது விவாதத்திலும் பல்வேறு மானியங்களைப் பற்றிய விவாதத்திலும் நல்ல பல கருத்துக்களை, ஏற்ற அறிவுரைகளை, சுவையான வகையிலும், சூடான முறையிலும் எடுத்துச் சொன்னமைக்கு அனைவருக்கும் நான் என்னுடைய நன்றியை மிகுந்த பணிவோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை ஒதுக்கீட்டிற்கான ஒப்புதலைப் பெறுகிற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, இங்கே அமர்ந்து இருக்கிறவர்களுக்கு, ஒரு சிலருக்கு ஏற்பட்டுள்ள சந்தேகம் தமிழகத்திலே இருக்கின்ற பல லட்சம் மக்களுக்கு ஏற்படாது என்றே நான் கருதுகிறேன். இன்று நடைபெறுகிற அரசு முதல் தர அரசா, இரண்டாம் தர அரசா, மூன்றாம் தர அரசா, நான்காம் தர அரசா

என்று கேட்டால், எங்களை எல்லாம் உருவாக்கிய பெரியார் அவர்களுடைய மொழியில் இது மூன்றாம் தர அரசு கூட அல்ல, நான்காம் தர அரசாகும். பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர என்கிற நான்கு பிரிவுகளில், நாங்கள் நான்காவது தரத்தைச் சேர்ந்தவர்கள்; ஆகவே, நாலாந்தர அரசு நாட்டிலே இருக்கிறது. நாலாந்தர மக்களுடைய நல்வாழ்வுக்காகப் பாடுபடும் அரசு என்பதை இறுமாப்போடு, பெருமையோடு, கர்வத்தோடு பெரியார் அவர்களுடைய பெயரிலும், பெருமகனார் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரிலும் சொல்லிக் கொள்வதில் நான் பெரு மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன் (ஆரவாரம்).

ஃபாசிஸ அரசா அல்லது ஜனநாயக அரசா என்கிற கேள்வியைக் கேட்டதற்கு, எனக்கு முன்னால் முதல் அமைச்சராக இருந்த என் அண்ணன் பேரறிஞர் அண்ணா அவர்களோ, அவர் வழி நின்று அரசோச்சுகின்ற நானோ அல்லது என்னுடைய அருமை அமைச்சர் பெருமக்களோ எந்த நேரத்திலும், ஃபாசிஸ முறையில் எடுத்தேன், கவிழ்த்தேன் என்று பேசியதில்லை என்பதை நாடு அறியும், நல்லவர் அறிவர்; அறியாவிட்டால் அது அவர்கள் குற்றம்.

இரும்புக் கரம் கொண்டு அடக்குவேன் என்று ஒரு முறை நான் சொன்ன நேரத்தில், எந்தக் கட்சியையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை, வன்முறையாளர்கள் எங்கேயிருந்தாலும், வன்முறைச் செயலில் யார் ஈடுபட்டிருந்தாலும், வன்முறையாளர்களை இந்த அரசு இரும்புக் கரம் கொண்டு அடக்கும் என்றேன். குறிப்பிட்டு எந்த கட்சியின் பெயரையும் சொல்லி, இந்தக் கட்சியை நான் இப்படி அடக்குவேன் என்று என்றைக்கும் சொன்னது கிடையாது. ஆனால் இங்கே பல முதல் அமைச்சர்கள் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, இன்று ஃபாஸிஸம், ஜனநாயகம் இவைகளுக் கெல்லாம் விளக்கம் அளிக்க வித்தகர்களுக்கு தலைவர்களாக இருப்பவர்கள் பேசியிருக்கிறார்கள், 'கம்யூனிஸ்டுகள் என் முதல் விரோதி' என்று எதிர்க் கட்சியைப் பார்த்துச் சொல்லி, ஜனநாயகம் பேசிய முனிபுங்கவர்களெல்லாம் முதல் அமைச்சர்களாக இருந்திருக்கிறார்கள். தி.மு.க வை மூட்டைப் பூச்சிபோல் நசுக்கி எறிவேன் என்று பேசியவர்கள், மூட்டைப் பூச்சி வீட்டைத் தேடிவரும் அளவுக்கு ஆனார் என்றால், ஃபாஸிஸம் எது, ஜனநாயகம் எது என்பதை நன்றாக உணர்ந்து கொள்வார்கள்.

குலக்கல்வி திட்டத்தைக் கொண்டு வந்து, தன் சொந்தக் கட்சியே அதை எதிர்த்து நின்ற போது, 'நான் சொன்னது சொன்னதுதான், நான் வைத்தது தான் சட்டம்' என்று யதேச்சாதிகாரப் போக்கில் அந்த அளவுக்கு நிலைமை தடுமாறிப் பேசி அந்தக் கட்சியினாலேயே புறக்கணிக்கப்பட்டு தள்ளப் பட்டவர்களும் முதல் அமைச்சராக இருந்திருக்கிறார்கள்.

இந்த மாமன்றத்திலே, ஒருவர் முதல் அமைச்சராக இருந்த நேரத்தில் பெருமகனார் ஸர் ஏ. டி. பன்னீர்செல்வம் அவர்கள் கட்டாய இந்தியை எதிர்த்துப் பேசியபோது, முதல் அமைச்சராக இருந்தவர் வேறு இடத்தில் பேசிக் கொண்டிருப்பதைக் குறிப்பிட்டு, 'நான் பேசுவதை கேளுங்கள்' என்றபோது, 'உனக்காகத்தான் இந்தக் காதைத் திருப்பியிருக்கிறேன்' என்று கேளாக் காதைக் காட்டி ஜனநாயகத்திற்கு இலக்கணம் வகுத்தவர்களும் முதல் அமைச்சராக இருந்திருக்கிறார்கள்.





ஃபாஸிஸ வாதிகளாக இருந்தால், யதேச்சாதிகாரியாக அந்த வழியில் இருந்திருக்க வேண்டும். ஆனால், இங்கே இருக்கின்ற எல்லாக் கட்சித் தலைவர்களையும், ஒரு சிலரைத் தவிர, பண்போடு, பணிவோடு, அமைதியோடு அரவணைத்துச் செல்லும் வழியில் நான் கருதியிருக்கிறேன். இந்த மாமன்றத்தைப் பொறுத்தவரையில் ஜனநாயகம் செயல்படுத்தப் படவேண்டும் என்பதற்காக, எந்த எந்த வகையில் இந்த மன்றம் செயல் பட்டிருக்கிறது என்பதைப் பார்த்தால், பிசினஸ் அட்வைசரி கமிட்டி கூட்டங்களில் எடுக்கும் முடிவுகளை நிறைவேற்றியிருக்கிறது. குறிப்பாக முன்பெல்லாம் மேல் அவையில் நம்முடைய மானியங்களை வைத்து விவாதிக்கும் வழக்கமே இல்லாமல் இருந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளாக, மேல் அவைக்கும் அப்படிப்பட்ட நிலைமை வேண்டும். அவர்களுடைய சீரிய, செழுமிய கருத்துக்களை ஏற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிற அடிப்படையில், மேல் அவையில் கல்வித் துறை மானியம், மக்கள் நல்வாழ்வுத் துறை, வேளாண்மைத் துறை மானியம் இவைகளெல்லாம் மேல் அவையிலும் விளக்கக் குறிப்புக்களாக அந்தத் தலைப்பில் வைத்து, விவாதங்கள் நடத்தி, மாண்புமிகு அமைச்சர்களும் நல்ல விளக்கங்களை அளித்து வருகிறார்கள்.

இந்த மன்றம் 1962-ம் ஆண்டு 40 நாள் நடந்திருக்கிறது; 1963-ல் 51 நாள் நடந்திருக்கிறது; 1964-ல் 54 நாள் நடந்திருக்கிறது. 1965-ம் ஆண்டு 57 நாள் நடந்திருக்கிறது. 1966-ம் ஆண்டு 50 நாள் நடந்திருக்கிறது. 1967-ல் மார்ச் திங்களிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட காரணத்தால், 42 நாள் நடந்திருக்கிறது. 1968-ல் 48 நாள் நடந்திருக்கிறது. 1969-ல் 48 நாள் நடந்திருக்கிறது. 1970-ல் 61 நாள் நடந்திருக்கிறது. 1971-ல் இந்த மாதம் வரையில் 44 நாள் இந்த ஆண்டு மன்றம் நடைபெற்றிருக்கிறது. இன்னும் நாம் அக்டோபரிலும், டிசம்பரிலும் கூட இருக்கிறோம். ஆகவே, மாமன்றத்திலுள்ள உறுப்பினர்கள் கருத்துக்களைக் கேட்பதில் நாம் வேறு எந்த மாநிலத்தையும் விட குறைந்துவிடவில்லை. நம்மோடு ஒப்பிடக் கூடிய ஒரே ஒரு மாநிலம் மைசூர்; இது ஒன்றிலாவது அவர்கள் நம்மோடு ஒற்றுமையாக இருந்திருக்கிறார்கள். 61 நாள் நடந்திருக்கிறது. மற்ற மற்ற மாநிலங்களில் குறைவாகத்தான் இருக்கிறது. குறைவான அளவில்தான் மன்றங்களில் விவாதங்கள் நடத்தியிருக்கிறார்கள்.

இந்த மன்றத்திலே இப்பொழுது 34 நாட்களாக மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லி வருகிறார்கள். மார்ச்சுத் திங்களில் ஆரம்பித்து, ஏப்ரல் வரை பத்து நாட்களில் மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது நடைபெற்ற 34 நாட்களில், இந்த 34 சட்ட மன்ற நாட்களில், 7 நாட்கள் நிதி நிலை அறிக்கையின் மீது பொது விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் 101 பேர்கள், என்னையும் சேர்த்து, ஈடுபட்டிருக்கிறார்கள். பிறகு 49 மானியங்கள் விவாதிக்கப் பட்டிருக்கின்றன. இந்த மானிய விவாதத்திலே, 383 உறுப்பினர்கள் பங்கு கொண்டிருக்கிறார்கள். அதே போல, வெட்டுப் பிரேரணைகள் 1,025 அனுமதிக்கப் பட்டு, அதிலே வலியுறுத்தப் பட்டவை 161 என்று கணக்குக் கூறுகிறது.

அதே போல், விதி 41-ன் கீழ் கவன ஈர்ப்பு தீர்மானங்கள் 29 தொடர் நாட்களில் எடுக்கப்பட்டிருக்கின்றன.

ஒத்திவைப்புத் தீர்மானங்கள் 15, விவாதிக்கப்படாவிட்டாலும், கொண்டு வந்தவர்கள் நோக்கம் நிறைவேறும் அளவுக்கு அவகாசம் கொடுக்கப்பட்டு, பேசப்பட்டிருக்கிறது.

[திரு. மு. கருணாநிதி] [1971 ஜூலை 28

பில்ஸ் பொறுத்தவரையில், அறிமுகப்படுத்தப் பட்டவை 26, நிறைவேறியவை 10, அதேபோல் கவர்ன்மெண்ட் மோஷன்கள் இருந்தவை 8, "Considered and passed 37".

கேள்விகள் பொறுத்தவரையில், பதில் அளிக்கப்பட்டவை 522 மூலக் கேள்விகள்; துணைக் கேள்விகள் 2,344.

ஆக ஒரு ஃபாஸிஸ சர்க்காரில் இவையெல்லாம் நடைபெற்றிருக்காது; ஃபாஸிஸ சர்க்காரிலே மன்றமே இருக்காது. ஃபாஸிஸ சர்க்காதில் இப்படிப் பட்ட நிகழ்ச்சிகளெல்லாம் இருக்காது. ஜனநாயக இலக்கணத்தின்படி உறுப்பினர்கள் வேண்டியவாறெல்லாம் அனைத்துக் கட்சித் தலைவர்களும் நம்முடைய நேரங்களை ஒதுக்கீடு செய்து, சட்டசபை நிகழ்ச்சிகளை நடத்தி கருத்துக்களைக் கொடுத்து, எந்த எந்த அளவுக்கு ஜனநாயக மரபுகள் காப்பாற்றப்பட வேண்டுமோ, அந்த அந்த வகையில் வழிவகைகள் வகுக்கப் பட்டிருக்கின்றன.

கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள், இங்கே ரூ. 20 கோடி மானியத்தை கில்லட்டினில் விட்டு விட்டோம் என்று. வழக்கமாக 20, 26, மானியக் கோரிக்கைகள் கில்லட்டினில் விடுவது உண்டு. 1953-ல் 26 மானியங்கள் விடப்பட்டிருக்கின்றன; 1958-ல் 14 மானியங்கள் கில்லட்டினில் விடப்பட்டிருக்கின்றன. 1961-ல் 7 மானியங்கள் விடப்பட்டுள்ளன. இந்தத் தடவை ஒரே ஒரு மானியத்தை கில்லட்டினுக்கு விடப்பட்டது. அந்தக் குறையும் அடுத்த தடவை நீக்கி விடலாம். பலம் இருக்கிறது, செய்தால் என்ன தப்பு என்கிற ஆணவம் ஏற்படவில்லை. காரணம் நாலாந்தர சர்க்காராக இருப்பதால் அந்த அடக்கம் எனக்கு இருக்கிறது என்பதை கம்யூனிஸ்டு கட்சித் தலைவருக்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே தியாகிகளுடைய மானியத்தைப் பற்றி நம்முடைய அம்மையார் அனந்தநாயகி அவர்கள் பேசினார்கள். தியாகிகளுக்கு மானியத்திற்காக மனு செய்து கொள்ள ஒதுக்கப்பட்டிருக்கிற நாளை நீடித்துத் தரவேண்டுமென்று சொன்னார்கள். இதைப் பெறுவதற்காகவே, இது வரையில் தருகிற மானியத்திற்கு நன்றி சொல்லிக் கொண்டார்கள். அவர்களுடைய தந்திரத்தை நான் பாராட்டுகிறேன். 40 லட்ச ரூபாய்க்கு மேல் தியாகிகள் மானியத்திற்கு ஒதுக்கி இருப்பதற்காகப் பாராட்டினார்கள். அதற்குக் கூட அந்த வட்டாரத்தில் அவர் மீது காழ்ப்பு உணர்ச்சி ஏற்படக்கூடும். என்ன செய்வது? எப்படியாவது காரியம் நிறைவேறுவதற்காக அவர் துணிந்து பாராட்டியதற்காக நான் அவருடைய துணிவை உள்ளபடியே போற்றக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிட்டத்தட்ட 1966-ம் ஆண்டு, அப்போதிருந்த அரசு இந்தத் தியாகிகளுடைய மானியத்தை அறிமுகப்படுத்தியது. 1966-ம் ஆண்டில் 5 பேருக்குத் தரப்பட்டது. இதை நான் குறையாகச் சொல்லவில்லை. அப்போதுதான் அறிமுகப்படுத்தப்பட்ட காரணத்தினால் 5 பேருக்குத் தரப்பட்டது. 1967-இல் 1,254 பேருக்கும், 1968-இல் 1,817 பேருக்கும், 1969-இல் 1,742 பேருக்கும், 1970-இல், 1,914 பேருக்கும், 1971-ம் ஆண்டு மே திங்கள் முடிய 307 பேருக்கும், ஆக, 7,039 பேருக்கு இந்த தியாகிகளுடைய மானியம் வழங்கப்படுகிறது. இந்த திட்டம் அமுலுக்கு வந்த நாள் 1—10—1966 ஆகும். அப்போது அவர்கள் நிர்ணயித்தது, மனு பெறுவதற்கான கடைசி நாள் 31—12—1968 ஆகும். மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று கருதுகிறேன். இந்த மனுவை அளிப்பதற்கும், இந்த மானியத்தைப் பெறுவதற்கும்



1971 ஜூலை 28] [திரு. மு. கருணாநிதி]

தியாகிகளுக்கு அறிவுத்தி வந்த விதிகள், நிச்சயம் 3 மாத காலம் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறைச்சாலையில் இருந்திருக்க வேண்டும், எந்த சிறைச்சாலையில் இருந்தார் என்பதற்கு அவர் இருந்த சிறையிலிருந்து நற்சான்றிதழைப் பெற்றுத் தர வேண்டுமென்று இருந்தது. ஆனால் அண்ணா அவர்களுடைய தலைமையில் ஆட்சி உருவான பிறகு, அந்த விதி முறைகள் கூடுமான வரையில் தளர்த்தப்பட்டு, நானும் இந்த மன்றத்தில் அறிவித்ததற்கிணங்க முன்னாள் அமைச்சர்கள், பொறுப்புள்ள காங்கிரஸ் கட்சித் தலைவர்களுடைய சிபாரிசின் பேரில் வந்த மனுக்கள் எல்லாம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, இன்றைக்கு 7,039 பேருக்கு கிட்டத்தட்ட 44 லட்சம் ரூபாய்க்கு மேல் ஆண்டு ஒன்றுக்கு செலவைத் தாங்கிக் கொண்டு இந்தக் காரியம் நடைபெற்று வந்திருக்கிறது.

1968-இல் கடைசி நாள் மனு பெற என்று இருந்ததை முதல் தடவையாக ஒரு வருஷம் நீடித்து 31—12—1969 என்று செய்தோம். மறுபடியும் இந்த மன்றத்தில் இருந்தவர்களெல்லாம் எடுத்துச் சொன்னதற்குப் பிறகு, இரண்டாவது தடவையாக 31—3—1970-வரையில் நீடித்திருக்கிறோம். மேலும் நீடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். பெருந்தன்மை வாய்ந்த பேறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளான வருகிற செப்டம்பர் 15-ம் நாள் வரையில் அதை நீடித்துக் கொடுப்பதற்கு இந்த அரசு சம்மதித்திருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்லி, இதை அனந்தநாயகி அம்மையார் அவர்கள் ஒரு வெற்றி என்றும் கொண்டாடலாம். நாள் குறிப்பிட்டு அவர் எந்த வெற்றியைக் கொண்டாடினாலும் அதில் திராவிட முன்னேற்றக்கழகத்தின் பெருந்தன்மை அடங்கி இருக்கிறது என்பதை மாத்திரம் மறந்து விடவேண்டாம் என்று சுட்டிக்காட்டி, இந்தச் செய்தியை மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்தில் அறிவிக்கிறேன்.

அதைப்போலவே அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னார்கள் முதியோருடைய பென்ஷன் வர வர குறைந்து விட்டதென்று சொன்னார்கள். முதியோர் பென்ஷன் பொறுத்தவரையில் எதுவும் குறைந்து விடவில்லை, முதியோருக்கு, அது ஆரம்பிக்கப்பட்ட வருஷமான 1962-ம் ஆண்டு 49,746 பேருக்கு, முதியோர்களுக்கு இந்த பென்ஷன் அளிக்கப்பட்டது. பிறகு, ஒவ்வொரு ஆண்டும் புதிதாக அனுமதிக்கப்பட்டவர்கள் என்று பார்த்தால் 1963-இல் 12,696 பேர், 1964-இல் 2,891 பேர், 1965-இல் 2,560 பேர், 1966-இல் 3,165 பேர், 1967-இல் 3,600 பேர், 1968-இல் 3,590 பேர், 1969-இல் 5,368 பேர், 1970-இல் 9,169 பேர், 1971 ஜூலை வரையில் 2,710 பேர். ஒவ்வொரு ஆண்டும் புதிதாக அனுமதிக்கப்பட்டவர்கள் தொகை இப்படிப் பெருகியிருக்கிறது. அவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு, மாதத்தில் 20 ரூபாய் அளிக்கப்படுகிறது என்ற தன்மையில் 95 லட்சம் ரூபாய் 1971-72-ல் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1970-71-இல் அவ்வாறே ஒதுக்கப்பட்டிருந்தது. ஆகவே, அந்த பென்ஷன் தொகையில் நாம் எதுவும் குறைத்து விடவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அன்றைக்கே நான் சொன்னேன். விடுதலை வீரர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் என்று பார்க்காமல் நாம் செயல்பட்டு வருகிறோம் என்பதை பல உதாரணங்களைக் கொண்டு சொன்னேன்.

[திரு. மு. கருணாநிதி] [1971 ஜூலை 28

நாமக்கல்லாருக்கு நிதி அளித்தது, நெல்லையப்பருக்கு நிதி அளித்தது போல கோமதி சங்கர தீட்சதர் அவர்களுக்காக பென்ஷன் தொகை கேட்டவுடனே; கலெக்டர் ரிப்போர்ட்டு கூடத் தேவையில்லை என்ற அளவிற்கு, அவரை நாமே அறிந்திருக்கிற காரணத்தினால், தரவேண்டுமென்று சொன்னேன். இவைகளைச் சொல்லிக் காட்டுவதற்காகச் சொல்லவில்லை. நாங்கள் ஜனநாயக ரீதியில் நடந்து கொள்கிறோம், பாசிச உணர்ச்சி எங்களுக்கு இல்லை என்பதைச் சொல்லவும், எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் எங்களுக்குப் பாச உணர்வு தான் இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டவும் இதில் நடுவிலே 'சி' சேர்ந்து விட்ட காரணத்தினால் பாசம் என்பது பாசிசம் ஆகிவிடுகிறது, ஆகவே 'சி' வேண்டாம் என்று மாத்திரம் நண்பர்களுக்கு எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, அம்பர் சர்க்காவைக் கண்டு பிடித்தவர் ஏகாம்பரம் என்பது தெரியும். ஏகாம்பரம் கண்டு பிடித்த சர்க்காவிற்கு 'ஏ'வை நீக்கி, கம்பரம் என்பதற்குப் பதில் "அம்பர் சர்க்கா' என்று பெயர் வைத்தார்கள். அந்த ஏகாம்பரம் இந்த அம்பர் சர்க்காவைக் கண்டு பிடித்ததற்காக மாதாந்திர உதவித் தொகை தர வேண்டுமென்று பல்லாண்டு காலமாகக் கேட்டு வந்தார். அதற்குப் பிறகு பல சர்க்காக்கள் நவீன முறையில் கண்டு பிடிக்கப்பட்டு விட்டன. அவருடைய இந்தக் கோரிக்கைக்குப் பழைய அரசு இணங்கவில்லை. ஒருமாதத்திற்கு முன்பு இந்த அரசின் சார்பில் நண்பர் ஏகாம்பரம் என்ற அந்த நபருக்கு மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் வீதம் இந்த அரசின் சார்பாக பென்ஷன் அளிக்கப்படுகிறது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். கட்சி சார்பற்ற முறையில், ஜனநாயக ரீதியில் இந்த அரசு நடந்து கொள்கிறது என்பதற்கான இந்த ஆதாரங்களை எடுத்துக் காட்டினேன்.

இந்த மாமன்றத்தில் 34 நாட்களில் பல விஷயங்களைப் பற்றிப் பேசியிருக்கிறோம். எவ்வளவு சமதர்ம நோக்கோடு பல காரியங்களை கவனிக்கவிருக்கிறோம் என்பதையெல்லாம் நிதி நிலை அறிக்கை படித்ததிலிருந்து இதுவரையில் பல வேறு பிரச்சினைகளில் நடந்த விவாதங்களில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் அனைவரும் நன்றாக அறிவார்கள்.

உழவர் பெருமக்களுக்கு வழங்கும் நீண்ட கால கடன் தொகை 3 கோடியாக இருந்ததை 21 கோடியாக உயர்த்தியிருக்கிறோம். குறுகிய கால கடனை 61 கோடி ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். 9 புதிய நீர்ப்பாசன திட்டங்களுக்காக 23 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். காடுகள் என்ற பெயரால் உள்ள சாகுபடி செய்யக் கூடிய நிலங்களை, 50 ஆயிரம் ஏக்கர் நிலங்களை, நிலமற்ற ஏழைகளுக்கு வழங்க முடிவு செய்திருக்கிறோம். தஞ்சை மாவட்டத்தில் உள்ள நிலமற்ற தொழிலாளர்களுக்கு அவர்கள் குடியிருக்கின்ற இடங்களை ஒப்படை செய்ய முடிவு செய்து, அதற்கான மசோதாவைக் கொண்டு வந்து மகிழ்ச்சிகரமாக நிறைவேற்றி இருக்கிறோம்.

கல்வி வளர்ச்சிக்காக 67-68-இல் 53 கோடி ரூபாய் இருந்தது. இந்த ஆண்டு 81.84 கோடி ரூபாயாக இந்த மானியத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு 1967-68-இல் 17 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்போது 33.21 கோடி ரூபாய் அளவிற்கு வளர்த்திருக்கிறோம்.



1971 ஜூலை 28] [திரு. மு. கருணாநிதி]

குடிநீர் வாரியத்திற்கு 18 கோடி ரூபாய் அளவிற்கு ஒதுக்கீடு செய்திருக்கிறோம்.

குடிசைப்பகுதிகளை மாற்றுவதற்கான, குடிசை மாற்றுத் திட்டத்திற்காக சென்னையில் மாத்திரம் 4 கோடி ரூபாய் 1971–72-இல் செலவிட ஒதுக்கீடு செய்திருக்கிறோம்.

அரிசன மக்களுக்காக 1967-ம் ஆண்டு 4 கோடி ரூபாய் என்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததை, இப்போது 7 கோடி ரூபாய் அளவில் அரிசன மக்கள் நலனுக்காக ஒதுக்கியிருக்கிறோம்.

பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் நலனுக்காக 1½ கோடி ரூபாயாக இருந்தது, இப்போது ஏறத்தாழ 4½ கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். அரிசன மாணவர்களுக்கும், பின் தங்கிய மாணவர்களுக்கும் உணவு, உறையுள் ஆகிய இவைகளுக்காக உள்ள உதவித் தொகையை அதிகமாக்கி, இந்த மாமன்றத்தில் நாம் இந்தக் காரியத்தை எடுத்து நிறைவேற்றியிருக்கிறோம்.

குழந்தைகளுக்கு சத்துணவு ஊட்டுவது என்ற முறையில் 130 ஆயிரம் குழந்தைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்தக் கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பிச்சைக்காரர்கள் மறு வாழ்வு நிதி திரட்ட தமிழக பரிசுச் சீட்டு மூலமாக 40 லட்ச ரூபாய் என்ற அளவிலும், நான் விடுத்த அறிக்கைக் கேற்ப ஏறத்தாழ 20 லட்ச ரூபாய் சேர்ந்து,—நான் எதிர்பார்த்தது 40 லட்ச ரூபாய் என்றாலும், —60 லட்ச ரூபாய்க்கு மேல் பிச்சைக்காரர் மறு வாழ்வு நிதி தாண்டியிருக்கிறது என்பதை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புக்காக 30 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கான திட்டம் இந்த மாமன்றத்தில் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. 6,500 ஆசிரியர்களுக்கு வேலை வழங்குகின்ற திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. 50 உதவி மருத்துவர் பதவிகளை ஏற்படுத்துவது என்று இந்தக் கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்டது. 100 மருத்துவப் பட்டதாரிகளுக்கு மாதம் 250 ரூபாய் உதவித் தொகை அளிக்கும் திட்டமும் இந்தக் கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

200-க்கு மேற்பட்ட செவிலியர் பதவிகளை உருவாக்குவதன் மூலம் வேலை வாய்ப்புக்கான வசதிகளைப் பெருக்கியிருக்கிறோம். படித்தவர்களிடையே வேலை வாய்ப்புகளைப் பெருக்க காவல் துறையில் பள்ளி இறுதி வகுப்பில் தேறியுள்ள தகுதியுள்ள மாணவர்கள் ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் திட்டத்தை இந்தக் கூட்டத் தொடரில் நிறைவேற்றியிருக்கிறோம்.

இதைப்போலவே 2,000 பட்டதாரி மாணவர்களுக்கு இளைஞர் அணி மூலமாக வேலை கொடுக்க, இந்த மாமன்றத்தில், இந்தக் கூட்டத் தொடரில் அறிவித்திருக்கிறோம்.

தொழில் நுணுக்கப் படிப்பில் தேர்வு பெற்று தகுதியுள்ள 3 ஆயிரம் பேர்களுக்கு அவர்கள் சிறு தொழில் நடத்த நாம் தலைக்கு ஆயிரம் ரூபாய் கடன் வழங்கும் திட்டத்தை அறிவித்திருக்கிறோம்.

[திரு. மு. கருணாநிதி] [1971 ஜூலை 28

மேலும் நகர்ப்புறத்தில் ஒரு கிரௌண்டு நிலம் உள்ளவர்கள் அறுபதாயிரம் பேருக்கு மேற்பட்டவர்கள் பயனடையத்தக்க அளவிற்கு அந்த வரியிலிருந்து விலக்கு அளித்திருக்கிறோம். சமதர்மத்தை நோக்கிச் செல்லும் பாதையில் மற்றொரு படியாக பஸ்களுக்கான உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டுவந்து இம் மாமன்றத்தில் நிறைவேற்றியிருக்கிறோம்.

சென்ற கூட்டத்தொடரில் மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர்கள் எடுத்துக் கூறினார்கள், 'ஆளும் கட்சியில் உள்ள நாங்கள் பாஸிஸ உணர்ச்சி பெற்றவர்கள், பஸ் முதலாளிகளுக்குப் பக்கத்தில் நிற்பவர்கள்' என்றெல்லாம். 'நீங்கள் சொல்லி நாங்கள் கேட்கிறதா?' என்ற அந்த பாஸிஸ உணர்ச்சிக்கு ஆளாகாமல், நீங்கள் சொன்னதை ஏற்று அவற்றை இம் மாமன்றத்திலே நிறைவேற்றியிருக்கிறோம். வேண்டுமானால், இந்தப் பெருமை முழுவதையும் திருமதி அனந்தநாயகி அவர்களே எடுத்துக் கொள்ளட்டும். அதே நேரத்தில் பஸ் முதலாளிகளின் வசவுகளையும் அவர்களே எடுத்துக் கொள்ளட்டும்.

மேலும் 50 பஸ்களுக்கு மேற்பட்ட பயணப் பேருந்துகளை வைத்திருக்கும் நிறுவனங்களை தேசியமயமாக்கியிருக்கிறோம்.

மதுரை மாநகரம் ஒரு கார்ப்பொரேஷனாக மாற்ற அது ஒரு பேயரைப்பெற்றிருக்கும் அளவிற்கு, சட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம்.

அடுத்து, ஏற்கனவே இருந்த நில உச்சவரம்புச் சட்டத்தில் இருந்த விலக்குகளையெல்லாம் நீக்கிடும் வகையில், கரும்புத் தோட்டம், மேய்ச்சல் காடு என்றெல்லாம் வைத்துக் கொண்டு அச்சட்டத்திலிருந்து விடுபட்டிருந்த விலக்குகளையெல்லாம் களைந்திடும் வகையில் சட்டத் திருத்தங்களை நிறைவேற்றியிருக்கிறோம்.

எனவே சமதர்ம மணம் கமழுமளவிற்கு அண்ணா அவர்கள் வழிநின்று, அவர் வகுத்துத் தந்த கொள்கைகளின் அடிப்படையில் பல திட்டங்களை உருவாக்கித் தந்திருக்கிறோம்.

இதிலே இன்னும் பல பிரச்சினைகள் தீர்க்கப்படாமலும் இருக்கின்றன. குறிப்பாக, பொன்னப்ப நாடார் அவர்கள் சொல்லும்போது காவிரி நீர் பிரச்சினை பற்றிக் குறிப்பிட்டார்கள். இதற்கென நாம் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் ஒன்றினை 31-ம் தேதி கூட்ட இருக்கிறோம். மத்திய அரசு இதிலே காட்டும் மந்த நிலையைக் கண்டிக்கும் வகையில், இந்த மன்றத்தின் குரலை எழுப்பியிருக்கிறோம் இங்கே. எனவே அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் எடுக்க இருக்கும் முடிவினை நாம் சிரமேல் தாங்கி, அதை நிறைவேற்றத் தயாராயிருக்கிறோம் என்ற உறுதியையும் கூறி, எதிர்க்கட்சி, காங்கிரஸ் கட்சித் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்களுக்கும், அனைத்துக் கட்சித் தலைவர்கட்கும் தமிழக மக்களுக்கும் இவ்வுறுதியை மீண்டும் எடுத்துச் சொல்லிக்கொண்டு உங்கள் அனைவருக்கும் நன்றிகூறி, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன் வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32-1971) நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

உசிலம்பட்டிதொகுதி இடைத்தேர்தல் பற்றிக் குறிப்பிட்டார்கள். அது பற்றி தேர்தல் கமிஷனரோடு தொடர்பு கொண்டிருக்கிறோம். இடையிலே ஒரு தேர்தல் நடைபெறவேண்டியிருப்பதால் இரண்டையும் ஒரே சமயத்தில் வைத்துக்கொண்டால் கஷ்டமாக இருக்கும் என்று கமிஷனர் எடுத்துச் சொல்லியிருக்கிறார். இவைபற்றிய அறிவிப்பு விரைவில் வரும்.



1971 ஜூலை 28]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"தமிழ் நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இரண்டாம் பிரிவு, அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

முதல் பிரிவு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** "இச்சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மூன்றாவது வாசிப்பில் ஒரே ஒரு வார்த்தையைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இத்தொடரில் 1967-68 ஆம் ஆண்டு ஆடிட் ரிப்போர்டின் பேரிலே பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் விடப்பட்டு இருக்கிறது. அவற்றில் குறிப்பாக ட்ரான்ஸ்போர்ட்டிலே ஒரு சில ஒழுங்கீனங்கள் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றன. இந்த நிதிநிலை ஒதுக்கீட்டைச் செலவழிக்கும் நேரத்தில், இவை கவனிக்கப்படும் என்று நம்புகிறேன்.

அரசினர் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்டமுன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுறுகின்றன. நாளை காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

### 5. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள். பிற்பகல் 1.25

### A. Statutory Rules and Orders.

181. Notification issued with G.O. Ms. No. 1626, Agriculture, dated the 28th May 1971, in regard to regulation of trade in respect of cotton in the Dharmapuri district. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

182. Notification issued with G.O. Ms. No. 836, Home, dated the 24th March 1971, in regard to certain amendments to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

183. Notification issued with G.O. Ms. No. 1299, Agriculture, dated the 23rd April 1971, in regard to an amendment to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

184. Notification issued with G.O. Ms. No. 443, Agriculture, dated the 9th February 1971, in regard to an amendment to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

*B. Reports, Notifications and Other Papers.*

188. Addenda to the Audit Report on the Annual Accounts of the Tamil Nadu Electricity Board for the year 1968–69.

@ 189. Tamil Nadu Registration of Practitioners of Integrated Medicine (Amendment) Bill, 1971. (L.A. Bill No. 26 of 1971).

@ 190. The Tamil Nadu Practitioners of Homoeopathy Bill, 1971 (L.A. Bill No. 25 of 1971).

**இணைப்பு**

*[ ம் பக்கத்தில் 500-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]*

| | மையத்தின் பெயர். | தலைமை திருத்துபவர். | உதவி திருத்துபவர். | சேகர் திருத்துபவர். |
|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) |
| 1 | நேஷனல் பெண்கள் உயர்நிலைப் பள்ளி சென்னை-5. | 30 | 317 | 30 |
| 2 | சாரதா வித்யாலயா, சென்னை-17 | 33 | 323 | 33 |
| 3 | சிந்தாதிரிப்பேட்டை ஆண்கள் உயர் நிலைப்பள்ளி. சென்னை-2. | 31 | 313 | 31 |
| 4 | வெஸ்லி உயர்நிலைப்பள்ளி. சென்னை-14. | 34 | 323 | 34 |
| 5 | சகாய பால் உயர்நிலைப்பள்ளி, சென்னை-7. | 31 | 301 | 31 |
| 6 | இந்து உயர்நிலைப்பள்ளி, சென்னை-5 .. | 32 | 322 | 32 |
| 7 | லேடி சிவகாமி ஐயர் பெண்கள் உயர் நிலைப்பள்ளி, சென்னை-4. | 30 | 300 | 30 |
| 8 | மாநில பெண்கள் உயர்நிலைப்பள்ளி, சென்னை-8. | 32 | 335 | 32 |
| 9 | கோபாலபுரம் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி, சென்னை-6. | 30 | 296 | 30 |
| 10 | திரு. வி.க. உயர்நிலைப்பள்ளி, சென்னை-6. | 30 | 323 | 30 |
| 11 | ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் (மெயின்) உயர்நிலைப்பள்ளி, சென்னை-7. | 33 | 228 | 30 |
| 12 | சர். எம். சிடி. முத்தையா செட்டியார் உயர்நிலைப்பள்ளி, புரசைவாக்கம், சென்னை-7. | 32 | 322 | 30 |
| 13 | பி. எஸ். உயர்நிலைப்பள்ளி, சென்னை-4. | 32 | 331 | 32 |
| 14 | டாக்டர் குருசுவாமி முதலியார் டி.டி.வி. உயர்நிலைப்பள்ளி, சென்னை-1. | 30 | 315 | 30 |
| 15 | முத்தியால்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சென்னை-1. | 50 | 479 | 47 |
| 16 | கார்ப்பொரேஷன் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி, சென்னை-34. | 25 | 195 | 20 |
| | மொத்தம் .. | 517 | 5,123 | 504 |

# தமிழ் நாடு சட்டப் பேரவை

---

வியாழக்கிழமை, 1971 ஜூலை 29.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. நீத்தார் நினைவுக் குறிப்பு

### முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. வி. கே. பழனிசாமி கவுண்டர் அவர்கள் மறைவு குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1937-ம் ஆண்டிலிருந்து 1939-ம் ஆண்டு வரையிலும், பின்பு 1952-ம் ஆண்டிலிருந்து 1957-ம் ஆண்டு வரையிலும் கோயில்பாளையம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இப்பேரவையின் முன்னாள் உறுப்பினராக இருந்தவரும், 1959-ம் ஆண்டு முதல் 1968-ம் ஆண்டுவரை சட்ட மன்ற மேலவையின் துணைத் தலைவராக இருந்தவருமான திரு. வி. கே. பழனிசாமி கவுண்டர் அவர்கள், 28—7—1971-ம் நாளன்று மறைந்ததைக்குறித்து இப் பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவிக்கிறேன்.

மறைந்த அன்னாருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும் படிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்.

## 2. வினாக்கள்—விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

*Separate University at Coimbatore*

* 527 *Q.*—Thiru N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to start a separate University at Coimbatore; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

<u>திரு. கே. டி. கே. தங்கமணி</u> : தலைவர் அவர்களே, கோவையில் இப்பொழுது விவசாயப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டிருக்கிறதா? அப்படியானால், இந்தப் பல்கலைக்கழகத்திற்கு மற்ற பல்கலைக்கழகத்திற்கு இருக்கக்கூடிய வசதி வாய்ப்புகளை நமது கல்வி இலாகா செய்யுமா ?

<u>மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்</u> : தலைவர் அவர்களே, விவசாயப் பல்கலைக்கழகம் தனியாக அமைக்கப்பட்டிருக்கின்ற ஒரு பல்கலைக்கழகமாகும். மதுரையில் இருக்கும் விவசாயக் கல்லூரி, கோயம்புத்தூரில் உள்ள விவசாயக் கல்லூரி ஆகியவற்றை இணைத்து அந்தப் பல்கலைக்கழகம் செயல்படும். இப்பொழுது சென்னைப் பல்கலைக்கழகத்திலிருந்து நான்கு மாவட்டங்களை எடுத்து, நான்கு மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் மதுரைப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டிருக்கிறது. திருச்சியையும் கோயம்புத்தூரையும் யூனிவர்ஸிடி ஸென்டராக, மையமாக வைக்கலாம் என்ற கருத்துரு மட்டும் இருந்துகொண்டிருக்கிறது. ஒரு பல்கலைக்கழகம் வைப்பதென்றால் பெரும் செலவு ஏற்படுகிற ஒன்றாகும். மதுரைப் பல்கலைக்கழகம் ஆரம்ப கட்டத்தில் இருப்பதாலும், அதற்கே செய்யவேண்டிய பணிகள் முழுவதும் செய்ய இயலாதிருக்கின்ற நிலையிலும் இப்பொழுது கோயம்புத்தூரில் பல்கலைக்கழகம் அமைப்பது இயலாத ஒன்றாக இருக்கிறது. ஆனால், கோயம்புத்தூர், திருச்சி, பாளையங்கோட்டை ஆகிய பகுதிகளில் பல்கலைக்கழக மையங்கள் வைப்பதுபற்றிய கருத்துரு இருந்து கொண்டிருக்கிறது.

<u>திரு. சு. துரைசாமி</u> : கோவை நகரத்தில் ஏராளமான பொறியியல் கல்லூரிகளும், பட்டப் படிப்புக் கல்லூரிகளும், இருப்பதால் அங்கே பல்கலைக்கழகம் அமைப்பது அங்கிருக்கும் மக்களுக்குப் பயன்படும். மேலும், பல்கலைக்கழகம் அமைப்பதன் மூலம் பல்கலைக்கழக மானியக் கமிஷனிலிருந்து மானியங்கள், நிதி உதவி கிடைக்க வாய்ப்பு இருப்பதால், கோவை மாவட்டத்தில் விரைவில் ஒரு பல்கலைக்கழகம் துவங்க அரசு முன்வருமா?

<u>மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்</u> : தலைவர் அவர்களே, பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கையைப் பெருக்குவதால் அதிகப் பலன் ஏற்பட முடியாது. ஒவ்வொரு பல்கலைக் கழகமும் தனித்தனிச் சிறப்புத் தன்மை கொண்டு இயங்குகின்றது. பல்வேறு பல்கலைக் கழகங்களை அமைக்கும்பொழுது சென்னையில் தயாரிக்கப்படுகின்ற கேள்வித் தாள்களைக் கோயம்புத்தூரில் தயாரிக்க வேண்டியிருக்கும். அவையும் அதே வகையில்தான் இருக்குமென்றால் பெரும் செலவு ஆகும். மதுரைப் பல்கலைக்கழகத்தை அமைத்திருப்பதன் அடிப்படையில் அதனுடைய அமைப்பு முறைகளையெல்லாம் கண்டு, மற்றொரு பல்கலைக்கழகத்தை அமைப்பதுபற்றிப் பின்னர்தான் நாம் யோசிக்க வேண்டும். மதுரைப் பல்கலைக்கழகக் கட்டடங்கள் கட்டுவதற்கே பத்து கோடி ரூபாய்க்குமேல் தேவைப்படுகிறது. வேறொரு பல்கலைக்கழகம் அமைப்பதென்றால் பெருஞ்செலவு ஏற்படும். எனவேதான் இப்பொழுது அதைப்பற்றிய செயற்குறிப்பு இல்லை



<u>திரு. ஜி. ஆர். எட்மண்ட்</u> : தலைவர் அவர்களே, புதிய பல்கலைக் கழகங்கள் எந்த அடிப்படையில் அமைக்கப்படுகின்றன என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்</u> : தலைவர் அவர்களே, கூடுமானவரையில் ஒரு கோடி மக்கள் வாழுகின்ற ஒரு பகுதியில் பல்கலைக்கழகம் இருக்கலாம் என்ற கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இப்பொழுதே தனியாக, ரெஸிடென்ஷியல் யூனிவர்ஸிடி என்ற முறையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இருக்கிறது. கல்லூரிகளோடு இணைந்து விளங்கும் பல்கலைக்கழகங்கள் இரண்டு இயங்கி வருகின்றன.

<u>திரு. ஏ. சி. நரசிம்மன்</u> : கோயம்புத்தூரிலும் ஒரு பல்கலைக் கழகம் ஏற்படுத்துவதால் மத்திய சர்க்காரிலிருந்தோ அல்லது யூனிவர்ஸிடி கிராண்ட்ஸ் கமிஷனிடமிருந்தோ மானியம் அதிகமாகக் கிடைக்கும் அல்லவா ?

<u>மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்</u> : தலைவர் அவர்களே, கட்டடங்கள் அமைப்பதற்கு அவர்களிடமிருந்து மானியம் கிடைக்காது. ஆய்வுக்கூடம் வைப்பதற்கு, நூல் நிலையம் வைப்பதற்கு என்று குறிப்பிட்ட சிறு அளவுதான்—இலட்சக்கணக்கில்தான்—தருகிறார்கள். கோடிக்கணக்கில் அவர்கள் தருவதில்லை.

<u>திரு. கே. டி. கே. தங்கமணி</u> : கோயம்புத்தூர், திருச்சி, பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் பல்கலைக்கழக மையங்கள் அமைக்கப்படுவதுபற்றி அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த மையம் கோவையில் இந்த ஆண்டு அமைக்கப்படுமா?

<u>மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்</u> : தலைவர் அவர்களே, அதற்கான முயற்சியில் பல்கலைக்கழகம் ஈடுபட்டு வருகிறது.

*Job Oriented Courses*

*528 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state--

(*a*) whether a job oriented syllabus for diploma courses in Civil, Mechanical and Electrical Engineering in the Polytechnics of the State is under the consideration of the Government; and

(*b*) if so, the details thereof ?

<u>மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்</u> : (அ) ஆம்.

(இ) கீழ்க்கண்ட துறைகளில் வேலைச்சார்புடைய பட்டைய படிப்பு 1970–71-ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது—

(1) சிற்பக்கலை உதவியாளர் நிலை.
(2) சர்க்கரை தயாரிப்பு நுட்ப இயல்.
(3) மின் கருவிகள் நுட்ப இயல்.

மேலும் 1971–72-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட துறைகளில் வேலைச் சார்புடைய பட்டைய படிப்பு புகுத்தப்படும்—

(1) விவசாயப் பொறி இயல்.
(2) வெல்டிங் நுட்ப இயல்.

(3) உற்பத்தி.
(4) உருவமைப்பு மற்றும் வரைவுநுட்ப இயல்.
(5) தொழிற்சாலை நுட்ப இயல்.
(6) மின் அணு இயல்.
(7) மருத்துவக் கருவி நுட்ப இயல்—மேல் பட்டையப் படிப்பு.

## திருப்பூர் நகராட்சிமன்ற உயர்நிலைப்பள்ளிகள்

* 529 வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகராட்சி மன்ற நிர்வாகத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என அந்த நகராட்சி மன்றத்திடமிருந்து 1970-ம் ஆண்டில் விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) வந்துள்ளது.

(இ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, "இது அரசின் பரிசீலனையில் உள்ளது" என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். திருப்பூர் நகராட்சியைப் பொறுத்த வரையில், நான்கு உயர் நிலைப்பள்ளிகளை அது நிர்வகிக்கவேண்டி உள்ளது. அதனால் நகராட்சிக்குப் பெரும் செலவு ஏற்படுகிறது. ஆகவே, அந்த உயர் நிலைப்பள்ளிகளை அரசாங்கம் விரைவில் எடுத்துக்கொள்ள முன் வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நகராட்சிப் பள்ளிகளை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற முறையீடுகளைப் பெரும்பான்மையான நகராட்சிகள் செய்து வருகின்றன. முதலில் அவர்களுடைய செலவினத்தில் 50 சத வீதத்தை நகராட்சி ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், 50 சத வீதத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் நிலைமை இருந்து வந்தது. பிறகு அவர்கள் நிதிப் பற்றுக்குறை என்று தெரிவித்துக்கொண்ட காரணத்தால், 66-2/3 சதவீதத்தை அரசு ஏற்றுக்கொண்டு, 33-1/3 சத வீதத்தை நகராட்சி ஏற்றுக் கொண்டிருக்கிறது. அரசு தரும் தொகையை மேலும் உயர்த்த வேண்டும் என்று நகராட்சியினர் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மூன்று வகையில் ஏதாவதொன்றைச் செய்யலாம் என்று அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது. அதாவது, (1) எல்லா நகர மன்றப் பள்ளிகளையும் அரசே ஏற்று நடத்துவது; (2) அரசு கொடுத்துவரும் 66-2/3 சத வீத மானியத்தை 80 சத வீதமாக உயர்த்துவது; (3) நிதி நிலை போதிய அளவு இல்லாத நகர மன்றங்கள் நடத்துகின்ற உயர்நிலைப் பள்ளிகளை "ஃபேஸ்டு



ப்ரொக்ராம்"-இல் அரசு எடுத்துக்கொள்ளுவது. அதாவது "ஸிக் முனிசிபாலிடி" என்ற நிலையில் உள்ள நகர மன்றங்களின்கீழ் இருக்கும் உயர் நிலைப்பள்ளிகளை அரசு மெல்ல மெல்ல எடுத்துக் கொள்ளலாமா என்ற முயற்சி இருக்கிறது. நிதி நிலையைப் பொறுத்து அரசாங்கம் விரைவில் அவற்றினை எப்படி எடுத்துக் கொள்வது என்று யோசித்து, எடுத்துக்கொள்ள ஆயத்தமாக இருக்கிறது.

திரு. சு. துரைசாமி : நகராட்சிமன்றங்களின்கீழ் இயங்கும் உயர்நிலைப் பள்ளிகளை நிதிநிலையைப் பொறுத்து எடுத்துக் கொள்ளலாம் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். திருப்பூர் நகரமன்றத்திற்கு நிதிப் பற்றுக்குறை இருப்பதால், முதன் முதலாகத் திருப்பூர் நகரமன்றத்தின்கீழ் உள்ள உயர்நிலைப்பள்ளிகளை அரசு எடுத்துக்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதைவிட மிக மிக மோசமான நிதி நிலையிலுள்ள நகரமன்றங்களும் இருக்கின்றன. மொத்தத்திலே நிதி நிலையைப் பொறுத்து எடுத்துக்கொள்ளப்படும் உயர்நிலைப்பள்ளிகளில், திருப்பூர் நகர மன்ற உயர்நிலைப்பள்ளிகளும் அடங்கும் என்றால் அடங்கும். அடங்காது என்றால் காலம் தாழ்த்தித்தான் எடுத்துக்கொள்ள வேண்டிவரும்.

திரு. கே. என். குமாரசாமி : நகரமன்றங்கள் கல்வி வரி என்று விதிக்கும் போது, அதிலிருந்து வருகிற பணமே ஆசிரியர்களுக்குப் போதுமானதாக உள்ளது. என்றாலும், ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. அதனால் அரசாங்கமே அவற்றினை எடுத்துக்கொள்ளச் சொல்கிற கருத்து இருக்கிறது என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கல்வி நிதி என்று இருந்தாலும் நகர மன்றத்தின் பொது நிதியிலிருந்தும் கல்விக்காக அதிகம் செலவழிக்க வேண்டி வருகிறது. துவக்கப்பள்ளிக் கல்விப் பொறுப்பை நகரமன்றங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டியிருப்பதால், உயர்நிலைப் பள்ளிகளை நிர்வகிக்கின்ற பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தங்களால் இயலவில்லை என்ற கருத்தை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஏற்கனவே நான் குறிப்பிட்ட மூன்று வகைகளில் ஏதாவதொன்றை மேற்கொள்வதுபற்றி முடிவு செய்து, அதன்பேரில் நடவடிக்கை எடுக்கலாம் என்று அரசு கருதிக்கொண்டிருக்கிறது.

## குறிச்சி பேரூராட்சிப் பகுதியில் உயர்நிலைப்பள்ளி

*530 வினு.—திரு. என். மருதாசலம் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், குறிச்சி பேரூராட்சி மன்றப் பகுதியில் ஓர் உயர்நிலைப்பள்ளி தொடங்க ஏதேனும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?

[1971 ஜூலை 29

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். மருதாசலம் : குறிச்சி பேரூராட்சி முன்பே நகராட்சியாக ஆக்கப்பட்டு மறுபடியும் பேரூராட்சியாக ஆக்கப்பட்டிருக்கிறது. நகராட்சியாக இருப்பதற்கான ஜனத்தொகை அந்தப் பகுதியில் இருப்பதால் அங்கே ஒரு உயர்நிலைப் பள்ளியை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : குறிச்சி பேரூராட்சியும், அங்குள்ள மக்களும் அங்கே ஒரு உயர்நிலைப் பள்ளி வரவேண்டுமென்றால், அதற்கான இடவசதி, தளவாட வசதி ஆகியவற்றை நிபந்தனையில் கண்டுள்ளபடி அளிக்க முன்வரவேண்டும். அத்தகைய வசதிகள் அளிப்பதாகவும், உயர்நிலைப்பள்ளி அங்கே ஆரம்பிக்க வேண்டும் என்பதான கோரிக்கை எதுவும் குறிச்சி பேரூராட்சியில் இருந்து வரவில்லை. அவர்களும் அதுபோல விண்ணப்பம் கொடுத்து, விதிகளில் கண்டுள்ள வசதிகளை அளிக்க முன்வந்து, போதுமான மாணவர்களும் இருந்தால் மற்ற இடங்களில் உயர்நிலைப் பள்ளி துவங்கப்படுவதுபோல அங்கும் துவங்க ஆவன செய்யலாம்.

திரு. என். மருதாசலம் : அங்கு சாதாரணப் பள்ளிகளிலேயே இன்றையதினம் ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும் படிக்கிறார்கள். அதிகமான மாணவர்கள் தொகை அங்கே இருக்கிற காரணத்தினால் அரசு ஆரம்பிக்க ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதற்கான அடிப்படை நிபந்தனை வசதிகளைச் செய்துதர குறிச்சி பேரூராட்சியும், மக்களும் முன்வந்தால் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

## ஊராட்சிகளை இரண்டாகப் பிரித்தல்

* 531 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள் ஆட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வரதம்பட்டு பஞ்சாயத்தை வரதம்பட்டு, திருவாளப்புத்தூர் ஆக இரண்டு பஞ்சாயத்துக்களாகப் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் தற்போது அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

* 532 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள் ஆட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் சட்டமன்றப் பகுதியிலுள்ள திருச்சிற்றம்பலம் பஞ்சாயத்தினை இரண்டு பஞ்சாயத்துக்களாகப் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.



1971 ஜூலை 29]

திரு. என். கிட்டப்பா : மாயூரம் சட்டமன்றப் பகுதியில் உள்ள திருச்சிற்றம்பலம், வரதம்பட்டு ஆகிய பஞ்சாயத்துக்கள் அதிக விஸ்தீரணம் உள்ளவையாக இருப்பதால் இனியேனும் அவற்றை இரண்டிரண்டாகப் பிரிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதற்கான சில விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளுக்கு ஒத்து வந்து, மாவட்ட ஆட்சித் தலைவரும், ஊராட்சியின் சம்மதத்துடன் பரிந்துரை செய்வார்களானால் அதைப் பரிசீலிக்கலாம்.

திரு. நா. வீராசாமி : ஏற்கனவே பஞ்சாயத்துக்களின் சம்மதத்துடன் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இன்ன இன்ன பஞ்சாயத்துக்களைப் பிரிக்கவேண்டும் என்று முன்பே பரிந்துரை செய்திருக்கிறார்கள். தேர்தல் காரணத்தினால் அவை பரிசீலனைக்கு முன்பு எடுத்துக்கொள்ளப்படாவிட்டாலும் இப்போதாவது அவற்றைப் பரிசீலனை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை அனுப்பி, தேர்தல் காரணத்தினால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படாதவை இருந்தால் அவை மீண்டும் பரிசீலிக்கப்படும்.

திரு. ரா. ரா. முனுசாமி : சில ஊராட்சி ஒன்றியங்கள் பல பஞ்சாயத்துக்களை உடையனவாக இருக்கின்றன. சில பஞ்சாயத்தில் 700, 800 வாக்காளர்கள் இருக்கிறார்கள் என்றால் சிலவற்றில் 1500 பேர்களுக்கு மேல் இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. அதுவும் கேள்வியாகவும் இல்லை.

திரு. ரா. ரா. முனுசாமி : அதுபோல இருக்கக்கூடிய இடங்களில் தலைவர் எந்தக் கிராமத்தைச் சேர்ந்தவரோ அந்தக் கிராமத்திற்கு மட்டும் தண்ணீர் வசதி, விளக்கு வசதி முதலியவை செய்துகொள்கிற காரணத்தினால் நான்கைந்து கிராமங்களை ஒட்டி பஞ்சாயத்து பிரிக்காதிருப்பார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட குறுகிய நோக்கம் உடையவர்கள் தலைவராக இருக்க மக்கள் அவரைத் தேர்ந்தெடுக்கக்கூடாது. பரந்த நோக்கம் உள்ளவர்களையே மக்கள் தேர்ந்தெடுக்கவேண்டும்.

திரு. கே. என். குமாரசாமி : உதவித் தலைவர் அவர்களே, சில விதிமுறைகளை வைத்துக்கொண்டு பஞ்சாயத்து ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு யூனியனில் 40 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன; மற்றொன்றில் 30 இருக்கின்றன. 23 பஞ்சாயத்துகள் உள்ள யூனியன் கூட இருக்கிறது. இப்படி இருப்பதன் மூலம் விகிதாசார அடிப்படையில்

ஒதுக்கப்படுகிற பணம் அதிகப் பஞ்சாயத்துக்கள் உள்ள ஒன்றியங்களுக்குப் போதவில்லை. இவற்றையும் இரண்டாகப் பிரிக்க வகை செய்ய முடியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மக்கள் எண்ணிக்கை, நிதி வசதி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒன்றியங்கள் அமைக்கப்படுகிறபோது சில இடங்களில் அதிகப் பஞ்சாயத்துக்கள் வந்துவிடுகின்றன. ஒன்றியங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தலாம் என்றாலும் மத்திய அரசின் அங்கீகாரம் தேவைப்படுகிறது. இவை எல்லாம் நிர்வாகச் சீர்திருத்தக் கமிஷன் பரிந்துரையின்மேல் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது.

## குத்தாலத்தை நகராட்சியாக்கல்.

* 533 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தாலூக்கா குத்தாலம் மேஜர் பஞ்சாயத்தினை நகராட்சி மன்றமாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : குத்தாலம் பேரூராட்சி நகராட்சியாக மாறுவதற்கு என்ன தகுதியினைப் பெறவேண்டியுள்ளது என்பதைத் தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 20 ஆயிரம் மக்கள் இருக்கவேண்டும். அதன் வருமானம் 1 லட்சத்திற்கு மேல் இருக்க வேண்டும். 1969–70 கணக்குப்படி அதன் வருமானம் 1 லட்சம் இருந்தாலும், ஜனத்தொகை ஒன்பதாயிரம் சொச்சம் தான் இருக்கிறது.

## *Treatment of in-patients.*

* 534 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether this Government has any proposal to restrict the General Hospital and other big hospitals in the State for treatment of in-patients only; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) இத்திட்டம் ஆய்வு நிலையில் உள்ளது. முடிவாகத் தீர்மானிக்கப்படவில்லை.

Dr. H. V. HANDE : Is it a fact that since a number of years the Government is seized of the matter and that this General Hospital is not able to function in the manner in which the Government wanted it to function because of the extraordinary



rush of out-patients? May I know whether it is possible to expand the area or to separate the out-patients wing to a nearby hospital and see that more in-patients are admitted and concentration as far as in-patients are concerned is made? May I know wheher it will be made a research centre and whether the Government have any such programme? May I know the details from the Hon. Minister?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, புற நோயாளிகள் அதிகமாக சென்னை பொது மருத்துவ மனைக்கு வருகிறார்கள் என்பது உண்மை என்றாலும், உள் நோயாளிகளும் அதிகமான அளவுக்குத்தான் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். அதன் காரணமாக இடநெருக்கடி இருக்கிறது என்பதும் உண்மை ஆகும்.

வந்து போகிறவர்களுக்கும் சௌகர்யமாக, உள்ளே உள்ளவர்களுக்கும் வசதியாக, இன்னும் நல்லமுறையில் ஆராய்ச்சிகள் எல்லாம் நடைபெறுவதற்கு வசதியாக பெரிபரல்—துணை மருத்துவ மனை ஏற்படுத்த வேண்டுமென்ற கருத்து கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. திட்ட அளவில் இதற்கு ரூ. 3 லட்சத்தில் கட்டடம் கட்டுவதா, ரூ. 5 லட்சத்தில் கட்டடம் கட்டுவதா என்பது எல்லாம் பரிசீலிக்கப்படுகிறபோது என்னைப் பொறுத்தவரையில் ரூ. 10 லட்சமாவது ஒதுக்கப்பட்டு கட்டடம் கட்டி, இதர வசதிகளை அளித்தால்தான் அது சாத்தியமாக இருக்கும் என்று தெரிவித்திருக்கிறேன். அதுபற்றிய பரிசீலனை முடிந்த பிறகுதான் முடிவு எடுக்க முடியும்.

Thiru R. PONNAPPA NADAR : Formerly there was a proposal to shift the central prison and convert it into an out-patient ward. Is that proposal now alive?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மத்திய சிறைச்சாலையை மாற்றுவது என்பதும் ஒரு பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. அந்த இடத்தை உடனடியாக மருத்துவ மனைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்பது அவ்வளவு திட்டவட்டமான நன்மையாக இருக்குமென்று நான் நம்பவில்லை. அதன் ஒரு பகுதியைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பது ஆலோசனையில் இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, அவுட் பேஷன்ட்களுக்குத் தனியாக ஆஸ்பத்திரிகள் அமைக்கப்படும் என்று மானியத்திலே பதில் சொல்லும்போது அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது வசதியாக இருக்கக்கூடிய கலெக்டர் ஆபீசுக்கு அருகில் இம்மாதிரியான துணை ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நடைபெறுகிற சோதனை சென்னையைப்பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது மதுரையைப் பற்றியது. This proposal is based

only upon the consideration of out-patients in the Government General Hospital, Stanley Hospital, Kilpauk Medical College Hospital and the Government Royapettah Hospital.

THIRU K. T. K. THANGAMANI : The original question states—

"Whether this Government has any proposal to restrict the General Hospital and other *big hospitals* in the State ............"

So, the Madurai Hospital is also covered.

THE HON. THIRU K. ANBAZHAGAN : But the proposal is not with regard to the Madurai Hospital.

DR. H. V. HANDE : Sir, have the Government made any survey with regard to the pattern of out-patients coming to the General Hospital in the morning when there is extraordinary rush and whether they have got any programme to see that the out-patients are treated throughout the day so that the load in the morning may be reduced? Also if the Government are going to separate it and increase the number of in-paients as also research facilities, how exactly the Government are going to do it? Have the Government got any preliminary idea about it?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, "ப்ரிலிமெனரி ஐடியா" தாராளமாக இருக்கிறது. அங்கே வருகிற நோயாளிகளுக்கு நாள் முழுவதும் மருத்துவம் செய்வது என்பது ஒன்றும் கடினம் இல்லை. ஆனால் நாள் முழுவதும் மருத்துவம் செய்தாலும் ஒரு நோயாளி குறைந்தது இரண்டு மணி நேரம் அல்லது மூன்று மணி நேரமாவது காத்திருக்க வேண்டும். நோயாளிகளை அப்படிக் காத்திருக்கச் செய்வது, நோயாளிகளுக்குத் தொல்லை என்கிற காரணத்தாலும், இந்த மருத்துவ மனையிலே எவ்வளவு வசதி செய்தாலும், காத்திருக்கிற நேரத்தைக் குறைப்பதற்கு ஒரு திட்டமாக இத்திட்டத்தை நான் ஏற்றுக்கொண்டிருக்கிறேன். இந்த நோக்கம் நிறைவேற ஒரு தாலூகாவுக்கு ஒரு மருத்துவமனை பத்து லட்சம் ரூபாய் செலவு செய்து கட்டடத்தை ஏற்படுத்தினால் அவுட்–பேஷண்ட்களுக்கு உடனடியாக சிகிச்சை வழங்குவது மட்டும் அல்ல, எமர்ஜன்சி கேஸ், காஷுவாலிட்டி கேஸ்களை படுக்கையில் சேர்த்து மருத்துவம் பார்ப்பதற்கும் பத்து படுக்கைகளை ஏற்படுத்த வேண்டும். ரத்தப் பரிசோதனை, சிறுநீர் பரிசோதனை, எக்ஸ்ரே பரிசோதனை இவைகள் எல்லாம் ஏற்படுத்தப் பட வேண்டும். கட்டடமே பத்து லட்சம் ரூபாய் ஆகும் என்று எண்ணிக்கொண்டிருக்கிறேன். அதற்குமேல் மற்றச் செலவுகள் இருக்கின்றன. சென்னை போன்ற நகரங்களில் பெருஞ்செல்வர்கள் தங்களுடைய குடும்பப் பெயர் நிலைக்கத் தாராளமாக நன்கொடை கொடுத்தால், அவர்களுடைய குடும்பப் பெயராலேயே அந்த மருத்துவமனைகளை நடத்தலாம் என்று நான் மட்டும் ஆசைப் படுகிறேன்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, சென்னையிலே உள்ள பெரிய மருத்துவமனை மிகவும் நல்லமுறையிலே நடக்கின்ற காரணத்தால் அதிக நோயாளிகள் வருகிறார்கள். இடம் போத





வில்லை, விரிவுபடுத்த வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது இருக்கின்ற இடத்திலே பல அடுக்கு மாடிகள் கட்டினால் போதுமான இடவசதி கிடைக்கும். மேலும், பணம் கொடுத்துச் சேருவதற்கும் பலர் தயாராக இருக்கிறார்கள். நூற்றுக்கணக்கானவர்களுக்கு இடம் கிடைக்காத நிலை இருக்கிறது. ஆகவே, பல அடுக்கு மாடிகள் கட்டி அபிவிருத்தி செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இப்போதே அங்கு நாற்பது லட்சம், ஐம்பது லட்சம் ரூபாய் செலவில் பல அடுக்கு மாடிக் கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. எவ்வளவுக்கெவ்வளவு உயரமாகக் கட்டிக் கொண்டு போனாலும், பரவலாக இருப்பதில் ஏற்படும் நன்மை இதில் ஏற்படாது.

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கிற சென்னை பெரிய மருத்துவமனை நகரத்தின் மத்திய பகுதியில் இருக்கிறது. காற்று அனைத்தும் கெட்டுவிடுகிறது. "ஏர் பொல்யூட்" ஆகி "க்ரானிக் டிசீஸ்" உண்டாகிறது. ஆகவே, தொத்து நோயாளிகளைத் தனியாக ஒரு மருத்துவமனையில் சேர்க்கும் ஏற்பாட்டை அரசாங்கம் செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இப்போதே கூட கடுமையான நோய்களுக்கென்று தனித்தனி ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. காச நோயாளிகளுக்குத் தாம்பரத்திலே டி.பி. ஆஸ்பத்திரி ஒன்று இயங்கிக்கொண்டிருக்கிறது: அதேபோல கடுமையான தொத்துநோய்களுக்கு "இன்ஃபெக்ஷியஸ் டீஸீஸஸ் ஹாஸ்பிடல்" தண்டையார்பேட்டையில் ஒன்று இயங்கிக் கொண்டிருக்கிறது. வேறு சில நோய்களுக்கு வேறு சிறப்பு மருத்துவமனையில் சிகிச்சை செய்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. உடனடியாக நோயாளிகளை வேறு இடங்களுக்கு அனுப்புவது என்பது பல நேரங்களில் முடிவதில்லை.

## செங்கிப்பட்டி காசநோய் மருத்துவமனை

* 535 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1969–70-ம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்திலுள்ள செங்கிப் பட்டி காசநோய் மருத்துவமனைக்கு அரசாங்கம் அளித்துள்ள மானியத்தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ரூ. 44,000 (ரூபாய் நாற்பத்து நான்கு ஆயிரம்).

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, செங்கிப்பட்டி காசநோய் மருத்துவமனை இந்தியத் துணைக்கண்டத்திலேயே சிறப்பு வாய்ந்த காசநோய் மருத்துவமனை என்று கூறப்படுகிறது. ஆகவே, மேலும் அதிகமான படுக்கை வசதிகள் செய்து கொடுப்பதற்கு அரசு நிதி உதவி செய்வதுபற்றி ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இப்போது செங்கிப்பட்டியிலே இருக்கிற அந்த மருத்துவமனையில் போதுமான படுக்கைகள் இருக்கின்றன. படுக்கை இல்லையென்ற பெரிய குறை காண்பதற்கு அவசியம் இல்லை. மாறாக, நிர்வாகச் செலவுகளுக்கு நிலங்கள் மூலம் வருகின்ற வருமானத்தில் குறைகள் ஏற்பட்டிருக்கின்றன என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் குறைபாட்டை நீக்கினால் மருத்துவமனை நன்றாக இயங்கும். மேலும் காச நோயாளிகளை நீண்ட நாட்களுக்குப் படுக்கையில் படுக்க வைத்து சிகிச்சை அளிக்காமல், சில வகையான ஆபரேஷன்கள் மூலம்—சர்ஜிகல் ஆபரேஷன்—சிகிச்சை அளித்தால் நோய் குணமாகிறது. அப்படி சர்ஜிகல் ஆபரேஷன் சிகிச்சை ஏற்படுமானால் அதற்கான முயற்சிகள் மருத்துவமனையின் நிர்வாகக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, இந்தக் காச நோய் மருத்துவமனை நிதி உதவியை மாநில அரசாங்கத்திடமிருந்து பெறுகிறதா? அல்லது, மத்திய அரசாங்கத்திடமிருந்து பெறுகிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, என்னிடத்தில் உள்ள விவரப்படி மாநில அரசிடமிருந்துதான் நிதி உதவி பெறுகிறது. மேலும், தனியார்கள் சிலர் நன்கொடையும் அளித்திருக்கிறார்கள். சிலர் நன்கொடையாக நிலம், சொத்துக்கள் முதலியவை எழுதி வைத்திருக்கிறார்கள். அவற்றிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தின் மூலமும் இந்த மருத்துவமனை இயங்கிக் கொண்டிருக்கிறது.

*Provision of gratuity to Industrial workers*

*536 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the Government received representation from Madurai on 4th April 1971 in respect of a legislation providing for gratuity to Industrial workers; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, 4-4-1971-ல் பல தொழிற்சங்கங்களின் சார்பில், கேரளத்தில் இருப்பதுபோல கிராஜுவிடி சட்டம் தமிழகத்தில் கொண்டுவர வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, சென்னையில் 10-‑-1970 அன்று நடந்த தென் மண்டலத் தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டில் பணிக்கொடை நிதி ஒன்றை ஏற்படுத்த மத்திய சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட வேண்டும் என்று இந்த அரசு கருத்து தெரிவித்தது. அப்போதுதான் நிறுவனத்தின் நிதிநிலை இடர்பாடுகள் காரணமாக தொழிலாளர் ஒருவருக்குக் கொடுக்கப்பட வேண்டிய பணிக்கொடை கொடுக்கப்படாமல் இருக்கும் நிலை உருவாகாது. கேரள அரசு அளித்து வருகின்றதைப்போல் தமிழக அரசு தருவதற்குப் பதிலாக, தனியாக ஒரு சட்டம் கொண்டுவரலாம் என்று எண்ணி மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். விரைவில் பதில் வந்தால் அந்தச் சட்டத்தை உருவாக்கி நடைமுறைக்குக் கொண்டுவர எண்ணியிருக்கிறோம்.





திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு நாமே ஒரு மசோதாவைத் தயாரித்து அனுப்பியிருக்கிறோம் என்று நினைக்கிறேன். அவர்கள் அதனை எத்தனை நாட்களுக்குள்ளாக அனுப்புவார்கள்? கன்கரண்ட் சாங்ஷன் வராமல் இருந்தால் சீக்கிரம் அனுப்ப முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அண்மையில் சென்னைக்கு வந்திருந்த மத்திய அரசின் தொழிலாளர் நல அமைச்சர் அவர்களிடமும் இதைப்பற்றி வலியுறுத்தியிருக்கிறேன். அண்மையில் நடைபெறவிருக்கும் மாநிலங்களின் தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டில் கவனிப்பதாகக் கூறினார்கள். அந்த மாநாட்டில் வலியுறுத்திச் சட்டத்தைக் கொண்டுவர முயற்சி எடுத்துக்கொள்வேன்.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, இப்போதே பல தொழிற்சாலைகளில் கிராஜுவிடி திட்டம் இருக்கிறது. சில இடங்களில் இல்லாமல் இருக்கிறது. இல்லாத இடங்களில் விரைவிலே கொண்டுவர முயற்சிகளை இந்த அரசு எடுக்குமா? எல்லாத் தொழிற்சாலைகளிலும் கொண்டுவர என்ன முயற்சியை மேற்கொள்ளும்?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, கிராஜுவிடி சட்டத்தை எவ்வளவு விரைவில் கொண்டுவர முடியுமோ அவ்வளவு விரைவில் கொண்டுவர அரசு முயற்சி எடுத்துக் கொள்ளும்.

DR. H. V. HANDE : A number of industries are run by State Government, Central Government and quasi-Government and they all come within the purview of State subject. May I know from the Hon. Minister whether arrangements had been made in these industries run by Central Government, State Government and quasi-Government bodies to see that gratuity is paid to all workers?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, சட்டத்தை நிறைவேற்றும்போது கனம் உறுப்பினர் டாக்டர் ஹாண்டேயின் கருத்து பரிசீலனை செய்யப்படும்.

*Pearl fishing*

*537 Q.—THIRU N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether the Government has taken steps to improve pearl fishing; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) மண்டபம், மத்திய கடல் மீன்பிடிப்பு ஆராய்ச்சி நிலையத்தின் உடனுழைப்புடன் முத்து எடுத்தல், முத்து வளர்த்தல் குறித்த ஆராய்ச்சிப் பணிகளை மாநில மீனளத் துறை மேற்கொள்ளக் கருதியுள்ளது.

(இ) மன்னார் வளைகுடாவில் முத்து கிடைக்கும் இடங்களின் ஆய்வை மும்முரப்படுத்துதலும், முத்து வளர்த்தல் சோதனைகளை முனைப்படுத்துதலும் இந்த ஆராய்ச்சிப் பணியின் நோக்கமாகும். தொடக்கத்தில் இத்திட்டம் ஐந்தாண்டுக்கால அளவினதாகும். அக்கால அளவில் முத்துச் சிப்பியின் சூழ்நிலை இயலையும், உயிரியலையும், வாழ்க்கையையும் குறித்த தகவல்களைச் சேகரிப்பதும், முத்து வளர்த்தல் உற்பத்தியின் தொழில் நுட்பங்களை மேம்படுத்துதலும் முதன்மையான நோக்கமாகும். முதல் நிலையான ஐந்தாண்டுக் கால அளவுக்குப் பின்னர், செலவைச் சிக்கனப்படுத்துவதற்கான வழிவகைகளைக் கண்டறிவதற்காகவும், மேம்பட்ட தரமான முத்துக்களைத் தயாரிக்க நவீன தொழில் நுட்ப வசதிகளை மேலும் மேம்படுத்துவதற்காகவும் செயல்படுத்தப்படும் இத்திட்டம் தொழில் முனைப்பு ஆராய்ச்சித் திட்டமாகும்.

திரு. ஆர். இராமலிங்கம்: தலைவர் அவர்களே, முத்துச் சிப்பியினுடைய வளர்ச்சி மூன்று ஆண்டுகள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. முத்துக் குளித்து பத்து ஆண்டுகள் ஆகியும் போதுமான அளவுக்கு முத்துச் சிப்பிகள் வளரவில்லை. முத்துச் சிப்பிகள் கடலுக்கடியில் அழிக்கப்படுவதாகச் சொல்கிறார்களே அது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, முன்னாலே 1961 வரையிலே முத்து எடுக்கப்பட்டது. அதற்கும் முன்னாலே 26 ஆண்டுகளுக்கு முன்னாலேதான் முத்து எடுக்கப்பட்டு இருக்கிறது. ஆண்டுதோறும் முத்து எடுக்கக் கூடியதல்ல; தொடர்ந்தும் எடுக்கக்கூடியதுமல்ல. அதனுடைய வளர்ச்சியைப் பார்த்து எப்பொழுது எடுக்கமுடியும் என்று பார்த்துச் செய்யப்படுகிறது. அதற்காக மத்திய கடல் மீன்பிடிப்பு ஆராய்ச்சி நிலையத்தின் மூலம் மாநில அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் முதலீடு செய்து திட்டங்களை நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, "பாண்டிய நாடு முத்துடைத்து" என்று சொல்வார்கள். நீண்ட நெடுங்காலமாக தூத்துக்குடியிலும், மன்னார் வளைகுடாவிலும் முத்து எடுக்கப்படவில்லை; கடைசியாக எடுத்தது 1961-ஆம் வருடத்திலேதான் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் அடுத்து எந்த வருடத்திலே மீண்டும் முத்து எடுக்கப்படும் என்று ஆராய்ச்சியின் மூலம் அறியப்பட்டு இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் இந்தச் சபைக்குத் தெரிவிப்பார்களா?





மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: முத்து பாங்க் ஆய்வின் மூலம் 1973-ஆம் ஆண்டிலே முத்துக் குளிப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, முத்துக் குளிக்கின்ற தொழிலுக்கு இப்பொழுது அதிகப் பேர்கள் வருவதில்லை என்று சொல்கிறார்கள். எனவே அரசாங்கம், "முத்துக் குளிக்க வாரியளா" என்ற பெயரிலே திரைப்படம் தயாரித்து வெளியிட முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அப்படி யாரையும் வருந்தியழைக்க வேண்டியதில்லை. "முத்து" என்றால் தாமாகவே வருவார்கள். அரசாங்கம் யாரையும் அழைப்பதாக உத்தேசமில்லை.

THIRU B. VENKATASWAMY: May I know from the Hon. Minister the amount of pearls exported to other countries in the last pearl fishing?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறும்பொழுது, முத்துக் குளிப்பது தொடர்ந்து நடைபெறுகின்ற ஒரு தொழில் அல்ல என்று குறிப்பிட்டார்கள். தமிழகத்திலே நீண்ட நெடிய கடற்கரை இருக்கிறது. எந்த எந்தப் பகுதிகளிலே முத்துக் குளிக்கும் பகுதிகளை ஏற்படுத்த முடியும் என்று கண்டு அறிவதற்கு முயற்சிகள் செய்யப்படுமா? அப்படிக் கண்டறிந்த பல இடங்களில் முத்துக்களை வளர்ப்பதற்காக ஏற்பாடு செய்து தொடர்ந்து வருடம் பூராவும் ஆண்டுதோறும் முத்துக் குளிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடுகள் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: சார், அதைத்தான் நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். ஆண்டுதோறும் முத்துக் குளிக்கின்ற வகையிலே முத்துக்கள் வளர்ச்சி அடைவது கிடையாது. முத்துக்கள் வளர்ச்சி அடைந்திருக்கின்றனவா, எந்தெந்த இடத்தில் அவை இருக்கின்றன, எப்பொழுது எடுக்க முடியும் என்பதை எல்லாம் தீர்மானிக்க முத்துப்பார் ஆய்வுகள் தூத்துக்குடி மீனளத் துறை உதவி இயக்குநராலும் (முத்து—சங்கு) அவருடைய தொழில் நுட்பப் பணியாளர்களாலும் அவ்வப்போது நடத்தப்படுகின்றன. மேலும், மொத்தம் 15 லட்சத்து 56 ஆயிரத்து 400 ரூபாய் செலவில் நம்முடைய அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் சேர்ந்து ஆராய்ச்சிகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. ஆராய்ச்சிக்குப் பிறகு முத்து பாங்குகள் எங்கெங்கு இருக்கின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன; அந்த வகையிலேதான் தூத்துக்குடியிலும், மன்னார்வளைகுடா பகுதியிலும் இருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. 1973-ஆம் ஆண்டிலே முத்துக்கள் வளர்ச்சி

யடைந்திருக்கும் என்ற முறையிலே அப்பொழுது முத்து எடுக்க முடியும் என்று ஆய்வாளர்கள் கூறியிருக்கிறார்கள். எனவே 1973-லே தான் நாம் முத்துக்கள் எடுக்கமுடியும்.

திரு. செ. கந்தப்பன்: தலைவர் அவர்களே, எல்லாக் கடல்களிலும் முத்துகள் விளைந்து விடுவதில்லை. உலகத்தின் சில பகுதிகளிலேதான் முத்துக்கள் விளைகின்றன. நமது பகுதியிலே விளைகின்ற முத்துக்கள் சிறப்புமிக்க முத்துக்களாக விளைகின்றன என்று சொல்லப்படுகின்றது. எனவே அதிகமாக இதிலே கவனம் செலுத்த நம்முடைய அரசு முன்வருமா? மேலும், ஜப்பான் போன்ற நாடுகளிலே செயற்கை முத்துக்கள் தயாரிப்பதற்காக முயற்சிகள் தீவிரமாக எடுக்கப்படுவதாக அறிகிறோம். எனவே நம்முடைய தமிழக அரசும் அந்த முறையிலே முயற்சிகள் எடுக்கவும் முத்துக்கள் விளைவிற்குத் தமிழகத்திலே ஒரு சிறப்பான இடத்தை வைத்துக்கொண்டிருக்கவும் நம்முடைய அமைச்சர் அவர்கள் முயற்சிகளை மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இது ஒரு நல்ல யோசனை. அதைப்பற்றி யோசனை செய்யலாம்.

திரு. நா. வீராசாமி: முத்துக்குளிப்பதை அமைச்சர் அவர்கள் பார்த்திருக்கிறார்களா? அதிலேயிருக்கின்ற கஷ்டங்கள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: முத்துக் குளிப்பதை நான் பார்த்ததில்லை:

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவர் அவர்களே, முத்துக் குளிப்பவர்களுக்கு நல்ல நீர்மூழ்கி உடைகள் அளிப்பதற்கு அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறதா? முத்துக் குளிப்பவர்களுக்கு இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டுவர அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இது 1973-ஆம் ஆண்டிலே கேட்கவேண்டிய கேள்வி.

திரு. ஏ. சி. நரசிம்மன்: இதுவரையிலே கிடைத்த முத்துக்களிலே அதிகமான விலைக்குப் போன முத்து என்ன விலையாக இருக்கும்? தமிழ்நாட்டிலே அது இருக்கிறதா? அல்லது வெளிநாட்டிற்கு ஏற்றுமதியாகிவிட்டதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அரசியலிலே நிறைய விலைமதிக்கமுடியாத முத்துக்கள் இருக்கின்றன. கடந்த முறையில் கிடைத்த முத்துக்களைப்பற்றிய தகவல்கள் இல்லை.

*Rice Mills lying idle in Thanjavur district*

* 538 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether a number of rice mills are lying idle in Thanjavur district as on May 1970;



(b) if so, the details htereof; and

(c) the reasons therefor?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) 1970 மே திங்கள் அன்றுள்ளபடி தஞ்சாவூர் மாவட்டத்தில் 42 அரிசி ஆலைகள் முடங்கிக் கிடந்தன.

(இ) வட்டவாரியான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

நாகப்பட்டினம்—12.

கும்பகோணம்—11.

நன்னிலம்—9.

சீர்காழி—7.

பட்டுக்கோட்டை—2.

மாயூரம்—1.

2. இந்த ஆலைகள் வேலையின்றி இருந்ததற்கான காரணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(1) இயந்திரங்கள் பழுதுற்று இருந்தன—22.

(2) நிதி இடர்ப்பாடுகள்—15.

(3) வியாபாரத்தில் ஆதாயமின்மை—4.

(4) உரிமதாரர் இறந்தமை—1.

திரு. ச. சங்குமுத்து தேவர்: தலைவர் அவர்களே, பொதுவாக தமிழகத்தில் நீண்டகாலமாக நல்லமுறையிலே ஓடிக்கொண்டிருந்த அனேக அரிசியாலைகள் எல்லாம் சில வருடங்களாகச் சரியாக இயங்கவில்லையென்பது அரசுக்குத் தெரியுமா? அதோடு, அரிசியாலைகளையெல்லாம் அரசே எடுத்துக் கொள்வதற்கு உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அரிசி ஆலைகளை அரசாங்கம் நடத்துகின்ற உத்தேசம் இல்லை. நீண்டகாலமாக அரிசியாலைகள் ஓடவில்லை என்று அவர்கள் சொல்வதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அப்படி ஓடாமலிருந்தால் தமிழ்நாட்டிலே அரிசி கிடைத்திருக்குமா என்பதை உறுப்பினர் அவர்களே அறிவார்கள்.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, பல அரிசி ஆலைகள் மூடிக் கிடப்பதாகவும் அதற்கான காரணங்களையும் அமைச்சரவர்கள் கூறினார்கள். இப்படி ஆலைகள் மூடிக்கிடப்பதிலே வருவாய் இல்லை என்று 4 ஆலைகளைப்பற்றிக் கூறினார்கள். ஒரு ஆலை உருவாக்கப்பட்டால் எவ்வளவு மூலப்பொருள்கள் கிடைக்கும் என்று கணக்கிட்டு ஆலைகள் உருவாக்கப்படுகின்றனவா? அல்லது ஆலைகள் வேண்டுமென்பதற்காக உருவாக்கப்படுகின்றனவா?

[1971 ஜூலை 29

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இதெல்லாம் தனியார் ஆலைகள். அரசாங்கத்திற்குச் சம்பந்தமில்லை. ஆலைகளுக்கு உரிமம் வழங்குவதில் கட்டுப்பாடு இருந்தது, இவ்வளவு உற்பத்தியாக வேண்டுமென்று கணக்கிட்டு வழங்கி வந்தார்கள். இந்தக் கட்டுப்பாட்டைத் தளர்த்தியிருப்பதால் அவரவர்கள் ஆலைகள் போடுவதற்கு உரிமை பெற்றிருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, பல ஆலைகள் மூடப்பட்டிருப்பதால் இனிமேல் ரைஸ் மில்களுக்கு லைசென்ஸ் இல்லை என்ற உத்தரவு பிறப்பிக்கப்படுமா, மாட்டாதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அப்படிப்பட்ட உத்தேசமில்லை.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, இப்படி அரிசி ஆலைகள் மூடப்பட்டுக்கிடப்பதைப்பற்றிப் பதில் சொன்னார்கள் அமைச்சரவர்கள். லைசென்ஸ் கொடுப்பதன்மூலம் இப்படிப் பெற்றுக்கொண்டே ஆலைகளைக் கட்டிக்கொண்டே போவது, மூடிக்கொண்டே போவதுமாகயிருப்பதால் அரசாங்கம் ஏன் லைசென்ஸைக் கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே இப்படி உரிமம் வழங்குவது மாவட்ட ஆட்சி மன்றத் தலைவருக்குத்தான் இருக்கிறது. அவர்கள் கண்காணித்து உரிமம் வழங்குகிறார்கள்.

## அரிசி ஆலைகள் அமைக்க உரிமம்

* 539 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வட ஆற்காடு, செங்கற்பட்டு, தருமபுரி மாவட்ட எல்லைகளை ஒட்டி 15 மைல் தூரத்தில் அரிசி மில்கள் அமைக்க அனுமதி வாங்க வேண்டியதில்லை என அரசு ஆணை வழங்கியுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இந்த ஏற்பாட்டை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இது மாநிலம் முழுவதும் கொண்டுவர இயலாத ஒன்றாகும். வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்ட ஓரங்களில் 15 மைல் பெல்ட் ஏரியாவாக வைத்து நாம் கொடுக்கும் உரிமங்களைத் தளர்த்தியிருக்கிறோம். ஆனால், கன்னியாகுமரி, மதுரை, கோவை இதுபோன்ற எல்லையோரங்களில் ஆலைகளுக்கு உரிமங்களை வழங்குவதை அரசாங்கமே வைத்திருக்கிறது. 15 மைல்களுக்கு உட்பட்ட இடங்களில் அனுமதி வழங்க வேண்டுமென்றால் அரசாங்கத்திற்கு மனுச் செய்துகொள்ளவேண்டும். இந்தக் கட்டுப்பாட்டைத் தளர்த்துவதாக



1971 ஜூலை 29]

இல்லை. அதற்குக் காரணம், நிறைய ஆலைகளுக்கு உரிமங்கள் வழங்குவதினால் கள்ளக்கடத்தலுக்கு ஏதுவாக இருக்கும். எனவே அந்தக் கட்டுப்பாட்டை அரசாங்கமே வைத்திருக்கிறது.

திரு. இ. எஸ். தியாகராசன்: தலைவரவர்களே, இந்த உத்தரவால் ஏற்கனவேயுள்ள அரிசி ஆலைகள் பாதிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நிச்சயமாகப் பாதிக்கப்படாது.

திரு. ஏ. ஆர். சுப்பையா: தலைவரவர்களே, 15 மைல் என்பது குறைக்கப்படுமா? அப்படிக் குறைக்க வேண்டுமென்று திருநெல்வேலி போன்ற மாவட்டங்களிலிருந்து கோரிக்கைகள் வந்திருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: குறைக்கும் உத்தேசம் தற்சமயம் இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் கூறும்பொழுது கன்னியாகுமரி, கோவை போன்ற எல்லையோரப் பகுதிகளில் புதிதாக லைசென்ஸ் வழங்க அரசாங்கத்தின் அனுமதி வேண்டுமென்று சொன்னார்கள். இந்தக் கடத்தலைத் தடுக்கத் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு, இந்தப் பகுதியிலேயிருந்து தகுந்த அபேட்சைகள் வந்தால் அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அரசாங்கம் வைத்திருக்கிறது என்றால் கொடுக்க முடியாது என்று பொருள் அல்ல. மனுக்கள் வந்தால் பரிசீலித்து, எது தேவையோ அதற்கேற்றபடி செய்யலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, ரைஸ்மில்லிங் இன்டஸ்ட்ரி ஆக்ட் ஒரு சென்ட்ரல் ஆக்ட், மாகாணத்தில் சில இடங்களில் அனுமதி வழங்காமல் இருப்பதாக வழக்குகள் நீதிமன்றத்தில் இருக்கின்றனவா? அவைபற்றி அரசுக்குத் ஏதாவது தெரியுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும், வழக்குமன்றத்திலிருந்தாலும் மாகாணம் முழுவதும் அமல் ஆக்குவதற்குத் தமிழக அரசுக்கு உரிமை இருக்கிறது, அந்த உரிமையைத் தளர்த்தியிருக்கிறோம். இவற்றில் கனம் அங்கத்தினர் போன்றவர்கள் அரசாங்கத்தோடு ஒத்துழைத்தால் நன்றாக இருக்கும்.

திரு. ஏ. சி. நரசிம்மன்: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் பெல்ட் ஏரியா, ஆகவே கொடுக்க முடியாது என்று சொன்னார்கள். அதேபோல் கோயம்புத்தூருக்கும் அரசு கொடுத்தால் சௌகரியமாக இருக்கும், எனவே அங்கே பெல்ட் ஏரியா என்று வைத்துக் கட்டுப்பாடு இருக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, ஏற்கனவே நான் சொன்ன பதிலைக் கனம் அங்கத்தினர் அவர்கள் சரியாகக் கேட்கவில்லை என்று நினைக்கிறேன். கோவை, கன்னியாகுமரி, மதுரை என்று 3 மாவட்டங்களையும் சேர்த்துச் சொன்னேன்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, வடார்க்காடு மாவட்டம் ஓரளவிற்கு நெல் அதிகமாக, தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தபடியாக, விளைகிற மாவட்டம். அந்த மாவட்டத்தின் 15 மைல் எல்லை ஓரங்களை அதாவது சித்தூர், ஆற்காட்டில் இருக்கும் 15 மைல் களைச் சுற்றி ஆற்காடும் இருக்கிறது. அந்த ஆற்காட்டுக்கும் இந்த உரிமங்களை வழங்குவதில் தகராறு செய்கிறார்கள் ஆந்திரா அருகே இருப்பதால். அதை அரசாங்கம் பரிசீலனை செய்து ஆற்காட்டிற்கு உரிமங்களை வழங்குவதில் எந்தவிதத் தொல்லையும் இல்லாமல் செய்வார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, முதலில் சொன்ன பதிலைக் கனம் அங்கத்தினர் அவர்கள் கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்ட எல்லைகளை ஒட்டி 15 மைல் தூரப் பகுதியை, பெல்ட் ஏரியாவைத் தளர்த்தி, மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர் உரிமங்களை வழங்க உத்தரவு போட்டிருக்கிறது.

*Jobless Engineers*

* 478 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether this Government have any scheme to utilise the services of jobless Engineers for irrigation and power schemes ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

Dr. H. V. HANDE : May I know from the Hon. Minister whether the statement that has been placed here consists of the persons employed during the past several years or the persons who are now in employment or whether the Hon. Minister will be able to give us the number of persons who are employed as per my question during the last one or two years, especially because of the unemployment problem, whether this was announced by the Chief Minister in the year 1969 during the month of November—340 engineers—160 for irrigation schemes and 180 for power schemes—would be appointed for the 10 divisions? And if so, the programme divisionwar and the appointments for these divisions?

@ 336–337-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.





The Hon. Thiru S. J. SADIQ PASHA : The appointment was in pursuance of G.O. No. 1546, dated 16th October 1970. The Government of Tamil Nadu in G.O. No. 1546, dated 16th October 1970 have sanctioned a new scheme for the training of unemployed technical personnel. Under the above scheme 60 Degree holders, 1,000 Diploma holders and 800 Craftsmen would be entertained as apprentices in various departments of the Government for a period of two years. Under the above Scheme, the Tamil Nadu Electricity Board will be taking 495 apprentices as detailed below :

Graduates—145.

Diploma holders—150.

Craftsmen trainees—200.

This is in pursuance of the orders issued in the year 1970 and that is to tide over the unemployment problem.

Dr. H. V. HANDE : How far has the scheme been implemented? Out of these persons how many have actually been appointed during the one year under the various Heads?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, விவர அறிக்கையில் குறிப்பிட்டு இருப்பதைப்போல் நியமிக்கப்பட்ட ஜாப்லெஸ் என்ஜினியர்ஸ், டிப்ளமா ஹோல்டர்ஸ் வேலைக்குச் சேர்ந்துகொண்டு இருக்கிறார்கள்.

வட ஆற்காடு மாவட்டத்துக்குத் தனி பொதுப்பணிக்கோட்டம்

* 479 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வட ஆற்காடு மாவட்டத்தில் ஏரி, குளங்களைத் தோண்டுவதற்குத் தனி பொதுப்பணிப் பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

அழகாபுரி அருகில் குடவனாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம்

* 480 வினா—திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டத்தில், வேடசந்தூர் வட்டத்தைச் சேர்ந்த அழகாபுரி அருகில் குடவனாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க ஏதேனும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) சுமாராக ரூ. 180 லட்சம்.

[1971 ஜூலை 29

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, குடவனாற்றில் சர்வே செய்த இடத்தைப் பார்த்தால் வேடசந்தூருக்கும் அந்த வசதியைச் செய்து தந்திருந்தால் அதிகமான நிலத்திற்கு உதவிகரமாக இருக்கும். ஆனால் இப்பொழுது சர்வே செய்ததால் வேடசந்தூர் அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்களே, எனவே முதலிலே செய்த சர்வேயின் அடிப்படையிலே பின் தங்கியிருக்கும் வேடசந்தூர் பகுதிக்கும் அது உதவிகரமாகச் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்தத் திட்டம் இப்பொழுது பரிசிலனையில் இருந்து வருகிறது. அழகாபுரி கிராமத்தின் அருகே அமைப்பதற்கான ஒரு திட்டத்தில் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. இந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு, அதனுடைய விபரங்கள் முடிவு செய்யப்படும்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் எண்ணத்தைக் கவனத்தில் கொள்ளலாம்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவரவர்களே, அரவக்குறிச்சியில் ஓடும் குடவனாற்றில் அணை கட்டுவதாலே அரவக்குறிச்சியில் ஏற்கனவே உள்ள பாசன வசதிகள் குறைந்துவிடும் என்பதை மனத்தில் வைத்து, நீர்த்தேக்கத்திலே ஒரு பகுதியை அரவக்குறிச்சி தொகுதிக்குத் கொடுத்து உதவ திட்டமிடப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, திட்டம் இப்பொழுது இறுதி வடிவத்தை அடையவில்லை. அதனால் இப்பொழுது முடிவான பதிலைச் சொல்ல முடியவில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லிய கருத்து மனத்திலே கொள்ளப்படும்.

## நாராயணக் காவேரியிலிருந்து பிரியும் வரத்துக்கால்வாய்கள்

* 481 வினா—திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அருப்புக்கோட்டைத் தாலுக்கா, புரசலூர் கண்மாய்க்கு நாராயணக் காவேரியில் இருந்து பிரிந்துவரும் வரத்துக் கால்வாயை வெட்டித் தூர் எடுத்து நாராயணக் காவேரியில் இருந்து தண்ணீர் வர உடனடியாக ஏற்பாடு செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி: தலைவரவர்களே, நாராயணக் காவேரியில் அணை கட்டப்படாமல் வரத்துக் கால்வாயைமட்டும் வெட்டியிருக்கிறதா? அங்கே அணைகட்டும் திட்டமிருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை, தனியாகக் கேள்வி போடவும்.



1971 ஜூலை 29]

* 482 வினா—திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் ஜில்லா, அருப்புக்கோட்டை தாலுக்கா, வாகைக்குளம் கண்மாய்க்கு நாராயணக் காவேரியில் இருந்து வரும் வரத்துக்கால்வாயை (Supply channel) உடனடியாக வெட்டிச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(இ) ஆம் எனில், அவ்வேலை எப்போது துவங்கும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

## கடைநிலை ஊழியர்களுக்குக் குடியிருப்பு

* 483 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் (Government Estate) கடைநிலை ஊழியர்களுக்கு மேலும் வீடு கட்டித்தர செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை, ஐயா.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, கடைநிலை ஊழியர்களுக்கு அரசாங்க எஸ்டேட்டில் போதிய அளவில் வீடுகள் கட்டவில்லை என்றாலும் வீட்டுவசதி வாரியம் கட்டும் வீடுகள் கணிசமான எண்ணிக்கையில் ஒதுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியை வீட்டு வசதி அமைச்சருக்குப் போடலாம்.

திரு. நா. வீராசாமி: கடைநிலை ஊழியர்களுக்கு வீடு கட்டும் திட்டம் இல்லையென்று சொன்னார்கள். இப்போது கூவம் ஆற்றங்கரை ஓரத்தில் அவர்களுக்கு இடத்தை ஒதுக்கி அந்த ஊழியர்கள் வீடு கட்டிக் கொள்ள அரசாங்கம் வழி வகுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் கடைநிலை ஊழியர்களுக்கு வீடு கட்டப்படுமா என்ற மூலக் கேள்விக்கு இல்லையென்று பதில் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதுபோல் கூவம் ஆற்றங்கரையில் இப்போது வீடு கட்டும் திட்டம் ஒன்றும் இல்லை.

திரு. எம். சுரேந்திரன்: கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் கடைநிலை ஊழியர்களுக்கு வீடு கட்டும் திட்டம் இல்லையென்று சொன்னார்கள். இப்போது எவ்வளவு கடைநிலை ஊழியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது? எவ்வளவு கடைநிலை ஊழியர்களுக்கு வீடு இல்லை? அதுபற்றி விவரம் தயாரிக்கப்பட்டிருக்கிறதா? எப்போது அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் நிறைவேறும்?

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, குடவனாற்றில் சர்வே செய்த இடத்தைப் பார்த்தால் வேடசந்தூருக்கும் அந்த வசதியைச் செய்து தந்திருந்தால் அதிகமான நிலத்திற்கு உதவிகரமாக இருக்கும். ஆனால் இப்பொழுது சர்வே செய்ததால் வேடசந்தூர் அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்களே, எனவே முதலிலே செய்த சர்வேயின் அடிப்படையிலே பின் தங்கியிருக்கும் வேடசந்தூர் பகுதிக்கும் அது உதவிகரமாகச் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்தத் திட்டம் இப்பொழுது பரிசீலனையில் இருந்து வருகிறது. அழகாபுரி கிராமத்தின் அருகே அமைப்பதற்கான ஒரு திட்டத்தில் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. இந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு, அதனுடைய சிபாரிசுகள் முடிவு செய்யப்படும்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் எண்ணத்தைக் கவனத்தில் கொள்ளலாம்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவரவர்களே, அரவக்குறிச்சியில் ஓடும் குடவனாற்றில் அணை கட்டுவதாலே அரவக்குறிச்சியில் ஏற்கனவே உள்ள பாசன வசதிகள் குறைந்துவிடும் என்பதை மனத்தில் வைத்து, நீர்த்தேக்கத்திலே ஒரு பகுதியை அரவக்குறிச்சி தொகுதிக்குத் கொடுத்து உதவ திட்டமிடப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, திட்டம் இப்பொழுது இறுதி வடிவத்தை அடையவில்லை. அதனால் இப்பொழுது முடிவான பதிலைச் சொல்ல முடியவில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லிய கருத்து மனத்திலே கொள்ளப்படும்.

## நாராயணக் காவேரியிலிருந்து பிரியும் வரத்துக்கால்வாய்கள்

* 481 வினா—திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அருப்புக்கோட்டைத் தாலுக்கா, புரசலூர் கண்மாய்க்கு நாராயணக் காவேரியில் இருந்து பிரிந்துவரும் வரத்துக் கால்வாயை வெட்டித் தூர் எடுத்து நாராயணக் காவேரியில் இருந்து தண்ணீர் வர உடனடியாக ஏற்பாடு செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி: தலைவரவர்களே, நாராயணக் காவேரியில் அணை கட்டப்படாமல் வரத்துக் கால்வாயைமட்டும் வெட்டியிருக்கிறதா? அங்கே அணைகட்டும் திட்டமிருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை, தனியாகக் கேள்வி போடவும்.

* 482 வினா—திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் ஜில்லா, அருப்புக்கோட்டை தாலுக்கா, வாகைக்குளம் கண்மாய்க்கு நாராயணக் காவேரியில் இருந்து வரும் வரத்துக்கால்வாயை (Supply channel) உடனடியாக வெட்டிச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(இ) ஆம் எனில், அவ்வேலை எப்போது துவங்கும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

## கடைநிலை ஊழியர்களுக்குக் குடியிருப்பு

* 483 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் (Government Estate) கடைநிலை ஊழியர்களுக்கு மேலும் வீடு கட்டித்தர செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை, ஐயா.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, கடைநிலை ஊழியர்களுக்கு அரசாங்க எஸ்டேட்டில் போதிய அளவில் வீடுகள் கட்டவில்லை என்றாலும் வீட்டுவசதி வாரியம் கட்டும் வீடுகள் கணிசமான எண்ணிக்கையில் ஒதுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியை வீட்டு வசதி அமைச்சருக்குப் போடலாம்.

திரு. நா. வீராசாமி: கடைநிலை ஊழியர்களுக்கு வீடு கட்டும் திட்டம் இல்லையென்று சொன்னார்கள். இப்போது கூவம் ஆற்றங்கரை ஓரத்தில் அவர்களுக்கு இடத்தை ஒதுக்கி அந்த ஊழியர்கள் வீடு கட்டிக் கொள்ள அரசாங்கம் வழி வகுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் கடைநிலை ஊழியர்களுக்கு வீடு கட்டப்படுமா என்ற மூலக் கேள்விக்கு இல்லையென்று பதில் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதுபோல் கூவம் ஆற்றங்கரையில் இப்போது வீடு கட்டும் திட்டம் ஒன்றும் இல்லை.

திரு. எம். சுரேந்திரன்: கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் கடைநிலை ஊழியர்களுக்கு வீடு கட்டும் திட்டம் இல்லையென்று சொன்னார்கள். இப்போது எவ்வளவு கடைநிலை ஊழியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது? எவ்வளவு கடைநிலை ஊழியர்களுக்கு வீடு இல்லை? அதுபற்றி விவரம் தயாரிக்கப்பட்டிருக்கிறதா? எப்போது அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் நிறைவேறும்?

[1971 ஜூலை 29

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கடைநிலை ஊழியர்களுக்கு கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்ற பட்டியல் இருக்கிறது. ஆனால் அந்த விவரங்கள் தற்போது என்னிடத்தில் இல்லை. ஆனால் அவர்களுக்கு வேறு இடத்தில் வீடுகள் கட்டிக் கொடுக்கலாம் என்பது பற்றி ஜாயின்ட் சொர்விஸ் கவுன்சிலில் பேசப்பட்டு முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. இ. எஸ். தியாகராசன் : கவர்ன்மென்ட் எஸ்டேட்டில் டெலிவிஷன் அமைப்பது எந்த நிலையில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : டெலிவிஷன் அமைக்க இடம் ஒதுக்கித் தரப்பட்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : கவர்ன்மென்ட் எஸ்டேட்டில் மேலும், மேலும் கட்டடங்களைக் கட்டுவதால் அதன் அழகு குறைந்து வருகிறது. மவுண்ட் ரோடு அருகில் ஓப்பன் ஸ்பேஸ் தேவைப்படுகிறது என்ற காரணத்தால் இனிமேல் கவர்ன்மென்ட் எஸ்டேட்டில் எந்தக் கட்டடமும் கட்டப்படாது என்ற முடிவுக்கு அரசு வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படி ஒரு இறுதியான முடிவை இப்போது செய்வது சாத்தியமல்ல.

திரு. கே. ஏ. வகாப் : கவர்ன்மென்ட் எஸ்டேட்டில் அழகு கெடாத முறையில் அழகான வீடுகளைக் கட்டி வெளியூரிலிருந்து வந்து தங்குகின்ற சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு வாடகைக்குக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வெளியூர் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாது உள்ளூர் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் வீடு கட்டும் திட்டம்பற்றிப் பரிசீலித்து முடிவு செய்யப்படும்.

திரு. என். கணபதி : கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் உள்ள குவார்ட்டர்ஸ் பழைய பெயர்களிலேயே இன்னும் வழங்கி வருகிறது. குறிப்பாக ஸ்டேபிள் சூப்பரின்டென்டென்ட் குவார்ட்டர்ஸ் என்ற கீழ்த்தரமான பெயர்களில் இருக்கிறது. அதை மாற்றியமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்போதே நம்முடைய தமிழ்ப் பெயர்களைப் பல இடங்களில் வைத்திருக்கிறார்கள்.

திரு. ஏ. எம். இராஜா : கவர்ன்மென்ட் எஸ்டேட்டில் ஒரு சினிமா தியேட்டர் கட்டினால் நல்ல வருமானம் கிடைக்கும். இது பற்றி அரசு யோசிக்குமா?



1971 ஜூலை 29]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே சில்ட்ரன் தியேட்டர் இருந்து வருகிறது. அதைப் புதுப்பிக்கும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது. 15, 20 லட்சம் ரூபாய் வரை செலவுசெய்து புதுப்பித்து ஏர் கண்டிஷன் செய்யும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, will the Government contemplate to construct Ministers' residences in the Government Estate ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படி ஒரு எண்ணம் இல்லை. அமைச்சர்களுக்கு இப்போது இருக்கும் வீடுகளே போதுமானவை.

திரு. கே. என். குமாரசாமி : கவர்ன்மென்ட் எஸ்டேட்டில் இருக்கும் எம்.எல்.ஏ. ஹாஸ்டல் சில இடங்களில் சுவர்கள் வெடிப்பு ஏற்பட்டு அபாய நிலையில் இருக்கிறது. விழுகின்ற நிலையில் இருக்கும் அதைப்பாதுகாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : விழுகின்ற நிலையில் இருப்பதாக எந்தவிதமான புகாரும் கிடையாது. இதுபோன்ற பீதியான கேள்விகளைக் கேட்பதன்மூலம் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பீதியைக் கிளப்ப வேண்டாம். மூலக் கேள்வி கடைநிலை ஊழியர்களுக்கு கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் வீடுகள் கட்டிக் கொடுப்பது பற்றியாகும்.

திரு. நா. வீராசாமி : கவர்ன்மென்ட் எஸ்டேட்டுக்குள் ஹாஸ்டல் இருக்கிறது. சபாநாயகர் இல்லம் (கூவம் ஹவுஸ்) இருக்கிறது. ஹாஸ்டலுக்குத் தொடர்புடைய துணைச் சபாநாயகருக்கு அங்கு வீடு கட்டிக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : துணைச் சபாநாயகர்மீது காட்டுகின்ற அனுதாபத்திற்காகப் பாராட்டுத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## உதவிப் பொறியாளர் முதலானோருக்குக் குடியிருப்புகள்

* 484 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொதுப்பணித்துறையில் பணியாற்றும் உதவிப் பொறியாளர், மேற்பார்வையாளர், நீர்ப்பாசன குமாஸ்தா, நீர்க் காவலர்கள் ஆகியோர்களுக்கு அரசே குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்க முயற்சிகள் மேற்கொண்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) : பொதுப்பணித்துறையின் மேற்பார்வையாளர்களுக்கும், உதவிப் பொறியாளர்களுக்கும், குடியிருப்பு வழங்குவதில் ஒரு திட்டவட்டமான ஏற்பாடு இதுவரையில் பின்பற்றியதில்லை. [illegible]

போது தனிப்பட்ட செயற்குறிப்புகள் அங்கீகரிக்கப்பட்டன. பழைய அணைக்கட்டு முறைகளுக்கும் திட்டங்களுக்கும் சார்ந்த நீர்ப்பாசன எழுத்தாளர்களுக்கும், காவலாளர்களுக்கும் குடியிருப்புகள் ஏற்கனவே தரப்பட்டன. புதிய அணைக்கட்டுத் திட்டங்களில் வழங்குவதற்காகப் பொருள்களை வைக்கக் கட்டப்படும் கட்டடங்கள் பின்னர் மேற்படி பணியாளர்களுக்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்பட்டுக் குடியிருப்புக்குக் கொடுக்கப்படுகிறது.

பொதுப்பணித்துறை ஊழியர்களுக்குக் குடியிருப்பு வசதி படிப்படியாகச் செய்ய ஒரு திட்டம் வகுக்க அரசு சிந்தித்து வருகிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, will the Government think of sanctioning at least loans to the Assistant Engineers and others leniently and quickly for housing purposes?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே அரசு அவர்களுக்குக் வீடு கட்டக் கடன் கொடுத்து வருகிறது. அவர்கள் விண்ணப்பங்களைக் குறித்த காலத்தில் அனுப்பி நிதிவசதிகள் இருக்குமானால் பணம் தரப்படும்.

திரு. க. உரொ. எட்மண்ட் : திருநெல்வேலியிலுள்ள சுற்றுலா மாளிகையிலுள்ள காவலர்களுக்கு வீடுகள் இல்லை. அங்கே போதுமான இடம் இருக்கிறது. அந்தக் காவலர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனிக் கேள்வி போடவும். அதுபோன்ற பிரச்சினை இருந்து வருகிறது.

*National Development Council Meeting*

* 523 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether during N.D.C. meeting at New Delhi on 26th September 1969, the Tamil Nadu Government sought two powers for the State, namely, the power for approval of Industrial licences and distribution of Foreign Exchange;

(b) whether the N.D.C. agreed to this request of Tamil Nadu Government; and

(c) whether the State Government has worked out any plan for the mode of implementing these two proposals?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) & (இ) தொழிலில் பின் தங்கிய பகுதிகளைத் தெரிந்தெடுப்பதற்காகத் தேசிய வளர்ச்சி மன்றத்தின் கூட்டம் கூட்டப்பட்டது. கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அரசுச் சார்பில் பேசுகையில் உரிம அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டுமென்றும் அந்நியச் செலவாணிக்கு அனுமதி அளிக்கும் அதிகாரங்கள் மாநில அரசுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் பிறவற்றிற்கிடையே வலியுறுத்தினார். தேசிய வளர்ச்சி மன்றம் 26—9—1969 அன்று நடத்திய கூட்டத்தில் இச் செயற்குறிப்புகள் ஆலோசிக்கப்படவில்லை.



(உ) இந்தச் செயற்குறிப்புகளுக்கு மாநிலத் தொழில் வளர்ச்சி குழுவைச் சேர்ந்த துணைக்குழு ஒன்று உருவான திட்ட மொன்றைத் தயாரித்து வருகிறது.

DR. H. V. HANDE : Sir, may I know whether in this particular meeting of the National Development Council, the Hon. Minister who represented the Government also pointed out that the Finance Commission had let us down badly and if so, what was the opinion of the National Development Council? Also, whether any other matters were discussed there? Also as the Hon. Chief Minister has just now stated that proposals are being worked out; may I know the details about it?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிய விரும்புவதைப்போல் இதைத் தவிர வேறுபல நிதித் துறை விஷயங்களையும் தமிழக அரசின் சார்பில் கலந்து கொண்ட கல்வி அமைச்சர் அவர்களும், அந்நாள் நிதியமைச்சர் அவர்களும் அந்தக் கூட்டத்தில் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். அவைமீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதற்கான விவரங்கள் அதிகம் இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : மேற்கண்ட தமிழ்நாட்டினுடைய நியாயமான கோரிக்கையை மற்ற மாநிலங்கள் ஏதேனும் ஆதரித்து இருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : குறிப்பாக எடுத்துச் சொல்லப்பட்டது, முற்போக்கு மாநிலங்களிலும் பின்தங்கிய பகுதிகள் இருக்கின்றன, அவற்றையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில் எடுத்துச் சொல்லப்பட்டது. அதற்குப் பிறகு நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலும், டெல்லியில் நடைபெற்றபோது, தமிழக அரசின் சார்பில் நான் கலந்துகொண்டு அதே கருத்தை வலியுறுத்தினேன். அதற்குப் பிறகு மத்திய அரசின் சார்பிலே, பிற்போக்காக இருக்கும் மாநிலங்கள் மாத்திரமல்லாமல் முன்னேற்றம் அடைந்துள்ள மாநிலங்களிலும் ஓரிரு மாவட்டங்களைப் பின்தங்கிய மாவட்டங்களாக எடுத்துக் கொள்வதற்கு ஒப்புதல் அளித்தார்கள். அந்த வகையில் தமிழ்நாட்டில் 10 தாலுகாக்கள் அந்தப் பட்டியலில் இணைக்கப்பட்டிருக்கின்றன அதற்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கி இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : மத்திய அரசாங்கம் இண்டஸ்ட்ஸ்க்கு லைசென்ஸ் கொடுக்கும் நிர்ப்பந்தத்தில் இருக்கும் காரணத்தால் நாம் அப்ளிகேஷன் போட்டு ஒரு வருஷம், இரண்டு வருஷங்களுக்குள்ளாக உண்டு அல்லது இல்லை என்ற முடிவைத் தெரிவிக்க வேண்டுமென்பதைப்பற்றிய கருத்தை என்.டி.சி. கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதைவிடக் கொஞ்சம் தீவிரமாகவே உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்று கூறியிருக்கிறோம். அந்தப் பொறுப்பை மத்திய அரசு வைத்துக் கொள்ளாமல்

மாநில அரசுக்கு வரவேண்டுமென்று தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் வலியுறுத்திக் கூறியிருக்கிறோம். ராஜமன்னார் குழுவின்—மத்திய மாநில உறவுகள் ஆய்வுக் குழுவின் பரிவுரைகளிலும் இதைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

1951-ம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சி—முறைப்படுத்தல்) சட்டம் ரத்து செய்யப்பட வேண்டும்; அதற்குப் பதிலாக, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அல்லது அனைத்திந்தியத் தன்மை வாய்ந்த அல்லது ரூ. 100 கோடிக்கு மேற்பட்ட மூலதனமுள்ள தொழில்களை மைய அரசு நிர்வகிக்க வகைசெய்யும் சட்டம் இயற்றப்பட வேண்டும்; உரிமம் வழங்குதல் சம்பந்தப்பட்ட முறைகள் முழுவதும் நீக்கப்பட வேண்டும்; தனியார் துறையிலோ அல்லது கூட்டுறவுத் துறையிலோ மாநிலத்திற்குப் புதிய தொழில்களைத் துவங்குவதற்கு உரிமம் வழங்கும் அதிகாரம் மாநில அரசுக்கு இருக்க வேண்டும்; அந்நிய நாட்டு ஒத்துழைப்புடனோ அல்லது அந்த ஒத்துழைப்பு இல்லாமலோ பொதுத்துறையில் தொழில் வகைகளைத் துவக்கி நடத்த மாநில அரசுக்கு. அதிகாரம் இருக்க வேண்டும்; மாநில அரசால் உரிமம் வழங்கப்பட்ட அல்லது துவக்கப்பட்ட தொழில் ஒன்றுக்கு அந்நியச் செலாவணி தேவைப்பட்டால், திட்ட ஆடிக் குழுவைக் கலந்துகொண்டு, நிதி ஆணைக் குழு செய்யும் பரிந்துரையின்மீது ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கப்படவிருக்கும் ஒரு மொத்த மானியம்மூலம் வகை செய்யப்பட வேண்டும் என்ற இந்தப் பரிந்துரைகளின் அடிப்படையிலே உரிமங்கள் வழங்கும் பொறுப்பு மத்திய அரசுக்கு இருக்கக்கூடாது, மாநில அரசுக்குத்தான் இருக்க வேண்டுமென்பதை வலியுறுத்தி வருகிறோம்.

திரு. பெ. மலைச்சாமி: மாநிலங்கள் தங்களைத் தாமே ஆண்டு கொள்வதற்குத் தகுதியில்லை என்ற காரணத்தினால்தான் தொழில்களுக்கு உரிமங்கள் வழங்குவது, அன்னியச் செலாவணிபற்றிய கொள்கைகளை வைத்திருப்பது என்று மத்திய அரசு கருதுகிறதா? அதுபற்றி நம் அரசு என்ன கருதுகிறது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாநிலங்களுக்குத் தகுதியிருக்கிறதோ இல்லையோ, அதுபற்றி மத்திய அரசு ஆராய்கிறதோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் மத்திய அரசு அதிக பொறுப்புச் சுமைகளை வைத்துக்கொண்டிருக்கிறது, அவை பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதுதான் நம் வாதமாகும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஒரு கோடி ரூபாய் மூலதனத்தில் தொழில் அமைப்பது சம்பந்தமாக, ஒரு கோடி, அதற்கு மேலாக உள்ளவற்றிற்கு அதிகாரம் வழங்கப்படும் என்று சமீபத்தில் ஒரு குறிப்பு வந்திருக்கிறது என்று தெரிகிறது. அப்படியானால் ஒரு கோடி ரூபாய் அல்லது அதற்கு மேல் இருக்கக்கூடிய, அன்னியச் செலாவணி இருக்கிறது என்ற காரணத்தினால் நமக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற பத்து தாலுகாக்கள் அல்லது மற்றத் தொழில்களுக்கு இடையூறில்லாத முறையில் அன்னியச் செலாவணி கண்டிப்பாகக் கொடுக்கவேண்டுமென்று நம் அரசு மத்திய அரசை வற்புறுத்துமா?



மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: ராஜமன்னார் குழு அறிக்கையில் "இன்டஸ்ட்ரீஸ் ஆஃப் ஆல் இந்தியா இம்பார்ட்டன்ஸ்"; அகில இந்திய அடிப்படையில் தேவைப்படுகிற சில தொழில்களுக்கு எல்லாம் மத்திய அரசு உரிமம் வழங்கலாம் என்று கூறியிருக்கிறார்கள். அப்படியானால் எந்தெந்தத் தொழில்கள் அகில இந்திய முக்கியத்துவம் வாய்ந்தவை என்று வரையறை செய்யப்பட்டிருக்கிறது? அப்படி வரையறை செய்யப்பட்டவை நம் மாநிலத்தில் எவ்வளவு இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அனைத்திந்தியத் தன்மை வாய்ந்தவை என்று குறிப்பிடும்போது இந்தியப் பாதுகாப்பு போன்றவைகள் அதில் அடங்கும். ஆகவே அவைகளன்னியில் மற்றத் தொழில்கள் ஒவ்வொரு மாநிலத்திற்கும் அளிக்கப்படவேண்டும் என்று எடுத்துச்சொல்லி வருகிறோம். அதைப்பற்றி விரிவான விவாதம் வரும்போது மத்திய அரசுக்குத் தமிழக அரசு எடுத்துச் சொல்லும்.

திரு. எம். தேவராசன்: மத்திய அரசிடம் கொடுத்துள்ள அதிகாரங்களைப் பரவலாக்க அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்த இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ராஜமன்னார் குழு அறிக்கை இந்த மன்றத்தில் விவாதிக்கப்பட்ட பிறகு, அதுபற்றி எதிர்பார்க்கப்படுகிற கருத்துக்கள் எல்லாம் வந்த பிறகு ராஜமன்னார் குழுவின் பரிந்துரைகளை அல்லது அந்த அடிப்படையில் நாம் எடுக்கிற முடிவுகளை நிறைவேற்றுவதற்கு அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டிய அவசியம் ஏற்படுமானால் அது குறித்து நிச்சயமாக இந்த அரசு மத்திய அரசை வலியுறுத்தும்.

DR. H. V. HANDE: The Hon. Chief Minister said that a number of things were discussed. May I know whether even during last budget discussion the Chief Minister said that the Finance Commission had let us down? May I know whether this particular point was pin-pointed and what explanation did they offer? What was their reaction? Did other States also support our demand? Were we able to convass support from other States? If so, what are the details? So far as foreign exchange is concerned did the Minister explain the procedure, the *modus operandi*, as to how foreign exchange should be allotted? May I know all the details?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நிதி ஆணைக் குழு நம்முடைய தமிழகத்திற்கு நியாயமாகத் தரவேண்டியவைகளைத் தரவில்லை என்பதை நாம் ஒவ்வொரு கூட்டத்திலும் எடுத்துச் சொல்லி வருகிறோம். அந்த மாநாட்டில் எடுத்துச் சொல்வது மட்டுமல்லாமல், நாம் பிரதமர் அவர்களிடமும், மத்திய அரசு நிதி அமைச்சர் அவர்களைச் சந்திக்கிற நேரத்திலும் பலமுறை எடுத்துக் கூறியிருக்கிறோம். விளக்கக் கடிதங்கள் மூலமும் நம் நியாயவாதங்களை எடுத்துக்

[1971 ஜூலை 29

காட்டியும் உடனடியாக மாநில அரசு கவனிக்கப்பட வேண்டு மென்றும் எடுத்துக் கூறியிருக்கிறோம். பலமுறை நடைபெற்ற வாதங்களிலும் நம்மிடம் நியாயமான வாதங்கள் இருப்பதை உணர்ந்து ஆவன செய்வதாக வாக்களித்திருக்கிறார்கள். கூடுமான வரையில் செய்தும் வருகிறார்கள்.

THIRU K. S. KOTHANDARAMIAH: The Hon. Chief Minister mentioned about ten taluks. May I know the names of those taluks ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இராமநாதபுரம், முதுகுளத் தூர், சிவகங்கை, பரமக்குடி, திருவாடானை, திருப்பத்தூர், மேலூர், திருமயம், ஆலங்குடி, குளத்தூர் ஆகிய வட்டங்கள் இதில் அடங்கும்.

திரு. கு. காமாட்சி: மிகப் பெரிய தொழிற்சாலைக்குப் பக்கத்தில் துணைப் பொருள்களைத் தயாரிக்கிற ஆன்ஸிலரி இன்டஸ்ட்ரீஸ், இவைகளை ஆரம்பிக்க முதலில் நம் மாநில அரசு அனுமதி அளித்து விட்டு அதற்குப் பிறகு அதற்கான அனுமதியை மத்திய அரசு வழங்கு வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எல்லாவற்றையும் சேர்த்துத் தான் மத்திய அரசோடு போராடிக் கொண்டிருக்கிறோம்.

THIRU B. VENKATASAMY: May I know whether Dharmapuri district has been included in the backward area list?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தர்மபுரி தொழில் துறையில் சேர்க்கப்படாவிட்டாலும் அது பின்தங்கிய மாவட்டங்களில் ஒன்று என்று எடுத்துக் கூறப்பட்டது. இப்போது இராமநாதபுரத்திற்கும், தர்மபுரி மாவட்டத்திற்கும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கிட்டத் தட்ட இரண்டு கோடி ரூபாய் அளவிற்கு மத்திய அரசு சார்பாகப் பணம் ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெறுகின்றன.

THIRU K. M. SUBRAMANIAM: Licensing policy is evolved so that there will not be redundancy of industries and all the resources will be channelled to various parts of India. If licensing is decentralised, will it not result in a sort of chaotic spread of industries in India, particularly highly capitalised industries ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஏற்கனவே ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது குறிப்பிட்டேன். அகில இந்திய ரீதியில் மிக முக்கியமானவைகள், இந்தியாவின் பாதுகாப்பு போன்ற முக்கியத்துவம் வாய்ந்த தொழில்களை எல்லாம் அகில இந்திய ரீதியில் வைத்துக்கொள்வதுபற்றி நமக்குக் கவலை இல்லை. ஆனால் இந்த உரிமங்கள் வழங்குகிற முறையில் ஏற்படுகிற காலதாமதம் காரணமாக, வளரவேண்டிய தொழில்கள் வேகமாக வளர முடி யாமல் போகின்றன. ஆகவே தொழில்களுக்கு உரிமங்கள் வழங்கு வதை மாநில அரசு வைத்துக்கொண்டிருப்பதால் எந்தவிதமான கஷ்டமும் ஏற்பட்டு விடாது என்பதுதான் நம் கொள்கையாகும். இதைத் தொழில்துறையில் உள்ள அனைவரும் ஒப்புக்கொண்டிருக் கிறார்கள்.



1971 ஜூலை 29]

திரு. கா. காளிமுத்து: மத்திய அரசு அனுமதி இல்லாமல் மாநில அரசே உரிமங்கள் வழங்கக்கூடிய தொழில்கள் எவை எவை?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அந்தப் பட்டியல்களை எல்லாம் தொழில் அமைச்சர் அவர்களைக் கேட்டு அவர்கள்மூலம் தெரிந்து கொள்ளலாம்.

திரு. கோவை செழியன்: தமிழ் மாநிலத்தில் பெரிய தொழிற் சாலைகளை அமைப்பதற்கு நிறைய ரிசோர்ஸஸ், ரா மெட்டீரியல்ஸ் இருக்கின்றன. அதேபோல் ஏற்றுமதிப்பொருள்கள். அதிகமாக நம் நாட்டிலே ஃபாரின் எக்சேஞ்ச் சம்பாதிக்கிறோம். அப்படி யிருந்தும் லைசென்ஸ் தருவதற்கு மத்திய அரசு மறுத்தால், "ஐயா எங்கண் விட்டு விடுங்கள்", தனியாகத் தமிழ்நாடு பிரிந்து போய் விடும்" என்று மத்திய அரசைக் கேட்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படியெல்லாம் கேட்கிற உத்தேசம் எதுவும் இல்லை. "விட்டு விடுங்கள், ஐயா", "எங்களை விட்டுவிடுங்கள் என்று கேட்குமா?" என்று கேட்டார்கள். நாம் அப்படிப் பிரிவினை கேட்பதை ஏற்கனவே விட்டு விட்டிருக்கிறோம். ஆகவே மத்திய அரசோடு நியாயமான முறையில் நாம் வாதாடி, போராடி மாநிலங்களுக்கான உரிமைகளைப் பெறுவதுதான் உகந்த வழி என்று இந்த அரசு கருதுகிறது.

திரு. மு. இரத்தினசபாபதி: முதல் அமைச்சர் அவர்கள் தொழில் துறையில் பின்தங்கிய வட்டங்களைப்பற்றிய குறிப்பை அறிவிக்கும் போது நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த விளாத்திக்குளம் தாலூகா எந்தத் தொழில் வளமும் இல்லாத ஒரு பகுதியாக இருப்பதால், எந்தவித வளர்ச்சியும் இல்லாத தாலூகாவாக இருப்பதால், அதையும் அந்தப் பின்தங்கிய தாலூகாக்களில் சேர்ப்பதற்கு உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: 15 வட்டங்களை நாம் எழுதி யனுப்பினோம். அதில் விடப்பட்டவை, கோவில்பட்டி, ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர், நான்குநேரி, விளாத்திக்குளம் தாலூகாக்களாகும். இந்த ஐந்தையும் மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை.

திரு. நா. வீராசாமி: உரிமங்கள் வழங்குவதுபற்றித் தேசிய மன்றக் கூட்டத்தில் பேசியும் இதுவரை மத்திய அரசு எந்தவிதமான முடிவும் எடுக்கவில்லை. ஒரு காலத்தில் நாம் சொன்னதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த மத்திய அரசு இப்போது கேளாக்காதின ராக இருப்பது ஏன்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எப்போதும், நாம் சொன்னதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தார்கள் என்பது தவறு. இப்போது நாம் சொல்வதைக் கேட்கவில்லை என்று சொல் வதும் தவறு.

[1971 ஜூலை 29

திரு. எம். சுரேந்திரன்: முதல் அமைச்சர் அவர்கள் கூறும் போது முற்பட்ட மாநிலங்கள், பிற்பட்ட மாநிலங்கள் என்று சொன்ஞர்கள். முற்பட்ட மாநிலங்கள், பிற்பட்ட மாநிலங்கள் என்பதற்கு என்ன அளவுகோல் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது? மக்கள் தொகையைக் கொண்டா? அல்லது பட்ஜட் வருமானத்தைக் கொண்டு தேர்ந்தெடுக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தனி நபருடைய வருமானத்தையும், ஆங்காங்குள்ள வாழ்க்கைத்தரத்தையும் வைத்துத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. தொழில் வளர்ச்சியுருத இடங்கள், வளர்ச்சியுறக் கூடிய வசதி வாய்ப்பு உள்ள இடங்களுக்கு இந்தச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன.

திரு. சொ. காவேரிமணியம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த இரண்டு பெரும் கருத்துக்களைத் தென் மாநிலங்களிலிருந்து சென்ற மாநில முதலமைச்சர்கள் அதைப்பற்றி வலியுறுத்தி இருக்கிறார்களா, அவ்வாறு வலியுறுத்தி இருந்தால் அவர்களையும் சேர்த்துக்கொண்டு இந்த கருத்துக்களை மாநில அரசு மத்திய அரசிடத்தில் வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நாம் கோரிவருகிற மாநில சுயாட்சி என்ற கருத்தை வேண்டுமானால், மொத்தமாக மற்ற மாநிலங்களின் முதலமைச்சர்கள் இப்போது ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும், காலப்போக்கில் ஏற்றுக்கொள்வார்கள் என்றாலும், மாநிலங்களுக்கு அதிகமாக அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும், இது போன்ற உரிமங்கள் அளிக்கின்ற அந்தப் பொறுப்புகள் மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்ற கருத்துக்கண் மற்ற மாநில முதலமைச்சர்கள் பெரும்பாலும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

Mr. DEPUTY SPEAKER: The time allotted for question hour is over. So, I extend the question hour for some time more with the leave of the House.

*Arrests at Madras*

*524 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether a number of arrests were made in Madras City on or about 27th April 1971; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) 27—4—1971 அன்று சென்னை மாநகரில் 65 பேர் கைது செய்யப்பட்டனர்.

(இ) கைதிகள்பற்றிய விவரம் வருமாறு:—

தடுப்புக்காவல் கைதிகள்—43.

மதுவிலக்குக் குற்றக் கைதிகள்—10.

கலவரத்தில் ஈடுபட்டுக் கைதானவர்கள்—7.



1971 ஜூலை 29]

பணக் கையாடல் கைதி—1.

திருட முயற்சி செய்த குற்றத்திற்காகக் கைதானவர்—1.

திருட்டுக் குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டவர்—1.

தாக்கிக் காயம் ஏற்படுத்தியதற்காகக் கைது செய்யப்பட்டவர்கள்—2.

*Amount allotted to employees of Standard Motors Factory for Pongal festival*

*525 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the total amount allotted to the employees of Standard Motors Factory for the Pongal Festival;

(b) whether the entire amount has been distributed; and

(c) if not, the reason therefor?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ரூ. 1 லட்சம்.

(இ) 1,845 தொழிலாளர்களுக்கு இதுவரையில் ரூ. 92,250 பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

(உ) எஞ்சியுள்ள தொழிலாளர்கள் தங்கள் அடையாள வில்லைகளுடனும் இன்னார் எனத் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டும் இதுவரை பணம் பெற வரவில்லை.

Dr. H. V. HANDE: I put this question because I received some complaints from a few persons that they have not got the amount. May I know from the Hon. Chief Minister whether any efforts have been made to trace these persons, whether it is not a fact that still a large number of persons have not been able to get into the factory and whether the Hon. Chief Minister is going to provide some arrangement for these persons who are to be employed hereafterwards and who had not yet got employment directly and whether any arrangement is going to be made to protect their position?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, இதிலே நான் ஏற்கெனவே கூறிய பதிலின் தொடர்ச்சியாக ரூ. 7,750 அவர்கள் இன்னும் பெறவில்லை. அது இப்போது வங்கியிலே வைக்கப்பட்டு, அவர்கள் பெற்றுக்கொள்வதற்கு எப்போது வந்தாலும் தருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அப்படிப் பெற்றுக்கொள்ளாமல் இருப்பவர்கள் 145 பேர் இருப்பார்கள். அந்தத் தொழிற்சாலையில் இன்னும் பலர் வேலைக்கு வைக்கப்படவில்லை என்ற நிலைமையை அரசு ஆராய்ந்து ஆவன செய்து வருகிறது. பேச்சு வார்த்தை நடந்து வருகிறது. ஆனால் பேச்சு வார்த்தைக்கு அந்தக் கம்பெனி உரிமையாளர்கள் உடன்பட்டு வராததால் அதிலே தயக்கம் ஏற்பட்டு வருகிறது. சட்டசபை நிகழ்ச்சிகள் இருந்து வருவதால் அதிலே ஈடுபட்டு, அந்தக் காரியங்களைக் கவனிக்க முடியாத நிலைமை இருக்கிறது. சட்டசபை நிகழ்ச்சிகள் முடிந்த பிறகு அதிலே கவனம் செலுத்தலாம் என்று இருக்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த பாக்டரி திறக்கப்பட்டது முக்கியமான விஷயம்தான். இன்னும் பலர் வேலையில்லாமல் இருக்கும் நிலையில் அவர்களுக்கு வேலை கிடைக்கும் வரையிலும் இம்மாதிரியான உதவிகள் அரசு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அந்தக் கஷ்டம் இல்லாமல் அவர்களுக்கு விரைவில் வேலை ஏற்பாடு செய்ய அரசு தீவிர முயற்சிகளை எடுத்துக் கொள்ளத் தீர்மானித்திருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: துணைத் தலைவரவர்களே, இப்படி பொங்கலுக்குக் கொடுக்கப்பட்ட பணம் பல தொழிலாளர்கள் பெறவில்லை என்று முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இது பற்றிச் செய்தித் தாளில் விளம்பரம் கொடுத்து, கடைசித் தேதி இன்ன தேதி, அதற்குள் பணம் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று அரசு விளம்பரம் கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: லட்ச ரூபாயிலே கிட்டத்தட்ட ரூ. 92,250 கொடுக்கப்பட்டாகிவிட்டது. பல தொழிலாளர்கள் பெறவில்லை என்று அம்மையார் கூறுவது தவறானதாகும். இன்னும் வாங்கிக் கொள்ளவேண்டியவர்கள் 100–145 பேர் தான் இருக்கிறார்கள். அதற்காக விளம்பரம் போட்டு, கடைசி தேதி இது என்று அறிவிக்க முடியாது.

DR. H. V. HANDE: While we are happy that the Chief Minister has announced that serious efforts are being made to re-employ these workers, may I know, as far as the Government are concerned, whether a list of all the workers to be employed has been taken and whether that list has been sent to the management, whether it is a fact that the management has requested the Government to see that some amount is given as subsidy or loan, so that the factory is put on a working basis ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவர்கள் அதற்காகத் தேவைப்படுகிறது என்று சொல்லுகிற தொகை எவ்வளவு அதிகமானது, அரசு அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியுமா என்பதைக் கவனிக்க வேண்டும். அப்படிக் கொடுத்து அவர்களை நடத்தச் சொல்வதற்குப் பதிலாக, அரசே எடுத்துக்கொண்டு நடத்தலாமா என்பதை யோசிக்கவேண்டும். இவற்றைக் கவனிக்க சட்ட மன்றம் முடிந்த பிறகு அந்த வேலையை வைத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறேன். அதற்கு முன்பு, வேலை இல்லாமல் இருக்கும் தொழிலாளர்களின் பட்டியல் எடுக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: சார், இந்த நிறுவனம் நமது அரசிடம் கடன் கோரியிருக்கிறதா? அல்லது மத்திய அரசிடம் கடன் கோரியிருக்கிறதா? அதன் விவரம் என்ன என்பதை முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?





மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கடன் கேட்கிறார்கள். நாம் கொடுத்தாலும் சரி, நாம் மத்திய அரசிடமிருந்து கேட்டுப் பெற்றுக் கொடுத்தாலும் சரி. கடன் கொடுப்பதைப் பற்றிப் பரிசீலித்துத்தான் முடிவு எடுக்கவேண்டும்.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, இப்படி வேலை இல்லாமல் இருந்த ஸ்டாண்டர்ட் மோட்டார் பாக்டரி தொழிலாளர்களுக்கு ஒரே தொழிற்சாலைக்கு ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, உதவி அளிக்கப்பட்டிருக்கிறதே, இதற்கு முன்னால் இப்படி எப்போதாவது பணம் ஒதுக்கப்பட்டு, உதவியளிக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதற்கு முன்னால் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கோயம்புத்தூர் மில் தொழிலாளர்கள் அல்லலுறுகிறார்கள் என்ற நிலைமையில் அவர்களுக்கு இது போன்று கிட்டத்தட்ட ரூ. 2 லட்சம் அளவுக்குப் பணம் ஒதுக்கி, நிவாரணம் அளிக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர், "இதற்கு முன்னால்" என்று கேட்பது "1967-க்கு முன்னால்" என்று நினைக்கிறேன். 1967-க்கு முன்னால் இப்படிக் கொடுக்கப்பட்டதா இல்லையா என்ற விவரம் இல்லை. கொடுத்ததாகத் தெரியவில்லை.

திரு. முனு ஆதி: தலைவரவர்களே, நம்முடைய அரசின் பெரு முயற்சியால் அங்கே உள்ள தொழிலாளர்களைச் சுமுகப்படுத்தி, இரண்டு சங்கங்களை ஒன்றாக்கி இன்றைக்கு 700–900 தொழிலாளர்கள் வேலைக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள். இன்னும் ஒரு மாதத்தில் எல்லாத் தொழிலாளர்களையும் எடுத்துக்கொள்வதாக உறுதி கொடுத்து இருக்கிறார்கள். ஆனால் பல பேர் ரௌடிகள் சேர்ந்துகொண்டு சுமுகமாகத் தொழிலாளர்கள் வேலைக்குப் போவதற்கும், அமைதியாக இருப்பதற்கும் இடைஞ்சலாக இருக்கிறார்கள். இப்படிப்பட்ட "எலிமெண்ட்சை"த் தடுத்துநிறுத்த நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படி ஏதாவது வழிமறித்து வேலைக்குச் செல்கிற தொழிலாளர்களிடத்தில் கோஷ்டிகள் ஏதாவது தலையிட்டால் காவல் துறையினர் அவர்களை நிச்சயமாகக் கண்காணிப்பார்கள். அதற்கும் இன்னும் எடுத்துக்கொள்ளாமல் இருக்கும் தொழிலாளர்களுக்கும் சம்பந்தம் இருக்கிறதா என்று தெரியவில்லை. அந்தக் காரணத்தை அரசு ஆராயக் கடமைப்பட்டிருக்கிறது. அவர்கள் கேட்கிற தொகை கொடுப்பதாக இருந்தாலும் எந்த அடிப்படையில் கொடுத்து அந்தத் தொழிற்சாலையை ஒழுங்காக ஓட்டிச்செல்வது என்பதைப்பற்றியெல்லாம் அரசு ஆராய வேண்டியிருக்கிறது. அதற்குத்தான் காலம் தேவை என்று குறிப்பிட்டேன்.

திரு. கே. ஏ. வகாப்: தலைவரவர்களே, இப்போது அளிக்கப்பட்டிருக்கிற இந்த பொங்கல் இனம் போன்று இப்போது வேலையில்லாமல் இருக்கும் தொழிலாளர்களுக்குக் கடன் தொகையாக,

முன் பணமாக, அரசு கொடுத்து, அவர்கள் மறுபடியும் வேலைக்குச் சென்ற பிறகு திரும்பப் பெற்றுக்கொள்வது என்ற முறையில் அவர்களுக்கு உதவ அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கடந்த 30 நாட்களாக இந்த மாமன்றத்தில் நிதி நிலை அறிக்கையைப் பற்றிப் பேசி இருக்கிறோம். இவ்வளவு பேசிய பிறகும் மாண்புமிகு உறுப்பினர் இப்படிக் கூறுவது நியாயம் அல்ல.

திரு. என். கணபதி : தலைவரவர்களே, இப்படிப்பட்ட தொழிலாளர்—முதலாளிகள் தகராறு அடிக்கடி வருகிறது. மாண்புமிகு கலைஞர் அவர்கள் தலைமையில் இயங்கும் அரசு, அந்தப் பிரச்னையை அனுதாபத்தோடு பார்த்து, தொழிலாளர்களின் பக்கம் சேர்ந்துகொண்டு, அவர்களுக்கு மறு வேலை வாங்கித்தருகிறது. இப்படி அடிக்கடி நிகழும் சூழ்நிலையைத் தடுப்பதற்காக நம்முடைய அரசாங்கம் "உரிமையைக் கோருகிற இடத்தில் கடமையை உணர்த்துவோம்" என்ற வகையில் பட்ஜெட் அறிக்கையிலே கலைஞர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக மற்றபடி என்ன என்ன திட்டங்கள் வைத்து இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கடமையைத் தொழிலாளர்கள் இடத்தில் மாத்திரம் எதிர்பார்க்கவில்லை. அதே நேரத்தில் தாராள மனப்பான்மையை முதலாளிகளிடத்திலும் அரசு எதிர்பார்க்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்கள் முன்னாலே கோவையிலே இருக்கிற தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அதே மாதிரி இப்போது சமீபத்தில் மூடப்பட்ட ஆலைகளின் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் நிவாரணம் வேண்டுமென்று கோரி வந்தார்களே, அது சம்பந்தமாக முதலமைச்சர் அவர்கள் என்ன கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதற்காகத்தான் அங்கே மூடப்பட்டு இருக்கிற ஆலைகளில் பெரும்பாலானவற்றை வெகு விரைவில் எடுத்துக்கொள்வது என்ற வகையில் உறுதியளிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் எடுத்துச் சொன்ன ஆலைகளைப் படிப்படியாகத் திறப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன.

## தமிழ் நாடு குடிநீர் வாரியம்

* 526 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசு குடிநீர் வாரியம் ஒன்று அமைத்துள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்தக் குடிநீர் வாரியத்தின் பணிகள் எவ்வாறு வரையறுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா?





மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அலுவலகப் பணிகளைப் பொறுத்தவரையில், அதற்கு ஒரு தலைவரும், நிர்வாக இயக்குநரும், பிறகு, நிதித் துறைச் செயலாளர், குடும்ப நல-சுகாதாரத் துறைச் செயலாளர், கிராம வளர்ச்சி—உள்ளாட்சித் துறைச் செயலாளர், பொதுப்பணித்-துறைச் செயலாளர், சென்னை மாநகராட்சி ஆணையர், நகராட்சி மன்றங்களின் தலைவர்கள், தமிழ்நாடு ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்கள், ஓய்வு பெற்ற தலைமைப் பொறியாளர், ஆகியோர் அடங்கிய ஒரு இயக்குநர் குழு ஒன்றும் அமைக்கப்பட்டு, இந்தப் பணிகள் வரையறுக்கப்பட்டு, நடைபெறுகின்றன.

DR. H. V. HANDE : Sir, may I know what are the exact duties given to this Board and whether this Board will look after the drinking water needs of all the cities? Also whether companies have been received by the Hon. Chief Minister or the department concerned from the people of Perambalur in the Tiruchirappalli district who are practically without any drinking water for the past several days ? Will the Board come forward to give help in such contingencies? ..

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : திடும் என்று ஓர் இடத்தில் ஏற்பட்டிருக்கின்ற நிலையைப்பற்றிக் கேட்டால் தகவல் இல்லாமல் பதில் சொல்வது இயலாத காரியம். ஆங்காங்கே பல ஆண்டுகளாக இந்தப் பிரச்சினைகள் இருக்கின்றன என்பதால்தான் இந்த வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது. அரசு உள்ளாட்சி மன்றங்களின் வேண்டுகோள்களின்படி, குடிநீர், வடிகால் வசதிகள் செய்து, நிறைவேற்ற திட்டத்தின் தன்மையையும், வகையையும் ஆய்ந்து, அந்த ஆய்வின் அடிப்படையில் ஈட்டுறுதிக் கழகம், இன்னும் வெளிச் சந்தையில் நிதி திரட்டுவது போன்ற வழிகளில் கடன் தொகைகளையும் பெற்று, இன்னும் நன்கொடை, மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் இவர்களிடமிருந்தும் இன்னும் தனி நபர்களிடமிருந்தும், நிறுவனங்களிடமிருந்தும் பணம் பெற்று இந்தக் காரியங்களைச் செய்யும். இந்த வாரியம் இந்த ஆண்டிலும் கடந்த ஆண்டிலே நடைபெறத் தொடங்கி முடிவு பெறாமல் இருக்கும் பணிகளைச் சேர்த்தும், 126 பணிகள் மேற்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போன்று, ஆங்காங்கே உள்ள குறைபாடுகளெல்லாம் வராமல் தடுத்திடவேண்டும் என்றுதான் இந்த வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. செ. சதாசிவம் : தலைவர் அவர்களே, மாவட்டவாரியாகக் குடிநீர் வசதி செய்து கொடுக்க இந்த வாரியத்தை அமைக்க முடியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாவட்டவாரியாக வாரியம் அமைக்க முடியாது.

திரு. கோவை செழியன் : கிராமப் பஞ்சாயத்துக்களில் குடிநீர் வசதியை ஆர்.டி.எல்.ஏ. டிபார்ட்மெண்டில் கவனித்துவருகிறார்கள். அவற்றையும் இந்தப் புதிய வாரியத்தின்கீழ்க் கொண்டுவர வேண்டும் என்று விண்ணப்பம் கொடுக்கப்பட்டிருக்கிறதா? அதன்மேல் அரசு எடுத்திருக்கும் முடிவு என்ன என்பதைக் கூற முடியுமா?

[1971 ஜூலை 29

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படிப்பட்ட மனுக்கள் எதையும் அரசு பெறவில்லை. அப்படி வந்தால் அதைப் பரிசீலிக்கலாம்.

திரு. எம். தேவராசன்: தலைவர் அவர்களே, உதகை குடிநீருக்காக தமிழக அரசு பார்ஸன் வாலி திட்டத்தை ரூ. 35 செலவில் அமைத்து நல்ல குடிநீர் கொடுத்து வருகிறது. ஆனாலும் இதற்காக உதகை நகராட்சிக்கு ஒரு நாளைக்கு ரூ. 350-க்கு மேல் செலவாகிறது. அந்தப் பணத்தையும் அரசு தள்ளுபடி செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் அந்தத் திட்டம் 35 ரூபாயில் நிறைவேற்றப்பட்டதாகச் சொன்னார்கள். 35 ரூபாயில் நிறைவேற்றப்பட்டதற்கு நாளைக்கு ரூ. 350 செலவழிக்க வேண்டிய அவசியம் இருக்காது.

திருமதி த. ந. அனந்தநாயகி: இந்த வாரியத்தின் தலைவர் யார்? அவருக்கு என்னென்ன வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்த வாரியத்தின் தலைவர் திரு. எஸ். கந்தப்பன், எம்.எல்.ஏ. அவருக்குக் கார் வசதி கொடுக்கப்பட்டிருக்கிறது. கடைநிலை ஊழியர்கள் போன்ற வசதியும் செய்து தரப்பட்டிருக்கிறது. கௌரவ ஊதியமாக மாதம் ரூ. 500 தரப்படுகிறது.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, is it a fact that the Corporation has represented that they should be exempted from the drainage scheme as they have already got a well-established technical service?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கார்ப்பொரேஷன் திட்டங்கள் ஒதுக்கப்படவில்லை. சென்னை மாநகராட்சி ஆணையர் அதில் இருக்கிறார். கார்ப்பொரேஷன் உறுப்பினர்களோ, தலைவரோ இடம் பெறவேண்டும் என்றும் கூறுகிறார்கள். நகராட்சித் தலைவர்களின் சங்கத் தலைவர் இடம் பெற்றிருக்கிறார்கள். கார்ப்பொரேஷன் திட்டங்கள் சிறப்பாக இடம் பெறவேண்டும் என்றால் அதற்கான வகையும் செய்யப்படும்.

திரு. முனு ஆதி: தலைவர் அவர்களே, சின்னச் சின்ன கிராம ஊராட்சி மன்றங்களில் தண்ணீர் வசதி இல்லாமல் இருக்கிறது. பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு நிதிக்காக கலைஞர் அவர்கள் நிதி திரட்டி நல்வாழ்வு கொடுக்க ஏற்பாடு செய்திருப்பதுபோல், இப்படிப்பட்ட வசதியற்ற கிராமங்களுக்கும் நிதி திரட்டிக் குடிநீர் வசதி செய்து கொடுக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஊராட்சி மன்றங்களையும் பிச்சைக்காரர்களையும் தொடர்புபடுத்திப் பேசியது முறையல்ல.

திரு. சொ. காவேரிமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள், நகரவை, கார்ப்பொரேஷன் போன்றவைகளில்



1971 ஜூலை 29]

இம்மாதிரியான தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கிறது. ஆகவே, இந்த வாரியத்தின் கிளைகளை மாவட்டங்களில் அமைத்து இந்தத் தட்டுப்பாட்டைப் போக்க நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: வாரியத்திற்கு ஆங்காங்கே கிளைகள் அமைக்க முடியாது. அதிகச் செலவாகும் என்பதோடு, காரியங்களும் விரைவில் நடைபெறாது.

திரு. கு. காமாட்சி: தலைவர் அவர்களே, குடிநீர் வாரியத்தால் என்னுடைய பகுதியில் ஒரு பகுதி நல்ல பயன் அடைந்திருக்கிறது. அதேபோல் மற்ற பகுதிகளிலும் செயல்பட ஆங்காங்கே சிறு சிறு குழுக்கள் அமைத்து, அவற்றின் ஆலோசனைகளைப் பெற்று வாரியம் நல்ல முறையில் நடக்கும் என்று நினைக்கிறேன். அரசு அதைப் பின்பற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: குழுக்கள் தனித்தனியாக அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆங்காங்கே ஊராட்சி மன்ற, உள்ளாட்சி மன்றத் தேவைகளை அறிந்து செயல்படுவார்கள். ஒவ்வொரு ஊரிலும் அமைக்க முடியாது.

திரு. ம. மோசஸ்: தலைவர் அவர்களே, குடிநீருக்காக மேல் தொட்டி (ஹை லெவல் தொட்டி) கட்டி, பம்பு செட்டு வைத்திருக்கிறார்கள். ஆனால் மின்சாரம் கிடைக்காமல் இருக்கிறது. இந்த நிலையைத் தவிர்க்க நல்ல வழி தேடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: குறிப்பாக குறைபாடுள்ள இடத்தைக் குறித்து வாரியத்திற்கு எழுதியனுப்பினால், உடனடியாக அதைக் கவனிக்க முடியும்.

திரு. அ. சின்னசாமி: தலைவர் அவர்களே, நீண்டநாளாக, ஜயங்கொண்டான் வாரியத்தின் பயனைப்பெறாமல் இருக்கிறது. அதற்கு நடவடிக்கை எடுத்து ஆவன செய்ய முடியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எல்லா இடங்களையும் தொடர்புபடுத்திக் காரியங்கள் செய்யப்படுகின்றன. ஒவ்வொரு ஊராகக் கேட்டால், பதில் சொல்வது இயலாத காரியமாக இருக்கும்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரையில் சமவெளிகளில்தான் அதிகமாகத் தண்ணீர் வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். மலைப் பகுதியில் மலேரியாபோன்ற கிருமிகள் தண்ணீரில் அதிகமாக இருப்பதால், அங்கு வசதிகளை அதிகமாகச் செய்ய வேண்டும் என்பது திட்டத்தின் நோக்கம். ஆகவே, அந்தந்தப் பகுதிகளில் பயன் அளிக்கும் வகையில், ஏலகிரி, ஜவ்வாது மலை போன்ற இடங்களில் இப்படிப்பட்ட வசதிகளைச் செய்து கொடுக்க முடியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அந்த விவரங்களெல்லாம் இப்பொழுது என்னிடத்தில் இல்லை.

## செய்யூர் கூட்டுறவு வேளாண்மை வங்கி

* 540 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், செய்யூர் கூட்டுறவு விவசாய வங்கி, செங்கற்பட்டு மாவட்ட மத்திய வங்கிக்கு குறிப்பிட்ட காலத்தில் பணம் செலுத்தவில்லை என்பது 1967 அல்லது 1968-ம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) காஞ்சிபுரம் கூட்டுறவு மத்திய வங்கிக்கு செய்யூர் கூட்டுறவு வேளாண்மை வங்கி 30—6—1967 அன்றுள்ளபடி, குறுகிய காலக் கடன்களாக ரூ. 63,626-ம், நடுத்தரக் காலக் கடன்களாக ரூ. 8,101-ம் தவணை கடந்த நிலுவையாகச் செலுத்த வேண்டியிருந்தது. 30—6—1968 தவணை கடந்த கடன் பாக்கி ஏதுமில்லை.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, செய்யூர் கூட்டுறவு விவசாய வங்கியிலிருந்து செங்கற்பட்டு மத்திய வங்கிக்குக் குறிப்பிட்ட காலத்தில் பணம் செலுத்தாமல் இருந்தால் அந்த வங்கியிலிருந்து மாவட்ட வங்கிக்குப் பிரதிநிதியாகச் செல்வதற்கு வழி ஏதும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இது கடனைப் பற்றிய வினா. மாவட்ட வங்கிக்குப் பிரதிநிதியாக வர முடியுமா என்பது சட்டப் பிரச்னை.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, ஓவர்டியூஸ் இருந்தால் சூபர்சீட் செய்வேன் என்கிறார்கள். கோவாபரேடிவ் பாங்கிகள் எதையும் சூபர்சீட் செய்ய நடவடிக்கை எடுத்து இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : In answer to the second part, I had answered that there was overdue on 30th June 1967. There was no overdue on 30th June 1968. The department had taken active steps to reduce the overdues. They were successful in reducing the overdues. There was no question of supersession.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, டிபார்ட்மெண்டு மூலமாக ஓவர்டியூசைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். சிலவற்றிற்கு டிபார்ட்மெண்ட் அலுவலர்களை அனுப்பி, ஒரு ஆண்டு காலம் கொடுத்து, ஓவர்டியூசைக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறது. மற்றும் சிலவற்றை சூபர்சீட் செய்கிறது. இப்படிச் செய்யப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : The time given is not one week. It is more than one week. They give ample time to enable the societies to bring the overdues to normal. The idea is,



these overdues should be brought down. Otherwise, these banks will not be eligible to receive any assistance or loan from the Reserve Bank of India.

## வட ஆற்காடு மாவட்ட சவரத்தொழிலாளர் கூட்டுறவு சங்கம்

* 541 வினா—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் சவரத் தொழிலாளர் கூட்டுறவு சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளதா?

(இ ஆம் எனில், அதற்கு அரசு நிதி உதவி அளித்துள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) மேற்படி சங்கத்திற்கு இதுவரை அரசு நிதி அளிக்கப்படவில்லை.

(உ) எழவில்லை.

திரு. மா. பா. சாரதி : தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கம் சென்ற ஆண்டு பதிவு செய்யப்பட்டு பல முறை நிதி கோரி அரசாங்கத்திற்கு மனு செய்யப்பட்டும், அமைச்சர் அவர்களுடைய செயலாளர் நேரடியாக வந்தபோது அவரிடம் மனு கொடுக்கப்பட்டும், இதுவரைக்கும் அவர்களுக்கு நிதி கிடைத்ததாகத் தெரியவில்லை. அவர்களுக்கு நிதி கிடைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்தச் சங்கம் பதிவு செய்யப்பட்டது சென்ற ஆண்டு அல்ல. பதிவு செய்யப்பட்டது 1969-இல். அதற்குப் பிறகு, பிற்பட்டோர் நலனுக்காக ஒரு தனித் துறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இத்தகைய உதவிகளை அந்தத் துறை செய்து வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இதே மாதிரியாக திருநெல்வேலியில் ஓ. 2114 என்ற எண்ணில் 1965-இல் ஒரு க்ஷவரத் தொழிலாளர் சங்கம் ஏற்படுத்தப்பட்டு அதில் 100 பேர்கள் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு வேண்டிய பொருள்களை வாங்குவதற்காகக் கடன் கேட்டு, இதுவரை எந்தப் பலனும் கிடைக்கவில்லை. அவர்களுக்குக் கடன் கொடுத்துதவ அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இப்படிப்பட்ட சங்கங்களுக்கு பிற்பட்டவர்களுக்காக, க்ஷவரத் தொழிலாளர்களுக்காக, சலவைத் தொழிலாளர்களுக்காக கூட்டுறவுத் துறை மூலமாகக் கடன் கொடுப்பதால் என்ன கேடு வருகிறதென்றால், கடன் திரும்பி வருவதில்லை. அப்படிப் பணம் கொடுப்பதை உதவித் தொகையாகக் கொடுப்பது நல்லது என்று எண்ணி, பிற்பட்டோர் நலனுக்கென்று உள்ள துறை மூலமாக, மாண்புமிகு திரு. இராசாராம் மேற்பார்வையில் அவர்களுக்கு முற்றிலும் மானியமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, இப்படிப்பட்டவர்களுக்குக் கடன் கொடுத்தால் திருப்பி வரவில்லையென்று சொல்கிறார்கள். திருப்பிக் கொடுக்கக் கூடிய நிலையில் இருப்பவர்கள் கேட்டால், விவசாயிகளுக்கு நீண்ட காலக் கடன் தருவது போல, பிற்பட்டத் துறையில் உள்ள முடிதிருத்துபவர்களுக்கு நீண்ட காலக் கடன் தரப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கடன் கொடுக்கிற பிரச்னை எழவில்லை. கடன் கொடுத்தால் அதைத் திரும்பிப் பெறுவது சங்கடமாக இருக்கிறது. ஆகையினால் இப்படிப்பட்ட பின் தங்கியவர்களுக்கு கடன் கொடுப்பதற்குப் பதில், பிற்பட்டோர் நலத் துறை மூலமாக முற்றிலும் மானியமாகப் பணம் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இந்த பார்பர்ஸ் கோவாபரேடிவ் சொசைடி செயல்படுகிற செயல்முறைகளைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கிக் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : உறுப்பினர் அவர்கள் க்ஷவரத் தொழிலாளர்களுடைய கூட்டுறவுச் சங்கம் எப்படிச் செயல்படுகிறது என்று கேட்டார்கள். அது எப்படிச் செயல்படுகிறது என்று அவருக்கே தெரிந்திருக்கும் என்று கருதுகிறேன்.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, இந்த மாதிரி சங்கங்களெல்லாம் பதிவு செய்யப்படும்போது க்ஷவரத் தொழிலாளர் சங்கம், கலவைத் தொழிலாளர் சங்கம், செருப்பு தைக்கும் தொழிலாளர் சங்கம் என்ற பெயர்களை எடுத்துவிட்டு வேறு நல்ல பெயர் வைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நல்ல பெயர்கள் வைக்க முடியும். ஆனால் அவர்கள் எந்தப் பெயரால் சங்கங்களை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்கிறார்களோ அந்தப் பெயரால்தான் நாம் செய்ய முடியும். க்ஷவரத் தொழிலாளி என்பதை முடி திருத்துவோர் கழகம் என்று மாற்றியமைக்க முடியும், நன்றாக இருக்கும். ஆனால் அவரவர்கள் விருப்பத்திற்கிணங்க செய்யப்படுகின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, இந்த பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள், பார்பர்கள், வாஷர்மென் போன்றவர்கள், கூட்டுறவு சொசைடி அமைப்பதற்கு அப்ளிகேஷன் போட்டால், அதை அரசாங்கம் ரெஜிஸ்டரே செய்வது கிடையாது. காரணமில்லாமல் காலதாமதம் செய்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : 1969-க்குப் பிறகு இப்படிப்பட்டவர்களுக்கென்று தனியாக ஒரு துறை ஏற்படுத்தப்பட்டு அதன் மூலமாகப் பல கோடி ரூபாய் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆகையினால் 1969-க்குப் பிறகு இவ்வாறு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கடன் கொடுப்பது என்பது அவ்வளவு சிறந்ததாக இல்லை. ஆகையினால் அப்படிப்பட்ட சங்கங்களை ஏற்படுத்துவதில் கால தாமதம் ஏற்படுகிறது.





*Nagapattinam-Thanjavur State Transport Express Buses*

*542 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether it is a fact that the State Transport Express Buses between Nagapattinam and Thanjavur have been cancelled without prior notice with effect from 6th July 1971 ; and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ) இந்தப் பேருந்துகள் ரத்து செய்யப்படவில்லை. இந்த வழித்தடத்தில் பேருந்துப் பணியினைச் சிரமைத்ததன் விளைவாக அப்பேருந்துகளின் பயணத்தடவைகள் (trips) குறைக்கப்பட்டுள்ளன.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, 6—7—71 அன்று கோவையிலிருந்து நாகைக்குச் செல்லுகின்றவர்களுக்கும், நாகையிலிருந்து கோவைக்குச் செல்லுகின்றவர்களுக்கும், இந்த எக்ஸ்பிரஸ் பஸ்கள் நிறுத்தப்பட்டுவிட்டன என்று அறிவிக்கப்பட்டது என்றும் அதனால் பயணிகள் பெரும் கஷ்டத்திற்குள்ளாயினர் என்றும், ஆனால் மறுபடியும் சென்ற வாரம்தான் அந்த பஸ் சர்வீஸ் தொடங்கியிருக்கிறது என்றும், இப்போது அந்த 618 ரூட்டில் இரண்டு ட்ரிப்கள்தான் போகின்றன என்றும் தெரிகிறது. எதற்காக இப்படிப் பஸ்கள் திடீரென்று நிறுத்தப்பட்டன. இப்போது எதற்காக மறுபடியும் அவைகள் விடப்படுகின்றன, இப்படி மீண்டும் விடப்பட்டும் முன்பிருந்த அளவிற்கு இல்லாமல் குறைந்த ட்ரிப்கள் ஏன் விடப்படுகின்றன என்ற காரணத்தையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சேலம்—நாகைப்பட்டினத்திற்கு இடையிலே ஒரு பஸ் போய்க்கொண்டு இருந்தது. சேலம்—நாகைப்பட்டினத்திற்கு இடையே உள்ள தூரம் 171 மைல். இப்பேருந்து அங்கு சென்று திரும்புவதால் கிட்டத்தட்ட 342 மைல்கள் ஆகின்றன. எனவே மெய்ன்டெனன்ஸ் சரிவரச் செய்ய முடியவில்லை. அதுபற்றிப் பயணிகளிடமிருந்து புகார்கள் வந்தன. சேலத்திலிருந்து நாகை வரை சென்று மீண்டும் திருச்சி வரையில் வரும்போது 223 மைல் ஆகிறது. ஒரு நாளைக்கு 250 மைல்களுக்கு மேல் ஒரு பஸ் போகக்கூடாது என்பது விதி. எனவே, சேலம்—நாகை பஸ்ஸை மறுபடியும் நாகையிலிருந்து கொண்டுவந்து திருச்சியில் நிறுத்தலாம் என்று அரசு உத்திரவிட்டதின்பேரிலே இந்த ரூட்டுக்கு அதிக பஸ்கள் தேவைப்பட்டன. இதன் காரணமாக கோவை—நாகைப்பட்டினம் இடையிலே சென்று கொண்டு இருந்த ஆறு பஸ்களில் இரண்டு பஸ்களை இதற்காகப் பயன்படுத்தினார்கள். ஆனால் மறுபடியும் அவைகள் அப்படியே விடப்படவேண்டும் என்று சொன்னதன் பேரிலே கோவை—நாகை வழித்தடங்களிலே பழையபடி விடும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : பேரவைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட பஸ்கள் அனைத்தும் பொதுமக்களின் சௌகரியத்திற்காக விடப்படுகின்றன. ஆனாலும் இப்படித் திடீரென்று எந்த

விதமான முன்னறிவிப்பும் இல்லாமல் அவை புறப்படவேண்டிய நேரத்தில் "நிறுத்தப்பட்டுவிட்டன" என்று அறிவித்தால் பெரிதும் சிரமம் ஏற்படுகிறது. எனவே, இப்படிப்பட்ட அறிவிப்புகள் முன் கூட்டியே பொதுமக்களுக்குக் கிடைப்பதற்கான வகையில் விளம்பரம் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அவசியம் ஏற்படும்போது அந்த மாதிரி அறிவிப்புகள் கொடுக்கப்படுகின்றன.

### *High windows in State Transport Buses*

* 513 Q.—Dr. H. V. HANDE : will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether there is any proposal by the Government to provide buses on city routes with high windows, so that standing passengers could look out for their stops without crouching?

(b) if so, the date by which the above provision would be made ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ) சென்னை மாநகரில் ஓடும் பயணிகள் அதிகமாக நின்று பயணம் செய்ய வசதியுள்ள பேருந்துகளில் பெரிய சாளரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இனி கட்டப்படும் அரசுப் போக்குவரத்துப் பேருந்துகள் அனைத்திலும் பெரிய சாளரங்கள் பொருத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

Dr. H. V. HANDE : Is it the programme of the Government to steadily increase the number of buses for standees and reduce the number of buses where more people can sit? What is the position in the standee buses? More than half of the persons are made to stand. May I know from the Hon. Minister what exactly is the programme? How many standee buses are there? How many non-standee buses are there? May I know whether it is not a fact that people are finding it very difficult and inconvenient to stand in the bus and if so, what are the steps taken by the Government to mitigate their sufferings?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே. கேள்வியானது சென்னை மாநகரில் ஓடும் பயணிகள் பேருந்துகளில் பெரிய சாளரங்கள் பொருத்தப்படுமா என்பதைப் பற்றியது. சென்னை மாநகரத்தில் ஓடும் பயணிப் பேருந்துகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பலமுறை இம்மன்றத்தில் கேள்விகள் கேட்டு, அவற்றுக்குப் பதிலும் அளிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்தான் இது பற்றி "அலர்ஜிக்" ஆக இருக்கின்றார்களே தவிர பொது மக்களிடமிருந்து "பஸ்கள் சரியாக இல்லை" என்று எந்தவிதமான புகாரும் வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

Dr. H. V. HANDE : I do not know what exactly the Hon. Minister means by allergy. We get information from the public. We get number of complaints. I would not waste my time in putting the question, unless I have received a number of complaints. Probably they are now thinking that the Government are immune to their complaints. I may be allregic to the complaints. But they feel that the Government are immune to their complaints. They have complained to me. So, may I know from the Hon. Minister the steps taken by this Government to see at least a few more comforts are given to the standee passengers and whether buses are converted into standees without these glasses and whether such cases have been brought to the attention of the Government ?

The Hon. Thiru S. RAMACHANDRAN : The complaints are now received from the hon. Member. If he can submit the complaints which he has received from the passengers, the merits and demerits will be looked into by the Government.

திருமதி த. ந. அனந்தநாயகி : பேரவைத் தலைவரவர்களே, இப்படிச் சென்னை நகரில் ஓடக்கூடிய பஸ்களிலேயெல்லாம் பயணிகளை குறிக்கப்பட்டுள்ள எண்ணிக்கைக்குமேலே "ஓவர் லோட்" ஆக ஏற்றுகின்றார்களே, இது போன்றே தனியார் நடத்தும் பஸ்களிலே ஏற்றுவது அனுமதிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அப்படி ஒன்றும் சென்னை நகரில் ஓடும் பஸ்களில் "ஓவர் லோட்" செய்வதாகத் தெரியவில்லை. இன்னும் சொல்லப்போனால், பயணிகள் நின்று கொண்டு செல்லும் பேருந்துகளை அதிகமாகப் பயன்படுத்தும் காரணத்தினால் சாதாரணமாக பஸ்களில் குறித்த அளவிற்குத்தான் ஏற்றப்படுகின்றார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, அரசு எக்ஸ்பிரஸ் பஸ்களிலே போய்ச்சேரும் ஊரின் பெயரும் போய்ச் சேரும் நேரமும், செல்லும் வழிகள் பற்றியும் எழுதப்பட்டிருந்த அறிவிப்பு பலகைகள் இருந்தன. ஒவ்வொரு ஸ்டேஜ் செல்லும் போதும், அவற்றை மாற்றிக்கொண்டே இருப்பார்கள். இதனால் பயணம் செய்கின்றவர்களுக்கு, வர இருக்கின்ற ஊரும், சேரும் நேரமும் தெரிந்தது. இப்போது பெரும்பாலும் அவை போடப் படுவதில்லை. இவை இருப்பது பயணிகளுக்குப் பேருதவியாக இருப்பதால் இவற்றை மீண்டும் போடுவதற்கு உத்திரவிடப்படுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, இத்தகைய அறிவிப்புப் பலகைகளும், குடிதண்ணீர் வசதியும், கெடிகாரமும் ஒவ்வொரு எக்ஸ்பிரஸ் பஸ்ஸிலும் வைத்திட வேண்டும் என்று அரசு உத்திரவிட்டுள்ளது. அவ்வுத்திரவு இப்போதும் நடைமுறையில் இருக்கின்றது. நானும் அடிக்கடி திடீரென்று பேருந்துகளைச் சோதனை செய்து பார்க்கும்போது இவைகளெல்லாம் கவனிக்கப்படுகின்றனவா என்று பார்க்கிறேன். இப்போதுகூட நாகையிலிருந்து வரும் பஸ்ஸைப் பார்க்கும்போது எல்லாம் முறையாகவே இருந்தன என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

## மாயூரம்—மணல்மேடு பேருந்து பணி

*544 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரத்திலிருந்து—வில்லியநல்லூர் கிழாய் வழியாக மணல்மேடு வரை பஸ் விட ஏதேனும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாயூரத்திலிருந்து வில்லியநல்லூர் கிழாய் மணல்மேடு வழியாக இலுப்பைப்பட்டு வரை பேருந்து விடுவதற்கான செயற்குறிப்பு ஒன்று தஞ்சாவூர் மண்டல போக்குவரத்து ஆணையரால் பரிசீலிக்கப்பட்டது. ஆயினும் வில்லியநல்லூருக்கும் இலுப்பைப்பட்டிக்கும் இடைப்பட்ட சாலை, பேருந்து செல்வதற்கு தகுதியற்றது எனக் காணப்பட்டதால் அச்செயற்குறிப்பு கைவிடப்பட்டது.

*Madras-Bangalore State Transport Bus*

*545 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether there is any proposa: to start night service from Madras to Bangalore by the State Transport Department ; and

(b) if so, when it will be started?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) இரு மாநிலங்களுக்கிடையே உடன்பாடு ஏற்பட்ட உடன் ஆரம்பிக்கும் தேதி நிர்ணயிக்கப்படும்.

THIRU B. VENKATASWAMY : Sir, from the answer given by the Hon. Minister, it is seen that the same answer was given by the previous Minister Hon. Mr. Aditanar. May I know from the present Hon. Minister when it will take shape? There is great need for the implementation of this night service from Madras to Bangalore. May I know from the Hon. Minister when exactly this bus route will be operated ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, கர்நாடக மாநில அரசுடன் இதுபற்றிய பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அவர்களோடு நாம் ஏதாவதொரு ஒப்பந்தத்திற்கு வந்தபிறகுதான் இப்பேருந்துகளை நாம் விடமுடியும். பேச்சுவார்த்தைகளில் காலதாமதம் ஆவதால்தான் சீக்கிரம் உடன்பாட்டுக்கு வரமுடியவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Many private buses are plying between Bangalore and Madras and they are getting a good porfit and also giving facilities to the passengers. May I request the Hon. Minister to take extraordinary steps to see that the question is settled very soon?



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்த அரசினைப் பொறுத்த வரையில் சென்னையிலிருந்து பெங்களூருக்கு அதிக பஸ்கள் விட வேண்டும் என்ற ஆவலினால்தான் இதுபற்றிய நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆனாலும் கருநாடக அரசு பதில் தரும் வரையில் பொறுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பேரவைத் தலைவரவர்களே, இந்த பஸ்களை "லக்ஷுரி" கோச்சுகளாக விடுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா? இப்போது கேரள அரசு இந்த மாதிரியான "லக்ஷுரி" பஸ்களை அதிகமாக விடுகின்றார்கள் என்று தெரிகின்றது. எனவே அந்த முறையை நமது அரசு பின்பற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, அப்படிப்பட்ட "லக்ஷுரி" கோச்சுகளை நாமும் விடுவதில் ஆட்சேபனை ஒன்றும் கிடையாது. ஆனால் சிறிது அதிகக் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும். இதை ஏற்றுக்கொள்ளுவார்களானால், எவ்வளவு "லக்ஷுரி" பஸ்கள் வேண்டுமானாலும் விடலாம்.

திரு. ஏ. எம். இராஜா : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது மைசூர் அரசுடன பேச்சு வார்த்தைகள் நடத்திக் கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். உடன்பாடு காணும்போது, அது "ட்ரிப்" பேஸிஸில் உடன்பாடு காணப்போகின்றீர்களா அல்லது "மைலேஜ்" பேஸிஸில் உடன்பாடு காணப்போகின்றீர்களா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, "மைலேஜ்" அடிப்படையில்தான் உடன்பாடு காணவேண்டும் என்று இந்த அரசைப்பொறுத்த வரையில் விரும்புகிறது. ஏற்கனவே கேரள அரசும் ஆந்திர அரசும் இதற்கு ஒப்புதல் அளித்திருக்கின்றார்கள். மைசூர் அரசிலிருந்து இதற்கு இன்னும் ஒப்புதல் வரவில்லை.

## வெள்ளிக்குறியிடாத வினாக்கள்

*Taxis with defective meter*

26 Q.—THIRU SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) the total number of cases of taxis with defective meters detected during 1970–71, in Madras City ; and

(b) the action taken thereon ?

A.—

(a) Number of taxis found plying with defective meters :—

| 1970. | 1971 (till 10th May 1971). | Total. |
|---|---|---|
| 231 | 125 | 356 |

(b) Action against the permit holders for violation of permit conditions have been taken in all the cases and the permits of such vehicles are suspended from one to three days. All the cases have been charged in the Court. Fine amounts ranging from Rs. 5 to 200 are imposed by the Court.

விடை—

(அ) பழுதடைந்த மீட்டர்களுடன் ஓடியதாகக் காணப்பட்ட வாடகைக் கார்களின் எண்ணிக்கை:—

| 1970. | 1971. (10–5–71 வரை) | மொத்தம். |
|---|---|---|
| 231 | 125 | 356 |

(இ) உரிம விதிகளை மீறிய குற்றத்திற்காக, உரிமம் வைத்திருப்பவர்கள் மீது எல்லா நேர்வுகளிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய வண்டிகளின் உரிமங்கள் ஒன்றிலிருந்து மூன்று நாட்கள் வரை தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. இவை குறித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளன. நீதி மன்றத்தால் ரூ. 5 முதல் 200 வரை அபராதம் விதிக்கப்பட்டது.

## தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்.

27 வினா—

**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1970-ம் ஆண்டு முடிய தமிழகத்தில் மொத்தம் எத்தனை தொழில் கூட்டுறவு சங்கங்கள் (Industrial Co-operative Societies) உள்ளன ?

(இ) அவற்றில் லாபத்தில் நடப்பவை எத்தனை? நஷ்டத்தில் நடப்பவை எத்தனை?

விடை—

(அ) 1970-ம் ஆண்டு முடிய தமிழகத்தில் மொத்தம் 338 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன.

(இ) அவற்றில் இலாபத்தில் நடந்தவை 113 சங்கங்கள், நஷ்டத்தில் நடந்தவை 225 சங்கங்கள்.

A.—

(a) There were 338 Industrial Co-operative Societies up to the end of the year 1970.

(b) Out of these, 113 societies worked on profit and the remaining 225 worked on loss during that year.

## ஹெலிகாப்டர் மூலம் பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் திட்டம்.

28 வினா—

**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969–70-ம் ஆண்டில் ஹெலிகாப்டர் மூலம் பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் திட்டத்தால் வடஆற்காடு மாவட்டத்தில் பயனடைந்த நிலத்தின் விஸ்தீரணம் என்ன?

(இ) இதற்கு ஆன செலவு என்ன?

விடை—

வட ஆற்காடு மாவட்டத்தில் 1969–70-ம் ஆண்டில் ஹெலிகாப்டர் மூலம் பயிர்களுக்கு மருந்து அடிக்கும் திட்டம் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.



### *Annual Festival of Sri Kapaleeswarar Temple*

29 Q.—**Thiru O. N. Sundaram**: Will the Hon. Minister fo Religious Endowments be pleased to state :—

the details of the expenditure incurred item-wise by the Sri Kapaleeswarar temple, Mylapore, Madras in connection with the annual festival during the years 1970 and 1971.

A.—

Details of expenditure are furnished below :—

1970.

| *Serial number and items.* | | *Amount.* RS. P. |
|---|---|---|
| 1 Flower supply .. | | 4,130·00 |
| 2 Sripadam .. | | 3,075·00 |
| 3 Pandal .. | | 4,668·91 |
| 4 White and colour washing | | 2,293·43 |
| 5 Uncovering and covering for temple car | | 263·00 |
| 6 Special Melam .. | | 2,048·00 |
| 7 Thevaram .. | | 1,994·00 |
| 8 Veda Parayanam .. | | 1,931·49 |
| 9 Gas lights .. | | 1,243·50 |
| 10 Illumination of electric lights .. | | 2,341·75 |
| 11 Other special items .. | *Amount.* RS. | .. |
| Orchestra .. | 360·00 | |
| Camel .. | 100·00 | |
| Perianagara .. | 80·00 | |
| Crackers .. | 459·00 | |
| Poori Vadyam .. | 18·00 | |
| Dama Vadyam .. | 125·00 | |
| Raja Vadyam .. | 132·00 | |
| Kudai "Pidithal" .. | 100·00 | |
| | | 1,374·00 |
| 12 Procession of car .. | | 431·80 |
| 13 Repairs to Vahanam including painting .. | | 2,293·79 |
| 14 Utensils .. | | 89·94 |
| 15 Yagasalai expenses .. | | 289·00 |
| 16 Abishekam, Neivethiam materials .. | | 2,891·54 |
| 17 Cloth for Utsavar .. | | 210·38 |
| 18 Invitations and advertisement .. | | 874·55 |
| 19 Repair works .. | | 231·90 |
| 20 Miscellaneous expenditure .. | | 730·15 |
| 21 Maintenance of fire Service Scouts, John Ambulance. | | 669·00 |
| 22 Sripadam meals .. | | 230·88 |
| 23 Dress to temple servants and Datchanai .. | | 2,374·00 |
| Total | | 36,680·09 |

1971

| வரிசை எண்ணும், விபரமும். | | தொகை. |
|---|---|---|
| | | ரூ. |
| 1 புஷ்பம் .. .. .. .. .. | | 5,000·00 |
| 2 ஸ்ரீபாதம் வகைக்கு .. .. .. | | 3,760·00 |
| 3 பந்தல் வகைக்கு .. .. .. | | 5,353·60 |
| 4 தேர் பிரிக்கவும் மூடவும், தேர் நிமித்தும் வகையரா. | | 353·00 |
| 5 சிறப்பு மேளம் வகைக்கு .. .. | | 2,899·00 |
| 6 தேவார பாராயண கோஷ்டி .. .. | | 1,872·00 |
| 7 வேத பாராயண கோஷ்டி .. .. | | 2,297·00 |
| 8 கியாஸ் லைட்டுகள் சப்ளை .. .. .. | | 1,636·40 |
| 9 மின் விளக்கு அலங்காரம் .. .. | | 2,000·00 |
| 10 இதரச் சிறப்புகள்— | | |
| பேண்டு வாத்தியம் .. .. .. | 360·00 | |
| ராஜ வாத்தியம் .. .. .. | 170·00 | |
| கெளரிகலை வாத்தியம் .. .. | 77·00 | |
| டமா வாத்தியம் .. .. .. | 165·00 | |
| பூரி வாத்தியம் .. .. .. | 18·00 | |
| ஒட்டகம் .. .. .. .. | 100·00 | |
| நகரா அடித்தல் .. .. .. | 88·00 | |
| முக வீணை .. .. .. .. | 25·00 | |
| குடை பிடித்தல் .. .. .. | 100·00 | |
| | | 1,103·00 |
| 11 வாண வேடிக்கை .. .. .. | | 490·00 |
| 12 எடுபிடி செலவு—கயிறு வகையரா .. | | 290·19 |
| 13 யாகசாலை வகைக்கு வேண்டிய சாமான் கள். | | 338·50 |
| 14 அபிஷேக நைவேத்திய சாமான் வகையரா | | 3,071·43 |
| 15 உற்சவத்திற்கு வேண்டிய ஜவுளிகள் .. | | 244·45 |
| 16 பத்திரிகை, விளம்பரச் செலவு .. .. | | 1,006·81 |
| 17 பலவகை செலவுச் .. .. .. | | 1,767·60 |
| 18 பாதுகாப்புச் செலவு— | | |
| தீயணைப்புப் படை .. .. .. | 550·00 | |
| செண்ட் ஜான் ஆம்புலன்ஸ் .. .. | 30·00 | |
| குழந்தை மீட்பு நிலையம் .. .. | 75·00 | |
| வாலிண்டியர்ஸ் சர்வீஸ் .. .. | 75·00 | |
| | | 730·00 |
| 19 ஆலயச் சிப்பந்திகள் வஸ்திர மரியாதை, தட்சணை முதலியன. | | 2,783·00 |
| 20 வெள்ளை அடிப்புச் செலவு .. .. | | 2,786·37 |
| ஆக மொத்தம் .. | | 39,782·44 |



கோவையில் வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகள்.

30. வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் எத்தனை வீடுகள் 1967 ஜூன் முடிய கட்டப்பட்டுள்ளன?

(இ) மேற்படி வீடுகளுக்கு எந்த அளவு வாடகை நிர்ணயம் செய்யப் பட்டிருக்கிறது?

விடை.—(அ) மொத்தம் 1,194 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

(இ) ரூ. 3-லிருந்து ரூபாய் 225 வரை வாடகை நிர்ணயம் செய்யப் பட்டிருக்கிறது.

(*a*) Total number of houses constructed—1,194.

(*b*) From Rs. 3 to Rs. 225.

பல்லடம் தாலுகாவிலுள்ள ஏரிகள்.

31. வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தாலுகாவில் உள்ள ஏரிகளின் எண்ணிக்கை என்ன?

(இ) அவற்றில் தூர் எடுக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

(உ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை.—(அ) பல்லடம் தாலுகாவில் பதினொன்று குளங்கள் உள்ளன. அவற்றில் 6 குளங்கள் பொதுப்பணித்துறையின் கண்காணிப்பில் உள்ளன.

(இ), (உ) இருகூர் குளத்திற்கும், ஒட்டர்பாளையம் குளத்திற்கும் தூர் எடுப்புத் தேவையில்லை. கண்ணம்பாளையம் குளத்திற்கும், நீலாம்பூர் குளத்திற்கும் ஏற்கெனவே தூர் எடுக்கப்பட்டுள்ளன. சூலூர் பெரிய குளத்திலும் சூலூர் செங்குளத்திலும் தூரெடுப்பது பற்றி ஆய்விலுள்ளது.

(*a*) There are 11 (eleven) tanks in Palladam taluk of which six tanks are under the control of the Public Works Department.

(*b*) and (*c*) Irugur and Odderpalayam tanks do not require any desilting. Kannampalayam and Nilambur tanks have already been desilted. The question of desilting the remaining two tanks, viz., Sulur large tank and Sulur Sengulam tank is under investigation.

பல்லடம் பகுதியில் குட்டைகள்.

32. வினா—திரு கே. என். குமாரசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை ஜில்லாவில் பல்லடம், சூலூர் பஞ்சாயத்து யூனியன் களுக்குட்பட்ட பிரதேசத்தில் 1968-ம் ஆண்டில் இருந்து குட்டைகள் ஏதேனும் அமைக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், எத்தனை குட்டைகள் கட்டப்பட்டன?

விடை—(அ) ஆம்.

(இ) பல்லடம் .. .. .. .. 19 குட்டைகள்.
சூலூர் .. .. .. .. 11 குட்டைகள்.

(*a*) Yes.

(*b*) Palladam—19 ponds.
Sulur—11 ponds.

திருப்பூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் வெட்டப்பட்ட சமுதாயக் கிணறுகள்.

33. வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1–1–1969 முதல் 31–12–1970 முடிய திருப்பூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் எத்தனை "சமுதாயக் கிணறுகள்" வெட்டப்பட்டுள்ளன?

விடை.—1–1–1969 முதல் 31–12–1970 முடிய திருப்பூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் "சமுதாயக் கிணறுகள்" எதும் வெட்டப்படவில்லை.

நகராட்சிகளுக்கு அரசு வழங்கிய கடன்.

34. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967–68, 1968–69 ஆகிய நிதி ஆண்டுகளில் நகராட்சி மன்றங்களுக்காக அரசு எவ்வளவு கடன் மானியம் வழங்கியுள்ளது ?

(இ) மேற்படி காலத்தில் எந்தெந்த நகராட்சிகளுக்கு எவ்வளவு கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது?

விடை.—(அ) அறிக்கை* மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

(இ) ஒன்றுமில்லை.

நகராட்சிமன்றங்களாக ஆக்கப்படவிருக்கும் ஊராட்சிமன்றங்கள்.

35. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969–70-ம் ஆண்டில் தமிழ்நாட்டில் எத்தனை பேரூராட்சி மன்றங்களில் இருந்து, தங்கள் பஞ்சாயத்து போர்டை நகராட்சிமன்றங்களாக ஆக்கவேண்டும் என்று ஒருமனதாக தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பப்பட்டுள்ளன ?

(இ) அவைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

விடை.—(அ) & (இ) ஒர் மனதாக தங்கள் பேரூராட்சிகளை மாற்ற வேண்டும் என்று தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ள பேரூராட்சிகளின் பெயர்களும், அத்தீர்மானங்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பற்றிய குறிப்புகளடங்கிய பட்டியலொன்று † சட்டப்பேரவையின் முன் பணிந்து வைக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் தேங்கியுள்ள சர்க்கரை.

36. வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் இன்றைய தேதி வரையில் விற்கப்படாமலிருக்கும் சர்க்கரையின் மதிப்பு எவ்வளவு?

(இ) அதனை உடனே விற்பனை செய்ய அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

விடை.—(அ) கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் 28–2–1971 வரை விற்கப்படாமலிருக்கும் சர்க்கரையின் மதிப்பு ரூ. 9,43,28,484 (சுங்கவரி நீங்கலாக).

(இ) இந்திய அரசுக்கு இதுபற்றி எழுதப்பட்டுள்ளது. லெவி கோட்டா (Levy Quota) சர்க்கரை 12,000 டன்னுக்குக் குறைவாயிருப்பதை 15,000 டன்னாக உயர்த்தும்படியும், எடுத்துச் செல்லப்படாமலிருக்கும் லெவி கோட்டாவை விசேட லெவி கோட்டாவாக இந்த அரசுக்கு ஒதுக்கும்படியும் மத்திய சர்க்கரை கையிருப்பு ஒன்றை (Buffer stock of sugar)

* 338–342-ம் பக்கங்களில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

† 343-ம் பக்கத்தில் மூன்றும் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



நிறுவும்படியும், சர்க்கரை மேலுள்ள சுங்க வரியைக் குறைக்கும்படியும் இந்திய அரசிடம் கேட்கப்பட்டுள்ளது. மற்ற மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட சர்க்கரையை அவைகள் எடுக்காததினால்தான் இவ்விதம் சர்க்கரைத் தேக்கம் ஏற்பட்டது. 1971-ம் ஆண்டு மே திங்களில் இந்திய அரசு தமிழ்நாட்டில் லெவி கோட்டாவை மேற்கொண்டு 16·50 டன் அதிகமாக உயர்த்தியுள்ளது. இதற்குப் பின்தான் சர்க்கரைக் கட்டுப்பாடு 25–5–1971 முதல் ரத்து செய்யப்பட்டுள்ளது. மத்திய கையிருப்பை நிறுவுவதில் இந்திய அரசு இதுவரையில் எந்தத் தீர்மானமும் எடுக்கவில்லை.

(*a*) The value of unsold stock of Sugar in Co-operative Sugar Mills as on 28th February 1971 is Rs. 9,43,28,484 (exclusive of excise duties).

(*b*) The matter has been taken up with the Government of India and they have been requested to increase this Government levy quota of sugar to 15,000 tonnes as against less than 12,000 tonnes at present and to allot the unlifted quantity of levy sugar as a special levy quota to this Government. The Government of India have also been requested to create a buffer stock of sugar and to reduce the excise duty on sugar The problem of accumulation arose mainly because of allottee States did not lift the quantity allotted to them. This problem will not arise now in view of decontrol. The Government of India have increased in levy quota to Tamil Nadu by another 16·50 tonnes in May 1971, soon after, sugar has been decontrolled with effect from 25th May 1971. Government of India have not taken any decision on the creation of buffer stock so far.

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட சர்க்கரை அளவு

37. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்டவினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் 1969–70-ம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் மதிப்பு என்ன ?

(இ) இதில் தேவை போக ஆண்டொன்றுக்கு வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் சர்க்கரையின் மதிப்பு என்ன ?

விடை—

(அ) 1969–70-ம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் மதிப்பு ரூ. 41,05,33,461 (ரூ. 41·05 கோடி).

(இ) இல்லை.

(*a*) Value of sugar produced during the year 1969–70, is Rs. 41,05,33,461 (Rs. 41·05 crores).

(*b*) Nil.

மரம் வளர்ப்புத் திட்டம்.

38. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மின்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1970–71-ம் ஆண்டில் ஆறு, கால்வாய், ஏரிக்கரையில் மரம் வளர்ப்புத் திட்டத்தை அமுல்படுத்த தமிழ்நாடு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

விடை—

1970–71-ம் ஆண்டில் ஆறு, கால்வாய், ஏரிக்கரையில் மரம் வளர்க்கும் திட்டத்தின் கீழ் தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, கோவை மாவட்டங்களில் ரூ. 2·17 லட்சம் செலவில் 503 ஹெக்டேர் பரப்பளவில் தேக்கு முதலிய கடின மரங்கள் நடப்பட்டுப் பராமரிக்கப்பட்டன.

[1971 ஜூலை 29

சிறுசேமிப்பு வசூல்

39. வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969–70 ம் ஆண்டில் நமது மாநிலத்தில் சிறு சேமிப்புத் திட்டத்தின்கீழ் எவ்வளவு தொகை சேமிக்கப்பட்டது ?

(இ) சிறு சேமிப்புத் திட்டத்தைத் தீவிரப்படுத்த அரசு என்னென்ன முயற்சிகளை மேற்கொண்டுள்ளது ?

விடை—

(அ) 1969–70·ம் ஆண்டில் மொத்த வசூல் ரூ. 40·34 லட்சம்.

(இ) சிறு சேமிப்புத் திட்டத்தை சுவரொட்டிகள், விளம்பரப் பலகைகள், சிறு வெளியீடுகள், நாடகங்கள், திரைப்படக்காட்சிகள் மூலம் தீவிரப் படுத்தப்படுகிறது. மேலும் கல்லூரி மாணவர்கள், உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் இவர்களிடையே ஆண்டுதோறும் சிறு சேமிப்பு குறித்த பேச்சுப் போட்டிகள் நடத்தப்படுவதோடு பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் எல்லா முக்கியப் பொருட்காட்சிகளிலும் சிறு சேமிப்புக் காட்சியரங்கங்கள் திறக்கப்படுகின்றன. சம்பள சேமிப்புத் தொகுதிகளில் சிறந்தவற்றிற்கும், திட்டத்தில் பெருமளவிற்கு சேமிப்புகளைபெறும் முகவர்களுக்கும், கேடயங்கள், கோப்பைகள் பரிசுகளாக வழங்கப்படுகின்றன. சிறந்த பணி செய்யும் முகவர்களுக்கு பாராட்டுக் கடிதங்கள், தோல் பைகள், பெயர்ப்பலகைகள், சிறு கடிகாரங்கள் போன்ற பரிசுகளும் கொடுக்கப்படுகின்றன. சிறு சேமிப்பு வசூலில் சிறந்த சாதனையை எய்திய மாவட்டங்களுக்குச் சுழற் கேடயங்கள் வழங்கப்படுவதோடு தனிப்பட்டவர்கள், தொழிலதிபர்கள், பல்வேறு தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் ஆகியோருக்கு மாநில ஆலோசனை வாரியத் துணைத் தலைவர் வேண்டுகோள் விடுப்பதுடன் இயன்ற இடமெல்லாம் பொதுமக்களை நேரடியாகவும் சந்திக்கிறார்.

40. வினா—**திரு. மா. பா. சாரதி :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்ற ஆண்டு சிறுசேமிப்புத் திட்டத்தின்கீழ் வசூல் செய்யப்பட்ட தொகை எவ்வளவு, மாவட்ட வாரியாக ?

விடை—

சென்ற ஆண்டு சிறு சேமிப்புத் திட்டத்தின்கீழ் வசூல் செய்யப்பட்ட நிகரத் தொகை ரூபாய் 424·77 இலட்சம். மாவட்டவாரியாக கீழே தரப்பட்டுள்ளது—

| | | நிகரத்தொகை (ரூ. இலட்சம்) |
|---|---|---|
| 1 | சென்னை .. .. .. | 124·24 |
| 2 | செங்கற்பட்டு .. .. .. | 31·66 |
| 3 | தென் ஆர்க்காடு .. .. | 66·93 |
| 4 | வட ஆர்க்காடு .. .. .. | 15·07 |
| 5 | தஞ்சாவூர் .. .. .. | 16·37 |
| 6 | திருச்சிராப்பள்ளி .. .. | 22·84 |
| 7 | மதுரை .. .. .. | 37·14 |
| 8 | ராமநாதபுரம் .. .. .. | 28·82 |
| 9 | திருநெல்வேலி .. .. .. | (—) 19·47 |
| 10 | சேலம் .. .. .. | 34·74 |
| 11 | கன்னியாகுமரி .. .. | (—) 3·00 |
| 12 | தர்மபுரி .. .. .. | 7·28 |
| 13 | கோயம்புத்தூர் .. .. | 51·50 |
| 14 | நீலகிரி .. .. .. | 10·65 |
| | மொத்தம் .. | 424·77 |



1971 ஜூலை 29]

வெட்டுக்கிளிகளினால் பயிர்களுக்குப் பாதிப்பு.

41. **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967–68, 1968–69 ஆகிய ஆண்டுகளில் நமது மாநிலத்தில் வெட்டுக்கிளிகளினால் பயிர்களுக்கு எந்தெந்த மாவட்டங்களில் எவ்வளவு ஏக்கர்களில் பாதிப்பு ஏற்பட்டது ?

(இ) வெட்டுக்கிளி ஒழிப்புக்காக எடுத்துக் கொண்ட தீவிர நடவடிக்கை யாது ?

விடை—

(அ) நமது மாநிலத்தில் வெட்டுக்கிளிகளினால் குறிப்பிடத்தக்க வகையில் எவ்விதப் பாதிப்பும் பயிர்களுக்கு ஏற்படவில்லை.

(இ) வெட்டுக்கிளிகளினால் பயிர்களுக்கு குந்தகம் எதுவும் குறிப்பிடத் தக்க வகையில் நேராத காரணத்தால், அதை ஒழிப்பதற்குத் தீவிரமான நடவடிக்கை எதுவும் தேவை இல்லை எனக் கருதப்படுகிறது. எனினும் B. H. C. என்ற பூச்சி மருந்து வெட்டுக்கிளிகளைக் கட்டுப்படுத்த பயன் படுத்தப்படுகிறது.

அரசுடைமையாக்கப்பட்ட பேருந்து வழித்தடங்கள்

42. **வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் 1970-ம் ஆண்டு முடிய எத்தனை பேருந்து வழித் தடங்கள் தேசியமயமாக்கப்பட்டுள்ளன ?

விடை—

1970-ம் ஆண்டு முடிய (31—12—1970) தேசியமயமாக்கப்பட்டுள்ள பேருந்து வழித்தடங்கள் 268.

1970–ம் ஆண்டு முடிய (31—12—1970) தேசியமயமாக்கப்பட்டுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை 431.

The number of routes taken over under the policy on Nationalisation till the end of 1970—268.

Total number of buses taken over under the policy on Nationalisation till the end of 1970—431.

*Irrigation tanks in Tirunelveli district.*

43. Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Works be pleased to state the total number of irrigation tanks in Tirunelveli district taluk wise for the period 1968 to 1970.

A.—

Number of Irrigation tanks in Tirunelveli district taluk-wise—

| *Serial number and name of taluk.* | | *P.W.D. tanks.* | | | *Total number of Minor Irrigation tanks Nos.* |
|---|---|---|---|---|---|
| | | *System tanks Nos.* | *Non-system tanks Nos.* | *Total Nos.* | |
| 1 | Tirunelveli .. .. | 109 | 13 | 122 | 131 |
| 2 | Nanguneri .. .. | 7 | 20 | 27 | 544 |
| 3 | Ambasamudram .. | 30 | 27 | 57 | 330 |
| 4 | Tenkasi .. .. | 51 | 19 | 70 | 400 |
| 5 | Sankarankoil .. .. | .. | 37 | 37 | 315 |
| 6 | Koilpatti .. .. | .. | 21 | 21 | 254 |
| 7 | Srivaikuntam .. .. | 29 | 1 | 30 | 131 |
| 8 | Tuticorin .. .. | 2 | .. | 2 | .. |
| 9 | Tiruchendur .. .. | 21 | 1 | 22 | 129 |
| | | | Total .. | 388 | 2,234 |

Grand total 388 plus 2,234=2,622 numbers.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பாசனக்குளங்களின் எண்ணிக்கை வட்டவாரியாக—

| வரிசை எண். | வட்டத்தின் பெயர். | பொதுப்பணித்துறை குளங்கள். | | | சிறுபாசனக் குளங்களின் மொத்த எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|
| | | திட்டத்தில் சேர்ந்துள்ள குளங்கள். | திட்டத்தில் சேராத குளங்கள். | மொத்த எண்ணிக்கை. | |
| 1 | திருநெல்வேலி .. | 109 | 13 | 122 | 131 |
| 2 | நாங்குநேரி .. .. | 7 | 20 | 27 | 544 |
| 3 | அம்பாசமுத்திரம் .. | 30 | 27 | 57 | 330 |
| 4 | தென்காசி .. .. | 51 | 19 | 70 | 400 |
| 5 | சங்கரன்கோயில் .. | .. | 37 | 37 | 315 |
| 6 | கோவில்பட்டி .. .. | .. | 21 | 21 | 254 |
| 7 | ஸ்ரீவைகுண்டம் .. | 29 | 1 | 30 | 131 |
| 8 | தூத்துக்குடி .. .. | 2 | .. | 2 | .. |
| 9 | திருச்செந்தூர் .. | 21 | 1 | 22 | 129 |
| | | | மொத்தம் .. | 388 | 2,234 |

கூட்டுத் தொகை 388+2,234=2,622.

*மாநிலத்தில் செயற்கைப் பட்டு தயாரிக்கும் ஆலைகள்.*

44. **வினா—திரு. கே. எஸ். ராமகிருஷ்ணன் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செயற்கைப் பட்டு தயாரிக்கும் ஆலைகள் மொத்தம் நம் மாநிலத்தில் எத்தனை உள்ளன ?



(இ) நம் மாநிலத்தில் உள்ள கைத்தறியாளர்களுக்குத் தேவையான அளவு செயற்கைப் பட்டு கிடைப்பதில்லை என்பது உண்மையா ?

(உ) செயற்கைப் பட்டு தட்டுப்பாடு தடுக்க ஒரு செயற்கைப் பட்டு உற்பத்தி ஆலை நம் மாநிலத்தில் நிறுவ ஏதாவது உத்தேசம் அரசுக்கு உண்டா ?

விடை—

(அ) தமிழ்நாட்டில் கோவையிலுள்ள தென்னிந்திய விஸ்கோஸ் லிமிடெட் என்ற நிறுவனம் ஒன்றுதான் செயற்கைப் பட்டு நூல் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளது.

(இ) செயற்கைப் பட்டு தேவையான அளவு நியாய விலைக்குக் கிடைப்பதில்லை என்ற புகார்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

(உ) இல்லை.

**(a) The South India Viscose Limited, Coimbatore, is the only mill in Tamil Nadu which is engaged in the production of art silk yarn.**

**(b) Complaints have been received that art silk yarn is not available in adequate quantities at fair prices.**

**(c) No.**

*வடாற்காடு மாவட்ட பீடித் தொழிலாளர்கள்.*

45. **வினா—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

வட ஆர்க்காடு ஜில்லாவில் உள்ள பீடித் தொழிலாளர் பயனடையும் விதத்தில் தொழில் சட்டங்கள் எவை எவை அமல் செய்யப்படுகின்றன?

விடை—

பீடித் தொழில் நிறுவனத்திலுள்ள வேலை, 1948-ம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் கீழ் உள்ள "அட்டவணை வேலைகளில்" ஒன்றாக உள்ளதால், பீடித் தொழில் நிறுவனங்கள் குறித்து, 1948-ம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் விதித்துறைகள் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 1968-ம் ஆண்டு மே திங்களில் இந்த வேலைக்கான குறைந்தளவு ஊதிய வீதங்களை அரசு மாற்றியமைத்தது.

(2) பின் வரும் சட்டங்கள், விதிகள் ஆகியவற்றின் விதித்துறைகள் செயல்படுவதை உயர்நீதிமன்றம் நிறுத்தி வைத்துள்ளதால், அவை செயல்படுத்தப்படவில்லை :—

(1) 1966-ம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழில் பணியாளர்கள் (வேலை நிபந்தனைகள்) சட்டமும் அதன்கீழ் வகுக்கப்பட்ட விதிகளும்.

(2) 1958-ம் ஆண்டு சென்னை பீடித் தொழில்வளாவுகள் (பணி நிலைமைகளை முறைப்படுத்துதல்) சட்டம்.

(3) 1958-ம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டமும் அதன்கீழ் வகுக்கப்பட்ட விதிகளும்.

(4) இந்தச் சட்டங்களுக்குக் கூடுதலாக, தொழில் தகராறுகள் சட்டத்தின் விதித்துறைகளின் பொதுப்பயனும் பணியாளர்களுக்குக் கிடைக்கிறது. இதன்மூலம் ஊதியங்கள் குறித்தும் தீர்ப்புக்காக அனுப்பப்பட்ட தகராறுகள் குறித்தும் சில தீர்வுகள் காணப்பட்டுள்ளன. உதாரணமாக, சில நிறுவனங்களில் (போனஸ்) பூரிப்பூதியம் குறித்துத் தீர்வு காணப்பட்டுள்ளது.

*தமிழ் நாட்டில் கிராம நல ஊழியர்கள்*

46. **வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கல்வி, உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் கிராம நல ஊழியர்கள் எத்தனை பேர் பணியாற்றுகின்றனர் ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டத்தைத் தவிர ஏனைய எல்லா மாவட்டங்களிலும், ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் 10 ஊர்நல உதவியாளர்கள் (முதல்தர ஊர்நல உதவியாளர் மூவர், இரண்டாம் தர ஊர் நல ஊழியர் 7 பேர்) உள்ளனர். மும்முர வேளாண்மை வளர்ச்சித் திட்டம் செயலிலிருக்கிற தஞ்சாவூர் மாவட்டத்தில், ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் 20 ஊர்நல உதவியாளர்கள் (I-ம் தர ஊர்நல உதவியாளர்கள் 6 பேர், II-ஆம் தர ஊர்நல உதவியாளர் 14 பேர்) பணியாற்றுகின்றனர். ஊர்நல உதவியாளர்களோடு மும்முர வேளாண்மை வட்டாரத் திட்டம் செயலிலுள்ள கீழ்க்கண்ட மாவட்டங்களில் 415 கிராம நிலை ஊழியர்களும் பணியாற்றுகின்றனர்.

| வரிசை எண். | மாவட்டத்தின் பெயர். | கிராம நிலை ஊழியர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1 | செங்கற்பட்டு .. .. .. .. .. | 125 |
| 2 | மதுரை .. .. .. .. .. | 100 |
| 3 | திருநெல்வேலி .. .. .. .. | 110 |
| 4 | கோயம்புத்தூர் .. .. .. .. | 80 |
| | மொத்தம் .. | 415 |

இந்தக் கிராமநிலை ஊழியர்கள் வேளாண்மைத் துறை இயக்குநர் ஆளுகையின் கீழ் உள்ளனர். பயிற்சி பெற்ற II-ஆம் தர ஊர்நல உதவியாளர்கள் கிடைக்கும்போது, கிராமநிலை ஊழியர்களுக்குப் பதிலாக அவர்கள் படிப்படியாக நியமிக்கப்படுவார்கள்.

There are 10 Gramasevaks Grade I Gramasevaks 3 and Grade II Gramasevaks 7 in each panchayat union in all the districts except Thanjavur. In Thanjavur district, where Intensive Agricultural Development Programme is in force, there are 20 Gramasevaks (Grade I 6 and Grade II Gramasevaks 14) in each panchayat union. Besides the Gramasevaks, there are 415 Village Level Workers working in the following districts where the Intensive Agricultural Area Programme is implemented :—

| *Serial number.* | *Name of district.* | *Number of Village Level Workers.* |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | Chingleput .. .. .. | 125 |
| 2 | Madurai .. .. .. | 100 |
| 3 | Tirunelveli .. .. .. | 110 |
| 4 | Coimbatore .. .. | 80 |
| | Total .. | 415 |

These Village Level Workers are under the control of the Director of Agriculture. They will be gradually replaced by Gramasevaks, Grade II when trained Gramasevaks, Grade II become available.





## அகதிகள் புனர்வாழ்வு

47. வினா—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பர்மா, இலங்கை போன்ற நாடுகளிலிருந்து 1970-ம் ஆண்டு முடிய நமது நாட்டிற்கு அகதிகளாக வந்தவர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்கள் புனர்வாழ்விற்கு அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?

*A*.—(*a*) 1,15,111 Burma repatriates and 25,119 Ceylon repatriates arrived up to 1970.

(*b*) Rehabilitation assistance is accorded in the following schemes: –

***Burma Repatriates.—***

1. Training Scheme in Technical Training Centre at Mana.
2. Training Scheme in Driving Light and Heavy Duty Vehicles at Coimbatore and Tiruchirappalli.
3. Pre-Industrial Training Institute at Gummidipoondi and Tiruchirappalli.
4. Tractor Training and Testing station, Budni, Madhya-Pradesh.
5. Training in Messrs. Wavin India Limited and Messrs. Woodshine Limited.
6. Work Centre at Pudupattinam, Thanjavur district and Mondiamman Nagar in Chingleput district, for training in tailoring.
7. Loans for agriculture.
8. Housing and Business Loans Schemes, provision of bunks and stalls.
9. Educational concessions and freeships.
10. Priorities in Employment.

***Ceylon Repatriates.—***

1. Tea Plantation Schemes in The Nilgiris district.
2. Rubber Plantation in Kanyakumari district.
3. Land Colonisation Schemes.
4. Employment opportunities in mechanised fishing.
5. Grant of Housing Loan and Business Loan.
6. Grant of Agricultural Loan to repatriates who own lands.
7. Grant of assistance to repatriates who wish to purchase agriculture land in a place of their choice.
8. Employment opportunities in Co-operative Spinning Mills.
9. Educational concessions and freeships
10. Priorities in Employment.

விடை.—

(அ) 1970-ஆம் ஆண்டு முடிய 1,15,111 பர்மா அகதிகளும் 25, 119 இலங்கை அகதிகளும் இங்கு வந்து சேர்ந்தனர்.

(இ) பின்வரும் திட்டங்கள் மூலம் மறுவாழ்வு உதவி வழங்கப் படுகிறது :—

பர்மா அகதிகள்—

1. மாதவிலுள்ள தொழில் பயிற்சி நிலையத்தில் பயிற்சியளிக்கும் திட்டம்.

2. கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி போன்ற இடங்களில் இலேசான வண்டிகள், கனரக வண்டிகளை ஓட்டும் பயிற்சித் திட்டம்.

3. கும்மிடிப்பூண்டி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலுள்ள புகு முகத் தொழிற் பயிற்சி நிலையங்கள்.

4. டிராக்டர் பயிற்சி-சோதனை நிலையம், பட்னி, மத்தியபிரதேசம்.

5. திருவாளர்கள் வேவின் இந்தியா லிமிடெட், திருவாளர்கள் உட்ஷைன் லிமிடெட் ஆகியவற்றில் பயிற்சி.

6. தஞ்சாவூர் மாவட்டம், புதுப்பட்டினத்திலும், செங்கற்பட்டு மாவட்டம், மொண்டியம்மன் நகரிலும் தையற்கலைப் பயிற்சிக்கான பணி நிலையம்.

7. வேளாண்மைத் தொழிலுக்கான கடன்கள்.

8. வீடு கட்டுவதற்கும், தொழில் ஆரம்பிப்பதற்கும் உரிய கடன் திட்டங்கள், சிறு கடைகளுக்கும், பெட்டிக்கடைகளுக்கும் ஏற்பாடு செய்தல்

9. கல்விச் சலுகைகளும், இலவசக் கல்வி உதவியும்.

10. வேலை அளிப்பதில் முதற்சலுகைகள்.

இலங்கை அகதிகள்—

1. நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தோட்டத் திட்டங்கள்.

2. கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தோட்டம்.

3. நிலக்குடியேற்றத் திட்டங்கள்.

4. விசைப்படகு மூலம் மீன் பிடிக்கும் தொழில் வேலைவாய்ப்புகள்.

5. வீட்டுக்கடனும், தொழில் கடனும் வழங்குதல்.

6. சொந்த நிலங்கள் வைத்திருக்கும் அகதிகளுக்கு வேளாண்மைக் கடன்களை வழங்குதல்.

7. அகதிகள் விரும்புகிற இடங்களில், வேளாண்மைத் தொழிலுக்கு நிலம் வாங்க அவர்களுக்கு உதவி வழங்குதல்.

8. கூட்டுறவு நூற்பாலைகளில் வேலைவாய்ப்புகள்.

9. கல்விச் சலுகைகளும், இலவசக் கல்வி உதவியும்.

10. வேலை அளிப்பதில் முதற் சலுகைகள்.

## தொழு நோய்க்குத் தனி மருத்துவ மனைகள்.

48 வினா—**திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு பொது நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தொழுநோய் பீடிக்கப்பட்டிருப்பவர்களுக்கென தனியே மருத்துவமனைகளை அரசு அமைத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எங்கெங்கு ?

விடை.—(அ) ஆம்.

(இ) ஓர் விவர அறிக்கை * சட்டப்பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

* 158–163-ம் பக்கங்களில் நான்காம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



## மன நோய் மருத்துவ மனைகள்.

49. வினா—**திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு பொதுநலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட. வினாவுக்கு விடையளிப்பாரா—

நமது தமிழ்நாட்டில் தற்போது மனநோய் மருத்துவ மனைகள் எங்கெங்கு நடத்தப்பட்டு வருகின்றன ?

விடை.—

தமிழ்நாட்டில் அரசு மனநோய் மருத்துவமனை சென்னையிலுள்ள கீழ்ப்பாக்கத்தில் மட்டுமே நடத்தப்பட்டு வருகின்றது.

**In Tamil Nadu, there is only one Government Mental Hospitai, Kilpauk, Madras.**

## மாநிலத் திட்டக்குழுவின் பணிகள்.

50 வினா—**திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் மாநிலத் திட்டக்குழுவின் பணிகள் யாவை ?

விடை.—இம்மாநிலத்தின் இயற்பொருள், மூலதனம், தொழில் நுட்பப் பணியாளர் உட்பட கிடைக்கும் ஆட்படை ஊற்றம் **(Human resources)** முதலியவற்றைச் சீர்தூக்கிப் பார்த்து இவற்றுள் எவையேனும் மாநிலத்தின் வளர்ச்சித் தேவைக்கேற்ப அமையாது இருப்பின் அவற்றை மேம்படுத்துவதற்கான வழிவகைகளை நாடி அறிதல்,

(2) மாநில வளங்களைச் செவ்வையாகவும் சீராகவும் பயன்படுத்துவதற்கு நீண்டகாலத் திட்டமொன்றை உருவாக்குதல்,

(3) பொருளாதார வளர்ச்சியைக் குன்றச் செய்யும் கூறுகளைச் சுட்டிகாட்டி, இன்றைய சமூக, அரசியல் சூழ்நிலையில், ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறுவதற்கு அமையவேண்டிய நிலைமைகளைப் பற்றி முடிவு செய்தல்,

(4) தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்கு வசதியாக இருப்பதற்கு அல்லது இன்றைய பொருளாதார நிலை, நடப்புக் கொள்கைகள், மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியவற்றைக் கருதிப் பார்த்து அல்லது கருத்துரை வேண்டி அரசினால் அனுப்பப்பட்ட குறிப்பிட்ட பிரச்சினைப் பற்றிப் பரிசீலித்து பொருத்தமெனத் தமக்குத் தோன்றக்கூடிய இடைக்காலப் பரிந்துரைகளை அல்லது அதற்குத் துணை செய்கிற பரிந்துரைகளைச் செய்தல்,

இவை திட்ட ஆணைக்குழுவின் பணிகளாக அமையும்.

**The Planning Commission will—**

**(1) make an assessment of the material, capital and human resources of the State, including technical personnel and investigate the possibilities of augmenting such of these resources as are found to be deficient in relation to the State's requirements ;**

**(2) formulate a long-term Plan for the most effective and balanced utilisation of the State's resources ;**

**(3) indicate the factors which are tending to retard economic development and determine the conditions which in view of the current social and political situation, should be established for the successful execution of the Plan ; and**

**(4) make such interim or ancillary recommendations as appear to it to be appropriate either for facilitating the discharge of the duties assigned to it ; or on a consideration of the prevailing economic condition, current policies, measures and development programmes; or on an examination of such specific problem as may be referred to it for advice by this Government.**

கைத்தறித் தொழிலில் நெருக்கடி.

51. வினா—**திரு. க. சுப்பு** : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கைத்தறித் தொழிலில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைப் போக்கத் தமிழக அரசு தயாரித்துள்ள திட்டம் யாது ?

விடை.—தற்பொழுது கைத்தறித் தொழிலுக்கு எந்தவிதமான புதிய நெருக்கடியும் ஏற்படவில்லை.

**At present, there is no new crisis for the Handloom Industry.**

கைத்தறி நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு.

52. வினா—**திரு. க. சுப்பு** : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விசைத் தறியைப் புகுத்துவதால் பாதிக்கப்பட்டுள்ள நெசவாளர்களுக்கு உதவுவதற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

விடை.—விசைத் தறிகளைப் புகுத்துவதால் வேலையிழந்துள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு மாற்று வேலை வாய்ப்புகள் வழங்கிட அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பின்வருவனவையாகும் :—

(1) எந்தக் கைத்தறித் துணி வகைகளுக்கு அதிக கிராக்கி இருக்கிறதோ அவைகளைத் தயாரிப்பதில் கைத்தறி நெசவாளர்களுக்குப் பயிற்சி நிலையங்கள் அமைத்தல்.

(2) அரிசனங்களுக்கு வழங்கப்பட்டிருப்பது போல் சிறு தொழில்கள் ஆரம்பிப்பதற்காக கைத்தறி நெசவாளர்களுக்கு வட்டியில்லாக் கடன்கள் வழங்குதல்.

(3) விசைத்தறிகளைப் புகுத்துவதால் வேலை இழக்கிற கைத்தறி நெசவாளர்களுக்கு வேலை அளிப்பதில் முதற் சலுகை காட்டுமாறு கூட்டுறவு நூற்பாலைகள், செயல்பட இயலா நிலையிலுள்ள ஆலைகள், தனியார் ஆலைகள், பெரிய தொழில் நிறுவனங்கள் ஆகியவைகளுக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது.

(4) அரிசனங்களுக்கு வழங்கப்படுகிற அதே அடிப்படையில் வேளாண்மைக்கேற்ற தரிசு நிலங்களை நெசவாளர்களுக்கு ஒப்படை செய்வதில் முதற் சலுகை அளித்தல்.

(5) அரிசனங்களுக்கு வழங்கப்படும் கல்விச் சலுகைகள், விசைத்தறிகள் புகுத்துவதால் வேலையிழந்துள்ள கைத்தறி நெசவாளர்களுக்குப் பொருந்துமாறு செய்யப்படுகிறது.

**The following are the measures taken by the Government for providing alternative employment opportunities to the Handloom Weavers who will be displaced by the introduction of powerlooms:—**

**1. Establishment of training centres for giving training to Handloom weavers in manufacturing varieties of handloom cloth for which there is good market.**

**2. Advancing of interest-free loans to handloom weavers for establishing small-scale industries as were given to Scheduled castes.**

**3. Co-operative Spinning Mills, Sick Mills and private mills and large industrial undertakings have been instructed to give preference to provide employment to the displaced Handloom Weavers by the introduction of powerlooms.**

**4. Preference in assignment of cultivable waste lands to weavers on the same basis as for Scheduled Castes.**

**5. Educational concessions given to Scheduled castes are made applicable to the handloom weavers displaced due to the introduction of powerlooms.**



*K. R. Sundaram Industrial Estate, Tiruvothiyur.*

**53 *Q*.—THIRU A.SWAMIDHAS : Will the Hon. the Minister for Industries be pleased to state the details of the Industries functioning in the K.R. Sundaram Industrial Estate near Tiruvothiyur in Madras City ?**

***A*.—A list of industries functioning in the K. R. Sundaram Industrial Estate (Private) Limited, Tiruvothiyur is furnished in the statement* appended.**

காஞ்சீபுரத்தில் வழங்கப்பட்ட நிலப் பட்டாக்கள்.

54. வினா—**திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு உணவு–வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971-ம் வருஷம் மே மாதம் 16-ம் தேதியன்று காஞ்சீபுரத்தில் முதலமைச்சர் எத்தனை பேர்களுக்கு இலவச நிலப் பட்டாக்களும் வீட்டுமனைப் பட்டாக்களும் வழங்கினார் ?

விடை—1971-ம் ஆண்டு மே திங்கள் 16-ம் தேதியன்று காஞ்சீபுரத்தில் முதலமைச்சர் 1,629 நிலப்பட்டாக்களும், 3,558 வீட்டுமனைப் பட்டாக்களும், வழங்கினார்.

கைத்தறித் தொழில் வளர்ச்சி.

55. வினா. **திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் நடப்பு திட்டக்காலத்தில் கைத்தறித் தொழில் வளர்ச்சிக்காக தமிழக அரசு ஒதுக்கியுள்ள தொகை எவ்வளவு ?

விடை.—கைத்தறித் தொழில் வளர்ச்சிக்கென்று நடப்பு திட்டக் காலத்தில் (1971–72) ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 1,79·91 லட்சமாகும்.

**During 1971–72 a sum of Rs. 1,79·91 lakhs has been provide for the growth of Handloom Industry.**

அரசுக்குச் சொந்தமான யானைகள்.

56. வினா.—**திரு என். கிட்டப்பா** : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக அரசுக்குச் சொந்தமான யானைகள் தற்போது எத்தனை எங்கெங்கே இருக்கின்றன ?

விடை.—45 யானைகள் தமிழக அரசுக்குச் சொந்தமாக உள்ளன; இவைகள் இருக்குமிடங்கள் வருமாறு—

(1) கோயம்புத்தூர் தென் கோட்டத்திலுள்ள வடகலையார் என்ற இடத்தில் 18 யானைகள் உள்ளன.

(2) முதுமலை வனவிலங்கு உய்விடத்தில் 25 யானைகள், உள்ளன.

(3) அரசு கிண்டி பூங்கா ஒதுக்குக் காட்டில் ஒரு யானையும் கோவை வ.உ.சி. பூங்காவில் ஒரு யானையும் உள்ளன.

தமிழ்நாட்டில் அரிசி உற்பத்தி அளவு.

57. வினா.—**திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்ச தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தமிழ்நாட்டில் 1970–71 ஆம் ஆண்டில் அரிசி உற்பத்தியின் அளவு என்ன ?

விடை.—1970–71-ல் அரிசி உற்பத்தியின் அளவு 53·03 மெட்ரிக் டன்கள் (மதிப்பீடு).

---

* 350-351-ம் பக்கத்தில் ஐந்தாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

அறநிலையங்கள் மூலம் வருமானம்.

58 வினா.—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் 1967–68 முதல் 1970–71 வரை இந்து அறநிலையத் துறை மூலம் மொத்த வருமானம் எவ்வளவு ? 1967–68-ல் எவ்வளவு ?

*A.*—

**The Member is apparently referring to the contribution and audit fees collected from the religious institutions for defraying the expenses incurred on account of the administration of the religious institutions by the Government and auditing of temple accounts with reference to section 92 of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959. The above two items of levy are credited to the Hindu Religious and Charitable Endowments Fund created under the Act. The total amount collected by the Hindu Religious and Charitable Endowment (Administration) Department for the years 1967–68 to 1970-71 was Rs. 1,70,67,197. The amount collected for the year 1967–68 was Rs. 40,03,470.**

தமிழ்நாடு 1959-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் 92-வது பிரிவில் சொல்லியுள்ளபடி, அறநிலையங்களின் நிர்வாகம் குறித்தும், கோயில் செலவுகளைத் தணிக்கை செய்வதற்காகவும் அரசுக்கு ஏற்பட்ட செலவினை ஈடு செய்வதற்காக அரசினால் உதவித் தொகையாகவும், தணிக்கைக் கட்டணமாகவும் வசூலிக்கப்படுகின்ற தொகை பற்றி உறுப்பினர் குறிப்பிடுகிறார் என்று கொள்ளப்படுகிறது. மேற்கூறிய இரண்டு இனங்களின் மூலம் கிடைக்கின்ற தொகை, மேற்படிச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப் பட்டுள்ள இந்து சமய அறக்கட்டளை நிதியில் சேர்க்கப்படுகிறது. இந்து சமய அறக்கட்டளை (ஆட்சித்) துறையினரால் 1967–68 ஆம் ஆண்டு முதல் 1970–71 ஆம் ஆண்டு வரை வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 1,70,67,197. 1967–68 ஆண்டில் வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 40,03,470 ஆகும்.

இராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சித் திட்டங்கள்.

5 வினா.—**திரு. க. சுப்பு :** மாண்புமிகு உணவு–வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம் "பிற்பட்ட பிரதேசம்" என அறிவிக்கப் பட்டதைத் தொடர்ந்து அதனுடைய வளர்ச்சிக்காகத் தமிழக அரசு வகுத்துள்ள திட்டங்கள் யாவை ?

***A.*—Ramanathapuram district has been selected under the Centrally sponsored Special Rural Works Programme in drought-prone areas. The following schemes have been taken up for execution under this programme:—**

**(1) Formation of pucca roads, conversion of existing 'katcha' roads into 'pucca' roads ;**

**(2) Major and Minor Irrigation Works including disilting of supply channels, renovation of tanks ;**

**(3) Soil conservation including construction of percolation ponds, check dam, contour bunding ;**

**(4) Afforestation.**

**The total allotment for Ramanathapuram district is Rs. 200 lakhs to be spent over a period of four years from 1970–71 to 1973–74.**

**2. This district has also been declared by the Government of India as industrially backward eligible for concessions to be offered by the Industrial Development Bank of India and Industrial Finance Corporation**



**of India. The East Ramanathapuram Development District has been selected for outright grant or subsidy by the Government of India, amounting to one-tenth of the fixed capital investment of not more than Rs. 50 lakhs each in the area. New industries to be set up in this part of the district are also eligible for a reduction of 15 per cent in power tariff with consequent reduction in tax.**

அடிக்கடி வறட்சி காணும் பகுதிகளில் மத்திய அரசு செயற்படுத்தும் சிறப்பு கிராமப் பணிகள் திட்டத்தின் கீழ் இராமநாதபுர மாவட்டம் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட திட்டப்பணிகள் நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன :—

(1) வேலை நிறைவு பெற்ற சாலைகள் அமைத்தல் தற்போதுள்ள கரடுமுரடான சாலைகளை வேலை நிறைவு பெற்ற சாலைகளாக மாற்றியமைத்தல்.

(2) நீர்வழங்குக் கால்வாய்களைத் தூர் எடுத்தல், ஏரிகளைப் புதுப்பித்தல் உட்பட பெரிய, சிறிய பாசனப் பணிகளை மேற்கொள்ளுதல்.

(3) கசிவு நீர்க் குட்டைகள், தடுப்பு அணை, மேடுபள்ளத்திற் கேற்ப வரப்பிடுதல் உட்பட நிலவளப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.

(4) காடு வளர்ப்பு.

1970–71-ஆம் ஆண்டு முதல் 1973–74-ஆம் ஆண்டு வரையிலுள்ள 4 ஆண்டு காலத்திற்குச் செலவிட, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ. 200 லட்சம் மொத்த நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

2. இந்த மாவட்டம் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய நிலையிலுள்ளதென்றும், இந்திய தொழில் வள வங்கியாரும், இந்தியத் தொழில நிதியுதவிக் கழகத்தாரும் சலுகைகள் வழங்கப்படுவதற்குத் தகுதி வாய்ந்ததென்றும் இந்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசால் நேரடி மானியம் அல்லது உதவித் தொகை வழங்கப்படுவதற்கு கிழக்கு இராமநாதபுரம் வளர்ச்சி மாவட்டம் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. ரூ. 50 லட்சத்திற்கு மேற்படாமல் நிலையான மூலதன முதலீட்டில் 1/10 பாகம் அளவிற்கு இந்திய அரசால் அப்பகுதிக்கு மானியம் அல்லது உதவித் தொகை வழங்கப்படும். மாவட்டத்தின் இந்தப்பகுதியில் அமைக்கப்படவிருக்கிற புதிய தொழிற்சாலைகள் 15 சத விகிதம் மின்சாரக் கட்டண குறைப்புக்கும் அதன் விளைவாக வரிக்குறைப்புக்கும் தகுதியுடையனவாகும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் கடல் அரிப்பு

**60. வினா—திரு. க. சுப்பு :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மண்டபம், வேதாளை, கீழக்கரை உள்ளிட்ட கடற்பகுதிகளிலுள்ள பாறைகள் வெட்டி எடுத்துச் செல்லப் படுவதால் கடல் அரிப்பு அபாயம் அதிகரித்தும் மீன் இன வளர்ச்சிக்கு இடையூறுகள் ஏற்பட்டும் வருவதைத் தடுக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

**விடை.**—ஆய்வுக் குழுவின் பரிவுரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பவழப் பாறைகளைப் பாதுகாக்க வேண்டுமென்று குழு குறிப்பிட்ட பகுதிகளில் அவற்றைப் பாதுகாக்கும் வகையில் அந்த ஆய்வுக் குழு சுட்டிக்காட்டியுள்ள நுழைவு மறைக்கப்படுவதற்குரிய பகுதிகளை மாவட்டத் தடை ஆணைப் புத்தகத்தில் பதிவு செய்யுமாறு இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களுக்குத் தேவையான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. பவழப்பாறைகள் ஆய்வுக்குழுவின் பரிவுரைகளையொட்டித் தடை செய்யப்படாத பகுதிகளில் பவழப் பாறைகள் வெட்டியெடுத்தலை வரையறுக்கும் பொருட்டு, இப்பகுதிகளில் பவழப்பாறைகளை வெட்டி எடுப்பதற்கான அனுமதி வேண்டும் மனுக்களை மேலனுப்புகையில் வழக்கமான

நிபந்தனைகட்குக் கூடுதலாக, கீழ்க்கண்ட சிறப்பு நிபந்தனைகளையும் தெரிவிக்குமாறு, இராமநாதபுரம்-திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

(1) கரையோர நிலத்துக்கும் தீவுகளுக்குமிடையில் கடற்பக்கம் பார்த்துள்ள பகுதிகளில் மட்டுமே பவழப்பாறைகள் வெட்டி எடுக்கப்பட வேண்டும்.

(2) தீவுகளில் தாழ் அலை கடற்கரைப் பகுதியிலிருந்து 100 மீட்டர் தொலைவுக்குள்ளாக பவழங்கள் வெட்டி எடுக்கப்படக்கூடாது.

(3) துறைமுக அதிகாரிகளின் மேற்பார்வையில் நீரில் பொருத்தமான அறிவிப்பு மிதவைகளைப் பொருத்தி வைப்பதன் மூலம், தடை செய்யப்படாத பகுதிகளில் சுரங்கம் தோண்டுவதற்குரிய பகுதிகள் தெளிவாக வரையிடப்பட வேண்டும்.

இத் தீவுகளிற் பெரும்பான்மையானவை பரப்பளவில் மிகச் சிறியவை ; எனவே அத்தீவுகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் இப்பகுதிகளில் பவழக் கற்களை வெட்டியெடுப்பதற்கு அனுமதி வேண்டுகிற மனுக்களை மேலனுப்பு முன்னர் மாநிலத் துறைமுக அதிகாரியையும் கலந்தாலோசிக்குமாறும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

Accepting the recommendations of the Study Team, necessary instructions have been issued to the Collectors of Ramanathapuram and Tirunelveli to enter the objectionable areas indicated by the Study Team in the prohibitory order book so as to preserve the coral reefs in the area. In order to restrict the mining in the non-prohibited zone in conformity with the recommendations of the coral reefs study team, the Collectors of Ramanathapuram and Tirunelveli have been requested to suggest the following special conditions also in addition to usual conditions while forwarding applications for mineral concession for coral limestone in these areas —

(i) Mining of coral should be only on the sea ward side in between the mainland and the Islands ;

(ii) Corals should not be mined within a distance of 100 metres from the low tide shoreline of the Islands.

(iii) The areas of mining in non-prohibited zone should be clearly demarcated by fixing suitable buoys in the water under the supervison of the port officials.

As most of the Islands are very small in extent, with a view to protect the Islands, the Collectors have also been requested to consult the State Port Officers before forwarding the applications for mineral concession for coral limestone in these areas.

### நவீன விவசாயமுறைப் பயிற்சிக்கு வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டவர்கள்.

**61. வினு—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா :—

நவீன விவசாய முறையில் பயிற்சி பெறுவதற்காக இந்த மாநிலத்தில் இருந்து வெளிநாடுகளுக்கு 1969–70, 1970–71 ஆகிய ஆண்டுகளில் எத்தனை பேர்கள் அனுப்பப்பட்டுள்ளார்கள் ?

**விடை.**—நவீன விவசாய முறையில் பயிற்சி பெறுவதற்காக இம்மாநிலத்தில் இருந்து வெளி நாடுகளுக்கு 1969-ல் 4 பேரும், 1970-ல் 7 பேரும், 1971-ல் இன்றைய வரை 2 பேரும் அனுப்பப்பட்டுள்ளனர்.



### உரம் தயாரிப்பதில் பரிசுபெற்ற நகரசபைகள்.

**62. வினு—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :—

1970–71-ஆம் ஆண்டில் தமிழகத்தில் கம்போஸ்ட் உரம் திறமையாக தயாரிக்கப்பட்டது என்பதற்காக எந்தெந்த நகர சபைகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன ?

**விடை.**—1970-71ஆம் ஆண்டிற்கு கீழ்க்கண்ட நகரசபைகள் பரிசுகள் பெறத்தகுதியுடையன என்று விவசாய இயக்குநர் பரிந்துரை செய்துள்ளார்—

| | | |
|---|---|---|
| (1) தேர்வு சிறப்பு நிலை | .. .. | தஞ்சாவூர். |
| (2) முதல் நிலை | .. .. .. | மாயூரம். |
| (3) இரண்டாம் நிலை | .. .. .. | பழனி. |
| (4) மூன்றும் நிலை | .. .. .. | சிவகங்கை. |

அவருடைய பரிந்துரை அரசு பரிசீலனையிலுள்ளது.

The Director of Agriculture has recommended the names of following Municipalities for declaration as winners for the year 1970–71:—

| | | |
|---|---|---|
| 1. Special and Selection Grade | .. | Thanjavur. |
| 2. First Grade | .. .. .. | Mayuram. |
| 3. Second Grade | .. .. .. | Palani. |
| 4. Third Grade | .. .. .. | Sivaganga. |

The matter is under the consideration of Government

### ஆதித் திராவிடர்கள் கோயில் அறங்காவலர்களாக நியமனம்.

**63 வினு.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :—

கோயில்களில் அறங்காவலர்கள் நியமிக்கப்படும் போது ஆதி திராவிடர்களுக்கு எத்தனை சதவீதம் இடம் அளிக்கப்படுகிறது ?

*A.*—No percentage has been fixed for appointing Harijans as Trustees in Temples. Whenever Harijans apply, preference is being given to them, if they are suitable for such appointments and are free from the disqualifications enumerated under section 26 of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959.

அரிசன வகுப்பினரை கோயில்களில் அறங்காவலர்களாக நியமிப்பதற்குச் சதவீதம் எதுவும் முடிவு செய்யப்படவில்லை. அப்பதவியில் நியமிக்கப்பட பொருத்தமுள்ளவர்களாகவும் தமிழ்நாடு 1959-ம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்டத்தின் 26-வது பிரிவின் கீழ் தொகுத்துக் கூறியுள்ள தகவின்மைகள் இல்லாதவர்களாகவும் இருந்தால் அவர்கள் இப்பதவிகளுக்கு விண்ணப்பித்துக் கொள்ளும்போதெல்லாம் இப்பதவியில் நியமிக்கப்பட அவர்களுக்கு முதலிடம் அளிக்கப்படுகிறது.

*Provision of house-site for scavengers in Tamil Nadu.*

**64** *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. Minister for Harijan Welfare be pleased to State :—

The steps taken by the Government so far to provide house or house sites for the scavengers employed in Panchayats, 'Municipalities and Corporations in Tamil Nadu ?

*A.*—The number of houses constructed for sweepers and scavengers in Municipalities and Town Panchayats so far is as follows :—

| | |
|---|---|
| Municipalities .. .. .. | 2,046 |
| Town Panchayats .. .. .. | 1,666 |

There is no scheme for construction of houses for sweepers and scavengers employed in Corporations. There is no special scheme for provision of house-sites to scavengers as such.

நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும், உள்ள தெரு பெருக்குபவர்களுக்கும் துப்புரவுப் பணியாளர்களுக்கும் இதுவரை கட்டப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை பின் வருமாறு :—

நகராட்சிகள்—2,046.

பேரூராட்சிகள்—1,666.

மாநகராட்சிகளில் நியமிக்கப்பட்டுள்ள தெரு பெருக்குபவர்களுக்கும், துப்புரவு பணியாளர்களுக்கும் வீடுகள் கட்டுவதற்கான திட்டம் எதுமில்லை. இதைப் போன்று துப்புரவுப் பணியாளர்களுக்கென்று வீட்டு மனைக்கு வகை செய்வதற்கான சிறப்புத் திட்டம் எதுமில்லை.

ரூபாய் நோட்டுகள் இரட்டிப்பு சம்பந்தமாகப் பதிவான வழக்குகள் .

**65. வினா—திரு சு. துரைசாமி :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கரன்சி நோட்டுகள் இரட்டிப்பு சம்பந்தமாக 1970–71-ல் தமிழ் நாட்டில் எவ்வளவு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**விடை.—**

| மாவட்டம். | பதிவு செய்யப்பட்ட வழக்குகள். |
|---|---|
| தஞ்சாவூர் .. .. .. .. | 2 |
| மதுரை .. .. .. .. | 2 |
| திருநெல்வேலி .. .. .. | 3 |
| கோயம்புத்தூர் .. .. .. | 1 |
| சேலம் .. .. .. .. .. | 1 |
| வட ஆற்காடு .. .. .. .. | 1 |
| சென்னை .. .. .. .. | 5 |
| மொத்தம் .. | 15 |

கள்ளநோட்டுகள் சம்பந்தமாகப் பதிவான வழக்குகள்.

**66. வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

**தமிழ் நாட்டில் கள்ளரூபாய் நோட்டுகள் அச்சடித்ததாக எத்தனை வழக்குகள் 1970–71 மே முடிய பதிவாகியுள்ளன ?**





*A.*—

| District. | Number of counterfeit currency cases reported. | |
|---|---|---|
| | 1970. | (up to May) 1971. |
| (1) | (2) | (3) |
| Railway Police .. .. .. | 8 | 4 |
| Tiruchirappalli .. .. .. | 53 | 14 |
| South Arcot .. .. .. .. | .. | .. |
| Thanjavur .. .. .. .. | 13 | 7 |
| Chingleput East .. .. .. | 1 | .. |
| Chingleput West .. .. .. | .. | .. |
| Madurai Urban .. .. .. | 9 | 3 |
| Madurai North .. .. .. | 1 | .. |
| Ramanathapuram .. .. .. | .. | .. |
| Tirunelveli .. .. .. .. | 15 | 7 |
| Kanyakumari .. .. .. | 4 | 2 |
| Coimbatore .. .. .. .. | 48 | 7 |
| Salem .. .. .. .. | 22 | 9 |
| Dharmapuri .. .. .. .. | 5 | .. |
| The Nilgiris .. .. .. .. | 5 | 6 |
| North Arcot .. .. .. | 16 | 2 |
| Madras City .. .. .. .. | 56 | 26 |
| Total .. | 256 | 87 |

| மாவட்டம். | பதிவான கள்ளநோட்டு வழக்குகள். | |
|---|---|---|
| | 1970 | 1971 (மே முடிய) |
| ரெயில்வே போலீஸ் .. .. .. | 8 | 4 |
| திருச்சிராப்பள்ளி .. .. .. | 53 | 14 |
| தஞ்சாவூர் .. .. .. .. | 13 | 7 |
| தென் ஆற்காடு .. .. .. .. | .. | .. |
| செங்கல்பட்டு கிழக்கு .. .. .. | 1 | .. |
| செங்கல்பட்டு மேற்கு .. .. .. | .. | .. |
| மதுரை (அர்பன்) .. .. .. | 9 | 3 |
| மதுரை (வடக்கு) .. .. .. | 1 | .. |
| இராமநாதபுரம் .. .. .. | .. | .. |
| திருநேல்வேலி .. .. .. .. | 15 | 7 |
| கன்னியாகுமரி .. .. .. .. | 4 | 2 |
| கோயம்பத்தூர் .. .. .. .. | 48 | 7 |
| சேலம் .. .. .. .. .. | 22 | 9 |
| தர்மபுரி .. .. .. .. | 5 | .. |
| நீலகிரி .. .. .. .. | 5 | 6 |
| வட ஆற்காடு .. .. .. .. | 16 | 2 |
| மதறுஸ் .. .. .. .. | 56 | 26 |
| | 256 | 87 |

தமிழ் நாட்டிலுள்ள திரை அரங்குகள்.

**67. வின—திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது நமது மாநிலத்தில் உள்ள சினிமாக் கொட்டகைகள எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) அவைகளுள், முறையே நிரந்தர (Permanent) தற்காலிக (Touring) சினிமாக் கொட்டகைகள் எவ்வளவு ?

(*a*) 1,219 (One thousand two hundred and nineteen).

(*b*) Permanent .. .. 669

Touring .. .. .. 550

பிச்சைக்கார விடுதிகள்.

**68. வின—திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தற்போது நமது மாநிலத்தில் பிச்சைக்காரர்களுக்கான விடுதிகள் எந்தெந்த நகரங்களில் இருக்கின்றன ?

**விடை.**—நமது மாநிலத்தில் கீழ்க்கண்ட இடங்களில் பிச்சைக்காரர்களுக்கான விடுதிகள் இருக்கின்றன :—

1. அரசினரால் நடத்தப்படுபவை—

(அ) மேல்பாக்கம்.

(இ) காஞ்சீபுரம்.

2. நகராட்சியினரால் நடத்தப்படுபவை —

(அ) செங்கல்பட்டு.

(ஆ) விருதுநகர்.

(இ) திருச்சிராப்பள்ளி.

(ஈ) கோயம்புத்தூர்.

(உ) மதுரை.

(ஊ) நாகர்கோயில்.

3. மேலே குறிப்பிட்டுள்ளவை தவிர சிதம்பரத்திலும் ஒரு இரவலர் விடுதி உள்ளது. இதற்கான செலவு நகராட்சியால் முதலில் மேற்கொள்ளப்பட்டு பிறகு அதை அரசு திருப்பிக் கொடுத்து விடுகிறது.

விமானம் மூலம் பூச்சி மருந்து தெளித்ததால் ஏற்பட்ட செலவு

**69. வின—திரு மா. பா. சாரதி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :—

1970–71-ல் வட ஆற்காடு மாவட்டத்தில் நிலக்கடலைப் பயிருக்கு ஆகாய விமானம் மூலம் பூச்சி மருந்து அடிப்பதற்கென (Aerial Spray) செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு ?



விடை—ஆகாய விமான மூலம் 1970–71-ம் ஆண்டு வட ஆற்காடு மாவட்டத்தில் 41,100 ஏக்கர் பரப்பளவில் நிலக்கடலைப் பயிருக்கு மருந்து தெளிக்கப்பட்டது. இதற்கான செலவு விவரம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது :—

| விவசாயப் பிரிவு. | | பரப்பளவு (ஏக்கர்). | விமான வாடகை. | பூச்சி மருந்து விலை. | இதர செலவு. | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | (ரூபாய் லட்சத்தில்) | | |
| வேலூர் .. | .. | 30,200 | 2·339 | 0·941 | 0·076 | 3·356 |
| இராணிப்பேட்டை | .. | 3,600 | 0·283 | 0·112 | 0·016 | 0·411 |
| செய்யாறு | .. | 7,300 | 0·636 | 0·206 | .. | 0·842 |
| மொத்தம் | .. | 41,100 | 3·258 | 1·259 | 0·092 | 4·609 |

நிலக்கடலை ஏற்றுமதி திட்டத்தின்கீழ் கடன்

**70 வின—திரு மா. பா. சாரதி :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் 1969–70 நிலக்கடலை ஏற்றுமதித் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு எவ்வளவு ரூபாய் கடன் வழங்கப்பட்டது ?

(இ) வட ஆற்காடு மாவட்டத்தில் மட்டும் எத்தனை பேருக்கு எவ்வளவு தொகை வழங்கப்பட்டுள்ளது ?

விடை—(அ) மணிலா ஏற்றுமதி சார்பு திட்டத்தின்கீழ் 1969–70-ஆம் வருடத்தில் ரூ. 61,01,335 கடன் தொகையாக வழங்கப்பட்டது.

(இ) 1969–70-ம் வருடத்தில் வட ஆற்காடு மாவட்டத்தில் மட்டும் 8,607 பேருக்கு ரூ. 29,18,581 கடன் தொகையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**(*a*) During 1969–70 a sum of Rs. 61,01,335 was disbursed as loan under the Groundnut Export Oriented Programme.**

**(*b*) The total loan disbursed was Rs. 29,18,581 to 8,607 applicants in North Arcot district alone during 1969–70.**

அன்னிய நாடுகளுக்கு மீன் ஏற்றுமதி

**71 வின—திரு. மா. பா. சாரதி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து சென்ற ஆண்டு எந்தெந்த நாடுகளுக்கு மீன் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது ?

(இ) அதன் மூலம் வந்த வருவாய் எவ்வளவு ?

விடை—(அ) தமிழ் நாட்டிலிருந்து சென்ற ஆண்டு (அதாவது 1970–71ல்) ஜப்பான், அமெரிக்கா (U.S.A.) இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, மோரீஷஸ், இங்கிலாந்து, ஜெர்மனி முதலிய நாடுகளுக்கு மீன் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

(இ) தமிழ்நாடு துறைமுகங்களின் வாயிலாக 1970–71-ல் ஏற்றுமதி செய்யப்பட்ட மீன் பொருள்களின் மதிப்பு 2·44 கோடி ரூபாயாகும்.

**(*a*) During 1970–71, fish products were exported from Tamil Nadu to Japan, America (U.S.A.), Ceylon, Singapore, Malaysia, Mauritius, England, Germany, etc.**

**(*b*) The total value of the fish products exported from the ports of Tamil Nadu during 1970–71, was Rs. 2·44 crores.**

தமிழ் நாட்டில் முதியோர் உதவித் தொகை பெற்றவர்கள்.

72 வினா—திரு மா. பா. சாரதி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் சென்ற ஆண்டு எத்தனை பேருக்கு; எவ்வளவு முதியோர் உதவித் தொகை அளிக்கப்பட்டது ?

(இ) சென்ற ஆண்டு வட ஆற்காடு மாவட்டத்தில் எத்தனை பேருக்கு எவ்வளவு தொகை வழங்கப்பட்டது ?

விடை—(அ) 41,819 நபர்கள், ரூ. 85,30,162·88 (பிப்ரவரி 28, 1971 முடிய).

(இ) 3,061 நபர்கள். தொகை ரூ. 7,31,218·93 (மார்ச்சு 31, 1971 முடிய).

(a) Total number of Old Age Pensioners—41,819. Total amount paid Rs. 85,30,162·88 (Up to 28th February 1971).

(b) Total number of Old Age Pensioners up to 31st March 1971 in North Arcot district 3,061. Total amount paid Rs. 7,31,218·93.

மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் தண்டனை பெற்றோர்

73 வினா—திரு மா. பா. சாரதி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் கடந்த ஆறு மாதங்களில் தண்டிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் மாவட்டவாரியாக ?

(இ) சென்ற ஆண்டு இதே ஆறு மாத காலத்தில் தண்டிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் மாவட்டவாரியாக ?

விடை—(அ) மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டவர்களின் மாவட்ட வாரியான இணைப்புப் பட்டியல் சட்டசபையின் முன்பு வைக்கப்படுகிறது.

| மாவட்டங்கள். | 1—12—70 முதல் 31—5—71 வரை தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 1—12—69 முதல் 31—5—70 வரை தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| சேலம் .. .. .. | 13,352 | 18,509 |
| தர்மபுரி .. .. .. | 3,435 | 1,518 |
| கோயம்புத்தூர் .. .. | 13,276 | 18,020 |
| நீலகிரி .. .. .. | 1,981 | 2,668 |
| வட ஆற்காடு .. .. | 14,893 | 14,113 |
| தஞ்சாவூர் .. .. .. | 15,963 | 11,425 |
| திருச்சிராப்பள்ளி .. .. | 13,612 | 12,290 |
| மதுரை நகர்புறம் .. .. | 2,035 | 1,789 |
| மதுரை வடக்கு .. .. | 2,584 | 2,500 |
| சென்னை நகர் .. .. | 33,485 | 40,337 |
| செங்கல்பட்டு மேற்கு .. .. | 6,434 | 5,619 |
| செங்கல்பட்டு கிழக்கு .. .. | 4,619 | 6,451 |
| தென் ஆற்காடு .. .. | 8,239 | 7,664 |
| இராமநாதபுரம் .. .. | 4,487 | 2,724 |
| திருநெல்வேலி .. .. | 6,634 | 6,681 |
| கன்னியாகுமரி .. .. | 3,129 | 2,658 |
| அரசு புகைவண்டி காவல்துறை திருச்சிராப்பள்ளி. | 1,466 | 1,020 |
| மொத்தம் .. | 149,624 | 155,986 |



தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகள்

74 வினா—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நூற்பு ஆலைகளுள் சென்ற ஆண்டு இலாபத்தில், நஷ்டத்தில் இயங்கியவை முறையே எவையெவை ?

விடை—1969–70-ம் ஆண்டில் இலாபத்தில், நஷ்டத்தில் இயங்கிய கூட்டுறவு நூற்பு ஆலைகள் பின்வருமாறு :—

(1) இலாபத்தில் இயங்கிய கூட்டுறவு நூற்பு ஆலைகள்.

| | (ரூ. இலட்சத்தில்.) |
|---|---|
| 1 தென்னிந்திய கூட்டுறவு நூற்பு ஆலை .. .. | 15·80 |
| 2 சேலம் கூட்டுறவு நூற்பு ஆலை .. .. .. | 4·64 |
| 3 மதுரை மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை .. .. | 3·86 |
| 4 கோயம்புத்தூர் மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை .. | 3·30 |
| 5 திருச்சிராப்பள்ளி மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை .. | 4·46 |
| 6 கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை .. | 2·27 |
| 7 காஞ்சிபுரம் கூட்டுறவு நூற்பு ஆலை .. .. .. | 0·06 |
| 8 வட ஆற்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை .. | 7·23 |
| 9 தஞ்சாவூர் மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை .. .. | 3·02 |

(2) நஷ்டத்தில் இயங்கிய கூட்டுறவு நூற்பு ஆலைகள்

| | |
|---|---|
| 1 ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பு ஆலை .. .. | 1·44 |
| 2 திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலை .. .. | 3·86 |
| 3 தென்னாற்காடு கூட்டுறவு நூற்பு ஆலை .. .. | 1·12 |

The following Co-operative Spinning Mills worked on profit or loss during the year 1969–70.—

(i) *Co-operative Spinning Mills which worked on profit.*

| | (RS. IN LAKHS.) |
|---|---|
| 1 South India Co-operative Spinning Mills .. .. | 15·80 |
| 2 Salem Co-operative Spinning Mills .. .. .. | 4·64 |
| 3 Madurai District Co-operative Spinning Mills .. .. | 3·86 |
| 4 Coimbatore District Co-operative Spinning Mills .. | 3·30 |
| 5 Tiruchirappalli Co-operative Spinning Mills .. .. | 4·46 |
| 6 Kanyakumari District Co-operative Spinning Mills .. | 2·27 |
| 7 Kancheepuram Co-operative Spinning Mills .. .. | 0·06 |
| 8 North Arcot District Co-operative Spinning Mills .. | 7·23 |
| 9 Thanjavur District Co-operative Spinning Mills .. | 3·02 |

(ii) *Co-operative Spinning Mills which worked on loss.*

| | (RS. IN LAKHS.) |
|---|---|
| 1 Srivilliputhur Co-operative Spinning Mills .. .. | 1·44 |
| 2 Tiruchendur Co-operative Spinning Mills .. .. | 3·86 |
| 3 South Arcot District Co-operative Spinning Mills .. | 1·12 |

தீண்டாமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் தண்டனை பெற்றவர்கள்

75 விறு—**திரு. மா. பா. சாரதி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விறுவுக்கு விடையளிப்பாரா—

தீண்டாமை ஒழிபபுச் சட்டத்தின் கீழ் சென்ற ஆண்டு எத்தனை பேர் தண்டிக்கப்பட்டனர் ? மாவட்ட வாரியாக ?

விடை—தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் சென்ற ஆண்டு இராம நாதபுரத்தில் இரண்டு நபர்களும், திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு நபரும் ஆக மொத்தம் மூன்று நபர்கள் தண்டிக்கப்பட்டனர். இதர மாவட்டங்களில் இச் சட்டத்தின்கீழ் எந்த நபரும் தண்டிக்கப்படவில்லை.

**Three persons were convicted under the Untouchability (Offences) Act during 1970, two in Ramanathapuram District and one in Tirunelveli District. There was no conviction under the above Act in other Districts.**

தமிழ்நாட்டிலுள்ள சோப்புத் தொழிற்சாலைகள்

76 விறு—**திரு மா. பா. சாரதி :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விறுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் தற்போது அரசுத்துறையில் எத்தனை சோப்பு செய்யும் தொழிற்சாலைகள் உள்ளன ?

(இ) அவைகளில் சென்ற ஆண்டு (1) உற்பத்தி செய்யப்பட்ட, (2) விற்பனை செய்யப்பட்ட சோப்பின் மதிப்பு என்ன ?

விடை—(அ) கதர்த் துறையின்கீழ் 29 சலவை சோப் தொழிற்சாலைகளும் சிறைத்துறையின்கீழ் கோயம்புத்தூரில் ஒன்றும் திருச்சியில் ஒன்றுமாக இரண்டு சலவை சோப் தொழிற்சாலைகளும் உள்ளன.

(இ) அவற்றில் (1) 1970–71-ல் உற்பத்தி செய்யப்பட்ட சோப்பின் அளவு 1,000 மெட்ரிக் டன்களாகும், (2) விற்பனை மதிப்பு ரூ. 32 லட்சம்.

**(*a*) There are 29 soap units working under the control of Khadi Department. Besides there are two units one at Coimbatore and another at Tiruchirappalli under the control of Jail Department.**

**(*b*) In those sectors (i) Production during 1970-71 is 1,000 M.Tonnes (ii) The amount realised from sale of soap is Rs. 32 lakhs.**

தீபாவளிக்கு விற்பனையான கதர்த் துணியின் மதிப்பு

77 விறு—**திரு மா. பா. சாரதி :** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விறுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்ற ஆண்டு தீபாவளிக்கு விற்பனை ஆன கதர்த் துணியின் மதிப்பு என்ன ?

(இ) அதில் அரசு ஊழியர்களுக்குத் தவணை முறையிலும், பொது மக்களுக்கும் முறையே விற்கப்பட்ட கதர்த் துணியின் மதிப்பு என்ன ?

விடை—(அ) ரூ. 263·67 லட்சம்.

(இ) அரசு ஊழியர்கள், பஞ்சாயத்து ஒன்றியங்களின் ஊழியர்கள் முதலியவர்களுக்குத் தவணை முறையில் விற்றது ரூ. 219·48 லட்சம். பொது மக்களுக்கு ரொக்கத்திற்கு விற்றது ரூ. 44·19 லட்சம்.

**(*a*) Rs. 263·67 lakhs.**

**(*b*) Credit sales effected to Government servants, Panchayat Union staff, etc., were Rs. 219·48 lakhs and the cash sales effected to public were Rs. 44·19 lakhs.**



இலஞ்ச ஒழிப்புச் சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட்டவர்கள்

78 விறு—**திரு. மா. பா. சாரதி :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விறுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) இலஞ்ச ஒழிப்புச் சட்டத்தின்கீழ் சென்ற ஆண்டு தண்டிக்கப்பட்ட அரசு ஊழியர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்கள் எந்தெந்த இலாக்காவைச் சேர்ந்தவர்கள் ?

விடை—(அ) 16 (பதினாறு) அரசு ஊழியர்கள் (அரசிதழ் பதிவிலா ஊழியர்கள் பன்னிரண்டு பேர், அரசிதழ் பதிவுள்ளவர்கள் நான்கு பேர்).

(இ)

| | | |
|---|---|---|
| (1) வணிக வரித்துறை .. .. | 1 | (அரசிதழ் பதிவுள்ளவர்). |
| (2) உள் ஆட்சி மன்றம் .. .. | 2 | (ஒருவர் அரசிதழ் பதிவுள்ளவர்). |
| (3) வருவாய்த்துறை .. .. | 4 | |
| (4) காவல் துறை .. .. .. | 1 | |
| (5) பொதுப்பணித்துறை .. .. | 2 | |
| (6) இந்து அறநிலையப் பாதுகாப்பு (நிர்வாகம்) துறை. .. | 1 | |
| (7) நில அளவைத் துறை .. | 2 | |
| (8) கால் நடைத்துறை .. .. | 2 | (இருவரும் அரசிதழ் பதிவுள்ளவர்கள்.) |
| (9) மின்சார வாரியம் .. .. | 1 | |
| | 16 | |

**(*a*) 16 Government servants (4 Gazetted and 12 non- Gazetted Officers).**

**(*b*)**

| | |
|---|---|
| **(i) Commercial Taxes .. .. ..** | **1 (Gazetted)** |
| **(ii) Local Boards .. .. .. ..** | **2 (1 Gazetted.)** |
| **(iii) Revenue .. .. .. ..** | **4** |
| **(iv) Police .. .. .. ..** | **1** |
| **(v) Public Works Department .. ..** | **2** |
| **(vi) Hindu Religious and Charitable Endowments (Administration Department).** | **1** |
| **(vii) Survey .. .. .. ..** | **2** |
| **(viii) Veterinary .. .. .. ..** | **2 (Gazetted)** |
| **(ix) Electricity Board .. .. ..** | **1** |
| | **16** |

வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள அரிசன விடுதிகள்.

79 விறு—**திரு. மா. பா. சாரதி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விறுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் தற்போது எத்தனை அரிசன நல விடுதிகள் உள்ளன ?

(இ) அவைகளில் ஆண், பெண் விடுதிகள் எத்தனை ?

(உ) அவைகள் நல்ல முறையில் செயல்பட அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

விடை—(அ) 26 விடுதிகள்.

(இ) மாணவர்களுக்கு 16 விடுதிகள், மாணவியர்களுக்கு 10 விடுதிகள்.

(உ) இவ்விடுதிகளில் மாணவ மாணவியர்களைச் சேர்த்துக் கொள்வது குறித்து விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கிணங்க அவர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக ஒவ்வொரு விடுதிக்கும் ஓர் ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் நல அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அம்மாவட்டத்திலுள்ள எல்லா விடுதிகளும் செவ்விய முறையில் நடத்தப்படுகின்றனவா என்று பார்ப்பது இவருடைய கடமையாகும். அந்த விடுதிகளில் 9, 10, 11-ம் வகுப்புகளில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 40-க்கு மேற்பட்டால், பி.ஏ., பி.டி., தகுதி பெற்ற டியூட்டர்-வார்டன் ஒருவர் நியமிக்கப்படுகிறார். மற்ற விடுதிகளில் செகண்டரி கிரேடு ஆசிரியர் பயிற்சி பெற்ற விடுதிக் காப்பாளர் ஒருவர் நியமிக்கப்படுகிறார். அரிசன நலத்துறை இயக்குநர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்ட தணிக்கைக் குழு, விடுதிகளில் பேணி வரப்படும் கணக்குகளைக் குறித்த காலத்திற்கொருமுறை ஆய்வு செய்கிறது. இவை தவிர, அரிசன நலத்துறை இணை இயக்குநரும், இயக்குநரும் தாங்கள் மேற்கொள்ளும் சுற்றுப் பயணங்களின்போது தெரிந்தெடுக்கப்பட்ட விடுதிகளுக்குச் சென்று அவை முறையாக நிர்வகிக்கப்படுகின்றனவா என்று பார்வையிடுகின்றனர்.

(*a*) 26 hostels.

(*b*) Boys—16 hostels. Girls—10 hostels.

(*c*) An Advisory Committee has been constituted for each hostel for regulating the admission of boarders into the hostel according to rules laid down therefor. A Welfare Officer has been appointed in each district and it is his duty to see that all the hostels are run efficiently. In such of those hostels where the strength of boarders studying in Standards IX, X, and XI exceeds 40, a tutor-*cum*-warden with B.A., B.T., qualification is appointed. In other hostels, a warden with Secondary Grade Training is appointed. The audit party attached to the Office of the Director of Harijan Welfare undertakes periodical inspection of the accounts maintained in the hostels. Besides these, the Joint Director and the Director of Harijan Welfare in their tours visit select hostels to see whether they are being administered properly.

குந்தா மின் திட்ட நீர்த்தேக்கங்கள்

80 விஞ—திரு ஏ. எம். இராஜா : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குந்தா மின் திட்டங்களுக்காக (Power House I—IV) கட்டப்பட்டுள்ள நீர்த்தேக்கங்கள் எத்தனை ?

(இ) அவைகளில் தேக்கி வைக்கப்படும் நீர் எவ்வளவு ?

விடை—(அ) குந்தா மின்திட்டங்களுக்காகக் கட்டப்பட்டுள்ள நீர்த் தேக்கங்களின் எண்ணிக்கை எட்டு.

(இ) அவைகளில் தேக்கி வைக்கக்கூடிய நீரின் அளவு 1,354 கோடி கன அடிகளாகும்.

(*a*) The number of reservoirs built for the Kundah Hydro Electric Scheme is eight.

(*b*) The capacity of the reservoirs is 1,354 crore cubic feet.



மோயார், பைக்காரா மின்திட்ட நீர்த்தேக்கங்கள்.

81 விஞ—திரு. ஏ. எம். ராஜா : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோயார், பைக்காரா மின் திட்டத்திற்காகக் கட்டப்பட்டுள்ள நீர்த் தேக்கங்கள் எத்தனை ?

(இ) அவைகளில் தேக்கி வைக்கப்படும் நீர் எவ்வளவு ?

விடை—(அ) மோயார், பைக்காரா மின் திட்டங்களுக்காகக் கட்டப்பட்டுள்ள நீர்த் தேக்கங்களின் எண்ணிக்கை நான்கு.

(இ) அவைகளில் தேக்கி வைக்கக்கூடிய நீரின் அளவு 475 கோடி கன அடிகளாகும்.

(*a*) The number of reservoirs built for the Moyar-Pykara Hydro Electric Scheme is four.

(*b*) The capacity of the reservoirs is 475 crore cubic feet.

ஊர் நல ஊழியர் பயிற்சி.

82 விஞ—திரு. சி. கணேசன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தற்போது ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் எத்தனை ஊர் நல ஊழியர்கள் (upgraded) பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளனர் ?

(இ) பயிற்சி பெற்றவர்கள் எத்தனை பேருக்கு விவசாய விஸ்தரிப்பு பணியாளர் பதவி கொடுக்கப்பட்டுள்ளது ?

விடை—(அ) 407 பேர்.

(இ) ஒருவருக்கும் இதுவரை கொடுக்கப்படவில்லை.

*Mobile Hospital at Gummidipoondi.*

*Q*. 83—THIRU O. N. SUNDARAM : Will the Honourable the Minister for Public Health be pleased to state :—

(*a*) the total staff employed in the Mobile Hospital at Gummidipoondi near Madras City ;

(*b*) the cost of running the Hospital ; and

(*c*) the total population served by it ?

*Health Family Planning Department*

*A*.—(*a*) 33.

(*b*) Recurring expenditure—

| | Rs. |
|---|---|
| Staff .. .. .. .. .. .. | 72,000 |
| Daily Allowance .. .. .. .. .. | 60,000 |
| Feeding of Patients .. .. .. .. .. | 30,000 |
| Medicines .. .. .. .. .. .. | 52,000 |
| Miscellaneous expenditure like petrol, transport, labour, hire and other sundry charges. | 32,000 |
| Total .. | 2,46,000 |
| Non-recurring expenditure .. .. .. | 3,10,000 |

(*c*) Between 80,000 to 1,00,000

விடை—(அ) 33.

(இ) மீளும் செலவு—

| | ரூ. |
|---|---|
| பணியாளர்கள் .. .. .. | 72,000 |
| தினப்படி .. .. .. .. | 60,000 |
| நோயாளிகளுக்கு உணவு .. .. | 30,000 |
| மருந்துகள் .. .. .. | 52,000 |
| இதர செலவுகள் (பெட்ரோல், வண்டி சத்தம், கூலி முதலியன). | 32,000 |
| மொத்தம் .. | 2,46,000 |
| மீளாச் செலவு .. .. | 3,10,000 |

(உ) சுமார் 80,000 லிருந்து 1,00,000.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப் பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 3. நடைமுறைக் கேள்வி.

அண்ணுமலைப் பல்கலைக்கழக நிகழ்ச்சிகள் குறித்து தகவல் கோரல்.

DR. H. V. HANDE : On a point of order, Sir. Under Rule 83, sub-rule (4), a point of order may be raised in relation to the business before the House at the moment. We are going to close our business tomorrow. The Business Advisory Committee also has not been scheduled to meet shortly. So, I would like to know whether the Hon. Chief Minister is going to give us a statement with regard to the Chidambaram incident. New facts, fresh facts have been published in the Press that One Perumalswami of Nellikuppam has identified the body as his son Uday Kumar, a third year B.Sc. (Maths.) student of the Annamalai University. I would like to know whether the Hon. Chief Minister is going to make a statement under Rule 82 or whether he would like to clarify this point?

## (4) முதலமைச்சரின் விளக்க உரை

### அண்ணுமலைப் பல்கலைக்கழக நிகழ்ச்சிகள் குறித்து.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பேரவைத் தலைவரவர்களே, இதில் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றும் இல்லை. "ஸ்டேட்மெண்ட்" வைக்க வேண்டும் என்று வற்புறுத்த இயலாது. ஆனாலும் அவர்கள் கோரிய இந்தக் கோரிக்கையை நான் ஒரு வாய்ப்பாக வேண்டுமானால் பயன்படுத்திக்கொண்டு, 82-வது விதியின் கீழ் சில விளக்கங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

"அது மாணவரது பிணமல்ல" என்று கூறுவதற்கு இந்த அரசோ அல்லது அதிகாரிகளோ எந்த நேரத்திலும் முயற்சிக்கவில்லை. அதே நேரத்தில் இப்படிக் கண்டெடுக்கப்பட்ட உடல் ஒரு மாணவருடைய



பிணம்தான் என்று தவருன தகவல் வந்துவிடக் கூடாது என்பதாலும் நாம் எல்லோரும், இம் மாமன்றத்தில் உள்ள நாம் அனைவரும், போதிய அக்கறை உள்ளவர்களாக இருக்கின்றோம்.

உதயகுமார் என்பவரின் தகப்பனார் பெருமாள்சாமி என்பவர் தன் மகன் உதயகுமார் காணவில்லை என்று குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால் அவரே சென்று அந்தப் பிணத்தைப் பார்த்த பின்னர், "இது என் மகனைப் போல இருக்கிறது, ஆனால் உறுதியாகச் சொல்ல முடியவில்லை. இப்படித்தான் என் மகன் கெடிகாரம் கட்டி இருந்தான், இப்படித்தான் மோதிரம் போட்டுக் கொண்டிருந்தான். ஆனால் அதிலுள்ள எழுத்துக்கள் தெளிவாகத் தெரியவில்லை" என்று அவரே கோட்டாட்சித் தலைவரிடம் கையெழுத்துப் போட்டு எழுதிக் கொடுத்திருக்கிறார். இதுபோன்றே உதயகுமாரின் மாமனார் கடிதம் எழுதிக் கொடுத்திருக்கிறார், "இவரல்ல அது, உறுதியாகச் சொல்ல முடியும்" என்று. "அந்தப் பிணத்தின் உருவம் வேறு, அவர் வேறு" என்று குறிப்பிட்டிருக்கிறார். மதிவாணன் என்ற அவருடைய பல்கலைக் கழக நண்பர் சொல்லுகிறார், அவரது பிணம் இல்லை என்று. "சட்டை அவர் அணிந்துள்ளது போன்று இருந்தாலும் அவர் இல்லை இது" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

என்னிடத்தில் உள்ள போட்டோக்கள் கூட இதைக் தெரிவிக் கின்றன. இது (போட்டோக்களை அவைக்குக் காட்டி) அந்த மாணவருடைய உருவம், இது; அந்த பிணத்தினுடைய உருவம் இது. இதிலே உள்ளதில் புருவத்தில் உள்ள ரோமங்கள் இணைந்திருக் கின்றன; ஆனால் உதயகுமாருடைய புருவங்கள் இணைந்தவை அல்ல. உதயகுமார் சிவந்த நிறம் உடையவர் என்று சொல்லப்படுகிறது. ஆனால் தண்ணீரிலிருந்து கண்டெடுத்த பிணம் கருத்த நிறமுடையது என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். கருப்பாக இருந்தால் கூட தண்ணீரில் ஊறியிருந்தால் சற்று வெளுப்பாகத்தான் ஆக வேண்டும். ஆனால் மாறாக இது கருப்பாக இருக்கிறது. இப்படி அவரது தகப்பனாராலும் சரி, பெருமாள்சாமி அல்லது அவருடைய நண்பர் மதிவாணன் அல்லது உறவினர் யாருமே இறுதியாகச் சொல்லவில்லை.

ஆனாலும், பத்திரிகைகளில் செய்திகள் வந்திருக்கின்றன. சில பத்திரிகைகள் உண்மை நிலை தெரிந்தாலும், இவற்றைப் பிரசுரம் செய்யாமல் "எப்படியாவது மாணவர் கிளர்ச்சி வராதா" என்ற அக்கறையோடு எதைஎதையோ எழுதுகின்றன. இப்படிச் சொல்லு வதால் நான் எதையும் மறுப்பதாகவோ அல்லது ஊர்ஜிதம் செய்வ தாகவோ எடுத்துக்கொள்ளத் தேவையில்லை.

உதயகுமார் என்ற மாணவர் காணப்படவில்லை. காணப்பட வில்லை என்று சொல்லும்போது, அவர் இன்னும் உயிரோடு இருக்க லாம். அல்லது கல்லூரி ஹாஸ்டலிலிருந்து காலி செய்யும்போது வேறு ஏதாவதொரு மாணவருடன் சென்று தங்கியும் இருக்கலாம். ஆனால் பிணம் அவருடையதாக இருந்தால் அரசு மறுப்பதற்கு நிச்சயம் முன்வரப்போவதில்லை. உண்மை தெரியவேண்டும் என்பதற்காகத்தான் காவல்துறை அதிகாரிகள் பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்திருக்கின்றார்கள். உண்மையை மூடி மறைக்க வேண்டிய அவசியம் எங்களுக்கு ஏற்படவில்லை என்று மட்டும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஹாண்டே அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்பதாக ஏதோ ஒரு விளக்கத்தைப் பெற வேண்டும் என்பதற்காக ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார்கள். அதுபோல ஒரு விளக்கத்தைப் பெறுவதற்காக என்று பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பக் கூடாது. அது பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை. பாயின்ட் ஆப் ஆர்டர் என்பது பேரவையில் நடந்து கொண்டிருக்கக் கூடிய ஒரு நிகழ்ச்சியில் தவறுதல்கள் இருந்தால்தான் எழுப்ப முடியும். அப்போது பேரவையில் நடந்து கொண்டிருந்த நிகழ்ச்சி பங்களூருக்குப் போகிற பஸ் பற்றியது. திரு. ஹாண்டே அவர்கள் அதைப்பற்றி ஒன்றும் பிரச்சினை எழுப்பவில்லை. நம்முடைய விதியில்

'A point of order may be raised in relation to the business before the House at the moment : Provided that the Speaker may permit a member to raise a point of order during the interval between the termination of one item of business and the commencement of another if it relates to maintenance of order in or arrangement of business before the House.

என்பது தெளிவாக இருக்கிறது. அவர் எழுப்பிய பிரச்சினை.

This is not a business before the House. This is not in respect of the maintenance of order.

என்பதற்குள் வராது. ஆகவே, அதில் எந்தவிதமான பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை.

சிதம்பரத்தில் நடந்த சம்பவத்தைப்பற்றி திரு. ஹாண்டே அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பிய காரணத்தினாலும் நான் மாண்புமிகு முதல்வர் அவர்களை அது பற்றி விளக்கம் கொடுக்க அனுமதிக்கவில்லை. நம்முடைய சட்டப்பேரவை 82-இல்

'A statement may be made by a Minister on a matter of public importance with the consent of the Speaker.'

என்பதாக இருக்கிறது. இந்த வகையில்தான் நான் மாண்புமிகு முதல்வர் அவர்களை அதுபற்றிய ஒரு விளக்கம் அளிக்க அனுமதித்தேன். விதி 82-இன் கீழ் அவர் இந்த விளக்கத்தைக் கொடுத்ததாகத்தான் நிகழ்ச்சி நிரலில் அது இடம்பெற ஆணையிடுகிறேன்.

DR. H. V. HANDE : Before the Hon. Speaker gives his decision I want to make a submission. I request the Hon. Speaker to be a little more liberal in regard to this matter. In the last House Thiru Vinayakam had raised it. So, the Chair should not be very strict in regard to this matter.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் மிகவும் ஸ்ட்ரிக்டாக இருக்கக் கூடாது என்பதாக திரு. ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். அவரே பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்பாமல் "தகவல் அறிந்துகொள்ள விரும்புகிறேன்" என்பதாக இந்தப் பிரச்சினையை எழுப்பியிருந்தால் பிரச்சினையே இருந்திருக்காது. பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்பியதால் பேரவையில் அதைப்பற்றி என்னமோ கேட்க அனுமதிக்கப்படவில்லை போலும், அரசு எதையோ மறைக்க விரும்பியது போலும்,



திரு. ஹாண்டே அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்பதாக அதை வெளிப்படுத்தியதாகவும் தவறான கருத்தும் வெளிவரும்படி பொருள் படக்கூடும். சபையில் நடந்து கொண்டிருக்கிற எந்த நிகழ்ச்சியையப் பற்றியும் அவர் ஒழுங்குப் பிரச்சினை கிளப்பவில்லை. அளவுக்கு மீறிய வகையில்தான் இந்த மன்றத் தலைவர் இந்த மன்றத்தின் பண்புகளை, மரபுகளைக் காப்பாற்ற மிகவும் லிபரலாக இருந்து வருகிறார். திரு. ஹாண்டே ஒரு தகவல் அறிய விரும்புகிறேன் என்று சொல்லியிருந்தால் போதும்.

DR. H. V. HANDE : Sir, I will explain my point in a few words. In the last House the hon. Member, Thiru K. Vinayakam had raised such a point of order three or four times and the Hon. Thiru Adityan was also there. He had also requested that the relevant rule should be liberally interpreted. Now I have raised this matter after the question hour is over not with the idea of finding fault with the Government. I wanted to elecit information but I do not know the method by which I could raise it and so I quoted that rule. Even if I rose on a point of information, the Hon. Speaker would have ruled that I was not entitled to raise it as the rules did not permit it. But it is on record that the former Speaker had allowed it and Thiru Vinayakam had raised it. As I wanted to elicit further information from the Hon. Chief Minister I raised it. I request the Hon. Speaker not to be very strict in regard to this matter but to be liberal in regard to the interpretation of the rules.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்காகவேதான் நான் இதைச் சொல்கிறேன். முன்பு நடந்தது சரியாக இருக்கலாம். தவறாக இருக்கலாம். இப்போது திரு. ஹாண்டே அவர்களுக்கு நான் இந்த அனுமதி கொடுத்தால் நாளைக்கே வேறு ஒருவர் இதை ப்ரீசிடெண்டாகப் காட்டக் கூடாது என்பதற்காகத் தான் இந்தத் தீர்ப்பையே அளிக்கிறேன். நல்ல அனுபவம் உடைய உறுப்பினர்கள் இது போன்ற பாயின்ட் ஆப் ஆர்டர்களை எழுப்பக் கூடாது என்பதனாலே சொல்கிறேன். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சரியாகச் சொன்னார்கள். ஏதோ பேரவையில் தவறு நடந்தது போலவும், திரு. ஹாண்டே அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பியது போலவும் பொருள்படக் கூடாது, எந்தவிதமான தவறும் நடக்கவில்லை. திரு. ஹாண்டே அவர்கள் எழுப்பியது பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பதில் கூறியது அவருக்காகவும் இல்லை. நான் விதி 82-இன் கீழ் விளக்கம் அளிக்க அவரை அனுமதித்ததாக நிகழ்ச்சியில் இடம் பெறும்.

The hon. Member has stated that he is not trying to find fault with the Government.

அது அவரது இஷ்டம். அவர்கள், அரசு மீது குற்றம் சாட்டலாம், சாட்டாமலும் இருக்கலாம். எனக்கு அதைப்பற்றி கவலையில்லை. ஆனால் இந்த மன்ற விதிமுறைகள், மரபுகள் காக்கப்பட வேண்டும். இதுபோல இனி யாரும் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்பக் கூடாது என்றும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. ஒற்றிவைப்புத் தீர்மானம்

### உதகை போட்டோ ஃபிலிம்ஸ் தொழிலாளர் கைதானதும் அதனால் ஏற்பட்டுள்ள வேலை நிறுத்தமும்.

MR. SPEAKER: The hon. Member Thiru K. T. K. Thangamani has given notice of the following adjournment motion :—

"Arrest by police on 21st July 1971 of 105 workers of the Film section of the Hindustan Photo Films Factory at Ootacamund and the consequent protest strike by the Laboratory employees of the same factory."

இதைப்போலவே திரு. சுப்பு அவர்களும், திரு. சுப்பிரமணியம் அவர்களும் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இதுபற்றி தீர்ப்பு அளிக்கும் முன் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களை இது பற்றிச் சுருக்கமாக விளக்க வேண்டுகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசுக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய உதகை போட்டோ பிலிம் தொழிற்சாலையில் நிர்வாகத்திற்கும், தொழிலாளர்களுக்கும் ஏற்பட்ட தகராறில் 1971 ஜுலை மாதம் 20-ஆம் தேதியன்று ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆனால் அந்த ஒப்பந்தம் பெருபான்மையான வர்களுக்கும் நலம் பயக்காது என்ற காரணத்தினால் தொழிலாளர் களில் ஒரு பகுதியினர் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்யத் தொடங்கினார்கள். உடனே நிர்வாகம் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தவர்களுடைய தலைவரை அழைத்துப் பேச்சு வார்த்தை நடத்தி பிரச்சினை சிக்கலாகாதவாறு செய்திருக்கலாம். அதற்கு மாறாக போலீசாரை அழைத்து 105 பேர்களைக் கைது செய்திருக்கிறார்கள். இதன் காரணமாக மற்ற தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் என்றவுடன் மேலும் 350 தொழிலாளர்களைக் கைது செய்திருக்கிறார் கள். தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் இந்தப் பிரச்சினை பற்றி அக்கறை காட்டி வந்திருக்கிறார்கள். அப்படி இருக்க உள்ளிருப்பு வேலை நிறுத்தம் என்றவுடன் நிர்வாகம் அதன் தலைவரை அழைத்துப் பேசாது, போலீசார் உதவியை நாடியதும், போலீசார் அதில் தலையிட்டுப் பல பேர்களைக் கைது செய்திருப்பதும் இதை ஒரு அவசர பொதுமுக்கியம் வாய்ந்த பிரச்சினையாக்கியிருக்கிறது. ஆகவே இதை விவாதிக்கக் கோருகிறேன்.

* மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, உதகமண்டலத்திலுள்ள இந்துஸ்தான் போட்டோ தொழிற்சாலையில் ஏறத்தாழ 1,700 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அங்கே இரண்டு தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. எம்ப்ளாயிஸ் யூனியன் ஆஃப் இந்துஸ்தான் போட்டோ பிலிம் என்றும் போட்டோ பிலிம் ஸ்டாஃப் யூனியன் என்றும் இரண்டு யூனியன்கள் இருக்கின்றன. இவற்றில் ஒரு சங்கம் ஏற்புடையது. மற்றொன்று ஏற்புடையது அல்ல 8—5—71-ல் ஒரு கிளர்ச்சி நடந்தது. ஏற்புடைய தொழிற் சங்கத் தினர் தடை ஆணைகளைப் பெற்றனர். இதைத் தொடர்ந்து இரண்டு தொழிற்சங்கங்களுக்கும் மனக்கசப்பு வளர்ந்தது. பரிந்துரைக்கப் பட்டவைகளில் சில தொழிலாளர்களுக்குப் பாதகம் ஏற்படுவதாகச் சொல்லி அதைப்பற்றி கலந்து பேசலாம் என்றும் எல்லோரும்



பொதுவாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் மானேஜ்மெண்டார் மூலம் தெரிவிக்கப்பட்டது. ஒரு தொழிற்சங்கம் அதை ஏற்றுக் கொள்ளாமல் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தது. பின்னர் 21-ம் தேதியன்று காலை பத்து மணியிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் யோசனை பேரில் நான் தலையிட்டு தொழிலாளர் நல ஆணையரையும், மாவட்ட ஆட்சித் தலைவரையும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்து உரையாடுமாறு செய்தேன்.

கடைசியாக வந்த செய்தி வேலை நிறுத்தம் இன்று காலை 9-40 மணிக்கு வாபஸ் பெறப்பட்டு, தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர் என்று வந்தது. தொழிலாளர் நல கமிஷனர் வேலை நிறுத்தம் வாபஸ் பெற முயற்சி செய்தார். வேலை நிறுத்தம் செய்த நாட்களில் 3 நாட்களுக்கு ஊதியம் கிடையாது. சஸ்பெண்ட் செய்யப்பட்டவர்கள் எல்லாம் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. இப்போது அங்கு அமைதி நிலவுகிறது. ஆகவே, பேரவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தலைவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு இந்தப் பேரவையை ஒற்றிவைக்க வேண்டிய அவசியம் இல்லை. இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

## 6. கவன ஈர்ப்பு

### (அ) பேச்சிப்பாறை ஏரியில் ஏற்பட்ட விபத்தும், அதனால் ஏற்பட்டுள்ள உயிர் சேதமும் குறித்து.

MR. SPEAKER: Now the hon. Member Thiru R. Ponnappa Nadar will call the attention of the Hon. Minister of Public Works to a matter of urgent public importance.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I call the attention of the Hon Minister for Public Works to a matter of urgent public importance, namely the boat tragedy which took place on 3rd July 1971 in the Pachiparai Lake in Kanyakumari district when the boat capsized resulting in the loss of five lives and to stress the need to grant relief to the family of the deceased.

MR. SPEAKER: Two other hon. Members, Thiruvalargal A. Swamidhas and Thiru J. James have also given notice of similar motions.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, 3-7-1971 அன்று மாலை சுமார் 3 மணிக்கு, பேச்சிப்பாறை ஏரியில், ஏறத்தாழ அரை லாரி சுமையுள்ள மரவள்ளிக் கிழங்குகளை ஏற்றிக் கொண்டு 13 பேரை ஏற்றிச் சென்ற ஒரு நாட்டுப் படகு, பலத்த காற்று மழையின் காரணமாகக் கவிழ்ந்தது. படகில் சென்ற

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1971 ஜூலை 29

பதின்மூவரில் எண்மர் உயிர் தப்பினர். 4 பெண்களும் ஒரு படகு ஓட்டுநரும் ஆக ஐவர் நீரில் மூழ்கி உயிர் துறந்தனர். இறந்தோரின் சடலங்கள் 6—7—71 அன்று கரையில் ஒதுங்கின.

உயிரிழந்தோரின் விவரம் வருமாறு.

| பெயரும் விலாசமும் | ஆண்/ பெண் | வயது | திருமணம் ஆனவரா |
|---|---|---|---|
| தேவநேசம் மகள் ஞானம், தும்பைக்கோடு | பெண் | 18 | இல்லை |
| செல்லம்மை மகள் கனகாபாய், தும்பைக் கோடு | பெண் | 18 | இல்லை |
| லக்ஷ்மி மகள் நாகம்மாள், திட்டவிளை, கோட்டூர் கோணம் | பெண் | 18 | இல்லை |
| பொன்னு மகள் கமலம், தும்பைக்கோடு | பெண் | 15 | இல்லை |
| தாமஸ் மகன் ராபர்ட் (படகு ஓட்டுநர்) | ஆண் | 68 | ஆம் |

இறந்த அனைவரும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். ஆதலின் இறந்த ஒவ்வொருவரின் குடும்பங்கட்கும் தலா ரூபாய் 100 (ரூபாய் நூறு மட்டும்) மாவட்ட ஆட்சியினரின் நிலைமைக்கேற்ற முடிவுரிமை வாய்ந்த (discretionary Grant) நிதியிலிருந்து அனுமதிக்கப்பட்டு உடனே வழங்கப்பட்டது.

மூழ்கிய படகு கல்குளம் தாலூகா, பொன்மனை கிராமம், குளத்து விளை செருத்திக்கோணம் என்ற ஊரைச் சேர்ந்த டேவிட் என்பவரின் மகன் அப்ராகிம் என்பவருக்குச் சொந்தமானது. கீழ்க் கண்ட நிபந்தனைகளுடன், பேச்சிப்பாறை ஏரியின் ஒரு கரையிலிருந்து மறுகரைக்கு அவரது விவசாய விளைபொருட்களை ஏற்றிச் செல்வதற் கென பொதுப்பணித்துறை நிர்வாகிகளால் 1970–71 வருடத்துக்கு அவருக்கு தற்காலிக அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

நிபந்தனைகள் :

1. உல்லாசப் பயணிகளையோ, மற்றவர்களையோ படகில் ஏற்றக் கூடாது.

2. பகலில் மட்டுமே படகை ஓட்டலாம்.

3. அனுமதி பெற்றவரது சொந்த உபயோகத்திற்கே படகைப் பயன்படுத்த வேண்டும். பிறருக்கு வாடகைக்கு விடக் கூடாது.

இந்த அனுமதி 31—3—1971 அன்று முடிவுற்றது.

நிகழ்ச்சி நடந்த அன்று, பூவன்கோடு கிராமத்தைச் சேர்ந்த ஜான் என்ற பெயருடைய மரவள்ளிக்கிழங்கு வியாபாரிக்கு, படகு வாடகைக்கு விடப்பட்டது. அவர் கூலியாட்களை அமர்த்தி ஏரியின் அக் கரையிலுள்ள தோட்டமலையில் கிழங்குகளைப் பறித்து படகில் ஏற்றினர். அச்சுமையுடனும் கூலியாட்களுடனும் படகு ஏரியில் மாலை சுமார் 1.00-மணிக்கு வந்து கொண்டிருந்தது. தோட்டமலை யில் படகு புறப்படும்போது மழை இல்லை. படகு மறுகரையை நெருங்கிக் கொண்டிருந்தபோது, கரையிலிருந்து சுமார் 1½ பர்லாங் தூரத்தில் வரும்போது திடீரென பலத்த காற்றும் மழையும் ஆரம்பித்தது. இதன் காரணமாக படகு சாயவே, தண்ணீர்



1971 ஜூலை 29] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

படகினுள் புகுந்து படகு கவிழ்ந்தது. படகிலிருந்தோர் நீரில் மூழ்கினர். மேலே சொன்னபடி எண்மர் தப்பிக்கரை சேர்ந்தனர். படகு செலுத்தும் ஒரு ஆணும், 4 பெண்களும் நீரில் மூழ்கி இறந்தனர்.

தகுந்த அனுமதியின்றி படகை ஓட்டியதற்குக் காரணமாய் இருந்தவர்கள் மேல் நடவடிக்கை எடுக்குமாறும் இதுபோன்ற நிகழ்ச்சிகள் இனி ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுமாறும் நாகர் கோவில் பொதுப்பணித்துறை நிர்வாகப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறுர். குலசேகரம் காவல்துறையினர் வழக்கு ஒன்று பதிவு செய்து இது விஷயமாய் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்த விபத்தில் உயிர் இழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் அவர்களுடைய நிதியிலிருந்து பணம் கொடுக்க வேண்டுமென்று மனு கொடுத்திருக்கிறோம். இந்த மனுவை மனிதாபிமான உணர்ச்சி யோடு கவனித்து வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இதுபற்றிய ஒரு மனுவை திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்களும், திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களும் என்னிடம் அளித்தார்கள். அந்தத் தரப்பிலேயிருந்து வந்த மனு என்று கருதாமல், விபத்தில் உயிர் இழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து நேற்று 6 ஆயிரம் ரூபாய் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மனமுவந்து உடனடியாக நிதியை அளித்த தற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இந்த விபத்தில் இறந்த வர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிதி வழங்க வேண்டுமென்று இறந்தவர்களின் குடும்பங்களிலிருந்து எனக்கு மனுக்கள் அனுப்பப்பட்டன. அந்த மனுக்களை என்னுடைய தலைவர் வழியாக முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக உத்தரவு பிறப்பித்து பணம் வழங்கியதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விபத்து நடந்த பேச்சிப்பாறை ஏரியில் இதற்கு முன்பும் விபத்துக்கள் நடந்திருக்கின்றன. விபத்து நடந்ததற்குக் காரணம் என்னவென்றுல், அங்கு பயன்படுத்திக் கொண்டிருக்கிற படகு நாட்டுப் படகாக இருக்கிறது. ஏரிக்கு அக்கரையில் அரசாங்க ரப்பர் தோட்டம் இருக்கிறது. தனியாருக்குச் சொந்தமான தோட்டங் களும் இருக்கின்றன. தினசரி தொழிலாளர்கள் ஏரியைக் கடந்துதான் தொழில்களுக்கு சென்று வர வேண்டிய நிலைமை இருக்கிறது. நாட்டுப் படகுக்குப் பதிலாக மோட்டார் படகு அமைத்துக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, அது அரசாங்கத்தின் படகு அல்ல. தனியாருக்குச் சொந்தமான படகு. சில விதிமுறைகளை அனுஷ்டிக்க வேண்டுமென்று அரசாங்கம் சொல்கிறது. அந்த விதிமுறைகளை படகு வைத்திருப்பவர்களும், பொதுமக்களும் சேர்ந்து ஒத்துழைப்பதன் மூலம்தான் இதுபோன்ற விபத்துக்களைத் தடுக்க முடியும்.

## (ஆ) சில்லறை அங்காடிகளில் அரிசி விலை உயர்வும் அதன் விளைவாக ஏற்பட்டுள்ள கிளர்ச்சிகள் குறித்து

MR. SPEAKER : Now the hon. Member Thiru K. T. K. Thangamani will call the attention of the Hon. Minister for Food and Revenue to a matter of urgent public importance.

THIRU K. T. K. THANGAMANI : Sir, I now call the attention of the Hon. Minister for Food and Revenue to a matter of urgent public importance, namely, the abnormal rise in the price of rice in the retail market and consequent agitation in several places including Pollachi.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆண்டுதோறும் ஜூலை முதல் செப்டம்பர் வரை விலைவாசிகள் ஏறுமுகமாய் இருப்பது வழக்கமாகும். அறுவடையை அடுத்து விலைகள் சரியும். அங்காடிகளுக்கு உணவு தானியங்கள் வருவது குறையக் குறைய விலைவாசிகளும் ஓரளவுக்கு ஏறத்தான் செய்யும். அறுவடைக் காலத்தில் கொள்முதல் செய்த அரிசி இருப்புகளை அதற்குப் பின்னர் அங்காடிகளுக்கு ஏற்றி அனுப்புவதற்காகும் கூடுதல் செலவுகளின் நிமித்தமாகவே இவ்வாறு விலைகள் உயர்வுக்கு இடமேற்படுகிறது.

எனினும் தற்போதைய விலைவாசிகளையும் கடந்த ஆண்டு இதற்கு நிகரான காலத்தில் நிலவி வந்த விலைவாசிகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால், குறிப்பாக இரண்டாம் தர, மூன்றும் தர அரிசி வகைகளின் விலைவாசிகள் ஏறியிருப்பது தெரிகிறது. தென் மாவட்டங்களில் இவ் விலைவாசி உயர்வு அவ்வளவு அதிகமாகத் தெரியவில்லை. உற்பத்தியாளர்களோ, வியாபாரிகளோ, பெருமளவில் நெல் இருப்புகளைப் பதுக்கி வைக்கிறார்களா என்று அரசு நிலைமையை மிக விழிப்புடன் கண்காணித்து வருகின்றது. பற்றுக்குறை போன்ற நிலைமையை உருவாக்கி அதைப் பயன்படுத்திக் கொள்வதற்காக வியாபாரிகள் தீவிரமாக முயற்சி செய்தால், அதைத் தடுத்து மக்களில் மிக எளிய பிரிவினரின் நலனுக்காகத் தேவையான அளவுக்கு அரிசி இருப்புகளை அனுப்புவதற்கு அரசிடம் போதிய அளவுக்கு அரிசி இருப்புகள் உள்ளன. சம்பா அறுவடையின்போது ஏறத்தாழ 15,000 டன் அரிசியைக் கொள்முதல் செய்திருந்த இந்திய உணவுக் கார்ப்பொரேஷனும் தனக்குக் கட்டுப்படியாகும் விலைக்கு அந்த இருப்புகளை வழங்கவும் முன் வந்துள்ளது. தஞ்சை மாவட்டத்தில் அவ்வாறு அரிசி இருப்புகளை வழங்க முற்பட்டுள்ளோம். அரிசி கிடைக்கவில்லை யென்றோ அது குறித்து கிளர்ச்சி ஏதும் நிகழ்ந்ததாகவோ அரசுக்கு அறிக்கைகள் ஏதும் வரவில்லை. கடந்த



ஆண்டுடன் ஒப்பிடும்போது விலைவாசிகள் ஓரளவுக்கு உயர்ந்திருப்பினும், ஆண்டின் இப் பகுதியில் அவை வெகுவாக உயர்ந்து விட்டன என்று சொல்வதற்கில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், படியரிசி அமலாகியிருந்த சென்னை, கோவை போன்ற இடங்களில் எல்லாம் அதிகமான விலை உயர்ந்திருக்கிறது என்ற தகவல் எங்களுக்கு வந்திருக்கிறது, குறிப்பாக பொள்ளாச்சி போன்ற இடங்களிலே. தஞ்சை மாவட்டத்திலே அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது போன்று சென்னை, கோவை போன்ற இடங்களிலும் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, ஏற்கனவே சென்னையிலே படியரிசி கொடுக்கக்கூடிய திட்டத்தை அரசு மேற்கொண்டு இருக்கிறது. பொள்ளாச்சியிலே படியரிசித் திட்டம் இல்லை. வேறு எங்காவது அப்படி விலை உயர்ந்திருக்கிறது என்ற தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தந்தால் அங்கே அரிசியை அனுப்பி விலை குறைவதற்கு ஏற்பாடுகள் செய்யலாம்.

## (7) அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) 1971-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிகால நீட்டிப்பு) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1971).

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, "1971-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிக் கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/1971) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I move the following amendment :—

"That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of ......members (...... members from the Legislative Assembly and..............members from the Legislative Council) to consider the Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of term of Office Bill, 1971 (L.A. Bill No. 27 of 1971) and that the following Members of the House be selected to surve on such a Joint Select Committee (Names of members to be furnished later).

The amendment was duly seconded.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நகராட்சி மன்றங்கள், மாநகராட்சி மன்றங்களின் பதவிக் காலம் மூன்றாண்டுகளேயாகு மென்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களின் பதவிக்காலத்தைப் போன்றே, இம்மன்றங்

* 1971-ம் ஆண்டு ஜூலை திங்கள் 24-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

களின் காலத்தையும் மூன்றாண்டுகளிலிருந்து ஐந்தாண்டுகளுக்கு உயர்த்தும் யோசனை அரசின் ஆய்வில் நெடுங்காலமாக இருந்து வந்தது. பதவிக் காலத்தை மூன்றாண்டிலிருந்து ஐந்தாண்டுகளுக்கு உயர்த்தவேண்டுமென்று பற்பல நகராட்சி மன்றங்களும், நகராட்சித் தலைவர்கள் கழகமும் கடந்த காலத்தில் வேண்டுகோள் விடுத்திருந்தனர். பதவிக் காலத்தை மூன்றாண்டிலிருந்து ஐந்தாண்டுகளுக்கு உயர்த்த வேண்டுமென்ற நகராட்சி மன்ற வேண்டுதலை அரசு நன்றாக ஆய்வு செய்த பின்னர், அதனை ஏற்றுக்கொள்வதென முடிவு செய்துள்ளது. நகராட்சி மன்றங்கள் அனைத்திற்கும் ஒரே ஆண்டிலேயே அதாவது 1974-ஆம் ஆண்டிலேயே தேர்தல்களை நடத்துவதென்றும் அரசு முடிவு செய்துள்ளது. அரசின் இந்த முடிவுகள் காரணமாக, தற்போதுள்ள எல்லா நகராட்சி மன்றங்கள், மற்றும் இனி அமைக்கப்படவிருக்கும் நகராட்சி மன்றங்களின் பதவிக் காலம் 1—5—1974 அன்று வரை நீடிக்கப்படும். சென்னை மாநகராட்சியின் பதவிக்காலம் 1—11—1973 அன்று வரை நீடிக்கப்படும். மாநகராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்களின் ஐந்தாண்டுப் பதவிக் காலமானது 1973-ஆம் ஆண்டு நவம்பர் திங்களிலும், 1974-ஆம் ஆண்டு மே திங்களிலும், நடைபெறும் சாதாரணத் தேர்தல்கள் பின்பு முறையே சென்னை மாநகராட்சி மன்றத்திற்கும் இதர நகராட்சி மன்றங்களுக்கும் பொருந்தும்.

மாநகராட்சியாக அமைக்கப்பட்டுள்ள மதுரை நகராட்சி மன்றமானது 1971-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி அவசரச் சட்ட மூலம் செயற்படுத்தப்படுகிறது. இவ்வவசரச் சட்டத்தை நீக்குவதற்கெனக் கொணரப்பட்ட ஒரு மசோதா, நடைபெற்றுவரும் சட்டப் பேரவை, சட்ட மேலவைக் கூட்டத் தொடரில் நிறைவேற்றப் பட்டுள்ளது. அம் மசோதா, குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற வேண்டியுள்ளதால், அது இன்னும் சட்டமாகவில்லை. எனவேதான் மதுரை மாநகராட்சியின் பதவிக் காலத்தை மூன்றாண்டுகளிலிருந்து ஐந்தாண்டுகளுக்கு உயர்த்தும் ஒரு திருத்தத்தை இம் மசோதாவிலேயே சேர்க்க முடியவில்லை. தற்போதுள்ள மதுரை மாநகராட்சி மன்றத்தின் பதவிக் காலம் 28—4—1972 அன்றுடன் முடிவுறும். எனவே அதன் பதவிக் காலத்தை மூன்றாண்டிலிருந்து ஐந்தாண்டுகளுக்கு உயர்த்துவதற்கு வகையளிக்கக்கூடிய ஒரு தனிச் சட்டத்தை உருவாக்கும் பணி விரைவிலேயே மேற்கொள்ளப்படும்.

1919-ஆம் ஆண்டுச் சென்னை மாநகர், மாநகராட்சிச் சட்டத்திற்கு விரிவான திருத்தங்களை மேற்கொள்ளும் யோசனை அரசின் கவனத்தில் கடந்த சில ஆண்டுகளாக இருந்து வந்துள்ளது. 1919-ஆம் ஆண்டுச் சட்டத்தை மேலும் பயனுள்ள முறையில் செயற்படுத்துவதற்கு ஏற்ற வகையில் சட்டத் திருத்தங்களைக் கூறுவதுடன், சட்டத்தைச் செயற்படுத்துவதிலுள்ள சிரமங்களைக் களைதற்குரிய யோசனைகளைத் தருவதற்குமென மாநகராட்சி மன்றம் அமைத்த ஒரு தனிக்குழு பரிந்துரைகள் செய்துள்ளது. மாநகராட்சி மன்றத்தால் ஏற்றுக்கொள்ளப் பட்ட பரிந்துரைகளை அரசு ஆய்வு செய்கிறது. 1961-ஆம் ஆண்டில் கொணரப்பட்ட மாநகராட்சி மன்ற நிர்வாக முறையை மாற்ற வேண்டுமென்பது இத் தனிக்குழுவின் ஒரு தலையாய பரிந்துரையாகும்.





வட்டக்குழுக்கள், மையக் குழுக்கள் மற்றும் ஒப்பந்த உரிமைமேல் முறையீட்டுக் குழுக்களால் மாநகராட்சி தற்போது நிர்வகிக்கப் படுகிறது.

நகரில் அங்கங்கு செய்யப்பட வேண்டியவற்றை வட்டக் குழுக்களும், பொதுவானவற்றை மையக் குழுவும் கவனிக்கின்றன. நிதியொதுக்கீடுகள் பற்றியோ, மற்ற வட்டங்களின் தேவைகளுக்குரிய விளைவுகளையோ முன் அல்லது பின் ஆற்ற வேண்டிய காரியங்கள் பற்றியோ ஆராயாமல் பரந்த அதிகாரங்கள் கொண்ட ஒவ்வொரு வட்டக்குழுவும், வேலைத் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கிவிட முடிகிறது. ஒருங்கிணைந்த, கூட்டு முயற்சியின் அடிப்படையில் மாநகரை வளர்ச்சி பெறச் செய்வது மேற்கண்ட நிலை காரணமாகச் சிரமமாகிவிடுகிறது. உயர் நிர்வாக அங்கமாக விளங்கும் மன்றத்திற்கு, வட்டங்களில் நிகழ்வது சரியாகத் தெரிவதில்லை. எதற்காக இக் குழுக்கள் உண்டாக்கப்பட்டனவோ, அதனை அவை நிறைவு செய்யவில்லை. இதனைக் களைவதற்கென, மாநகராட்சி மன்றம் ஒருமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. தற்போதுள்ள மைய, வட்டக் குழுக்களுக்கு மாறாக, செயற்படும் நிலைக் குழுக்களை உண்டாக்கி, அவற்றிடம் ஒப்பந்தம் மற்றும் உரிமை முறையீடுகளுக்குரிய அதிகாரங்களை ஒப்படைக்கும் பழைய முறையைக் கொள்ள வேண்டுமென்பதே அந்தத் தீர்மானம், கூடிய விரைவில் கொணரப் படவிருக்கும் விரிவான திருத்தங்களுக்குக் காத்திராமல், மாநகராட்சி மன்றத்தின் இதர பரிந்துரைகளை விரைவாக நிறைவேற்ற வேண்டி இருப்பதால் சட்டத்திலுள்ள மாநிலப் பட்டியலில் வரும் விதித் துறைகளை மட்டும் திருத்துவதற்குத் தற்போது ஆவன செய்யப் படுகிறது. எனவே 1961-க்கு முன்னிருந்த செயற்படும் குழுக்களை மீண்டும் கொணரவும், மற்றும் அதன் விளைவாக மற்ற விதித் துறைகளையும் தகுந்த முறையில் மாற்றவும் முடிவு செய்யப் பட்டுள்ளது.

தற்போதுள்ள மன்றத்தில் ஒரு பெண் கூட அங்கம் வகிக்கவில்லையென்பதைக் குறிப்பிட்டுக் கூறலாம். மன்றத்தில் போதுமான பெண்கள் அங்கம் வகிக்க வேண்டியது சிறந்ததெனக் கருதப்படுவதால் தேவையான எண்ணிக்கை பெண் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லையாயின், ஆறு பெண்கள் வரை மன்றத்தில் சேர்த்துக் கொள்ள வகை செய்யும் விதித் துறையும் மசோதாவில் சேர்க்கப்பட்டுள்ளது. மதிப்பீடுகளுக்கு ஒப்பளித்தல், ஒப்பந்தங்களை ஏற்றுக் கொள்ளல், "டெண்டர்" களுக்கு முடிவு கூறல், அசையும், அசையாச் சொத்துக்களின் பேரில் முடிவாணையிட ஆகியவற்றில் இந்த செயற்படும் நிலைக் குழுக்கள் ஓரளவு நிதியதிகாரம் பெறும்.

சில தேர்வுகளிலும், நிதியொதுக்கங்களைக் கட்டுப்படுத்துவதிலும் ஏற்படும் செயல்முறையான சிரமங்களைக் களைதற்கெனவும், மன்றம் நிலைக் குழுக்கள் போன்றவை நிறைவேற்றும் தீர்மானங்களின் சட்ட நீதியை முடிவாகத் தீர்மானிப்பதிலும் அரசிற்கு அதிகாரம் அளிப்பதற்கு வகை செய்யும் முறையில் தற்போதுள்ள விதித்துறைகளை விரிவாக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் குறிக்கோள்களை இம் மசோதா அடைய விழைகிறது.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1971 ஜூலை 29

சென்னை மாநகராட்சியில் தற்போது விதித்துவரும் சொத்து வரியின் உச்ச வரம்பினை உயர்த்துவதற்கான திருத்தத்தை இம்மசோதாவில் சேர்க்கப்படவில்லை. இத் திருத்தத்தை மத்திய அரசுடன் கலந்துகொண்டு செய்யவேண்டியிருப்பதால் கூடிய விரைவில் கொணரப்படவிருக்கும் விரிவான திருத்தங்களில் இது சேர்த்துக் கொள்ளப்படும்.

இச்சொற்களோடு, இம்மசோதாவினை இவ்வகையில் ஆய்விற்கு வைக்கிறேன்.

MR. SPEAKER : Thiru K. M. Subramaniam.

THIRU K. M. SUBRAMANIAM : Am I to move my amendments or to speak?

MR. SPEAKER : Does the hon. Member want to speak now or after moving his amendments during the clause-by-clause consideration?

THIRU K. M. SUBRAMANIAM : I want to speak now so that the Government can think of my amendments and see whether they could be accommodated. I shall speak now. I shall move my amendments later during the clause-by-clause consideration.

MR. SPEAKER : The hon. Member may speak now.

THIRU K. M. SUBRAMANIAM : While thanking the Government for having brought this legislation after representation from the Council, I think there are some other deficiencies in this legislation. The most prominent of which is the payment of some allowance for the Councillors for their work in the Council. Unfortunately Government seems to have turned it down or they have forgotten to include it. I do not know what it is. The present position is, the Councillors have got several duties to perform. During the 1940s and 1950s the Councillors were mostly Rao Sahibs and Rao Bahadurs who used to sit in their houses, ring up the Corporation and ask them to do this or that. Things were done like that in those days. Now unfortunately the Councillor is looked upon as dignified Maistry for the division he represents. For each and everything, if anything goes wrong, if there is overflow of water in drainage, if water is not coming in the tap, for anything and everything he is blamed and he is held responsible by the people either because of ignorance or because of wantonness, I do not know. They say what is the use of electing this man as our Councillor if such things are not tackled by him. There are of course departmental people to attend to such things. Unfortunately the Councillor is blamed if anything goes wrong.

I think in this House the Hon. Minister for Health said the other day that ex-councillors and present councillors can look after that. That tendency is there not only among the public but also among the Ministry. The Councillor has to go morning and evening to the Council in these days. In olden days when Councillors were rich, it was all right. But now when ordinary men are Councillors, it is very necessary that they should be given some sort of allowance for the work they do. Otherwise, they cannot discharge their functions. Bombay Corporation, I am told, pays Rs. 300 as salary and Rs. 50 as allowance to its Councillors. I got the information yesterday and that is subject to correction. The Bombay Councillor thus gets Rs. 350 p.m. Some sort of allowance may be given to our Madras Corporation Councillors also.



1971 ஜூலை 29] [Thiru K. M. Subramaniam]

The second point is formation of committees. Before the White Paper came into existence, these committees were formed by understanding between the major parties. All parties were given representation. Unfortunately after the White Paper, what we find is, the majority party only is represented in all the committees. Whenever there is a member to be elected by the Corporation either to Port Trust or Railway Advisory Committee, the ruling party representative is always getting elected and he is sent. Before the White Paper, for election to Standing Committee like Taxation Appeals Committee, etc., the ruling party used to invite leaders of other major parties and with an understanding among them, all the parties used to be represented in the committees. Now that is not the case. Here what is stated in the amendment proposed by Government is that it would be by simple majority. What I say is that it should be by proportional representation by means of single transferable vote; then only all parties will get representation. If it is by simple majority, only the ruling party will be represented. I may tell now that these committees are administrative bodies. It is not like legislature. They are purely administrative bodies and in an administrative body, all parties should be represented. I think the Hon. Minister will accept the principle that it should be by proportional representation by means of single transferable vote. Today D.M.K. may be the ruling party. After some time, some other party may become the ruling party. What I say is, that all parties be represented.

There are two standing committees, viz., Contracts Committee and Appointments Committee, which had brought bad name to the Corporation from the Public (necessarily or unnecessarily, I do not know). By the present amendment, they have abolished the Contracts Committee and it will all be left for the Commissioner and contracts exceeding Rs. 7-1/2 lakhs will have to come to Government. That is a wholesome change. I welcome it heartily. What has happened in the middle? What about other Committees? What about the Appointments Committee? Never in the annals of administration, can you find one Appointment Committee, comprising of politicians, recruiting administrative staff. In the Corporation, it is done by the Appointments Committee. That Committee consists of the Worshipful Mayor, Chairman of the Central

Committee and the Commissioner. Mayor is the Chairman of the Committee. The two politicians are there and the two constitute the majority in a Committee of three. I am not blaming the members of the Committee. If I had been there, my anxiety would be to provide jobs for the voters of my area; since they have voted me to that division, I am naturally bound to do favour to them. The situation is like that. So a body, composed of politicians, recruits persons. Even though the department may want persons with some skill, etc., the Appointments Committee has to select persons and there is no doubt that they will have to show favour to the voters in their division. I am not blaming anybody but the situation is like that. That is why I say let the Government drop this committee also. Let the Appointments Committee also be abolished. Why should we have an Appointments Committee to control about 10,000 to 12,000 staff?

THE HON. THIRU P. U. SHANMUGAM : The hon. Member has misunderstood the thing. The Appointments Committee has no power to control the 12,000 staff. They have only the power to appoint. The hon. Member wants that to be scrapped. He can give suggestions as how it could be replaced.

THIRU K. M. SUBRAMANIAM : The gun should be allowed to shoot itself. I am coming step by step. I have got the intelligence to understand that the Appointments Committee does not control all the 12,000 staff. I need not be told.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Just now the hon. Member was saying that the Appointments Committee was controlling the 12,000 staff. I said that it was not the Committee that was controlling them.

THIRU K. M. SUBRAMANIAM : Even though they are not controlled by the Appointments Committee, they are obliged to the Committee because the Appointments Committee is also Disciplinary Committee. So they are obliged to it.

THE HON. THIRU P. U. SHANMUGAM : The Appointments Committee is not the disciplinary authority. They are not going to take any disciplinary action. It is a private body.

THIRU K. M. SUBRAMANIAM : Here the Appointments Committee recommends and the Commissioner appoints and the Commissioner is the ultimate appointing authority. I had been in this Council for 17 years. If I have not learnt that, I am not fit to come here. The Appointments Committee is the recommendatory authority recommending so many people for appointments and the Commissioner appoints and the ultimate appointing authority is the Commissioner.



THE HON. THIRU P. U. SHANMUGAM : Again the hon. Member has misunderstood. The Appointing Authority is to appoint a person and its decision is obligatory on the part of the Commissioner. The Committee has no power regarding disciplinary action.

THIRU K. M. SUBRAMANIAM : I do not want to enter into this controversy. I withdraw. It does not serve any purpose.

MR. SPEAKER : You agree with the Hon. Minister that it is obligatory and not recommendatory.

THIRU K. M. SUBRAMANIAM : No, it is not obligatory. The recommendation goes with a panel of names. I am saying about the Appointing Committee. I will finish it and if you have any doubt you can ask me later. The Appointment Committee sits, recruits people, furnishes a list of names and the Commissioner is obliged to appoint those persons and he cannot deviate from that.

MR. SPEAKER : So, you agree with what the Hon. Minister says. He has very categorically said that it is obligatory and not recommendatory. In spite of Hon. Minister's categorical statement that it is not recommendatory, but obligatory, you are repeating it. You please go to the next point agreeing with the Hon. Minister.

THIRU K. M. SUBRAMANIAM : I agree, Sir.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : The hon. Member is speaking about not only the appointment, but the dismissal of the servants also. That is what the Hon. Minister is confusing. The point is whether the Appointing Committee can dismiss the servants, whether it can take disciplinary action.

THE HON. THIRU P. U. SHANMUGAM : The Appointing Committee has nothing to do with disciplinary action. Only the Commissioner has got powers to take disciplinary action.

THIRU K. M. SUBRAMANIAM : I entirely agree.

MR. SPEAKER : The hon. lady member is confusing.

THIRU K. M SUBRAMANIAM : But I am not confused. Nobody is confused now. You have clarified. The hon. Minister has clarified in such a way that if anybody is confused, it is only his fault and not the Hon. Minister's fault.

Now I come to the point. The Appointments Committee should not function in this form. Generally in the Central Government offices there is an Appointment Committee for recruitment of Class III and Class IV servants. There is a Committee of Officials to do it and the officials know whom they should recruit.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, ஒரு சிறு விளக்கம். வளர்ந்து வருகிற ஜனநாயகத்தில் தலைவருக்கும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கும், கமிஷனருக்கும் அப்பாயின்ட்மென்ட்ஸ் கமிட்டியில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கத்தினர் அவர்கள் சொல்லுவதைப் பார்த்தால் அதை அதிகாரிகளுக்கே விட்டுவிட வேண்டும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்குக் கூடாது என்று சொல்லுகிறார்கள். இது ஜனநாயக மரபல்ல. இதை அங்கத்தினர் விரும்புகிறாரா?

MR. SPEAKER : The hon. Member can tell. That is his opinion.

திரு. கே. எம். சுப்பிரமணியம் : நான் தமிழிலேயே சொல்கிறேன்.

MR. SPEAKER : The hon. Member may speak in English itself.

THIRU K. M. SUBRAMANIAM : If democracy is going to be based on the recruitment of service people by the parties, woe unto that democracy, democracy cannot work. Instead of Service Commission, if the party in power starts recruiting staff in its place, what will happen to democracy? It is not right. It is for democracy to lay down the policy and ask the service people to execute it. If they do not do it correctly, punish them and send them out. Democracy means what? You cannot have party people to sit as Service Commission and say that the Mayor, the Chairman of the Central Committee and the Commissioner will sit...........

(Mr. Speaker sounded the gong.)

This is a very important subject. I do not think that many people are going to speak. The very conception of democracy is at stake. During the last five or six years what happened in the Corporation? The Corporation was dumped with so many people belonging to a certain party. They recruited like that. It is natural. If I am there, I will also do it. Because how can I tell a man who has voted for me 'no'. If an Engineer comes and asks for a job and suppose I am in the Recruitment Committee, what con I do? Even if he is less qualified, he will be recruited. It is natural. I hope that the Hon. Minister for Revenue will certainly accept that democracy should not be extended to that level. If recruitment of staff should rest with the party bosses, it is not democracy. What I am meaning is, let the Commissioner, who has been doing it before the introduction of the last White Paper, do it with the two Assistant Commissioners. It is their responsibility. If anything goes wrong, it is his responsibility in every place. I think the Revenue Minister will bear with me when I say that the State Public Service Commission recruits for the entire State and it is not the party people that recruit, it is not the Assembly Members that recruit.........

(Mr. Speaker sounded the gong and called the next member).



*திரு. என். கணபதி : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி திருத்தச் சட்டத்தை வரவேற்று ஓரிரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். 1961-ல், 1919-ம் ஆண்டுச் சட்டத்தின்படி நடைபெற்ற நடைமுறைகளை மாற்றி புதிதாக சர்க்கிள் கமிட்டி, சென்ட்ரல் கமிட்டி என்று நியமித்து கார்ப்பரேஷன் அதிகாரத்தைப் பரவலாக்க தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி சென்னை மாநகர மக்களுக்கு நன்மைகள் செய்ய வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு ஏற்படுத்தப்பட்ட அந்தத் திருத்தம் ஏறத்தாழ பத்தாண்டு காலம் நடைமுறையில் இருந்தபோது பல்வேறுபட்ட குறைகளுக்கும், முறைகேடுகளுக்கும் இடம் கொடுத்த காரணத்தால் அதை மாற்றி இன்றையதினம் பழைய முறைப்படி ஸ்டாண்டிங் கமிட்டிஸ் என்று அமைத்து ஸ்டாண்டிங் கமிட்டிகளுக்குப் பல்வேறுபட்ட அதிகாரங்களைக் கொடுத்து மாநகராட்சி நிர்வாகத்தை நடத்துவதற்காக இந்தச் சட்டம் இன்றையதினம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தின் அடிப்படை நோக்கம் மாநகரத்தின் மக்கள் நல்ல நன்மைகளைப் பெற வேண்டுமென்பதுதான்.

இந்தக் கமிட்டிகளுக்கு இப்போது இருக்கிற சட்டத்தின்படி சென்னை மாநகர உறுப்பினர்கள் பார்த்து தேர்ந்தெடுக்க வேண்டுமென்று இருக்கிறது. அந்தத் தேர்வு முறை எப்படி இருக்க வேண்டுமென்று பார்க்கிற நேரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஒவ்வொரு உறுப்பினரையும் தேர்ந்தெடுக்கின்ற நேரத்தில் மெஜாரிடி, மைனாரிடி பார்த்துத் தேர்ந்தெடுக்கும் முறைதான் நல்ல ஒரு முறையாக அமையுமே தவிர, அதை விட்டு பிரொப்போர்ஷனல் ரெப்ரசன்டேஷன் அல்லது டிரான்ஸ்பிரபிள் வோட் என்ற முறையில் தேர்ந்தெடுத்தால் பலதரப்பட்ட குறைகளுக்கு அது இடம் கொடுக்குமென்ற என்னுடைய தாழ்மையான கருத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஏனெனில் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தங்களுடைய வாக்குரிமைகளைப் பயன்படுத்தும் நேரத்தில் அந்த 12 உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்கும் கட்டத்தில் யார் யார் அந்த 12 உறுப்பினர்கள் என்று கணக்குப் போட்டுச் சொல்லிவிடுகிறார்கள். ப்ரொப்போர்ஷனல் ரெப்ரசன்டேஷன் அல்லது சிங்கிள் டிரான்ஸ்பிரபிள் வோட் என்ற முறையில் தேர்ந்தெடுக்கும்போது ஒன்றாவது தரம் இவருக்கு, இரண்டாவது தரம் இவருக்கு, மூன்றாவது தரம் இன்னாருக்கு என்று பாகுபடுத்திப் பார்க்கும் அளவுக்கு அந்தத் திருத்தம் இடம் கொடுக்கும். ஆகவே, அந்த அளவில் இல்லாமல் சட்டத்தில் இடம் பெற்றிருப்பது போன்று வாக்கெடுப்பு முறை இருப்பது நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்பாயின்ட்மென்ட்ஸ் கமிட்டியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறைபட்டுக் கொண்டார்கள். ஜனநாயக உணர்ச்சி நன்றாக வளர்ந்திருக்கிற கால கட்டம் இது. ஜனநாயக உணர்ச்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கையில் அதிகாரம் இருக்க வேண்டுமென்பது அடிப்படையான கருத்து ஆகும். அந்தக் கருத்தில் அருமை நண்பர்கூட மாறுபாடு கொள்ள மாட்டார்கள்

என்ற நம்பிக்கை உண்டு. இருந்தாலும் அவர் படுகின்ற கவலை எல்லாம் நாம் அதிகாரத்தில் இருந்தபோது செய்ய முடியாத சில காரியங்களை எல்லாம் இப்போது வேறு சிலர் அதிகாரத்தில் இருந்து செய்கிறார்கள், நாம் தூரத்தில் இருந்து வேடிக்கை பார்க்கக்கூடிய கட்டத்தில் இருக்கிறோமே என்ற எண்ணத்தில் இப்படி ஜனநாயக உணர்ச்சியைச் சொல்லி கட்சி ஆட்களை அப்பாயின்ட்மெண்ட்ஸ் கமிட்டி போன்ற பல்வேறு கமிட்டிகளில் நியமித்து விடுகிறார்கள் என்று சொன்னார்கள். அவரை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவரே ஒத்துக்கொண்டார்—நான் அந்த நிலையில் இருந்தால் நிச்சயமாக எனக்கு வாக்களித்த ஒருவருக்கு வேலையைப் போடத்தான் போடுவேன், என்ன செய்வது என்றார்.

THIRU K. M. SUBRAMANIAM : The hon. Member should not confuse it. I never wanted to be in that Committee.

THIRU N. GANAPATHY : Confusion is not in me but I am very much obliged to the hon. Member for his explanation

நான் சொல்ல வந்தது என்னவென்றால், நான் அந்த நிலையில் இருந்தால் நிச்சயமாக இப்படித்தான் செய்வேன் என்று தெளிவாக ஒப்புக்கொண்டார்கள். அதற்காக அவர்களுக்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜனநாயக அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் கைகளில்தான் அதிகாரங்கள் கொடுக்கப்படவேண்டும் என்பதில் மாறுபட்ட கருத்து யாருக்கும் இருக்காது. அப்படி மாறுபட்ட கருத்து இல்லாததினால், அப்பாயின்ட்மெண்ட்ஸ் கமிட்டி என்று ஒரு கமிட்டி நியமித்து அதன் மூலம் பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பது தான் சிறந்த முறை. கடைசியாக, சென்னை மாநகராட்சி மேயர் பதவி ஒரு கௌரவமிக்க பதவி என்ற நிலை இருக்கிறது. மாநகராட்சிகள் தவிர மற்ற நகரவைகளில், மாவட்டங்களிலுள்ள நகரவைகளில் உள்ள தலைவர்களின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகள் என்ற ஒரு நியதி இருக்கிறது. சட்ட வரம்பும் அப்படிக் குறிக்கிறது. இப்போது நகராட்சிகளில் இருக்கிற உறுப்பினர்களுக்கு ஐந்து ஆண்டுக்காலம் பதவிக் காலம் என்று சட்டத்தை திருத்தியமைக்கும்போது, இப்படி நகராட்சித் தலைவர்களுக்கு ஐந்தாண்டுகள் அவர்கள் பொறுப் பேற்கும் நிலையில் இந்தச் சட்டத்தை உருவாக்குகிறோம். ஆனால் ஆண்டுதோறும் சென்னையில் மேயர் மாறவேண்டும் என்ற நிலையிருக்கிறது.

மதுரை மாநகராட்சி மேயர் ஆண்டுக்கு ஒரு முறை மாறும் நிலைமையிருக்கிறது. மாநகராட்சிகளில் உள்ள மேயர் பதவிகள் மட்டும் அந்தஸ்து படைத்தவை என்று கருதிக்கொண்டு மாவட்டங்களில் உள்ள நகராட்சித் தலைவர்களின் பதவி மட்டும் அவ்வளவு அந்தஸ்து உள்ளதில்லை என்று பாகுபாடு செய்யவேண்டிய அவசியமில்லை. ஒன்று நகரசபைகளின் தலைவர் பதவியையும் ஆண்டுக்கு ஒரு முறை என்று மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் அல்லது சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி இவற்றிலுள்ள மேயர் பதவியையும் ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டிப்பதற்கு வழிவகை செய்ய



வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் பாகுபாடு காட்டுவதோ அல்லது தரம் பிரித்துப் பார்ப்பதோ எந்தவிதக் காரணத்தினாலும் சரியான, காரணமாகாது. ஆகவே, இந்த மாற்றத்தை செய்யவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வெள்ளை அறிக்கை மூலம் செய்யப்பட இருக்கிற மாற்றங்களை எல்லாம் வரவேற்று என்னுடைய உரையை இந்தளவோடு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

THIRU K. T. K. THANGAMANI : Mr. Speaker, Sir, The Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of term of office) Bill, 1971 என்ற இந்த மசோதா இங்கு கொண்டுவரப்பட்டது வரவேற்கத் தக்கது. ஏற்கனவே இது இங்கு அறிமுகப்படுத்தப்பட்டபோது இதனுடைய பிரதான அம்சங்களைப்பற்றியெல்லாம் அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தினார்கள். குறிப்பாக, பல நகராட்சிகளில் உள்ளவர்களும், மாநகராட்சிகளில் உள்ளவர்களும் நாங்கள் தேர்ந் தெடுக்கப்பட்டால் ஐந்தாண்டுக் காலம் பதவியிலே இருக்க வேண்டு மென்று வலியுறுத்தினார்கள். அம்மாதிரியான தீர்மானங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டன. ஆகவே அதற்கொப்ப இப்போது ஐந்து ஆண்டுக் காலம் என்று நகரவைகளுக்கும் நகரவை உறுப்பினர் களுக்கும் கொடுத்திருக்கிறார்கள் என்ற பகுதி வரவேற்கக்கூடிய தாகும்.

அதேமாதிரியாக இதில் இணைக்கப்படாத மதுரை கார்ப்பரேஷனுக்கும் வெகு சீக்கிரத்திலே அடுத்த சட்டமன்றத் தொடரிலாவது திருத்தம் கொண்டு வந்து அதையும் முறைப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, இந்தத் திருத்தத்தில் வந்திருக்கக்கூடிய நல்ல அம்சம் ஷெட்யூல்ட் காஸ்ட், ஷெட்யூல்ட் ட்ரைப்ஸ், இவர்களுக்கு 12 ஸீட்கள் வரையில் ஒதுக்க, பெண்களுக்கு 6 ஸீட்கள் வரையில் ஒதுக்க இருப்பது வரவேற்கத்தக்கதாகும். ஒதுக்கவேண்டுமென்று சட்டம் மட்டும் நிறைவேற்றுவது என்பது போதாது. அதை அமலாக்குவதற்கும் வெகு சீக்கிரத்திலே நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் இதில் தெரியக் கூடிய ஊனங்கள் என்னவென்றால் பல விஷயங்கள் பற்றி துண்டு துண்டாக திருத்தங்கள் கொண்டுவருவதற்குப் பதிலாக அதிகமான திருத்தங்களை ஒரே தடவையில் கொண்டுவருவது உதவியாக இருக்கும்.

எனக்கு முன் பேசிய உறுப்பினர், அவர்கள் ஒரு கருத்து தெரிவித் தார்கள். இப்போது மேயராக இருப்பவர்கள் ஒரு ஆண்டுதான் மேயராக இருக்கமுடியும் என்று இருக்கிறது. சாதாரணமாக உறுப்பினர்கள் ஐந்தாண்டுக் காலத்திற்கு உறுப்பினர்களாக இருக் கிறார்கள் என்றால் மேயராகவோ அல்லது சேர்மனாகவோ இருக்கக்

கூடியவர்களும் ஐந்தாண்டுகள் இருக்க வேண்டும். மதுரை கார்ப்பரேஷன் மசோதா மீது விவாதிக்கப்பட்ட நேரத்தில் எங்கள் தரப்பிலிருந்து மூன்று ஆண்டுக் காலமாவது மேயராக இருக்க வேண்டுமென்ற திருத்தத்தைக் கொண்டு வந்திருந்தோம். ஆனால் எல்லா மாநகராட்சிமன்றச் சட்டங்களிலும் ஒரு ஆண்டு என்றுதான் இருக்கிறது என்றும், இரண்டு ஆண்டுகள்கூட ஒருவரே மேயராக இருக்க வசதியிருக்கிறது என்று சொல்லப்பட்டதேயொழிய மூன்று ஆண்டுகளாவது தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் மேயராக இருக்க வேண்டுமென்று மாறுதல் செய்வது உதவியாகயிருக்கும். அந்த முறையில், இந்த மசோதாவில் அது வராமல் போனாலும், மதுரை கார்ப்பரேஷன் சம்பந்தப்பட்ட மசோதா வரும்போது அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம், வொயிட் பேப்பர் வந்த பிற்பாடு சில மாறுதல்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் வொயிட் பேப்பர் வருவதற்கு முன்பாக சில நல்ல அம்சங்கள் இருந்தன. உதாரணமாக, நகரசபைகளில் உறுப்பினர்களாக இருக்கக்கூடியவர்கள், அவர் ஒரு க்வாஸி கவர்ன்மென்ட் பாடியில் உறுப்பினராக இருக்கமுடியும். நாம் இப்போது பஸ்களையெல்லாம் அரசுடைமையாக்கப் போகிறோம். நாம் நிறைவேற்றியிருக்கக்கூடிய சட்டங்களின் பிரகாரம் இது சென்னை மாநகராட்சியாகட்டும், மதுரை மாநகராட்சியாகட்டும் அதில் பணியாற்றக் கூடியவர்கள், அதிலே உறுப்பினராக இருக்கக்கூடியவர்கள் ஒரு பஸ் ட்ரைவர் தேசியமயமாக்கப்பட்ட ஒரு பஸ்ஸில் உள்ள ஒரு உறுப்பினராக இருக்கமுடியாது. ஆகவே தேசியமயமாக்கப்பட்ட நிறுவனங்கள் வரும்போது அதில் இருப்பவர்கள் கூட இதில் உறுப்பினர்களாக இருக்கக்கூடாது என்று போன தடவை நாம் ஒரு சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். அதற்கு நாங்கள் திருத்தம் கொண்டு வந்தோம். அதைப் பற்றி சிந்தித்துப்பார்க்கவேண்டும்.

இப்போது ஜெனரல் இன்ஷூரன்ஸ் தேசியமயமாக்கப்பட்டிருக்கிறது. ஜெனரல் இன்ஷூரன்ஸ் சிப்பந்திகளாக இருக்கக்கூடியவர்கள் இதற்கு முன்னால் நகராட்சி உறுப்பினர்களாக இருந்திருக்க முடியும். ஆனால் அப்படி இனிமேல் இருக்க முடியாது, நாம் நிறைவேற்றியிருக்கக் கூடிய சட்டத்தின் அடிப்படையிலே. ஆகவே அதற்கு திருத்தங்கள் கொண்டுவரப்படவேண்டும். அதேமாதிரியாக நகரவைகளில் அல்லது மாநகராட்சிகளிலும் பணியாற்றக்கூடிய சிப்பந்திகள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் பாதுகாப்பாக இருப்பது நகரவை உறுப்பினர்கள்தான். அவர்களால் அமைக்கப்படக்கூடிய சங்கங்களில் நகரவை உறுப்பினர்கள் செயலாளர்களாக, தலைவர்களாக இருக்கிறார்கள். தலைவர்களாக நீண்ட நெடுங்காலமாக இருந்து கொண்டு வந்திருக்கிறார்கள். இப்போது அம்மாதிரி இருக்க முடியாது என்றதொரு நிலை ஏற்படுகிறது.

உதாரணமாக, மதுரை மின்சாரத் தொழிலாளர்கள். கார்ப்பரேஷன்தான் மின்சாரம் சப்ளை செய்கிறது. அந்த மின்சார தொழிலாளர் சங்கத்தில் தலைவராக இருந்த வெகு முக்கியமான உறுப்பினர், 1-ம் வட்டத்தைச் சேர்ந்தவர், அவர் இப்போது



ராஜிநாமா செய்யவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பல ஊனங்கள் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட சட்டத்தில் இருக்கின்றன. அதற்கு தேவைப்படுகிற தக்க திருத்தங்கள் கொண்டு வரப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, செக்ஷன் 6 (எ), கான்ஸ்டிட்யூஷன் ஆஃப் ஸ்டான்டிங் கமிட்டி பற்றி ஒரு கருத்து கூற விரும்புகிறேன். அதுபற்றி ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் சொன்ன கருத்துத்தான்.

' There shall be six standing committees for dealing respectively with—

(1) Accounts,

(2) Education,

(3) Health,

(4) Taxation and Finance, excluding Taxation Appeals,

(5) Town Planning and Improvements; and

(6) Works '

இந்த ஆறு கமிட்டிகள் இப்போது அமைக்கப்பட இருக்கின்றன. ஏற்கனவே இங்கு எடுத்த முடிவுகளின் அடிப்படையில் இந்த ஃபைனான்ஸ் கமிட்டி அமைக்கப்பட இருக்கிறது. இந்தக் கமிட்டிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதில், எந்த முறையில் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்பதில் நாம் சற்று ஆழமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதே சட்டமன்றத்தில் எஸ்டிமேட்ஸ் கமிட்டி இருக்கிறது, பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி இருக்கிறது. அதேமாதிரிதான் நாடாளுமன்றத்திலும், அந்தக் கமிட்டிகளில் எல்லாம் மெஜாரிட்டி உறுப்பினர்கள் ஆதரிக்கக்கூடியவர்களை அக்கமிட்டிகளில் நியமிப்பதில்லை. அப்படியானால் ஆளும் கட்சியில் உள்ளவர்கள்தான் அந்தக் கமிட்டிகளில் உள்ள உறுப்பினர்களாக வந்து விடுவார்கள். அம்மாதிரி வரக்கூடாது. கமிட்டிகளில், அந்த சபையில் என்னென்ன கட்சிகளைச் சார்ந்தவர்கள் எவ்வளவு எவ்வளவு இருக்கிறார்கள் என்ற அளவில் பார்த்துச் செய்தால்தான், பூராப் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தால்தான் சரியாக இருக்க முடியும்.

சாதாரணமாக பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டித் தலைவர் எதிர்கட்சித் தலைவராக இருப்பார், அல்லது எதிர்கட்சி க்ரூப்பிலுள்ள தலைவர் தலைவராக இருப்பார். பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டிக்கு தேர்ந்தெடுக்கும் முறை நீண்ட காலமாக இருந்து வரும் முறையாகும். அது ஒரு கன்வென்ஷன் ஆகும். ஆகவே நிரந்தரக் கமிட்டிகளுக்கு தேர்ந்தெடுக்கும்போது ப்ரொப்போர்ஷனல் ரெப்ரசென்டேஷன் முறை கடைப்பிடிக்கப்படவேண்டும். அப்படித்தான் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி, போன்ற மற்ற கமிட்டிகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அப்படி தேர்ந்தெடுக்கப்பட்டால்தான் எண்ணிக்கைக்கு ஏற்ற முறையில் சிலராவது வேறு கருத்து உள்ளவர்கள், வேறு கட்சிகளைச் சார்ந்தவர்கள் அங்கு வருவதற்கு உதவியாகயிருக்கும்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 ஜூலை 29

இதில் ஒரு கருத்து சொல்லப்பட்டது. சர்க்கிள் கமிட்டி என்று வைத்திருக்கிறோம். இந்தக் கமிட்டி தனியாக முடிவுகள் எடுத்தார்கள். அந்த முடிவுகள் ஒட்டுமொத்தமாக இருக்கக்கூடிய நிதி நிலைமையைக் கவனிக்காமல் நிதிநிலைமைக்கு அப்பாற்பட்ட திட்டங்களாக திட்ட எடுத்த முடிவுகளினால் சங்கடங்கள் ஏற்படுகின்றன என்று சொன்னார்கள். பொதுவான கமிட்டியாக இருக்கட்டும். குறிப்பாக நகரவைகள், மாநகராட்சிகள் இவற்றில் அதிகமாக அரசியல் நடமாடுவதில்லை. எனவே பொதுக் கமிட்டிகளாக செயலாற்றட்டும்.

இப்போது சில நாடுகளில் சட்ட மன்றத்தையே பர்மனென்ட் கமிட்டியாக்கிவிடுகிறார்கள். அப்படி பர்மனென்ட் கமிட்டியாக்கி விட்டால் அவர்கள் நேரடியாக சிந்திப்பதற்கும், நடவடிக்கை எடுப்பதற்கும் முடியும். நிர்வாகமும் நன்றாக இருக்கும். இப்படிப்பட்ட நிர்வாகக் கமிட்டிகளை மாநகராட்சியில் அமைக்கும்போது அந்த பர்மனென்ட் கமிட்டியில் எல்லா தரப்பில் திறமை வாய்ந்தவர்களும் பல கட்சியைச் சார்ந்தவர்களும் அதில் இடம் பெறும் வகையில் இருக்கவேண்டும். இந்த நிரந்தரக் கமிட்டிக்கு தேர்ந்தெடுக்கப்படும் முறை இருக்கிறதே

'Every standing committee shall consist of eleven members elected by the council from among its councillors by a majority of the councillors present and voting.........'

அது உண்மையிலேயே ஆபத்து நிறைந்து இருக்கிறது. ஆகவே நான் கொடுத்து இருக்கும் திருத்தத்திலே, 'by proportional representation through single transferable vote' என்று திருத்தம் கொடுத்து இருக்கிறேன். அந்தத் திருத்தத்தின்படி, அந்தத் திருத்தத்தின் அடிப்படையில் Procedure can be laid down by the rules இந்த மாதிரி செய்யலாம். இந்த நிரந்தரக் கமிட்டியில் எல்லாக் கருத்துக்களை கொண்டவர்களும் இருக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறேன். அடுத்தத் தொடரிலே விட்டுப் போன பல விஷயங்களை தொகுத்து பல மாற்றங்களைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாநகராட்சிக்கு இப்போது பொறுப்புகள், நடவடிக்கைகள் அதிகமாகிக்கொண்டு வருகின்றன. இப்படிப் பொறுப்புகள் அதிகமாகிக்கொண்டு வருகிற காலத்தில் ஏற்கெனவே ஒயிட் பேப்பரில் இருக்கும் நல்ல அம்சங்களை எடுத்துக்கொண்டு, அதிலே மாற்றங்களை கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த 3 ஆண்டுகளை 5 ஆண்டுகளாக ஆக்கி திருத்தம் கொண்டு வந்ததற்கு பாராட்டை தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. வை. பாலசுந்தரம்: சட்டப்பேரவைத் தலைவரவர்களே, இந்த திருத்த மசோதாவை ஆதரித்து சில வார்த்தைகளை கூறலாம் என்று கருதுகிறேன்.

இன்றைய தமிழக அரசு ஒரு சிறந்த வசதியை நகராட்சிகளுக்கு வழங்கியிருக்கிறது என்பதை நான் மனப்பூர்வமாக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். 3 ஆண்டு காலத்தில் எந்த பணியையும் செய்ய முடியாது எந்த ஒரு திட்டத்தையும் வகுத்து, நிறைவேற்ற



1971 ஜூலை 29] [திரு. வை. பாலசுந்தரம்]

முடியாது நகரசபைகளால் என்பதை உணர்ந்து, அதை 5 ஆண்டு காலத்திற்கு நீடித்தால் தான் நல்ல சமுதாய சேவைகளை, ஊர் மக்களுக்கு வேண்டிய வசதிகளை தேர்ந்தெடுக்கப்படுகிற உறுப்பினர்கள் செய்ய முடியும், செய்ய இயலும் என்பதை உணர்ந்து, இந்த 3 ஆண்டு காலத்தை 5 ஆண்டு காலமாக உயர்த்தி இருப்பது வரவேற்கத்தக்கதாகும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அதே நேரத்தில் மாநகராட்சி மன்றத் தலைவர்கள் என்று சொல்லக்கூடிய, குறிப்பாக சென்னை மேயர், அவர்களுடைய பதவி காலம் 1 ஆண்டுக்காலம் என்று வரையறுத்து வைக்கப்பட்டிருக்கிறது. அந்த ஒரு ஆண்டுகாலத்திற்குள் ஒரு பெரிய நகரத்தை கட்டிக்காக்கக் கூடிய தலையாய பொறுப்பை ஏற்று இருக்கும் தலைவர், திட்டம் தீட்டுவதற்குள் ஒரு ஆண்டு காலம் முடிந்து விடுகிறது. இந்த ஒரு ஆண்டுகாலத்திற்குள் செய்யவேண்டிய சாதனைகள், போட்டிருக்கிற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை என்று தான் சொல்லவேண்டும்.

ஒரு மேயர் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று சொன்னால் 3—4 மாதங்கள் அவர்களுக்கு நடத்தப்படும் பாராட்டு விழாக்களுக்கே சென்று விடுகிறது. மீதி இருக்கிற 8 மாதத்தில் ஏதாவது செய்யலாம் என்றால், ஏதாவது ஒரு வெளிநாட்டிலிருந்து அவர்களுக்கு அழைப்பு வந்து விடுகிறது. அவர்கள் அங்கே சென்று விட்டு, இரண்டு மாதங்கள் கழித்து திரும்பி வருகிறார்கள். மீதி இருக்கிற 6 மாதத்தில் ஏதாவது செய்யலாம் என்றால், சிந்திப்பதற்குள்ளே 6 மாதம் கழிந்துவிடுகிறது. இப்படி சூழ்நிலைகள் வருகிறபொழுது, அந்த மேயர் தன்னுடைய பணியை செவ்வனே செய்ய முடிவதில்லை. ஆகவே, குறைந்தது அந்த மேயர் பதவி காலத்தை 3 ஆண்டு காலம் என்று வைத்தால் தான், மேயராக வரக்கூடியவர்கள் சிறந்த பணியை, சிறந்த வசதிகளைச் செய்ய முடியும் என்ற கருத்தை இந்த நேரத்தில் நான் வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிறவர்கள், கிராமப் புறத்திலுள்ள சட்ட மன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்து ஒன்றியங்களில் நடக்கும் கூட்டங்களுக்கு அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் அதற்குச் சென்று, கூர்ந்து அந்த ஒன்றிய நடவடிக்கைகளை கவனித்து வருகிறார்கள். ஆனால், கிராமப் புறங்களில் இருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் இப்படி ஒன்றிய நடவடிக்கைகளில் பங்கெடுத்துக் கொள்வது போல், சென்னை மாநகரத்திலே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சட்ட மன்ற உறுப்பினர்கள், சென்னை மாநகராட்சி மன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்கான சூழ்நிலை உருவாக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிறந்த செயல்களை, சிறந்த நிர்வாகத்தை ஏற்படுத்தவேண்டுமென்ற அடிப்படையில் தான், இன்றைக்கு இந்த அரசு இந்த திருத்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறது. 3 ஆண்டு காலத்திற்குள், அவர்களுடைய பதவி காலத்திற்குள், சில உறுப்பினர்கள் எதுவுமே செய்ய முடியாது. அப்படிச் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் ஏற்படுவது கிடையாது. இந்த நிலைமையை மாற்றத்தான் 5 ஆண்டு காலம் நீடித்துத் தந்து,

அவர்கள் நல்ல சேவை செய்யவேண்டுமென்ற அடிப்படையில் இந்த திருத்தத்தைச் செய்து இருக்கிறார்கள். இதை பாராட்டி வரவேற்கிறேன்.

மாநகராட்சியைப் பொறுத்தவரையில் மாநகராட்சியில் இருக்கும் ஆணையருக்கு அதிக பொறுப்புகள் இருக்கின்றன. அதே நேரத்தில் ஆணையருக்கு என்ற சில பொறுப்புகள் இருக்கின்றன. அதே நேரத்தில் மத்தியக் குழு என்று ஒரு அங்கம் இருக்கிறது. அந்த அங்கம் செயல்படுகிற நேரத்தில், மத்தியக் குழு செயலில் ஈடுபடுகிற நேரத்தில், மத்தியக் குழு போடுகிற நல்ல பல திட்டங்களை சில நேரத்தில் ஆணையர் அவர்கள் தன்னுடைய பொறுப்பில் அமர்ந்து, அதை நிராகரிக்கும் சூழ்நிலை உருவாகி விடுகிறது. இந்த நேரத்தில் சட்டச் சிக்கல்கள் குறுக்கிடுகிற காரணத்தாலே, மத்தியக்குழு தலைவருக்கு இருக்கும் அதிகாரத்திற்கும், மாநகராட்சி ஆணையருக்கு இருக்கும் அதிகாரத்திற்கும் சட்டச் சிக்கல் ஏற்படாத வகையில் தடுத்து நிறுத்த, தீர்க்கப்பட சூழ்நிலை உருவாக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்தியக் குழுவின் திட்டங்கள் அனைத்துக்கும் ஆணையர் ஒப்புக் கொள்ளவேண்டுமென்று நான் கூறவில்லை. அதே நேரத்தில் கலந்து பேசி முடிவு எடுக்கலாம் என்று கூறிக்கொள்கிறேன். மத்தியக்குழுத் தலைவர், ஆணையர், மாநகராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் சேர்ந்து திட்டங்கள் தீட்டுவதற்கு, அதற்கு ஒப்புதல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தால், இப்படிப்பட்ட சட்டச் சிக்கல் ஏற்படாமல் இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். இவ்வளவு நல்ல திருத்த மசோதாவை கொண்டு வந்திருக்கும் இந்த அரசை பாராட்டி, அதை வரவேற்று என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இந்த நகராண்மைக் கழக திருத்த மசோதா இந்த சபையின் முன்னால் வைக்கப்பட்டு இருக்கிறது. நகராண்மைக் கழகத்திற்கு என்று புதிதாக ஒரு விரிவான சட்டத்தை தயாரிக்க வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது மிக மிக அவசியப்படுகிறது என்று நான் இந்த அவைக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், இப்போது பல நடைமுறைக் கஷ்டங்கள் இருக்கின்றன. அந்தக் கஷ்டங்களைத் தவிர்ப்பதற்காக தீவிரமாக ஆராய்ந்து அதற்கு ஒரு நல்ல முடிவு காண வேண்டியது அவசியம் தான். அப்படிப்பட்ட (காம்பிரஹென்சிவ் ஆக்ட்) விரிவான சட்டத்தை தயாரித்தது வரவேற்கத்தக்கது தான் என்று கூறிக்கொள்கிறேன்.

நகர மன்ற உறுப்பினர்களின் பதவி காலத்தை 3 ஆண்டிலிருந்து 5 ஆண்டுகளாக உயர்த்தி இருப்பது வரவேற்கத்தக்கதுதான். காரணம் அடிக்கடி தேர்தல்கள் நடப்பதால் மக்களும் பாதிக்கப் படுகிறார்கள். பதவி காலம் 3 ஆண்டிலிருந்து 5 ஆண்டுகளாக உயர்த்தியிருப்பதை பாராட்டுகிறேன். மேலும் இதில் உள்ள வேறு பல அம்சங்களையும் நான் பாராட்டி வரவேற்கிறேன்.



இந்தத் திருத்தத்திலே ஷெட்யூல்ட் காஸ்ட், ஷெட்யூல்ட் டிரைப், 12 பேரை நகர மன்றத்திற்கு சேர்த்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. 6 பெண்களை கவுன்சிலர்களாக எடுத்துக்கொள்ளலாம் என்று இந்த அரசாங்கம் பெரிய மனது வைத்து செய்து இருக்கிறது. இந்த சட்டமன்றத்தில் 6 பெண்கள் கூட இல்லை என்று நினைக்கிறேன். கார்ப்பரேஷனிலாவது 6 பெண்கள் சேர்த்துக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருப்பதற்காக சந்தோஷப்படுகிறேன்.

ஆனால் இவ்வளவு பெரிய மனது படைத்தவர்கள் ஒரு முக்கியமான ஷரத்தை விட்டு விட்டார்களே என்பதற்காக வருத்தப்படுகிறேன். பல்லாண்டு காலமாக சொல்லிக்கொண்டு வருகிறேன். இந்த சென்னை மாநகரத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 12 எம்.எல்.ஏ.க்களை கார்ப்பரேஷனில் சேர்க்கக் கூடாதா? அந்த பட்டிணத்தில் இருக்கும் எம்.எல்.ஏ.-களுக்கு வேறு வேலை செய்ய முடியாது. கார்ப்பரேஷன் வேலை தான் செய்ய முடியும். எம்.எல்.ஏ.-க்கள் பஞ்சாயத்து யூனியன் கூட்டங்களில் கலந்து கொள்ள வாய்ப்பு அளித்திருக்கும்போது, இந்த சென்னைப்பட்டிணத்தில் இருக்கும் எம்.எல்.ஏ.-க்களுக்கு மாத்திரம் மாநகராட்சி மன்றத்தின் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வாய்ப்புக் கொடுத்தால் என்ன என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

சென்னையில் இருக்கும் எம்.எல்.ஏ.-க்களுக்கு விழாக்களில் பங்கு கொள்ள அழைப்பு அனுப்புவது இல்லை, பஞ்சாயத்து யூனியன் கூட்டங்களுக்கு கிராமப்புறங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் எம்.எல்.ஏ.-க்கள் அழைக்கப்படுகிறார்கள். இந்த முறை பாரபட்சமானது, நல்லது அல்ல. தலைநகரிலுள்ள 12 எம்.எல்.ஏ.-க்கள் அங்கே உட்கார்ந்து, அந்த நடவடிக்கைகளில் பங்கு கொண்டால் எங்களால் முடிந்த அளவுக்கு மக்களுக்கு நன்மை செய்ய முடியும். " we do not want voting rights ' வெறுமனே அடெண்ட் பண்ணினால் போதும். பதவிக்கு வரவேண்டும் என்று எண்ணவில்லை. இந்தப் பன்னிரண்டு பேர்களும் அங்கே உட்கார்ந்து கொண்டு நகர சபை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு என்ன நடக்கிறது என்று பார்த்தால் போதும். (குறுக்கீடு) சீப் மினிஸ்டர் தொகுதியில் அக்கறை இருந்தால் வரட்டுமே. என்ன செய்யப் போகிறோம்? உட்கார்ந்து நடவடிக்கைகளைப் பார்க்கப் போகிறோம். அதற்கு ஒரு வாய்ப்பு இருக்கும். அதிகாரிகளைத் தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும். நேரிடையாக எடுத்துச் சொல்லி மக்களுக்கு நன்மைகளைச் செய்ய வசதியாக இருக்கும். அதில் ஒன்றும் நஷ்டம் வந்துவிடாது. இதை நான் பல்லாண்டுகளாக சொல்லிவருகிறேன். ஆனால் அது செவிடர் காதில் ஊதிய சங்கு மாதிரி போய்க்கொண்டிருக்கிறது (குறுக்கீடு) யாரையும் செவிடர் என்று சொல்லவில்லை. செவிடர் காதில் ஊதிய சங்குபோல் என்று பழமொழியைத்தான் சொல்கிறேன். இந்தப் பிரச்சினைக்கு விடிவு காணோமே என்றுதான் சொல்லுகிறேன். இந்த அரசாங்கமாவது ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நாங்கள் என்ன மேயர் பதவியா, டெபுடி மேயர் பதவியா கேட்கிறோம்? வோட்டிங் ரைட்டா கேட்கிறோம்?

We just want to participate in the meetings of the Corporation Council.

ஆகையினால், ஒன்றும் நஷ்டமாகிப் போய்விடாது. ஆகவே, இதைச் சிந்தித்துப் பார்த்து, 120 பேர்களோடு 12 பேர்கள் சேர்க்கிறார்கள். இன்னும் 12 பேர்களைச் சேர்ப்பதால் ஒன்றும் கஷ்டம் கிடையாது. இட நெருக்கடியும் ஏற்படாது. அரசாங்கம் இதைத் தீவிரமாக யோசனைசெய்து 12 பேர்களையும் சேர்ப்பதற்கு வழி காணவேண்டும்.

நகரத்தில் தண்ணீர் வரவில்லை, விளக்கு எரியவில்லை, குப்பை எடுக்கவில்லை என்று மக்கள் புகார்கள் செய்யும்போது, கவுன்சிலர்கள் மட்டும் செய்துவிடுவது சாத்தியமில்லை. ஆகவே, அதிலும் எம்.எல்.ஏ. ஒரு கட்சியாகவும், கவுன்சிலர் வேறு கட்சியாகவும் இருந்தால், வேண்டுமென்றே கூட சில காரியங்கள் செய்யப்படும். பொது மக்களுக்கு நல்ல காரியங்கள் செய்யப்படவேண்டும் என்ற முறையில், தயவுசெய்து இந்த 12 எம்.எல்.ஏ.-க்களையும், கார்ப்பொரேஷனில் கூட்டங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதிலும் கட்டாயமாக இந்த அரசாங்கம் செய்ய வேண்டும். பெரிய ஜனநாயக கட்சி என்று சொல்லிக் கொள்பவர்கள் இதைக் கட்டாயம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக வரும்போது, சர்கிள் கமிட்டிகள் டு பி அபாலிஷ்ட். முன்பு கொண்டு வந்தபோதே ரொம்ப அவசரப்பட்டு செய்கிறோமோ என்று ஆளும் கட்சியில் இருந்தபோதே நினைத்தோம். சர்கிள் கமிட்டிகள் மூலமாக நல்ல முறையில் நடக்கும் என்று பார்த்தோம். ஆனால் சரியான இணைப்பு இல்லாததால், அப்படி நடக்கவில்லை.

எனக்கு முன்னே பேசிய திரு. கே. எம். சுப்பிரமணியம் எடுத்துச் சொன்னார்கள். சிம்பிள் மெஜாரிடி வோட்டுகளை வைத்து அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்றால், பலம் வாய்ந்த கட்சி இருந்தால் தன் அங்கத்தினர்களை கட்டாயம் கொண்டு வந்துவிட முடியும். நீங்கள் கொண்டு வந்திருக்கிற முறைப்படி 11 அங்கத்தினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு விடுவார்கள். அது ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்துவிடுவார்கள். வேறு யாரும் எதுவும் செய்ய முடியாத நிலைதான். அப்படி கவுன்சிலராக இருப்பதைவிட வெளியே இருப்பதே மேல் என்று ஆகிவிடும். ஆகவே, சிம்பிள் மெஜாரிடியில் மெம்பர்களை கமிட்டிகளுக்குத் தேர்ந்தெடுப்பதை விட்டுவிட்டு ப்ரபோர்ஷனல் ரெப்ரசென்டேஷனில் செய்தால் பிற கட்சி அங்கத்தினர்களும் வர வாய்ப்பு இருக்கும். அல்லது ஒரு மரபையாவது ஏற்படுத்தவேண்டும். இரண்டு மெம்பர்கள் இந்தக் கட்சிக்கு, இன்னும் இரண்டு அடுத்த பலம் உள்ள கட்சிக்கு என்று செய்யவேண்டும். அப்பொழுதுதான் எல்லாக் கட்சிகளும் செயல்பட முடியும். இன்றைக்கு கமிட்டிகள்,

'Accounts, Education, Health, Taxation and Finance, excluding Taxation Appeals, Town Planning and improvements and works.'

என்று போடுகிறார்கள். லைசென்ஸ் அண்ட் அப்பீல் கமிட்டிகளைக் காணோம். ஆனால், அந்த வேலையையும் செய்ய வேறு அதிகாரம் இருக்கிறது. கார்ப்பொரேஷன் விரும்பினால், இன்னும் பல



கமிட்டிகளைப் போடுவதற்கு அதிகாரம் இருப்பதால், அதிலே அமைத்துக் கொள்வார்களோ என்னவோ. ஆகவே, கமிட்டிகளின் ரெப்ரசென்டேஷன் நல்ல முறையில் வகுக்கப் படவேண்டும். ஒரு பவர்புல் கமிட்டியில் ஐந்து வருஷத்திற்கு தேர்ந்தெடுக்கப் பட்டு விட்டால், ஐந்து வருஷத்திற்கு அவரை அசைக்கவே முடியாது. ஆகவே, இதைத் தீவிரமாக சிந்தித்துப்பார்க்க வேண்டும். ப்ரபோர்ஷனல் ரெப்ரசென்டேஷன் கொடுக்கலாமா என்று யோசிக்க வேண்டும்.

மேயர், டெபுடி மேயர் ரீஎலிஜிபிள்ஃபார் எலெக்ஷன் என்பதால் நிலைமை சரி ஆய்விடும் என்பது கிடையாது. எனக்கு முன்னே பேசிய முன்னாள் மேயர் அவர்கள் ஒரு வருஷத்திலே ஒன்றும் செய்ய முடியவில்லை. வரவேற்புக்கும், உலக சுற்றுப் பயணத்திற்கும் சென்று விடுகிறது. ஆகவே, அதை 5 வருஷமாகச் செய்ய வேண்டும் என்றார்கள். மனது இருந்தால் நல்ல வேலைகளைச் செய்யலாம். ஒரு வருஷத்தில் எவ்வளவோ செய்யலாம். அதிகப்படுத்த வேண்டும் என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஆகவேதான் நான் திருத்தம் கொண்டு வந்திருக்கிறேன்,

'An outgoing Mayor or Deputy Mayor is not eligible for re-election.'

மறுமுறை தேர்தலுக்கு நிற்க வழிவகை செய்யக் கூடாது. பலம் வாய்ந்த மேயராக இருந்துவிட்டால், 5 வருஷம் ஒருவரே மேயராக இருக்கலாம் என்றால், அது சரியான நிலைமையை உண்டாக்காது. வேறொருவருக்கு வாய்ப்பே கிடைக்காமல் போகும்.

We must train as many leaders as possible for public life. இது ஒரு பயிற்சிக் களமாக இருக்கவேண்டும். அதிலே பல தலைவர்களை நாம் உருவாக்க வேண்டும். ஆண்டுக்கொரு முறை ஒரு மேயர் என்றால் பலருக்கு வாய்ப்பு ஏற்படும்.

முனிசிபல் சேர்மன்களெல்லாம் பற்றி திரு. கணபதி சொன்னார்கள். அதையும் திருத்தி ஆவன செய்ய வேண்டும். ஒரு வருஷம் மேயராக, டெபுடி மேயராக இருந்தவர் அடுத்த வருஷம் இருக்கக் கூடாது. நல்ல திறமை படைத்தவர்கள் பலர் மக்களுக்கு சேவை செய்ய வாய்ப்பு ஏற்படும். மதுரையில் இன்றைக்கு ஐந்து வருஷத்திற்கு ஒருவரே மேயராக இருக்கலாம் என்று இருக்கிறது. வேறு ஒருவருக்கு வாய்ப்பே இல்லாமல் போகிறது. ஆகவே, இதை மாற்றியமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக வரும்போது, செக்ஷன் 93—அப்பாயிண்ட்மெண்ட் கமிட்டி. எனக்கு முன்னால் பேசிய திரு. கே. எம். சுப்பிரமணியம், கமிஷனர், அஸிஸ்டெண்ட் கமிஷனர் இருந்தால் போதும், வேறொருவர் வேண்டாம் என்றார்கள். அதிலே கூட அபிஷியல்லை இருக்கலாம். இதிலே கூட ஒரு ஆபத்து இருக்கிறது. ஐந்து வருஷம் இருந்தால் அது தவறாகப்போய்விடும். ஒரு வருஷம் இருந்தாலே பல செல்வாக்குகளைப் பெறலாம். (குறுக்கீடு) நான் ஒன்றும் குற்றஞ்சொல்லவில்லை. செல்வாக்கு என்றுதான் சொன்னேன், இல்லையென்றால், ஆதாரம் கொண்டுவா என்பார்கள். உள்ளதைச்

சொல்கிறேன். ஒரு வருஷம் இருந்தாலே எதுவேண்டுமென்றாலும் செய்யலாம்.

'If the elected member continues in that Committee'

கட்டாயமாக பல தவறுகளுக்கு இடம் கொடுக்கும். ஜனநாயகத்திற்கு இழுக்காகப் போகும். ஐந்து வருஷம் ஒரே மெம்பர் இருப்பதைவிட, மேயரைப் போட்டால், அவர் வருஷாவருஷம் மாறுவதால், வேறு வேறு மேயர் வருவார்கள். ஆகவே, மேயர், கமிஷனர், அஸிஸ்டெண்ட் கமிஷனர் என்று போட்டுவிட்டால், அதிகாரியில்லாத ஒருவர், மேயர், அங்கம் வகிக்க வழி ஏற்படும். ஒரு வருஷம் அவர் இருப்பார். ஒருவரே ஐந்து வருஷம் என்று போட்டால் கட்டாயம் தவறுகள் ஏற்பட இடம் கொடுக்கும்.

அடுத்தபடியாக, இந்த காண்டிராக்ட்களுக்காக 7½ லட்சத்திற்கு மேலே அரசாங்கத்தினுடைய சாங்ஷன் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். நிதி நிலையைப் பொறுத்தவரை கார்ப்பரேஷன் ரொம்பக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதற்காக ஒரு கமிட்டியைப் போட்டிருக்கிறார்கள். 11 கோடி ரூபாய் வருமானம் வருகிற கார்ப்பரேஷனில் என்ன தவறு நடக்கிறது, ஏன் இந்த கதியில் அதன் நிதி நிலை இருக்கிறது என்பதற்காக அரசாங்கமே ஒரு கமிட்டி போட்டிருக்கிறதென்று சொன்னால் அது எந்த நிலையில் இருக்கிறது என்பதைப்பற்றி நாம் சொல்லவேண்டாம். இந்த காண்டிராக்ட்ஸ் கொடுப்பதிலே, சாங்ஷன் செய்வதிலே பல கால தாமதங்கள், சங்கடங்கள் ஏற்படுகின்றன.

அது மாத்திரமில்லாமல், காண்டிராக்ட்ஸ் கொடுப்பதிலே சில பேர் எடுத்து பாதியிலே காண்டிராக்ட்படி செய்யாமல் ஓடி விடுகிறார்கள். அப்படி ஓடிவிடுகிறவர்களைப் பிடித்து தண்டிக்கலாமென்றால் அவர்கள் கையில் அகப்படமாட்டேன் என்கிறார்கள். உதாரணத்திற்கு விளக்குகள் போட பல்ப்ஸ் போட காண்டிராக்ட் கொடுக்கிறோம். ஆனால் முழு வேலையும் செய்யப்படுவதில்லை. பொது காண்டிராக்டுகளை கார்ப்பரேஷன் செய்கிறது. இதில் பல தவறுகளை கண்டுபிடிக்க முடிகிறது. பல இடங்களில் வேலை செய்யப்படாமல் பில்கள் தயாரிக்கப்பட்டு பணம் செலவாகிவிடுகிறது. இப்படி மக்கள் வரிப் பணம் பாழாகிறது. இதற்கு பொறுப்பாளிகள் நாம் என்பதை அரசு உணர்ந்து அதன் நிதி நிலையை எந்த அளவிற்கு சரி செய்யவேண்டுமோ, காண்டிராக்ட் முறைகளில் குற்றம் குறை இல்லாமல் விதிகளை எப்படி மாற்றியமைத்துப் போட முடியுமோ, அந்த அளவிற்குச் செய்தால் சரியாக நடக்குமேயொழிய இல்லையென்றால் நடக்காது. கார்ப்பரேஷன் அவசரமாக வேண்டிய பொருள்களுக்குக் கூட சீக்கிரமாக காண்டிராக்ட் விடுவது கிடையாது.

கார்ப்பரேஷனுக்கு முதல் வேலை குப்பை எடுக்கிற வேலை. கூடை, முறம், துடப்பம் இவைகளை டெண்டர் விட்டுப் பெறுவதற்கே காலதாமதம் ஆகிவிடுகிறது. குப்பைக்காரனைக் கூப்பிட்டு ஏன் சரியாக குப்பை எடுக்கவில்லையென்று கேட்டால், முறம் கிடையாது, டெண்டர் வரவில்லை, காண்டிராக்ட் விடவில்லை என்று பதில்





சொல்கிறார்கள். பொருள்கள் இருந்தால்தான் காரியம் செய்ய முடியுமென்று சொல்கிற நிலையில் இப்படி பல குறைகள் நிர்வாகத்தில் காணப்படுகின்றன. நகரம் விரிந்து கொண்டே போகிறது. இங்கே லட்சக்கணக்கான மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்படி லட்சக்கணக்கான மக்கள் வாழ்கிற பகுதியில் குப்பை எடுக்கும் வேலை கூட ஒழுங்காக நடத்தப்படவில்லை.

இன்னொன்று, குப்பைகளை ஞாயிற்றுக்கிழமைகளில் எடுப்பதில்லை. அதனால் குப்பை மலை போல குவிந்து மறு நாள் பார்த்தால் பரங்கி மலை மாதிரி, பரங்கிமலை ஆளவிலே, குப்பை குவிந்திருக்கிறது. அந்த அளவிற்கு குப்பை எடுப்பதில் அக்கறை கிடையாது. ஏன் ஷிப்டு முறை வைத்து ஞாயிற்றுக்கிழமை வேலை கொடுத்து அதற்குப் பதில் வெள்ளிக்கிழமை லீவு கொடுக்கலாம். இந்த மாதிரி கன்சர்வன்சியை ஒழுங்காகச் செய்யவேண்டும். இல்லாவிட்டால் பல வியாதிகளுக்கு, தொத்து நோய்களுக்கு மக்கள் ஆளாகிறார்கள். கார்ப்பரேஷன் திருத்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிற இந்த வேளையில் சரியான முறையில் இன்னும் சிறந்த ஒரு திட்டத்தையும் கொண்டு வருவதற்கும் அரசாங்கம் முன் வரவேண்டும். நாங்கள் கொடுத்த திருத்தங்களில் உங்கள் நிதியை அதிகம் பாதிக்காத திருத்தங்கள் இருக்கின்றன. அந்த திருத்தங்களை ஏற்றுக் கொண்டு நகராண்மைக் கழகத்தை சீர்படுத்த முன்வரவேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

<u>திரு. இராம அரங்கண்ணல்:</u> தலைவரவர்களே, கவுன்சிலராக இருக்கிற எம்.எல்.ஏ.-வான நண்பர் கே. எம். எஸ். அவர்கள் கவுன்சிலர்களுக்கெல்லாம் எவ்வளவோ கஷ்டம் இருக்கிறதென்று சொன்னார்கள். எம்.எல்.ஏ.-வாக இருக்கிற சகோதரி அனந்தநாயகி அவர்கள் கவுன்சிலர்களுக்கு வேண்டிய உரிமைகள் எல்லாம் அவர்களுக்கும் வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் சென்னை நகரத்தில் இருக்கிற சட்ட மன்ற உறுப்பினரான என்னுடைய கருத்து, கவுன்சிலர்கள் செய்கிற காரியங்களையெல்லாம் செய்வதற்குள்ள வசதிகள் நமக்கும் இருக்கின்றன. கவுன்சிலில் போய் உட்கார்ந்து அந்த நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கும் நமக்கு வசதிகள் இருக்கின்றன. எந்த காரியத்தை மக்களுக்குச் செய்யவேண்டுமென்று கருதுகிறோமோ அந்தக் காரியங்களைச் செய்வதற்கு நம்முடைய கவுன்சிலர்கள் நமக்கு ஒத்துழைப்பாக இருக்கிறார்கள். இதை மறுப்பதற்கில்லை.

மைலாப்பூர் தொகுதியைப் பொறுத்த அளவிலே எட்டு திராவிட முன்னேற்றக் கழகக் கவுன்சிலர்களும் இரண்டு காங்கிரஸ் கவுன்சிலர்களும் இருக்கிறார்கள். ஆனால் என்னுடைய தொகுதியைப் பொறுத்த அளவிலே சரி பாதி அப்படியும் இப்படியும் இருக்கிறார்கள். ஆனால் கவுன்சிலர்கள் எப்படியிருந்தாலும், நல்ல முறையில் நகரத்திற்கு பணியாற்ற வேண்டுமென்று சட்ட மன்ற உறுப்பினர் விரும்பினால், கவுன்சிலர்களைப் பயன்படுத்தி, நகராண்மைக் கழகத்தை, சர்க்காரைப் பயன்படுத்தி நல்ல சேவைகளைச் செய்யலாம் என்பதை உணர்ந்திருக்கிறோம். ஆகையினாலே அங்கே இடம் வேண்டுமென்பதைவிட

இருக்கிற இடத்திலிருந்து கொண்டே தங்களுக்கு வேண்டியதைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். நம்முடைய நண்பர் கே. எம். எஸ். பேசுகிற நேரத்திலே நகராண்மைக் கழக உறுப்பினர்களுக்கு இன்றையதினம் ஏராளமான பொறுப்புகள் ஏற்பட்டு விட்டன, எதற்கெடுத்தாலும் கவுன்சிலர்களைப் பார்த்து மக்கள் ஏன் இது நடக்கவில்லை, ஏன் அது நடக்கவில்லை என்று கேட்கிறார்கள், என்று சொன்னார்கள். இது மிகப் பெருமைப்பட வேண்டிய விஷயம்.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கவுன்சிலரிடத்தில் கையெழுத்து வாங்குவதற்காக நான் ஒரு வார காலம் அலைந்தேன். ஆனாலும் கையெழுத்து வாங்க முடியாமல் போய்விட்டது. ஆனால் இன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்புக்கு வந்ததற்குப் பிறகு, சாதாரணமானவர்கள் கவுன்சிலில் அமரவும், ஒரு காலத்தில் பணக்காரர்கள், வசதி படைத்தவர்கள்தான் மேயராக வர முடியும் என்ற நிலைமை மாறி சாதாரணமானவர்கள் கூட மேயராக, துணை மேயராக வரலாம், எல்லா பொறுப்புகளுக்கும் வரலாம் என்று மலர்ந்த பிறகு சாதாரணமானவர்கள் இன்றைய தினம் மக்கள் மத்தியில் தினசரி அலைந்து அலைந்து அங்கே என்ன நடக்கிறது, இங்கே என்ன நடக்கிறது என்று மக்களை நாடி குறைகளைக் கேட்கிற காரணத்தினால் இன்றைய தினம் எது இல்லையென்றாலும் கவுன்சிலர்களைப் பார்த்து மக்கள் கேட்கிறார்கள். பொது வாழ்க்கையில் இருக்கிறவர்கள் பெருமைப்பட வேண்டிய அம்சமாகும்.

நகராண்மைக் கழகத்தைப் பொறுத்த வரையில் சட்டத்தில் கொண்டு வந்திருக்கிற இந்த திருத்தங்கள் சாதாரணமான திருத்தங்கள்தான். இதை காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் பாராட்டிப் பேசினார்கள். அவர்கள் பாராட்டுகிற வகையிலும், நாட்டுமக்களும், நகரத்தில் வாழ்கிற மக்களும் பொதுவாகப் பாராட்டுகிற வகையிலும் அருமையான விஷயங்களெல்லாம் அடங்கிய காம்ப்ரஹென்சிங் பில் கூடிய விரைவிலே கொண்டு வரவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. கார்ப்பரேஷன் ஏற்பட்ட விதமும், மேயோரால்டி ஏற்பட்ட விதமும் எப்படி என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். ஆண்டுகள் உருண்டோடிவிட்டன.

ஜனநாயகத்தைப் பற்றி நாம் பேசுகிறோம். சாதாரணமானவர்கள் பொறுப்பில் வந்து விட்ட காரணத்தினால் இன்றையதினம் மேயோரால்டியைப் பற்றி யோசிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். என்ன காரியங்கள் செய்ய வேண்டுமென்பதைப் பற்றியும், பல விஷயங்கள் அடங்கிய இந்த மசோதாவில் இதற்கான அம்சங்கள் இருக்கவேண்டுமென்று கருதுகிறேன்.

இன்னொன்று, மாநகராட்சியினுடைய தேவைகள் அதிகமாகிக் கொண்டு போகின்றன. நகராண்மைக் கழகத்திற்கு நிதிப் பற்றாக்குறை அதிகமாகிக் கொண்டே போகிறது. நிதி வசதிகள் சுருங்கிக் கொண்டு வருகின்றன. இவைகளைப் பற்றி பரிசீலனை செய்வதற்கு குழு ஒன்றும் நியமிக்கப்பட்டு இருக்கிறது. நகராண்மைக் கழகத்தில் இருக்கிற ரெவின்யூ துறையை நல்ல முறையில் சீர்படுத்துவோமானால்



ஓரளவிற்கும் வருமானம் பெருக முடியும் என்பது என்னுடைய கருத்தாகும். இதற்கு வரவிருக்கிற மசோதாவில் நகராண்மைக் கழகத்தில் பணியாற்றுகிற சிப்பந்திகள் அத்தனை பேரையும் ப்ரொவின்ஷியலைஸ் செய்து விடவேண்டும்.

என்ஜினீயர்கள், அதிகாரிகள் நகராண்மைக் கழகத்தில் இருக்கிறார்களென்றால் தொடர்ந்து அவர்கள் அந்த நிர்வாகத்தில் இருக்கிற சூழ்நிலை இருக்கிறது. அதற்குப் பதில் வரவிருக்கிற மசோதாவில் அங்கே பணியாற்றுகிறவர்களையும் ப்ரொவின்ஷியலைஸ் செய்து விட்டால் நிர்வாகம் வேகமாக நடக்கும் என்பது என்னுடைய கருத்தாகும்.

கவுன்சிலர்களுக்கு சம்பளம் தரப்பட வேண்டுமென்று நம்முடைய கவுன்சிலராக இருக்கிற எம்.எல்.ஏ. குறிப்பிட்டார்கள். ஆனால் நகராண்மைக் கழகத்தைப் பொறுத்த அளவில் 40 பேர்கள் உறுப்பினர்களாக இருந்த காலம் மாறி, இன்றையதினம் 100 என்று இருந்து 120 பேராக ஆகியிருக்கிறார்கள். இது அநேகமாக விருத்தியாகக் கூடும். முன்பிருந்ததைவிட இப்போது கவுன்சிலர்களுக்குத் தேவையான டெலிபோன் வசதிகள் இன்னும் சில வசதிகள் இருக்கின்றன.

<u>திரு. கே. எம். சுப்பிரமணியம்:</u> தலைவரவர்களே, டெலிபோன் வசதி தான் உண்டு, ஆனால் பணம் கிடையாது.

<u>திரு. இராம. அரங்கண்ணல்</u> : ஆனால், அவர்கள் அந்தந்த வட்டக் கழகத்திற்குச் சென்று டெலிபோன் செய்வதற்கோ, அலுவலகங்களுக்குச் சென்று டெலிபோன் செய்வதற்கோ வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை நாம் எல்லோரும் அறிவோம்.

இது மட்டுமின்றி, சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கூட இந்த அளவிற்கு லெட்டர்ஹெட் வசதி கிடையாது. ஆனால் நகராண்மைக் கழக உறுப்பினர்களுக்கு அருமையான அச்சகம் இருக்கிறது. தேவையான எல்லா வசதிகளையும் பெறக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதுவும் நமக்கெல்லாம் நன்றாகத் தெரியும்.

இந்த நகராண்மைக் கழகத்தைப் பொறுத்த அளவில் வர இருக்கிற மசோதாவில் நல்ல அம்சங்களைச் சேர்த்து ஒருங்கிணைத்திருக்கிற காரணத்தினால் நன்றாகச் செயல்படும். அப்பாயிண்ட்மெண்டு கமிட்டியைப் பற்றிச் சொன்னார்கள். இப்படி இருக்கலாமா, அப்படி இருக்கலாமா என்று சொன்னார்கள். சர்வீசையெல்லாம் ப்ரொவின்ஷியலைஸ் பண்ணுகிற சந்தர்ப்பம் வருமானால் இந்தக் கமிட்டியைக் கொண்டு பணியாற்றுகிற அவசியம் கூட ஏற்படாது.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த அளவில், இன்றையதினம் மக்கள் கையில், சாதாரணமானவர்கள் கையில் வந்திருக்கிற இந்த நகராண்மைக் கழக நிர்வாகம் மக்களால் போற்றப்படுகிற அளவிற்கும், மக்கள் குறைகளை இன்றையதினம் கவுன்சிலர்கள் கேட்டறிந்து காரியங்கள் செய்கிற காரணத்தினால் நல்ல முறையில் காரியங்கள் நடக்கும் சூழ்நிலை அமைந்திருந்தாலும், வரவிருக்கிற மசோதாவில் நல்ல திருத்தங்களைச் செய்து இந்த திருத்தங்கள் நம்முடைய நகராண்மைக் கழக நிர்வாகத்தை உயர்த்துவதற்கும் சென்னை

[திரு. இராம. அரங்கண்ணல்] [1971 ஜூலை 29

மாநகரம் என்று சொன்னால் அது ஒரு அருமையான சோலை என்று பாராட்டுகிற அளவிற்கு காரியங்கள் நடக்கவும் இந்த மசோதா ஒரு வழிகோலாக அமையும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து அமைகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மசோதாவையொட்டி திருமதி அனந்தநாயகி அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய திருத்தத்தை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களை நான் பேச விரும்புகிறேன்.

இது அவசரமாக, பல்வேறு அம்சங்களை நன்றாகக் கவனத்தில் கொண்டு வராது, நன்றாக ஆராய்ந்து புரிந்து கொள்ளாமல் வந்திருக்கக் கூடிய மசோதா என்பது என்னுடைய கருத்தாகும். ஆகவே, இதைப் பொறுக்கு குழுவிற்கு விட்டு அங்கே எல்லாக் கட்சி உறுப்பினர்களும் நன்றாக கவனித்து அவர்களுடைய கருத்துக்களைச் சொன்னதற்குப் பிறகு, எப்படி "டவுன் பிளானிங் பில்" லைக் கொண்டு வருகிறோமோ அதே வகையில் இருந்தால் நன்றாக இருக்கும் என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இதிலே பல்வேறு ஆலோசனைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் இந்த விவாதத்தைத் துவக்கி வைத்த நேரத்தில், "93-வது செக்ஷனின் கீழ் அப்பாயிண்ட்மெண்ட் கமிட்டி' என்று ஒரு செக்ஷன் இருக்கிறது. அதிலே,

"There shall be an Appointments Committee which shall consist of Mayor, one member elected by the Council and the Commissioner. The Mayor shall be the Chairman of the Appointments Committee."

என்று இருக்கிறது, இது தேவையற்ற ஒன்றாகும் என்று வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஷரத்து நீக்கப்படுவதுதான் நல்லது. ஏற்கெனவே பல்வேறு விஷயங்களில் கவுன்சிலர்களுடைய தலையீடு அதிகமாக இருக்கிறது என்று புகார்கள் இருக்கும் இந்த நேரத்தில் இன்னும் 'அப்பாயிண்ட்மெண்ட்ஸ்' விஷயத்தில் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்துவிட்டால் என்ன பலன் ஏற்படும் என்பதை யோசிக்கும்போது, இந்த ஷரத்தை அடியோடு எடுத்து விடவேண்டும் என்று அழுத்தம் திருத்தமாக இந்த சபையில் கேட்டுக் கொள்ளுவதோடு, அமைச்சர் அவர்களே அரசாங்கத்தின் சார்பில் ஏதாவது திருத்தம் கொண்டுவந்து இதைச் செய்தால் சிறப்பாக இருக்கும். இதை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இதில் ஒன்றை முழுமனதோடு வரவேற்கிறேன். அதாவது தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பெண்களுக்கும் தனியாக சில இடங்களை ஒதுக்க வேண்டும் என்று இருக்கிறது. இதை நிச்சயமாக எல்லாக் கட்சி உறுப்பினர்களும் முழுமனத்துடன் வரவேற்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

அடுத்து ப்ராப்பர்டி டாக்ஸ் பற்றி ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கனவே நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சொத்துமீதான வரி பற்றி ஒரு விஷயத்தை அவைக்குச் சமர்ப்பித்



1971 ஜூலை 29] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

திருந்தார்கள். என்னைப்பொறுத்த வரையில், பயங்கரமான முறையில் அர்பன் லாண்டு டாக்ஸ் என்று இருக்கும்போது இன்னும் பிராப்பர்டி டாக்ஸ் என்று இருந்தால் சென்னையைப் பொறுத்தவரையில் காஸ்ட் ஆஃப் லிவிங் இன்டெக்ஸ் மிக அதிகமாக ஏறிவிடும். இதைக் கவனிக்க வேண்டும். இந்த மசோதா வருவதற்கு முன்கூட்டியே அவசர அவசரமாக இதில் சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய அதாவது பிராப்பர்டி டாக்ஸை உயர்த்தக்கூடிய அளவிற்கு இன்னொரு மசோதாவைக் கொண்டுவருவது அவசியமற்றதாகும்.

இப்போது இந்த மசோதா வருகிறது. இன்னும் சில நாட்களுக்குப்பிறகு ஒரு கார்ம்ப்ரஹென்சிவ் மசோதா வர இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். இதெல்லாம், "ஹாச்-பாட்ச்" அதாவது அறைகுறையாக சட்டத்தைக் கொண்டுவருவதாக இல்லாமல், நாம் எல்லோரும் அமர்ந்து நன்றாக யோசித்துப் பார்க்கவேண்டிய ஒன்றாகும் என்று வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இப்போது மந்திரிசபையில் பிராப்பர்டி டாக்ஸ் என்று போட்டிருக்கின்றார்கள். இதை இந்த அரசு எப்படி நிர்வகிக்கப் போகின்றது என்பதற்கு விரிவான ஒரு பதிலை எதிர்ப்பார்க்கின்றேன். இப்படி பிராப்பர்டி டாக்ஸ் ஏறிக்கொண்டே போனால் சென்னையில் காஸ்ட் ஆஃப் லிவிங் இண்டெக்ஸ் ஏறிக்கொண்டே போகும்.

அடுத்து, அட்மினிஸ்ட்ரேஷனைப் பொறுத்தவரையில் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நமது சென்னை கார்ப்பொரேஷனின் நிர்வாகத்தைப் பற்றிச் சொல்லப்போனால், எங்கே பார்த்தாலும் கோளாறுகள். சரியான வகையில் நிர்வாகம் இல்லை என்ற புகார் எல்லாத் தரப்பிலிருந்தும் எல்லாக் கட்சியினரிடமிருந்தும் வரக்கூடிய ஒரு துர்ப்பாக்கியமான நிலைமை வந்திருக்கிறது. சாலைகளாக இருந்தாலும், பாதாள சாக்கடை பற்றியதாக இருந்தாலும், எதையெடுத்தாலும் ஒரு குறை.

அம்மையார் அவர்கள் கௌன்சிலில் போய் உட்காருவதற்கு வாய்ப்பிருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அது அவசியமில்லையென்றே கருதுகிறேன். அதனால் எந்தவிதமான பலனும் ஏற்பட்டுவிடப்போவதில்லை. நாம் இப்போது இருக்கக்கூடிய இடத்திலிருந்தே ஏதாவது மனுப்போட்டால் அதுவே கவனிக்கப்படுவதில்லை. கமிஷனரும் சரி, அல்லது சம்பந்தப்பட்ட கவுன்சிலரும் சரி இதைப்பற்றிக் கவனிப்பதே கிடையாது. இது பல தடவை நடந்திருக்கிறது. கார்ப்பொரேஷனுக்கு எழுதிப்போட்டால் ஒரே பதில் வருகிறது, "கடிதம் வந்திருக்கிறது, தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளுகிறோம்" என்று. என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் அல்லது எடுத்தார்கள் என்று எப்போதும் எழுதுவதில்லை. எப்போதாவது வந்தாலும் 'exception proves the rule' என்ற முறையில்தான் இருக்கிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை.எனவே அங்கே போய் உட்கார்ந்துகொண்டு பார்ப்பதற்கு இடம்தருவது ஒரு புறம் இருக்கட்டும், போட்ட கடிதங்களுக்குப் பதில் வந்தாலே போதும் என்ற நிலைதான் இருக்கிறது.

இந்த மன்றத்தில் உறுப்பினர்கள் எழுதும் கடிதங்களுக்கு உடனடியாக முறையாக பதில் அளித்திட வேண்டும் என்ற முறை ஏற்படுத்தப்படவேண்டும். மன்ற உறுப்பினர் என்ற முறையில் நம்மிடம் யாராவது ஒரு புகாரைக் கொடுத்தால் இது 33-வது வட்டத்தைப் பொருத்தது அல்லது 36-வது வட்டம் அல்லது 40-வது வட்டத்தைப் பற்றியது என்று பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. உடனடியாக இதை நாம் நகர் மன்றக் கமிஷனருக்கு அனுப்பவேண்டிய நிலை இருக்கிறது.

என் தொகுதியில் பொன்னப்பச்செட்டித் தெரு என்று இருக்கிறது. 39-வது வட்டத்தில், அங்கே தண்ணீர் சப்ளை சீராகவே இல்லை. பல முறை எழுதியும், ஒரு ஆர்பாட்டத்தையே கூட பண்ணத் தயாராயிருக்கிறேன் என்று அன்றைக்குச் சொல்லத்தக்க அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன. கமிஷனரிடமிருந்தோ அல்லது மேயரிடமிருந்தோ எந்த பதிலும் கிடைக்கவில்லை. எனவே நாம் அங்கே போய்தான் என்ன செய்ய முடியும்?

இதுபோலவே பெரியமேட்டுப் பகுதியில் ஒரு சாக்கடைத் திட்டம் செய்யப்படாமலேயே இருந்தது. பலமுறை கடிதம் எழுதியும் பதிலே வரவில்லை. அட்மினிஸ்ட்ரேஷன் சரியாகவே இல்லை. வேண்டுமானால் இந்த நிர்வாகம் செயல்படும் விதத்தைப் பார்ப்பதற்காக ஒரு குழுவை அமைத்து வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொண்டால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அடுத்து, முக்கியமாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இதை தயவுசெய்து அமைச்சர் அவர்கள் கேட்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இரண்டு வருடங்களுக்கு முன்பு சர்வீஸ் கமிஷனின் சார்பில் கொடுத்த ஒரு அறிக்கை இந்த சபையின் முன்பு வைக்கப்பட்டது. அதில் என்ன சொல்லப்பட்டிருந்தது என்றால் சென்னை மாநகராட்சி மன்றத்தில் செய்யப்படும் அப்பாயின்ட்மெண்ட்ஸ் விஷயத்தில் சர்வீஸ் கமிஷனை அடியோடு 'பை-பாஸ்' செய்து விடுகின்றார்கள் என்று குறிப்பிட்டிருந்தார்கள். மாநகராட்சி மன்றத்தில் பணியாளர்களை நியமிப்பதற்கு என்று தனியாக மூன்று அதிகாரிகளைப்போட்டு சர்வீஸ் கமிஷனில் ஒரு பிரிவையே ஏற்படுத்தியிருந்தார்கள். இவர்கள் மூலமாகத்தான் சென்னை கார்ப்பரேஷனின் அப்பாயின்ட்மெண்ட்ஸ் எல்லாம் செய்யப்பட வேண்டும் என்று விதி. ஆனால் இவர்களைச் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளவில்லை. வேகன்ஸீஸ் கூட பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றன. இறுதியாக அந்த சர்வீஸ் கமிஷனின் அறிக்கை கூறுகிறது, தங்களை அடியோடு பை-பாஸ் செய்துவிட்டார்கள் கார்ப்பொரேஷனில் என்று.

எனவே, இங்கே செக்ஷன் 93-ல் அப்பாயின்ட்மெண்ட்ஸ் கமிட்டி என்று போடுவதும், அங்கே சர்வீஸ் கமிஷனின் சார்பாக அப்படி அறிக்கை விடுவதையும் இணைத்துப் பார்த்தால், இந்த அரசாங்கமே இப்படி அது புறக்கணிக்கப்பட வேண்டும் என்று ஏதாவது உத்திரவிட்டிருக்கிறதா என்று யோசிக்க வேண்டியிருக்கிறது. இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண்டிப்பாகப் பதில் சொல்லி ஆக வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.





அடுத்து, இப்போதுள்ள முறையில் பத்து டிவிஷனுக்கு ஒரு ஹெல்த் அதிகாரி என்று இருப்பதை 20 வட்டங்களுக்கு ஒரு அதிகாரி என்று போடவேண்டும் என்று யோசிக்கப்படுகிறது. இப்போதே வேலை சரிவர முடியவில்லை. ஒரு வட்டத்தை 3 நாளில் பார்ப்பது என்றால்கூட இப்போதே ஒரு மாதம் ஆகும் ஒரு ஹெல்த் அதிகாரிக்கு. இன்னும் 20 வட்டத்தைப் பார்க்க வேண்டும் என்று ஆக்கினால் எப்படி முடியும் என்று யோசித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்தபடியாக மதிப்பிற்குரிய முன்னாள் மேயர் திரு. பாலசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். மேயர்கள் அடிக்கடி வெளிநாட்டுப் பயணம் என்று மேற்கொள்ளுவதை நிறுத்தினால் நலமாக இருக்கும். ஓராண்டுக்குள் மூன்று மாதங்கள் வரவேற்பு விழா. அடுத்து இரண்டு மூன்று மாதங்கள் வெளி நாட்டுப் பயணம்; பின்னர் விடைபெறுகிற விழா என்ற முறையில் ஒரு ஆண்டு போய்க் கொண்டிருக்கிறது. இதுபோல மேயர்கள் வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளுவதை நமது மாண்புமிகு முதல்வர் அவர்களும் விரும்பவில்லை என்பது எனக்குத் தெரியும். வெளிநாட்டுக்குப் போகிறபோது ஏதாவது கமிட் செய்து வந்துவிட்டாலும் அது அவர்களுக்குச் சங்கடமாக அமையும். அதில் அவர்களுக்கு அவ்வளவு திருப்தி இல்லை என்பது எனக்குத் தெரியும். ஆகவே, மேயர்கள் இப்படி வெளிநாட்டுப்பயணம் போவதற்கு ஒரு நல்ல முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒரு வேண்டுகோள் விடத் தயாராய் இருக்கிறேன். திரு. கே. எம். எஸ். அவர்கள் வலியுறுத்திச் சொன்னார்கள். ஐந்து ஆண்டுகள் என்பது தேவையில்லை. தேர்தலுக்கு மக்களிடத்தில் போனபோது 3 ஆண்டுக்காகத்தான் மாண்டேட் பொதுமக்களிடத்தில் உத்தரவு வாங்கிக்கொண்டிருக்கிறோம். ஆனால் இன்றைய தினம் அதை 5 ஆண்டுகளாக உயர்த்துவது என்பது சரியில்லை. நாளை சட்டமன்றத்தில் ஒரு சட்டம் கொண்டுவந்து சட்டமன்ற உறுப்பினர்கள் பதவிக்காலம் பத்தாண்டு என்றுகூடச் செய்து கொள்ளலாம், அரசியல் அமைப்புச் சட்டம் என்று இல்லாவிட்டால். ஆகவே 5 ஆண்டுக்கு நீட்டிக்க வேண்டியதில்லை.

அடுத்து, சென்னை மாநகராட்சிக் கவுன்சிலர்களுக்கு சம்பளமோ அல்லது வேறு ஏதாவது ஒரு அலவன்சோ கொடுப்பதை நான் பெரிதும் ஆதரிக்கிறேன். இது விஷயத்தில் திரு அரங்கண்ணல் அவர்கள் கூறிய கருத்தை நான் ஏற்பதற்கில்லை. முன்பு வசதி படைத்தவர்கள் மாநகராட்சி உறுப்பினராக வந்திருக்கலாம். இப்போது சாதாரண ஏழை மக்கள் கூட உறுப்பினராக வருகிறார்கள். அவர்கள் அடிக்கடி தங்கள் வட்டப் பிரச்சினைகளைப் பற்றி எடுத்துச்சொல்ல ஒவ்வொரு நாளும் மாநகராட்சிக்குப் போகவேண்டியதாக இருக்கிறது. இப்போது அவர்களுக்கு எந்த விதமான அலவன்சோ, சம்பளமோ நாம் கொடுக்காத காரணத்தினால் அதற்காகப் போகிறாரே அதனால் அவருக்குப் பயன் இருக்குமோ, இதற்காகப் போகிறாரே, இதனால் அவருக்குப் பயன் இருக்குமோ என்பதாக பொதுமக்கள் தவறான முறையில் பிரச்சாரம்

செய்வதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே நான் அழுத்தந் திருத்தமாகச் சொல்வது—அவர்களுக்கு மாதம் 100 ரூபாயோ, 200 ரூபாயோ, சம்பளமாகவோ, அலவன்சாகவோ கொடுக்க வகை செய்யவேண்டும். மாதம் 100 ரூபாய் என்றால் 120 உறுப்பினருக்கு ஒன்றும் அதிகச் செலவாகிவிடாது. (திரு. இராம. அரங்கண்ணல் குறுக்கீடு) மற்ற பஞ்சாயத்துக்களைப்பற்றி எல்லாம் எனக்குத் தெரியும். சென்னையைப் பொறுத்தவரையில் தெரியும். நகரம் பெரும் அளவுக்கு விரிவடைந்திருக்கிறது. தினமும் கவுன்சிலர்கள் மாநகராட்சிக்குச் செல்வது என்றால் அன்றாடம் நிறையச் செலவாகிறது. ஆகவேதான் அவர்களுக்கு அலவன்சு கொடுக்கப்பட வேண்டும். இது விஷயத்தில் திரு. இராம அரங்கண்ணல் கருத்தை நான் ஏற்பதற்கில்லை என்று தெரிவித்துக்சொள்கிறேன்.

பன்னிரண்டு மணிக்குள் இந்த விவாதத்தை முடித்துவிடலாம் என்று நினைத்தாலும் இத்தனை நேரம் விவாதித்திருக்கிறோம் என்றால் இதில் அவ்வளவு ஊழல்கள் இருக்கின்றன. அதன்காரணமாக இவ்வளவு நேரம் விவாதம் நடக்க வேண்டியதாக ஆகிவிட்டது.

திரு. இராம. அரங்கண்ணல் : சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். இத்தனை நேரம் விவாதம் நடைபெற்றது ஊழல் என்ற அடிப்படையில் நடைபெறவில்லை. எங்கள் கருத்தைச் சொல்லிக் கொண்டிருந்தோம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : திரு. இராம அரங்கண்ணல் பேச்சோ மற்ற பேச்சோ ஊழல் என்று சொல்லவில்லை. கார்ப்பரேஷன் நிர்வாகம் ஊழலாக இருக்கிறது. அதுபற்றிப் பேசவேண்டிய நிலை ஏற்பட்டது. ஆகவே, இது மிக முக்கியமான மசோதா. இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு விடவேண்டும் என்று வற்புறுத்தி முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி மன்றத்தைப் பொறுத்தும், மற்ற நகராட்சி மன்றங்களைப் பொறுத்தும் இங்கே கொண்டு வந்திருக்கிற திருத்த மசோதாவின் மீது உறுப்பினர்கள் பலதரப்பட்ட கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். இதைப் பொறுக்குக் குழுவுக்கு விட வேண்டுமென்று திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். இந்தக் கருத்துக்கள் பல ஆண்டு காலமாகவே மக்கள் மத்தியில் அடிபட்டு வருகிற கருத்துக்கள் தான். இது பற்றி மாநகராட்சி மன்றமும் தனிக் குழு ஒன்றை அமைத்து இதுபற்றி எல்லாம் விரிவாகப் பரிசீலனை நடத்தி இன்றைய தினம் ஏகமனதாகத் தீர்மானத்தையும் அங்கே நிறைவேற்றி நமக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

இதுபற்றி விரிவான மசோதாவையே நாம் கொண்டுவரலாம் என்றாலும் சிலவற்றுக்கு அரசு மத்திய அரசாங்கத்தின் முன் அனுமதியைப் பெறவேண்டியதாக இருக்கிறது. அதன் காரணமாக சிறிது காலதாமதமாகக்கூடும். ஆகவேதான் இன்றைய தினம் கருத்து வேறுபாடு இல்லாது, மாநகராட்சி மன்றத் தலைவர்களாலும்



ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்துபற்றி மட்டும் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம். இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை என்பதை முதலாவதாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பின்னால் வர இருக்கிற விரிவான மசோதா நல்ல முறையில் அமைவதற்கு ஏற்ற முறையில் உறுப்பினர்கள் விரிவான கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அவை எல்லாம் பரிசீலிக்கப் படும்.

குறிப்பாக, திரு. கே. எம். எஸ். அவர்களும், மற்றவர்களும் பேசும்போது மாநகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு ஒரு அலவன்சோ சம்பளமோ கொடுக்க வேண்டும் என்றார்கள். மற்ற மற்ற மாநகராட்சிகளைப் பார்த்தபோது சில இடத்தில் போக்கு வரத்து அலவன்சு என்று கொடுக்கிறார்கள். சிலர் சிட்டிங் பீஸ் என்று கொடுக்கிறார்கள். பல மாநகராட்சிகளில் இதுபோல எந்தச் சலுகையும் கொடுக்கப்படவில்லை. ஆயினும் சென்னை நகரம் மிக விரிவடைந்துவிட்டது. வசதி படைத்தவர்கள் நகராட்சி மன்ற உறுப்பினர்களாக வருகிறார்கள் என்கிறபோது அலவன்சோ, மற்ற சலுகையோ அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லாதிருக்கலாம். ஆனால் இன்றைய தினம் சாதாரண ஏழை எளிய மக்கள் கூட மன்ற உறுப்பினராக வருகிற நிலையில் ஜனநாயக வளர்ச்சி—விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. அன்றாடம் வட்டப் பிரச்சினைகளைக் குறித்து உறுப்பினர்களை மக்களும் வந்து பார்க்கிறார்கள். அவர்களுக்காக மன்ற உறுப்பினர்களும் மாநகராட்சி அலுவலகத்திற்குச் சென்று வரவேண்டியதாக இருக்கிறது. ஆகவே, உறுப்பினர்களுக்கு ஏதாவது அலவன்சு தரப்படவேண்டுமென்று மன்ற உறுப்பினர்களும் வற்புறுத்திக்கொண்டிருக்கிறார்கள். மாநகராட்சி மன்ற உறுப்பினர்களை வட்டார மக்களும் அதிகமாக அணுகி மனுவுக்கு மேல் மனு கொடுக்கிறார்கள். அவர்கள் காரியத்திற்காக அவர்களே உறுப்பினரை அழைத்துப்போக வேண்டிய நிலை கூட ஏற்படுகிறது: இல்லாவிட்டால் அவர்களுடைய தயவை நாடி அவர்கள் போக வேண்டியவர்களாக இருக்கிறார்கள். போக்குவரத்துச் செலவுகளுக்கு யார் அழைத்துக் கொண்டு வருகிறார்களோ அவர்களுடைய தயவிலே செல்கின்ற நிலைமை இருக்கிற காரணத்தாலே இந்த அரசு கொள்கை அளவிலே அவர்களுக்கு அலவன்ஸ் போன்று ஏதாவது கொடுக்கவேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, திங்கள் ஒன்றுக்கு 100 ரூபாய் கன்வேயன்ஸ் அலவன்ஸ் கொடுக்கலாம் என்பதை கொள்கை அளவிலே ஏற்றுக்கொண்டு, சட்டத்திலே எப்படிக் கொண்டு வரலாம் என்பதை ஆராய்ந்து கொண்டிருக்கிறது இந்த அரசு.

மாண்புமிகு உறுப்பினர்கள் நிலைக் குழுக்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஏற்கனவே மாநகராட்சி மன்றத்தில் இருந்து வந்தவை, அவைகள் எல்லாம். பெரும்பான்மையோரின் அடிப்படையில் எல்லாம் உறுப்பினர்கள் தேர்ந்தெடுப்பது என்று முதலிலே இருந்தது. அங்கே இருப்பவர்கள் மற்ற கட்சிகளைக் கலந்துகொண்டு செய்யலாம்

என்பதற்குப் பின்னர் 1952-ல் வெள்ளை அறிக்கை வந்த பிறகு நிலைக் குழுக்கள் கலைக்கப்பட்டன. ஒற்றை மாற்று ஓட்டு முறை கொண்டு வரப்பட்டது. ஏற்கெனவே இருந்த நிலைக் குழுக்கள் ஒற்றை மாற்று ஓட்டு முறையில் இல்லை. அக்கவுன்ட்ஸ் கமிட்டி, லைசென்ஸ் அப்பீல் கமிட்டி என்ற இரண்டு கமிட்டிகளில் இந்த முறை புகுத்தப்பட்டது. மதுரை மாநகராட்சியில் ஸ்டாண்டிங் கமிட்டியில் ப்ரபோர்ஷனல் ரெப்பரசன்டேஷன் இல்லாமல் ஏற்கெனவே இருந்த முறையை வகுத்திருந்தோம். இந்த மன்றத்திலேயும் பல குழுக்கள் அந்த வகையிலே அமைக்கப்பட்டிருக்கின்றன. பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி, எஸ்டிமேட் கமிட்டி போன்றவைகளை ப்ரபோர்ஷனல் ரெப்பரசன்டேஷன் முறையிலே அமைத்திருக்கிறோம். இடையிலே அமைக்கப்பட்ட இரண்டு கமிட்டிகளும் ப்ரபோர்ஷனல் ரெப்பர்சன்டேஷன் முறையில் அமைந்திருக்கிற காரணத்தால் அந்தக் கருத்தை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கான திருத்தத்தை நானே கொண்டுவரலாம் என்று இருக்கிறேன். அதன் மூலமாக சரியான சூழ்நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், மாற்றுக் கட்சிக்காரர்கள் கூறுவது அத்தனையையும் இந்த அரசு மறுத்தது இல்லை, நடைமுறைக்கு ஏற்ற கருத்தாக இருந்தால் ஏற்றுக்கொள்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஸ்டாண்டிங் கமிட்டியைப் பொறுத்தவரையில் ப்ரபோர்ஷனல் ரெப்பரசன்டேஷன் எலெக்ஷன் முறையைக் கொண்டுவரலாம் என்றும் அதற்கான திருத்தத்தைக் கொண்டுவரலாம் என்றும் இருக்கிறோம்.

அடுத்தபடியாக, அப்பாயிண்ட்மென்ட் கமிட்டியைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். பற்பல கருத்துக்கள் கூறப்பட்டன. எல்லா நகராட்சிகளுக்கும் சேர்மன், கமிஷனர், ஒரு உறுப்பினர் தேர்ந்தெடுப்பது என்ற நிலைமை இருக்கிறது. நாளுக்குநாள் நகராட்சி மன்றங்களில் இருக்கிற உரிமைகளை எல்லாம் பறித்துக்கொள்கிறார்கள், அதிகாரிகள் மயமாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டு இருக்கிறது. தேவையான அளவிற்குத்தான் செய்கிறோம். இப்போது கமிஷனர் மேயர் இடம் பெறுகிறார்கள். மேயர் நியமனக் குழுவில் இருக்க வேண்டும். மதுரை நகராட்சி மன்றத்திலும் அந்த நியதி கடைப் பிடிக்கப்படுகிறது. தவறு ஏற்பட்டால் திருத்துவதற்கும், திருத்த முடியாத நிலையில் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரவும், சட்டதிட்டங்களின் அடிப்படையில், தகுதிகளின் அடிப்படையில் வேலைகள் நடைபெறவேண்டும். தவறுகள் ஏற்படுமானால் தடுத்து நிறுத்தவும், உடனே மாற்றியமைக்கவும் அரசாங்கத்திற்கு முழு அதிகாரம் சட்டதிட்டத்தில் இருக்கிறது. உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற உரிமைகளை எடுத்துக்கொள்ள மாட்டோம். மேலும் மேலும் உரிமைகள் வேண்டுமென்று கேட்கிறார்கள். நாட்டு மக்கள் உரிமைகளை வழங்கும்போது மத்திய அரசைப் பொறுத்தும், இந்த அரசைப் பொறுத்தும் அவர்களுடைய உரிமைகளைப் பறித்துக் கொள்ளாது என்று சொல்கிறேன். முறை தவறி யிருந்தால் தடுத்து





நிறுத்தவேண்டும். எல்லா நகராட்சிகளிலும், நகராட்சி மன்றங்களிலும் அப்பாயின்ட்மென்ட் கமிட்டி அப்படியே நீடிக்கலாம். அதை மாற்றியமைக்க வேண்டிய அவசியம் ஏற்படாது. தகுதியில்லாதவர்களை, திறமையில்லாதவர்களை, சட்டத்திற்குட்படாதவர்களை நீக்கிவிட அரசாங்கத்திற்கு முழு உரிமை இருக்கிறது.

டாக்டர் ஹாண்டே அவர்கள் சர்வீஸ் கமிஷன் பற்றிச் சொன்னார்கள். 1965-ம் வருஷத்துச் சட்டத்திலே இது நீக்கப்பட்டு விட்டது. சர்வீஸ் கமிஷனைக் கலக்க வேண்டுமென்று இல்லை.

மேயர் தேர்தலைப்பற்றி திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆண்டுக்கு ஒரு முறை மேயர், டெபுடி மேயர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று சட்டத்தில் இருக்கிறது. சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் வகுப்புவாரி முறை இருக்கிற காரணத்தால் ஒரு தடவை மேயராக, டெபுடி மேயராக வந்தவர் மீண்டும் மேயராக வர எந்தச் சந்தர்ப்பமும் ஏற்படவில்லை. ஒரு தடவை மேயராக, துணை மேயராக இருக்கிறவர் மறுபடியும் மேயராக, துணை மேயராக வரக்கூடாது என்கிற சம்பிரதாயம் கடைப்பிடிக்கின்ற காரணத்தால் இதைக்கொண்டுவர வேண்டிய அவசியம் இல்லை. ஆண்டுக்கு ஒரு முறை மேயர் மாற வேண்டும். ஆனால் டில்லியில் நான்கைந்து ஆண்டுகள்கூட தொடர்ந்து ஒருவரே மேயராக இருக்கிறார். சென்னையைப் பொறுத்தவரையில் அப்படி அல்ல. ஒரு தடவை சீனப் போர் ஏற்பட்டபோது, தேர்தல் இருந்தால் கலகம் எழும் என்கிற காரணத்தால் சர்வகட்சித் தலைவர்களும் ஏற்றுக்கொண்ட பின்னர் ஒரு ஆண்டுக்கு மேலும் நீடிக்க இடம் தரப்பட்டது. அதை மாற்ற வேண்டிய அவசியம் இப்போது இல்லை.

அடுத்தபடியாக, உறுப்பினர்கள் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் என்பது மூன்று ஆண்டுகள் இருந்தால் போதும் என்று ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் பதவிக் காலம் ஐந்தாண்டுகளாக இருக்கிறது. நகராட்சி உறுப்பினர்களுக்கும் ஐந்தாண்டுக்காலம் என்று நீடிக்கலாம். கிட்டத்தட்ட ஒரு பொதுத் தேர்தல் நடைபெறுகிற அளவுக்கு இந்தத் தேர்தல் நடைபெறுகிறது. 1971-ல் ஒரு தேர்தல் என்றால், 1972, 1973, 1974, 1975, 1976 என்று ஒவ்வொரு ஆண்டும் தேர்தல் மாறி மாறி வந்துகொண்டே இருக்கும். ஐந்தாண்டுகள் என்று வைத்துக் கொண்டால், 1971, 1976, 1981 என்று போய்க்கொண்டிருக்கும். இப்படி ஐந்தாண்டுகள் என்று வைப்பதில் எந்தவித சிரமும் இல்லை. மேலும், ஐந்தாண்டுகள் நீடிக்க வேண்டுமென்று சொல்லும்போது, மக்களிடத்திலே போய் கேட்கவேண்டுமென்று சொல்கிறார்கள். மக்கள் மன்றமே தேர்ந்தெடுத்த நகரசபை இப்படி தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறது. அதைவிட பெரிய மக்கள் மன்றமாக இது இருக்கிற காரணத்தால், மக்களின் பிரதிநிதியாக இங்கே நீங்கள் எல்லாம் அங்கம் வகிக்கின்றீர்கள் என்கிற காரணத்தால், மக்களுடைய வாக்குகளைப்பெற்று, 234 உறுப்பினர்களும் இங்கே வந்திருக்கிறீர்கள் என்கிற காரணத்தால் நாம் ஒரு நல்ல முடிவு

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1971 ஜூலை 29

எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். மக்கள் மன்றம் மக்களுடைய நலனுக்காக இந்தச் சட்டத்தை ஐந்து ஆண்டுகள் என்று நீடிக்கவும் செய்யலாம், அல்லது ஐந்து ஆண்டுகள் என்பதை நான்கு ஆண்டுகள் என்று குறைக்கவும் செய்யலாம். இதை மக்களிடத்தில் போய்க் கேட்க வேண்டிய அவசியம் இல்லை. ஓர் ஆண்டுக் காலம், எட்டு மாதக் காலம் என்று தள்ளிவந்ததில் இந்தத் தடவை 1—5—1974 நாளோடு அதன் ஆயுள் முடிவடைகிறது. எல்லா நகராட்சிகளையும் சீர்ப்படுத்துவதற்காக 1—5—1974 என்று ஆக்கியிருக்கிறோம்.

அடுத்தபடியாக, சட்டமன்ற உறுப்பினர்களையும் மாநகராட்சி மன்றத்தில் இடம் பெறச் செய்ய வேண்டும் என்று திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் குறிபிட்டார்கள். மாநகராட்சியைக் கலந்து, அதன் காரணமாக ஏற்படுகின்ற சாதகபாதகங்களை ஆராய்ந்து முடிவு செய்துகொள்ளலாம், பின்னால் எடுத்துக்கொள்ளலாம் என்று நான் கருதுகிறேன். இப்படிச் செய்வதினால் பலன்கள் ஏற்படுமா என்பதை ஆராய்ந்து செய்யலாம். ஊராட்சி ஒன்றியங்களில் ஓட் அளிக்கின்ற உரிமை அளிக்கப்படவில்லை. இங்கேயும் அப்படி ஏற்படுத்தினால் பலன் கிடைக்குமா என்பதைப் பார்க்க வேண்டும். இப்போது முடிவு எடுக்கவேண்டிய அவசியம் இல்லை.

வேறு பல சீர்திருத்தங்கள் பற்றிக் குறிப்பிட்டார்கள். காம்ப்ரஹென்சிவ் பில் வரும்போது அதில் வேறு திருத்தங்களைச் செய்யும்போது, விரிவாகப் புரிந்துகொள்ளலாம். ஆகவே, இந்தத் திருத்த மசோதாவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, since the Hon. Minister has given an assurance that all these things will be rectified when the comprehensive Bill is prepared, I am not pressing my amendment that it should be referred to a Joint Select Committee.

The amendment was, by leave, withdrawn.

MR. SPEAKER : The question is :

" That the Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of term of Office) Bill, 1971 (L.A. Bill No. 27 of 1971) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration clause by clause.

Clauses 2 and 3 were put and carried.

*Clause 4.*

MR. SPEAKER : The question is :

" That clause 4 do stand part of the Bill ".

THIRU K. M. SUBRAMANIAM : In view of the Hon. Minister's assurance I am not moving my amendment. I hope that when the comprehensive Bill comes, the salary will be given with retrospective effect.



1971 ஜூலை 29]

MR. SPEAKER : You are withdrawing even before entering.

திருமதி த. ந. அனந்தநாயகி : கனம் அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது சாதகபாதகங்களைப் பார்க்கிறேன் என்று சொன்னார்கள். கட்டாயம் 12 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் பொழுது பாதகம் ஏற்படாது, நிச்சயமாகச் சாதகம்தான் ஏற்படும்.

MR. SPEAKER : You have not moved the amendment. Are you moving the amendment ?

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I thought the amendment has been moved and I am speaking. I move my amendment namely, " In entry (2) in the proposed sub-section (3) after item (b) add the following :

" (c) 12 elected members of the Legislative Assembly from Madras City. "

The amenment was duly seconded.

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்தத் திருத்தத்தைச் சேர்ப்பதின் மூலம் மக்களுக்குச் செய்யப்படுகின்ற நன்மைகள்தான் அதிகமாகும், எனவே இதைச் சேர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய அமெண்மென்டை நான் பிரஸ் பண்ணவில்லை.

திருமதி அனந்தநாயகி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

Clause 4 was put and carried.

***Clause* 5.**

MR. SPEAKER : The question is :

" That Clause 5 do stand part of the Bill ".

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIAN : Mr. Speaker, Sir, I move the following amendment :

" In Clause 5 in the proposed section 6-B, sub-section (1), omit the words ' by a majority of the Councillors present and voting ' ".

MR. SPEAKER : Thiru K. T. K. Thangamani and Thiru K. M. Subramaniam have given identical amendments. Under rule 77 (1), I am disallowing Thiru K. T. K. Thangamani's amendment and I have allowed Thiru K. M. Subramaniam's amendment. Thiru K. M. Subramaniam can move the amendment.

THIRU K. M. SUBRAMANIAM : I move the amendment standing in my name, namely.—

" In the proposed amendment to section 6-B of the Principal Act, for the words ' by a majority . . . may be prescribed ', substitute the words ' according to the system of proportional representation by means of single transferable vote ' ".

The amendment was duly seconded.

[1971 ஜூலை 29

Thiru K. M. SUBRAMANIAM : I think the Hon. Minister has assured that. Is it not?

The Hon. Thiru V. R. NEDUNCHEZHIAN : " By a majority of the councillors present and voting " என்பதை எடுத்துவிட்டால் " in accordance with such procedure as may be prescribed " என்பது இருக்கும் " proportional representation " என்பதை ரூலிலே கொண்டுவந்துவிடலாம்.

Thiru K. M. SUBRAMANIAM : I withdraw my amendment in view of the assurance given by the Hon. Minister.

The amendment was, by leave, withdrawn.

The Government amendment was put and carried.

Clause 5, as amended, was put and carried.

Clauses 6 to 10 were put and carried.

*Clause* 11.

Mr. SPEAKER : The question is—

" That Clause 11 do stand part of the Bill ".

Thirumathi T. N. ANANDANAYAKI : Sir, since the Hon. Minister has stated that even though the provision is there, communial rotation will be given due respect by the Corporation, I am not moving my amendment.

Clause 11 was put and carried.

Clauses 12 to 26 were put and carried.

*Clause* 27.

Mr. SPEAKER : The question is :

" That clause 27 do stand part of the Bill ".

Thiru K. M. SUBRAMANIAM : Sir, I move my amendment, namely :—

For the proposed sub-section (1) of section 93 of the principal Act, substitute the following :

" (1) There shall be established an appointments committee which shall consist of the Commissioner and two Assistant Commissioners.

The Commissioner shall be the Chairman of the Committee."

The amedment was duly seconded.

Thiru K. M. SUBRAMANIAM : In this connection I would like to say one word. In the unanimous recommendation sent by the Corporation Council, if I remember correct, this suggestion for abolition was there. I would request the Hon. Minister to re-examine it because I distinctly remember—perhaps I may be wrong—the Corporation itself wanted to abolish the



1971 ஜூலை 29] [Thiru K. M. Subramaniam]

appointments committee. In their recommendation they wanted to abolish two committees—one is, contracts committee and the other is, appointments committee. Whether it is a fact or whether I am wrong, I do not know.

Thirumathi T. N. ANANDANAYAKI : Sir, I move the amendment standing in my name, namely :—

For sub-section (1) of Section 93, substitute the following :

" There shall be established an appointments committee which shall consist of the Commissioner, the Mayor and the Assistant Commissioners and the Mayor shall be the Chairman. "

The amendment was duly seconded.

Thirumathi T. N. ANANDANAYAKI : Even when I was speaking on the Bill I brought to the notice of the Hon. Minister that if one member is elected for the appointments committee, he will continue to be a member of that committee for five long years. That is why I said it will be enough if the Mayor, the Commissioner and the Assistant Commissioners form the appointments committee. The Hon. Minister while replying stated that if there is any irregularity in the matter of appointments, it will be brought to the notice of the Government by the Commissioner. I am sure that the Commissioner won't do this mistake at all because the Mayor and the other members are there and he would not like the mistake to be brought to the notice of the Government as all. So, I do not think the mistakes can be rectified at an early date by the Government. Because of the very fact that one member is made to continue in the appointments committee for five long years, I think the amendment may be considered by the Hon. Minister. Otherwise, they can at least say one member can be elected for the appointments committee, but let him not be there for five long years. If they want to have the same committee, the Mayor, one elected member and the Commissioner, the elected member's term should be only for that year, that is one year, and not for five long years. That may be reconsidered by the Hon. Minister.

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தலைவர் அவர்களே, இந்த நியமனக் குழுவைப் பொறுத்தவரையிலும் இந்த முறை எல்லா நகராட்சி மன்றங்களிலேயும் இருந்து வருகிறது. தலைவர், ஆணையர், இவர்களோடு ஒரு உறுப்பினரும் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். இப்படி இருக்கக்கூடிய முறையிலே மூன்றாண்டுக் காலம், தொடர்ந்து இருந்துவருகிறார்கள், இப்பொழுது இரண்டாண்டுகள் நீட்டிக்கப் பட்டிருப்பதன் காரணமாக அவர்கள் ஐந்தாண்டுகளுக்கு இருப்பார் கள். இந்த முறை எல்லா மன்றங்களிலுமே இருந்துவருகின்றது. நியமனங்களைப் பொறுத்தவரையில் கிளாஸ் 1, கிளாஸ் 2 இவற்றை யெல்லாம் அரசாங்கம்தான் செய்கிறது. கிளாஸ் 3, கிளாஸ் 4 இவற்றைத்தான் நியமனக்குழு கவனித்துக்கொள்கின்றது. ஒரு முறை என்று வைத்தால் அந்த முறையே எல்லா இடங்களுக்கும் பொருந்து கின்ற அளவிலேதான் இருக்கவேண்டும். மற்ற இடங்களிலெல்லாம் தொடர்ந்து இருப்பதால் இங்கேயும் இருக்க வேண்டும். நிலைக்குழு

என்று ஐந்து ஆண்டுகள் இருக்கிருர்கள். ஒரு கமிட்டிக்கு ஒரு ஆண்டு என்பதால் பல நிலைமைகள் ஏற்படும். ஆனுல் போகப்போக அனுபவத்தின் அடிப்படையிலே பிறகு சிந்திக்கலாம். ஆகவே இப்பொழுது ஒரே மாதிரியான சூழ்நிலையின் அடிப்படையிலே இருக்க வேண்டும், இந்தக் குழுவிற்கு மட்டும் ஒரு ஆண்டு என்று போடுவது பொருத்தமாக இருக்காது. ஆகவே அந்த முறைகளிலே பிறகு அனுபவத்தின் அடிப்படையிலே நிலைமைகள் ஏற்பட்டால் நாம் திருத்தங்கள் கொண்டுவந்து கொள்ளலாம். இப்பொழுது தேவையில்லை.

THIRU K. M. SUBRAMANIAM : I have stated in my speech that the Committee of the Corporation Council has suggested the abolition of the Appointments Committee. Am I right or wrong?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தெளிவாக இல்லை. இரண்டு கமிட்டிகள் என்று சிலர் சொல்லுகிருர்கள். அதை விரிவாக ஆராய்ந்த பிறகு தான் சொல்ல வேண்டும்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, a lot of unnecessary accusations were made against the Corporation because of the existence of the two Committees namely, Contracts Committee and Appointments Committee. I was told that the Corporation Committee had recommended the abolition of these two Committees. Even the ruling party was agreeable to it because they did not want any headache on that score. So, was it a fact that it was abolished?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட நிலைமைகள் அங்கேயிருந்து வந்தால் அரசாங்கம் ஏற்றுக்கொள்வதில் அதிகத் தகராறு இருக்காது. ஏனென்றுல் மதுரை மாநகராட்சியிலே, மற்ற நகராட்சிகளிலே இருப்பதால், உரிமைகளைப் பதிக்கிறோம் என்ற சூழ்நிலை இருப்பதால் அது போடப்பட்டிருக்கிறது. மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட அவர்களே விரும்பினுல் அரசாங்கம் அப்படிப்பட்டவைகளைச் செய்வதிலே ஆயத்தமாகத்தான் இருக்கும். ஆனுல் எல்லா இடங்களுக்கும் பொருந்தியிருக்க வேண்டும். மதுரை மாநகராட்சி மன்றத்திலே இந்தச் சட்டத்தை வைத்திருக்கிறோம். அப்படி மற்ற சூழ்நிலைகள், எல்லாவற்றையும் மாற்றலாம் என்ற நிலை வந்தால் அவர்களுடைய கருத்தையறிந்து செய்யலாம். ஆனுல் இபொழுது அப்படியே நீடிக்கலாம என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : Is the hon. Member, Thiru K. M. Subramaniam withdrawing his amendment?

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I withdraw my amendmet in view of the new explanation and the assurance given by the Hon. Minister that it will be examined when any difficulty arises.

THE HON. THIRU P. U. SHANMUGAM : The Hon. Minister has not given any assurance.

THIRU K. M. SUBRAMANIAM : The hon. Minister has stated that he would examine the matter. The Hon. Minister for Revenue has stated that he has not given any assurance. But I am clear



enough in my mind that the Hon. Minister has stated that he would examine the matter. Unlike the Madurai Corporation where the staff is limited, the Madras Corporation has got a huge staff and therefore the question of appointment should be examined.

(The Hon. Thiru P. U. Shanmugham rose).

I am withdrawing my amendment without any further argument.

The amendment of Thiru K. M. Subramaniam was, by leave, withdrawn.

The amendment of Thirumathi T. N. Anandanayaki was, by leave, withdrawn.

Clause 27 was put and carried.

Clauses 28 to 41, Schedules I and II were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

<u>மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :</u> தலைவரவர்களே, "1971-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிகால நீட்டிப்பு) சட்டமுன்வடிவு (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு எண் 27/1971) திருத்தப்பட்டபடி நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்டமுன்வடிவு, திருத்தப்பட்டபடி, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

<u>(ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு எண் 28/1971.)</u>

<u>மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :</u> தலைவரவர்களே, " தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு * (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு எண் 28/1971) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தலைவரவர்களே, 2—10—1960, 13—4—1961, 1—10—1961 ஆகிய மூன்று வெவ்வேறு தேதிகளில் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் அமைக்கப்பட்டன. தொடர்புள்ள ஊராட்சி ஒன்றிய மன்றங்களில் தலைமை எழுத்தர்கள், மேற்கண்ட ஒவ்வொரு தேதியிலும் அவ்வொன்றிய மன்றங்களின் அலுவலக உறுப்பினர்களாளுர்கள். ஊராட்சி ஒன்றிய மன்றங்களிலுள்ள தலைமை எழுத்தர்கள் கீழ்க்கண்ட ஏதாவது ஒரு பிரிவிலிருந்து அமர்த்தப்பட்டவர்களாவார்கள்—

(அ) முன்னுள் மாவட்ட வாரியங்களின் அலுவலர்கள் ;

(ஆ) ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள கீழ்நிலை எழுத்தர்களிலிருந்து பதவியுயர்வு செய்யப்பட்டவர்கள்;

(இ) மற்ற அலுவலகங்களிலிருந்து கொணரப்பட்டவர்கள்.

---

*1971-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 24-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1971 ஜூலை 29

1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்திலுள்ள (தமிழ்நாடு சட்டம் 35/1958) 59-ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, அரசால் இயற்றப்பட்ட ஒரு விதியின்படி, மேற்கண்ட முதல் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் மாவட்ட வாரிய அலுவலர்களின் பணி வரம்புகள் முறைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்விதியின் பயனாக, 1920 தமிழ் நாடு மாவட்ட வாரியச் சட்டத்தில், 1958 தமிழ்நாடு சட்டம் XXXV-இல் உருவாக்கப்பட்ட விதிகளினால் தள்ளுபடியாக்கப்பட்டவை தவிர மற்ற விதிகளில் உள்ள முன்னாள் மாவட்ட வாரியப் பணி வரம்புகள் அப்படியே பின்பற்றப்படுகின்றன. இவ்விதியின் விளைவாகத் தங்களுடைய பணிக்குரிய உரிமைகளையும், ஆண்டு ஊதிய உயர்வுகளையும் அவர்கள் தொடர்ந்து பெற்று வருகின்றனர். மற்ற இரு பிரிவுத் தலைமை எழுத்தர்களும் 1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 35-இல் உள்ள 58-ஆம் பிரிவின் கீழ் உருவாக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் பணித்துறை விதிகளின் கீழ்க் கொணரப்பட்டுள்ளனர். இவ்விதிகள் 10—11—1964 அன்று செயலிற்கு வந்தன. ஆனால் இத்தேதிக்கு முன்பே இவ்வலுவலர்கள் எல்லோரும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களில் வெவ்வேறு தேதிகளில் சேர்ந்திருப்பர். ஏனெனில் 2—10—1960, 13—4—1961, 2—10—1961 ஆகிய தேதிகளிலேயே ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் அமைக்கப்பட்டுவிட்டன. இரண்டாவது, மூன்றாவது பிரிவிலுள்ள தலைமை எழுத்தர்களையும், மேற்கூறப்பட்ட 10—11—1964-க்கு முன்னராக நியமிக்கப்பட்டோரையும், இதில் கொணர, ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் முதற்படியாகத் தொடங்கப்பட்ட 2—10—1960-லிருந்து இவ்விதிகளுக்குப் பின் நாளிட்டுச் செயலாக்கம் தரவேண்டியுள்ளது. இந்த அலுவலர்களின் பணி வரன்முறைப்படுத்தப்படாதிருப்பதால் அவர்கட்கான பணி நலன்கள் அளிக்கப்படவில்லை. இவ்வின்னல்களைக் களைய, முன் நாளிட்டு விதிகளைச் செயலாக்கம் செய்யும் வகையில் 1958-ஆம் ஆண்டு தமிழ்நாடுச் சட்டம் 35-இல் உள்ள 58-ஆம் பிரிவு திருத்தப்படவேண்டியது அவசியமாகிறது.

1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 35-இல் உள்ள, 58-ஆம் பிரிவு, தகுந்த முறையில் திருத்தப்படுகிறபோது, 2—10—1960-க்கு முற்படாத ஒரு தேதியிலிருந்து இவ்விதிகளைப் பின் நாளிட்டுச் செயலாக்க அரசிற்கு அதிகாரம் அளிக்க இம்மசோதா வகை செய்கிறது.

ஆகவே, இதனால் அலுவலர்களுக்குச் சில பல வசதிகள் செய்யவும் வாய்ப்பளிப்பதால் இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : டெபுடி ஸ்பீக்கர் சார், பொதுவாக இந்த மசோதா வரவேற்கத் தக்க மசோதா. பல எழுத்தர்கள் தங்களுக்கு ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் வசதிகள் கிடைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இந்த மசோதாவினுடைய...

திரு. கே. எம். சுப்பிரமணியம் :

* * * *

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1971 ஜூலை 29]

திரு. கே. டி. கே. தங்கமணி : 58-ஆம் ஆண்டு சட்டத்தினுடைய 58-வது பிரிவு, உப பிரிவு 2-க்குப் பிறகு

'A rule may be made under sub-section (1) so as to have retrospective effect on and from a date not earlier than the 2nd October 1960.

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி நல்ல விளக்கம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது 1958-வது சட்டத்தின்படி ஏற்கெனவே டிஸ்டிரிக்ட் போர்டிலிருந்த காலத்திலே,

'Persons promoted from the category of lower division clerks employed in panchayat union councils, and persons drafted from other offices . . .'

இந்த 3 பிரிவினர் இருக்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்தினார்கள்.

குறிப்பாக, இந்தப் பஞ்சாயத்துச் சட்டமானது 1958-ம் வருஷச் சட்டமாகும். அந்தச் சட்டத்தின்படி 2—10—1960-ல் இருந்துதான் என்று சொல்லக்கூடிய காலத்திலே அந்தச் சட்டம் அமலாவதற்கு அந்தத் தேதி என்று நிச்சயிக்கப்பட்டது. அப்படி நிச்சயிக்கப்பட்டாலும் கூட எந்தெந்தக் காலத்தில் பணியாளர்களாகச் சேர்ந்தார்களோ அந்தக் காலத்தில் இருந்து வருகிறபோது 2—10—1960 என்பது பாதகமாக இருக்குமோ என்ற ஐயப்பாடு இருக்கிறது. அதைப்பற்றி மட்டும் தெளிவுபடுத்த வேண்டும். அப்படி இல்லாமல் 1958-ம் வருஷச் சட்டமானது அமலான காலம் முதற்கொண்டே என்ற முறையில் திருத்தப்பட்டால் உதவியாக இருக்கும். இப்படி 2—10—1960 என்று இருப்பதால் அதற்கு முன்னால் இருந்தவர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஊதியங்கள், சர்வீஸ் போன்றவை கணக்கில் வராமல் போய்விடக்கூடாது. பஞ்சாயத்து யூனியன் பணியாளர்கள் எல்லோருக்கும் ஒரே மாதிரியான சட்டம் வர ஏது இருக்கிறது என்று ஆரம்பத்தில் சொன்னதை வரவேற்கிறேன். இந்த ஐயப்பாட்டை மட்டும் தெளிவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I would like to seek only one clarification. The service of these employees will have to be regularised and steps are being taken in that connection. I would in this connection suggest that in the matter of recruitment so far as these services of Panchayat Unions are concerned, it would be better if they are brought under the purview of either the Public Service Commission or some other agency may be appointed so that there may not be any miscarriage of justice in the matter of appointments.

There has been some feeling that all the communities are not getting their due share in the matter of appointment. So it would be better that a Committee is empanelled or it may be left with the Public Service Commission. This aspect may be gone into by the Hon. Minister so that there may be equitable distribution of all the posts going to various sections of the community. That is the one point which I want to bring to the attention of the Hon. Minister.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு தங்கமணி அவர்கள் ஒரு ஐயப்பாட்டை எழுப்பினார்கள். 1958-ம் ஆண்டு சட்டமாக வந்தாலும் கூட ஊராட்சி ஒன்றியமாக ஆனது 2—10—1960-ல் இருந்துதான். ஆகவேதான் அதற்குப் பிறகு சேர்க்கப்பட்ட அலுவலாளர்கள் என்ற முறையில் போடப்பட்டிருக்கிறது. இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி

"தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, "இச்சட்ட முன்வடிவு சட்டமாக்கப்பட வேண்டுமென்று கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்டமுன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(இ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நகர—நாட்டுப்புற அமைப்பு சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/1971) கூட்டாய்வுக் குழு திருத்தியமைத்தவாறு.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே "தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நகர, நாட்டுப்புற அமைப்பு சட்டமுன்வடிவு* (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/1971) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் கூட்டாய்வுக் குழு திருத்தியமைத்தவாறு" என்று முன் மொழிகிறேன்.

சென்ற சட்டப் பேரவைக் கூட்டத் தொடரில் எடுத்துக் கொள்ளப்பட்ட தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நகர, நாட்டுப்புற அமைப்பு மசோதா இணைத் தேர்வுக் குழுவினரின் ஆய்விற்கு அனுப்பப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். ஆய்விற்காக அமைக்கப்பட்ட இக்குழுவில் சட்டப் பேரவை உறுப்பினர்கள் 20 பேரும், சட்ட மேலவை உறுப்பினர்கள் 10 பேரும் உள்ளனர்.

* 26—3—1971-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



இணைக் குழுவின் யோசனையின் பேரில் இச்சட்டத்தில் ஆர்வமுடைய தனியாரிடமிருந்தும் நிறுவனங்களிடமிருந்தும், இம்மசோதாவின் விதி முறைகளைப் பற்றிய குறிப்புகளை வரவேற்கும் செய்திக் குறிப்பொன்று வெளியிடப்பட்டது. இம் மசோதாவின் மீதான கருத்துக்களைத் தெரிவிக்குமாறு உள்ளாட்சி நிறுவனங்களும் கேட்டுக் கொள்ளப்பட்டன. இச்சட்டம் இயற்றப்படுவதை வரவேற்று பெரும்பாலான உள்ளாட்சி நிறுவனங்கள் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளன. பெறப்பட்ட இதர யோசனைகளும் கருத்துரைகளும், இணைத் தேர்வுக் குழுவால் ஆய்வு செய்யப்பட்டன. மொத்தத்தில் இக்குழு ஆறு முறை கூடி, இம் மசோதாவினை ஒவ்வொரு பிரிவாக ஆய்வு செய்தது. குழுவின் அறிக்கையும், கூட்டுத் தேர்வுக் குழுவால் திருத்தப்பட்ட மசோதாவும் உறுப்பினர்களுக்கு ஏற்கனவே தரப்பட்டுள்ளதென்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இம்மசோதாவில் குழு செய்த சில மாற்றங்கள் கீழ் வருமாறு:—

(அ) மாநில நகர், நாட்டுப்புறத் திட்ட வாரியத்தில் கீழ்க்கண்ட உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதல் (பிரிவு 5):—

(1) தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத் தலைவர்.

(2) ஊராட்சி ஒன்றியச் சங்கத் தலைவர்.

(3) அரசால் நியமிக்கப்படும் நான்கு உறுப்பினர்கள்.

(மசோதாவிலுள்ள மூன்றிற்கு மாறாக), சட்டப் பேரவையிலிருந்து இரு உறுப்பினர்கள் சட்ட மேலவையிலிருந்து ஓர் உறுப்பினர், நாடாளுமன்றத்திலிருந்து ஓர் உறுப்பினர்.

(ஆ) 53-ம் பிரிவில் விதித்துள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு கன அளவிற்குப் பதிலாக, கட்டடத்தில் பரப்பளவில் 10 சதவீதம் வரை கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டிருப்பது அல்லது மறுக்கப்பட்டிருப்பது குறித்து ஈட்டுத் தொகை அனுமதிக்க.

(இ) மசோதாவின் விதித்துறை செயல்படுவதினின்று வீட்டு வசதி வாரியம் மற்றும் இதர சட்ட பூர்வமான நிறுவனங்களைத் தவிர்த்தலுக்குரிய விதித் துறைகளை நீக்கல் (பிரிவுகள் 58, 127).

(ஈ) டிரிப்யூனலுக்கு மேல் முறையீடு செய்யும் உயரளவுக் கட்டணமான ரூ. 500-ஐ ரூ. 250-க்கு குறைத்தல் (பிரிவு 78).

(உ) அறிவிப்புகள் போன்றவற்றிற்கு மறுப்புகளைப் பணிந்தனுப்ப (சிக்கலான பிரச்சினைகள் அல்லது வழக்குத் தொடர்புள்ளவை தவிர), ஒரே சீராக இரண்டு திங்கள் கால அளவை மசோதா முழுவதிலும் நிர்ணயம் செய்தல்.

இணைத் தேர்வுக் குழுவிற்கு இம்மசோதாவை அனுப்பிய காலத்திலேயே இம்மசோதாவின் நோக்கம், சிறப்பியல்புகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர்களுக்கு விளக்கப்பட்டுள்ளது. வட்டாரச் சூழ்நிலைகளுக்கேற்ப மாற்றங்களைச் செய்து கொண்டு, மாநிலங்கள் பின்பற்றுவதற்கென இந்திய அரசால் அனுப்பப்பட்ட நகர, நாட்டுப்புற அமைப்பு மாதிரிச் சட்டத்தை இம் மசோதா பெரும்பாலும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. நகர, நாட்டுப்புற அமைப்பு பற்றி மேலை நாடுகள் இயற்றியுள்ள பல்வேறு சட்டங்களை விரிவாக ஆராய்ந்து, ஆய்வு செய்ததன் விளைவாக உருவாக்கப்பட்டதே இந்த

[திரு. க. அன்பழகன்] [1971 ஜூலை 29

முன்மாதிரி மசோதாவாகும். இந்நாட்டின் நகர, நாட்டுப்புற அமைப்பைப் பொறுத்த வரையில் ஏறத்தாழ சீரான ஒரு சட்டத்தைப் பெறவே இம்மசோதா முற்படுகிறது. நகரமைப்பில் புதிய இரண்டு கொள்கைகளுக்கு இம் மசோதா மேலும் வகை செய்கிறது. மகாராட்டிரத்தில் தற்போது செயற்படும் வட்டாரத் திட்டங்கள், புதிய நகர்த் திட்டங்கள் ஆகியவை இப்புதிய கொள்கைகளாம். பெருந் திட்டத்தையும், மாநகர் வளர்ச்சித் திட்டத்தையும் உருவாக்கி நிறைவேற்றுவதற்குத் தற்போது சட்ட பூர்வமான ஏற்பாடு இல்லாமையால், இம் மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டால்தான், இவ்விரண்டு திட்டங்களையும் தீட்டி, செயற்படுத்த இயலும் என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன். எல்லா நிலைகளிலும் நகர், நாட்டுப் புற அமைப்பு வேலைத் திட்டங்களை விரைவாக மேற்கொள்ளவும், தற்போதுள்ள சட்டத்திலுள்ள குறைகளைக் களையவும், ஓர் ஆணித் தரமான நிலையான சட்ட அடிப்படையை அமைக்கவும் இம் மசோதா வழி வகுக்கிறது.

இணைத் தேர்வுக் குழு திருத்திய வண்ணம், இம் மசோதாவை இப்பேரவை ஆய்வு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Dr. H. V. HANDE : Sir, this Town and Country Planning Bill was originally brought here during the previous Ministry's tenure of office and later on it was again brought. At that time it was decided that it should go to the Select Committee, but again after the new Ministry was formed, this was again sent to the Select Committee. Many of us who were members of the Select Committee found it very refreshing and interesting experience to go into the details of this Bill. At the very outset I have to compliment the Hon. Minister for Public Health for the open mind he had kept during the six times we had discussion. A number of suggestions which were pointedly brought to the attention of the Minister and also to the persons concerned were taken into consideration.

One important aspect of the Bill is the Regional Planning Bodies. Ultimately as far as the entire function is concerned, the real pivotal point where the functioning would take place is the regional planning body where decisions should be taken. The whole of the Tamil Nadu is divided into 6 or 7 regions and each region will have a Regional Planning Officer and it will look after the interests of the particular area or the region. For instance a belt like Neyveli, Salem and South Arcot—all these portions have been declared as one region. This Regional Planning Officer will be the Officer working up the details of these things. As far as this is concerned, it is a good Bill.

In fact another salient point about this Bill is that even in the entire country probably there was only one State which has brought this Bill and that is the State of Maharashtra. I think after the State of Maharashtra, this particular State has brought this Bill. Therefore, it is a thing to be complimented as far as this Bill is concerned.



1971 ஜூலை 29] [Dr. H. V. Hande]

Then again, I will be happy if the Hon. Minister can make a brief reference in his reply as to how exactly he has got a programme with regard to developing Greater Madras. In fact we have been asking and pressing on the floor of this House on several occasions that greater Madras must come into being quickly. In fact that is one of the reasons for this Bill being brought as expeditiously as possible. I would say as expeditiously as possible without hurry. It has gone to the Select Committee and the advantage in the Bill coming back so soon and so expeditiously is that as far as Madras City is concerned, we can fully develop the City much better under the authority of the Regional Planning and under the authority of the State level planning. It is here I would suggest to the Hon. Minister that as early as possible the Regional Planning authorities must develop this Madras City as the greater Madras with regard to the ring road, with regard to the tube railways, if it is possible, with regard to the various other transport systems, with regard to the canal transport system and with regard to beautifying the City and other things. As expeditiously as possible the Minister should go into all the details and work out a model. Even in his reply if he is able to announce some details with him, it will be nice and better for the House to know the details. The disability with which a Bill that goes to a Select Committee suffers is this. The moment the Bill comes before the House and a proposal is made for the appointment of a Select Committee, then all the members would like to persuade the sitting member that the Bill is going to a Select Committee which will go into details. After it has gone to the Select Committee and then again when it comes before the House from the Select Committee, it so happens and it will be said that the Select Committee has gone into the details . . .

The Hon. Thiru K. ANBAZHAGAN : The peculiar thing is, the Select Committee Members themselves—they are the only people who understand the Bill in detail—and they are the only people who at times criticise even after they have given suggestions in the Select Committee.

Thiru R. PONNAPPA NADAR : There is no dissenting minute at all.

Dr. H. V. HANDE : I am sure that I am not criticising.

Mr. DEPUTY SPEAKER : You would have been given ample opportunities for discussion in the Committee.

Dr. H. V. HANDE : I was explaining to the Hon. Deputy Speaker the disability with which these Bills which go to the Select Committees suffer. It can neither be discussed in detail before nor can it be discussed in detail afterwards. I would request the Hon. Minister to give some details to this House

[Dr. H. V. Hande] [1971 ஜூலை 29

at least in his answer. He may give some indication as to the programme and the plans he has got with regard to developing greater Madras.

திரு. கே. டி. கே. தங்கமணி: டெப்டி ஸ்பீக்கர், ஸார், இந்த மசோதாவை சமர்ப்பிக்கிறபோது உறுப்பினர்களுக்குள்ள கஷ்டங்களைப் பற்றி அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். பொதுவாக இம்மாதிரியான மசோதாக்கள் செலக்ட் கமிட்டிக்கு முன்னால் சென்று அவர்களால் பரிசீலனை செய்யப்பட்டு நமக்கு சமர்ப்பிப்பது ரொம்ப உதவிகரமாகயிருக்கும். செலக்ட் கமிட்டி உறுப்பினர்கள் எல்லாம் எந்தவிதமான மாறுபாடும் இல்லாமல் ஏகோபித்ததொரு முடிவைக் கொடுத்திருப்பது பாராட்டத் தக்கது. அதே நோத்தில் செலக்ட் கமிட்டியில் நடந்த விஷயங்களைப் பற்றி குறிப்பிடக்கூடாது என்பதால் சில முக்கியமான ஸ்தாபனங்கள் அவர்கள் கொடுத்த மகஜர்கள் அல்லது அவர்கள் கொடுத்த சில ஆலோசனைகளெல்லாம் இந்த செலக்ட் கமிட்டி ரிப்போர்ட்டின் ஒரு பகுதியாக வந்திருந்தால் உதவியாகயிருக்கும்.

அமைச்சர் அவர்கள் தெரிவிக்கும்போது இம்மாதிரியானதொரு சட்டம் மகாராஷ்டிராவில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதன் அனுபவங்களைக்கூட நமக்குக் கொடுப்பது உதவிகரமாகயிருக்கும்.

இப்போது இம்மாதிரியான ப்ளானிங் போர்ட் வரும்போது பல ரீஜன்களாகப் பிரிக்கப்படயிருக்கிறது. அந்த ரீஜன்களைப் பொறுத்த வரையில் பின்னால் விதிமுறைகளில் சொல்லப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், தமிழகத்தைப் பொறுத்தவரையில் இங்குள்ள அமைப்பு நமக்கு நன்றாகத் தெரியும். அது பல மாவட்டங்களாக இன்று இருக்கும்போது இந்த மசோதாவின் ஒரு பகுதியாகவே ரீஜன்கள் இப்படித்தானிருக்கும் என்று சொல்லியிருந்தால் உதவியாகயிருக்கும். 1, 2, 3, 4, 5, 6 என்று ரீஜன்கள் வைத்து இந்த ஆர்டரில் காரியங்கள் செய்யப்போகிறோம் என்று சொல்ல முடியும்.

இந்த மசோதாவில் பிரதானமாக இதன் அமைப்பு பற்றி இருக்கிறதே தவிர எந்த முறையில் செயல்படயிருக்கிறது என்பது பற்றி இடமிருக்காது என்று கருதுகிறேன். பொதுவாக செலக்ட் கமிட்டி ரிப்போர்ட்டில் டிஸென்டிங் மினிட் இருந்தால்தான் அதைப் பற்றி வேறு சில விஷயங்களைப் பற்றிச் சொல்ல உத்வியாகயிருக்கும். அப்படிச் சொல்வதால் நான் செலக்ட் கமிட்டி உறுப்பினர்களை குறை சொல்வதாக இல்லை. ஒரு மசோதா செலக்ட் கமிட்டிக்குச் செல்வதால் அது பூர்ணத்துவம் பெற உதவியாகயுள்ளது. தனித் தனிப் பகுதிகளைப் பற்றி இப்போது கருத்துக்கள் சொல்ல முடியாததொரு நிலை. பின்னால் விதிகள் வரும்போது, அந்த விதிகள் எல்லாம் சபை முன் சமர்பிக்கப்படவேண்டுமென்று இருக்கிறது. அந்த சமயத்தில் என் கருத்துக்களைச் சொல்லமுடியும். இந்த மசோதா ஏற்கனவே இருந்ததைவிட பல திருத்தங்களோடு நல்ல முறையில் வந்திருக்கிறது என்று தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.



1971 ஜூலை 29]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நாட்டுப்புற, நகரப் பகுதி எதிர்காலத் திட்டத்திற்கான இந்த சட்ட முன்வடிவை இணைந்த ஆய்வுக் குழு மிகச் சிறந்த வகையில் பரிசீலித்து இந்த அவைக்கு இப்போது வழங்கியிருக்கிறது. இந்த அவையில் பரிசீலனைக்கு இந்தச் சட்டத்தின் பிற பகுதிகளை எடுத்துக்கொண்டு நடத்தப்பட வேண்டியதல்லாத அளவிற்கு இந்தச் சட்டத்தைப் பெருமளவிற்கு சட்ட வடிவு என்ற முறையில் செம்மை செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ் நாட்டில் பல்வேறு வகையான வளர்ச்சிகள் ஏற்பட்டு வருகின்றன என்பதையும் அப்படி ஏற்படுகிற வளர்ச்சி ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒவ்வொரு வகையாக அமைந்து விடுகிறது என்பதையும் உணருகின்ற எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் அப்படி ஏற்படுகின்ற ஒரு வளர்ச்சியை ஒரு முறைப்படுத்துவதற்காக அந்த வளர்ச்சியால் பின்னர் ஒரு காலத்தில் நெருக்கடிக் கட்டங்கள் இந்தத் தமிழ்நாட்டில் எந்தப் பகுதியிலும் ஏற்படாமலிருப்பதற்காகவும் இந்த நாடு முழுவதையும் ஒருங்கிணைத்துப் பார்த்து அந்த வகையில் திட்டமிடும் முறை செயலாற்ற இந்தச் சட்டம் இங்கே உருவாக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல் இதனால் ஏற்படும் பெரும் நன்மையையும் சொல்லாமல் இருக்க முடியாது. சென்னை நகரத்தின் வளர்ச்சி, இன்று அதன் அளவு, பரப்பு ஆகியவை அந்த இடத்தில் மட்டும் கட்டுப்படுத்தப்பட்டு நிற்க முடியாமல் அதைக் கடந்து இன்னும் பத்து மடங்கு அளவிற்கு சுற்றளவில், அதனால் ஏற்படுகிற வளர்ச்சியின் விளைவுகள் இன்றையதினமே பெருகிக் கொண்டு வருகின்றன என்றால் மேலும் வளர்ச்சி ஏற்படும்போது சென்னை மாநகராட்சி அதைக் கட்டுப்படுத்தி, ஒழுங்குபடுத்த முடியாத நிலையில், பக்கத்திலுள்ள சிறுசிறு ஊராட்சி மன்றங்கள் அல்லது பேரூராட்சி மன்றங்கள் அல்லது புதிதாக ஏற்படுகிற டவுன்ஷிப்ஸ் இவை அந்த வளர்ச்சி வேகத்தை அவர்களால் மட்டும் தாங்கிக் கொள்ளமுடியாது. ஏற்படுகிற வளர்ச்சியும் கூட, அது முறைப்படுத்தப்பட்ட வளர்ச்சியாக இல்லாமல் போனால் பின்னர் அதைச் சீர்திருத்துவது என்பது கடினமான ஒரு செயலாகும். ஏற்படப்போகிற வளர்ச்சியை ஏற்பட விட்டு விட்டு பின்னால் ஒரு கால கட்டத்தில் சீர்திருத்துவது என்றால் பொது மக்களுக்கு ஏற்படுகிற இடர்பாடுகள், அரசுக்கு ஏற்படும் பெரும் செலவு இவற்றையெல்லாம் தவிர்ப்பதற்கு ஏற்படக் கூடிய வளர்ச்சியின் அளவு ஆராயப்பட்டு இந்த இந்தப் பகுதிகள் இன்ன இன்ன வளர்ச்சியைப் பெறக்கூடியது என்று நிர்மானிக்கப்பட்டு அதற்கேற்ப முன்கூட்டியே முறைப்படுத்துவதுதான் இந்தச் சட்டத்தின் நோக்கமாகும்.

நான் குறிப்பாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாடு மிகப்பழங்காலத்திலேயே கூட இந்த ரீஜினல் பிளானிங் என்ற முறையிலே எண்ணப்பட்டிருக்கிறது. மிகப்பழங்காலத்திலேயே தமிழ்நாட்டு நிலம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று இயற்கையில் ஏற்படுகிற வளர்ச்சியை புலவர்கள் தமிழ் கொண்டு செய்து இருந்தார்கள். செயற்கை வளர்ச்சி பரவலாக இருந்ததால்,

[திரு. க. அன்பழகன் [1971 ஜூலை 29

அது புலமைக்கும் அறிவுக்கும் உகந்ததாகப் போய் விட்டது. இன்று இயற்கை வளர்ச்சி, செயற்கை வளர்ச்சியோடு இணைகிற காரணத்தால் இயற்கை மாறுபடுகிற காரணத்தால், ஒரு காலத்தில் காட்டுப் பகுதி, நாட்டுப்பகுதியாக மாறுகிறது, ஒரு காலத்தில் போக்கு வரத்து குறைவாக இருக்கிற பகுதி, மற்றொரு காலத்தில் போக்கு வரத்து மிகுதியாக இருக்கிற பகுதியாக மாறுகிறது. ஒரு காலத்தில் தொழிற் பேட்டைகள் ஏற்படாத பகுதிகள், பிறிதொரு காலத்தில் தொழிற் பேட்டையாக மாறுகிற சூழ்நிலை ஏற்படுகிறது. கரம்பு நிலமாக ஒரு காலத்தில் இருந்தது இன்றைய நிலம் உழக்கூடிய விளைச்சல் ஏற்படுத்தக்கூடிய நிலமாக மாற்றி அமைக்கப்படுகிறது. ஒரு காலத்தில் மக்கள் மிகவும் நெருக்கமாக வாழ்ந்த நகரப்பகுதிகள் கூட இடம் மாறி விடுகின்றன. நகரம் இல்லாத பகுதியில் நகரம் ஏற்படுகிறது. இத்தகைய வளர்ச்சியை, முறையான வளர்ச்சியாக ஆக்குவதற்கு சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். அந்தச் சட்டத்தால் ஏற்படுகிற நல்ல விளைவுகளை அனுபவத்தால் தான் உணர முடியும். வெறும் எழுத்தில் படித்தால் எல்லோரும் எளிதில் அதன் பயனை உணர முடியாது என்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஏற்கெனவே கூட "ரீஜினல் பிளானிங் பார் தமிழ்நாடு" என்ற கட்டுரைக்கோப்பு எங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அது எல்லா உறுப்பினர்களுக்கும் கிடைத்திருக்கும் என்று நான் நினைக்கவில்லை. அதை தமிழில் எழுதி, எல்லா உறுப்பினருக்கும் தருவதற்கு அந்தத் துறையினருக்கு தெரிவித்துக்கொண்டிருக்கிறேன்.

இந்த தமிழ்நாடு 8 மண்டலமாகப் பிரிக்கப்படவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அது நிர்வாக சௌகர்யத்திற்காக அல்ல. எதிர்கால அமைப்பு திட்டத்தை மட்டும் கருத்தில் கொண்டு அந்த 8 மண்டலங்களையும் நோக்குவீர்களானால் ஏறத்தாழ, சென்னை—செங்கற்பட்டு ஒரு வட்டமாக அமையும். சேலம்—கடலூர் (தென் ஆற்காடு மாவட்டத்தில் ஒரு பகுதி) ஒரு வட்டமாக அமையும். நெய்வேலி—ஜெயம்கொண்டான் இரண்டும் சேர்ந்து ஒரு இணைப்பு வட்டமாக இருக்கும். திருச்சி பெரும் பகுதி ஒரு வட்டமாக இருக்கும். இராமநாதபுரம்—மதுரையில் ஒரு பகுதி ஒரு வட்டமாக அமையும். திருநெல்வேலி—கன்னியாகுமரி ஒரு வட்டமாக அமையும். மதுரை ஒரு வட்டமாக அமையும். நீலகிரி—கோயம்புத்தூர் ஒரு வட்டமாக அமையும். அதே போல் வட ஆற்காடு, தருமபுரியில் பெரும் பகுதி ஒரு வட்டமாக அமையும். சாதாரணமாக அட்மினிஸ்டிரேடிவ் கன்வீனியன்ஸ் முறையில் அல்ல இந்தப் பிரிவினை. அந்தப் பகுதியில் இருக்கும் சில நகராட்சிகள் அந்தப் பகுதியில் ஏற்படும் பஞ்சாயத்து திட்டங்களுக்கு ஏற்படும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளுக்கு இது உதவிகரமாக இருக்கும். ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு வட்டாரமும் டவுன் பிளானிங் துறையின் மேற்பார்வையில் இயங்கி அந்த வட்டாரத்திலுள்ள எல்லா அபிவிருத்தி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள், அந்தப் பகுதியில் செய்யப்படவேண்டிய வளர்ச்சிக்கான திட்டங்களை முறைப்படுத்தி அவர்களுக்கு ஆலோசனை சொல்லி, அவர்களைக் கொண்ட குழுக்களைக் கொண்டு செயல்படுத்துவதற்காக இந்த சட்டம் இங்கே வந்திருக்கிறது.



1971 ஜூலை 29] [திரு. க. அன்பழகன்]

இந்தச் சட்டத்தின் எல்லாப் பகுதியையும் நான் விளக்க முடியவில்லை என்றாலும், அதை விளக்குவதை விட அதைப் பயன்படுத்திக் கொள்கிற காலத்தில் அதை விட முக்கியத்துவம் இருக்கிறது. நல்ல மருந்து என்று சொன்னால் உண்டு பார்த்துத் தான் அதன் பலனைச் சொல்ல முடியும். ஆகவே, இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துகிற போது தான் உண்மையான பலனைக் காண முடியும். அது நல்ல விதத்தில் பயன்படவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு தான் இந்த திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்து வருகிறோம்.

அதிலே ஒன்று தான் சென்னை மாநகராட்சிப் பகுதியை விரிவுபடுத்தும் திட்டமாகும். அதை மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அந்த வகையிலே திட்டமிட்டாலும் கூட சென்னை மாநகராட்சியில் உள்ள போக்குவரத்து நெருக்கடியைக் குறைப்பதற்கு சுற்றுப்புற வளர்ச்சிப் பணிகளை இணைப்பதற்கு வசதியாக இருக்கும். ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்ட அந்த திட்டம் கூட மெட்ரோபாலிடன் ஸ்கீம் என்ற அடிப்படையில் 5–10 ஆண்டுகளில் நிறைவேற்றப்படும் திட்டமாக இருக்கிறது. நீண்ட கால திட்டமாக 30 ஆண்டு காலத்தில் செயல்படுத்த வேண்டிய திட்டமாக இருக்கிறது. ஏறத்தாழ 100 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. 10 ஆண்டுகாலத்தில் நிறைவேற்றுவதற்கு இந்த திட்டத்திற்கு மத்திய அரசின் உதவியோடு கொடுக்கிறோம். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது இந்த சட்டத்தின் அடிப்படையாகும். அரசாங்கம் அதிகாரத்தை முறைப்படுத்தி, பயன்படுத்தி இந்த சட்டத்தை வழங்கியிருக்கிறது என்று தெரிவித்து இதிலே எல்லா அங்கத்தினர்களுக்கும், உறுப்பினர்களுக்கும், இருக்கும் ஆர்வத்தையும் இருக்கிற ஈடுபாட்டையும் நான் உணர்வேன். உள்ளபடியே இந்தச் சட்டம் செயல்படுத்தப்படும்போது குறைபாடுகள் தெரியும் என்ற காரணத்தால் அதிக திருத்தங்கள் தரவில்லை என்று கருதுகிறேன். எனவே, இந்தச் சட்டத்தை இந்த அவை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று நான் துணைத்தலைவர் மூலமாக கேட்டுக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That the Tamil Nadu Town and Country Planning Bill, 1971 (L.A. Bill No. 1 of 1971), as amended, by the Joint Select Committee be taken into consideration.

The motion was put and carried and the Bill as amended by the Joint Select Committee was taken into consideration clause by clause.

Clauses 2 to 125 were put and carried.

Schedules I and II were put and carried.

Clause 1, the Enacting Formula, and the Long Title were put and carried.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை முன்வடிவு எண் 1/1971) கூட்டாய்வுக்குழு திருத்தியமைத்தவாறு சட்டமாக்கப்படவேண்டும்" என்று கேட்டுக்கொள்கிறேன்.

The motion was put and carried and the Bill was passed into law.

[1971 ஜூலை 29

## 8. அறிவிப்புகள்.

### (அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் சட்ட முன்வடிவை பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

## 7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் சட்டமுன்வடிவு (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1971.)

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, "தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் சட்டமுன்வடிவை * (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு எண். 25/1971) ஆய்வு செய்வதற்காக பதினெட்டு உறுப்பினர்கள் அடங்கிய 12 சட்டப்பேரவை உறுப்பினர்களும், 6 சட்ட மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைக்க சட்ட மேலவையின் இசைவைப் பெறுவதுடன், இக்கூட்டாய்வுக் குழுவில் கீழ்க்கண்ட பேரவை உறுப்பினர்கள் பணியாற்ற தேர்ந்தெடுக்கப்படவேண்டும்" என்று கேட்டுக்கொள்கிறேன்.

1. மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து.
2. திருமதி ஜோதி வெங்கடாசலம்.
3. திரு. மண்லி சி. கந்தசாமி.
4. திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்.
5. திரு. ஏ. சுப்பிரமணியம்.
6. டாக்டர் எச். வி. ஹாண்டே.
7. திரு. ஏ. சுவாமிதாஸ்.
8. திரு. நா. வீராசாமி.
9. திரு. பெ. மலைச்சாமி.
10. திரு. எஸ். முருகையன்.
11. திரு. க. உரொ. எட்மண்ட்.
12. ப. முத்துசாமி.

திரு. கே. டி. கே. தங்கமணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஹோமியோபதி பில் சம்பந்தப்பட்ட வரையில்...

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, on a point of order. Once the Bill is referred to a Joint Select Committee, is the discussion on it allowed on the floor of the House? I would like to have clarification on this point.

MR. DEPUTY SPEAKER : It is allowed.

* 23—7—71-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1971 ஜூலை 29]

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த ஹோமியோபதி டாக்டர்கள் பதிவு செய்யப்படவேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன், ஏற்கெனவே இந்த மருத்துவமுறையில் பழகியவர்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது ஜாயிண்ட் செலக்ட் கமிட்டிக்கு விடப்படுவதால், விரிவாக பல விஷயங்களைச் சொல்ல விரும்பவில்லை. இதை ஜாயிண்ட் செலக்ட் கமிட்டிக்கு விடக்கூடாது என்று மூன்று திருத்தங்கள் நான் கொடுத்திருந்தேன். அவற்றை செலெக்ட் கமிட்டி அங்கத்தினர்கள் கவனிக்கவேண்டும் என்று இங்கே விளக்க விரும்புகிறேன். ஒன்று, மூன்றாவது சாப்டரில், இப்பொழுது 10 ஆண்டுக்காலம் ஏற்கெனவே பிராக்டிஸ் செய்கிறவர்கள் என்று இருப்பதை 5 ஆண்டுகளாகக் குறைக்க வேண்டும் என்று கோரியிருக்கிறேன். இன்னொன்று,

'proves in the prescribed manner to the satisfaction of the council that he has been in regular practice as a practitioner for a period of not less than four years before the commencement of this Act; '

நாலாண்டுக்காலம் என்பதை ஒரு ஆண்டு என்று குறைக்க வேண்டும் என்று கோரியிருக்கிறேன். இறுதியில் ஷெடூலில், எந்த எந்த இடங்களில் பட்டம் பெற்றவர்கள் என்று குறிப்பிடும்போது, வங்கத்தில் இருக்கக் கூடிய கல்லூரிகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இங்கே நல்ல இன்ஸ்டிட்யூட்டுகள் தமிழகத்தில் இக்கின்றன மதுரையில் முக்கியமான இன்ஸ்டிட்யூட் இருக்கிறது. சர்ட்டிபிகேட் கொடுக்கிறார்கள். சில பரிட்சைகளுக்கு கேரளாவிற்குப் போகிறார்கள்.

'Any degree, diploma, licence, certificate or any other like award conferred, granted or issued by a recognised institute in Tamil Nadu, Kerala and other places.........'

என்று போடுவது ஏற்கெனவே பட்டம் பெற்று இப்பொழுது பிராக்டிஸ் செய்கிறவர்களுக்கு பாதுகாப்பாக இருக்கும். வெறுமனே இந்தமாதிரி கல்கத்தாவிலும், வங்கத்திலும் உள்ள மருத்துவக் கல்லூரி என்று குறிப்பிடாமல், என்னென்ன இடங்கள் என்று பார்த்து, ஆலோசனைசெய்து, சில முக்கிய ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களும் வந்து சொல்வதற்கு வாய்ப்புக் கொடுத்து செலக்ட் கமிட்டி, நல்லமுறையில் செயல் படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய மூன்று திருத்தங்களையும் ஆராய்ந்து, செலக்ட் கமிட்டியில் இருக்கும் உறுப்பினர்கள் செயல்படவேண்டும் என்று உங்கள் மூலம் அறிவிக்கிறேன்.

திரு. நா. வீராசாமி :

* * * *

THIRU M. MOSES : Mr. Deputy Speaker, Sir, the decision of the Governmenf to recognise and regularise Homoeopathic system of medicine is very welcome.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

The examination to be conducted for those who want recognition must include preventive medicine and hygiene. At present we walk into any hospital either run by the Government or by private general practitioners about 20 to 25 per cent of the beds are occupied by patients suffering from preventable diseases like Tuberculosis, etc. To prevent such illness an intense campaign by the Government to educate the public will help to improve the health and wealth of the people. Malaria which was very rampant once is practically unknown to-day, thanks to the National Malaria Eradication Programme. To execute such a large scheme by the Government to eradicate preventable diseases and for the people who practice medicine, some form of examination to teach them on hygiene will be the most welcome thing for the Government to do.

Thank you, Sir.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த சட்ட முன்வடிவு உடனடியாக நிறைவேற்றப்படவேண்டும் என்கிற நோக்கத்தோடு, இந்த அவையிலே திருத்தம் வைக்கப்பட்டிருக்கிறது. உடனடியாக நிறைவேற்றப்படவேண்டும் என்கிற அவசரம் இருந்தாலும், இணை ஆய்வுக் குழுவுக்கு அனுப்பி பரிசீலிக்க வேண்டும் என்று அனுப்பும்போது, உள்ளபடியே அவசரமாகும் என்கிற கருத்தும் இணை ஆய்வுக் குழுவுக்குக் கூறப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்களும், மற்றொரு அங்கத்தினர் அவர்களும், எடுத்துச் சொன்ன கருத்துக்களும் இணை ஆய்வுக் குழுவில் பரிசீலிக்கப்படும். கடந்த முறை கொண்டு வந்து நிறைவேற்றப்படவேண்டிய சட்டம், சட்ட மன்றம் கலைக்கப்பட்டதால் நின்றுபோய்விட்டது. பல்லாண்டுகாலமாக, ஹோமியோபதி மருத்துவர்கள் தங்களுடைய தொழிலை முறையாக நடத்துவதற்கு பாதுகாப்பும், நடத்துகிறவர்களுக்கு இடம் பெறும் அளவிலும் வசதிவேண்டும் என்று வலியுறுத்திச் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறார்கள்.

திரு. தங்கமணி சொன்னார்கள், மதுரையில் இன்ஸ்டிடியூஷன், மருத்துவக் கல்வி நிலையம் இருக்கிறது என்று. பட்டம் பெறுகிறார்கள் என்றும் சொன்னார்கள். தமிழ்நாட்டில் பட்டம் தரும் உரிமை உள்ள நிலையம் இல்லை. சான்றிதழ்கள், டிப்ளோமா தான் கொடுக்கிறார்கள். சிலர் சான்றிதழ்களை பெற்று, கல்கத்தாவில் பட்டம் பெறுகிறார்கள். அல்லது டெல்லி வட்டாரத்தில் பெற்றிருக்கலாம். அவர்கள் தமிழ்நாட்டில் இருப்பதால், லண்டன், ஜெர்மனி போன்ற இடங்களில் பட்டம் பெற்றும் இருக்கிறார்கள். ஹோமியோபதி மருத்துவத்தை முறையாகத் தொழிலாக நடத்த நிர்வாகக் குழு மூலம், இந்தத் துறை முழுதும் முறைப்படுத்தப்பட்டாக வேண்டும்.

ஹோமியோபதி சிறந்த மருத்துவத் துறையாக இருந்தாலும், மக்களுக்கு நல்ல பலன் இருந்தாலும், எளிய விலையில் மருந்துகள் கிடைத்தாலும், தேர்ச்சி பெற்றவர்கள் இருந்தாலும், அவற்றையெல்லாம் ஒரு வகைப்படுத்த இந்தச் சட்டம் வருகிறது. எனவே,

சட்டத்தின் பல்வேறு பகுதிகள், விவரங்கள் இவற்றையெல்லாம் மேலும் நல்லமுறையில் இணை ஆய்வுக் குழுவில் ஆராயப்பட்டு இந்தப் பேரவையின் முன்னால் வைக்கப்படும் என்கிற உறுதியை எடுத்துக் கூறி, இந்தச் சட்ட முன்வடிவு இணை ஆய்வுக் குழுவுக்கு அனுப்பப்படவேண்டும் என்ற என் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> பேரவை முன் உள்ள கேள்வி :—

" தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் சட்ட முன்வடிவை (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு எண். 25/1971) ஆய்வு செய்வதற்காக பதினெட்டு உறுப்பினர்கள் அடங்கிய (12 சட்டப்பேரவை உறுப்பினர்களும், 6 சட்ட மேலவை உறுப்பினர்களும்) இணை ஆய்வுக் குழு ஒன்றை அமைக்க சட்ட மேலவையின் இசைவைப் பெறுவதுடன், இவ்விணை ஆய்வுக்குழுவில் கீழ்க்கண்ட பேரவை உறுப்பினர்கள் பணியாற்ற தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். "

1. மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து
2. திருமதி ஜோதி வெங்கடாசலம்
3. திரு. மணலி சி. கந்தசாமி
4. திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்.
5. திரு. ஏ. சுப்பிரமணியம்.
6. டாக்டர் எச். வி. ஹாண்டே
7. திரு. ஏ. சுவாமிதாஸ்
8. திரு. நா. வீராசாமி
9. திரு. பெ. மலைச்சாமி
10. திரு. எஞ். முருகையன்
11. திரு. க. உரொ. எட்மண்ட்
12. திரு. ப. முத்துசாமி

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

MR. DEPUTY SPEAKER : Under Rule 139 (1) of the Assembly Rules, I nominate the Minister for Public Health as a Member of the Joint Select Committee.

## (8) அறிவிப்பு—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஒருங்கிணைந்த மருத்துவப் பயிற்சியாளர்கள் பதிவு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண். 26/1971.)

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> பேரவைக்கு ஒரு அறிவிப்பு. தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஒருங்கிணைந்த மருத்துவப் பயிற்சியாளர்கள் பதிவு (திருத்த) சட்டமுன்வடிவை பேரவையின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

[1971 சூலை 29

(7) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(உ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஒருங்கிணைந்த மருத்துவப் பயிற்சியாளர்கள் பதிவு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 26/1971.)

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஒருங்கிணைந்த மருத்துவப் பயிற்சியாளர்கள் பதிவு (திருத்த) சட்டமுன்வடிவு * (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண். 26/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1956-ம் ஆண்டு இணைத்த மருத்துவ முறை மருத்துவர்கள் பதிவுச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 27/1956) 8, 11 ஆவது பிரிவுகளின்படி இணைத்த மருத்துவ முறையில் சான்றிதழ் அல்லது இணைத்த மருத்துவ முறையின் தேர்வு வாரியத்தால் வழங்கப்பட்ட இணைத்த மருத்துவ முறைக் கல்லூரிப்பட்டம், அல்லது நாட்டு மருத்துவ முறையில் சான்றிதழ் அல்லது நாட்டு மருத்துவ முறையில், தேர்வு வாரியத்தால் வழங்கப்பட்ட நாட்டு மருத்துவ முறைக் கல்லூரிப் பட்டம், வைத்திருப்பவர்கள் பதிவு செய்வதற்குத் தகுதியுடைய வர்களாவர்.

இம்மாநிலத்தில் 1924-ல் இந்திய மருத்துவப் பள்ளி ஒன்று தொடங்கப்பட்டது. இப்பள்ளி இந்திய மருந்து முறையில் சான்றிதழ் படிப்பு (எல். ஐ. எம்) நடத்தியது, இப்படிப்பின் கால அளவு மூன்றாண்டுகளாயிருந்தது. எல்.ஐ.எம். மாணவர்கட்கு, ஆயுர்வேத மருந்து முறை, சித்த மருந்து முறை, யுனானி மருந்து முறை ஆகிய இந்திய மருந்து முறைகள் ஒன்றில் பயிற்சியளிக்கப் பட்டது. அத்துடன், அலோபதிக் (ஆங்கில) முறைப்படி உடற் கூறு இயல், உடல் நூல் பற்றிய பாடங்களும் கற்பிக்கப்பட்டன. அதனையடுத்து, 1926-ல் எல்.ஐ.எம். படிப்பின் கால அளவு நான்கு ஆண்டுகளாக நீடிக்கப்பட்டது. இப்படிப்பைப் பயிலும் மாணவர்கள், இந்திய மருந்து முறைகளில் சிறந்த மருத்துவர்களாக ஆவதுடன், நவீன மருந்து முறையிலும் அவர்கள் நல்ல தொழில் அறிவைப் பெறுதல் இயலும் வண்ணம் பயிற்சியின் தரம் உயர்த்தப் பட்டது. 1933-ல் எல்.ஐ.எம். படிப்புக் கால அளவு 5 ஆண்டுகளாக நீடிக்கப்பட்டது. படிப்புக் காலத்தின் 5 ஆவது ஆண்டில் நோயாளிகளை வைத்துக் கொண்டே நேரடியாகப் பயிற்சி அளிக்கப்பட்டது. 1947 ஜூலையில் இந்திய மருந்து முறைப்பள்ளி இந்திய மருந்து முறைக்கல்லூரியாக மாற்றப்பட்டது. அந்த ஆண்டிலிருந்து எல். ஐ. எம். படிப்புக்கு மாணவர்களைச் சேர்ப்பது நிறுத்திவிடப்பட்டது. இக்கல்லூரி ஜி.சி.ஐ.எம். எனப்படும் ஐந்து ஆண்டுக்கால மருத்துவப் படிப்பை அளித்தது. இருப்பினும், எல்.ஐ.எம். படிப்பு 1949-ல் மீண்டும் கொண்டு வரப்பட்டது. அதன்

* 23—7—1971-ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1971 சூலை 29] [திரு. க. அன்பழகன்]

கால அளவு நாலாண்டுகளாக வரையறுக்கப்பட்டது. 1949-ல் அப்போது "இந்திய மருந்து முறை" என்றழைக்கப்பட்ட இந்தியா விற்கேயுரித்தான ஆயுர்வேத முறை, சித்த முறை, யுனானி முறை போன்ற மருந்து முறைகளின் பெயர், அரசு பிறப்பித்த ஆணை யொன்றால் "நாட்டு மருந்து முறை" என்று மாற்றப்பட்டது. "இந்திய மருந்து முறை" என்னும் சொற்றொடர் வருகின்ற எல்லாச் சட்டங்களும் சட்ட விதிகளும் மாற்றப்பட வேண்டுமென்றும் அரசு ஆணையிட்டது. அதன்படி, 1949 நவம்பருக்குப் பின்னர் வழங்கப் பட்ட ஜி.சி.ஐ.எம்., எல்.ஐ.எம்: கல்வித் தகுதிகள், முறையே, "நாட்டு மருந்து முறைக் கல்லூரிப் பட்டம்" என்றும் "நாட்டு மருந்து முறைச் சான்றிதழ்" என்றும் வழங்கப்படுவன ஆயின.

1956-ல் "நாட்டு மருந்து முறை" என்னும் பெயர் "இணைத்த மருத்துவ முறை" என்று மாற்றப்பட்டது. அதன் விளைவாக 1956 தொடங்கி அதற்குப் பின்னர் வழங்கப்பட்ட ஜி.சி.ஐ.எம்., எல்.ஐ.எம். கல்வித் தகுதிகள் முறையே, "இணைத்த மருத்துவ முறைக் கல்லூரி பட்டம்" என்றும் "இணைத்த மருத்துவ முறை சான்றிதழ்" என்றும் வழங்கப்படுவனவாயின.

தமிழ்நாடு 1956 ஆம் ஆண்டு இணைத்த மருத்துவ முறை மருத்துவர்கள் பதிவுச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 27/1956) பிரிவு 11-ன் படி நாட்டு மருந்து முறையில் சான்றிதழ் அல்லது நாட்டு மருந்து முறையில் தேர்வு வாரியத்தால் வழங்கப்பட்ட நாட்டு மருந்து முறைக் கல்லூரிப் பட்டம் பெற்றிருப்பவர்கள், இணைத்த மருந்து முறையில் சான்றிதழ் பெற்றவர்களாக அல்லது இணைத்த மருந்து முறையில் தேர்வு வாரியத்தால் வழங்கப் பட்ட இணைத்த மருந்து முறைக் கல்லூரிப் பட்டம் பெற்றவர்களாகக் கருதப்படுபவர். அவர்கள் மேற்படிச் சட்டத்தின் 8-வது பிரிவின் கீழ் பதிவு செய்வதற்குத் தகுதியுடையவர்களாவர். இருப்பினும், இந்திய மருந்து முறையில் சான்றிதழ் அல்லது இந்திய மருந்து முறையில் தேர்வு வாரியத்தால் வழங்கப்பட்ட இந்திய மருந்து முறைக் கல்லூரிப் பட்டம் வைத்திருப்பவர்கள் பதிவு செய்வதற்கு அச்சட்டத்தில் விதித்துறை ஏதுமில்லை.

சென்னை, இணைத்த மருத்துவ முறை வாரியம் இது குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது. இக்கருத்தினை அதன் எல்லாக் கூறு களிலிருந்தும் முழுமையாகப் பரிசீலித்த பின்னர், இந்திய மருந்து முறையில் சான்றிதழ் பெற்றவர்களும் மேற்சொன்ன சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுவதற்குத் தகுதியுடையவர்களாகச் செய்யப்பட வேண்டும் என்று வாரியம் முடிவு செய்துள்ளது. இம்முடிவிற்கு ஆதரவாக வாரியம் அளித்த காரணங்களாவன, "இந்திய மருந்து முறை" என்ற பெயர், "நாட்டு மருந்து முறை" என்று எய்திய மாற்றம், பெயரில் மட்டுமே எய்திய மாற்றமாகும், இந்திய மருந்து முறைச் சான்றிதழ்ப் படிப்பில் பாட முறையிலோ அன்றிக் கல்விப் பாடங்களிலோ மாற்றமேதுமில்லை. எனவே, இந்திய மருந்து முறையில் சான்றிதழ் அல்லது இந்திய மருந்து முறையில் தேர்வு வாரியத்தால் வழங்கப்பட்ட இந்திய மருந்து முறைக் கல்லூரிப் பட்டம் பெற்றுள்ள மருத்துவர்கள் பதிவு செய்து கொள்ள இயலும்

வகையில் மேற்சொன்ன சட்டத்தின் 11 ஆவது பிரிவைத் திருத்தி, தமிழ் நாடு 1956 ஆம் ஆண்டு 27ஆவது சட்டத்தின் தொடக்க நாளிலிருந்தே செயலுக்கு வருமாறு செய்யக் கருதப்பட்டுள்ளது. இம்மசோதாவை சபை முன்வைத்து ஏற்குமாறு இப்பேரவையை நான் வேண்டுகிறேன்.

DR. H. V. HANDE: While welcoming this Bill, I would wish to thank the Government for satisfying the aspirations of nearly 1,500 L.I.M. doctors throughout this State. For the post 10 or 15 years they have been shut out. In 1956 when the Hon. Thiru A. B. Shetty was the Health Minister the Integrated Act was passed. Then the rules were made. The Hon. Minister said that the word "Indian" was left out. It had happened in 1947. After the fresh batch of L.I.M. students, the School of Indian Medicine became the College of Indian Medicine. Then there was a Government Order stating that 'Indian' medicine would be changed into 'Indigenous' medicine. It was just like saying wherever there is the word "Madras" substitute the word "Tamil Nadu". Something like that.

In 1956, an enactment was brought. There in that enactment they did not put the word "Indigenous". They put the word "Indian". According to the Government Order, automatically the word 'Indigenous' comes for the word 'Indian'. The L.I.M. Association, Board of Integrated Medicine represented to the last Ministry. Even when I was a member of the Legislative Council, representations were made. But it was very difficult for the L.I.M. Association to make the Government department understand the thing properly. Sometime ago the position was clearly explained to the Hon. Minister for Law. During the last four years of D.M.K. rule, they had paid heed to our representations and the Hon. Minister for Law understood the point and afterwards the Law Department had prepared this enactment. By this, the doctors whose qualification is L.I.M. will also get a place under the Integrated Act. Otherwise only those who passed out after 1951 would come under the Integrated Act. That large section of doctors would be benefited by this. By this enactment Government have done two things, viz., (1) They have given protection to those doctors who had passed out previously since they would now come within the four walls of the 1956 Act. (2) The doctors would also be qualified under the Board of Integrated Medicine. These doctors would have the right, statutory right, to get into that list. These two benefits they would get. So, on behalf of the 1,500 doctors I wish to thank the Government for having brought forward this enactment, which was long overdue.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: துணைத் தலைவரவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்கள் உள்ளபடியே இந்தத் துறையிலே அதிக தொடர்புடையவர்கள் என்ற முறையில், பல ஆண்டுகள் நிறைவேற்றப்படாமல் இருந்த குறை மாற்றப்பட்டு சட்டத்தில் ஏற்படுத்தவேண்டிய திருத்தம் ஏற்படுத்தப்பட்டு இது வரையில் இந்திய மருத்துவ முறையில் படித்து எல்.ஐ.எம். பட்டம் பெற்றவர்கள், பட்டதாரிகளுக்குச் சமமாக, படிப்பு உடைய இண்டிஜினஸ் மெடிசன், இண்டக்ரேடட் மெடிசன் துறையில் படித்தவர்களுக்குச் சமமாக வாய்ப்பு பெறுகிற, உரிமை பெறுகிற இந்த ஒரு நல்ல திருத்தத்தை, அவர்கள் வரவேற்றதற்காக நன்றி தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனவே, இந்தத் திருத்த மசோதாவை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Tamil Nadu Registration of Practitioners of Integrated Medicine (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 26 of 1971), be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration clause by clause.

Clauses 2 and 3 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. THIRU K. ANBAZHAGAN: Sir, I move—

"That the Bill be passed."

The motion was put and carried and the Bill was passed into law.

## (9) அரசினர் தீர்மானம்.

### அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, "நமது சட்டப்பேரவை நடைமுறை விதிகளின் 21(3) பிரிவின்படி இன்றைய நிகழ்ச்சி நிரலில் அரசினர் சட்ட முன் வடிவுகள் என்ற தலைப்பில் இனம் 5-க்குப் பிறகு இனங்கள் 11, 12ஐ எடுத்துக் கொள்ளவேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

## (7) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

### (ஊ) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) நடவடிக்கைகளை செல்திறன் ஆக்குதல் சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1971).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தமிழ் நாடு 1971-ம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) நடவடிக்கைகளை செல்திறன் ஆக்குதல் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1971)ஐ பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கோருவார்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, "தமிழ் நாடு 1971ஆம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) நடவடிக்கைகளை செல்திறன் ஆக்குதல் சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

பேரவைத் துணைத் தலைவரவர்களே, காஞ்சிபுரம், மதுரை, செங்கற்பட்டு ஆகிய இடங்களிலே உள்ள முன்சீபுகள் அதிகார வரம்பிற்கு அப்பால் சில தீர்ப்புகளை வழங்கிய காரணத்தினால் இந்தச் சட்டத்திருத்தத்தினை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது என்று மட்டும் மன்றத்திற்குத் தெரிவித்துக்கொண்டு இத்திருத்த மசோதாவினை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, முதலில் இப்படிப்பட்ட சட்டத்திருத்தங்களையெல்லாம் பட்ஜெட் ஸெஷனோடு வைத்துக்கொள்ளாமல் தனியாக வைத்துக் கொண்டிருக்கவேண்டும். காரணம் எதற்கும் நேரம் போதாமல் போய்விடுகிறது. இப்போது கொண்டுவரப்படும் சட்டங்களுக்கு திருத்தம் கொடுக்க முடியவில்லை என்றால் நேரம் இல்லாத காரணம் தானே தவிர திருத்தங்கள் இல்லாது இல்லை. எனவே பட்ஜெட் கூட்டத்தோடு மசோதாக்களைக் கொண்டுவராமல் தனியாகக் கொண்டு வந்தால் சற்று நிதானமாக ஆராய்ந்து சட்டங்களைக் கொண்டுவருவது வரவேற்கத்தக்கதாக இருக்கும்.

இச்சட்டத்தை இப்போதாவது அரசு கொண்டுவந்தது பற்றி மகிழ்ச்சி. காரணம் இது (question of Juridiction) பற்றியது. அதிகாரம் இல்லாது அதிகாரம் செய்தது தவறு என்பதை எந்தக் கட்டத்திலும் யாரும் நீதி மன்றத்தில் வாதிக்கலாம். ஆனால் இதனால் பொதுமக்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்று பார்க்க வேண்டும். உதாரணமாக் மதுரை மாவட்டத்தில் கலெக்டர் அவர்களின் அடிஷனல் பெர்ஸனல் அசிஸ்டெண்ட் பதவியை, 1967-ல் எடுத்துவிட்டார்கள். மாவட்ட ரெவின்யூ அதிகாரி அவருடைய பணிகளைச் செய்துகொண்டு இருந்தார்கள். 1967-லிருந்து 1971 வரையில் நான்காண்டு காலம் இது நடந்துவந்தபிறகு இப்போது இதை முறையாக்குவதற்கு சட்டம் வருகிறது. எப்போது அந்த போஸ்டு அபாலிஷ் செய்யப்பட்டு விட்டதோ அப்போதே திருத்தம் கொண்டு வந்திருக்கவேண்டும். இடையிலே இந்த நான்கு ஆண்டுகாலம் இந்த சட்ட இலாகா என்ன செய்தது, அமைச்சரவை என்ன செய்தது என்றே தெரியவில்லை. மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இனியாவது "வேலிடேஷன் ஆக்ட்" என்று வரும்போது உடனடியாக அவ்வப்பொழுது திருத்தங்கள் கொண்டுவரப்படவேண்டும். நான்கு ஆண்டுகாலம் அரசாங்கம் சும்மா இருந்தது மிகமிகக் கண்டிக்கத்தக்கதாகும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

* ......7—7—1971-ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.





திரு. கே. டி. கே. தங்கமணி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டு நடந்துவிட்ட சில காரியங்களை சீர்பண்ண வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் திருத்த மசோதாவினைக் கொண்டுவந்திருப்பதாக அறிவித்தார்கள். உதாரணமாக 1960-ம் ஆண்டுச் சட்டத்தின்படி the Additional P.A. to the Collector of Madurai was authorised to perform the functions of the Authorised Officer under the Act.

ஆனால் அந்தப் பதவியே எடுப்பட்டுப்போன பிறகு ஏற்பட்ட சில சிக்கல்களை இப்போது ஒழுங்கு பண்ணுவதற்கு என இதைக் கொண்டுவருகின்றார்கள். பொதுவாக பதவி தீர்ந்துபோனவுடன் உடனடியாக வேலிடேஷன் ஆக்ட் கொண்டுவர வேண்டும் என்று மட்டும் என் யோசனையைத் தெரிவித்துக்கொண்டு இப்போதாவது அந்த வேலிடேஷன் ஆக்ட் வருவது பற்றி மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மதுரை மாவட்ட ஆட்சியாளரின் நேர்முக உதவியாளர் அவர்கள் 1—5—1967 முதல் 7—5—1968 வரையில்தான் இக்காரியங்களை ஏற்றுச் செய்திருக்கின்றார்கள். அவர்கள் 61 வழக்குகளைப் பரிசிலித்து நீதி வழங்கியிருக்கின்றார்கள். அவற்றுக்குத்தான் இப்போது சட்ட பூர்வமான அங்கீகாரம் கொடுக்கிறோமே தவிர வேறு ஒன்றும் இல்லை என்றும், இது சாதாரண சட்டப்பிரச்சனை என்றும் மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவேதான் இத்திருத்தச் சட்ட முன்வடிவை அவையின் முன் வைக்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

MR. DEPUTY SPEAKER: There is no amendment here. So I shall put the clauses to the Vote of the House.

Clauses 2, 3 and 4 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

"தமிழ் நாடு 1971-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) நடவடிக்கைகளை செல்திறன் ஆக்குதல் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1971) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## (8) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (இ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை–வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1971.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ் நாடு 1971ஆம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை–வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1971) பேரவையின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

## (7) அரசினர் சட்ட முன்வடிவங்கள்—தொடர்ச்சி.

### (எ) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை–வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1971)

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, "தமிழ் நாடு 1971-ம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை–வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாம் திருத்த சட்ட முன் வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1971) பேரவையின் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இது பற்றி ஒரு சிறு விளக்கம் தர விரும்புகிறேன். பேரவைத் தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவு மூன்று மாதத்திற்கு முன்பு கொண்டு வரப்பட்டு ஒரு நீடிப்பைப் பெற்றது. இப்போது ஒரு ஆண்டுகாலமாக நீடிக்கவேண்டும் என்ற கோரிக்கையை பேரவை யின் முன் வைக்கிறேன். இதைக் கொண்டு வருவதற்குக் காரணம் அப்போது உள்துறைச் செயலாளர் அவர்கள் தலைமையில் ஒரு குழு நிறுவப்பட்டு அது பல நல்ல காரியங்களைச் செய்து ஒரு அறிக்கையை இவ்வரசுக்கு அனுப்பியிருக்கிறது. அது பலரிடம் கேட்டறிந்த யோசனைகளை இவ்வரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறது. அவற்றை அரசு பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறது. அவற்றில் பல சிக்கல்கள் இருப்பதால் அவற்றையெல்லாம் பரிசீலித்து சட்ட பூர்வமாக ஆக்குவதற்குக் காலம் தேவைப்படுவதால் இதை ஒரு ஆண்டுகாலம் நீடிக்கவேண்டும் என்று கோரப்படுகிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை. இதில் வேறு பிரச்சனைகள் எதுவும் இல்லை. எனவே இதைப் பேரவையின் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் வேண்டுகின்றேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த மசோதாவைக் கொண்டு வந்தது சரியில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். காரணம் சென்ற தொடரில் இது வரும்போது எப்படியும் இந்த பட்ஜெட்

---

*......19—7—1971-ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



தொடரில் ஒரு "காம்ப்ரஹென்சிவ்" பில் கொண்டு வரப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இப்போது இதை இன்னும் ஒரு ஆண்டுகாலத்திற்கு நீடிக்க வேண்டும் என்று கோரு கின்றார்கள். நமக்கு அறிக்கை ஜனவரி 71-லேயே கிடைத்தது. அமைச்சரவர்களே கூறுகின்றார்கள் உள்துறை செயலாளர் அவர்கள் தலைமையில் இயங்கிய குழு நல்லதொரு அறிக்கையைக் கொடுத் திருக்கிறது என்று. பிறகு உடனடியாக இவற்றைப் பரிசீலித்து அனைத்தையும் உள்ளடக்கிய சட்டத்தைக் கொண்டு வந்திருக்கலாம். இப்போது ஒரு ஆண்டுக்கு நீடிக்க வேண்டும் என்று சொல்லு கிறார்கள். நான் கொடுத்த திருத்தம் ஒரு ஆண்டுக்கு என்று இருப் பதை மூன்று ஆண்டுகள் என்று ஆக்கவேண்டும் என்று சொன்னது உண்மையிலேயே "ப்ரொடெஸ்ட்" செய்வதற்காகத்தானே தவிர வேறில்லை. அதை நான் ப்ரஸ் செய்யவில்லை. செப்டம்பர் 30-க்குள் இந்த மசோதா கொண்டு வரப்பட்டு சட்டமாக்கப்பட வேண்டும் என்பதே என் விருப்பம். கண்ட்ரோல் ஆர்டர் மூலம் பொது மக்கள் பலருக்கு பல நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன. இது நீடிக்கப் படவேண்டியதுதான். இப்போது நீடிக்கப்படாவிடில் பல நன்மைகளை மக்கள் இழக்கநேரும் என்பதால் இதை ஆதரிக்கிறேன். ஆனால் செப்டம்பர் 30-க்குள் ஒரு காம்ப்ரெஹென்சிவ் பில் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஸார், இந்த ஆயுள் நீடிப்பிற்கு என்று திருத்தம் கொண்டுவருவது சரியானதல்ல. காரணம் இப்படி காலாகாலத்தில் செய்யவேண்டியதைச் செய்யாமல் இருந்துவிட்டு பிறகு கெடு முடியும் நேரத்தில் இப்படி திருத்தங்களைக்கொண்டு வந்து ஆயுளை நீடிக்க வழி செய்து கொடுத்தால் பிறகு இலாக்காக் கள் சுறுசுறுப்பாக இயங்காமல் போய்விடும். எனவே ஆயுள் நீடிப் பதற்கு என்று திருத்தம் கொண்டு வராமல்—இப்போது நடப்பது நடக்கட்டும்—ஆனால் இனியாவது 1972-க்கு முன்னதாக ஒரு காம்ப்ரெஹென்ஸிவ் பில்லைக் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, குடியிருப்போர்களை வெளியேற்றுவது நியாயம் இல்லை. இப்போது இது நிறைவேற்றப்படாவிடில் பலரும் பல சிரமங்களுக்குள்ளாவார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூன்று ஆண்டு காலத்திற்கு நீடித்துத்தரவேண்டும் என்று ஒரு திருத்தத்தினைக் கொடுத்திருக்கின்றார்கள். வர இருக்கும் ஒரு ஆண்டு காலத்திற்குள் இதை சட்டமாக்க வேண்டும் என்று தான் இப்போது கால கெடு கேட்டிருக்கிறோம். இதை நிறைவேற்றாவிட்டால் எவ்வளவு பேர் பாதிக்கப்பட்டுவிடுவார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும். கால வரம்பு கேட்பதற்கான காரணம், இதிலே சில சட்ட சிக்கல்கள் இருக்கின்றன. குடியிருப் போரைப்பற்றியும் பார்க்க வேண்டியிருக்கிறது. வீடு கட்டியவரை யும் பார்க்க வேண்டியிருக்கிறது. எந்தக் காலத்தில் கட்டினார்கள் என்பதையும் பார்த்து வாடகைத் தொகை நிர்ணயிக்க வேண்டிய தாக இருக்கிறது. ஆக இதுபோல பல சிக்கல்கள் இருக்கிற காரணத்

[திரு. க. இராசாராம்] [1971 ஜூலை 29

திஞல் இவற்றை எல்லாம் நன்கு ஆராய்ந்து சிறந்த முறையில் முடிவு எடுப்பதற்கு காலம் தேவைப்படுகிற காரணத்திஞல் தான் இப்போது இந்த மசோதாவை மேலும் ஓராண்டுக்கு நீட்டித்தர வேண்டும் என்கிற கோரிக்கையோடு கொண்டுவந்திருக்கிருேம். இதை மூன்ருண்டு நீட்டிக்கவேண்டும் என்பதாக திரு. தங்கமணி அவர்கள் திருத்தம் கொடுத்திருக்கிருர்கள். அப்படிக் கொடுத்ததற் கான காரணத்தையும் சொன்ஞர்கள். நிச்சயமாக சீக்கிரமே விரி வான மசோதா கொண்டுவரப்படும் ஆதலால் அவர் தம்முடைய திருத்தத்தை திரும்பப்பெறவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி "தமிழ் நாடு 1971-ம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை—வாடகைக்கட்டுப்பாடு) இரண்டாம் திருத்த சட்ட முன் வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

Clause 2

THIRU K. T. K. THANGAMANI: I am not moving my amendment.

Clause 2 was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே "தமிழ் நாடு 1971-ம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப் பாடு) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவுற்று மீண்டும் நாளைக் காலை 9 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## (10) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்

*A. Statutory Rules and Orders.*

185. Notification issued with G.O. Ms. No. 1221, Revenue, dated the 24th April 1971, in regard to certain amendments to the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Rules,



1971 ஜூலை 29]

1969. [Laid on the Table of the House under section 18 (4) of the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969 (Tamil Nadu Act 10 of 1969).]

186. Appropriation Accounts of the Government of Tamil Nadu for the year 1969–70, and report of the Comptroller and Auditor-General of India for the year 1969-70. [Laid on the Table of the House under Article 151 (2) of the Constitution of India.]

187. Finance Accounts of the Government of Tamil Nadu for the year 1969–70. [Laid on the Table of the House under Article 151 (2) of the Constitution of India.]

*B. Reports, Notifications and other papers.*

@ 191. The Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of term of office) Bill, 1971 [L.A. Bill No. 27 of 1971 (with Annexure).]

@ 192. The Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1971 [L.A. Bill No. 28 of 1971 (with Annexure).]

@ 193. Annexure to the Tamil Nadu Registration of Practitioners of Integrated Medicine (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 26 of 1971).]

@ 194. Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1971 (L.A. Bill No. 32 of 1971).

195. List of Unstarred questions and answers Nos. 26 to 84.

@ Despatched to Members on 27th July 1971.

## இணைப்பு—1

*[206-ம் பக்கத்தில் 478-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]*

பாசன—மின்சக்தித் திட்டங்களில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள **வேலை இல்லாப் பொறியாளர்கள், தகுதிப்பட்டயம் பெற்றுள்ளோர் ஆகியோரின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.**

| திட்டத்தின் தன்மை. | பட்டதாரிகளின் எண்ணிக்கை. | தகுதிப்பட்டயம் பெற்றோர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| **பாசனம் :** | | |
| பல்வேறு சுற்றுப் பள்ளத்தாக்குகளின் நீரியல் குறித்த ஆய்வும், பெரிய நடுத்தர பாசனத் திட்டங்களுக்கு செயற் குறிப்புகளை உருவாக்குதலும் .. .. .. | 210 | 110 |
| 1970-ம் ஆண்டில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட சிறு பாசனத் திட்டங்கள் | 110 | .. |
| வேலை நிதி ஊதியம் பெறுவோர். | [14 | 497 |
| 1970-ம் ஆண்டில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட வேலையில்லாப் பொறியியல் பட்டதாரிகளுக்கு நேர்முகப் பயிற்சி வழங்குவதற்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் .. | 111 | 6 |
| **மின்சக்தி :** | | |
| நாட்கூலி அடிப்படையில் அனல் மின்சார நிலையத்தில் வேலை .. | 200 | |
| இந்திய அரசின் உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் பட்ட அனல் மின்சாரத் திட்டம் .. .. .. .. | 29 | |
| 1970-ம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பொறியியல் பட்டதாரிகளுக்கு நேரடிப் பயிற்சி அளிப்பதற்கான உதவித் தொகை வழங்கும் திட்டம் .. .. .. | 145 | |





The details of the jobless engineers, diploma holders who have been employed in Irrigation and Power Projects are given below :—

| *Nature of Scheme.* | *No. of Graduates.* | *No. of diploma holders.* |
|---|---|---|
| Irrigation : | | |
| Investigation of the hydrology of the various river basins and to formulate proposals for major and medium irrigation schemes ... ... ... | 210 | 110 |
| Minor Irrigation Schemes sanctioned in 1970 ... ... ... ... | 110 | — |
| Work charged Establishment ... | 14 | 497 |
| Stipendiary Scheme for giving practical training to the unemployed engineering personnel sanctioned in 1970 ... | 111 | 569 |
| Power : | | |
| Thermal Station on T.C.L. basis ... | 200 | 256 |
| Thermal Scheme—taken up under the Government of India—Stipendiary Scheme ... ... ... ... | 29 | 12 |
| Stipendiary Scheme for giving practical training to the unemployed engineering personnel sanctioned in 1970 ... | 145 | 150 |

# இணைப்பு 2

[240-ம் பக்கத்தில் உள்ள 34-ம் எண்ணுள்ள வெளிக் குறியிடாத வினாவிற்கான விடையைக் காண்க]

**ஊரகவளர்ச்சி—உள்ளாட்சித்துறை.**

1967–68, 1968–69-ம் ஆண்டுகளில் நகராட்சிகளுக்கு வழங்கப்பட்ட கடன், மானிய விவரங்கள் அடங்கிய பட்டியல்.

| வரிசை எண்ணும் நகராட்சியின் பெயரும். | கடன். | | மானியம். | |
|---|---|---|---|---|
| | 1967–68 | 1968–69 | 1967–68 | 1968–69 |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| செங்கல்பட்டு மாவட்டம்— | | | | |
| 1 ஆலந்தூர் .. .. .. .. | 25,280·00 | 18,600·00 | 8,750·00 | 19,450·00 |
| 2 செங்கல்பட்டு .. .. .. .. | 30,000·00 | .. | 70,024·00 | 1,18,039·38 |
| 3 காஞ்சிபுரம் .. .. .. .. | 3,15,400·00 | 2,02,900·00 | .. | 15,722·34 |
| 4 தாம்பரம் .. .. .. .. | 2,60,361·00 | 1,32,150·00 | 89,676·00 | 71,173·63 |
| 5 திருவள்ளூர் .. .. .. .. | 3,00,100·00 | 1,90,800·00 | 82,337·90 | 1,17,460·01 |
| வட ஆர்க்காடு மாவட்டம்— | | | | |
| 1 ஆம்பூர் .. .. .. .. .. | 1,00,000·00 | .. | 19,089·08 | 19,197·97 |
| 2 ஆர்க்காடு .. .. .. .. | 15,516·00 | 17,700·00 | 590·79 | 4,000·00 |
| 3 அரக்கோணம் .. .. .. .. | 7,89,750·00 | 3,44,600·00 | 52,335·05 | 1,17,049·93 |
| 4 ஆரணி .. .. .. .. .. | .. | .. | 1,18,782·89 | 1,15,703·89 |
| 5 குடியாத்தம் .. .. .. .. | 3,12,605·00 | 71,200·00 | .. | .. |
| 6 ராணிப்பேட்டை .. .. .. .. | 50,052·00 | 9,500·00 | 8,300·59 | 8,650·00 |
| 7 திருப்பத்தூர் .. .. .. .. | 4,45,000·00 | 10,47,000·00 | .. | .. |
| 8 திருவண்ணாமலை .. .. .. .. | 10,35,866·00 | 6,70,200·00 | 20,000·00 | 44,400·00 |
| 9 வாணியம்பாடி .. .. .. .. | 22,916·00 | 9,000 00 | 91,228·35 | 1,75,666·00 |
| 10 வேலூர் .. .. .. .. .. | .. | 25,000·00 | 7,07,000·00 | 3,43,000·00 |
| 11 வாலாஜாபேட்டை .. .. .. | 31,423·00 | 63,000·00 | 1,350·25 | 11,027·70 |
| தென் ஆர்க்காடு மாவட்டம்— | | | | |
| 1 சிதம்பரம் .. .. .. .. | 2,87,800·00 | 98,400·00 | 77,000·00 | 1,45,652·00 |
| 2 கடலூர் .. .. .. .. .. | 1,97,000·00 | 9,95,600·00 | 2,11,438·56 | 2,81,848·62 |
| 3 நெல்லிக்குப்பம் .. .. .. | 13,950·00 | 11,000·00 | .. | .. |
| 4 பண்ருட்டி .. .. .. .. | .. | .. | .. | .. |
| 5 திண்டிவனம் .. .. .. .. | 1,00,000·00 | 1,05,000·00 | 87,775·74 | 58,756·99 |
| 6 விழுப்புரம் .. .. .. .. | 8,86,000·00 | 1,94,000·00 | 2,26,698·05 | 2,44,823·87 |
| தர்மபுரி மாவட்டம்— | | | | |
| 1 தர்மபுரி .. .. .. .. | .. | .. | 1,71,868·98 | 1,87,886·36 |
| 2 கிருஷ்ணகிரி .. .. .. .. | 1,14,250·00 | 1,88,100·00 | .. | .. |
| சேலம் மாவட்டம்— | | | | |
| 1 ஆத்தூர் .. .. .. .. | 25,323·00 | 10,800·00 | 70,340·52 | 89,421·13 |
| 2 இடைப்பாடி .. .. .. .. | 1,17,095 00 | 62,876·00 | 1,09,246·59 | 1,42,534·16 |
| 3 ராசிபுரம் .. .. .. .. | 8,33,000·00 | 64,500·00 | 77,449·00 | 83,426·00 |
| 4 சேலம் .. .. .. .. .. | 33,700·00 | 3,14,223·00 | 7,29,019·00 | 15,76,786·60 |
| 5 திருச்செங்கோடு .. .. .. .. | 2,82,300·00 | 18,000·00 | 4,880·00 | 2,905·00 |

| வரிசை எண்ணும் நகராட்சியின் பெயரும். | கடன். | | மானியம். | |
|---|---|---|---|---|
| | 1967-68 | 1968-69 | 1967-68 | 1968-69 |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| **கோவை மாவட்டம்—** | | | | |
| 1 கோயம்புத்தூர் | 3,54,000·00 | 16,000·00 | 13,64,185·87 | 15,22,181·11 |
| 2 தாராபுரம் | | 50,000·00 | 3,49,007·55 | 4,21,716·25 |
| 3 ஈரோடு | .. | .. | 1,50,473·27 | 2,57,845·97 |
| 4 கோபிசெட்டிபாளையம் | 1,28,167·00 | 22,500·00 | 12,000.00 | 40,660·00 |
| 5 மேட்டுப்பாளையம் | 1,12,147·66 | | .. | 96,942·50 |
| 6 பொள்ளாச்சி | 18,000·00 | 46,100·00 | 8,000·00 | .. |
| 7 சிங்காநல்லூர் | 1,32,259·00 | 96,000·00 | 19,236·00 | 4,27,090·01 |
| 8 திருப்பூர் | 87,141·00 | 77,325·00 | 22,580 00 | 35,179·00 |
| 9 உடுமலைப்பேட்டை | 51,500·00 | 20,000·00 | 1,03,236·26 | 2,72,209·29 |
| **நீலகிரி மாவட்டம்—** | | | | |
| 1 கூனூர் | 18,273·00 | 21,600·00 | .. | |
| 2 உதகமண்டலம் | 1,00,000·00 | 24,200·00 | .. | .. |
| **மதுரை மாவட்டம்—** | | | | |
| 1 போடிநாயக்கனூர் | .. | 48,600·00 | 27,208·88 | 15,619·56 |
| 2 கம்பம் | 11,339·00 | 11,500·00 | .. | 14,377·00 |
| 3 திண்டுக்கல் | 43,500·00 | 80,800·00 | 2,87,975·47 | 2,52,170·34 |
| 4 மதுரை | 24,17,550·00 | 22,64,400·00 | 48,005·00 | 37,500·00 |
| 5 பழனி | 4,12,357·00 | 2,59,500·00 | 107,438·56 | 2,86,513·23 |
| 6 பெரியகுளம் | .. | 1,74,900·00 | 1,656·00 | 2,50,337·00 |
| 7 தேனி-அல்லி நகரம் | .. | .. | 1,501·28 | 1,500·00 |



| வரிசை எண்ணும் நகராட்சியின் பெயரும். | கடன். | | மானியம். | |
|---|---|---|---|---|
| | 1967-68 | 1968-69 | 1967-68 | 1968-69 |
| **திருச்சிராப்பள்ளி மாவட்டம்—** | | | | |
| 1 கரூர் | 31,500·00 | 39,600·00 | 1,30,778·88 | 1,30,441·73 |
| 2 மணப்பாறை | .. | .. | .. | 7,148·72 |
| 3 புதுக்கோட்டை | 30,266·00 | 35,300·00 | 8,529·00 | 36,482·57 |
| 4 ஸ்ரீரங்கம் | 52,930·00 | 51,600·00 | 3,150·00 | 20,420·00 |
| 5 திருச்சிராப்பள்ளி | .. | .. | 3,09,258·72 | 2,37,564·27 |
| **தஞ்சாவூர் மாவட்டம்—** | | | | |
| 1 கும்பகோணம் | 9,77,106·00 | 6,63,100·00 | 2,80,985·00 | 1,52,342·00 |
| 2 மன்னார்குடி | 53,679·00 | 32,520·00 | 79,375·42 | 97,447·03 |
| 3 மாயூரம் | 31,361·00 | 22,600·00 | 12,784·01 | 35,887·00 |
| 4 நாகப்பட்டினம் | 55,065·00 | 50,000·00 | 2,58,812·99 | 2,15,651·25 |
| 5 பட்டுக்கோட்டை | 20,644·00 | 12,500·00 | 6,350·00 | 13,649·17 |
| 6 தஞ்சாவூர் | 23,750·00 | .. | | .. |
| 7 திருவாரூர் | 41,250·00 | 14,400·00 | 10,120 50 | 17,040·00 |
| **இராமநாதபுரம் மாவட்டம்—** | | | | |
| 1 அருப்புக்கோட்டை | 5,20,000·00 | 19,56,300·00 | .. | .. |
| 2 தேவகோட்டை | 14,600·00 | .. | 26,500·00 | 31,904·00 |
| 3 காரைக்குடி | 1,04,223·00 | 13,000·00 | 3,22,434·29 | 1,61,951·55 |
| 4 பரமக்குடி | 2,04,751·00 | 13,600·00 | 11,942·00 | 8,830·00 |
| 5 ராஜபாளையம் | 5,05,111·00 | 1,50,000·00 | 37,675·00 | 26,138·00 |
| 6 ராமநாதபுரம் | 1,25,000·00 | 5,27,300·00 | 44,383·86 | 20,903·27 |
| 7 சிவகங்கை | | 18,700·00 | .. | 14,050·00 |

| வரிசை எண்ணும் நகராட்சியின் பெயரும். | கடன். | | மானியம். | |
|---|---|---|---|---|
| | 1967–68 | 1968–69 | 1967–68 | 1968–69 |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 8 சிவகாசி .. .. .. | 3,600·00 | 1,93,600·00 | 39,677·10 | 70,647·60 |
| 9 ஸ்ரீவில்லிபுத்தூர் .. .. .. | 35,250·00 | 2,02,700·00 | 1,06,599 00 | 1,19,099·13 |
| 10 விருதுநகர் .. .. .. | 82,000·00 | 73,800·00 | 17,466·00 | 22,696·00 |
| திருநெல்வேலி மாவட்டம்— | | | | |
| 1 கடையநல்லூர் .. .. .. | 2,73,000·00 | 21,000·00 | 6,720·80 | 16,811·82 |
| 2 கோவில்பட்டி .. .. .. | .. | .. | .. | .. |
| 3 மேலப்பாளையம் .. .. .. | 6,049·00 | 19,200·00 | 14,599·00 | 5,500 00 |
| 4 பாளையங்கோட்டை .. .. .. | 38,517·00 | 50,000·00 | 17,714·50 | 8,000·00 |
| 5 புளியங்குடி .. .. .. | 39,955·00 | 38,800·00 | 51,293·86 | 96,040·92 |
| 6 சங்கரன்கோயில் .. .. .. | 18,605·00 | 11,000·00 | 71,004·63 | 97,565·53 |
| 7 செங்கோட்டை .. .. .. | .. | 38,000·00 | .. | 592·00 |
| 8 தென்காசி .. .. .. | .. | 7,000·00 | 13,498·00 | 29,104·00 |
| 9 திருநெல்வேலி .. .. .. | .. | .. | 2,87,523·28 | 1,82,397·65 |
| 10 தூத்துக்குடி .. .. .. | 2,85,000·00 | .. | 1,77,580·01 | 2,00,211·93 |
| கன்னியாகுமரி மாவட்டம்— | | | | |
| 1 கொளச்சல் .. .. .. | 5,065·00 | 7,500·00 | 14,000·00 | 3,180·00 |
| 2 குழித்துறை .. .. .. | 71,500·00 | 25,500·00 | 7,077·00 | 8,840·00 |
| 3 நாகர்கோயில் .. .. .. | 17,266·00 | 26,200·00 | 43,616·48 | 70,007·90 |
| 4 பத்மநாபபுரம் .. .. .. | 13,783·00 | 86,000·00 | 36,852·00 | 9,300 00 |
| 1 குற்றாலம் (திருநெல்வேலி) .. .. | 1,55,200 00 | 1,01,000·00 | 6,317·00 | 5,550·00 |
| 2 கொடைக்கானல் (மதுரை) .. .. | .. | .. | 26,316·35 | 27,862·20 |
| 3 மேட்டூர் (சேலம்) .. .. .. | 30,000·00 | 23,500·00 | 1,006·00 | .. |





## இணைப்பு—3

[240ம் பக்கத்தில் 35-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிடாத வினாவிற்குரிய விடையைக் காண்க.]

ஓர் மனதாக, தங்கள் பேரூராட்சிகளை, நகராட்சிகளாக மாற்றப் பட வேண்டும் என்று தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ள பேரூராட்சி களின் பெயர்களும் அத்தீர்மானங்களின் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளைப் பற்றிய தகவல்களும் :

| பேரூராட்சியின் பெயர். | மாவட்டம். | எடுக்கப்பட்ட நட வடிக்கைகள். |
|---|---|---|
| 1. உசிலம்பட்டி .. | மதுரை | இப் பேரூராட்சிகளை நக ராட்சிகளாக மாற்றுவதற் கான ஓர் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. |
| 2. திருமங்கலம் .. | ,, | |
| 3. திருத்தணி .. | செங்கற்பட்டு | |
| 4. மதுராந்தகம் .. | ,, | |
| 5. வில்லிவாக்கம் .. | ,, | |
| 6. பொன்மலை .. | திருச்சிராப்பள்ளி | |
| 7. திருத்துறைப்பூண்டி | தஞ்சாவூர் | |
| 8. லால்குடி .. | திருச்சிராப்பள்ளி .. | இப்பேரூராட்சியைப் பஞ் சாயத்துக்கள் சட்டத்தின் கீழ் குறிப்பிட்டுள்ள அடிப்படை கோட்பாட் டின்படி மக்கள் தொகை குறைவாக இருந்ததினால் கிராம வளர்ச்சி இயக்கு நரும் திருச்சி மாவட்ட ஆட்சியாளரும் இதை நக ராட்சியாக மாற்ற சிபா ரிசு செய்யவில்லை. |
| 9. கள்ளக்குறிச்சி .. | தென்னாற்காடு .. | அரசு இப் பொருள் குறித்து ஆராய்ந்து இதனை நகராட்சியாக மாற்ற வேண்டிய அவ சியமில்லை என்று முடிவு எடுத்துள்ளது. |
| 10. நாமக்கல் .. | சேலம் .. | 17—1—1970 முதல் ஓர் நகராட்சியாக் அழைக்கப் பட்டுவிட்டது. |
| 11. புஞ்சை புளியம் பட்டி | கோயம்புத்தூர் .. | கோவை மாவட்ட ஆட்சி யாளர் இப்பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற செயற் குறிப்புகளை அனுப்பி இருப்பதாக அரசுக்குத் தெரிவித்துள் ளார். அவைகளின்மேல் தனியாக கிராம வளர்ச்சி இயக்குநருடன் அரசு தொடர்பு கொண்டு மேல் நடவடிக்கைகள் அவர் குறிப்புகள் வந்ததும் எடுக்கப்படும். |

| பேரூராட்சியின் பெயர். | மாவட்டம். | எடுக்கப்பட்ட நடவடிக்கைகள். |
|---|---|---|
| 12. கோட்டூர் | .. கோயம்புத்தூர் .. | இப் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றும் பொருள் குறித்து கிராம வளர்ச்சி இயக்குநருடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது. இப் பொருள் குறித்து அவர் அறிக்கை வந்தவுடன் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| 13. மாதவரம் | .. செங்கற்பட்டு | இவை இரண்டும் நகராட்சிகளாக 20-11-1970 லிருந்து மாற்றப்பட்டு விட்டது. |
| 14. கத்திவாக்கம் | .. ” | |

இணைப்பு 4

[248-ம் பக்கத்தில் 48-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிடாத வினாவிற்குரிய விடையைக் காண்க.]

SOUTH ARCOT DISTRICT :

1. Government Leprosy Treatment and Study Centre, Tirukoilur.
2. Government Leprosy Control Unit, Kallakurichi.
3. Government Leprosy Control Unit, Chidambaram.
4. Government Leprosy Control Unit, Vridhachalam.
5. Government Leprosy Subsidiary Centre, Veeraperumanallur.
6. SET Unit attached to Government Headquarters Hospital, Cuddalore.
7. SET Unit attached to Government Hospital, Valavanur.
8. SET Unit attached to Government Hospital, Gingee.
9. SET Unit attached to Government Hospital, Ulundurpet.
10. SET Unit attached to Government Hospital, Tittagudi.
11. SET Unit attached to Primary Health Centre, Mangalampet.
12. SET Unit attached to Municipal Dispensary, Nellikuppam.
13. SET Unit attached to Panchayat Union Dispensary, Kurinjipadi.
14. SET Unit attached to Government Hospital, Villupuram.
15. SET Unit attached to Government Dispensary, Palayamkottai.
16. SET Unit attached to Panchayat Union Dispensary, Pennadam.



NORTH ARCOT DISTRICT :

17. Government Leprosy Control Unit, Tiruvannamalai.
18. Government Leprosy Control Unit, Arkonam.
19. Government Leprosy Control Unit, Polur.
20. Government Leprosy Subsidiary Centre, Tiruvettipuram.
21. SET Unit attached to Christian Medical College, Vellore.
22. SET Unit attached to Government Hospital, Mailapaty.
23. SET Unit attached to Primary Health Centre, Kilpennathur.
24. SET Unit attached to Panchayat Union Dispensary, Alangayam.
25. SET Unit attached to Government Hospital, Arni.
26. SET Unit attached to Government Hospital, Tirupathur.
27. SET Unit attached to Primary Health Centre, Vettavalam.
28. SET Unit attached to Government Hospital, Chengam.
29. SET Unit attached to Government Dispensary, Sathanur dam.
30. SET Unit attached to Panchayat Union Dispensary, S. Pudupalayam.
31. SET Unit attached to Panchayat Union Dispensary, Jolarpet.
32. SET Unit attached to Government Women and Children Hospital, Vaniyambadi.
33. SET Unit attached to Bethesda Hospital, Ambur.
34. SET Unit attached to Bethesda Hospital, Kaspa Ambur.
35. SET Unit attached to Bethesda Hospital, Sanakuppam.
36. SET Unit attached to Rural Health Centre, Christian Medical College, Vellore.

CHINGLEPUT DISTRICT :

37. Government Leprosy Control Unit, Kancheepuram.
38. Government Leprosy Subsidiary Centre, Tiruvellore.
39. SET Unit attached to Government Hospital, Vallipuram.
40. SET Unit attached to Government Hospital, Ponneri.
41. SET Unit attached to Government Hospital, Tiruthani,
42. SET Unit attached to Primary Health Centre, Redhills.
43. SET Unit attached to Government Dispensary, Poondi.
44. SET Unit attached to Panchayat Union Dispensary, Villivakkam.

SALEM DISTRICT :

45. Government Leprosy Control Unit, Namakkal.
46. Government Leprosy Control Unit, Rasipuram.
47. Government Leprosy Subsidiary Centre, Attur.
48. SET Unit attached to Government Dispensary, Sankari.

SALEM DISTRICT—*cont.*

49. SET Unit attached to Government Leprosy Sanatorium, Ethapur.

50. SET Unit attached to Government Headquaters Hospital, Salem.

51. SET Unit attached to Government Hospital, Tiruchengodu.

52. SET Unit attached to Municipal Hospital, Idapadi.

53. SET Unit attached to St. Mary's Hospital, Arisipalayam.

54. SET Unit attached to Government Hospital, Velur.

55. SET Unit attached to Government Hospital, Komarapalayam.

TIRUNELVELI DISTRICT:

56. Government Leprosy Control Unit, Sivagiri.

57. Government Leprosy Subsidiary Centre, Seerudayarpuram.

58. SET Unit attached to St. Luke's Leprosorium, Peikulam.

59. SET Unit attached to Government Hospital, Ettayapuram.

60. SET Unit attached to Government Hospital, Ambasamudram.

61. SET Unit attached to Government Hospital, Tenkasi.

62. SET Unit attached to Panchayat Union Dispensary, Vilathikulam.

63. SET Unit attached to Government Hospital Kadiyanallur.

64. SET Unit attached to Government Hospital, Nanguneri.

65. SET Unit attached to Government Hospital, Koilpatty.

66. SET Unit attached to Government Hospital, Srivaikundam.

TIRUCHIRAPPALLI DISTRICT:

67. Government Leprosy Control Unit, Jayakondacholapuram.

68. Government Leprosy Control Unit, Perambalur.

69. SET Unit attached to Municipal Hospital, Manaparai.

70. SET Unit attached to Government Headquarters Hospital, Tiruchirappalli.

71. SET Unit attached to Government Hospital, Keeranur.

72. SET Unit attached to Town General Hospital, Pudukottai.

73. SET Unit attached to Government Hospital, Arimalam.

74. SET Unit attached to Primary Health Centre, Uppidamangalam.

75. SET Unit attached to Primary Health Centre, Chinnadharapuram.

76. SET Unit attached to Government Dispensary, Musiri.

77. SET Unit attached to Government Hospital, Lalgudi.

78. SET Unit attached to Primary Health Centre, Pallapatti.



TIRUCHIRAPPALLI DISTRICT—*cont.*

79. SET Unit attached to Government Hospital, Karur.

80. SET Unit attached to Government Hospital, Srirangam.

81. SET Unit attached to Government Hospital, Kulithalai.

82. SET Unit attached to Government Hospital, Ariyalur.

83. SET Unit attached to Government Hospital, Tirumayam.

DHARMAPURI DISTRICT:

84. Government Leprosy Control Unit, Krishnagiri.

85. SET Unit attached to Government Hospital, Hosur.

MADURAI DISTRICT:

86. Government Leprosy Control Unit, Sembatti.

87. Government Leprosy Control Unit, Palani.

88. Government Leprosy Control Unit, Melur.

89. SET Unit attached to Government Hospital, Nelakkottai.

90. SET Unit attached to Government Hospital, Periakulam.

91. SET Unit attached to Panchayat Union Dispensary, Andipatti.

92. SET Unit attached to Government Hospital, Uthamapalayam.

93. SET Unit attched to Government Hospital, Betlagundu.

94. SET Unit attached to Government Hospital, Bodinaickanur.

95. SET Unit attached to Government Hospital Campus.

96. SET Unit attached to Government Headquarters Hospital, Dindigul.

97. SET Unit attached to Primary Health Centre, Guzilamparai.

98. SET Unit attached to Panchayat Union Dispensary, Kannivadi.

99. SET Unit attached to Primary Health Centre, Vadamadurai.

100. SET Unit attached to Primary Health Centre, Vadasendur.

101. SET Unit attached to Primary Health Centre, Thadicombu.

102. SET Unit attached to Primary Health Centre, Narikkalpatti.

103. SET Unit attached to Panchayat Union Dispensary, Keeranur.

104. SET Unit attached to Primary Health Centre, Kottampatti.

105. SET Unit attached to Primary Health Centre, Natham.

106. SET Unit attached to Primary Health Centre, Vellalore.

107. SET Unit attached to Christian Fellowship Hospital, Oddanchatram.

COIMBATORE DISTRICT :

108. Government Leprosy Control Unit, Tamarapalayam.

109. SET Unit attached to Government Hospital, Kangayam-palayam.

110. SET Unit attached to Government Hospital, Gobichetti-palayam.

111. SET Unit attached to Government Hospital, Mettu-palayam.

112. SET Unit attached to Government Hospital, Bhavani.

113. SET Unit attached to Government Hospital, Pollachi.

114. SET Unit attached to Government Hospital, Udumalpet.

115. SET Unit attached to Government Hospital, Dhara-puram.

116. SET Unit attached to Government Hospital, Erode.

117. SET Unit attached to Government Hospital, Anthiyur (1st Unit).

118. SET Unit attached to Government Hospital, Anthiyur (2nd Unit).

THANJAVUR DISTRICT :

119. Government Leprosy Subsidiary Centre, Orthanad.

120. SET Unit attached to Government Hospital, Vaithees-warankoil.

121. SET Unit attached to Government Hospital, Thiruk-kattupalli.

122. SET Unit attached to Primary Health Centre, Needa-mangalam.

123. SET Unit attached to Government Hospital, Mannar-gudi.

124. SET Unit attached to Government Hospital, Mayuram.

125. SET Unit attached to Government Hospital, Sirkali.

126. SET Unit attached to Government Hospital, Pattu-kottai.

127. SET Unit attached to Government Hospital, Tiruvarur.

128. SET Unit attached to Government Hospital, Tiruthurai-poondi.

129. SET Unit attached to Primary Health Centre, Vedaran-yam.

130. SET Unit attached to Government Hospital, Aranthangi.

131. SET Unit attached to Government Hospital, Kootha-nallur.

132. SET Unit attached to Government Hospital, Adirama-patinam.

133. SET Unit attached to Government Headquarters Hospital, Nagapattinam.



RAMANATHAPURAM DISTRICT :

134. Government Leprosy Control Unit, Aruppukkottai.

135. SET Unit attached to Government Hospital, Chettinad.

136. SET Unit attached to Government Hospital, Mudu-kalathur.

137. SET Unit attached to Government Hospital, Sivaganga.

138. SET Unit attached to Adheenam Dispensary, Kundra-kudy.

139. SET Unit attached to Government Hospital, Devakottai.

140. SET Unit attached to Government Hospital, Tiruvadanai.

141. SET Unit attached to Government Hospital, Srivilli-puthur.

142. SET Unit attached to Government Hospital, Virudhu-nagar.

143. SET Unit attached to Government Hospital, Rajapala-yam.

144. SET Unit attached to Government Hospital, Rames-waram.

145. SET Unit attached to Government Headquarters Hospi-tal, Ramanathapuram.

146. SET Unit attached to Government Hospital, Sathur.

KANYAKUMARI DISTRICT :

147. Government Leprosy Control Unit, Thuckalay.

148. SET Unit attached to Government Dispensary, Bootha-pandy.

GOVERNMENT LEPROSY SANATORIUM :

149. Ethapur, Salem District.

150. Tholurpatti, Tiruchirapalli District.

[1971 ஜூலை 29

## இணைப்பு 5

[251-ம் பக்கத்தில் 53-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிடாத வினாவிற்குரிய விடையைக் காண்க.]

STATEMENT SHOWING THE INDUSTRIES FUNCTIONING IN THE K. R. SUNDARAM INDUSTRIAL ESTATE (PRIVATE), LIMITED, THIKUVOTTIYUR

| *Name of the Factory.* | *Details of components manufactured.* | *Date of Commencement.* |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 Unity Forgings .. | Forging required for Industrial Engines, Motor Cycles and Scooters, con-rods, crankshaft, etc. | 29th December 1964. |
| 2 Ambits Engineerring Company. | Machining of bar items like crank pin, brake cam. cam spindles, etc., for Motor Cycles and breather valve body, governor gear sleeve, governor gear spindles, etc., for Industrial Engines. | 30th June 1965. |
| 3 R. Krishnaraj Industries. | Machining bar items, lime pivot pin, steering system, brake cams, wheel bolts, etc. for Motor Cycles and Scooters. | 30th September 1964. |
| 4 Suresh Industrials | Machining of Electrical items like main switch, horn and dipper switch, tail lamps, etc. for Motor cycles and scooters. | 12th November 1963. |
| 5 Southern Engineering Company. | Machining of Gear shafts for Motor Cycles, Scooters and Industrial Engines. | 7th October 1964. |
| 6 Hari and Hari .. | Machining of non-ferrous castings like cylinder Head Bearing housing crankcase connecting rod, etc , for Motor cycles Scooters, and Engines. | 26th September 1963. |
| 7 General Automa- Company. | Machining of bar items likeBall races hub, spindle, hub barrels, etc., for Motor Cycles, Scooters. | 17th January 1964 |
| 8 Vispa Corporation | Machining of forgings like crank shafts and connecting rods for Motor cycles, scooters and Engines for agriculture and Industry. | 28th February 1964. |
| 9 Industrial Ancillary Services. | Machining of non-ferrous castings like crank case, chain case, gear box, casting, etc., for Motor cycle,scooters and Villiers Engines for Agriculture and Industry. | 10th September 1964. |
| 10 A.V. Ramamurthy and Company. | Machining of crank shaft and con-rods for motor cycles Scooters and Villiers Engines for Agriculture and Industry. | 9th February 1965. |
| 11 Sistla Industries .. | Machining of Grey iron casting like Cylinder Barrei Cylinder Head and Crank case for Motor Cycles Scooters and Villiers Engines. | 9th February 1965. |
| 12 Messrs. N. Balasubramaniam. | Machining of Cylinder Barrels for Motor Cycles, Scooters and Villiers Engines. | 31st January 1964. |
| 13 Indian Carburettors. | Manufacture of Carburettors for Motor Cycles, Scooters and Villiers Engines. | 23rd September 1964 |
| 14 Sakthi Industrials. | Machining of shaf blanks and spindle like rear hub spindle etc., for Motor Cycles and Scooters. | 11th September 1964. |
| 15 Gomathy Engineering Enterprises. | Machining of Gear blanks for Motor Cycles and Scooters. | 31st March 1965. |
| 16 Sri Venkateswara Industries. | Machining of malleable iron castings, like hub driving sheels, brake drums and Villiers Engines. | 22nd April 1964. |
| 17 Duromatic Products | Manufacturers of special types of nuts, studs, bolts and screws for other Cycles, Scooters and Villiers Engines. | 1st October 1963. |
| 18 Southern Automobile Industries. | Manufacturers of springs for Motor Cycles, Scooters and Villiers Engines. | 1st February 1965. |
| 19 Sunder Easwar Enterprises. | Pressing and other sheet metal components for Motor cycles Scooters and Villiers Engines. | 1st October 1964. |
| 20 V. R. Sambasiva Iyer and Sons. | Special types of nuts, bolts, screws and other items for Motor Cycles, Scooters and Villiers Engines. | 18th September 1964. |



1971 ஜூலை 29]

## தமிழ்நாடு சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1971 ஜூலை 30

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*Dental check up for School Children*

* 550 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether any dental check up has to be undertaken for school going children studying in the Elementary and Secondary schools in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) எழவில்லை.

திரு. இ. எஸ். தியாகராஜன்: தலைவர் அவர்களே, பள்ளி மாணவர்களுக்கு ஆண்டுக்கொரு முறை வைத்தியப் பரிசோதனை அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் எல்லா இடங்களிலும் இல்லை. குறிப்பிட்ட சில கல்வி மாவட்டங்களில் இதற்கென்று தனி மருத்துவ ஆய்வுக்குழு ஒன்று அமைத்து, அதன்மூலம் பொது மருத்துவ உதவிகளையும் பள்ளி மாணவர்களுக்குச் செய்து வருகிறார்கள். குறிப்பாக, வடார்க்காடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி ஆகிய மாவட்டங்களிலும். ஈரோடு, நாமக்கல் ஆகிய இடங்களிலும் இந்தக் குழுக்கள் அமைத்து, மாணவர்கள் செலுத்தும் மருத்துவக் கட்டணத்தைப் பயன்படுத்தியும், நன்கொடை திரட்டியும், அதற்கென்று மெடிகல் வான் வைத்து, ஒரு மருத்துவ அதிகாரியையும் மற்றப் பணியாளர்களையும் நியமித்து, மாணவர்களுடைய பொது உடல் நலத்தைப்பற்றி ஆய்ந்து வருகிறார்கள். அத்துடன் சேர்த்து, பல் நோய் பற்றியும் கவனித்து வருகிறார்கள். அந்தத் திட்டத்தை மற்றைய மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தும் எண்ணம் இருந்து கொண்டு வருகிறது. அதற்கான முயற்சியும் எடுக்கப்பட்டு வருகிறது.

[1971 ஜூலை 30

திரு. கோ. இளங்கோவன்: தலைவர் அவர்களே, இம் மாநிலத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு முறையாக ஆண்டுக்கொரு முறை நடத்தப்படவேண்டிய மருத்துவப் பரிசோதனைகள் சிலபல பள்ளிகளில் நடத்தப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அரசு நேரடியாக அறியாது. ஆனால், ஆண்டுதோறும் மருத்துவப் பரிசோதனை செய்ய வேண்டும் என்பதுதான் நியதி. அதற்காகத்தான் மாணவர்களிடமிருந்து மருத்துவக் கட்டணம் வசூலிக்கிறோம். எங்காவது மருத்துவப் பரிசோதனை செய்யப்படாமலிருந்து கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால், அங்கே அதை முறையாகச் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம்.

திரு. எ. சுவாமிதாஸ்: கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர் கோவில் அரசாங்க மருத்துவ மனையில் பணியாற்றுகின்ற பல் டாக்டர் அவர்கள் தாமாகவே நகரத்திலிருக்கின்ற தொடக்கப் பள்ளிகளுக்கெல்லாம் சென்று பல் பரிசோதனை செய்து வருகிறார்கள். அவர்கள் மேலும் அந்தப் பணியைத் தொடர்ந்து நடத்துவதற்கு உதவி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அப்படித் தாமாகவே உதவி செய்ய முன்வருகிறவர்களின் பணிகள் பாராட்டப்பட வேண்டிய ஒன்றுதான். ஆனால், அதற்கான முயற்சியினை அங்கேயிருக்கின்ற மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரி, இப்படிப்பட்ட குழு அமைப்பதன்மூலம் எடுத்துக்கொள்ளவேண்டும். ஏனென்றால், மாணவர்களிடமிருந்து ‘மருத்துவக் கட்டணம்’ என்று வசூலிக்கிறோம். அதை வைத்துக்கொண்டு அவர்களுக்கு உதவிகள் செய்து தர அவர்களுடைய பணிகள் மிகச் செம்மையாக நடைபெற என்ன வசதி வாய்ப்புச் செய்து தரவேண்டுமோ அதைச் செய்வதற்கு முயற்சி செய்யலாம். மாவட்டக் கல்வி அதிகாரி மூலம் இந்த முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: உப தலைவர் அவர்களே, உயர்நிலைப்பள்ளிகளில் சேருகின்ற மாணவர்களுக்கு மாத்திரமல்லாமல், ஆறு வயதில் ஆரம்பப் பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றபோதே ‘ஸ்கூல் ஹெல்த் ப்ரொக்ராம்’ என்ற ஒன்று இருந்ததே அது என்ன ஆயிற்று?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சாதாரணமாகத் துவக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி ஆகிய இரண்டு வகைப் பள்ளி மாணவர்களையும் சேர்த்துத்தான் இந்த முறை கையாளப்பட்டு வருகிறது. நான் ஏற்கனவே சொன்னபடி, ஒருசில மாவட்டங்களில் குழு அமைத்திருப்பதைப்போல, மற்ற எல்லா மாவட்டங்களிலும் குழுக்களை அமைத்து, அவற்றினைப் பயன்படுத்துவதற்கான முயற்சிகள் இருந்து வருகின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த மருத்துவப் பரிசோதனைக்கு ஸ்பெஷலிஸ்ட்ஸ் அனுப்பப்படுகின்றனரா?



1971 ஜூலை 30]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் முதலில் சொன்னபடி குழுக்கள் அமைந்த இடத்தில் ஒரு டாக்டர், ஒரு மெடிகல் அட்டென்டென்ட் இருக்கிறார்கள். மெடிகல் வான் டிரைவர், க்ளீனர் ஆகியோருக்கும் செலவு ஏற்படுகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH: This Government have introduced mobile hospitals in various places. May I know from the Hon. Minister whether this mobile hospital would be utilised for arranging for medical check-up of children in elementary schools and high-schools?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, எல்லா இடங்களிலும் ஆண்டுக்கொரு முறை செய்யவேண்டும் என்பதுதான் நியதியாக இருக்கிறது. அதைப் பரவலாகவும் மிகத் திறமையாகவும் செய்கின்ற முறையில் குழுக்கள் ஆங்காங்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. சில குறிப்பிட்ட மாவட்டங்களில் மட்டும் செய்யப்பட்டிருக்கின்றன. மற்ற மாவட்டங்களிலும் தீவிரமாகவும் செம்மையாகவும் நடத்தவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## பள்ளி இறுதி ஆண்டுத் தேர்வு

* 551—வினா: திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி--உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1969–70-ம் ஆண்டில், தமிழ்நாட்டில் பள்ளி இறுதி ஆண்டுத் தேர்வில், வெற்றி பெற்ற மாணவர்களின் சதவீதம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: 1969–70-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் பள்ளியிறுதி ஆண்டுத் தேர்வில், வெற்றி பெற்ற மாணவர்கள் 56 சதவீதம் ஆகும்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, பள்ளி இறுதி வகுப்புத் தேறியவர்கள் அனைவருக்கும் கல்லூரிகளில் இடம் கிடைப்பது அரிதாக இருப்பதால், உயர்நிலைப்பள்ளியோடு பி.யு.சி. வகுப்பையும் இணைக்கும் யோசனை அரசுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அது நடைபெற இயலாதவொன்று. இப்போதே உயர்நிலைப்பள்ளிகளுக்குப் போதுமான இட வசதிகள் மற்றவைகள் இல்லை என்ற சூழ்நிலை இருக்கிறது. ‘பி.யு.சி.’ என்றால் ‘ப்ரி-யூனிவர்சிடி கோர்ஸ்’ என்பதாகும். ப்ரி-யூனிவர்சிடி கோர்ஸ் பல்கலைக்கழகத்தோடு இணைந்திருக்க வேண்டியவொன்றாகும். பி.யு.சி. யை உயர்நிலைப்பள்ளிகளோடு இணைத்துவிட்டால், அங்கு பி.யு.சி. படித்துத் தேறி வெளி வருகிறவர்கள் அத்தனை பேருக்கும் பட்டப் படிப்பில் இடம் கிடைக்குமா என்றால், கிடைக்காது. அப்படிப்பட்ட நிலையில் பி.யு.சி. மட்டும் படித்துவிட்டுப் பட்டப் படிப்புக்குச் செல்லும் வாய்ப்பு இல்லாத சூழ்நிலையை எல்லாப் பள்ளிகளிலும் வைப்பதும் பொருத்தமாக இருக்காது. பல்வேறு கல்லூரிகள் செம்மையாக நடைபெறுவதற்கு அங்கு

பி.யு.சி. வகுப்புகள் இருப்பதுதான் முக்கிய காரணம். பி.யு.சி. வகுப்பிலிருந்து வருகின்ற வருமானத்தை வைத்துத்தான் பல கல்லூரிகள் நடைபெற வேண்டியதாக இருக்கின்றன. அதை எடுத்துவிட்டுப் பட்டப் படிப்பை மட்டும் வைத்துக் கல்லூரிகளை நடத்துவதென்றால் அவர்களுக்கு நிதிக் கஷ்டம் ஏற்படக்கூடும். இப்படிப் பல்வேறு பிரச்சினைகளை ஆராய்ந்துதான் புகுமுக வகுப்பைக் கல்லூரியோடு இணைப்பது என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்றைக்கு நிறைய மசோதாக்களை நாம் எடுத்துக்கொண்டு நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே, மூலக் கேள்விகளுக்குத் தொடர்பில்லாத துணைக் கேள்விகளை, கூடிய வரை, கேட்காமல் இருக்கும்படி மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன். மாண்புமிகு அமைச்சர்கள் விடையளிக்கும் போதுகூட மூலக் கேள்விகளுக்குத் தொடர்பில்லாத துணைக் கேள்விகளுக்கு விடை அளிக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திரு. ஏ. ஆர். சுப்பையா: யூனிவர்சிடிக்குப் போகிறவர்களுக்குக் கூடுதலான பர்சென்டேஜ் ஆஃப் மார்க்ஸ் இருக்கவேண்டும் என்ற ஒரு கருத்து இருக்கிறதல்லவா? பர்சென்டேஜ் ஆஃப் மார்க்ஸை அதிகப்படுத்துவதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா? அதை உடனடியாக அமல்நடத்த வழி இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஒரு முறையை ஆண்டுதோறும் கையாண்டு வருகிறார்கள். அந்த வகையில் 1969–70-ல் 56 சத வீதத்தினர் தேர்வு பெற்றார்கள். 1970-71-ம் ஆண்டில் 1,93,059 மாணவர்கள் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு எழுதினார்கள். அவர்களில் 1,11,823 பேர் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அது 59.2 சதவீதமாகும். ஒரு கணக்கு வைத்திருக்கிறார்கள். அதிலே ஓரளவு வடிகட்டவேண்டும் என்ற எண்ணமும் இருந்து வருகிறது. அதைப் பல்கலைக் கழகத்தினரும், அதற்கென்று அமைந்திருக்கின்ற போர்டினரும்தான் முடிவு செய்ய வேண்டும்.

திரு. கே. பி. கோபால்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு பள்ளியின் பெயரைக் குறிப்பிட்டு, அந்தப் பள்ளியில் தேர்வில் வெற்றி பெற்றவர்கள் எத்தனை பேர் என்கிற விவரப் பட்டியலை மாவட்ட வாரியாகக் குறித்து முழு அறிக்கையை அரசாங்கம் வெளியிடுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாவட்ட வாரியாக இந்தப் பட்டியலைத் தயார் செய்து ஒவ்வொரு பள்ளியிலும் எத்தனை பேர்கள் தேர்வில் வெற்றி பெற்றார்கள், அது எத்தனை சதவீதம் என்பதையெல்லாம் மாவட்டக் கல்வி அதிகாரி ஆராய்ந்து, குறைந்த அளவில் வெற்றிபெற்றுள்ள பள்ளிகளை ஊக்குவிக்கவும், அந்தப் பள்ளிகளை முன்னேற்றவும் என்னென்ன செய்ய வேண்டுமோ அந்த முயற்சிகளையெல்லாம் மேற்கொண்டு வருகிறார்கள். மாவட்டந்தோறும் சிறந்த சதவிகிதத்தைத் தருகின்ற பள்ளிக்குப் பரிசுகள் வழங்கி ஊக்குவிக்கின்ற ஏற்பாடும் இருந்து வருகிறது. ஆண்கள் பள்ளிகளில் அதிக சதவிகிதத்தை எடுக்கின்ற பள்ளிக்கும், பெண்கள் பள்ளிகளில் அதிக சதவிகிதத்தை எடுக்கின்ற பள்ளிக்கும், தனித்தனியாகப் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.



திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, எஸ்.எஸ்.எல்.சி. யில் தேறுவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் 35 மார்க்குகள் என்று வைத்திருக்கிறார்கள். அதை 40 மார்க்குகள் என்று மாற்றியமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இதை முடிவு செய்வது அரசு அல்ல. பல்கலைக் கழகம்தான் முடிவு செய்ய வேண்டும்.

திரு. என். மருதாசலம்: தலைவர் அவர்களே, பள்ளியில் தேர்வு பெற்ற மாணவர்கள் 300 மார்க்குக்கு மேல் இருந்தால்தான் காலேஜில் சேர்ப்பது என்று இருக்கிறது. 300 மார்க்குக்குக் கீழே பெற்றுத் தேர்வில் வெற்றி பெற்றிருக்கிறார்கள், அப்படிப்பட்ட மாணவர்களை ஆசிரியர் பயிற்சியில் சேர்க்க அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு பயிற்சிக்கும் ஒரு தகுதியை நிர்ணயித்திருக்கிறார்கள். ஏராளமான பேர் ஆசிரியர் பயிற்சிக்கு வருகின்ற காரணத்தாலும், தகுதியுள்ளவர்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தாலும் 300 மார்க்குகள் மேல் வைத்தாலும் 350 மார்க் என்று வைத்தாலும் அதிகமான பேர்கள் கணக்கில் வருகின்றனர். திறமையுள்ளவர்கள், தரம் படைத்தவர்களும் இப்பொழுது நிறையப் பேர் இருக்கிறார்கள். எல்லா வேலைகளுக்கும் அப்படிப்பட்ட நிலைமை இல்லை. கல்லூரிகளைப் பொறுத்தவரையில் சில கல்லூரிகள் அவரவர்கள் தகுதிக்கென்று ஒரு வரையறை வைத்திருக்கிறார்கள். அரசினர் கல்லூரிக்கு குறைந்த அளவு மார்க் இருக்க வேண்டுமென்று சொல்லவில்லை. அதிக எண்களைப் பெற்றவர்களை எடுத்துக்கொண்டு, அந்த வரிசையில் மாணவர்கள் எடுக்கப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. உரொா. எட்மண்ட்: தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் சேருவதற்கு மார்க் வரம்பு வைத்திருப்பதுபோலக் கல்லூரிகளில் சேருவதற்கும் இத்தனை மார்க் என்று வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட ஒரு கருத்தும் சொல்லப்படுவதில், பள்ளி இறுதி வகுப்பில் தேறியவர்கள் பட்டியலில் ஏற்கெனவே 'எலிஜிபிள் ஃபார் காலேஜ் கோர்ஸ்' என்று நிர்ணயிக்க வேண்டுமென்று கருத்து இருக்கிறது. 'அட் ரேண்டமாக' பார்த்து சேர்த்துக்கொள்ளலாம் என்கிற கருத்தும் சொல்லப்படுகிறது. இதை ஆராய்ந்து பார்த்து தக்க முடிவு எடுத்த பிறகுதான் நடைமுறைப்படுத்த முடியும்.

திரு. என். இராஜாங்கம்: தலைவர் அவர்களே, எஸ்.எஸ்.எல்.சி. சர்டிபிகேட்டில் 'எலிஜிபிள் ஃபார் காலேஜ் கோர்ஸ்' என்ற

வார்த்தை இருப்பதன் காரணமாகப் படித்தவர்கள் அத்தனை பேருக்கும் காலேஜில் சேர்ந்து விட வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. அப்படித் தேறிவிட்டவர்களுக்குக் காலேஜில் சேர இடம் கிடைப்பதில்லை. ஆகவே, மற்றத் துறைகளில் போகலாம் என்று விதி இருக்குமானால் அவர்களைக் கட்டுப்படுத்த வகை இருக்கும் அல்லவா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதைப்பற்றி நான் முதலிலேயே குறிப்பிட்டேன். அப்படித் தேறியவர்கள் என்ற பட்டியல் போட்டு, குறிப்பிட்ட மார்க் எண்கள் என்று உச்சவரம்பு கட்டினாலும், அதற்கு மேல்நிலையிலும் வாங்குகிறவர்களுக்குக் காலேஜில் சேர வாய்ப்பு இருக்கிறதென்றாலும் அதிலும் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன என்று சொல்லப்படுகிறது. சில கல்லூரிகள் அதிக மார்க் உள்ளவர்களைச் சேர்த்து அவர்களை வெற்றி பெற வைக்கிறார்கள். மிகமிகத் தாழ்ந்திருக்கிற மார்க்குகளைப் பெற்றவர்களும், எங்களுக்கென்று ஏதாவது ஒரு காலேஜ் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். அந்தந்தக் கல்லூரிகள் தங்களுக்கென்று ஒரு தகுதியை நிர்ணயித்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கருத்துக்களையெல்லாம் ஆராய்ந்துதான் இதுகுறித்துத் தக்க முடிவு எடுக்கப்படும்.

திரு. என். கணபதி: தலைவர் அவர்களே, இப்பொழுது ஆசிரியர் பயிற்சிக்கு வருபவர்களுக்கு 300 மார்க்கு என்று வைத்திருக்கிறார்கள். சாதாரணமாகப் பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு ஒரு சிபாரிசு செய்திருக்கின்ற சூழ்நிலையைப்பொறுத்து, மாணவர்கள் வாங்குகின்ற மதிப்பெண்களைப் பொறுத்துத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. நல்ல மார்க்குகள் என்ற அடிப்படையில் போனால் பிற்படுத்தப்பட்டவர்கள் குறைந்த மார்க்குகள் வாங்குகிறார்கள். ஆகவே, மார்க்குகளை மட்டும் கருத்தில் கொண்டால் பிற்படுத்தப்பட்டவர்கள் முன்னுக்கு வர வழியில்லாமல் இருக்கிறது. ஆகவே, இதை மாற்றியமைப்பதற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அந்த எண்ணத்தை அடிப்படையாக வைத்துத்தான் கல்லூரிகளிலும் மற்ற இடங்களிலும் சேரும்போது பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 31 சதவீதம் இருக்க வேண்டுமென்றும், தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கு 18 சதவீதம் இருக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறோம். ஆனால், பிற்பட்ட வகுப்பினர்களில் பல பேர் நிறைந்த எண்கள் எடுத்து வருவதன் காரணமாகப் பல கல்லூரிகளில் அதிகமான பேர்களுக்கு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. சென்ற ஆண்டில் மருத்துவக் கல்லூரியில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 25 சதவீதம் ஒதுக்கப்பட்டிருந்தது. என்றாலும் 47 சதவீதம் பிற்பட்ட வகுப்பினர் இடம் பெற முடிந்தது. சேலம் கல்லூரியில் 25 சதவீதம் என்று பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 63 சதவீதம் கல்லூரியில் இடம் பெற முடிந்தது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 31 சதவீதம் என்றும், தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கு 18 சதவீதம் என்றும் சொல்லியிருக்கிற காரணத்தால் அந்த அளவைவிடவும் அதிகமான



இடங்களைப் பெறுகிறார்கள். அதில் திறமை படைத்தவர்களும் போட்டியில் சேர்ந்துகொண்டு சிறந்த முறையில் வெற்றி பெறக் கூடியவர்களாகவும் பலர் இருக்கிறார்கள்.

*Apprentice Teachers' Scheme*

*552 Q.—THIRU K. P. GOPAL : Will Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that all the teachers enrolled in the Apprentice Teachers' Scheme have been provided with jobs;

(b) if so, the details thereof; and

(c) if not, the reasons therefor

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) எழாது.

(உ) 1970–71-ல் 6,500 தொழில் பழகு ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டன. தொழில் பழகு ஆசிரியர் திட்டத்தின்கீழ் 1970-71-ல் வரப்பெற்ற மனுக்களின் எண்ணிக்கை 25,498. 24—6—1971 வரை நியமிக்கப்பட்ட தொழில் பழகு ஆசிரியர்கள் எண்ணிக்கை 3,697 ஆகும். தொழில் பழகு ஆசிரியர் திட்டம் 1970-71-ல் பிந்தியே தொடங்கப்பட்டதால் இன்னும் கூடுதலாகத் தொழில் பழகு ஆசிரியர் பதவிகளை அவ்வாண்டில் நிரப்ப இயலவில்லை. மேலும் தனியார் பள்ளி நிறுவனங்கள், இத்திட்டம் தங்கள் நியமன அதிகாரத்தில் குறுக்கீடாக அமையும் என்ற தவறான கருத்தில், திட்டத்தைச் செயல்படுத்த ஓரளவு தயக்கம் காட்டினர். இந்த ஐயப்பாடுகளைப் போக்கும் வண்ணம், திட்ட விதிகள் இப்பொழுது திருத்தப்பட்டுள்ளன. இத்திட்டம் 1971–72-ம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படும்.

திரு. கே. பி. கோபால்: தலைவர் அவர்களே, அப்ரன்டீஸ் டீச்சர்ஸ் திட்டத்தின்கீழ், வேலைதேடித் தரும் நிறுவனத்தில் பதிவு செய்து கொண்டுள்ள ஆசிரியர் அனைவருக்கும் வேலை தருவதற்கு அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான்கு, ஐந்து ஆண்டுக்காலம், ஆசிரியர் பயிற்சி பெற்று, யாரும் சிபாரிசு இல்லாத காரணத்தால் வேலை கிடைக்காமல் தவிக்கும் ஆசிரியர்களுக்காக அரசு இப்படி ஒரு முடிவுக்கு வர வேண்டி வந்தது. சிபாரிசு கிடைக்காத ஆசிரியர்கள் பல இடங்களில் அலைந்து திரிந்து வேலை கிடைக்காத நிலைமை இருந்தது. அவர்களையெல்லாம் தொழில் பழகு ஆசிரியராக எடுத்துக்கொண்டு, அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கலாம் என்று அரசு கருதி, 1966, 1967-வது ஆண்டில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு முதலில் வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்றும், அதன் பின்னர் 1968-ல் பயிற்சி பெற்றவர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்றும், அதன் பின்னர் 1969-ல் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமென்றும் செய்வது என்று யோசிக்கப்பட்டது. அதன் காரணமாக 6,500 ஆசிரியர்கள் பதவிகள் ஏற்படுத்தப்பட்டன. வருஷ வாரியாக, ஒரு பட்டியல் தயார் செய்துகொண்டு ஒவ்வொரு

[1971 ஜூலை 30

வருஷமாக எடுத்துக்கொண்டு வரவேண்டும் என்று முறைப்படுத்தப் பட்டது. பட்டியலில் உள்ளவர்களை யாரை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம் என்றும் சொல்லப்பட்டது. பர்மனென்ட் வேலை கிடைக்கும்போது அவர்களையே அந்த இடத்தில் பர்மனென்ட் செய்ய வேண்டும் என்றும் சொல்லப்பட்டது. தனியார் பள்ளிகளில் இத்தகைய ஆசிரியர்களை எடுத்துக்கொண்டால், பின்னால் நிரந்தர மாக வைத்துக்கொள்ள வேண்டியிருக்கும் என்று அவர்கள் தயக்கம் காட்டுகிறார்கள். இறுதியாக இந்த ஆண்டு 1970 வரையில் தேர்ச்சி பெற்றவர்களை யாரை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம் என்றும், எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சில் பதிவு செய்து கொண்ட வர்களை எடுத்துக்கொள்ளலாம் என்றும் வகை செய்திருக்கிறோம்.

தனியார் பள்ளிகளில் தயக்கம் காட்ட முடியாத அளவிற்கு வழி வகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு 6,500 ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டன. 6 வயது முதல் 11 வயது வரை உள்ள குழந்தைகளுக்குக் கற்பிக்கும் ஆசிரியர் 3 ஆயிரம் இடங்களும், 11 முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகளுக்குக் கற்பிக்கும் ஆசிரியர் 2 ஆயிரம் இடங்களும், 14 முதல் 17 வயது வரையுள்ள குழந்தை களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர் 1,500 இடங்கள் என்கிற வகையில் 6,500 ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, அப்பரன்டீஸ் டீச்சர்ஸ் வயதின் அடிப்படையிலே அவர்களை நியமனம் செய்வதற்கு அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, வயதின் அடிப்படையில் தர இயலாது. அவர்கள் வெற்றிபெற்று இரண்டு மூன்று ஆண்டுக்காலம் வரையில் வேலைக்காக அலைந்து பின்னர் ஆசிரியர் பயிற்சிக்கு வருகிறார்கள். சிலர் பள்ளிப் படிப்பு முடிந்ததும் ஆசிரியர் பயிற்சிக்கு வருகிறார்கள். விதவைப் பெண் களாக இருப்பவர்களுக்குச் சிறிது சலுகை காட்ட வேண்டுமென்கிற முறை இருக்கிறது.

### கோழம்பேட்டையிலுள்ள குழாய்க்கிணறு

* 553 வினா: திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

மாயூரம் தாலுக்கா, கோழம்பேட்டையில் 1969-ம் ஆண்டில் நிறுவப்பட்ட சமுதாயக் குழாய்க் கிணற்றுக்கு ஆன செலவுத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: ரூ. 13,103.29.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் காவிரி டெல்டாப் பகுதியிலே உள்ள எல்லாக் கிராமப் பகுதிகளுக்கும் இதை விஸ்தரிக்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதைப்பற்றி முழுத் திட்டம் இல்லை. கூடுமானவரையில் பல இடங் களில் அமைக்கப்பட வேண்டுமென்பதுதான் கருத்து. மாவட்ட



1971 ஜூலை 30]

ஆட்சித் தலைவர்கள் அதற்கான திட்டங்களை நிறைவேற்றுகின்ற வகையில் அந்த அந்த மாவட்டங்களிலே உள்ள பகுதிகளில் சமுதாயக் கிணறுகளை வெட்டுகின்ற முயற்சிகளிலே ஈடுபடுகின்றார்கள். எல்லாக் கிராமங்களுக்கும் அப்படி நிறைவேற்ற வேண்டுமென்ற நிலைமை இல்லை. அந்த அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆங்காங்குள்ள இடங்களின் நிலைமைகளைப் பொறுத்து, வாய்ப்பும் வசதிகளையும் பொறுத்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறார்கள்.

### *Loss of cash box in Madras Corporation*

*551 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the cash box of the Corporation of Madras has been lost about the 24th April 1971; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(ஆ) சென்ற ஏப்ரல் மாதம் 23-ம் நாளில், சென்னை மாநகராட்சியின் கருவூலத்தில் ரூ. 65.690.68 வைக்கப்பட்டிருந்த இரும்புப்பெட்டி, அன்று காலை 10.35 மணியளவில் காணமற்போய் விட்டது. இது குறித்துக் காவல் துறையினரிடம் புகார் செய்யப் பட்டதன் பேரில் அத்துறையினர் புலனாய்வு மேற்கொண்டதன் விளைவாக இதுவரை சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர் களிடமிருந்து இதுவரை ரூ. 45,000 கைப்பற்றப்பட்டுள்ளது. காவல் துறையின் புலனாய்வு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

திரு. கே. ஏ. வகாப்: தலைவர் அவர்களே, இப்படிப் புலன் ஆய்வு செய்யப்பட்டதில் கார்ப்பரேஷனில் வேலை செய்கின்றவர்கள் இதிலே சம்பந்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்ற விவரம் வெளிவந்திருக் கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாநகராட்சி மன்றத்திலே வேலைசெய்கின்ற துணை கேஷியர் இரண்டு பேர்களும் பணியாளர்களும் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் குற்றவாளிகளா அல்லவா என்பது புலனாய்வு செய்யப்பட்டு அதற்குப் பிறகுதான் வழக்குத் தொடரப் படவேண்டும். ஞானவேலு என்பவரும் அவரோடு சேர்ந்த ஆறு பேர்களும் ஆகமொத்தம் ஏழு பேர்களும் விழுப்புரத்தில் 7—6—71 அன்று கைதுசெய்யப்பட்டு அவர்களிடமிருந்து 40 ஆயிரம் ரூபாய் கைப்பற்றப்பட்டிருக்கிறது. 8—6—71 அன்று ஜெயராமன் என்பவர் தாம்பரத்தில் கைதுசெய்யப்பட்டு அவரிடமிருந்து 5 ஆயிரம் ரூபாய் கைப்பற்றப்பட்டு இருக்கிறது. இவர்கள் மூலமாக இன்னும் பலரைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றிப் புலனாய்வுகள் நடை பெற்றுக்கொண்டிருக்கின்றன.

DR. H. V. HANDE: Is it not a fact that the higher Corporation Officials who should have normally telephoned to the Police Department failed to do so in time and that only some clerks who got frightened rushed to the Police Station? May I know whether

the Government have got information as to why the higher Revenue Officials in the Corporation did not contact the Police in time ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதிலே குறிப்பிட்டு இருப்பது—

Immediately the Periamet Police Station was informed and complaint was filed. Then the Deputy Commissioner came. என்று தான் இருக்கிறது. யார் கொடுத்தார்கள் என்ற விவரங்கள் இல்லை.

## நகராட்சித் தலைவர்கள்

* 555 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள மொத்த நகராட்சிகள் தற்போது எத்தனை?

(இ) அந்த நகராட்சிகளில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எந்தெந்த நகராட்சிகளில் தலைவர்களாக உள்ளனர்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) 93.

(இ) தற்போது எந்த நகராட்சியிலும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தலைவர்களாக இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, எல்லா சமுதாயத்தினருக்கும் குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கு வாய்ப்பு அளிக்கும் அடிப்படையிலே சென்னை மாநகராட்சி மன்றத்தின் மேயர் தேர்ந்து எடுக்கப்படுகின்ற முறையிலே அதாவது ஆண்டுக்கு ஒரு வகுப்பினரைச் சேர்ந்தவர் மற்ற நகராட்சிகளுக்கும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற வழி வகைகளை அரசாங்கம் செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் ஒரு கன்வென்ஷன், மரபாகக் கையாளப்பட்டு வருகிறது. சட்டத்தின் அடிப்படையிலே அந்த முறை கடைப்பிடிக்கப்படவில்லை. மரபு தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருவதின் காரணமாக 8 ஆண்டுக்காலத்திற்கு ஒரு முறை தாழ்த்தப்பட்டவர் மேயராகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற முறை இருக்கிறது. அதேமாதிரி ஆங்காங்கு இருக்கின்றவர்கள் அப்படிப்பட்ட ஒரு மரபை ஏற்படுத்துவார்களானால் சாலச் சிறந்ததாக இருக்கக்கூடும். இந்துக்களும் முஸ்லீம்களும் இருக்கின்ற சில நகரங்களிலே ஒரு தடவை ஒரு இந்து தலைவராகவும் ஒரு தடவை முஸ்லீம் தலைவராகவும் இருந்துவருகின்ற முறையை கைக்கொண்டு வருகிறார்கள். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தலைவராக வரக்கூடாது என்ற தடை இல்லை. ஆங்காங்குள்ளவர்கள் தாழ்த்தப்பட்டவர் தலைவராக வருவதற்கு வசதிகளைச் செய்துதருவார்களானால் அது வரவேற்கப்படவேண்டிய ஒன்று ஆகும். ஒன்றே ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். இராணிப்பேட்டை நகராட்சியிலே தலைவராக இருப்பவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்று குறிப்பிடப்படுகிறது.



## ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள்

* 556 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் தற்போது எத்தனை?

(இ) அவைகளில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் எந்தெந்த ஒன்றியங்களின் தலைவர்களாக உள்ளனர்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) 374.

(இ) அட்டவணையில் கண்டுள்ள சாதியினரைச் சேர்ந்தவர்கள் (Scheduled Castes) தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த கோட்டூர், தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்களாக உள்ளனர். அட்டவணையில் கண்டுள்ள மலைச்சாதியினரைச் சேர்ந்தவர் (Scheduled Tribe) சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கொல்லி மலை ஊராட்சி ஒன்றியத்தின் தலைவராக உள்ளார்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சட்டமன்றம், நாடாளு மன்றம் ஆகியவற்றில் தொகுதிகளைத் தாழ்த்தப்பட்டவர்களுக்கு தனித் தொகுதிகளாக ஒதுக்கப்பட்டிருப்பதைப்போன்று ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்களுக்கும் சில தொகுதிகளை அவர்களுக்காக ஒதுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஊராட்சி மன்றங்களில் நாம் ஒதுக்குவதற்கான வழியில்லை. உறுப்பினர்கள் அந்த அடிப்படையிலே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் ; தாழ்த்தப்பட்டவர்களுக்காக ஊராட்சி மன்றங்களிலும் நகராட்சி மன்றங்களிலும் ஒதுக்கித் தரப்படுகின்றது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, கோட்டூர் பஞ்சாயத்து யூனியன் தலைவராகத் தொடர்ந்து ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்தான் இருக்கிறார் என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படி இருந்து வருகிறது என்பதை நான் அறிவேன். அது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. அங்குள்ள சூழ்நிலையில் தாழ்த்தப்பட்டவர் தான் வரமுடியும் என்று இருப்பதால் அவர் தொடர்ந்து இருந்து வருகின்றார். மற்றவர்கள் வரமுடியாது, வர முயன்று பார்த்து முடியாததன் காரணமாக அவரே இருந்து வருகின்றார்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களாக வரமுடியாத நிலைமை இருப்பதாகச் சொன்னார்கள். அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட ஸ்தானங்கள் ஒவ்வொரு ஒன்றியத்திலேயும் 3 என்று நினைக்கிறேன். ஆனால் அவர்களுடைய விகிதாச்சார முறைப்படி பார்த்தால் அந்த எண்ணிக்கை குறைச்சல் 18 சதவீதம் என்ற விகிதாச்சாரத்திலே அந்த எண்ணிக்கை இல்லை: எனவே அதை உயர்த்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நாட்டைப் பொதுவாகத்தான் கொண்டு கணக்கிடப்படுகின்றது. 18 சதவீதம் என்பது அந்த வகையிலேதான் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தந்த நகரத்தின் அமைப்பு அந்தந்த ஊரின் அமைப்பு என்று வருகின்ற நேரத்தில் அந்த எண்ணிக்கை பொருந்தி வருமா என்பது சந்தேகம். அவர்களுக்கு உறுப்பினர்களாக வருகின்ற நிலைமையே இல்லாமல் போய்விடுமோ என்ற நிலைமையிலேதான் அந்த எண்ணிக்கை தரப்பட்டிருக்கிறது. தலைவராக வரவேண்டுமென்றால் ஒரு மரபையொட்டித்தான் அது சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையிலே செய்யப்படுகிறது. சட்டத்தின் அடிப்படையிலே அல்ல. எனவே, அந்த மரபின் அடிப்படையிலே சென்னை மாநகராட்சி மன்றம் ஒரு முறையைக் கையாண்டு வருகின்றது.

## அரசினர் மருத்துவமனை, மாயூரம்

* 557 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் அரசினர் மருத்துவமனையில் கண்நோய் சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் உள்ள கண்நோய் மருத்துவமனையோடு இணைந்த ஒரு நடமாடு கண் நோய் மருத்துவமனையை ஏற்படுத்தி வாரம் ஒரு முறை மாயூரம் போன்ற முக்கிய நகரங்களுக்கு அனுப்புகின்ற யோசனையை அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட யோசனையைப் பரிசீலிப்பதற்கான வாய்ப்பு தற்பொழுது இல்லை. ஆனால் அதற்குப் பதிலாக வட்ட மருத்துவ மனைகளிலே எந்த எந்த மருத்துவ மனைகளிலே கண்நோய் மருத்துவப் பகுதிகள் தொடங்கலாம் என்பதை ஆராய்ந்து பார்த்து அரசாங்கத்திற்கு ஆலோசனை சொல்வதற்காக ஒரு நிபுணர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் பல்வேறு மருத்துவமனைகளுக்கும் சென்று பார்த்து எந்த எந்த இடங்களில் அப்படிப்பட்ட பிரிவுகளை ஏற்படுத்தலாம் என்று அரசாங்கத்திற்கு அண்மையிலே தெரிவிக்க இருக்கின்றார். அவர் தெரிவித்த பிறகு அதை ஆலோசனை செய்து இயன்ற அளவுக்கு அந்தப் பகுதிகளிலே அவை ஏற்படுத்தப்படும்.

* 558 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் அரசாங்க மருத்துவமனையில் இரத்த சேமிப்பு நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாயூரம் அரசாங்க மருத்துவ மனையில் ஒரு குருதி சேமிப்பு நிலையம் திறப்பதற்கான அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.



திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாயூரத்திலுள்ள ரோட்டரி கிளப் அந்த மாயூரம் அரசாங்க மருத்துவமனையில் இத்தகைய இரத்த சேமிப்பு நிலையத்தை உருவாக்குவதற்கு நிதி உதவி தர முன் வந்திருக்கிறார்கள். அதை ஏற்று விரைவில் செயல்பட அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அந்த ரோட்டரி கிளப்-சுழல் கழகம் 15,000 ரூபாய் அளவிற்கு பல்வேறு கருவிகளை இந்தக் குருதி சேமிப்பு நிலையத்திற்கு வழங்கியிருக்கிறது. 15,000 ரூபாய் மதிப்புள்ள அந்தக் கருவிகள் இந்தச் சேமிப்பு நிலையத்தைச் செம்மையாக நடத்தப் போதுமானதாக இல்லை. அதை மேலும் ஒழுங்குபடுத்தி நடத்த அங்கு ஏற்படுத்த வேண்டிய சில ஏற்பாடுகள் இன்னும் பாக்கியாக இருக்கின்றன. இவற்றையெல்லாம் செய்த பிறகு முறைப்படி இந்தக் குருதி சேமிப்பு நிலையம் செயல்படத் தொடங்கும்.

## கால்நடைக் கன்றுகள் வளர்ப்பு

* 559 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நல்ல கால்நடைக் கன்றுகள் வளர்ப்பவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த மானியத்தொகை சமீபத்தில் நிறுத்தப்பட்டுள்ளதா?

(இ) இது குறித்து கன்று வளர்ப்பவர்களிடமிருந்து சமீபத்தில் முறையீடு ஏதேனும் வந்துள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) தமிழகத்தில் நல்ல கால் நடைக் கன்றுகள் வளர்ப்பவர்களுக்கு மானியத்தொகை உதவித் தொகை கொடுக்கும்படியான திட்டத்தைத் தொடர்ந்து நடத்த அரசு ஒப்புதல் அளிக்கவில்லை.

(இ) இது குறித்து கன்று வளர்ப்பவர்களிடமிருந்து முறையீடு ஏதும் பெறப்படவில்லை.

(உ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, இந்தக் கால்நடை வளர்ப்பதிலே சாதாரண மக்களும், நல்ல கால்நடைக் கன்றுகளை வளர்க்க மானியம் கொடுத்ததன் காரணமாக அதை வளர்ப்பதற்குப் பல்வேறு கிராமங்களிலுள்ள மக்கள் முன்வந்தார்கள். மானியம் நிறுத்தப்பட்டதால் இந்தக் கன்றுகளைச் சரியானபடி ஊட்டமுள்ள கன்றுகளை வளர்க்க வாய்ப்பில்லாமல் வியாபாரிகளுக்கு விற்றுவிடும் துர்ப்பாக்கியமான நிலை இருப்பதைப் போக்க அரசு மீண்டும் அந்தத் திட்டத்தைக் கொண்டுவர முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, கன்று வளர்ப்பதே அவைகளை நன்றாக வளரச் செய்து விற்பதற்காகத்தான், கன்றை வளர்த்து விற்றால் லாபம் வருகிறதால் கன்றுகளை

வளர்ப்பதில் ஆர்வம் காட்டுகிறார்கள். சப்சிடி என்பது உதவி என்பது, ஒரு குறிப்பிட்ட குறிக்கோளை எய்துவதற்கு ஊக்கம் அளிக்கப்படுவது. 3, 4 ஆண்டுக்காலமாக அந்த திட்டம் செயல்பட்டதன் காரணமாக, காளைக் கன்றுக்கு 10 ரூபாயும், கிடாரிக் கன்றுக்கு 5 ரூபாயுமாக வழங்கப்பட்டு, அவை தரம் உயர்ந்த இனத்திலிருந்து பிறந்தவை என்ற சான்றிதழோடு வளர்க்கப்பட்டு மக்களிடையே பெருவாரியாக அறிமுகமான பிறகு அந்தத் திட்டத்தை நடத்துவது அந்த நோக்கத்திற்கே, குறிக்கோளுக்கே மாறுபட்டதாகும். நோக்கத்தை பாபுலரைஸ் செய்வது, எல்லோருக்கும் அறிமுகம் செய்வது, எல்லோரும் பழகிக்கொள்ள வேண்டுமென்ற கருத்தில் மேற்கொள்ளப்பட்டதாகும். திட்டத்தின் குறிக்கோள் ஓரளவு நிறைவேறிவிட்டதால் தொடர்ந்து நாம் அரசாங்கத்தின் பணத்தைச் செலவழிப்பது என்பது அரசாங்கத்தின் குறிக்கோளுக்கு ஏற்றதாக இல்லை.

*Temporary Assistant Dental Surgeons*

* 560 *Q*.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether Assistant Dental Surgeons in Madras Medical Service are being kept temporary for the past six years; and

(*b*) if so. the steps taken to regularise them?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு மருத்துவப் பணியில் உள்ள தற்காலிக உதவிப் பல் வைத்தியர்களை நிரந்தரமாக்கும் பொருட்டு, தமிழ்நாடு பொதுப் பணி தேர்வுக் கழகத்தை 42 உதவி பல் வைத்தியர்களைத் தேர்ந்தெடுக்குமாறு அரசுக் கேட்டுக்கொண்டுள்ளது. தமிழ்நாடு பொதுப்பணித் தேர்வுக் கழகமும் பல் வைத்தியத்தில், பட்டப்படிப்பு (பி.டி.எஸ்.) பெற்றுள்ள நபர்களிடமிருந்து உதவிப் பல் வைத்தியர்களாக நியமிக்கப்படுவதற்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. தமிழ்நாடு மருத்துவப் பணியில் தற்போது உள்ள தற்காலிக உதவிப் பல் வைத்தியர்கள் பொதுப்பணித் தேர்வுக் கழகத்திற்கு மனுச் செய்து அதன்மூலம் தங்கள் பணியை நிரந்தரமாக்கிக் கொள்ள வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இம்மாதிரி அவர்கள் மெட்ராஸ் பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கு மனுச் செய்ய வேண்டுமென்றால் எந்த ஆண்டுத் தேர்வு அளவிலே எடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பொதுவாக இப்படிப்பட்ட தமிழ்நாடு பொதுப்பணி தேர்வுக் கழகம் விளம்பரம் செய்து கேட்கின்ற விண்ணப்பங்கள் தகுதியுடைய அனைவரும் விண்ணப்பிக்கலாம். தகுதியுடையவர்களிடையே இந்த ஆண்டு வரையில் தேர்வு பெற்றவர்கள் என்ற தடை அங்கே இல்லை. ஆனால் கூடுமானவரையில் அவர்கள் தகுதியைப் பார்த்து, நீண்ட அனுபவத்தைப்பார்த்து, ஏற்கனவே பார்த்த பணியின் அனுபவத்தைப் பார்த்து இயன்றவரையில் அங்கிருக்கிற பொதுவகையிலே தேர்ந்



தெடுக்கப்படுகிறார்கள். பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப் பங்கை அடிப்படையாகக் கொண்டு தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்பதுதான் வழக்கம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இம்மாதிரியாகத் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய அசிஸ்டெண்ட் டெண்டல் சர்ஜன்ஸ் யாருக்கும் விதி விலக்குக் கொடுக்கப்படாமல், நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள் என்ற நிலையை உண்டாக்குவார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அப்படி ஒரு கேள்விக்கே இடம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

DR. H. V. HANDE : Is it not a fact that the question of making them permanent or whatever it is, arises only after creating adequate number of vacancies or adequate opportunities ? Have this Government any proposal to have Dental Wings in all Head-quarters Hospitals and if it is possible, also in all Taluk Head-quarters Hospital ? What is the programme of the Government ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. இந்தத் துணைக் கேள்வியை நாம் ஏற்றுக்கொள்ளக்கூடத் தேவையில்லை. இருந்தாலும் சொல்லிக்கொள்கிறேன், ஏற்கனவே 5, 6 ஆண்டுகள் பணியாற்றுபவர்கள், அவர்களுடைய பணி நிரந்தரமாக்கப்படவில்லை என்பது எழுப்பப்பட்ட கேள்வி. இது வேலையில்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பது பற்றியது. அதுவும் பின்னர் ஆலோசிக்கப்படும்.

தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் செலவான தொகை.

* 561 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் இ.எஸ்.ஐ. திட்டத்தின்கீழ் தமிழ்நாடு அரசு 1970-ம் ஆண்டில் எவ்வளவு ரூபாய் செலவு செய்துள்ளது?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தமிழகத்தில் 1969–70-ம் ஆண்டில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் ரூ. 2,48,69,721 மருத்துவ வசதிக்காகச் செலவு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ. 2,16,38,809 புது டெல்லியிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் பங்கு. மீதிச் செலவைத் தமிழக அரசு ஏற்கும். நமது மாநில அரசு 32,30,912 ரூபாய் 1969–70-ஆம் ஆண்டில் அதிகமாகச் செலவு செய்திருப்பதை ஏற்க வேண்டியிருக்கிறது.

திரு. க. துரைசாமி : தலைவரவர்களே, இந்த இ.எஸ்.ஐ. திட்டத்தின்கீழ் செலவாகும் தொகையை இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன் ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்படியிருந்தும் நமக்குப் போதிய பணம் தராமல் தமிழக அரசு செலவழிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படிச் செலவான பணத்தை இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷனை வற்புறுத்திப்பெற அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

[1971 ஜூலை 30

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, இது குறித்துப் பலமுறை கடிதம் எழுதப்பட்டிருக்கிறது, நேரிலேயும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. டெல்லியில் நடைபெற்ற மாநாட்டிலே நமது தொழிலாளர் துறைச் செயலாளர் நமது அரசினுடைய எண்ணத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். மேலும் வலியுறுத்தி அதைப் பெற முயற்சி செய்யப்படும்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷனிடமிருந்து பெற மாநிலஅரசு செய்யும் முயற்சி ஒருபுறமிருக்க, அதற்காக இடைக்காலத்திலே தொழிலாளர்கள் இதனுல் பாதிக்கப்படாமல், அவர்களையும் இந்த மாநிலத்தினுடைய குடிமக்கள் என்று கருதி அவர்களுக்காகும் செலவை மேற்கொள்ள முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, இப்பொழுதே அதேபோலத்தான் தமிழக அரசு அதிகமாகும் செலவை ஏற்றுக்கொண்டு இதுவரையில் ஏறத்தாழ ஒன்றே முக்கால் கோடி ரூபாய் தமிழக அரசு செய்திருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், 1970–71-ஆம் ஆண்டுக்கு மத்திய சர்க்கார் எவ்வளவு மானியம் கொடுத்திருக்கின்றது, நமது அரசு எவ்வளவு செலவழித்தது? மேலும், இந்த இ.எஸ்.ஐ. திட்டமானது இப்படிப்பட்ட குடும்பங்களுக்கு விரிவுபடுத்தப்படாத பகுதிகளுக்கு விரிவு படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, 1970-71-ஆம் ஆண்டில் 2,75,80,461 ரூபாய் செலவு செய்யப்பட்டபோதிலும் பழைய திட்டப்படி கிடைக்க வேண்டிய 2,41,66,290 ரூபாய்க்குப் பதிலாக ஈட்டுறுதிக் கழகம் வழங்கக்கூடிய உதவி 1,62,31,700 ரூபாய்தான். இத்திட்டம் விஸ்தரிக்கும் ஒவ்வொரு சமயமும் இச்செலவு அதிகரித்துக்கொண்டே போகும். 1971–72-ஆம் ஆண்டுக்கான திருத்திய வரவு செலவு மதிப்பீட்டின்படி 3,34,02,000 ரூபாய் செலவாகும் என்று கூறப்பட்டிருக்கிறது. கனம் உறுப்பினரவர்கள் சொன்னபடி எந்த அளவிற்கு விஸ்தரிக்க வேண்டுமோ அதற்கான ஒரு திட்டத்தையும் அரசு மேற்கொண்டிருக்கிறது. நிதி வசதி ஏற்பட்டவுடனே நிறைவேற்ற யோசிக்கலாம்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, இந்த இ.எஸ்.ஐ. திட்டத்தின்கீழ் தமிழக அரசு முதற்கொண்டு, இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன் வரையில் செலவழிக்கும்பொழுது, அதற்காகக் கட்டடம் கட்டி, அதற்காக ஒதுக்கப்பட வேண்டிய படுக்கைகள் ஒதுக்கப்படாமல் மத்திய அரசு மறுப்பதற்குக் காரணம் என்ன? ஆஸ்பத்திரியிலே 500 படுக்கைகள் என்று எஸ்டிமேட் போட்டு, கட்டடம் கட்டிவிட்டுப் பாக்கியைக் குறைக்க ஏற்பாடு செய்யப்பட்டு குறைக்கப்பட்டிருக்கிறது. தமிழக அரசாங்கமும் செலவிட்டு, மத்திய கார்ப்பரேஷனும் பணம் கொடுத்தும் இப்படிக் குறைப்பதால் அப்படிப் போட்ட அந்த எஸ்டிமேட் வீணுகிறதே, அதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: அதற்குக் காரணம் நிதி போதாததுதான் என்பதைக் கனம் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1971 ஜூலை 30]

திருமதி ஜோதி வெங்கடாசலம்: இந்த இ.எஸ்.ஐ. ஸ்கீம்படி தொழிலாளர்களுக்குக் கொடுக்கக்கூடிய மருத்துவ சிகிச்சைக்கு அந்த கார்ப்பரேஷனே முழுக்க முழுக்கச் செலவு செய்ய வேண்டிய நிலையில் ஸ்டேட் கவர்ன்மெண்டும் தொகை அதிகப்படியாகக் கொடுக்கின்ற காரணத்தால் அந்தத் திட்டம் பல இடங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் விஸ்தரிக்கும் திட்டம் இருக்கிற காரணத்தால் அப்ராக்சிமேட்டாக வருகிற ஆண்டில் எவ்வளவு செலவாகும்? அதை மத்திய அரசுக்குச் சுட்டிகாட்டி அதன் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்த அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: பல முறை அப்படிக் கேட்கப்பட்டிருக்கிறது. நேரிலும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அந்த முயற்சியைத் தொடர்ந்து அரசு மேற்கொள்ளும்.

## அண்ணுவின் கதை

* 546 வினு—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தமிழக வானெலியில் "அண்ணுவின் கதை" பாடல் மூலம் சிறுவர்களுக்குப் போதிக்க ஏற்பாடு செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி: இல்லை

திரு. கே. எ. வகாப்: வானெலியில் இப்போது காந்தியின் கதையைச் சொல்லி வருகிருர்கள். அதே போன்று அண்ணு போன்றவர்களுடைய கதையையும் வானெலியில் ஒலிபரப்புவது குழந்தைகளுக்கு நல்ல படிப்பினையாக இருக்கும் என்ற காரணத்தால் அதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி: காந்தியடிகளுடைய வரலாறு காந்தி மகான் கதை என்று வில்லுப்பாட்டு நிகழ்ச்சியாக ஓராண்டுக்கு முன்பு இருந்து வானெலியில் தொடர்ச்சியாக நடத்தப்பட்டது. அதைப் போல் அண்ணுவின் கதையையும் சிறுவர்களுக்கு நல்லுரை போதிக்கும் வகையில் அண்ணுவின் வாழ்க்கை நிகழ்ச்சிகள், சொல்லோவியங்கள் ஒலிபரப்பு நிகழ்ச்சியில் இடம் பெற வேண்டுமென்று அரசு வானெலியினரைக் கேட்டுக் கொள்ள இருக்கிறது.

திரு. பெ. மலைச்சாமி: அண்ணுவினுடைய சிறந்த சொற்பொழிவுகள் டேப் ரெக்கார்டு செய்யப்பட்டிருக்கிறது. அத்தகைய சிறந்த பேச்சுக்களை வாரம் ஒருமுறை ஒலிபரப்புத் தேவையான முயற்சிகளை மேற்கொண்டு மத்திய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி: அண்ணுவினுடைய பேச்சுகள் பல இசைத்தட்டுகளாக வெளியிடப்பட்டிருக்கின்றன. கூடுமான வரையில் மத்திய அரசின் மூலம் வானெலியில் அந்த உரைகளைத் தேவைப்படுகின்ற நேரத்தில் ஒலிபரப்புவதற்கு இந்த அரசு கேட்டுக் கொள்ளும்.

திரு. வ. சின்னசாமி: அண்ணுவினுடைய வாழ்க்கை வரலாற்றை நாடக மூலம் வானெலியில் ஒலி பரப்ப அரசு ஆவன செய்யுமா?

[1971 ஜூலை 30

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அண்ணாவைப் பற்றி நாட்டு மக்கள் நினைவு கொள்ள முழுக்க முழுக்க வானொலியை நம்ப வேண்டியதில்லை. அண்ணா அவர்கள் நாட்டு மக்கள் அனைவர் உள்ளத்திலும் இடம் பெற்றுள்ளார்கள். அண்ணா அவர்களுடைய சொல்லோவியங்கள், வாழ்க்கை வரலாறு இப்போதே வில்லுப் பாட்டு நிகழ்ச்சிகளாகவும், இசை நிகழ்ச்சிகளாகவும், நாடக நிகழ்ச்சி களாகவும் நாட்டு மக்களுக்குப் பரப்பப்பட்டு வருகிறது.

திரு. கா. காளிமுத்து: அண்ணாவின் கதை ஒலிபரப்பாக நிகழ்த்தப் படுகின்றபோது அந்தக் கதையைக் கவிதை நடையில் முதல்வர் அவர்கள் எழுதித்தருவார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: திருமணம் ஆகவில்லை. ஆன பிறகு குழந்தைக்கு என்ன பெயர் என்று கண்டுபிடிக்கலாம்.

திரு. என். கிட்டப்பா: அண்ணா அவர்களைப் பற்றி நமது முதல்வர் கலைஞர் அவர்கள் தானே ஒரு கவிதை இயற்றிப் பாடியுள்ளார்கள். அதைப் பள்ளிப் பாடப் புத்தகத்தில் வைக்க அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இருக்கிற எரிச்சல் போதாதா?

*Expenditure on staff of State Planning Commission.*

* 547 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Chief Minister be pleased to state the annual expenditure that will be incurred on the staff of the State Planning Commission?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாநிலத் திட்ட ஆணைக்குழு இப்போது தான் அமைக்கப்பட்டுள்ளது, திட்ட ஆணைக்குழுவின் பணியாளர் பற்றிய செலவை மதிப்பிடச் சில காலம் ஆகும்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: இந்த மாநிலத் திட்டக் குழுவானது இதுவரை என்ன பணியாற்றி இருக்கிறது என்பதைச் சுருக்கமாகச் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்போதுதான் தொடங்கப் பெற்று அதனுடைய பணி ஆரம்பமாகியிருக்கிறது. அதற்குள்ளாக அவைகளைப் பற்றி எதுவும் கூறுவதற்கு இயலாது.

திரு. கே. டி. கே. தங்கமணி: மாநிலத் திட்ட ஆணைக் குழுவானது அடுத்த சட்டமன்றத் தொடரிலாவது அவர்களுடைய முதல் ஆலோசனைகளை எடுத்து வைப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நான் ஏற்கனவே அதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். அடுத்த தொடரில் அவர்களுடைய முதல் பரிந்துரைகளைப் பற்றி எடுத்துச் சொல்லுவார்கள். அதைப் பற்றி நாம் இங்கு கருத்துக்களைச் சொல்லலாம் என்று கூறியிருக்கிறேன்.,

திரு. கோவை செழியன்: இந்த மாநிலத் திட்டக் குழு மாநிலத் திற்குத் தேவையான தொழிற்சாலைகள், அதற்கான வாய்ப்புகள்பற்றி ஆராய்ந்தறிந்து ஒரு திட்டத்தைக் கொடுத்தால் அவைகளை அப்படியே மத்திய அரசாங்கமும், மத்தியத் திட்டக் குழுவும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்த அரசு வற்புறுத்துமா?



1971 ஜூலை 30]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாநிலத் திட்டக் குழு நம்முடைய மாநிலத்திலுள்ள இயற்கைப் பொருள்கள், மூலதனம் பற்றியெல்லாம் ஆராய்ந்து தொழில் நுட்பப் பணியாளர்களால் சீர்தூக்கிப் பார்த்து எடுத்து வைக்கின்ற கருத்துக்களின் அடிப்படையில் அவைகளை எல்லாம் நல்ல முறையில் செயல்படுத்தி மத்திய அரசு உதவியை நாடுவோம். அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்று எடுத்துச் சொல்லுவதற்கு இப்போது என்னால் இயலாது. நாமே அவைகளில் எவற்றை எடுத்துக்கொள்வது என்று முடிவு செய்த பிறகுதான் சீர்தூக்கிப் பார்த்துச் செயல்படவேண்டும்.

DR. H. V. HANDE: May I know whether there is any proposal to link the State Planning Body with the Central Planning Body Is there going to be any co-ordination between the work of the State Planning Body and also the suggestions of the Central Planning Body? What are the terms of reference of the State Planning Body? What are the duties earmarked for it and where is its office? May I know further particulars from the Hon. Chief Minister?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இரண்டையும் இணைப்பது என்பது இயலாத காரியம். ஆகவே, இங்கு எடுக்கப்படுகின்ற முடிவுகளை இந்த அரசு சார்பில் எப்படி நிறைவேற்றுவது என்பதற் கான வழிவகைகளை நாடி அறிந்து அவற்றைச் செயல்படுத்துவதற்கு மத்தியில் இருக்கும் திட்டக் குழுவினுடைய துணையை நாடுவதுதான் முறையாக இருக்கும். இல்லாவிட்டால் ஒன்றுக்கொன்று போட்டி என்ற முறையில் ஆகிவிடக் கூடும். அதற்குப் போட்டியாக இல்லாமல் அந்த வகையில் வேண்டுமானால் இணைந்து செயல்படும் என்பதை நான் கூறமுடியும். இதற்கான அலுவலகங்கள் எல்லாம் இப்போது இங்கிருக்கும் எழிலகத்தில் அலுவலாளர்கள் பணி புரியத் தொடங்கிவிட்டார்கள்.

திரு. சொ. காவேரிமணியம்: இம் மாநிலக் குழுவில் மாவட்ட நிர்வாக அதிகாரிகள் இடம் பெறுகிறார்களா அல்லது அவர்களுடைய பரிந்துரைகள் கேட்கப்படுகின்றனவா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாவட்ட அளவில் எந்த அதிகாரி களும் இடம் பெறவில்லை. திட்டக் குழு தன்னுடைய ஆராய்ச்சியைப் பரவலாக நடத்துகிற நேரத்தில் அவர்களுடைய துணையை நாடிப் பெறும்.

இராஜமன்னார் குழுவுக்கான செலவு.

* 548 வினா—திரு. ஒ. என். சுந்தரம்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மத்திய-மாநில உறவுப் பற்றிய இராஜமன்னார் குழுவின் பணி தொடர்பாக இதுவரையில் ஆன மொத்தச் செலவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: 1—5—1971-ஆம் நாள் வரை பணியிலிருந்த பணியாளர் சம்பளம் முதலிய செலவு உட்பட மத்திய–மாநில உறவு ஆய்வுக்குழுப்பணி தொடர்பாக ஏற்பட்டுள்ள மொத்தச் செலவு ரூ. 2,13,678-25 ஆகும்.

[1971 ஜூலை 30

திரு. இ. எஸ். தியாகராஜன் : ராஜமன்னார் குழுவின் பரிந்துரைகளை ஆராய அரசியல் தலைவர்களின் கூட்டம் ஏதாவது கூட்ட உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தப் பரிந்துரைகளை ஒவ்வொரு கட்சியினுடைய தலைவர்களும் அவர்களுடைய கட்சி மட்டத்தில் ஆராய்ந்து தங்களுடைய கருத்துக்களை அறிவிப்பார்கள் என்று அரசு நம்புகிறது.

திரு. சோ. கருணைநாதன் : ராஜமன்னார் குழுவில் எவ்வளவு பேர் இடம் பெற்றுள்ளார்கள்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது ஏற்கனவே நடந்து முடிந்த கதை. இது விடியற்காலையில் சீதைக்கு ராமன் என்ன உறவு என்று கேட்பது போல் இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : ராஜமன்னார் குழுவின் பரிந்துரைகளைச் சட்டசபையில் விவாதிக்க ஒரு நாள் ஒதுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அடுத்த கூட்டத் தொடரில் அதற்கு ஒருநாள் ஒதுக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : ராஜமன்னார் அறிக்கையின்மீது இந்த அரசாங்கத்தின் மேல்நடவடிக்கை என்ன என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதைத்தான் இப்போதே சொன்னேன். ஒவ்வொரு கட்சியின் தலைவர்களும் அந்தந்தக் கட்சி மட்டத்தில் ஆராய்ந்து அந்தக் கருத்துக்களை எல்லாம் இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்ல இருக்கிறார்கள். அவைகளுக்குப் பிறகு தான் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுப்பது என்பதைப்பற்றி முடிவு செய்யும்.

திரு. எம். சுரேந்திரன் : அடுத்த சட்டசபைக் கூட்டத்தில் ஒரு நாள் ஒதுக்குவதாகக் கூறினார்கள். அப்படி ஒதுக்குகிறபோது, முழுவதையும் அரசாங்கம் ஆராய்ந்து அரசாங்கக் கருத்தை தனியாகத் தயாரித்து இந்தச் சபையில் வைக்கப்படுமா அல்லது ஒட்டு மொத்தமாக விவாதிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அரசாங்கத்திற்கும் சில கருத்துக்கள் இதிலே உண்டு. அரசாங்கத்தின் கருத்துக்களை மாத்திரம் வலியுறுத்தாமல் இங்குள்ள அனைத்துக் கட்சிகள் தலைவர்களுடையவும், உறுப்பினர்களுடையவும் கருத்துக்களை ஏற்றுக் கொண்டு ஜனநாயக மரபில் இந்த அரசாங்கம் வழக்கம்போல் செயல்படும்.

*Transfer of Capital of Tamil Nadu to Tiruchirappalli.*

* 549 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have received any request during the end of June, 1970 from any person or body to transfer the Capital of Tamil Nadu to Tiruchirappalli.



1971 ஜூலை 30]

(*b*) if so, the name of the person or body from whom such a request has been received; and

(*c*) the action taken thereon?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) & (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

Dr. H. V. HANDE : While it can be considered as reasonable that there is no place for this question, may I know whether there is any programme on the part of the Government to decentralise some of the offices and shift them to Tiruchi and Madurai, so that the congestion in Madras City can be reduced? What are the steps taken by this Government in this regard? If I remember aright, even the Chief Minister has given some suggestions during the last meeting. Therefore, may I know whether any such concrete proposals are there to decentralise some of the offices in some places like Tiruchi, Madurai and Coimbatore?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைநகரத்தை மாற்றுவதற்கு எந்த விதமான உத்தேசமும் கிடையாது. ஆனால் அலுவலகங்களைப் பகிர்ந்து வைப்பதைப் பற்றி நான் அவசரப்பட்டு எதையும் சொல்லி விட முடியாது. அது ஆராய்ந்து சொல்ல வேண்டிய விஷயம்.

திரு. கு. காமாட்சி : ஆந்திரமும் கேரளமும் தமிழகத்தோடு இணைந்திருந்த நேரத்தில் சென்னை தலைநகராக இருந்தது. இப்போது தமிழ்நாடு தனித்து இயங்குகிறது. ஆகவே தமிழ் நாட்டின் மையமாக இருக்கிற திருச்சியில் தமிழ்நாட்டின் தலைநகரம் இருக்குமேயானால் எல்லா உறுப்பினர்களும் மிக விரைவிலே வந்து சேருவதற்கும், அதற்கான செலவுகள் குறையவும் செய்யும் என்று கருதுகிறேன். ஆகவே அதை அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சென்னை மாநகரம் 25 லட்சம் மக்களைக் கொண்ட பெரிய நகரமாகும். இந்த நகரத்திற்கு சரித்திர முக்கியத்துவம் எல்லாம் இருக்கிறது. திருச்சியில் இருக்கிற எல்லாச் சாலைகளையும் ஒன்றாக இணைத்தாலும் சென்னையில் இருக்கிற மவுண்ட் ரோடு சாலைக்கு இணையாக அது இருக்காது என்பதை உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள். மேலும் சென்னையில் இருப்பதால் யாரும் வந்து போவதற்கு கஷ்டம் இருப்பதாகத் தெரியவில்லை. சென்னையில் இருக்கும்போதே எவ்வளவோ பேர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் திருச்சிக்குப் போய்விட்டால் என்னவாகுமோ என்ற பயம் என்னை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : மைசூரில் பங்களூரில் கட்டப்பட்டிருப்பது மாதிரி தலைமைச் செயலகம், புதிய சட்டசபை இவற்றையெல்லாம் ஒன்றாக ஒரேயிடத்தில் கட்டுவதற்கு ஏதாவது ஒரு திட்டம் தீட்டியிருக்கிறதா இந்த அரசு?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நாங்களாகக் கட்ட ஆரம்பித்தால் இங்கு எதிர்ப்பு வரும் என்று பயந்து கொண்டிருந்தோம். இப்போது அந்தத் தரப்பிலிருந்து அந்த ஆலோசனை வந்த பிறகு அது நிச்சயமாக கவனிக்கப்படும்.

[1971 ஜூலை 30

திரு. கே. டி. கே. தங்கமணி: அம்மாதிரி அரசுக்கு ஆலோசனை இருக்குமென்று சொன்னால் இப்போது கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் நிறைய காலியிடம் இருக்கிறது. அந்த இடத்தில் கட்டும் நோக்கம் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படிப் புதிதாகக் கட்டுவதாக இருந்தால் அதற்கு கவர்ன்மெண்ட் எஸ்டேட்டைத் தேர்ந்தெடுத்தால் மேலும் போக்குவரத்து நெருக்கடிகள் தவிர்க்க முடியாததாகத்தான் இருக்கும். ஆகவே இன்னும் கொஞ்சம் தொலைவில் கிண்டிப் பகுதியில் அதைக் கட்டலாமா என்று யோசிக்கிறோம். அதுவும் அம்மையார் அவர்கள் சொன்ன பிறகு அந்த யோசனையில் எங்களுக்குக் கொஞ்சம் அழுத்தம் பிறக்கிறது.

திரு. என். கணபதி: பொது மக்களின் நலனை உத்தேசித்து, வசதியை உத்தேசித்து உயர்நீதிமன்றத்தின் ஒரு பகுதியை மதுரைக்கு மாற்றுவதாக இந்த அரசு யோசித்துக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். பொது மக்களின் நலனை உத்தேசித்து, வசதியை உத்தேசித்து அம்மாதிரி ஓரளவிற்கு திருச்சி அல்லது மதுரைக்கு மாற்றும் உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நான் சொல்லாத ஒன்றை நான் சொன்னதாகச் சொல்லி கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். நான் உயர்நீதிமன்றத்தை மாற்றுவதற்கு உத்தேசம் இருப்பதாகச் சொல்லவில்லை. ஹாண்டே அவர்களின் கேள்விக்கு, அவசரப்பட்டு அலுவலகங்களைப் பகிர்ந்து ஆங்காங்கே வைப்பது பற்றி எந்த முடிவும் சொல்ல முடியாது, அது ஆராயப்பட வேண்டும் என்றுதான் சொன்னேன்.

பர்மா, இலங்கை அகதிகள்.

* 562 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

பர்மா, இலங்கை அகதிகள் நம் மாநிலத்தில் எத்தனை பேர் குடியமர்த்தப்பட்டுள்ளனர்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:

பர்மா அகதிகள்.—45,621 குடும்பங்களுக்குப் புதுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. 2,502 குடும்பங்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை அகதிகள்.—3,747 குடும்பங்களுக்குப் புதுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. 108 குடும்பங்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

திரு. சு. துரைசாமி: பர்மா, இலங்கை அகதிகளைப் பொறுத்த வரையில் நமது அரசு எந்தெந்தத் துறைகளில் அவர்களுக்கு உதவி செய்கிறார்கள்? இதற்கு மத்திய அரசாங்கத்திலிருந்து என்ன உதவி கிடைக்கிறது என்று அறிய விரும்புகிறேன். மேற்கொண்டும் பர்மா, இலங்கையிலிருந்து வரும் அகதிகள் எவ்வளவு பேர்கள் என்றும் அறிய விரும்புகிறேன்.



1971 ஜூலை 30]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: 1964-ஆம் ஆண்டிலிருந்து இதுவரையில் 1,19,304 பேர்கள் வந்திருக்கிறார்கள். இன்னும் ஏறத்தாழ $1\frac{1}{2}$ லட்சம் பேர்கள் வருவதாக அங்கிருந்து தகவல் வந்திருக்கிறது. இதற்கான முழுச் செலவையும் மத்திய அரசே ஏற்றுக்கொள்கிறது. இவர்கள் புனர்வாழ்விற்குப் பல திட்டங்கள் இருக்கின்றன.

* 563 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether a number of Burma evacuees have arrived in Madras City in June 1971; and

(b) if so, the details of the places where they have been provided accommodation?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) 502 சிறுவர்கள் உட்பட 1,493 அகதிகள் 1971, ஜூன் 9-ஆம் நாள் அன்று வந்தனர். அவர்களுள், 162 சிறுவர்கள் உட்பட 527 அகதிகள், திருச்சிராப்பள்ளி மாவட்டம், கொட்டப்பட்டில் உள்ள இடைத்தங்கல் முகாமிற்கு அனுப்பப்பட்டனர். 92 சிறுவர்கள் உட்பட 227 அகதிகள் கும்முடிபூண்டியிலுள்ள இடைத்தங்கல் முகாமிற்கு அனுப்பப்பட்டனர். 40 சிறுவர்கள் உட்பட 96 அகதிகள், கீழப்புலியூரிலுள்ள நிலக்குடியேற்ற திட்டத்தின்கீழ் புதுவாழ்வு வசதிகள் அளிக்கப்படுவதற்காக திருச்சிராப்பள்ளிக்கு அனுப்பப்பட்டனர். திருச்சிராப்பள்ளி மாவட்டம், மாத்தூரிலுள்ள ஆதரவற்ற மகளிருக்கான சிறப்பு இல்லத்தில் சேர்க்கப்படுவதற்காக ஒரு அகதி அனுப்பப்பட்டார். 27 சிறுவர்கள் உட்பட 55 அகதிகளும், 13 காபின் பயணிகளும் அவரவர் விருப்பப்படி அவர்களுடைய உறவினர்களுடன் சேர்ந்து கொள்வதற்காக அனுப்பப்பட்டனர். பிற மாநிலங்களுக்குச் செல்வதற்காக இருந்த எஞ்சிய அகதிகள் அவரவர்களுடைய மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அம்மையார் தொகுதியிலுள்ள பர்மா அகதிகளுக்கு புதிதாக வீடுகள் கட்டுவதற்கு ஏதாவது திட்டமிருக்கிறதா? அதற்கு இந்த அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: விரைவில் அதற்கான அடிக்கல் நாட்டுவிழா நடைபெறும்.

புதிய பிச்சைக்காரர் இல்லங்கள்.

* 564 வினா—திரு. மா. பா. சாரதி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் புதிய பிச்சைக்காரர் இல்லங்கள் (Beggar Homes) திறக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், வேலூரில் ஒரு பிச்சைக்காரர் இல்லம் திறக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) இல்லை. எனினும் வட ஆற்காடு மாவட்டத்தில் தொழு நோயால் பாதிக்கப்பட்டுள்ள பிச்சைக்காரர்களுக் கென்று ஒரு இல்லம் திறக்கும் திட்டம் அரசின் ஆலோசனையில் உள்ளது.

திரு. மா. பா. சாரதி : ஏற்கனவே இந்தப் பிச்சைக்காரர்கள் விடுதி வேலூரில் கட்டுவதற்காக அரசிடம் கோரப்பட்டுள்ளது. அப்படி இப்போது இல்லை யென்றாலும் நம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தியுள்ள பிச்சைக்காரர்கள் புனர்வாழ்வு திட்டத்தின் அடிப்படையிலாவது வேலூரில் பிச்சைக்காரர்கள் புனர்வாழ்வு திட்டத்தின் கீழ் ஒரு இல்லத்தை அமைக்க அரசாங்கம் முற்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பானூர், உளுந்தூர்பேட்டை, வரகூர் இம் மூன்று இடங்களில் கட்டுவதற் கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. அவைகளுக்கான நடவடிக்கை களில் ஈடுபட்டுள்ளன. வேலூரில் கட்டுவதற்கு உத்தேசம் இருக் கிறது. அதுபற்றிய செயற்குறிப்பு அனுப்பப்பட்டவுடன் கட்டப் படும்.

குப்பல் திரு. கே. எஸ். ராமகிருஷ்ணன் : மதுரையில் ஏற்கனவே பல லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்து ஒரு பெரிய பிச்சைக்கார விடுதிக்குக் கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. நகரசபையிலிருந்து போதுமான நிதி உதவி அதற்குச் செய்ய முடியாத நிலையில் அங்கு அதிகப்படியான பிச்சைக்காரர்களுக்கு இடம் தர முடியவில்லை. ஆகவே, அரசாங்கத்திலிருந்து போதிய அளவு பணம் அதற்காகக் கொடுத்து ஏற்கனவே உள்ள அந்த விடுதியை நல்ல முறையில் நடத்துவதற்கு ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மதுரையில் அப்படி ஒன்று இருப்பதாகத் தகவல் இல்லை. போலீஸ் இலாகா மூலம் பிடித்து, சென்னையில் மீனம்பாக்கத்திலும், காஞ்சீபுரத்திலும் பிச்சைக்காரர்கள் இல்லங்கள் நடத்தப்படுகின்றன. தனியார், தயா சதன் என்ற இல்லத்தை நடத்துகிறார்கள். ஆறு முனிசிபாலிட்டி களில், உதகை, செங்கல்பட்டு, விருதுநகர், திருச்சி, கோவை, நாகர் கோவில் ஆகிய இடங்களில் நடத்தி வருகிறார்கள். குறிப்பாக சிதம்பரத்தில் உள்ள இல்லத்திற்கு அரசாங்கம் நிதி உதவி செய்கிறது. வேறு செயற்குறிப்பு இப்போது இல்லை.

THIRU R. PONNAPPA NADAR : May I know from the Hon. Minister whether any survey of beggars has been taken in this regard?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அப்படி எடுக்கப்பட்டுத்தான் கிட்டத்தட்ட 60,000 பிச்சைக்காரர்கள் இருப்ப தாகக் கூறப்படுகிறது. அதில் ஏறத்தாழ 6,000, 8,000 வரையில் தொழுநோய் பிச்சைக்காரர்கள் இருப்பதாகக் கணக்கிடப் பட்டுள்ளது.

### *Dams*

* 565 Q.—THIRU T. GANAPATHY : Will the Hon. the Minister for Public Works be pleased to state the stage of construction of the dam across Kudamudayar river for supply of water in the tanks in Valliyur and Radhapuram areas?





மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத்திட்டத்திற்கான முதல்நிலை ஆய்வுப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

திரு. டி. கணபதி : இந்த குடமுடையாற்று அணைப் பகுதியின் பரப்பளவு எவ்வளவு? தனிப்பட்ட நபர்கள் அரசு நிலத்தில் எவ்வளவு பரப்பைக் கைப்பற்றியுள்ளார்கள்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திட்டத்தின் மதிப்பீடு சுமார் 89 லட்சம் ரூபாயாகும். 8,053 ஏக்கர்களில் பாசன வசதி உறுதிப்படுத்தத் திட்டமிருக்கிறது. அது பரிசீலனையில் இருக் கிறது. பரிசீலனை முடிந்த பிறகுதான் இறுதியான முடிவு எடுக்கப் படும்.

திரு. டி. கணபதி : தனிப்பட்ட நபர்களின் நிலம் பாதிக்கப்படுவ தால் இந்தத் திட்டம் காலங்கடத்தப்படுகிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனிப்பட்டவர்கள் நிலம் பாதிக்கப்படுகிறதா என்ற விவரங்கள் இல்லை. அப்படிப் பாதிக்கப்பட்டிருந்தாலும் பொது நன்மைக்காக இருந்தால் நில ஆர்ஜித நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

* 566 Q.—THIRU T. GANAPATHY : Will the Hon. the Minister for Public Works be pleased to state the stage of the construction of diversion dam at Alathuraiyar for the diversion of water to the Hanuman River in Nanguneri Taluk?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆலத்துறையாற்றின் குறுக்கே ஒரு திருப்பு அணை கட்டும் வேலை இன்னும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆலத்துறையாற்றில் கிடைக்கும் நீரின் அளவு களைக் கணித்த பிறகுதான் இத் திட்டம் வகுக்கப்படும்.

திரு. டி. கணபதி : தலைவரவர்களே, குமரி மாவட்டத்தில் உள்ள படியாறு, அறுத்தலையாறு ஒரே இடத்தில் இருப்பதால் குமரி மாவட்டத்தில் மழை காலத்திலும், மாரி காலத்திலும் அதில் வருகிற ஏராளமான தண்ணீர் வீணாகிக் கடலில் கலந்து விடுவதால், அந்தத் தண்ணீர் வரண்ட பிரதேசமான இராதாபுரம் தாலூகாவுக்கு திருப்பு அணை கட்டி திருப்பி விடப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, திருப்பு அணை கட்டுவதற்கு ரூ. 14 லட்சம் அளவில் திட்டம் போடப் பட்டது. இத் திட்டத்திற்கு நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்புதல் தந்து இருக்கிறார். ஆனால், குமரி மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்புதல் தரவில்லை. அரசாங்கம் இரண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் கூட்டாகச் சென்று அந்த இடத்தைப் பார்வை இட்டு ஒரு அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று கேட்டு இருக் கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இரண்டு பேரும் கூட்டாகச் சென்று அந்த இடத்தைப் பார்வையிட்டு இருக்கிறார்கள். பொதுப் பணித்துறை பொறியாளர் தண்ணீரின் அளவைக் கணக்கிட்டு பிறகு அதைப்பற்றி முடிவு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[1971 ஜூலை 30

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஆலையாற்றிலிருந்து எவ்வளவு தண்ணீர் கிடைக்கும் என்று கன்னியாகுமரி ஜில்லா கலெக்டரிடமிருந்து அரசாங்கத்திற்கு ஏதாவது எழுத்து மூலம் அறிக்கை வந்து இருக்கிறதா? அப்படி அறிக்கை வந்திருந்தால் அதன் விவரம் என்ன என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : விவரம் என்னிடத்தில் இல்லை. இரண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கூட்டாகச் சேர்ந்து அந்த இடத்தைப் பார்வையிட்டு அறிக்கை சமர்பிக்க வேண்டுமென்று கேட்டு இருக்கிறோம். இரண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களும் பார்வையிட்டு, பிறகு பொறியாளரின் ஆலோசனையின் பேரில் தண்ணீர் அளவைக் கணக்கிட்டு, பிறகு, தக்க முடிவு எடுக்கப்படும்.

MR. DEPUTY SPEAKER : Question hour is extended with the leave of the House.

### *Delawayicheruvu Dam in Hosur Taluk*

*567 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether final orders for the construction of " Dalawayi-cheruvu Dam in Hosur Taluk (Sulagiri Block) have been issued; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இத் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது. இறுதி உத்திரவு இன்னும் பிறப்பிக்கப் படவில்லை.

(இ) இத் திட்டத்திற்கு ரூபாய் 4.65 லட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. இத் திட்டத்தை நிறைவேற்றினால் 197.06 ஏக்கர் புஞ்செய் நிலங்களை நன்செய் சாகுபடிக்கு மாற்றலாம். இதனால் எதிர்பார்க்கப்படும் கூடுதல் உணவு உற்பத்தி 143.24 டன்கள் ஆகும். ஒரு டன் கூடுதல் உணவு உற்பத்தி செய்ய ரூபாய் 3,246 ஆகிறது. இந்தச் செலவானது தருமபுரி மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள வரம்புத் தொகையான ரூபாய் 3,500-க்குட்பட்டுள்ளது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sulagiri block is backward and neglected for centuries. The Hon. Minister for Public Works was pleased to say that he would appoint even engineers to repair all the tanks. Therefore may I request the Hon. Minister to bestow special attention to this and issue orders at an early date?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திட்டம் தலைமைப் பொறியாளரால் சிபார்சு செய்யப்பட்டு, நிதித்துறையின் பரிசிலனையில் இருக்கிறது. நிதித்துறையின் பரிசிலனை முடிந்த பிறகு உத்தரவு பிறப்பிக்கப்படும்.



1971 ஜூலை 30]

### புத்தாம்பூர் குளம்

* 568 வினா— திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புத்தாம்பூர் குளத்தைப் புதுப்பிக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்க உத்திரவிடப் படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இது அரசு ஆய்வில் உள்ளதனால் எப்பொழுது உத்திர விடப்படும் என்று திட்டவட்டமாகச் சொல்வதற்கில்லை.

### சாத்தனூர் அணையிலிருந்து கால்வாய் வெட்டுதல்

* 569 வினா—திரு. ந. நாச்சியப்பன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தனூர் அணைக்கட்டிலிருந்து பெண்ணையாற்றுக்குத் தென்புறம் வாய்க்கால் வெட்டி பாசன வசதி செய்வதற்குத் திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) சாத்தனூர் அணையின் (pick up anicut) வலது புறக்கால்வாய்த் திட்டத்தில் வட ஆற்காடு மாவட்டத்தில் செங்கம் தாலூகாவிலும், தென் ஆற்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி தாலூகாவிலும் சுமார் 10,000 ஏக்கரா நிலங்கள் சாகுபடியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டத்தின் மதிப்பு சுமார் ரூ. 90.00 லட்சம்.

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவரவர்களே, சாத்தனூர் டாமை வெளிநாட்டினரைக் கவரக் கூடியவகையில் மேலும் அழகு படுத்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தக் கேள்வி மாண்புமிகு பிற்பட்ட நலத்துறை அமைச்சருக்குப் போடலாம்.

திரு. ந. நாச்சியப்பன் : தலைவரவர்களே, இந்த வாய்க்கால் திட்டத்தை அந்தப் பகுதியில் இருக்கும் விவசாயிகள் நீண்ட நாட்களாக அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த அமைச்சர் ஆணையிடுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொல்லியது போல், பரிசிலனையில் உள்ளது. பரிசீலனை முடிந்த பிறகு முடிவு எடுக்கப்படும்.

[1971 ஜூலை 30

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவரவர்களே, சாத்தனூர் அணைத் தண்ணீரை, நந்தன் கால்வாய் முடிந்தவுடன் அதில் கொண்டு வந்து சேர்ப்பதற்கான ஆலோசனை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. தனிக்கேள்வி போடவும்.

பாலாற்றுப்படுகையிலுள்ள கிணறுகள்.

* 570 வினு—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

பாலாற்றுப் படுகையில் கிணறுகளில் மின்விசை அமைத்துத் தண்ணீர் இறைக்கத் தடை விதிக்கும் சட்டத்தினை ரத்து செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, பாலாற்றுப் படுகையிலே மின்சார இயந்திரத்தை அமைத்துத் தண்ணீர் எடுக்கக் கூடாது என்று விதி முறை வகுக்கப்பட்டிருக்கிறது. இதனுல் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிருர்கள். சில நேரங்களில் பாலாற்று படுகை 15 மைலுக்கு இடையே கூட.........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியாகப் போடுங்கள்.

திரு. கே. எ. வகாப்: கேள்வி தான். மின்சார இயந்திரத்தை பாலாற்றுப் படுகையில் போடுவதற்கு அனுமதி அளிப்பது இல்லை. இதற்குக் காரணம் என்ன என்று ஆராயும்போது, அந்த ஆற்றில் தண்ணீர் வருவது இல்லை என்பது தான். ஆகவே, பாலாற்றில் தண்ணீர் வரவழைப்பதற்காக, இந்தக் காவிரிப் பிரச்னையோடு, இந்தப் பாலாற்றுப் பிரச்னையையும் மைசூர் அரசோடு கலந்து பேசி தீர்ப்பதற்கு மாநில அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஒரு நேரத்தில் ஒரு கேள்வி போடலாம். இரண்டு மூன்று கேள்விகள் போட்டால் பதில் சொல்ல இயலாது. இந்தப் பாலாற்றுப் படுகையிலே மின்சார இயந்திரத்தைப் பொருத்தி தண்ணீர் எடுக்கக் கூடாது என்பது விதி முறையாகும். இன்டிஸ்கிரிமினேட்டாக கிணறு வெட்டுவதால், கிணறு ஒன்றுக்கும் மற்றொன்றுக்கும் இடையில் இவ்வளவு இடைவெளி இருக்கவேண்டுமென்று விதிமுறைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த விதிமுறைகள் விவசாயிகள் நலன் கருதித்தான் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்தப் பாலாற்றுப் பிரச்னைக்கும், காவிரி நீர் பிரச்னைக்கும் தொடர்பு படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: The Hon Minister's reply is very exhaustive. I am not allowing any more supplementaries. பதில் விளக்கமாகச் சொல்லியிருக்கிருர்கள்.



1971 ஜூலை 30]

(The hon. Member Thiru M. A. Latheef rose.)

MR. DEPUTY SPEAKER: Resum your seat.

(The hon. Member Thiru M. A. Latheef kept on standing).

MR. DEPUTY SPEAKER: It is not in order for an hon. Member to stand when the Chair had asked the hon. Member to resume his seat

(The hon. Member Thiru M. A. Latheef then resumed his seat.

*Houses in Todhunternagar*

* 571 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the total number of houses in a Todhunternagar behind the Teashers' College in Saidapet; and

(b) whether there is any proposal to study the conditions and arrange for the provision of the necessary civio amenities in the colony?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) டாடண்டர் நகரில் 396 வீடுகள் உள்ளன.

(இ) இல்லை, ஐயா.

DR. H. V. HANDE: May I know whether it is a fact that, some representations were made to Government requesting the Government to appoint a Committee to go into the insanitary condition of the houses. Even if according to the Hon. Minister, no representation has been received, may I know whether Government would study the condition of the houses? Most of the houses are not in proper condition. Most of the occupants there are employees in Secretariat. May I know whether Government have any proposal to increase the number of houses since there is a lot of space there?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: I am not aware of any representation from the occupants of Todhunternagar. With regard to amenities, individual tap connections have been provided for brackish water. Drinking water supply is also being maintained. Necessary maintenance is being done. There is no propsal to study the condition.

(Mr. Speaker in the Chair.)

கோவை சிவானந்தம் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம்.

* 572 வினு—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) கோவையில் உள்ள சிவானந்தம் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தில் தவறு நடந்துள்ளதாகவும் அதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டு பங்குதார்களிடமிருந்து 1967-ல் விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா?

[1971 ஜூலை 30

(இ) ஆம், எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) இதைப்பற்றி விசாரித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கூட்டுறவுப் பிரிவிற்கு அரசு ஆணை பிறப்பித்தது. சங்கத்தைப் பற்றிய குற்றச்சாட்டுகள் மிகப் பெரியன என்றும், அவ்வமயமிருந்த சங்கக்குழு சரியாக நிர்வாகத்தைக் கவனிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். அதனால் சங்கத்தின் குழு கலைக்கப்பட்டு சங்க அலுவல்களைக் கவனிக்க ஒரு தனி அதிகாரி 1970-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் இரண்டாம் நாளிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளார். சங்கத்தின் ஊழல்களை அகற்றி அதைச் சரிவர இயங்கவைக்கும்படி அந்த அதிகாரிக்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, இதிலே காணப் பட்ட குறைபாடுகளை நீக்குவதற்கு எவ்வளவு காலமாகும். அதிலே பங்கு போட்ட வர்கள். வீடு கட்டித் தரவில்லை என்று சொல்கிறார்கள். அதைத் தவிர்க்க அரசாங்கமே ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த சிவானந்தம் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தில் இருக்கிற குறைபாடுகளைப் பற்றியும், அதிலே சில கையாடல்கள் நடந்து இருப்பதாகவும் குறைபாடுகள் வந்து இருக்கின்றன. அதைப் போலவே 3-வது கட்டத்திலே நிலம் வாங்குவதிலே சில சங்கடங்கள் ஏற்பட்டு விட்டதாகவும், அந்த நிலப் பரிவர்த்தனை சரியாக நடைபெற வில்லை என்றும் குற்றச் சாட்டுகள் வந்து இருக்கின்றன. அவற்றைப் பரிசீலித்து, தற்போது இந்த விசாரணை அரசாங்க குற்றத் துணை உதவி வழக்கறிஞர் அவர்களின் கருத்திறிய அனுப்பப்பட்டுள்ளது. அவர் முடிவு சொல்லிய பிறகு, அரசு நடவடிக்கை எடுக்க முடி செய்துள்ளது.

விடுதிகளுக்கு வெளியே தங்கியுள்ள பின்தங்கிய வகுப்பு மாணவர்கள்

* 573 வினா.—திரு. என். மருதாசலம்: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்லூரி ஹாஸ்டலில் இடமின்மையால் வெளியில் அதிக வாடகை கொடுத்துத் தங்கிப் படிக்கும் பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு ஹாஸ்டலில் தங்கி படிக்கிறவர்களுக்கு வழங்கப்படுவது போல் ஸ்காலர்ஷிப் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இல்லை.

*Gift of elephant tusk to Sri Sundara Mahalingam Temple*

* 574 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether the State has gifted any Elephant Tusk to the Sri Sundara Mahalingam Temple in Ramanathapuram district; and

(b) if so, the details thereof?

1971 ஜூலை 30]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) ஆம்.

(இ) இராமநாதபுரம் மாவட்டத்தில், வத்திராயிருப்புக்கு அருகேயுள்ள சதுரகிரி மலையில் உள்ள ஸ்ரீ மஹாலிங்கஸ்வாமி கோவிலுக்கு, இடது தந்தம் மட்டும் உள்ள யானை ஒன்று தவறாமல் வந்து கொண்டிருந்ததாகவும், பின்பு அந்த யானை இறந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. அந்தப் பகுதியிலுள்ளவர்கள், இறந்து போன அந்த யானையின் நடத்தை தனித்தன்மை வாய்ந்ததாகக் கருதி, அதன் தந்தத்தைக் கோவிலில் வைத்துப் பாதுகாத்து வழிபட விரும்பினார்கள். பொது மக்களிடமிருந்து வந்த மனுக்களை அரசு பரிசீலித்து, இறந்துபோன அந்த யானையின் தந்தத்தைக் கோவிலில் வைப்பதற்கு இனமாகக் கொடுக்க 13—5—1971ல் அரசு ஆணையிட்டுள்ளது.

*Nationalisation of Bus routes*

* 575 Q.—THIRU N. K. PALANISAMI:
THIRU N. KITTAPPA:
THIRU A. M. RAJA:

Will the Hon. the Minister for Transport be pleased to state the steps taken by the Government to further nationalise some more bus routes in the State?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 31—3—1971 வரை 302 பேருந்து வழித்தடங்களை அரசு எடுத்துக் கொண்டுள்ளது. 1971–1972-ல் 184 வழித்தடங்களையும், 1972–73-ல் 34 வழித்தடங்களையும் அரசு மேற்கொள்ளும்.

அதுவன்றியும் 50-க்கு மேல் உள்ள வழித்தடங்களை எடுத்துக் கொள்வதன் மூலம் 550 பேருந்துகள் தேச உடமையாக்கப்படுகிறது.

திரு. ஏ. எம். இராஜா: அமைச்சர் அவர்கள் சொல்லும்போது 500-க்கு மேற்பட்ட பஸ்கள் நாட்டுடைமை ஆக்கப்படும் என்றார்கள். இன்றைய தினம் அந்த பஸ் கம்பெனிகளில் பஸ்களை சரிவரப் பழுது பார்க்காமல் இருக்கிறார்கள். ஆகவே, அந்த பஸ்களுக்கு நஷ்டஈடு கொடுக்கிறபோது குறைவாகவே கொடுக்க அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நாட்டுடைமை ஆக்கப்பட்ட பேருந்துகள் பழுது பார்க்கப்படு கின்றனவா இல்லையா என்கிற விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் அவைகளுக்குரிய கட்டணத்தைத் தருவது என்று தீர்மானித்திருக் கிறோம். பாராளுமன்றத்தில் அடிப்படை உரிமைகள் பற்றிய சட்ட திருத்தம் வர இருக்கிற காரணத்தினால் அதுபற்றி அறிந்த பிறகே அரசு முடிவு எடுக்கும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஐம்பது மைல்களுக்கு மேல் உள்ள வழித்தடங்களை எல்லாம் நாட்டுடைமை ஆக்கப்படுகிற சட்டம் இந்தச் சட்டத் தொடரிலே வராவிட்டாலும் அடுத்த தொடருக்குள்ளாவது வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினருக்கு உள்ள ஆர்வத்தைப்போலத்தான் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே கொண்டுவர வேண்டுமென்று இருந்தோம். நாடாளு

[1971 ஜூலை 30

மன்றத்தில் நஷ்ட ஈடு என்பதற்குப் பதிலாக "தொகை" என்று திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். முடிவு தெரிந்த பிறகு வேண்டுமென்றால் அவசரச் சட்டம் கூட வரலாம்.

திரு. நா. வீராசாமி : இப்போது டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் நிறுவுவதற்கான சூழ்நிலை இருப்பதால் 50 மைல்களுக்கு மேற்பட்ட வழித்தடங்களை அரசுடைமையாக்குகிற திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஐம்பது மைல்கள் அல்ல, ஐம்பது வழித்தடங்களுக்கு மேலுள்ளவற்றை நாட்டுடைமையாக்க இருக்கிறோம். ஐம்பது மைல்களுக்கு மேல் உள்ளவற்றை நாட்டுடைமையாக்குவதுபற்றிப் பின்னர் யோசிக்கலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : 75 மைல்களுக்கு மேலுள்ள வழித்தடங்களை எல்லாம் நாட்டுடைமையாக்கும் திட்டம் இருந்ததே, அது இதனால் கைவிடப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நாட்டுடைமையாக்கும் திட்டத்தை இந்த அரசுக்கு கைவிடும் வழக்கம் இல்லை.

திரு. பெ. மலைச்சாமி : 75 மைல்களுக்கு மேலுள்ள வழித்தடங்களை நாட்டுடைமையாக்குகிறபோது அந்த நிர்வாகத்தினர் உயர்நீதி மன்றத்திற்குச் சென்று ஸ்டே வாங்கிவிடுகிறார்கள். மேலும் 72, 71 என்று மைல்களைக் குறைத்துக் கொண்டு அவர்களும் பஸ் ஓட்டுகிற காரணத்தினால் அரசாங்கப் போக்குவரத்துத் துறைக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே இந்த மாநிலத்தில் ஓடுகிற அத்தனை பஸ்களையும் அரசு நாட்டுடைமையாக்க முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல நீதி மன்றத்திற்குச் சென்று தடை வாங்கி பேருந்து விடுகிறார்கள். வழித்தடத்தின் நீளத்தைக் குறைத்துக் கொள்ளவும் இப்போது சட்டத்தில் வாய்ப்பிருக்கிறது. அதை அறிந்துதான் அண்ணா அவர்கள் நீதி தேவன் மயக்கம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

THIRU R. PONNAPPA NADAR : May I know from the Hon. Minister whether the Bill that has been circulated to us will be taken up for consideration in this Session or will it be taken only after the amendment of the Fundamental Rights Chapter has been done in Parliament?

THE HON. THIRU S. RAMACHANDRAN : The later part of the suggestion will be accepted by the Government.

MR. SPEAKER : Questions and Answers are over.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



1971 ஜூலை 30]

## (2) ஒற்றிவைப்புத் தீர்மானம்

## எண்ணூரிலுள்ள மீன் உறைய வைக்கும் தொழிற்சாலை (ஃப்ரீஸிங் ப்ளாண்ட்) மூட இருப்பதும் அதன் விளைவுகள் குறித்தும்.

MR. SPEAKER : Uuder rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules, Thiru R. Ponnappa Nadar has given notice of an adjournment motion to discuss the following matter of urgent public importance—

"The proposed closure of the important Ennore Freezing Plant on 31st July 1971, throwing out 200 workers and loss of foreign exchange."

Thiru K. T. K. Thangamani and Thiru K. A. Wahab also have given notice of identical motions.

THIRU R. PONNAPPA NADAR : Mr. Speaker, Sir, it is an alarming news to find that the Freezing Plant which is now functioning at Ennore is to be closed with effect from 31st July 1971. This is an important Plant which has been functioning very well and if this were to be closed down, many workers would be dislodged from service. Moreover, this Freezing Plant was getting very good revenue and we were getting very good foreign exchange. They were also doing very useful business so far as the economy of the country is concerned. This is a fit case in which the closure will have to be prevented by the Government. I am sure that the Government will take prompt and effective steps and that the Chief Minister would give a categorical assurance that the closure would be put an end to.

With these remarks I commend this Motion for the acceptance of this House.

திரு. கே. டி. கே. தங்கமணி: நாளைக்கு இந்த நிறுவனம் மூடப்படுவதன் காரணமாக பாதிக்கப்பட இருக்கிற தொழிலாளர்கள் கையெழுத்திட்ட மகஜர் ஒன்றை அனுப்பியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 109 நிரந்தரத் தொழிலாளர்களும், நூற்றுக்கு அதிகமாக இதனால் பயன் பெற்றுவந்த தொழிலாளர்களும் பாதிக்கப்பட இருக்கிறார்கள் என்ற குறிப்பைக் கொடுத்திருக்கிறார்கள்.

நான் அறிந்த மட்டில் இந்த ப்ரீசிங் ப்ளாண்ட்டில் பக்குவப்படுத்தப்படுகிற இறால் மீன்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் வரை நமக்கு அந்நியச் செலாவணியைத் தேடித் தந்திருக்கிறது. இதை எந்த முறையிலாவது தொடர்ந்து நடத்த ஏற்பாடு செய்தால் தொழிலாளர்களுக்கு மிக உதவியாக இருக்கும் என்பது மட்டுமல்ல; நம் நாட்டுக்குப் பாரின் எக்ஸ்சேஞ்ஜைத் தேடித் தரக்கூடியதாகவும் இருக்கும். ஆகவே, அரசு தலையிட்டு இது தொடர்ந்து நடப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்கிற அவசியத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மூடப்பட இருக்கும் இந்த ப்ரீசிங் ப்ளாண்ட் மூலமாக சென்ற ஆண்டு ஒரு கோடிக்கு மேல் பாரின் எக்ஸ்ஜேஜ் சம்பாதித்துக்

கொடுத்திருக்கிறது. இது மூடப்படுவதனால் 200-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள். நமக்கு அந்நியச் செலாவணி வருமானமும் இழப்பு ஏற்படும். அதோடு ஒரு ஆண்டுக்கு நமக்கு வாடகை ஒரு லட்சத்து இருபதாயிரம் ரூபாய் வரை வந்திருக்கிறது. இதனால் பாதிக்கப்பட இருக்கிற தொழிலாளர்கள் கொடுத்திருக்கிற மகஜரைப் பார்த்தால் மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது. ஏற்றுமதித் துறையில் மிகச் சிறப்பாகப் பணியாற்றுவதாக இந்த நிறுவனத்தார்களுக்கு மத்திய அரசும் பரிசு அளித்திருக்கிறது. இப்படிப்பட்ட தொழிற்சாலை ஒன்று மூடப்படுவதற்கு தொழில் வளத்தில் அக்கறை கொண்டுள்ள அரசு இடமளிக்கக் கூடாது. அவர்கள் முறையாக வாடகை ஒருவேளை தரவில்லை என்றாலும் சட்டப்படி நோட்டீஸ் அளித்து வாடகை வசூல் செய்ய நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். இதுபோல தொழிற்சாலை மூடப் படுவதற்கும், தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதற்கும் இடமளிக்கக கூடாது. இதற்கு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தக்க விளக்கம் தருவார்கள் என்று நம்புகிறேன்.

* மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணூரில் உள்ள மீன் உறைத் தொழிற்சாலை மூடப்படுவது குறித்து ஏற்படுகிற தொல்லைகளை மனதில் வைத்து அந்தக் குத்தகை எடுத்த நிறுவனத்தார் பட்டிருக்க வேண்டிய கவலையை மாண்புமிகு உறுப்பினர்கள் பட்டிருப்பதன் மூலம் தொழிலாளர்களின் எதிர்கால வாழ்வை நம்முடைய கருத்து மையமாக வைத்துக் கொண்டிருக் கிறது என்று நான் கருதுகிறேன். அந்த நிர்வாகத்தில் மாண்புமிகு உறுப்பினர் கொண்டிருக்கிற கவலையை நிர்வாகத்தினர் ஏன் படவில்லை என்பது புரியவில்லை. அதையும் மாண்புமிகு உறுப்பினர் அறிந்து பார்க்க வேண்டியது கடமை என்று கருதுகிறேன்.

எண்ணூரில் உள்ள மீன் உறைத் தொழிற்சாலை (ஃப்ரீஸிங் ப்ளாண்ட்) 10—6—1968 முதற்கொண்டு செயல்படத் தொடங்கி இண்டோ-மரைன் ஏஜென்ஸீஸ் என்னும் நிறுவனத்திற்கு ஐந்தாண்டு கால அளவிற்கு ரூ. 1,20,000 தொகைக்குள் குத்தகைக்கு விடப் பட்டது. குத்தகைக்காரர்கள் எழுதிக் கொடுத்த ஒப்பந்தத்தின்படி குத்தகைத் தொகை காலாண்டுத் தவணைகளில் செலுத்தப்பட வேண்டும். 10—5—1971 அன்றைய நிலவரப்படி குத்தகைக்காரர் கீழ்க்காணும் குத்தகைத் தொகையைச் செலுத்த வேண்டும்.

| | ரூ. | பை. |
|---|---|---|
| (1) குத்தகைத் தொகை | | |
| (அ) 10—12—1970 முதல் 9—3—1971 வரையுள்ள காலாண்டுக்கான தொகை 25—12—1970-ல் செலுத்தப்பட வேண்டியது ... ... ... ... | 30,000 | 00 |
| (ஆ) 10—3—1971 முதல் 9—6—1971 வரையுள்ள காலாண்டுக்கான தொகை 25—3—1971-ல் செலுத்தப்பட வேண்டியது ... ... ... ... | 30,000 | 00 |





| | ரூ. | |
|---|---|---|
| (2) வட்டித் தொகை | | |
| (அ) 9—9—1970 அன்றுடன் முடிவடைந்த காலாண்டு வரை நிலுவையிலிருந்த தொகை ... ... ... ... | 333 | 00 |
| (ஆ) 10—9—1970 முதல் 9—12—1970 வரையுள்ள காலாண்டுக்கான குத்தகைத் தொகையாகிய ரூ. 30,000 தாமதமாகச் செலுத்தப்பட்டதால் அதற்குரிய வட்டி. | 1,368 | 50 |
| மொத்தம் ... | 61,701 | 50 |

ஒப்பந்தத்தின்படி, 10—12—1970 முதல் 9—3—1971 வரையுள்ள காலாண்டுக்கான குத்தகைத் தொகை 25—12—1970-க்குள் செலுத்தப் பட்டிருக்க வேண்டும். 10—3—1971 முதல் 9—6—1971 வரையுள்ள காலாண்டுக்கான குத்தகைத் தொகை 25—3—1971-க்குள் செலுத்தப் பட்டிருக்க வேண்டும். குத்தகைக்காரர் குத்தகைத் தொகையை உரிய நாளன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தத் தவறினால், முதல் இரண்டு திங்களுக்கு அவ்வாறு செலுத்தத் தவறிய தொகைக்கு ஆண்டு ஒன்றுக்கு 9 சதவீதம் தண்ட வட்டி விதிக்கப்படும். மேற் குறிப்பிட்ட கால அளவிற்குப் பின்னரும், குத்தகைக்காரர் குத்தகைத் தொகையையும் அதற்குரிய தண்ட வட்டியையும் செலுத்தத் தவறினால், அவருக்கு மூன்று திங்கள் கால அளவு முன் அறிவிப்புக் கொடுத்து விட்டு அவரது குத்தகையை ரத்து செய்யவும் அந்த ஒப்பந்தத்தை இறுதி செய்யவும் மூன்று திங்கள் கால அளவு முடிந்தவுடன் அத் தொழிற்சாலையைக் கைவசப்படுத்திக் கொள்ளவும் இயக்குநருக்கு அதிகாரம் உண்டு. குத்தகைகாரர் குத்தகைத் தொகையைச் செலுத்தத் தவறியதால் மீனளத் துறை இயக்குநர் மேற்சொன்ன நிலுவைகளை உடனடியாகச் செலுத்துமாறு அந்த நிறுவனத்திற்கு 10—5—1971 அன்று அறிவிப்பு அனுப்பினர். இந்த அறிவிப்பைப் பெற்றுக் கொண்ட பிறகு அந்த நிறுவனம் குத்தகைத் தொகையைச் செலுத்தத் தவறியதால், மீனளத் துறை இயக்குநர் அந்த நிறுவனத் திற்கு 29—5—1971 அன்று மற்றொரு அறிவிப்பை அனுப்பினர். குத்தகை ஏன் இறுதி செய்யப்படக் கூடாது என்பதற்கும் ஒப்பந்தத் தின் 3 (சி) பகுதியின் விதித்துறைகளின்படி அத் தொழிற்சாலையை அரசு ஏன் மீண்டும் எடுத்துக்கொள்ளக் கூடாது என்பதற்கும் அந்த அறிவிப்பு கிடைத்த எட்டு நாட்களுக்குள் காரணம் காட்டுமாறு அந்த நிறுவனத்தை இயக்குநர் மேற்படி அறிவிப்பில் கேட்டிருந்தார். குறிப்பிட்ட கால அளவுக்குள் குத்தகைத் தொகை நிலுவையையும் உரிய தண்ட வட்டியையும் அந்தக் குத்தகை நிறுவனம் செலுத்தத் தவறியதால், மீனளத்துறை இயக்குநர் ஒப்பந்தத்தில் 3 (சி) பகுதியில் விதித்துறைகளின்படி 8 —6—1971 முதல் குத்தகையை இறுதி செய்ததோடு, அத்தேதியிலிருந்து மூன்று திங்கள் கால அளவுக்குள் அத்தொழிற்சாலையைக் காலி செய்துவிடுமாறும் அந்த நிறுவனத்தைக் கேட்டார்.

மீன் உறைய வைக்கும் இத் தொழிற்சாலையில் இந்த நிறுவனம் ஒப்படைக்கப்படும் என்று குத்தகை நிறுவனம் தற்போது மீனளத் இத் தொழிற்சாலை 31—7—1971 அன்று மீனளத்துறையிடம் துறை இயக்குநருக்குத் தெரிவித்துள்ளது.

மீன் உறைய வைக்கும் இத்தொழிற்சாலையில் இந்த நிறுவனம் சுமார் 100 தொழிலாளர்களைத் தற்போது வேலைக்கு அமர்த்தியுள்ளதாக மீனளத் துறை இயக்குநர் தெரிவித்துள்ளார். இத் தொழிற்சாலையை மேற்கொண்ட பின்னர், ஒப்பந்தப் புள்ளிகளை வரவழைத்து மீண்டும் புதிதாகக் குத்தகைக்கு விட அரசு கருதியுள்ளது. புதிய நிர்வாகம் செயல்படத் தொடங்குகையில் அதிக அளவில் தொழிலாளர்கள் வேலை வாய்ப்புப் பெறுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது தொடர்பாக ஏற்படும் அந்நியச் செலாவணி இழப்பைப் பொறுத்த வரையில், சென்னை மாநகரிலும் அதைச் சுற்றிலும் மீன் உறைய வைக்கும், பதப்படுத்தும் ஏனைய ஐந்து தொழிற்சாலைகள் இருக்கின்றன. மூலப்பொருள்கள் தற்போது கிடைக்காமையாலும் உறைய வைக்கும் திறன் அதிக அளவில் இருப்பதினாலும், கிடைக்கும் மூலப்பொருள்கள் அனைத்தும் பயன்படுத்தப்படும். எனவே, அந்நியச் செலாவணியை ஈட்டுவதில் குறைவு ஏதும் இருக்காது. இவ்விளக்கத்தின் காரணமாக இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் அனுமதிக்கப்படத் தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு இத் தீர்மானத்திற்கான அவசியம் இல்லை என்று கருதுகிறேன். எனவே, அதற்கான அனுமதி மறுக்கப்படுகிறது.

## 3. அரசினர் தீர்மானம்

### விதி 41 (3)-ஐ தளர்த்தல்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகின்றேன்—

"சட்டப் பேரவையின் 244-வது விதியின் கீழ், 41-வது விதி மூன்றாவது உட்பிரிவின்படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டுவரக் கூடாது என்பதைத் தளர்த்த வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

## 4. கவன ஈர்ப்பு.

### (அ) குன்னூரில் குடிநீர் கிடைக்காமையும் அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்தும்.

திரு. சோ. கருணைநாதன்: பேரவைத் தலைவரவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் "நீலகிரி மாவட்டம் குன்னூர் நகரத்தில் தற்போது குடிநீர் கிடைக்காமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பதுபற்றியும், இது குறித்து அரசு எடுக்க வேண்டிய நட



வடிக்கைகள் பற்றியுமான" அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பேரவைத் தலைவரவர்களே, கூனூர் நீர் வழங்கு திட்டத்திற்கான, மேம்பாடுகள், ஆயுள் ஈட்டு நிதிக் கழகக் கடன் உதவித் திட்டத்தின்கீழ் ஆலோசிக்கப்பட்டு வருகின்றன. கூனூர் நகராட்சி நீர்வழங்கு திட்டத்திற்கு மேம்பாடுகள் செய்வதற்கான வரைவு செயற்குறிப்புகளைப் பொறுத்த வரையில் திட்டத்தை நிறுவும் பணிக்கான ரூ. 56.60 லட்சமும், பேணுதற்காக ஆண்டு தோறும் ரூ. 87,500-ம் செலவாகுமென மதிப்பிடப்படுகிறது. நீர்வழங்கு மேம்பாட்டுத் திட்டத்தை மேற்கொள்ள கூனூர் நகராட்சியின் நிதிநிலை மனநிறைவளிப்பதாக உள்ளதா என்பதை மதிப்பிடுவதற்காக, அந்த நகராட்சியின் நிதிநிலை குறித்து விவரங்களை அனுப்புமாறு கூனூர் நகராட்சி கேட்கப்பட்டுள்ளது. நகராட்சியின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், கூனூர் நகராட்சி மன்றத் தலைவர், இத் திட்டத்தை விரைவில் நிறைவேற்றுமாறு வேண்டி, தமிழ்நாடு நீர் வழங்கு வடிக்கால்வாரியத் தலைவருக்கு முறையீடு ஒன்றை அனுப்பினார். கூனூர் நகராட்சியில் தற்போதைய நிதிநிலை மிகச் சீர்கேடுற்று இருப்பதால், சுமார் ரூ. 9 லட்சம் செலவாகக்கூடிய இத் திட்டத்தின் முதல் நிலையை மட்டும் நிறைவேற்ற எடுத்துக் கொள்ளுவதெனத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க, தமிழ்நாடு நீர் வழங்கு—வடிகால் வாரியம் திட்டத்தை மாற்றியமைக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மாற்றியமைக்கப்பட்ட செயற்குறிப்புகள், வாரியத்தால் முதற்கண் ஆலோசிக்கப்பட்டு, பின்னர் அதன் பரிந்துரைகளுடன் அரசின் ஒப்புதலுக்காகப் பணிந்தனுப்பப்பட வேண்டும் என்பதை எடுத்துச் சொல்லி, இந்த விளக்கத்தின் காரணமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மனநிறைவு ஏற்படும் என்று கருதுகிறேன்.

### (ஆ) இராசபாளையம் திரு. பெ. சு. கந்தையா கொலை செய்யப்பட்டதும் அதன் விளைவுகளும்.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, சட்டப்பேரவையின் 41-வது விதியின் கீழ், "இராஜபாளையம் சட்டமன்றத் தொகுதியில் முற்போக்குக் கூட்டணியின் வெற்றிக்காக முழுமனத்தோடு பாடு பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த முன்னாள் நகர் மன்ற உறுப்பினர் பெ. சு. கந்தையா படுகொலை செய்யப்பட்டும், திராவிட முன்னேற்றக் கழக ஊழியர்கள் பால்ராஜ், அய்யனார், மற்றும் பலரும் பட்டப் பகலில் வெவ்வேறு இடங்களில் தாக்கப்பட்டும், இவற்றைத் தொடர்ந்து கட்சி பூசல்கள் காரணமாக பொது மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பற்ற நிலைமை உருவாகியுள்ளதை ஒட்டி அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய உடனடி நடவடிக்கை குறித்து" அவசரப்பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

1971 ஜூலை 30]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பேரவைத் தலைவரவர்களே, இராஜபாளையத்தைச் சேர்ந்த சுப்பையா நாடார் மகன் திரு. பி. எஸ். கந்தையா என்பவர் 9—4—1971 அன்று இரவு 8 மணி அளவில், இராஜபாளையத்தைச் சேர்ந்த அமிர்த நாடார் மகன் கோபால் என்பவரால் பிடறியில் குத்தப்பட்டார். குத்தப்பட்ட சுப்பையா நாடார் மகன் கந்தையா 12—4—1971 அன்று காலை 6–30 மணிக்கு மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையில் இறந்தார்.

இது குறித்து, இராஜபாளையம் வடக்குக் காவல் நிலையத்தில் இ.பி.கோ. 323-வது பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு பின்னால் இ.பி.கோ. 302-வது பிரிவாக மாற்றப்பட்டு புலனாய்வு செய்யப்பட்டது.

இறந்துபோன திரு. கந்தையா, நாடார் சமுதாயத்தில் முக்கிய மானவர் என்றும், இராஜபாளையத்தில் இவருக்குச் சொந்தமாக அரிசி ஆலை ஒன்றும் உள்ளது என்றும் தெரிகிறது. இச்சம்பவம் நடப்ப தற்கு சுமார் ஒரு மாதத்திற்கு முன்னால் ராஜபாளையத்தில், நாடார் தெருவில் இருக்கும் "நாடார் நந்தவனத்தில்" கந்தையாவை குத்திய கோபால் தேங்காய்களைத் திருடியபோது, "நாடார் நந்தவனத்தின்" காவல்காரர் ஞானபதி ஆய்யன் என்பவர் கோபாலை கையும் களவு மாகப் பிடித்துக் கொண்டார். இதன்மீது நடைபெற்ற பஞ்சா யத்தில், கோபாலுக்கு திருடிய குற்றத்திற்காக 100 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அபராதம் கட்ட இயலாத நிலையை கோபால் பஞ்சாயத்திடம் முறையிட்டதும் அபராதம் ஒரு ரூபாயாகக் குறைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

இதைத் தொடர்ந்து சின்னத்தம்பி என்பவருடைய கடையில் நடைபெற்ற ஒரு திருட்டு சம்பவத்தில் திருட்டுக் குற்றம் செய்த சுந்தர ராஜன் மீது போலீசில் புகார் கொடுக்குமாறு, சின்னத்தம்பியை, கந்தையா அறிவுறுத்தினார். இதையறிந்த கோபால் கந்தையா வினுடைய அரிசி ஆலைக்குச் சென்று, "ஏன் இவ்வாறு போலீஸில் புகார் கொடுக்கும்படி பிறரை தூண்டிவிடுகின்றீர்கள்? உங்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது?" என்று கந்தையாவிடம் கேட்டிருக் கிறார். கந்தையா, கோபாலை அரிசி ஆலையிலிருந்து வெளியே போகு மாறு கூறியதோடு, அடித்தும் அனுப்பினார். "கந்தையாவுக்கு எப்படியாவது பாடம் கற்பிக்கிறேன்" என்று கூறிவிட்டு கோபால் போய்விட்டார்.

மேற்படி சம்பவங்களிலிருந்து கந்தையா, கோபால் ஆகிய இருவருக்கும் இடையே இருந்த தனிப்பட்ட பகைமையின் காரண மாகத்தான் கந்தையா தாக்கப்பட்டார் என்பதும், இந்த நிகழ்ச்சிக்கும் அரசியலுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பது புலனாய்வில் தெரியவந்துள்ளன.

மேற்படி கந்தையா தேர்தல்களில் முற்போக்குக் கூட்டணிக்காக உழைக்கவில்லை என்றும் தெரிகிறது.

மேற்படி வழக்கு 1971 நவம்பர் 15, 16 நாட்களில் மதுரையிலுள்ள இராமனுதபுரம் செஷன்ஸ் நீதி மன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.



[திரு. க. சுப்பு] [1971 ஜூலை 30

மேலும் 12—6—71-ல் இராஜபாளையத்தில் பால் ராஜ் என்பவர் சந்திரன், மற்றும் நால்வராலும் தாக்கப்பட்ட சம்பவமும் 13—6—1971-ல் இராஜபாளையத்தில் இரு அரிஜன பிரிவினருக் கிடையே ஏற்பட்ட தகராறில் அய்யனார் என்பவர் தாக்கப்பட்ட சம்பவமும் சொந்தத் தகராறு காரணமாக நடந்தன என்றும், பி. எஸ். கந்தையா கொலை செய்யப்பட்டதற்கும் இந்நிகழ்ச்சி களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்த குறிப்பிட்ட இரண்டு நிகழ்ச்சிகள் குறித்த வழக்குகள் இராஜபாளையம் காவல் நிலையத்தில் கவனிக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மு.ப. 10-30

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கந்தையா நகரமன்ற உறுப்பினராகவும், நகர மன்றச் செயலாளராகவும் இருந்திருக்கிறார். அது மட்டுமல்ல, முற்போக்குக் கூட்டணிக்காகப் பாடுபட்டவர். இப்போது கொடுக்கப்பட்டிருக்கின்ற தகவல்கள் வேறு விதமாக இருக்கின்றன. இருந்தாலும் கழகத்திற்குள்ளே இருக்கிற பூசலும், கட்சிக்குள்ளே இருக்கிற பூசலும் தான் இதற்குக் காரணம் என்று அங்கே சொல்லப்படுகிறது. நான் குறிப்பிடுவது இதைக் கண்டு பிடிப்பதற்கு.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்று தெளிவாகச் சொல்லி விட்டார். கட்சித் தகராறு இதற்குக் காரணம் இல்லை என்று முதலமைச்சரவர்கள் சொல்லி விட்டார்கள். இதை மறுத்து பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்று கேள்வி எழுப்பப்படுகிறது. இந்தக் கேள்வி அதனால் மறுக்கப்படுகிறது.

(திரு. க. சுப்பு எழுந்து நின்றார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ப்ளீஸ் ரெஸ்யூம் யுவர் சீட்.

(திரு. க. சுப்பு தொடர்ந்து பேசுவதற்கு எழுந்து நின்றார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ப்ளீஸ் ரெஸ்யூம் யுவர் சீட். முதலில் நீங்கள் உட்காருங்கள்.

திரு. க. சுப்பு: நான் வாக் அவுட் செய்கிறேன். (திரு. சுப்பு வெளி நடப்புச் செய்தார்.)

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, தங்கள் தீர்ப்புக்குப் பிறகு நான் எதுவும் சொல்வதற்கில்லை. இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் கொலை செய்யப் பட்டிருக்கிறாரா என்றார்கள். அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம். ஆனால் கட்சிச் சண்டை காரணமாக அல்லது அரசியல் காரணமாகக் கொலை செய்யப்பட வில்லை என்று தான் குறிப்பிட்டேன். இது போன்ற பிரச்சினைகளில் உண்மையைக் காண வேண்டுமே அல்லாது அரசியல் கண்ணோட்டத் தோடு காண இந்த அரசு விரும்பவில்லை. அரசியல் காரணங்களை இந்தச் சம்பவத்தோடு இணைத்துப் பார்க்கக் கூடாது என்பதைத் தான் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இறந்தவர் கட்சிக்காரராக

1971 ஜூலை 30]

இருக்கலாம். அல்லது கட்சிக்கு மாறுபட்டிருக்கலாம். ஆனால் கட்சித் தகராறு இந்தச் சம்பவத்திற்குக் காரணமல்ல என்பதை நான் விளக்கிக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்பு அவர்கள் மிகப் பொறுப்பான அரசியல் கட்சியைச் சேர்ந்தவர் என்பது நமக்குத் தெரியும். அந்தக் கட்சியைச் சேர்ந்த பெரிய தலைவர்கள் இங்கே இருக்கிறார்கள். இந்த மாமன்றத்திற்கு என்று சில மரபுகள் இருக்கின்றன. அதைத் தான் அவருக்குச் சொன்னேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்ற காரணத்திற்காக, அல்லது வேறு அரசியல் காரணங்களுக்காக அவர்கள் கொலை செய்யப்படவில்லை என்று முதலமைச்சரவர்கள் தெளிவாகச் சொல்லி விட்டார். அவர் சொல்லியதற்குப் பிறகும் அவர் இதையே முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்று—கேள்வி கேட்பது விரும்பத் தக்கதல்ல. அவர் கேள்வி கேட்பது தவறு. அதனால் சொன்னேன். தலைவரின் தீர்ப்பு தவறாகக் கூட இருக்கலாம். பேரவைத் தலைவரின் முடிவுகள் தவறாக இருக்கலாம். ஆனால் அதைக் கேட்பதற்கு வேறு வழிகள் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சராக இருந்தாலும், உறுப்பினராக இருந்தாலும் தலைவருக்குக் கட்டுப்பட வேண்டியவர்கள். அந்த மரபையொட்டி கேள்வி மறுக்கப்பட்டது. இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி இந்த மன்றத்தில் நடைபெற்றது உண்மையிலே வருந்தத் தக்கது. இதை அந்தக் கட்சியின் தலைமை கவனிக்க வேண்டும் என்பதை நான் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாமன்றத்தின் நிகழ்ச்சிகள் 36 நாட்களாக மிகச் சிறப்பாக நடைபெற்று இன்று இப்படிப்பட்ட ஒரு காரியம் நடைபெற்று இருக்கிறது. அதுவும் பாராளுமன்ற முறையில் நம்பிக்கை கொண்டு பல இடங்களில் இயங்குகிற ஒரு கட்சியைச் சேர்ந்தவர், இப்படி மாண்புமிகு முதலமைச்சர் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகும் ஒன்றை வற்புறுத்தி அதன் மூலம் பெருமை தேடிக்கொள்ள நினைப்பது பொருத்தமானதல்ல என்பதை இந்த மாமன்றத்திற்கு மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தங்கமணி.

திரு. கே. டி. கே. தங்கமணி: 41-வது விதியின் கீழ் இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்பினால் ஒன்று அல்லது இரண்டு கேள்விகள் கேட்கலாம் என்று விதி முறை இருக்கிறது. அந்த விதிமுறையின்படிதான் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேள்வி கேட்டார்கள். அவருடைய கேள்வி கேட்பதற்கு இடம் இல்லாமல் தடை செய்யப்பட்டிருக்கலாம். அது தவறு இருந்தாலும் தங்களுடைய முடிவிற்கு நாங்களெல்லாம் கட்டுப்பட வேண்டியவர்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினரவர்களைத் தடுத்தேன் என்று தவறான எண்ணம் எழக் கூடாது. கேள்வி கேட்டதற்கு முதலமைச்சரவர்கள் பதிலைத் தெளிவாகத் தெரிவித்து விட்டார். அதைப்பற்றி மீண்டும் அவர் கேட்டதனாலே அப்படிக் கேள்வி கேட்பதற்கு உரிமையில்லை என்று நான் மறுத்தேன். இதைத்



1971 ஜூலை 30]

தடுத்ததாகவோ அல்லது உரிமையை மறுத்ததாகவோ கொள்ளக் கூடாது. இப்படி மீண்டும், மீண்டும் அதைக் கிளப்ப முயற்சி செய்வதன்மூலம் தாங்கள்தான் உரிமைக்காகப் போராடுகிறோம் என்கிற மாதிரியான ஒரு நிலைமையை ஏற்படுத்த முயற்சி செய்வதை இங்கே அனுமதிக்க முடியாது என்பதை மிகவும் ஆழ்ந்த வருத்தத் தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

## (இ) திருமணி தொழுநோய் நிறுவன ஊழியர்கள் நடத்தும் போராட்டம் குறித்து.

THIRU K. T. K. THANGAMANI: Under Rule 41 of the Tamil Nadu Legislative Assembly Rules I call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance, namely, the threatened direct action from 19th July 1971 including wearing of black badges by the staff of Tirumani Leprosy Institute for their demands to be included in the Central Health Service.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர்.

* மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, திருமணி தொழுநோய் ஆராய்ச்சி நிறுவனம் மத்திய அரசின் வரம்புக்குட் பட்டதாகையால் இந்த அரசு இந்த நிறுவனத்தில் எழும் பிரச்னைகளின் பேரில் நடவடிக்கை எடுக்க இடமில்லை. மத்திய அரசின் தொழிலாளர் துறை ஆணையர் அலுவலகத்தில் இந்தச் சிக்கல் பற்றிய விசாரணை நடைபெற்றது. 21—7—71 அன்று சங்கத் தலைவர்களையும் பிறகு நிர்வாகத்தினரையும் தனியாகவும் மத்திய அரசின் தொழிலாளர் துறை உதவி ஆணையர் சந்தித்தார். சீக்கிரமே அவர் இரு தரப்பினரையும் இணைத்து விவாதம் நடத்த உத்தேசித்திருக்கிறார். அவருடைய அறிவுரையின்பேரில் ஜூலை மாதம் சம்பளம் வாங்காதிருக்க முடிவு செய்திருந்த தொழிலாளர்கள் 2—8—71 அன்று சம்பளத்தைப் பெற சம்மதித்தனர். தற்பொழுது அமைதியான நிலைமை நிலவுவதாகத் தெரிய வருகிறது.

மத்திய தொழுநோய் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம் திருமணியில் 1965-ம் ஆண்டு மத்திய அரசால் நிறுவப்பட்டது. இதன் முக்கிய வேலை தொழு நோய் பற்றிய ஆராய்ச்சி செய்தல், அதைக் கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபடுவோருக்குப் பயிற்சி அளித்தல், அதனால் பீடிக்கப்பட்டோருக்கு சிகிச்சை செய்தல் முதலியன. இந்த நிறுவனம் சுயேச்சையாய் இயங்குகிறது. ஆனால் சட்ட பூர்வமாகக் கூட்டமைப்பாய்ப் பதிவு செய்யப்படவில்லை. இதில் சுமார் 200 பேர் பணியாற்றி வருகின்றனர்.

இவர்களுடைய ஊதிய விகிதங்கள் மத்திய அரசின் ஊதிய அமைப்புக்கொத்திருக்கின்றன. இவர்களுடைய முக்கிய குறை இவர்களுக்கு நிரந்தர நிலையில்லாததே. நிரந்தர நிலையும் தங்கள் சங்கத்திற்கு அங்கீகாரமும் இவர்களுடைய முக்கிய கோரிக்கைகள்.

[திரு. என். வி. நடராசன்] [1971 ஜூலை 30

இந்த நிறுவனத்தை ஒரு கூட்டமைப்பாகப் பதிவு செய்யவும் ஊழியரின் நிலையை ஒழுங்குபடுத்தி நிரந்தரமானதாக்கவும் மத்திய அரசு கவனம் செலுத்தி வருவதாகத் தெரிய வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : அங்கே பணியாற்றக் கூடியவர்கள் மத்திய அரசின் சிப்பந்திகளா அல்லது வேறு சிப்பந்திகளா என்று தெளிவாக இல்லாத நிலையில் ஒரு இயக்கத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே தமிழக அரசு தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி மத்திய அரசிற்கு எழுதி இவர்களை மத்திய அரசு ஊழியர்களாக நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## (5) அறிக்கை அளித்தல்

### தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மீதான மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை.

MR. SPEAKER : Thiru Vezhavendan will present the Report of the Committee on Estimates.

THIRU K. VEZHAVENDAN : Mr. Speaker, Sir, I have the honour to present the Foudth Report of the Committee on Estimates on Industrial Deveuoyment Corporation.

## (6) அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மை வருமானவரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1971).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மை வருமானவரி (திருத்த) சட்டமுன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று முன்மொழிகிறேன்.

MR. SPEAKER : Thiruvalargal K. T.K. Thangamani, H. V. Hande, A. R. Marimuthu and A. Subramaniam, have given notice of amendments. They are all identical amendments. I allow the amendment of Thiru K. T. K. Thangamani who can now move it.

THIRU K. T. K. THANGAMANI : Sir, I move :

"That the Tamil Nadu Agricultural Income-Tax (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 19 of 1971), be referred to a Select Commmittee consisting of 21 Members of the Assembly (names to be furnished later).

The amendment was duly seconded.

*10—7—71-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1971 ஜூலை 30 ]

MR. SPEAKER : Thiru K. P. Gopal and Thiru J. James have given two amendments. They are identical amendments. I call upon Thiru James to move his amendment.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, என் பெயரால் இருக்கின்ற மசோதாவிற்கான கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்.

"That the Tamil Nadu Agricultural Income-Tax (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 19 of 1971), be circulated for eliciting public opinion there on "

The amendment was duly seconded.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Mr. Speaker, Sir, the Government have considered it necessary to rationalise the structure of the Tamil Nadu Agricultural Income-tax Act, 1955 (Tamil Nadu Act V of 1955), so that this tax bears a greater correlation to the income from the land rather than to the classification of the land which is the case at present in respect of all crops except tea, coffee, rubber, arecanut, cardamom and cinchona. This makes it necessary to modify the definition of " standard acre " in the said Act in order to relate it to the various important crops grown in this State. The Government have also found it necessary to make certain changes in the said Act for augmenting the resources of the State. This is proposed to be done by revising the rates of composition and the rates of tax under the said Act and also by imposing certain restrictions on the extent of agricultural land to which composition can be permitted.

Sir, I request the House to accept the motion.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, விவசாய வருமானத்தின் பேரிலேயுள்ள வரியைச் செலுத்துவதற்கு அரசால் கொண்டுவரப்பட்ட மசோதாவின் பேரிலே என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

வெகு நீண்ட நாள் வரையிலும் விவசாயத்தின் பேரிலே, வருமான வரி விதிக்கப்படாமல் இருந்தது நம் எல்லோருக்கும் தெரியும். விவசாயம் அதிகமாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய ஒன்று. விவசாயம்தான் நாட்டிலே உள்ள எல்லா வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமைந்துள்ளது. ஆகவே, விவசாயம் முழு வளர்ச்சி அடைகின்ற வகையிலே இருக்க வேண்டும் என்பதற்காகவும், விவசாயிகளுக்கு ஊக்கக் குறைவு ஏற்படக்கூடாது என்கிற காரணத்திற்காகவும் விவசாய வருமானத்திற்கு வரியே இல்லாமல் இருந்தது. அதன் பிறகு தொழில் துறை போன்ற வளர்ச்சிகளில் அரசாங்கத்திற்கு சரியான வருமானம் கிடைக்காத காரணத்தால் விவசாயத் துறையிலே வரி விதிக்க வேண்டுமென்று துவங்கி, பிளாண்டேஷனுக்கு மட்டும் போட வேண்டி வந்தது. அதன் பிறகு 1959-ம் ஆண்டிலே பிளாண்டேஷன் அல்லாத பயிர்களுக்கும், சாகுபடி செய்கின்ற நிலங்களுக்கும் வரி போட வேண்டுமென்று கருதி சட்டம்

கொண்டுவரப்பட்டது. இவ்வாறாக படிப்படியே கொண்டுவரப்பட்டு 1967-ல் ஒரு திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, விவசாய வருமான வரி அதிகரிக்கப்பட்டது. நாட்டிலே இதர துறைகளில் இருப்பவர்களிடமிருந்தும் சரி, பொருளாதார நிபுணர்கள் கருத்துப்படியும் இன்னும் பிளானிங் கமிஷனிலே இருந்தும்கூட விவசாய வருமானத்திற்கு வரி விதிக்கப்பட வேண்டுமென்கிற கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டு வந்திருக்கின்றன. விவசாயம் அதிகப்படியான தொகையை அரசாங்கத்தின் மூலமாகப் பெற்று வருவதால், விவசாய அபிவிருத்திக்காக அரசாங்கம் பல உதவிகளைச் செய்து வருவதால், விவசாய வருமானத்திற்கு வரி போட வேண்டுமென்று சொல்லப்பட்டது. இந்தக் கருத்து தவறு என்பது என்னுடைய அபிப்பிராயம்.

இன்னும் சொல்லப்போனால் விவசாயம் லாபகரமான தொழில் அல்ல என்பது என் போன்ற விவசாயிகளின் கருத்தாகும். விவசாயத்தை லாபகரமான தொழிலாக ஆக்க வேண்டும். அப்படி ஆக்க முயற்சிக்க வேண்டுமென்று நாம் எல்லாம் முயன்று கொண்டிருக்கிறோம். விவசாயத்திற்கு அரசாங்கம் பலவிதமான உதவிகளைச் செய்து வருகிறது. நாட்டிலே வேலையில்லாமல் இருப்பவர்களின் தொகையைக் குறைப்பதும், அதிகமான வேலைவாய்ப்புக்கு வழி செய்வதும் விவசாயத் தொழில் ஆகும். விவசாய அபிவிருத்திதான் மற்ற எல்லாத் தொழில் அபிவிருத்திக்கும் அடிப்படையாக அமைந்துள்ளது. அந்த அபிவிருத்தி இன்னும் முற்றுப் பெறவில்லை. பல ஆண்டுகளாக முடிவடையாமல் இருக்கிறது. இப்போது நாம் எடுக்கக்கூடிய எந்த நடவடிக்கையும் விவசாய அபிவிருத்திக்குக் குந்தகமாக இருக்கக்கூடாது என்பது என் கருத்து. விவசாயத் துறையிலே வரியே போடக்கூடாது, வரி வாங்கக்கூடாது என்பது என் கருத்து அல்ல. அரசாங்கத்திற்கும் பலவித வேலைகளுக்குப் பணம் தேவைப்படுகிறது. விவசாயத்திற்கு அதிகப்படியான பணம் தேவைப்படுகிறது. விவசாயத்திற்கு அரசாங்கம் அதிக நிதியை ஒதுக்குகிறது. விவசாயிகளின் தரப்பிலேயிருந்து ஓரளவுக்கு வருமானத்தைப் பெறுவதற்கு முயற்சி எடுப்பதில் தவறு இல்லை. அந்த முயற்சி விவசாய வளர்ச்சிக்குக் குந்தகமாக இருக்கக்கூடாது என்பதுதான் என் வேண்டுகோள்.

குறிப்பாக என்னை எடுத்துக்கொண்டால், நான் ஒரு மத்தியதர விவசாயி. எனக்கு 19 ஸ்டாண்டர்டு ஏக்கர் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். 1967-ல் திருத்தச் சட்டத்திற்கு முன்னால் விவசாய வருமான வரியாக நான் 29 ரூபாய் வரி செலுத்திக்கொண்டிருந்தேன். 1967-க்குப் பின், திருத்தச் சட்டத்திற்குப் பிறகு நான் 140 ரூபாய் வரி செலுத்திக்கொண்டிருக்கிறேன். ஆனால் இன்றைக்கு ஒரிஜனல் மசோதாவாகக் கொண்டுவரப்பட்டதைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் நான் கம்பவுண்ட் செய்துகொள்ள முடியாது. நான் வாழை பயிரிடவில்லை; நிலக்கடலை, தென்னந் தோட்டம் இருக்கிறது: 27 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்று வருகிறது. இதை வைத்து நான் கம்பவுண்ட் பண்ண முடியாது. நான் கணக்கு கொடுக்க வேண்டுமென்றால், அதற்காக, கணக்கு எழுதுவதற்கு ஒரு காரியதரிசியை வைத்துக்கொள்ள வேண்டும். வருஷத்தில் 8 ஆயிரம் முதல் 10





ஆயிரம் வரையில் நிகர வருமானம் கிடைக்கிறது. இதில் ஒரு ஆள் போட்டுக் கணக்கு எழுத முடியுமா என்பதையும் அரசாங்கம் சிந்திக்க வேண்டும்.

20 ஸ்டாண்டர்டு ஏக்கரா உள்ளவராக இருந்தால் அவர் 512 ரூபாய் வரி செலுத்த வேண்டியிருக்கிறது. இப்போது 130 ரூபாய், 140 ரூபாய் வரி செலுத்தக்கூடிய ஒருவர் இந்த மசோதா நிறைவேறுவதன் மூலம் 500 ரூபாய் வரி செலுத்த வேண்டும். எத்தனை மடங்கு வரி உயர்ந்திருக்கிறது? இது நியாயம்தானா என்பதை அரசாங்கம் சிந்திக்க வேண்டும்.

நெல், அரிசியைப் பொறுத்தவரையில் சுயதேவை பூர்த்தியாகி, கொஞ்சம் அதிகம் வந்திருக்கிறது என்பதை ஒத்துக்கொள்ளலாம். இப்போது இருக்கிற விலையேற்றத்தைப் பார்க்கும்போது, இந்த நிலைமை நீடிக்குமா என்பது தெரியவில்லை. தேவையான பொருள்கள் மார்க்கெட்டில் கிடைக்கவில்லையென்றால் விலை ஏறுகிறது என்றுதான் பொருள். கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய் முதலிய அன்றாடம் உபயோகிக்கக்கூடிய சாமான்கள் எல்லாம் விலை ஏறுமுகமாக இருக்கிறது. கடலை எண்ணெய் விலை ஏறுகிறது. இங்கு உற்பத்தி அந்த அளவிற்கு ஏற்படவில்லை. வெளிமாநிலங்களிலிருந்து உற்பத்தி வருகிறபோது நிரந்தரமான வருவாய் இல்லை. கடலையை எடுத்துக்கொண்டால் நிரந்தர வருவாய் இல்லை. நான் 6 அல்லது 7 ஏக்கரில் கடலை பயிரிடுகிறேன். கடந்த ஐந்தாண்டுகளை எடுத்துக்கொண்டு பார்த்தால் ஒரே ஒரு வருடத்தில்தான் 8 ஆயிரம் ரூபாய் கிடைத்தது. அதில் 4,500 ரூபாய் செலவு போக பாக்கி 3,500 ரூபாய் வருமானம் கிடைத்தது. சென்ற ஆண்டு மிக மோசம். இந்த ஆண்டும் மோசமாக இருக்கிறது. 4 ஆயிரம் ரூபாய் செலவு செய்துவிட்டு, 3,500 ரூபாய் வருமானம் வந்தால் என்ன செய்ய முடியும்? கடலை மூட்டை ஒன்று முதலில் 120 ரூபாய்க்குப் போனது. பின்னர் 90 ரூபாய்க்குப் போனது. இப்போது 140 ரூபாய் என்று வந்திருக்கிறது. ஒரு வருஷத்தில் நன்றாக விளைகிறது, இன்னொரு வருஷத்தில் போய்விடுகிறது.

அடுத்தபடியாக, ஒரு ஏக்கருக்கு 6 மூட்டை அரிசிதான் கிடைக்கிறது. இன்றைக்கு சாதாரண நிலையில் 500 ரூபாய் செலவாகிறது. தஞ்சை மாவட்டத்தில் நெல் அபிவிருத்தி செய்துகொண்டிருக்கிறோம். புத்தகங்கள், ரேடியோ, பத்திரிகை மூலமாக நாம் பிரசாரம் செய்துகொண்டு வருகிறோம். ஐ.ஆர். 8 போட்டால் ஆயிரம் ரூபாய் கிடைக்கும் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. விவசாயத்தில் ஆவரேஜ் இன்கம் வருவதில்லை. என்னுடைய நிலத்தில் அதிகமான கவனம் எடுத்துக்கொண்டு பயிரிட்டாலும் மாக்ஸிமம் கிடைப்பதில்லை. ஒரு ஏக்கருக்கு 45 கலம் என்று சொல்கிறார்கள். நான் குறுவை—"கருணா" பயிரிட்டதில் 30 மூட்டை விளைந்தது. இதை மிகைப்படுத்திக் கூறுவதாக நினைத்துவிடக் கூடாது. இவ்வளவு கவனம் செலுத்தி, கஷ்டப்படும் எனக்கே இப்படி என்றால், சாதாரண விவசாயின் நிலைமை என்ன? நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், நான் ஊரில் இருக்கும்போது மூன்று பொழுதும்

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1971 ஜூலை 30

வயலில் வேலை செய்யக்கூடியவன்தான். விவசாயம் அதிகமாகப் பெருகிவிட்டது என்று நாம் கருதிவிடக்கூடாது. ஒன்றைத் தெரிந்துகொண்டுதான் நான் கூறுகிறேன். இன்றைக்கு இருக்கிற நிலைமையில் 80 சதவிகித நிலச்சொந்தக்காரர்கள் இந்தச் சட்டத்திற்கு உட்பட மாட்டார்கள். பாக்கி 20 சதவிகிதம் உள்ளவர்கள் இந்தச் சட்டத்தின்கீழ் வருவார்கள். 80 சதவிகிதம் உள்ளவர்கள் வரவில்லையே என்பதைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளக்கூடாது.

ஆகவே, இதையெல்லாம் அபிவிருத்தி செய்கின்றபோது இந்த வரி சரியல்ல என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். கொண்டுவரப் பட்டிருக்கின்ற இந்த மசோதாவிலே ஸ்டாண்டர்டு ஏக்கர் நிர்ணயம் செய்யப்பட்டிருப்பது அவ்வளவு சரியானதல்ல வேண்டுமானால் வரியைக் கொஞ்சம் உயர்த்திக் கொள்ளுங்கள், அதிலே ஆட்சேபனை இல்லை. விவசாயம் செய்யக் கூடியவர்களுக்குச் சங்கடங்கள் இருக்கக்கூடாது, விவசாயிகள் இன்கம் டாக்ஸுக்குக் கணக்குக் கொடுக்கவேண்டும், கணக்குப் பிள்ளை வைத்துக்கொள்ளவேண்டும், இப்படிப்பட்ட சிரமங்கள் எல்லாம் இல்லாமல் இந்த மசோதாவிலே இதர சிரமங்களையெல்லாம் போக்கி அதே நேரத்தில் உங்களுக்கு வருகின்ற வருவாய் அதிகமாகக் கிடைக்கக்கூடிய வகையிலே விவசாயி களுக்குச் சிரமங்கள் இல்லாதபடி இந்த மசோதாவிலே திருத்தங்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.. இதற்காகத்தான் இந்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பிப் பரிசீலனைசெய்து அதன்பிறகு செய்யவேண்டிய திருத்தங்களையெல்லாம் செய்துகொண்டு வந்தால் நல்ல முறையிலே அமையும், அதன்மூலம் விவசாயிகளுக்கு இருக்கின்ற பய உணர்ச்சி போகும் என்பதை இந்த நேரத்திலே நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

எங்களுடைய தரப்பிலே சரியாக அமென்ட்மென்ட்ஸ் கொடுக்க முடியவில்லை. ஆனால் இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற அமெண்ட் மெண்ட்ஸைப் பார்த்தால் அரசாங்க சார்பிலே கொடுக்கப் பட்டிருக்கின்ற அமெண்ட்மென்ட்ஸ் போதுமானதாக இல்லை, ஆகவே செலக்ட் கமிட்டி இதைப் பரிபூரணமாகப் பரிசீலனைசெய்து அதன் பிறகு நிறைவேற்றுவது உகந்ததாக இருக்கும்.

மஞ்சளுக்கு எல்லாம் 16 சென்ட் சொச்சம் கொண்டது ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று போட்டிருக்கிறார்கள், பாக்குத் தோட்டத்தை எடுத்துக்கொண்டால் பத்தில் ஒன்றாக இருந்ததை ஆறில் ஒன்றாக வைத்திருக்கிறார்கள். மஞ்சளுக்கு மூன்றில் ஒன்று என்று வைத்திருக்கிறார்கள். மஞ்சள் ஒரு ஏக்கர் சாகுபடி செய்ய வேண்டுமென்று சொன்னால் ரூபாய் மூவாயிரத்திலிருந்து ஐயாயிரம் வரை செலவு செய்யவேண்டியிருக்கிறது. அதன்பிறகு பத்தாவது மாதத்தில் தான் நாம் போட்ட முதலை எடுக்கக்கூடிய நிலைமை வருகிறது. மஞ்சள் போட்டால் விளைச்சல் சரியாக இருந்தால்தான் போச்சு, மார்க்கட்டிலே நல்ல விலை இருந்தால்தான் போச்சு, இல்லா விட்டால் நஷ்டம்தான் ஏற்படும். மஞ்சளுக்குள்ள வருவாய்தான் வாழைக்கும் என்று குறிப்பிட்டார்கள். மஞ்சளைப் போன்று தான் வாழைக்கும் முதலீடு அதிகம் போட வேண்டும். வாழையைப் பொறுத்த வரையில் ஒரு சுழற்காற்று அடித்தால் போய்விட்டது. இதையெல்லாம் கன்ஸிடர் பண்ணி கொஞ்சம் ஸ்டாண்டர்டு ஏக்கரை அதிகப்படுத்துகின்ற அளவுக்குத் திருத்தங்கள் கொண்டுவரவேண்டும்.



1971 ஜூலை 30] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

மிளகாயை எடுத்துக்கொண்டால் அரை ஏக்கர் கொண்டது ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று வைத்திருக்கிறீர்கள். மிளகாய் எல்லாம் எங்கள் பக்கத்தில் கிடையாது, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் தான் அதிகமாகப் பயிராகிறது. எங்கள் பகுதியிலே பூச்சி வந்துவிடுகிறது. பிறகு என்னதான் மருந்து தெளித்தாலும் பயிராவதில்லை, எனவே கைவிட்டு விட்டோம். ஒரு ஏக்கருக்கு 300 ரூபாய் அல்லது 400 ரூபாய்தான் வருமானம் கிடைக்கும். ரொம்ப அதிகமாகப் போனால் செலவு போக 500 ரூபாய்தான் வருமானம் கிடைக்கும். எனவே இதிலே அரை ஏக்கர் என்பதை ஒரு ஸ்டாண் டர்டு ஏக்கர் என்று வைத்திருப்பது நியாயமாகாது.

கடலையைப் பொறுத்தவரையில் முக்கால் ஏக்கரை ஒரு ஸ்டாண் டர்டு ஏக்கர் என்று வைத்திருக்கிறோம். விவசாயத்தில் நேரடி யாகப் பங்கு கொள்ளாதவர்கள் ஏதோ நிறைய வருவாய் சம்பாதிக் கிறார்கள் என்று நினைத்துக் கொள்கிறார்கள். அப்படியெல்லாம் இருந்தால் என்னிடத்திலே லட்ச ரூபாய் இருக்கவேண்டும். ஆனால் நான் இப்பொழுது கடனாளியாகத்தான் இருக்கிறேன். சில பேர்கள் கெட்டியாக இருந்து பணத்தைப் போட்டுக் கொண்டு இருப்பார்கள்; அவர்களிடத்திலே பணம் இருக்கலாம். ஆனால் நியாயமாகச் செலவழிக்கின்றவர்களிடத்திலே பணம் இருப்பதாக நான் கருதவில்லை.

பருத்தியை எடுத்துக்கொண்டால் இப்பொழுது நம்முடைய மாநிலத்திலே போதவில்லை. அதற்காக இப்பொழுது கிராஷ் புரோகிராம் எல்லாம் போட்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் முக்கால் ஏக்கர் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று வைத்திருப்பது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென்னைமரங்கள் இதுவரையிலே கண்ணில் படாமல் இருந்தன, இப்பொழுது அதையும் இதிலே சேர்த்து இருக்கிறோம். தென்னையைப் பொறுத்தவரையில் 15 ஆண்டுகள் காத்துக்கொண்டிருக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. என்னடா 6 வருஷத்திலே காய்க்கும் என்று சொல்வார்களே என்று நினைக்கலாம். பத்து மரங்கள் அப்படிக் காய்க்கலாம். ஆனால் 15 ஆண்டுகள் கழித்து 20 ஆண்டுகள் வரையில் காத்திருந்தால்தான் காய்கள் கிடைக்கின்றன. 20 ஆண்டு கள் கஷ்டப்பட்டு முதலீடு செய்து அதுவும் எங்களுடைய மாவட்டத்திலே புயல் காற்று வந்துவிட்டால்—வரவில்லை நல்ல வேளையாக—தீர்ந்துவிடும். எனவே என்ன வருவாய் வருகிறது என்பதைப் பார்க்கவேண்டும். இதிலே இறைவை தண்ணீர் பாய் கின்ற தோட்டமும் இருக்கிறது. இறவைத் தண்ணீர் இல்லாத தோட்டங்களும் இருக்கின்றன............

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஸ்டாண்டர்டு ஏக்கர் மாற்றுவதைப்பற்றி உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஸ்டாண்டர்டு ஏக்கர் எப்பொழுது வருகின்றது

என்பதைப் பார்க்கவேண்டும். கம்பவுண்டிங் வருகின்றபோதுதான் கன்வெர்ஷன் பேக்டர்ஸ் வருகிறது. கம்பவுண்டிங் முறையில் 20 ஏக்கர் என்று வருகின்றபொழுதுதான் அது வருகிறது. அப்படியில்லாதபோது வருவதில்லை. கம்பவுண்டிங் வேண்டாம், கணக்குக் கொடுக்கிறேன் என்று சொன்னால் ஸ்டாண்டர்டு ஏக்கர் கணக்கு வேண்டாம் என்று வைத்துக்கொள்ளலாம். இந்த விளக்கத்தை நான் முதலிலேயே தெளிவாகச் சொல்லிவிட விரும்புகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : கம்பவுண்டிங்க்கு உட்பட்ட நிலங்களுக்குத் தான் ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பது வருகிறது, அந்த நிலைமையைப் பற்றித்தான் நான் பேசிக் கொண்டிருக்கிறேன்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பல மசோதாக்கள் அவையிலே நிறைவேற இருக்கின்றன. உறுப்பினர்கள் சுருக்கமாகப் பேச வேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : மற்ற மசோதாக்களில் நாங்கள் குறைத்துக் கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாகச் சொல்லுங்கள். எல்லோருக்கும் தெரிந்ததுதான். தென்னைமரத்தைப்பற்றியெல்லாம் அறிந்ததுதான்.

THIRU R. PONNAPPA NADAR : Some more time may be allotted for this Bill since this is the most important Bill affecting the agriculturists.

MR. SPEAKER : We will allot reasonable time. There is no objection. Hon. Members need not elaborate and be meticulous. That is my point.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தென்னந்தோப்புக்கு முக்கால் ஏக்கரை ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று வைத்து இருப்பது அவ்வளவு சரியானதல்ல. இறைவைப் பாசனமாக இருந்தால் வருவாய் கூடக் கிடைக்கும். ஒரு மரத்திற்கு 50-லிருந்து 80 காய்கள் வரை கிடைக்கலாம். இறைவைப் பாசனம் இல்லாத இடங்களில் அந்த நிலைமை இல்லை. 100 காய்கள் வரும் என்றெல்லாம் சொல்கிறார்கள், எனக்குத் தெரியாது.

மாமரத்தை எடுத்துக்கொண்டால் ஒரு ஏக்கர் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று வைத்திருக்கிறார்கள். நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பகுதி மாமரம் நிறைய இருக்கிற பகுதி, அவர்களுக்கு நல்ல அனுபவம் அதிலே இருக்கும். எனக்கு இருக்கின்ற மாந்தோப்பிலே 1955-லே போட்டது. ஒரு வருஷம்தான் அது 600 ரூபாய் குத்தகைக்குப் போயிற்று. பிறகு 300, 350, 375, 400 ரூபாய்க்குத்தான் வருவாய் வருகிறது. எனவே மாந்தோப்பிலே ஒரு ஏக்கருக்கு ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று வைத்திருப்பது சரியல்ல. முன்பு இருந்த மாதிரியே வைத்துவிடலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





டீ தோட்டம் 60 செண்ட் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இருந்ததை 80 செண்ட் ஆக ஆக்கியிருக்கிறார்கள். எதற்காக இது தேவை என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும்.

நாம் இப்பொழுது 15 ஏக்கர் என்று சீலிங் கொண்டுவந்திருக்கிறோம். எனவே அவர்கள் அத்தனை பேர்களும் கம்பவுண்டிங் பண்ணிக்கொள்வதற்கு இடம் கொடுக்கவேண்டும். ஸ்டாண்டர்டு ஏக்கர் கணக்கிலே முன்னாலே இந்த ஆக்டிலே இருக்கிற 50 ஏக்கர் வரைக்கும் கம்பவுண்டிங் பண்ணுவதற்கு அனுமதி கொடுக்கவேண்டும். மத்திய தர விவசாயிகள் கணக்குகளைத் தூக்கிக்கொண்டு அலைய முடியாது. ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு 500 ரூபாய் வருமானம் வரும் என்று எதிர்பார்த்து இப்படிக் கணக்குப் போட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். 5 ஆயிரம் ரூபாய் வரை ஜெனரல் இன்கம் டாக்ஸுக்கு விதிவிலக்கு இருக்கிறது. இந்தக் கணக்குப்படி 10 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரையிலும் இருந்தால் விதிவிலக்குக் கொடுக்கவேண்டுமென்று வைக்கவேண்டும். 10 ஏக்கருக்கு அந்தக் கணக்குப்படி 5,000 ரூபாய்தான் வரும். எனவே 10 ஏக்கர்வரை விதிவிலக்குக் கொடுத்துவிட்டு அதற்குமேல் கொஞ்சம் அதிகமாகப் போடுவதுபற்றி ஆட்சேபணையில்லை.

ஆகவே, அடுத்தபடியாக, கணக்குக் கொடுப்பவர்கள் மிகவும் குறைந்தவர்களாகத்தான் இருக்க முடியும். ஜாஸ்தி நிலம் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு பொது வருமான வரி அதிக ரேட் இப்பொழுது போடப்பட்டிருக்கிறது. பொது வருமான வரியும், விவசாய வருமான வரியும் போட்டிருப்பதை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது பொது வருமான வரியைவிட விவசாய வருமான வரி அதிகமாகப் போடப்பட்டிருக்கிறது. அப்படி அதிகமாகப் போடக் கூடாது. பொது வருமான வரியை என்ன விகிதாச்சாரத்தில் போட்டிருக்கிறார்களோ அந்த விகிதாச்சாரத்தில் தான் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இதையெல்லாம் கருத்திலே கொண்டு, 50 ஏக்கர் வரையில் கம்பவுண்ட் பண்ணிக்கொள்கிற வசதி, இப்பொழுதிருக்கிற ஸ்டாண்டர்ட் ஏக்கராவைத் திருத்தி இன்னும் கொஞ்சம் கணிசமாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ரேட்டையும் பொது வருமானத்தைக் கணக்கிட்டு ரேட் எடுப்பதைப் போல் அந்த அளவுள்ள ரேட்டையும் இந்த மசோதாவைப் பொறுத்த வரையிலும் திருத்த வேண்டியிருப்பதாலே இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு விட்டுப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய திருத்தத்தை வலியுறுத்தி என்னுடைய உரையை முடிக்கிறேன், வணக்கம்.

திரு. ஏ. ஆர். சுப்பையா: தலைவரவர்களே, விவசாய வருமான வரி திருத்த மசோதாவின் மீது சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

1967-இல் இந்தச் சட்டம் வந்தபொழுது, இப்படிப்பட்ட பணப் பயிர்களுக்கு வரி விதிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டு அன்றைக்கிருந்த சூழ்நிலையில் ஒட்டுமொத்தமாக முடிவு செய்யப்பட்டது

அன்றிருந்த அண்ணா பொறுப்பில், இன்று வருவாயை நாம் உயர்த்த வேண்டுமென்று சொல்லும் நேரத்தில், இதை வரவேற்க வேண்டிய ஒரு மசோதாவாகத்தான் நான் எண்ணுகிறேன். நானும் மிகவும், பின்தங்கிய அதாவது மழையில்லாத பகுதியிலிருந்து வரக்கூடியவனாக யிருந்தாலும் சொல்கிறேன். பணப்பயிருக்கு அதிக வருவாய் வருவது உண்மைதான், ஆனால் அதேநேரத்தில் மக்கள் அவதிப்படக் கூடிய விதத்தில் நம்முடைய திட்டங்களும் இருக்கக்கூடாது என்பது உண்மைதான். உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்குப் பாக்குக்கு 6-இல் 1 என்று சொல்கிறார்கள். அதைக் கவனித்தால் 16 செண்ட் 2/3 ஆகியது. சாதாரணமாகப் பஸ்ஸில் ஏறினால்கூட 14 பைசா என்றால் 15 பைசாவாகக் கொடுக்க வேண்டி யிருக்கிறது. கணக்கன் கிட்டே செல்ல வேண்டும். 16-2/3 என்று எப்படிக் கணக்குச் செய்வது என்று தெரியவில்லை. எங்கள்பக்கத்திலே சொல்லுவர்கள், கணக்கன் பகைத்தால் காணி நிலம் இழந்து விடுவான் என்று. அப்படி ஒரு நிலைக்குக் கொண்டுபோகக்கூடாது. கணக்கனைச் சரிக்கட்டிப் போக வேண்டியிருக்கும். கணக்கன் பகை யாகயிருந்தால் காணி நிலமும் இழந்து விடுவான் என்று சொல்லு வார்கள். ஆகவே, 2, 3 சொல்லி விளக்குகிறேன்.

வாழை குரூப் 33-1/3 பர்செண்ட் என்றால் எப்படி ஒரு செண்ட் போட முடியும்? அதோடு வாழைக்கும், கரும்புக்கும் வித்தியாசம் வைத்திருக்கிறீர்கள். வாழை 15 மாத வித்து, கரும்பும் 15 மாத வித்து. வாழைக்கும், கரும்புக்கும் இருக்கும் பகையெல்லாம் அமைச் சரவர்களுக்கும் தெரியும் என்று கருதுகிறேன். காற்றடித்தால் வாழை சாயலாம். அதேபோல் கரும்புக்குக் கொடுத்திருக்கிறது. 50 செண்ட் 1 ஏக்கர் என்றால் வாழையில் 33-1/3. இது பொருத்த மில்லாமல் இருக்கிறது. இதை ஒரே குரூப்பாக ஆக்க வேண்டும். கம்பவுண்ட் கொடுத்தால் என்ன என்று ஒரு வார்த்தை சொல்ல லாம். சாதாரணமாக, பிப்ரவரி, ஜனவரி மாதத்திலே போடுவோம், அடுத்த ஆண்டு போய், அதற்கடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம்தான் வரும். ஆகவே, 3 ஆண்டுகள் வரும். 3 ஆண்டுகளுக்கு கம்பவுண்ட் போட ஸ்பில் ஓவர் இருக்கிறது. எனவே, அதற்காக எக்சிகியூட்டிவ் இன்ஸ்டிரக்ஷன்ஸ் கொடுத்தால் பிரயோஜனப்படும். இல்லை யென்றால் கீழேயிருப்பவர்கள் 3 வருஷங்களுக்கும் போட வேண்டு மென்று சொல்லுவார்கள்.

தென்னை மரத்தை எடுத்துக்கொண்டால், இர்ரிகேட்டட் ஏரியா, நான்-இர்ரிகேட்டட் ஏரியா என்று இருக்கின்றன. எனக்கு முன் பேசிய நண்பர் கூறியதுமாதிரி தென்னையிலே இர்ரிகேட்டட் ஏரியா விலுள்ள தென்னை மரங்களுக்கும், நான்- இர்ரிகேட்டட் ஏரியா விலுள்ள தென்னை மரங்களுக்கும் வித்தியாசம் இருக்க வேண்டும். இதுபோக மிளகு 50 செண்ட் ஒரு ஏக்கர் என்றிருக்கிறது. மிளகுச் செடிக்கு அடிக்கடி நோய் வரும். ஆகவே, பருத்தி, மிளகு, நிலக்கடலை இவை மூன்றையும் ஒரே குரூப்பாக ஆக்க வேண்டும். 3-ம் ஆறுமாத வித்து. ஜாஸ்தி நோய் வரும். ஆகவே, ரிஷ்க் எடுக்க





வேண்டும். ஆகவே, மூன்றையும் ஒரே குரூப்பாக ஆக்க வேண்டும். மிளகுச் செடிக்கு 50 என்று இருப்பதற்குப் பதிலாக 70 பர்செண்ட் என்று அந்த ஏற்பாட்டைக் கொண்டுவர வேண்டும்.

இதுபோக, இன்ஷ்யூரன்ஸ் இல்லை. கேட்டில் இன்ஷ்யூரன்ஸும் இல்லை, கிராப்ஸ் இன்ஷ்யூரன்ஸும் இல்லை. சேல்ஸ் டாக்ஸை எப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்துகிறோமோ அதேபோல் குறைத்து ஆரம்பித்து மேலே கொண்டுபோனால் நல்லது. ஒரே நேரத்தில் கொடுப்பது என்றால் மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள்.

அதுபோக, bass Re. 1; Local surcharge Re. 1½; Actual rate Re. 1, ஆக, 3½ ரூபாய் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அந்த முறையில் கொடுக்க வேண்டும். ஒரே நேரத்தில் கொடுக்கும்பொழுது மக்கள் அவதிப்படுகிறார்கள், கஷ்டப்படுகிறார்கள். செக்ஷன் 65 படி நிர்ணயம் 20 ஏக்கர்களுக்குத்தான் வைத்திருக்கிறார்கள். அது அவ்வளவு காணாது கம்பவுண்டிங் செய்யும்பொழுது. நான் ஓரளவிற்கு ரிட்டர்னை வரவேற்கிறேன். ஆனால் ரிட்டர்ன் எப்படி இருக்க வேண்டுமென்பதற்கு உத்தரவாதம் செய்வதில்லை, அதற்காக எக்சியூட்டிவ் இன்ஸ்டிரக்ஷன்ஸ் இல்லையென்றால் ஒன்றும் நடக்காது.

சாதாரணமாக இன்கம் டாக்ஸுக்கு இன்ஸ்ட்ரக்ஷன் இருக்கிறது, ரூல் போட்டிருக்கிறது. இன்கம் டாக்ஸ்க்கு இத்தனை பர்செண்ட், டெப்ரிஷியேஷன் இத்தனை பர்செண்ட், மெயின்டெனன்ஸ் இத்தனை பர்செண்ட் என்று இவ்வளவு வைத்துக் கொள்ளலாம் என்று ஆர்டினரி இன்கம் டாக்ஸில் இருக்கிறது. அப்படி எக்சிகியூட்டிவ் இன்ஸ்ட் ரக்ஷன்ஸ் கொடுக்க வேண்டும். எங்களையெல்லாம் கணக்குப்பிள்ளை களின் கையில் கொண்டுபோய் விட்டுவிடாதீர்கள். அந்தப் பயம் தான் இருக்கிறது, அந்த கஷ்டம் இருக்கிறது. ஆகவே, கம்பவுண்ட் டிற்குச் சாய்ஸ் கொடுங்கள். ஆல்டர்நேட்டிவ் கொடுங்கள். ரிட்டர்ன் கொடுக்க வேண்டுமென்றால் ரூல் மூலமாக, எக்சிகியூட்டிவ் இன்ஸ்ட்ரக்ஷன் மூலமாகச் செய்வது நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

20 ஏக்கர்களுக்கு மேல் கம்பவுண்டிங் போக வேண்டுமென்றால், இப்பொழுதிருக்கும் லேண்ட் சீலிங் படி 15 ஏக்கர்கள் வைத்திருந்தால் வாழை இரண்டு ஏக்கர், பருத்தி 4 ஏக்கர், நிலக்கடலை 4 ஏக்கர், கரும்பு 15 ஏக்கர் என்று போட்டு வைக்கக்கூடும். சாதாரணமாக நஞ்சை யில் கரும்பைப் போடுவார்கள். இப்படிப் பார்த்தால் சுமார் 47½ ஏக்கராக்கள் வந்துவிடும். இவைகளை வந்து பிரித்தார்கள். இது வரவேற்கக் கூடியதுதான். ஆனால் அதே நேரத்தில் கம்பவுண்ட் செய்ய வாய்ப்பு ஒரு பக்கமிருந்தாலும், அந்தக் கம்பவுண்ட் ரேட்டை, ஸ்லாபைக் கட்டுப்படுத்துவதன் மூலம் இன்னும் 2 ஆண்டு களுக்குக்கூட அந்த அக்கவுண்டைக் குறைக்க, அக்கவுண்ட் இல்லாமல் கொண்டுபோக வழி உண்டு. 1967-லேகூட அண்ணா பேசியிருக்கிறார்கள்.

**As regards maintenance of accounts by the agriculturists they should not come to the conclusion that it was not at all possible at any time. He expressed the hope that in the near future when**

[ஏ. ஆர். சுப்பையா] [1971 ஜூலை 30

more and more young and educated people took to agriculture and settled in villages, they would not find it difficult to keep accounts and they would agree to it.

அப்பொழுதுகூட, 1967-லே இதேபோல் பேசப்பட்டிருந்தாலும் "I agree" என்று எல்லோரும் குறைபாடுகளைச் சொல்வதால்

'In the end, the Hon. the Chief Minister announced that though he felt convinced that their views were not quite correct, yet he would accept some of them to give credit to their opinion '.

என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே, அப்பொழுது இதைப்பற்றிப் பேசப்பட்டது. ஆகவே, ரிட்டர்ன், நான்-ரிட்டர்ன் என்று கண்டிப்பாக வைக்க வேண்டுமென்று நினைக்கிறேன். ரிட்டர்ன் கொடுக்கும் பொழுது ஸ்பெசிபிக் இன்ஸ்ட்ரக்ஷன் கொடுக்க வேண்டும். அதேபோல் பார்ட் 2-லே விகிதாச்சாரம் அதிகமாக இருக்கிறது. ஒரே நேரத்தில் போடும்பொழுது மக்கள் அவதிப்படுகிறார்கள். அடுத்த வருஷம், அல்லது 2 வருஷங்கள் கழித்துப் போடுங்கள், இப்பொழுதே போட வேண்டாம். பார்ட் 2-லே On the next 2½ standard acres என்பதில் 15-ஐ அப்படியே கண்டினியூ பண்ணிவிட்டு, பிறகு 30-க்குப் பதில் 25 என்றும், 45ஐ 35 என்றும் ஆக்க வேண்டும். இதைச் செய்தால் கொஞ்சம் விகிதம் குறையும் என்று நினைக்கிறேன்.

அதுபோகக் கடைசியிலே எக்ஸ்ப்ளனேஷன் நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள்.

". . . . . the land aforesaid shall be reduced to standard acres calculated according to minimum of such proportions ".

அதைக் கொஞ்சம் மினிமம் என்று சொல்லும்பொழுது ரொம்பவும் கஷ்டப்படும். ஏனென்றால், கொஞ்ச இடத்திலே போட்டிருப்பார்கள். அந்த ரேட்டுக்கு இருக்கும். இப்பொழுது 16 செண்ட் என்று எழுதி மினிமம் என்று சொல்லி அதை வைத்து ரேட் போடுவார்கள்.

என்னுடைய வேண்டுகோள்—

Calculated according to the maximum of the proportions applicable to the crops concerned

என்பதாகும். அதே நேரத்தில் விவசாயிகளைத் துன்பப்படுத்தக் கூடாது. நஞ்சை சாகுபடி செய்திருக்கும்போது வரப்புகளில் தென்னங் கன்றுகளை வைத்திருப்பார்கள். அப்படி வைத்திருக்கும் போது ஏதாவது ஒன்றுக்குத்தான் வரி விதிக்க வேண்டும். தென்னந் தோப்புக்கு ஒரு வரி விகிதம், நஞ்சைக்கு நெல்லுக்கோ, பருத்திக்கோ, கரும்புக்கோ ஒரு வரி விகிதம் என்ற வகையில் இரண்டுக்கும் வசூலிக்கக்கூடாது. அப்படிச் செய்வதால் மிகவும் பாதகம் ஏற்படும். மாந்தோப்பில் இரண்டு மூன்று வருஷங்களுக்கு ஒரு முறை தான் காய்ப்பு ஏற்படும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அங்கத்தினர் அவர்கள், வரப்பில் தென்னங்கன்றுகள் வைத்திருந்தால் வரி விதிக்கப்படுகிறது என்றார்கள். தென்னந் தோப்புகள் என்று தனியாக இருந்தால்தான்



1971 ஜூலை 30]

வரி விதிக்கப்படுகிறதே தவிர, நஞ்சை நிலங்களின் வரப்பில் தென்னங் கன்றுகள் நடப்பட்டிருந்தால் அதைக் கணக்கில் எடுத்துக் கொள்ளுவதில்லை. அதைப் பற்றிப் பேசிக் காலத்தை வீணாக்க வேண்டாமென்பதற்காகச் சொல்லுகிறேன்.

திரு. ஏ. ஆர். சுப்பையா : செங்கோட்டை ஏரியாவுக்கு அக்ரிகல்சுரல் இன்கம் டாக்ஸை எக்ஸ்டென்ட் பண்ணியிருக்கிறார்கள். ஏற்கெனவே அங்கு லாண்ட் டாக்ஸ், இன்கம் டாக்ஸ் போக மூன்றாவதாக அக்ரிகல்சுரல் இன்கம் டாக்ஸ் வருகிறது. உடனடியாக செங்கோட்டைக்கு அமல்படுத்த வேண்டுமென்று சொல்லிக் கொண்டு பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. தி. ஒ. பெரியசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய வருமான வரி மசோதா மீது பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றி. கூறிக் கொள்கிறேன். இந்தச் சட்டம் 1967-ம் ஆண்டு மறைந்த மாமேதை அண்ணா அவர்கள் தலைமையில் அமைச்சரவை இருக்கும் போது கொண்டுவரப்பட்டது. அன்று விவசாயிகளும், விவசாயப் பிரமுகர்களும் சட்டத்தில் இருந்த குறைகளையும், விவசாயிகள் எந்த முறையில் பாதிக்கப்படுவார்கள் என்பதையும் எடுத்துக் கூறிய பிறகு அந்த மசோதா பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பப்பட்டு கமிட்டி செய்த சிபாரிசின் பேரில் மசோதாவை நிறுத்தி வைத்தார்கள். 1967-க்குப் பிறகு நான்கு ஆண்டுகள் கழித்து மீண்டும் அந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. அன்று இருந்த நிலைமைக்கும் இன்று உள்ள விவசாயிகளுடைய நிலைமைக்கும் .........

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறுத்தி வைத்தார்கள் என்ற பொருள்படப் பேசுகிறார்கள். இப்போது ஏதோ புதியதாக கலைஞர் அவர்களுடைய தலைமையில் இருக்கும் அமைச்சரவை கொண்டு வந்து புகுத்தி இருப்பதாக, தவறான பொருள்படும்படி பேசுகிறார்கள். அண்ணா அவர்கள் அன்றையதினம் சொன்னது—கிராமத்தில் இருக்கும் விவசாயிகள் என்றுமே கணக்கு வைத்துக் கொள்ள முடியாது என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது; படித்த வாலிபர்கள் கிராமத்திற்குப் போகும் காலத்தில் கணக்கு வைத்துக் கொள்ள முடியும் என்று வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள். அதை அங்கத்தினர் ஏற்றுக் கொள்ளுகிறார் என்றால் அரசாங்கத்திற்கு ஆட்சேபனை இல்லை. எல்லோரும் கணக்கு வைத்துக் கொள்வதை அரசாங்கம் ஆட்சேபிக்கவில்லை.

திரு. தி. ஒ. பெரியசாமி: அன்று இருந்த முதலமைச்சரைப் பாராட்டுவதாகவும் இன்று இருக்கும் முதல்வரைக் குறை கூறுவதாகவும் அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அது தவறு என்று முதலிலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அன்று பணப் பயிர்களுக்கு வரி விதிக்க வேண்டுமென்ற நிலை வந்தபோது பொறுக்குக் கமிட்டி, வேண்டாம் என்று கூறியதை ஏற்று, விட்டுவிட்டார்கள். அதே சட்டம் இன்று மறுபடியும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. 1967-ல் நிலச்சுவான்தார்கள் பெரிய அளவுக்கு நிலம் வைத்து விவ

சாயம் செய்யக்கூடியவர்களாக இருந்தார்கள். இந்த நான்காண்டுகளில் உச்ச வரம்புச் சட்டம் வந்து நிலத்தின் அளவு குறைந்ததன் காரணமாக எல்லோரும் சாதாரண விவசாயிகள் என்ற நிலையில் மாறியிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு மீண்டும் இந்த வரியைப் போட்டு சிரமத்திற்கு ஆளாக்கக் கூடாது என்று அமைச்சர் அவர்களைத் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையின்போது நமது நாட்டின் முன்னேற்றத்திற்கு விவசாயிகளின் பங்கும் தேவை, அதற்காகத்தான் இந்த வரி விதிக்கப்படுகிறது என்று கூறியுள்ளார்கள். விவசாயிகள் நாட்டுக்கு உணவு உற்பத்தியைச் செய்து கொடுப்பதோடு தாங்களும் அதனால் பெரும் இழப்புக்கு ஆளாகிறார்கள் என்பதை நான் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். உணவுப் பொருள் உற்பத்தி செய்வதில் பல சிரமங்கள் இருக்கின்றன. அவர்கள் உற்பத்தி செய்யும் பொருளுக்கு நல்ல விலையும் கிடையாது. விலை கொஞ்சம் கூடி விட்டாலும் இங்கே அங்கத்தினர்கள் விலை ஏறி விட்டது, விலையைக் குறைக்க ஏற்பாடு செய்யுங்கள் என்று அமைச்சர்களை நிர்பந்திக்கிறார்கள். இந்த நிலையில் உணவுப் பொருள்களுக்கு நல்ல விலை கிடைப்பதில்லை. தன்னலம் கருதாது பிறருக்காக உழைக்கின்ற இந்த விவசாயிகள் தங்களுடைய இழப்பைச் சரிக்கட்ட பணப் பயிரைச் சாகுபடி செய்கிறார்கள். அப்படிச் சாகுபடி செய்கிற பணப் பயிரும் ஒழுங்காக வரவேண்டும். எல்லா வகையிலும் இயற்கை அவர்களுக்கு ஒத்துழைக்க வேண்டும். அறுவடை செய்த பிறகு நல்ல விலையும் கிடைக்க வேண்டும். ஸ்திரமற்ற நிலையில் இருக்கும் விவசாயிகளுக்கு உயர்ந்த பட்சமான விவசாய வருமான வரியைப் போடும்போது அவர்கள் சிரமப்பட வேண்டிய நிலை ஏற்படுகிறது என்பதை அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன்.

நம்முடைய விவசாயிகளின் இன்றைய நிலைமை என்ன என்று பார்க்கும்போது கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகக் கோடிக்கணக்கான ரூபாய்களைக் கடனாக வாங்கி அவர்கள் அந்தக் கடன்களைத் திருப்பி அடைக்கக்கூட முடியாத நிலைமையில் அவர்களுடைய பண்டங்கள் ஜப்தி செய்யப்படும் அளவுக்கு விவசாயிகளுடைய பொருளாதார நிலை இருக்கிறது. இந்த நிலையில் விவசாய வருமான வரியை உயர்ந்த பட்சம் கூட்டி இருப்பது ஏழை விவசாயிகளை மிகவும் பாதிக்கும் என்பதை அமைச்சர் அவர்களுக்குக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, ஒரு ஏக்கர் நிலத்தில் ஒரு பகுதியில் ஒரு விவசாயி பருத்தி பயிரிட்டால் 7 பொதி, 8 பொதி பயிராகக் கூடிய நிலை இருக்கும். சில இடத்தில் 4 பொதி 2 பொதி என்ற அளவுக்குத்தான் இருக்கும். நிறைந்த மகசூல் எடுப்பவர்கள் நல்ல விலைக்கு விற்று விடுகிறார்கள். குறைந்த மகசூல் எடுப்பவர்களுக்கு நல்ல விலை கிடைப்பதில்லை. குறைந்த மகசூல் இருந்தால் அதன் தரமும் குறைந்து விடுகிறது. ஆகவே, அவர்கள் கணக்குக் காட்டும்போது அதிகாரிகளுக்கு மெய்ப்பிப்பது சிரமமான காரியமாக இருக்கிறது. அதிகாரிகளை நாடிச் சென்று அவர்களுக்கு லஞ்சம் கொடுக்க





வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகிறது. இந்த மாதிரி சூழ்நிலையில் விவசாயிகள் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஸ்டாண்டார்டு ஏக்கருக்குக் கொஞ்சம் கூடுதலாக வரி விதித்து கம்பவுண்டிங் முறையில் வரி விதிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொது வருமான வரியின் கீழ் விதிக்கப்படும் வரி விகிதத்தை விட விவசாய வருமான வரி விகிதம் உயர்ந்ததாக இருக்கிறது. சாதாரணத் தொழில் செய்யும் ஒருவர் 20,000 ரூபாய் சம்பாதித்தால் கட்டக்கூடிய வருமான வரி 2,500 ரூபாய்தான். ஆனால் மிகவும் சிரமப்பட்டு பல இன்னல்களுக்கிடையிலே சம்பாதிக்கும் விவசாயி அதே அளவு ரூபாய் வருமானம் வந்தால் அவன் கட்ட வேண்டிய விவசாய வருமான வரி 3,250 ரூபாய் என்று ஆகிறது. இந்த நிலையில் பொது வருமான வரியை விட விவசாய வருமான வரி அதிகமாக இருக்கிறது. விவசாய வருமான வரி பொது வருமான வரியை விட உண்மையிலேயே குறைந்திருக்க வேண்டும். இப்படி இந்த நாட்டின் முதுகெலும்பாக இருக்கும் விவசாயிகளைப் பாதிக்கும் நிலையில் உள்ள இந்த மசோதாவைத் திருத்தி ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்ற முறையில் கம்பவுண்டிங் முறையில் வரி விதிப்பது விவசாயிகளுக்கு நன்மையாக இருக்கும் என்று கூறி சந்தர்ப்பம் அளித்ததற்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இந்த வேளாண்மை வருமான வரி மசோதா மீது நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். வேளாண்மை வரி மூலம் அதி தீவிரமாக விவசாயிகளிடமிருந்து அதிகப்படியான வருவாயை எதிர்பார்க்கும் முறையில் திருத்தப்பட்ட இந்த மசோதா இந்த அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கும்போது இந்த மசோதாவின் நோக்கம் நிச்சயமாக இந்த அரசுக்கு அதிக வரி வேண்டியிருக்கிறது என்பதாகும். அதனை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் ஏற்றுகிற முறை ஒழுங்காக இருக்கிறதா, எவ்வளவு தூரத்திற்கு இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்பதை இந்த அரசாங்கம் சற்று சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத்தைப் பொறுத்தவரையில், ஏற்கனவே நாம் நில உச்சவரம்புச் சட்டத்தை அமல்படுத்திக் கொண்டிருக்கிறோம். அந்த முறையில் ஒருசிலரிடமிருந்து விவசாயம் ஏழை எளியவர்களுக்குச் சென்று சேரக்கூடிய நிலையில் அமையத்தக்கவண்ணம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த நாட்டில் ஒரு பசுமைப் புரட்சியை ஏற்படுத்தி உற்பத்தியைப் பெருக்க பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறோம். அதோடு உணவுப் பொருள் உற்பத்தியில் தன்னிறைவு பெறவேண்டும், பெற்றுவிட்டோம் என்ற நிம்மதி ஓரளவிற்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கிற நிலைமையில் இருக்கிறோம்.

அதுமட்டுமல்ல. இன்று படித்த இளைஞர்களிடத்திலே, அவர்களிடையே ஏற்பட்டுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்ப்பதற்கு விவசாயம் தான் ஒரே வழியாக இருக்கிறது. நம் அரசு

மட்டுமல்ல, பல்வேறு அரசுகளும் அப்படித்தான் எண்ணிக் கொண்டிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில், படித்த இளைஞர்கள் விவசாயம் செய்ய வேண்டியதொரு நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில், விவசாயத்திற்கு ஆக்கமும், ஊக்கமும் அரசாங்கம் கொடுக்கவேண்டிய ஒரு நிலை இருக்கும்போது, மக்கள் விவசாயத்தைக் கண்டு பயப்பட்டு நடுங்கி அதை விட்டு விட்டு ஓடி வேறு எங்கேயாவது பிழைக்க வழி உண்டா என்று நினைக்கக்கூடிய தொரு சூழ்நிலையை இந்த அரசு ஏற்படுத்தும் முறையில்தான் இந்த மசோதா இருக்கிறது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மசோதாவில், பணப் பயிருக்குத்தான் அதிகமாகச் சுமத் தப்பட்டிருக்கிறது என்பதை ஆராயும்போது ஒரு வேளை நமது அமைச்சர்கள் இந்தப் பயிர்களிலிருந்து பணம்தான் விளைகிறதோ என்ற ஐயப்பாட்டுடன்தான் இந்த மசோதாவை இவ்வளவு தீவிர மாக இயற்றியிருக்கிறார்களோ என்ற ஐயப்பாடு கூட எனக்குத் தோன்றுகிறது. நான் அவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்பு கிறேன். பணம் விண்வதில்லை என்யு. ஆனால் இந்தப் பயிர்களுக்கு பணம் உரமாகவும், மற்ற முறைகளிலும் செலவு செய்தால்தான் இதனால் பலன் கிடைக்கும் என்ற நிலை இருப்பதனால்தான் இதற்கு பணப் பயிர் என்ற பெயர் வந்திருக்கிறது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். உதாரணமாக, ரப்பர் தோட்டங்களை எடுத்துக் கொள்வோம்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதுவரையில் நாங்கள் எல்லாம் பணம் பயிராகத்தான் விளைகிறது என்று கருதிக்கொண் டிருந்தோம். ஆனால் உறுப்பினர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு புரிந்து கொண்டோம். பணம் பயிராக விளைவதில்லை என்ற உண்மையை இப்போதுதான் புரிந்து கொண்டிருக்கிறோம். இப்படிப் பட்டதொரு உண்மையை எங்களுக்கும், உலகத்தினருக்கும் உறுப்பினர் அவர்கள் நல்கியமைக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்!

திருமதி த. ந. அனந்தநாயகி: அவர்கள் அப்படிச் சொல்ல வில்லை. நீங்கள் அப்படி நினைக்கிறீர்களா என்று சொன்னாரே தவிர இப்படிச் சாமர்த்தியமாகப் பேசுவது நியாயம் அல்ல.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதிலும் வக்கீலுக்கு வக்கீல் வக்காலத்து வாங்கியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நாங்கள் அப்படிக் கருதிக்கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். அமைச்சர்கள் என்று சொன்னார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: அமைச்சர்களுக்கு அமைச்சர் வக்காலத்து வாங்குவது போல் வக்கீலுக்கு வக்கீல் வக்காலத்து வாங்குவதில் தப்பில்லை.





மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அமைச்சருக்கு முதல் அமைச்சர் வக்காலத்து வாங்கினார். இப்போது சிறிய வக்கீலுக்கு பெரிய வக்கீல் வக்காலத்து வாங்கியதாக எடுத்துக் கொள்ள வேண்டியிருக் கிறது அவர்கள் கூற்றுப்படி.

திரு. ஜே. ஜேம்ஸ்: உறுப்பினருக்கு துணைத் தலைவர் வக்காலத்து வாங்குவதில் எந்தத் தவறும் இல்லை. இப்போது ஸ்டான்டேர்ட் ஏக்கர் வைத்திருக்கும் முறையைப் பார்க்கும்போது பாக்குத் தோட்டங்களுக்கு பத்து சென்ட் ஒரு ஏக்கர் என்று நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. அப்படியானால் ஒரு ஏக்கர் என்பது பத்து ஸ்டான்ட்டேர்ட் ஏக்கர் என்று கணக்காக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பாக்கு 1க்கு 10 என்று சொன்னார்கள். திருத்தத்தைப் படித்து விட்டுப் பேசுவது நன்றாக யிருக்கும். 1க்கு 6 என்று மாற்றியிருக்கிறோம். அதைப் படித்து விட்டுப் பேசுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: நன்றி. பாக்குக்கு ஒரு காலத்தில் நல்ல விலை இருந்தது. இன்றைய நிலையில் பாக்கின் விலை மிகவும் குறை வாகத்தான் இருக்கிறது. ஆயிரம் பாக்கு ஏறத்தாழ 20 ரூபாய் அளவில்தான் இருக்கிறது. ஒரு ஏக்கரில் பாக்கு மரங்கள் பாதி எண்ணம்கூட காய்க்கக்கூடிய நிலையில் இல்லை. ஒரு இடத்தில் உள்ள தோட்டம் இன்னொரு இடத்திலுள்ள தோட்டத்தின் அள விற்கு பலன் கொடுக்கிற நிலையிலும் இல்லை. அது பாக்கைப் பொறுத்த மட்டில் அல்ல. எல்லா விவசாயங்களைப் பொறுத்தும் அப்படிப்பட்ட நிலைதான் இருக்கிறது.

பாக்கு, தென்னை, ரப்பர், வாழை போன்ற பயிர்களுக்கு விதிக்கப் பட்டுள்ள ஸ்டேன்டேர்ட் ஏக்கர் மிகவும் குறைவானது. ரப்பர் பயிரைப்பொறுத்தவரையில், முதல் பத்தாண்டுகள் அதற்குச் செலவு செய்யவேண்டிய பணத்தையும் கணக்கெடுத்து, அதன்மீது செலுத் தப்பட வேண்டிய கவனத்தையும் பார்க்கும்போது அது மிகவும் சிரமமான காரியம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பத்தாண்டுகளுக்குப் பின்னால் ஓரளவிற்கு நல்ல பலனைக் கொடுக் கிறது. அப்படிக் கொடுத்தாலும் கூட இன்றுள்ள அகில உலக மார்கெட்டைப் பார்க்கும்போது ரப்பரின் விலை குறைந்துகொண்டே வருகிறது. நம் நாட்டிலுள்ள ரப்பருக்கு முன்பிருந்ததுபோல் நல்ல வெளி மார்க்கட்டுகள் இல்லை.

இந்நிலையில் ஏற்கனவே விவசாயிகள் பெரும் அல்லல்களுக்கு ஆட்பட்டிருக்கிறார்கள். அதோடு கூட இப்படித் தீவிரமாக விவ சாய வருமான வரியும் அவர்கள் மீது சுமத்தப்பட்டால் அவர் களுக்கு இந்தத் தொழிலில் உள்ள ஆர்வம் குன்றி, இந்த விவசாயத் திற்கு ஆள் இல்லாமல் போய், இந்தத் தொழிலே அழிந்து விடக் கூடிய ஒரு நிலை வரக்கூடும். ரப்பர், பருத்தி போன்றவை நமக்கு மிக அத்தியாவசியமாகத். தேவைப்படுகிற பொருள்களாகும்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1971 ஜூலை 30

இவற்றை நாம் நல்லமுறையில் உற்பத்தி செய்யவில்லை என்றால் நிச்சயமாக வெளி நாடுகளிலிருந்து அவற்றை இறக்குமதி செய்ய வேண்டி வரும். அதனால் நம் ஃபாரின் எக்சேஞ் நிலை பாதிக்கப் படும். மேலும் பொருளாதாரத் துறையில் நமக்கு நெருக்கடியான தொரு நிலை ஏற்படக்கூடும்.

ஆகவே ஃபாரின் எக்சேஞ்ச் ஈட்டித் தரக்கூடிய பொருள்களுக் காவது நாம் ஆதரவு தரக்கூடிய முறையில் இந்த வருமான வரியின் அம்சங்களைத் தயாரித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் வாழைக் கிருஷிபற்றிக் கூறி னார்கள். ஒரு காற்று வந்தால் எவ்வளவோ அழிந்து போகிறது. அதேபோல்தான் ரப்பர் கிருஷியும். ஒரு காற்று வந்துவிட்டது என்றால் பாதி மரங்கள் அடிபட்டு விடுகின்றன. அதை மீண்டும் உற்பத்திக்குக் கொண்டுவரவேண்டுமென்றால் அதற்கு விவசாயிகள் படும் அல்லகளைச் சொல்லிமுடியாது. ஆகவே விவசாயிகளின் மேல் இந்தளவிற்கு வரிச் சுமையை சுமத்தக்கூடிய இந்த மசோதா தேவையா என்பதை நாம் மறுபரிசீலனை செய்யவேண்டும். ஆகவே மேற்சொன்ன காரணங்களினால் இந்த மசோதாவை நான் வன்மை யாக எதிர்க்கிறேன். ஆகவே இந்த மசோதா பொது மக்களின் கருத்தை அறிவதற்காக செலக்ட் கமிட்டிக்கு அனுப்பபட வேண்டு மென்ற என் திருத்தத்தை வலியுறுத்தி அமர்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மசோதாவை ஆதரித்து ஒருசில வார்த்தைகளைக் கூறும் அதே நேரத்தில் இந்த மசோதாவால் விவசாயப் பெருங்குடி மக்கள் எந்தவிதமாகப் பாதிக்கப்படுவார்கள் என்பதனையும் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவது என் கடமை என்று நான் நினைக்கிறேன்.

பொதுவாக நம்முடைய நாட்டிலே விவசாயத் துறையிலே சென்ற சில ஆண்டுகளாகக் கணிசமான அளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களுடைய வருமானத்தில் ஏற்றம் ஏற்பட் டிருக்கிறது. ஆகையினால் நாட்டிலே, பண வீக்கத்தைக் குறைக்க வேண்டுமானால், விலைவாசிகளைக் கட்டுப்படுத்தவேண்டுமானால், விவசாயிகளுடைய வருமானங்களுக்கும் வரிகளை விதிக்கவேண்டும் என்றதொரு நோக்கத்திலே இந்த மசோதா கொண்டுவரப்பட் டிருக்கிறது என்று நான் நினைக்கிறேன். "தியரட்டிகல் எக்கனாமிக்ஸ்" என்று சொல்வார்கள். அந்த தியரட்டிகல் எக்கனாமிக்ஸ்படி இந்தப் பொருளாதார நோக்கம் நல்ல நோக்கம் என்றாலும்கூடப் ப்ராக் டிக்கல் எக்கனாமிக்ஸ் என்று ஒன்று இருக்கிறது. அந்த பிராக்டிக்கல் எக்கனாமிக்ஸ்படி நம்முடைய நாடு ஒரு தனித்தன்மை வாய்ந்த பொருளாதாரத்தைப் பெற்றிருக்கிறது என்பதையும் நாம் இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்கக் கடமைப் பட்டவர்களாக இருக்கிறோம். ஆனால் பல ஆண்டுகளாகவே மத்தியிலானாலும் சரி அல்லது இங்கு



1971 ஜூலை 30] [திரு. எம். ஏ. லத்தீப்]

மாநிலங்களிலானாலும் சரி விவசாய வருமானத்திற்கு வரி விதிக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கை இருந்து வருகிறது என்பதை நாம் அறிவோம்.

இதனுடைய அடிப்படை எப்படி அமைந்து இருக்கிறது என்றால், மு. ப. 11-30
சென்ற பல ஆண்டுகளாக நாட்டிலே பல திட்டங்கள் தீட்டப்பட் டிருக்கின்றன. இந்தத் திட்டங்களின் நோக்கம். இந்த நாட்டின் பொருளாதாரம் பொதுவாக முன்னேறவேண்டும் என்பது தான். ஆனால் இன்டஸ்டிரியல் பேஸ் என்று சொல்வார்கள், இன்டஸ்டிரியல் ஃப்லீட், தொழிற்சாலைகள் தான் அதிகமாக நம்முடைய நாட்டிலே ஏற்படுத்தியிருக்கிறோம். பேசிக் இன்டஸ்ட்ரீஸ், கீ இன்டஸ்ட்ரீஸ், ஸ்மால் இன்டஸ்ட்ரீஸ், காட்டேஜ் இன்டஸ்டிரீஸ் என்று இப்படி பல வகையிலே தொழிற்சாலைகளை நாம் அதிகமாக நிறுவி வந்து இருக்கிறோம். அந்த இடங்களிலே எல்லாம் சர்க்காருடைய பணம் கூட டெபிசிட் பைனான்ஸ் வாயிலாக மிக அதிகமான செலவுக்கு விடப்பட்டிருக்கிறது.

தொழில் அதிகமாகிவிட்ட காரணத்தாலே வேலை வாய்ப்பு அதிக மாக ஆக்கப்பட்டிருக்கின்றது. வேலை வாய்ப்பு அதிகமாக்கப்பட் பட்டிருக்கிற காரணத்தாலே, நாட்டின் வருமானம் அதிகமாகி இருக்கிறது. அதன்படி அனைவரின் வருமானமும் அதிகமாகி இருக் கிறது என்ற அடிப்படையிலேதான் இப்போது இந்த வரி விதிக்கப் பட்டிருக்கிறது. இப்படி தொழில் துறையிலே அதிகமான வரு மானங்களைப் பெற்றால், அந்த வருமானம் எதை வாங்கப் பயன் படுத்தப்படும்? உணவை வாங்குவதற்குத்தான் அந்தப் பணத்தைப் பயன்படுத்துவார்கள். இவ்வளவு ஐந்தாண்டுத் திட்டங்களால், தொழில் துறையில் ஏற்பட்டு இருக்கும் புதிய ரிசோர்சஸ், புதிய வேலை வாய்ப்புகள், அதனால் ஏற்பட்டுவிட்ட அதிகமான வரு மானங்கள் எங்கே செல்கின்றன என்றால், தொழில்கள் அதிகமாக இருக்கும் இந்த நாட்டிலே அவர்கள் முதல் முறையாக உணவுப் பொருள்களை வாங்கிக் கொள்ளத்தான் பயன்படுத்துகிறார்கள். அப்படி அதிகமான மக்கள் உணவுப் பொருள்களை வாங்குவதற்கு முற்படும் காலத்தில், உணவுப் பொருள்களின் விலைகள் ஏறுகின்றன. இப்படி ஏறுவதற்குக் காரணம் தொழில் துறையில் எவ்வளவு முன் னேற்றத்தை நாம் கண்டு இருக்கிறோமோ அதே அளவுக்கு முன் னேற்றத்தை நாம் விவசாயத் துறையில் கண்டு இருக்கவேண்டும். எவ்வளவு முக்கியத்துவம், தொழில் துறைக்குக் கொடுத்தோமோ அவ்வளவு முக்கியத்துவம் விவசாயத் துறைக்கு நாம் கொடுக்க வில்லை என்பது தான் என்னுடைய பணிவான எண்ணமாகும். ஆகவே, நாம் நம்முடைய வருமானத்தை அதிகமாக்க வேண்டும், விலை வாசியைக் கட்டுப்படுத்த வேண்டும்.

பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமானால்—நம்முடைய எண்ணம், நம்முடைய கவனம்—விவசாயத் துறையிலே அதிகமான முன்னேற்றத்தைக் கண்ட பிறகுதான், தொழில் துறையில் முன் னேற்றத்தைக் காணச் செல்லவேண்டுமென்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோளாகும். அது நடைபெறாத காரணத்

[திரு. எம். ஏ. லத்தீப்] [1971 ஜூலை 30

தால் தான் இன்று நாட்டிலே பண வீக்கம் ஏற்பட்டு இருக்கிறது. இன்ப்ளேஷனரி டென்டன்சீஸ் அதிகமாகி இருக்கிறது. விலைவாசிகள் அதிகமாகி, மேலே, மேலே சென்று கொண்டிருக்கின்றன. பாமர மக்கள் அதனால் பாதிக்கப்படுகிறார்கள்.

இப்போது விவசாயத்துறையில் நல்ல முன்னேற்றத்தைக் கண்டு இருக்கிறோம். விவசாயத்துறையிலே ஒரு சிலர் தான் அதிகமான வருமானத்தைப் பெறுகிறார்கள். ஏழையாக இருக்கிற விவசாயி, ஏழை விவசாயியாகவே, ஓட்டாண்டியாகவே இருந்து கொண்டிருக்க, ஒரு சில விவசாயிகள் பல காரணங்களால் பணத்தை அதிகமாகப் பெற்று, பெரும் புள்ளிகளாக ஆகி இருக்கிற ஒரு நிலை நாட்டிலே இருக்கிறது. அதை மறுக்க முடியாது. அப்படிப் பட்டவர்களிடமிருந்து அவர்களுடைய வருமானத்திலிருந்து வரியாகப் பெறுவது நியாயத்தின் அடிப்படையில் அமைந்து இருக்கிறது என்ற உண்மையை நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும். இப்படி நம்முடைய நாட்டிலே இந்த முறை, நல்ல முறையிலே அனுபவ சாத்தியமாகி இருக்கிறது. எனக்கு விவசாயத்துறையிலே அதிகமான ஈடுபாடு இல்லை. அதனுடைய அ, ஆ கூட எனக்குத் தெரியாது. இருந்தாலும் விவசாயத்துறையிலே ஈடுபட்டு இருக்கும் பெரும்பான்மையான மக்களின் பிரதிநிதி என்ற முறையில், அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று நினைக்கிறபோது என்னுடைய குரலை அவர்களின் சார்பாக, அவர்களுடைய உரிமைக் குரலாக எழுப்பாமல் இருந்தால் என்னுடைய கடமையிலிருந்து தவறியவனாவேன் என்று அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நான் இன்னொரு குறையையும் அவர்களுக்குச் சொல்கிறேன். வருமானம் முழுவதையும் கணக்கு வைத்துக்கொண்டு, அந்தக் கணக்கின் அடிப்படையிலே வரியை விதிக்கிறோம். விவசாயி கணக்கு வைத்துக்கொண்டு, கணக்கை அரசாங்கத்திற்குக் காட்டி அதன் அடிப்படையில் வரிகளை நாம் நிர்ணயிக்க வேண்டும் அசெஸ்மெண்ட் செய்யவேண்டுமென்று இருந்தால் நான் அமைச்சர் அவர்களுக்குப் பணிவோடு கூறிக்கொள்வேன். நம்முடைய நாட்டின் நிலை என்ன? நம்முடைய விவசாயி அவ்வளவு முன்னேறி இருக்கிறானா? ஒரு சாதாரண கடிதம் வந்தால் பதைபதைத்துக் கொண்டு ஓடி, அதை வேறொருவரிடத்தில் கொடுத்து, படித்து விஷயத்தை அறிந்து கொள்ள வேண்டிய நிலையில் இருக்கும்போது, இந்த காம்பிளிகேடட் அகௌண்ட் ப்ரோசிஜர், வருடம் பூராவும் கணக்கு எழுதி வைத்து, அவர்கள் கணக்கை சமர்ப்பிக்கவேண்டுமென்று இருக்கும் இந்த முறை சாத்தியமா என்பதை அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய விவசாயிக்கு அவ்வளவு நேரம் இருக்கிறதா? ஆதவன் தோன்றுவதற்கு முன்பு வயலுக்குச் சென்று அவன் மறைந்து வெகு நேரம் சென்று வீட்டிற்குத் திரும்பும் அவன், படிப்பு வசதி இல்லாத, சுகாதார வசதி இல்லாத நிலையில் வாழும் அவன், அவனுடைய எண்ணமே அவனுக்கு இல்லாத நேரத்தில்,



1971 ஜூலை 30]

இந்தச் செய்கையை அவன் மீது சுமத்துவது நியாயம் தானா என்பதை அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படி அந்த அகௌண்ட் முறையை எழுதி வைக்காமல், கம்பௌண்டிங் சிஸ்டம் என்று சொல்வார்களே. அந்த அடிப்படையிலாகிலும், அல்லது வேறு சுலபமான முறையை அனுஷ்டித்து, அதன் வாயிலாக அவன் வரி செலுத்த வேண்டுமென்று சொன்னால், அவர்களுக்கும் நன்றாக இருக்கும், வரி வசூல் செய்பவர்களுக்கும் சுலபமாக இருக்கும். இல்லாவிட்டால், நாம் நம்முடைய பொது வாழ்க்கையில் எவ்வளவுதான் இங்கே பேசினாலும், ஒரு உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நம்முடைய பொது வாழ்க்கையில் இன்னும் பரிபூர்ணமாக தூய்மை ஏற்படவில்லை. யாராக இருந்தாலும் அவர்களிடத்தில் தூய்மை இல்லை. இன்று சாதாரண பாமர மக்களாக இருக்கும் விவசாயிகளிடத்தில் இந்த முறையைப் புகுத்தினால், அதிகாரிகள் மற்றவர்கள், நடுவர்கள் அதை எப்படி எல்லாம் பயன்படுத்திக் கொள்வார்கள், அதனால் விவசாயிகள் எப்படி பாதிக்கப்படுவார்கள் என்பதை சிந்தித்துப் பார்த்து, இந்த கம்பௌண்டிங் சிஸ்டம் முறையிலோ, அல்லது வேறு முறையிலோ, வரி வசூல் செய்தால் நன்றாக இருக்கும் என்று அமைச்சர் அவர்களிடத்தில் முறையிட்டுக் கொள்கிறேன்.

சாதாரணமாக இன்று இருக்கும் நிலையில் ஏதோ கமர்சியல் ப்ராடக்ட், கமர்சியல் கிராப் என்று சொல்கிறார்கள். இன்று கொண்டிருக்கும் முறையில் பார்த்தால், 2 ஏக்கர் வைத்து இருக்கும் ஒரு சாதாரண விவசாயிகூட அவனுடைய நிலத்தில் கரும்பு பயிரிட்டால் அந்தக் கரும்புக்கு அவன் வரி கட்டக் கூடிய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்படுகிறான்.

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்</u> : தலைவரவர்களே, 7½ ஸ்டாண்டர்ட் ஏக்கர் வரை வரியே கிடையாது. 20 ஸ்டாண்டர்ட் ஏக்கர் வரையில் கம்பௌண்டிங் முறை வைத்து இருக்கிறோம். 20 ஸ்டாண்டர்ட் ஏக்கர் வரையில் கம்பௌண்டிங் முறையிலும் வரி செலுத்தலாம், அவர்கள் அகௌண்ட் வைத்து இருந்து அதைக் காண்பித்தாலும், அதன் அடிப்படையில் வரி வாங்கிக்கொள்ள அரசு அனுமதி தந்து இருக்கிறது. இந்த இரண்டு முறையையும் ஒப்புக் கொள்கிறோம். 20 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு மேல் போனால்தான் கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும். 7½ ஸ்டாண்டர்ட் ஏக்கர் வரை வரி இல்லை என்று சட்டத்திலேயே இருக்கிறது.

<u>திரு. எம். ஏ. லத்தீப்</u> : எனவே ஒவ்வொரு விவசாயினுடைய குடும்பத்தின் எண்ணிக்கை, குடும்பத்தின் நிலை இவற்றை அனுசரித்து இந்த வரி முறையை வைத்தால் சுலபமாக இருக்கும். ஏதோ ஒரு எண்ணிக்கையின் அடிப்படையில்.........

MR. SPEAKER : The hon. Member has echoed the feelings of the electorate. He may now wind up.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய தொகுதி மக்களுடைய குரலை இங்கே எதிரொலித்துவிட்டார்கள். அந்த அளவில் அது பதிவாகிவிட்டது. எனவே சீக்கிரமாக முடித்துக் கொள்ளலாம்.

திரு. எம். ஏ. லத்தீப் : எனவே ஒவ்வொரு குடும்பத்தின் நிலையை அனுசரித்து, அதற்காக ஒரு "காம்ப்ரஹென்சிவ் பில்" இருந்தால் நன்றாக இருக்கும். இங்கே உள்ள உறுப்பினர்கள் அனைவரும், இரண்டு நரப்பில் உள்ளவர்களும் அடங்கிய ஒரு கூட்டுக் குழுவிற்கு இதை அனுப்பிவைத்தால் நன்றாக இருக்கும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. நமது நாட்டில் எண்பது சதவிகிதத்தினர் விவசாய மக்கள். அவர்கள்தான் நமது எஜமானர்கள். அவர்களுடைய வாக்குகளைப் பெற்றுத்தான் நாம் இங்கே வந்திருக்கிறோம். எனவே அவர்களுடைய வாழ்க்கையில் பாதகங்கள் ஏற்படக்கூடிய வகையில் இவர்களுக்கு இன்னல்கள் ஏற்படக்கூடிய வகையில், அவர்கள் நம்மைப் பார்த்து வெறுப்படையக்கூடிய வகையில் இந்தச் சட்டங்களின் சில அம்சங்கள் இருப்பதால் இதை மாற்றியமைத்தால் இந்தச் சட்டம் வரவேற்கத்தக்கதாக இருக்கும் என்று கூறி அந்த நிலைக்கு உள்பட்டு இச்சட்டத்தை ஆதரித்து என் உரையை நிறைவு செய்துகொள்ளுகிறேன்.

*திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை ரீதியில் விவசாய வருமான வரி விதிப்பை வரவேற்கும் இதே நேரத்திலே முன்னுள்ள சட்டத்திலிருந்து இப்போதுள்ள இச் சட்ட முன்வடிவைப் பார்த்தால், ஸ்டாண்டர்டு ஏக்கர் கணக்கில் புதிய அடிப்படையில் பல மாறுதல்களைக்கொண்டு வந்திருக்கின்றார்கள். அங்கத்தினர் யாரிமுத்து அவர்கள் சொன்னதுபோல சிலவகைப் பயிருக்கு அதிகமாகவும் சிலவகைப் பயிருக்குக் குறைவாகவும் வரி விதிக்கத்தக்க அளவிற்கு இப்போது புதிய மாறுதல்களைச் செய்திருக்கிறார்கள். ஏலக்காய், டீ, காப்பித் தோட்டம் போன்றவற்றுக்கு முன்பிருந்ததைவிட இப்போது புதிய சட்டத்தில் சில புதிய சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால் அதே நேரத்தில் வெற்றிலைக்கு இப்போது ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று போட்டிருக்கிறார்கள். இதெல்லாம் மூன்று வருடத்துப் பயிர். குறைந்தது ஒன்றேகால் ஆண்டுக்குப் பிறகுதான் மகசூல் கிடைக்க ஆரம்பிக்கும். மொத்தத்தில் ஏக்கருக்கு ரூ. 500 அல்லது ரூ. 600 தான் வருமானம் வரும்.

மிளகாய், நிலக்கடலை, பருத்தி இதெல்லாம் பாசனத்தின் மூலம் விளையக்கூடியதாகும். மிளகாய்வற்றல் எங்கள் வட்டாரத்தில் காடுகளில்கூட, மழைக்காலங்களிலே போட்டுவிட்டால், இரண்டு அல்லது மூன்று மாதத்தில் அது வளரும். மூன்று ஏக்கர் போட்டாலும்கூட வரி கட்ட வேண்டிவரும். ஐந்து அல்லது ஆறு





ஏக்கர் உள்ள விவசாயிகூட இரண்டு ஏக்கர் பருத்தியும் இரண்டு ஏக்கர் மிளகாய் வற்றலும் இரண்டு ஏக்கர் கடலை என்று போட்டாலும் அவனும் ஏழரை ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலத்திற்கு மேல் வருகிறதென்று சொல்லி வருமான வரியைச் செலுத்தக்கூடிய நிலை ஏற்பட்டுவிடும். சென்ற காலங்களில் இது எப்படி நடந்து வந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, நிறைய வருமானம் உள்ளவர்கள் எப்படியும் கணக்கினை எப்படி எப்படியோ எழுதிக் கொடுத்து வருமான வரியைக் கூடக் கட்டாமல் தப்பித்துக்கொண்டிருக்கின்றார்கள். அல்லது ஏதோ கொஞ்சம் கட்டிவிட்டு தப்பித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் சாதாரண ஏழை விவசாயிகளுக்கு கணக்கும் எழுதத் தெரியவில்லை. உண்மையான கணக்கை அவர்கள் எழுதிக் கொடுத்தாலும் அதிகாரிகள் அவற்றைச் சுலபமாக ஏற்றுக்கொள்ளுவதில்லை. எனக்குத் தெரியும், ஒருவருடைய மொத்த வருமானமே ரூ. 600 தான். அவர் ரூ. 500 வருமானவரி என்று செலுத்தவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

விவசாயத்தில் செய்யக்கூடிய பலதரப்பட்ட செலவினங்களையும் ஒரு சாதாரண ஏழை விவசாயி கணக்கெழுதிக்கொண்டு இருப்பது என்பது மிகவும் கஷ்டம். முடியாத காரியம் என்றுகூடச் சொல்லலாம். "கம்பௌண்டிங்" முறையில் வரி செலுத்தலாம் என்று இருக்கிறது. ஆனால் இப்போது பார்க்கப்போனால் சாதாரண விவசாயி ஐந்து ஏக்கர் அல்லது பத்து ஏக்கர் வைத்துக்கொண்டிருப்பவர்கள்கூட இப்படிப்பார்த்தால் இருபது ஸ்டாண்டார்டு ஏக்கருக்கு கணக்குப்படி வரி செலுத்தவேண்டிய நிலை ஏற்படுகிறது. இதன்படி ரூ. 412 வரி செலுத்தவேண்டி வருகிறது. இது மிகவும் அதிகமானது. சாதாரண விவசாயியால் செலுத்த முடியாதது மட்டும் அல்ல விவசாயத்திலேயே ஆர்வம் இல்லாது செய்துவிடக் கூடிய நிலையை ஏற்படுத்தும்.

நீர்ப் பாசனம் என்று சொல்லும்போது பலவகையான நீர்ப் பாசனம் இருக்கிறது. அரசாங்கத்தின் கால்வாய் மூலம் நீர்ப் பாசன வசதி செய்யப்படுகிறது. கண்மாய் மூலம் பாசன வசதி செய்யப்படுகிறது. கிணற்று மூலம் பாசன வசதி செய்யப்படுகிறது. அரசாங்கத்திடமிருந்து ரூ. 8 ஆயிரம் ரூ. 10 ஆயிரம் என்று கடன் வாங்கி கிணறு வெட்டி பல இடங்களிலே பாசனம் செய்ய வேண்டிய நிலையிருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும்போது வாங்கிய கடனுக்கு வட்டி செலுத்துவதையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் எங்கள் வட்டாரத்தில் அதாவது சங்கரன்கோவில், கோவில்பட்டி, விளாத்திகுளம் போன்ற வட்டாரங்களில் பணப் பயிர் என்று சொல்லப்படும் பருத்தி, நிலக்கடலை, மிளகாய்வற்றல் போன்றவற்றைப் போட்டால் அவர்களுக்குச் சராசரி ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 300 முதல் ரூ. 500 வரை தான் நிகர வருமானம் வருகிறது. ஸ்டாண்டார்டு ஏக்கர் அடிப்படையில் கணக்கெடுக்கும் போது மட்டுமல்லாமல் இந்த வருமான வரி விதிப்பின் அடிப்படையில் பார்க்கும்போது மொத்தம் ஐந்து ஏக்கர் உள்ள விவசாயியும் வருமான வரி அதிகாரிகளிடம் போய் நிற்கவேண்டிய நிலை ஏற்படுகிறது.

[திரு. சோ. அழகர்சாமி] [1971 ஜூலை 30

அரசாங்கத்தில் பதினைந்து ஸ்டாண்டார்டு ஏக்கருக்கு உச்ச வரம்பு என்று போட்டிருக்கின்றார்கள். ஏறத்தாழ இந்த விவசாய வருமானவரி விதிப்பிற்கு என, நிர்ணயித்துள்ள ஸ்டாண்டர்டு ஏக்கருக்கும், உச்சவரம்பு ஸ்டாண்டர்டு ஏக்கருக்கும் கொஞ்சம் வித்தியாசம் இருந்தாலும் கூட, அனேகமாக வரி என்று கட்டும்போது தங்களுடைய நிலம் உச்சவரம்பிற்குக் குறைவாக வைத்திருந்தாலும், இவர்கள் வருமானவரி அதிகமாகக் கட்டவேண்டிய நிலை ஏற்படுகிறது. எனவே இந்த 20 ஸ்டாண்டர்டு ஏக்கருக்குக் கீழ் உள்ளவர்கள்தான் இதனால் மிகவும் பாதிக்கப்படுவார்கள். பெரிய பெரிய டீ எஸ்டேட் உள்ளவர்கள் காப்பித் தோட்டம் உள்ளவர்கள் எல்லாம் அதிகமான வருமானம் உள்ளவர்கள். ஆனால் அவர்களுக்கு முன்பைவிட தற்போது சில சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஏன் இப்படிப்பட்ட சலுகைகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று தெரியவில்லை.

அதே நேரத்தில் பருத்தி, நிலக்கடலை, மிளகாய் வற்றல், மகசூல் செய்யும் நிலங்களுக்கு முதலில் இருந்ததைவிட தற்போது வரி விகிதம் கூடுதலாக்கப்பட்டிருக்கிறது. 3/5 ஏக்கர் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இருந்ததை 4/5 ஏக்கர் என்று ஆக்கியிருக்கிறார்கள். 60 ஸெண்ட்டை 80 ஸெண்ட்டாக உயர்த்தியிருக்கிறார்கள். இதிலே கூட பாசனத்தின் அடிப்படையில் என்று சொல்லும்போது கிணற்று பாசனத்திற்கு ஒரு அடிப்படையிலும் கிணற்றுப்பாசனம் அல்லாதவற்றுக்கு வேறு அடிப்படையிலும் ஸ்டாண்டர்ட் ஏக்கர் நிர்ணயிக்கலாம் என்று கருதுகிறேன். அதோடு இந்த ஏலக்காய், டீ, காப்பித் தோட்டங்களுக்குக் கொடுக்கப்பட இருக்கும் சலுகைகள் பொருத்தமானதாக இல்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவரவர்களே, டீ, காப்பித் தோட்டங்களுக்குச் சில புதிய சலுகைகள் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லுகின்றார்கள் மாண்புமிகு அங்கத்தினர். ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு 400 ரூபாய் வருமானம் என்று கணக்கெடுத்து அதன்படித்தான் போடப்பட்டிருக்கிறது. இந்த கம்பௌண்டிங்தான் இருக்கிறதே தவிர, இது எல்லாம் டீ எஸ்டேட்டுகளுக்கு வராது. கம்பௌண்டிங்கும் 20 ஸ்டாண்டர்டு ஏக்கர்களுக்குத்தான் வருமே தவிர இருபது ஸ்டாண்டர்டு ஏக்கரைத் தாண்டிவிட்டால் பிறகு கன்வெர்ஷன் முறை எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, விளக்கத்திற்கு நன்றி. பழைய சட்டத்தில் தேயிலை, காப்பித் தோட்டமானால் 60 செண்ட்டை ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கராக வைத்திருந்தது இப்போது 80 செண்டு என்று ஆக்கியிருக்கிறார்கள். 3/5 என்று இருந்தது இப்போது 4/5 என்று மாற்றப்பட்டிருக்கிறது.



1971 ஜூலை 30]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவரவர்களே கடைசியில் 20 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் பார்க்கும்போது முன்பு இருந்ததைவிட இப்போது டீ காப்பித் தோட்டங்களுக்கு ரேட்ஸ் அதிகமாகத்தான் ஆக்கியிருக்கிறோம். ஏக்கருக்கு இவ்வளவு என்று. இதனால் ஒன்றும் பாதகம் வந்துவிடாது.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, எப்படியானாலும் சாதாரணமானவர்கள் இன்கம்டாக்ஸ் விதிக்கக்கூடியவர்களிடம்போய் கணக்குக்காட்டினால் "உங்கள் பக்கத்து நிலத்தில் விளைந்ததே" என்று ஏதாவது சொல்லி வரியை விதித்துவிடுகின்றார்கள். இதேபோல் கம்பௌண்டிங் முறையில் செலுத்துவது கூட 20 ஏக்கர் புஞ்சை வைத்துக்கொண்டிருப்பவர்கள் ஐந்து ஏக்கரில் இரண்டு ஏக்கரில் கடலை போன்று ஏதாவதுபோட்டால் 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் அளவிற்கு உள்ளவர்களுடைய வரிக்கு உள்ளாக்கப்பட்டுவிடுகிறார்கள். அவனும் ரூ. 412 வரியாகச் செலுத்தவேண்டிவருகிறது. எனவே இந்த வரி விதிப்பு அதிகமாக இருக்கிறது. அதிகாரிகளும் சிறிய விவசாயிகள் சொல்லுகிறதை சுலபமாக ஏற்றுக்கொள்ளுவதில்லை. இஷ்டப்படி வரி விதித்துவிடுகிறார்கள். உண்மையான கணக்காக இருந்தாலும் இதை சாதாரண சின்னச்சின்ன விவசாயிகள் விஷயத்தில் ஒப்புக்கொள்ளுவது கிடையாது. அதிகமான பெரிய கஷ்டம் அவர்களுக்கு உண்டாகும். அவர்கள் யாரைப்போட்டுக் கணக்கு எழுத முடியும்? வரி விலக்கு ஏழரை ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்பதை 10 ஸ்டாண்டர்ட் ஏக்கராவாக்க வேண்டும். இப்போது சாதாரணமாக ஒரு கிணறு வெட்டுவது மூலம் 5 ஏக்கரா தோட்டம் போட்டவர்கள் 8 ஸ்டாண்டர்ட் ஏக்கராவுக்கு மேல் வருகிறது என்று வரி விதிப்புக்குள்ளாவார்கள். மிளகாய் வத்தல், கடலை, பருத்தி ஆகியவைகள் பயிரிட்டால் பருத்தித் தேவை நமக்கு 11 லட்சம் பேல்கள் என்று அறிவிக்கப்பட்டது. நம் மாநிலத்திலே 4 லட்சம் பேல்கள்தான் விளைகிறது. விவசாயிகளிடத்தில் உற்சாகம் ஏற்பட்டு உற்பத்தியைப் பெருக்குகிற நேரத்திலே பருத்தியைப் பொறுத்தமட்டில் 3/4 ஏக்கராவை ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று வைத்திருப்பது பொருத்தமாகாது. நிலக்கடலை பயிரிட்டாலும் அதே மாதிரிதான்; வெற்றிலை, மிளகாய் வத்தல், பருத்தி, நிலக்கடலை போன்ற பொருள்களுக்கும் விதி விலக்கு அளிக்க வேண்டும். 7 1/2 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்பதை 10 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று செய்வது பொருத்தமாக இருக்கும்.

அதே நேரத்தில் இந்த கம்பவுண்டிங் வரி செலுத்தக்கூடியதை 20 ஸ்டாண்டர்ட் ஏக்கரா வரை வரி விகிதத்தை மாற்றி அமைக்க வேண்டும். கொஞ்ச நிலம் வைத்திருந்தாலும் இப்போதுள்ள ஸ்டாண்டர்டு ஏக்கர் விகிதப்படி வரிக்கான கணக்கு வந்து விடும். 2 ஏக்கரா மிளகாய் வத்தல் என்பதை 4 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்றும், 2 ஏக்கரா பருத்தி என்பதை 3-1/2 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்றும் கணக்கிடவேண்டி வருகிறது. இந்த முறையைக் கொஞ்சம் பரிசீலனை செய்ய வேண்டும். இப்படி வரி போடுவதால் சாதாரண

[திரு. சோ. அழகர்சாமி] [1971 ஜூலை 30

விவசாயிகளுக்கு இடைஞ்சல் ஏற்படும். தொந்தரவுகள் ஏற்படும். எனவே இதைச் செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டுமென்று என் கட்சியின் சார்பில் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயப் பணப் பயிர்களுக்குப் போட வேண்டுமென்று கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த வரியை, விவசாய வருமான வரித் திருத்த மசோதாவைப் பற்றிப் பல கருத்துக்கள் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

முதலில் இப்படி ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்ததே சரியல்ல என்பதை வற்புறுத்திச் சொல்லிக் கொள்கிறேன். இந்த வரியை மிக வன்மையாகக் கண்டிக்கிறேன். இன்றைக்குத் தமிழகத்திலே சமதர்ம சமுதாயத்தை அடைகின்ற லட்சியத்தை ஏற்றுக் கொண்டு 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரா உச்ச வரம்பு என்று கொண்டு வந்த தற்குப் பின்னாலே இப்படி ஒரு விவசாய வருமான வரியைப் போடுவது தவறு. அதிலே வருமானம் குறைவு. அதை வசூலிக்கப் படுகிறபாடு அதிகம். ஆகவே அது தேவையில்லை.

அன்றைக்கே எங்கள் கட்சி ஆட்சியிலிருந்தபோது இந்தக் கருத்தை அடிக்கடி வலியுறுத்தி வந்தேன். நீங்கள் போடுகிற அக்ரிகல்சுரல் இன்கம்டாக்ஸ்ஸை தோட்டப் பொருள்களுக்குப் போடுங்கள். காபி, டீ, ரப்பர், பாக்கு, வெற்றிலை இது போன்ற தோட்டப் பொருள்களுக்குப் போடுங்கள் என்று கூறியிருக்கிறேன்.

உச்ச வரம்பை 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று கொண்டு வந்ததற்குப் பின்னர் இப்படி ஒரு வரியைக் கொண்டு வருவது என்பது விவசாயிகளுக்குத் தொல்லையை ஏற்படுத்தும். உண்மையிலேயே பசுமைப் புரட்சி என்று சொல்லி விவசாயிகளை பல மாற்றுப் பொருள்களைப் பயிரிடுங்கள் என்று சொல்லி விட்டு, மல்டிபில் கிராப் சிஸ்டம், ரொடேஷன் கிராப் சிஸ்டம் என்று இப்படியெல்லாம் கொண்டு வந்து விட்டு ஒரு புறத்திலே அவர்கள் மாற்றுப் பயிர்களைப் பயிரிட ஆரம்பித்திருக்கும் நேரத்தில், நீங்கள் மாற்றி, மாற்றிப் பயிர்களைப் போடுவது போல நாங்களும் மாற்றி மாற்றி வரியைப் போடுவோம் என்று சொன்னால் அது நியாயமாகாது.

வரவு–செலவுத் திட்டத்தை கனம் அமைச்சரவர்கள் கொண்டு வரும்போது இருந்ததை விட இப்போது பணப்பயிர்களுக்குச் சற்று அதிகமாகவே வரி போடுவதாக அறிகிறோம். இதை எந்த நியாயத்திற்கு இந்த அரசு உட்படுத்துகிறது என்பது புரியவில்லை. வரவு–செலவுத் திட்டத்தைப் போடுகிற நேரத்திலே விற்பனை வரியைப் போடுகிறோம் என்றார்கள். சர்சார்ஜ் 10 சதவிகிதம் என்றார்கள். இன்றைக்கு அதை 5 ஆகக் குறைத்து சென்னை நகரத்திற்கு மட்டும் இருந்ததை எல்லா இடங்களுக்கும் விஸ்தரித்து விட்டார்கள். இன்றைக்கு விவசாயம் அதிகமாகப் பாதிக்கப்பட்ட அளவிலே இப்படி ஒரு வரி போடுவது என்பது வன்மையாகக் கண்டிக்கத் தக்க ஒன்றாகும்.



1971 ஜூலை 30] [திருமதி த. ந. அனந்தநாயகி]

இந்த அரசாங்கம் விவசாயிகளுக்கு ஏதாவது பாதுகாப்புக் கொடுத்து இருக்கிறார்களா? மழை இல்லாமற் போனால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். விவசாயிகள் பாதிக்கப்படும்போது கிஸ்தி ரெமிஷன் கொடுக்கிறோம். ஆனால் வரியிலிருந்து அவர்களுக்கு பாதுகாப்பு இருக்கிறதா? கிராப் இன்ஷ்யூரன்ஸ் கொண்டு வரப்பட வில்லை. விவசாயிகளுக்கு எந்த விதமான பாதுகாப்பும் இல்லை. விவசாயிகளுக்கு வருமானம் இல்லாமல் இப்படிப்பட்ட வரிகள் மேலும், மேலும் போடப்படுவதால் அவர்கள் மிகவும் தொல்லைகளுக்கு ஆளாகக் கூடும். அதனால் விவசாயத்தில் உற்சாகம் குன்றி விடும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

கிரவுண்ட் நட், கோகனட் ஆகியவைகளுக்கு கருணை கூர்ந்து வரிச் சலுகை தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கடலை, மிளகாய் ஆகியவைகளுக்கு வரி போடுவது நல்லதல்ல. ரப்பர், காபி போன்றவைகளுக்கு ஆகும் பயிர் செலவு ஆரம்பத்தில் ஆகும் செலவு தான். முதலில் செலவு செய்து இவைகளைப் பயிர் செய்துவிட்டால் பிறகு 20, 30, வருடங்களுக்கு எந்தவிதமான செலவும் இல்லை. வாழைக்குச் சலுகை தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பெரும் மழை, புயல், காற்று ஆகியவைகளினால் வாழை வெகுவாகப் பாதிக்கப்படும். வீழ்ந்து விட்ட வாழைக்கும் இந்த அரசு வரி போட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. சண்முகம் : வீழ்ந்து விட்ட வாழைக்கு இந்த அரசு வரி போடவில்லை. அப்படிப்பட்ட கொடுமையான அரசு இது அல்ல.

திருமதி த. ந. அனந்தநாயகி : வீழ்ந்து விட்ட வாழைக்கு இந்த வரி போடவில்லை என்று கனம் அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் இன்று இருக்கிற விதிப்படி அவர்கள் கட்டாயம் வரி கொடுத்துத்தான் ஆக வேண்டும். கணக்குப்பிள்ளை வரி கொடுக்கவில்லை என்றால் விட மாட்டார்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஒன்றைத் தெளிவாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இந்த அரசு வரி விதிக்கிறது என்று சொன்னால் பாதிக்கப்படுகிற நேரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கட்டாயம் வரி விலக்கு அளிக்கப்படும். அப்படியில்லாமல் கொடுமையாக வரி வசூல் செய்கிற அரசு இதுவல்ல. இந்த வாக்குறுதியை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அமைச்சரவர்கள் கொடுத்த வாக்குறுதிக்காக விவசாயிகளின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கம்பவுண்டிங்க்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. இதனால் விவசாயிகளுக்கு பெரும் தொல்லைகள்தான் ஏற்படும். வியாபாரிகளுக்கு கம்பவுண்டிங் என்று வைத்திருப்பதில் அர்த்தம் இருக்கிறது. வியாபாரிகள் கணக்கு வைத்துக் கொள்வது சுலபம், அதற்கென்று கணக்குப்பிள்ளைகள் இருக்கிறார்கள். ஆனால் விவசாயிகள் கணக்கு வைத்துக் கொள்வது என்பது சுலபமல்ல. ஏதோ ஓரளவுக்கு அப்பாவி விவசாயிகளுக்கு கணக்கு வைத்துக் கொள்ளத்

தெரியாது. இப்போது படித்தவர்கள் விவசாயம் செய்ய வருகிறார்கள். அவர்களிடத்திலே போய் கம்பவுண்டிங் வசூலிப்பது என்பது எளிதானதல்ல. 7 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று கடலை, மிளகாய் இவைகள் பயிரிடுபவர்களுக்கு இருப்பதை மாற்றி 14 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று செய்ய வேண்டும். (மணியடிக்கப் பட்டது) இரண்டு உறுப்பினர்களுக்கு அவ்வளவு நேரம் கொடுத்தீர்கள். திரு. லத்திப் அவர்களுக்கு அவ்வளவு நேரம் கொடுத்தீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு உறுப்பினர்கள் பேசினார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : ரொடேஷன் கிராப்சில் மிளகாய்க்கு விலை அதிகம். எண்ணெய் பொருள்களுக்கு விலை அதிகம். ஆகையால் எண்ணெய் விதைகள் அதிகம் உற்பத்தி செய்யப்படும். மிளகாய்; பருத்தி இவற்றிற்கு வரி போடப்படுவதால் கரும்பு போன்றவை அதிகம் பயிரிடப்படும். அப்போது அதற்கு கம்பௌண்டிங் பெசிலிடி இருக்காது. அதிகாரிகளிடத்தில் என்ன மாதிரி கணக்குகள் கொடுப்பது, அவர்கள் எந்தமாதிரி தீர்மானிக்கப் போகிறார்கள்—இவை எல்லாம் பெரிய கஷ்டமாகிவிடும். வக்கீல் வீட்டுக்கும், ட்ரிப்யூனலுக்குத்தான் அலைந்து கொண்டிருக்க நேரிடும். ஆகவே, கம்பௌண்டிங் ரேட்டை 50 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்குக் குறைக்கக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயிகளை ஊக்குவிக்கிறோம், பசுமை புரட்சி ஏற்படுத்தியிருக்கிறோம் என்பதாக எல்லாம் சொல்லிவிட்டு இன்றையதினம் விவசாயிகள் தலையில் கைவைத்துவிட்டது என்று சொல்ல விரும்புகிறேன். வருமான வரியில் கூட 6,000 வரை விலக்கு அளித்திருக்கிறார்கள். ஆனால் வரி விலக்கு வரம்பை இதில் 4,000 ஆகக் குறைத்து விட்டோம். இது சரியல்ல. இதை 6,000 வரை விலக்கு என்கிற அளவில் உயர்த்தவேண்டும். மேலும் ஸ்லாப் அளவைக்கூட எக்கச்சக்கமாக உயர்த்தியிருக்கிறோம். இதுவும் சரியல்ல. ஸ்லாப் அளவை ஐந்து, ஐந்து .பைசா என்ற அளவில் உயர்த்தவேண்டும் உரவிலை ஏறிவிட்டது. கூலி விகிதம் அதிகப்பட்டிருக்கிறது. விவசாயிகள் பேரில் உங்களுக்கு அக்கறை இருக்குமானால் இந்த மசோதாவையே கைவிடவேண்டும்.

அதுவும் மாங்காய் தோப்புக்கு 1 ஏக்கர் விலக்கு கொடுக்கப் படுகிறது. ரெவின்யூ அமைச்சர் வட்டத்தில் மாங்காய்த் தோப்பு தான் அதிகம் போல இருக்கிறது. தோட்டப் பயிருக்கு எல்லாம் அதிகப்படுத்திவிட்டு உணவுப் பயிருக்குக் குறைத்திருப்பது வரவேற்க தக்கது அல்ல என்று கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. கே. பி. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய வருமான வரி திருத்த மசோதா மீது ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.



1968-ஆம் ஆண்டில்தான் விவசாய வருமான வரிச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. இந்த மூன்றாண்டுகளுக்குள் வரி விகிதங்களைக் கூட்டியும், கம்பவுண்டிங் அளவைக் குறைத்தும், வரியைப் பல மடங்கு உயர்த்துவதற்கு விவசாயத் துறையில் வருமானம் எதுவும் பெருகிவிடவில்லை. அதற்கு மாறாக விவசாயக் கூலி அதிகப்பட்டு பூச்சி மருந்துகள், ரசாயன உரங்கள் அதிகப்பட்டு விவசாயிகளுக்கு வருமானம், பெரும் அளவுக்கு, குறைந்திருக்கிற காலம் இது. இந்த நேரத்தில் இதுபோன்ற திருத்த மசோதாவைக் கொண்டு வருவது விவசாயப் பெருங்குடி மக்களிடையே பெரிதும் அதிருப்தியை உண்டாக்கியிருக்கிறது.

மற்றவற்றுக்கு எல்லாம் தேய்மான செலவுகள் அனுமதிக்கப் படுகிறது. ஆண்டாண்டாக சாகுபடி செய்து வருகிற நிலத்தின் வளமும் ஒவ்வொரு ஆண்டும் குறைந்து போகிறது. நில வளம் குறையக் குறைய ரசாயன உரத்தின் அளவை அதிகப்படுத்த வேண்டிய நிலை—அதன் காரணமாக பயிர்ச் செலவு அதிகம்தான் ஆகிறது. இதை எந்த வகையிலும் கணக்கில் எடுக்கவில்லை.

1968-ல் திருத்தம் கொண்டுவரப்பட்டபோது வருமானத்தின் அடிப்படையில் வரி செலுத்தும் விவசாயிகளுக்குச் சலுகை அளிக்க வேண்டும் என்ற அடிப்படையில் வரி விலக்கு ரூபாய் 3,500 என்றதை 4,000 ஆகத்தான் உயர்த்தினார்கள். ஆனால் இப்போதோ வரி விகிதத்தை 25 சத விகிதம் என்பதை 30 சத விகிதமாகவும், 30 சத விகிதத்தை 40 சத விகிதமாகவும், 40 சத விகிதத்தை 55 சத விகிதமாகவும் அதிகமாக்கப்பட்டிருக்கிறது. கம்பௌண்டிங் அளவையும் குறைத்துவிட்டார்கள். 16 ஸ்டாண்டர்ட் ஏக்கர் கொண்ட ஒரு விவசாயி 1967-ல் ரூபாய் 4.50 வரிக்கட்டிய பூமிக்கு 1968-ல் ரூ. 11.25 கட்டினால் இன்றைக்கு இந்த மசோதா மூலம் ரூ. 45 கட்ட வேண்டி வரும். இது 1967-ஓடு ஒப்பிடுகிறபோது 10 மடங்கு என்றால் 1968-ஓடு ஒப்பிடுகிறபோது நான்கு மடங்காகும். கண்டிப்பாக கம்பௌண்டிங் அளவை உயர்த்த வேண்டும்.

விவசாயிகள் வருமான அடிப்படையில் வரியைக் கட்டத் தயாராய் இருக்கிறார்கள். வருமான கணக்கைக் கொடுக்கத் தயாராய் இருக்கிறார்கள். எந்த அடிப்படையில் விளைச்சல் கிடைக்கிறது. வருமானம் கிடைக்கிறது என்பதாக எப்படி கணக்கிடப் போகிறார்கள். பல லட்சக்கணக்கான விவசாயிகள் இதனால் பாதிக்கப்படப்போகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். உணவு உற்பத்தியும் பாதிக்கப்படும். 3 போக சாகுபடித் திட்டமும் பெரும் அளவுக்கு பாதிக்கப்படும். 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரில் 3-ஆம் போகமாக நிலக்கடலை போட்டால் அது கம்பௌண்டிங் அளவு 20 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு மேல் போய் விடும். வருமான அடிப்படையில் வரி கட்டவேண்டும். அதற்கு நிலக்கடலையே போடாது விட்டுவிடுவார்கள். ஆகவே கம்பௌண்டிங் அளவை உயர்த்த வேண்டுமென்று பல லட்சக்கணக்கான விவசாயிகள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே. பி. கோபால்] [1971 ஜூலை 30

அடுத்து ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பதற்கான விளக்கம் கடுமையாக இருக்கிறது. அதன் கடுமையைக் குறைக்க சர்க்காரே சில திருத்தங்கள் கொடுத்திருப்பதற்கு நன்றி. மேலும் அந்த விளக்கத்தைத் தளர்த்தவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ப்ளாண்டேஷன், நான்-ப்ளாண்டேஷன் இரண்டையும் ஒன்றாக இணைக்கக் கூடாது. நான்-ப்ளாண்டேஷனுக்குத் தனிச் சலுகை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு கம்பவுண்டிங் அளவையும் உயர்த்த வேண்டுமென்று சொல்லி, பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

DR. H. V. HANDE : Hon. Speaker, Sir, even though on behalf of the Swathantra party we have not been able to move a motion for referring the Bill to a Select Committee (in view of the rules and in view of the fact that Thiru K. T. K. Thangamani is moving such a motion we have not been permitted to do so) I want to say categorically that we are supporting the motion to refer the Bill to Select Committee for the following reasons.

There is a feeling among the public that whatever we are getting from agricultural operations, this Bill will increase the burden of taxation on the agriculturists by nearly five times, if we take the average of last three years and what is being levied now. The most important point I would like to bring to the attention of the Hon. Minister is this. There has been a general tendency on the part of Central Government to compel almost all the State Governments to increase their taxes. This has been going on for the past several years. Unless the State mobilises higher resources, the State Government would always be coming to the Centre for help. That is why the Centre has been asking the States to raise more resources.

There is another reason also. The State Government have been constantly saying " We want greater share on central excise, we want greater share on income-tax ". The best answer to the State Government according to the Central Government and according to the Central Planning Commission is to force them, to cajole them and give suggestions to see that the quantum of taxation at the State level is increased. The only method, barring sales tax—others are minor things—the commonest one is agricultural income-tax. The State Government, without realising the implications involved in this— that is my fear, more important fear— are augmenting the State resources in a very sensitive field where the agricultural operators themselves, especially the persons who are involving themselves in the so-called cash crops will be put to such hardships—I fear, I really express great concern on the floor of the House—that a situation may arise after a couple of years or 3 or 4 years when the quantum of productivity that we are able to achieve from these cash crops will be steadily and slowly reduced, or at any rate, the rapid way with which it is increasing now will be put an end to. That requires very serious consideration.



1971 ஜூலை 30] [Dr. H. V. Hande]

I want the Cabinet itself, I want the Hon. Chief Minister, Hon. Revenue Minister and everybody concerned to give complete attention to this matter.

Then Sir, this has been going on in other States also, I have also checked up. A few other States—Andhra State and other States—have also been caught. But they are not going on with it as fast as our State. Of course Kerala has gone about it even before. Because the other States have realised the dangers involved in it, they are going a little cautiously. I want the Government to exercise the same caution because we are increasing the entire agricultural income-tax by nearly five times.

Then, there is another feeling by Dr. Gadgil which was expressed in the Planning Commission's Report. I do not have a copy of it now. But he has clearly expressed that there is a general feeling and that expression of his views gives an impression that 'there is a general feeling that the rural sector is having a lot of money for capital and you tap it. Urban sector has been completely tapped and the rural sector has got a lot of funds to be tapped.'

Especially Dr. Gadgil and the members of the Planning Commission are responsible for this impression. Dr. Gadgil seeks to give another impression that a stage has reached that neither the Central nor State Government can impose any new taxes. That is his argument. Income-tax, according to them, has reached a point of 93 per cent. The middle class and poor class are already overtaxed through excise duties. Therefore, you can go to the agricultural sector. That is the place where you have a gold mine—an imaginary gold mine.

But the financial position of the States are also in the same position. It is not understood by the Central Planning Commission. Except sales tax, there is no other tax worth the name under the control of the State. Under the circumstances, all the States are expecting more money from the Central Government and borrowing overdraft from the Reserve Bank. This has created a peculiar problem to the Central Government. And so, to overcome the problem, the Central Ministers and Members of the Planning Commission are very often advising the States that they can get more money through taxes on rural sector. The advice of the Central Government is only to divert the attention of the States. The State Government which is so cautious about the Centre must be very careful in this also. The imposition of agricultural income-tax will definitely create displeasure and dissatisfaction among the rural sector with the State Government.

Another feeling created by the Central Government that the rural sector is having more money is only on the books. Actually the money borrowed by the poor agriculturists from the private moneylenders and other co-operatives is increasing year by year. The Central and State Governments must both understand that the money that is being borrowed by the State agricultural sector is

subject to tax which is more than the urban income tax. I shall give out a few statistics to substantiate what I say :

| *From total income* | *Agriculturalincome tax* | | *Rate of general income tax* |
|---|---|---|---|
| | *Old rate* | *Changed rate* | |
| (1) | (2) | (3) | (4) |
| First 4000 | No tax | No tax | No tax upto 5000 |
| Next 1000 | 5 per cent | No change | |
| Next 5000 | 15 per cent | Do. | 10 per cent |
| Next 5000 | 20 per cout | Do. | 17 per cent |
| Next 5000 | 25 per cent | 30 per cent | 23 per cent |
| Next 5000 | 30 per cent | Next 10000, 40 per cent | Next 5000, 30 per cent |
| Over and above income | 45 per cent | Next 20,000, 50 per cent | Next 5000, 40 per cent |

So it would be apparent that the agricultural income tax, as at present envisaged will be more harsh than the income-tax on urban income. So, it will definitely act as a dis-incentive to those taking to agriculture. That is why I say, let the Hon. Minister take a dispassionate view of these things. Let him not brush it aside since Dr. Hande is saying this. Let him have an objective mind and see how the rural folk would be put to suffering.

So, I would request him to reconsider his rigid stand and refer this Bill to a Select Committee so that some of these issues can be calmly considered. It is a sensible amendment to refer the Bill to a Select Committee. Within 24 hours Government thought over the matter and had brought these marginal changes. To that extent I welcome it. They could have given something more. That is why I say, considering the hazards to which agriculture is put to, let us consider the difficulties of agriculturists calmly in the Select Committee, after referring the Bill now to a Select Committee.

THIRU R. PONNAPPA NADAR : Sir, I would like to offer a few remarks and supplement the learned arguments advanced so far regarding this Bill, which is under discussion before this House.

Agriculture is the most important occupation of our country. It has been described so in the booklet supplied to us, " An Economic Apprisal ". It is said as follows :—

" Agriculture which is the predominant sector of our economy serves as the main plank of livelihood for the 73.3 per cent of the rural population engaged in agriculture and allied occupations in Tamil Nadu. The net area sown and gross cropped area accounts for 48.3 per cent and 57.9 per cent respectively of the total geographical area of the State."

So, from this we can judge that agriculture is a predominant occupation and a majority of people are engaged in this. This legislation is far-reaching in its content. I would say that it will





deprive the growth of agrcultural economy of Tamil Nadu. The fundamental principle of taxation is plucking the goose with as little squealing as possible. That is one principle of taxation But we are killing the goose that lays the golden egg. Whether we are doing that or not will be known after this piece of legislation is enforced in Tamil Nadu.

Various arguments have been advanced and I would like to say that the official amendments brought forward by the Government are far from satisfactory. I would say it is insufficient because various items have been accounted for. On the other hand I do not want to take the time of this August House but it would be sufficient for me to say that 1/10 of an acre for arecanut had been reduced to 1/6, 1/8th of betel-vine had been reduced to 1/4, 1/8th of grapes had been reduced to 1/4th and 1/6th of turmeric had been reduced to 1/3.

So far as banana is concerned, no change has been brought forward by the official amendment. Several factors have been advanced and I do not want to retiterate them again. My main point would be regarding sugar-cane and also coconut. What is the area available for sugar-cane. From the same booklet it is said as follows :—

" The area under sugar-cane crop which was 51,000 hectares in 1951–52 increased to 135,000 hectares in 1970–71, percentage increase being 164.7 per cent. The production of gur registered an increase from 332,000 tonnes to 1,484,000 tonnes during the period 1961–62 to 1968–69. Production is provisionally estimated at 1,148,000 tonnes for 1970.71."

That being the comparison between production in previous years and present production, suffice it for me to say that production has increased. At present it should be noted that so far as sugar-cane is concerned, there is lull. Shortfall in production is also likely. Why I say this is because North Indian States like Uttar Pradesh, Maharashtra, etc., are getting themselves established in the matter of sugar industry. In this matter we should have an all-India perspective and I I am sure the Hon. Minister would take steps to see that so far as sugarcane grower is concerned, effective steps would be taken; some more concession may be created for them also. This merits consideraion. I will say, without fear of contradiction, that it should be done in the interest of our economy; so ar as sugarcane is concerned the cost of cultivation and other factors will have to be taken into account. Of course certain concessions have been made but whether they will be sufficient is a matter that will have to be considered. Small grower who owns just above 20 standard acres will come in. Composition is retained so far as 20 acres are concerned. Previously it was 50 acres. Why should there be reduction? Can we not retain it at 50 acres? I am sure nothing will happen if 50 acres is maintained. If it is not

[Thiru R. Ponnappa Nadar] [1971 ஜூலை 30

possible to have 50, at least have 35 or 40 acres so that those engaged in this occupation will be given some relief. The present provision is far reaching, I mean this 20 acres.

I am sure that the learned Minister would reconsider that also.

Another point which I want the Hon. Minister to consider is regarding coconuts which have been subject to irrigation and also mango groves. These are things which will have to be considered in a different perspective. These would come under horticulture and strictly the yield will be given only after 7 years and in some cases it will be after 10 years. So, all those factors will have to be taken into consideration. I am sure that aspect of the question will also be attended to by the Hon. Minister.

Then, Sir, regarding accounts, the maintenance of accounts is a problem for agriculturists. What is the literacy rate of our State is a point which will have to be considered. The literacy rate in the State is 39.39 per cent as per the 1971 census. That is also we are getting from the booklet that has been published by the Government. We would see that Madras City comes first in point of literacy and Dharmapuri District comes last in point of literacy. Whether these farmers would be able to maintain accounts as the merchants are maintaining accounts is a matter which will have to be taken into consideration. That is the reason why I would once again reiterate and urge that the system of composition may be retained in view of the low percentage of literacy that is available in our State. I am sure that the Minister would also take note of that factor.

Then, regarding the other matter, the slab system of compounding, I should state that the minimum should be either 35 or 40 and it should not be 20. That concession may be considered.

Regarding exemptions, the limit should not be 5,000. It should be at least fixed at 6,000 and the slab is also steeply graduated. The slab that is now worked out is 30 per cent, 40 per cent, 50 per cent, 55 per cent and so on. Sir, this is very high. I would incidentally point out that in the Central Income Tax the slab system that is followed is 10 per cent, 17 per cent, 23 per cent, 30 per cent and so on. Of course it may be stated that there is also a surcharge on income-tax. I do not want to say that the tax should not be imposed. But when we are imposing a tax it should be on a rational basis and the ability to pay will have to be taken account of. I am sure that this sector has been too much taxed. It may be stated that we are leaving taxation so far as a minimum acreage is concerned. But what is the ultimate effect of it on our economy? That will have to be considered. The Land Ceiling Act is there and 15 standard acre is the optimum that a man can hold or a family can hold. If that is there why should such a steeply graduated agricultural



1971 ஜூலை 30] [Thiru R. Ponnappa Nadar]

incometax be levied is a question which will have to be considered. I am sure that the agricultural incometax, even though it may be a direct tax, it will affect only the richer section. So far as the middle class is concerned, they will be put to a very serious difficulty and hardship and that is the reason why I once again emphasise that the middle class who are owning a lesser percentage will have to be considered. I am sure that a sympathetic view would be taken and a sympathetic consideration would be given by the Minister.

Regarding commercial crops also some more concession is needed. For example, turmeric, chillies, bananas, all these things, it may be argued, are money crops. I agree that they are all money crops. But will it not be proper that some more concessions are granted to this sector. Chillies are prevalent in southern districts, Madurai, Tirunelveli, Madurai and other places and in North Arcot also. Chilli production would be affected. Now we are exporting chillies to Colombo and other eastern countries also and our exports should not be affected. By a reference to the export chart that is available, the export is not steadily increasing. In the interest of our country, in the interest of the nation and in the interest of the economy, I would once again urge that this point should be considered. We are having a crash programme for the growing of bananas and in Tuticorin harbour we are going to export bananas to the other countries. All these aspects may be looked into and considered in a broad perspective narrow consideration should not weigh with us. So far as cash crops are concerned, second thought is needed and I am sure that some more concessions would be made by the Hon. Minister. With these observations I resume my seat. I say that we object to this Bill with all the emphasis at our command and our party is opposing this Bill.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, வேளாண்மை வருமானத்தின் மீது விதிக்கப்பட்டிருக்கும் வரியின் மீது மாண்புமிகு அங்கத்தினர்கள் தங்கள் கருத்துக்களையெல்லாம் சொன்னார்கள்.

எல்லோரும் இதைப் பொறுக்குக் குழுவிற்கு விட வேண்டுமென்பதில் அதிக அக்கறை காட்டினார்கள். பொறுக்குக் குழுவிற்கு விடவில்லை என்பதை நான் துவக்கத்திலேயே தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குக் காரணம், இது 1972-ஆம் ஆண்டிலிருந்து வரி வசூலிக்கப் பட வேண்டியதாக இருக்கிறது. 1972-ஆம் ஆண்டிலிருந்து வரி வசூலிக்க வேண்டுமென்று சொன்னால், இந்த ஆண்டு கணக்கு வைக்க வேண்டியவர்கள் வைக்க வேண்டுமென்று சொல்லவேண்டும். பொறுக்குக் குழுவிற்கு விட்டுவிட்டு அக்டோபர் அல்லது செப்டம்பர் மாதத்திலே நிறைவேற்றினால் கணக்கு வைப்பவர்களுக்குச் சங்கடங்கள் ஏற்படும். எனவே செய்ய வேண்டிய திருத்தங்களை இப்பொழுதே செய்துவிடுவது நல்லது என்று சொல்லி அரசாங்கத் தரப்பிலே சில திருத்தங்களைக் கொடுத்தோம்.

[திரு. ப. உ. சண்முகம்] [1971 ஜூலை 30

சில திருத்தங்களைக் கொடுத்ததற்குக் காரணம், முதலிலே சட்டம் கொண்டுவந்து இங்கே அறிமுகப்படுத்தப்பட்டபின் விவசாயத்துறையில் அதிக அக்கறை கொண்டிருக்கும் உயர்திரு சுப்பையா முதலியார் போன்றவர்களும், செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பல விவசாயிகளும், வேறு மாவட்டத்து விவசாயிகளும் வந்து மாண்புமிகு முதலமைச்சரவர்களையும், என்னையும் சந்தித்து தங்களுக்கு இருக்கின்ற குறைகளைச் சொன்னார்கள். அதை அனுதாபத்தோடு கவனித்து பிறகுதான் அரசாங்கத் தரப்பிலே இந்த மாற்றங்கள் தெரிவிக்கப்பட்டனவே தவிர, அரசாங்கமே, முதலில் அறிமுகப்படுத்திவிட்டு, அடுத்தபடியாக மாற்றம் செய்யவேண்டுமென்று செய்யவில்லை. எனவே மாற்றம் செய்ததற்கு இதுதான் காரணமே தவிர, வேறு அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கணக்குப்பிள்ளை, மணியக்காரர்களிடம் எங்களை ஒப்படைத்துவிடாதீர்கள் என்று சிலர் தெரிவித்தார்கள். கணக்குப்பிள்ளை, மணியக்காரர்களுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. கணக்குப்பிள்ளை, மணியக்காரர்கள் என்ன பயிர் விளைந்தது என்று எழுதி வைக்கிறார்கள். எந்த அரசாங்கமும் நிர்வாகத்தை நடத்துகின்ற காலத்திலே யாராவது கீழே சில அதிகாரிகளை வைத்துத்தான் நடத்த வேண்டியிருக்கும். அப்படி வரும் நேரத்தில் கணக்குப்பிள்ளைகள், மணியக்காரர்கள் வருவார்களே தவிர, வேறு வழியில்லை. கணக்கன் பகைத்தால் கால் காணியும் போகும் என்றெல்லாம், பழமொழியைச் சொன்னார்கள். அப்படி அல்ல. எங்கே தவறு நடந்தாலும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பர் திரு. மாரிமுத்து அவர்கள் பேசும்பொழுது குறிப்பிட்டார்கள், விவசாயம் வளர்ந்து வரும் காலத்தில் இப்படியொரு வரி போடுவது சரியா என்றெல்லாம் கேட்டார்கள். விவசாயத்துறையில் இதற்கு முன் இருந்த வரிக்கும் இப்பொழுது போடப்பட்டிருப்பதற்கும் மாற்றம் இருக்கிறது. ஏற்கனவே இருந்த வரியை மாற்றுவதற்குக் காரணம், மொத்தமாக நிலத்திற்குப் போட்டு வந்தார்கள், ஆனல் இப்பொழுது பயிருக்கு மாற்றுகிறோம். நிலத்திற்குப் போட்டிருந்த காலத்தில் அது கடலை விளைந்தாலும் சரி, அல்லது நெல் விளைந்தாலும் சரி அல்லது கரும்பு வாழை போட்டிருந்தாலும் சரி, வருமானத்தைக் கணக்கிலே வைக்காமல் நிலப்பரப்பை வைத்து கணக்கிட்டார்கள். ஆனல் இப்பொழுது விளைபொருளுக்கு மாற்றம் செய்யப்படுகிறது. ஸ்டாண்டர்ட் ஏக்கரா, கணக்கிடப்படுவதைப் பற்றிச் சொன்னார்கள். 20 ஸ்டாண்டர்ட் ஏக்கரா கம்பவுண்டுக்காக 20 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று சொல்வதை, ஃப்ராக்ஷனைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இந்த முறை தேவைதானா என்று கேட்டார்கள். கம்பவுண்ட் செய்ய வேண்டிய நேரத்தில் கணக்குக் காட்டவில்லை என்றால், அவர்களுக்குத்தான் இந்த ப்ராக்ஷன் முறையே தவிர, வேறு யாருக்கும் இல்லை என்பதைத் துவக்கத்திலேயே நினைவுபடுத்த விரும்புகிறேன்.



1971 ஜூலை 30] [திரு. ப. உ. சண்முகம்]

50 ஸ்டாண்டர்ட் ஏக்கராவாக இருப்பதை ஏன் குறைக்க வேண்டும், குறைந்தபட்சம் 40 ஸ்டாண்டர்ட் ஏக்கரா அல்லது 35 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று ஆக்க வேண்டுமென்று எதிர்க் கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டார்கள், மற்ற உறுப்பினர்களும் 20 ஸ்டாண்டர்ட் ஏக்கரா இருக்கக்கூடாது, அதை உயர்த்த வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். (குறுக்கீடு) சீலிங் ஸ்டாண்டர்ட் ஏக்கராவிற்கும் இந்த ஸ்டாண்டர்ட் ஏக்கராவுக்கும் வித்தியாசமிருக்கிறது. இது வேறு, அது வேறு என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இந்தக் கணக்குப்படி 20 ஸ்டாண்டர்ட் ஏக்கராவை உயர்த்த வேண்டுமென்று எல்லோரும் வாதிட்டார்கள். அப்படி வாதிட்டது நியாயம் என்றுகூட நாங்கள் ஒத்துக்கொண்டு, முதலமைச்சரவர்களின் அனுமதியின்பேரில் 30 ஸ்டாண்டர்ட் ஏக்கராவாக உயர்த்துகிறோம் என்று அதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 30 ஸ்டாண்டர்ட் ஏக்கராவிற்குமேல் உயர்த்துவது சரியல்ல என்று கருதி, 30 ஸ்டாண்டர்ட் ஏக்கராவாக உயர்த்துமாறு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தெரிவித்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி 30 ஸ்டாண்டர்ட் ஏக்கராவாக உயர்த்தும்பொழுது ஸ்லாப் ரேட்டுகளில் கொஞ்சம் மாற்றம் செய்ய வேண்டியிருக்கும். அதை இப்பொழுது படித்துக் காட்டுகிறேன். மாண்புமிகு அங்கத்தினர்கள் அதைக் குறித்துக்கொள்வது நல்லது என்று கருதுகிறேன்.

முதல் நாலாயிரம் ரூபாய்க்கு வரி கிடையாது. அடுத்த ஆயிரம் ரூபாய்க்கு 5 பைசா. அடுத்த ஐயாயிரம் ரூபாய்க்கு 15 பைசா; அதற்கு அடுத்த ஐயாயிரம் ரூபாய்க்கு 20 பைசா; அதற்கு அடுத்த ஐயாயிரம் ரூபாய்க்கு 30 பைசா; அதற்கு அடுத்த ஐயாயிரம் ரூபாய்கு 35 பைசா; அதற்கடுத்த பத்தாயிரம் ரூபாய்க்கு 45 பைசா; அதற்கடுத்த பதினைந்தாயிரம் ரூபாய்க்கு 50 பைசா; அதற்கு மேல் வருகிற வருமானத்திற்கு 55 பைசா என்று வரி விகிதங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்லாப் ரேட்டுகளையும் திருத்தியமைக்க வேண்டுமென்ற முறையில் முதல் 7½ ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு வரி இல்லை; அடுத்த 2½ ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு 15 ரூபாய்; அடுத்த ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு பில்லில் இருப்பது 30 ரூபாய்—அதை 25 ரூபாயாகக் குறைத்திருக்கிறோம். அடுத்த ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு பில்லில் இருப்பது 45 ரூபாய்—அதை 35 ரூபாயாகக் குறைத்திருக்கிறோம். அடுத்த ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு 45 ரூபாய்; அடுத்த ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு 60 ரூபாய் என்று மாற்றி இருக்கிறோம்.

எனவே, இப்படி 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று உயர்த்துகின்ற காரணத்தால், இந்த மாற்றங்கள் வருகின்றன என்பதைத் தெரிவித்துகொள்கிறேன்.

விவசாயிகளுக்கு அதிகச் சங்கடங்கள் ஏற்பட வேண்டுமென்ற முறையில் விவசாய வருமான வரியைக் கொண்டு வரவில்லை. விவசாயிகளுக்குப் பாரம் ஏற்பட வேண்டுமென்று நினைக்கவில்லை.

ஏழை விவசாயிகள் இதனால் பாதிக்கப்படுவார்கள் என்பதை நான் ஏற்றுக் கொள்ளுவதற்கில்லை.

விவசாயிகளுக்கு 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சீலிங் கொண்டு வந்துவிட்ட பிறகு இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வரலாமா என்று விவாதித்தார்கள். 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் சீலிங் என்று வந்தாலும் சில குடும்பங்களுக்கு 60 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை இருக்கலாம் என்ற வரம்பு வைத்திருக்கிறோம். அப்படிப்பட்டவர்களுக்கு இந்த வரி வரும். 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கு இந்த வரியால் அவ்வளவு பாதகம் ஏற்படாது.

ஏற்கனவே தெரிவித்தது போல் வேளாண்மைத் துறை எடுத்துக் கொள்ளுகின்ற ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற கணக்கில் 7½ ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை வரி இல்லை. 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை ஸ்லாப் ரேட் போடப்பட்டு வரி விதிக்கப்படுகிறது. கம்பவுண்டிங் செய்து கொள்ள வேண்டும். இந்தக் கம்பவுண்டிங் தேவையில்லை, கணக்குக் கொடுக்கிறேன் என்றால், இந்த ஆண்டு புயலால், மழையால், பூச்சியால் பாதகம் ஏற்பட்டுவிட்டது என்று சொல்லி கணக்குக் கொடுப்பதாக இருந்தால், அது நியாயம் என்று நிரூபிப்பார்களேயானால் அந்த ஆண்டு வரி இல்லாமல் விலக்களிக்க அரசாங்கம் உத்தரவாதம் கொடுக்கிறது.

கணக்கப் பிள்ளை, மணியக்காரரிடத்தில் வரி விதிக்கும் பொறுப்பைக் கொடுத்து எங்களை மாட்டாதீர்கள் என்று சொன்னார்கள். தாசில்தார்தான் வரி விதிக்கும் அதிகாரி, அதற்குமேல் அப்பீலுக்குப் பல கட்டங்கள் இருக்கின்றன. கணக்குப் பிள்ளை, மணியக்காரரைப் பொறுத்தவரை என்ன பயிர் வைக்கப்பட்டிருக்கிறது என்ற கணக்கை அரசாங்கத்திற்குக் கூறுவார்கள். யாரையாவது நம்பித்தான் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மஞ்சளுக்கு இவ்வளவு வரி போடுவதா, மிளகாய்க்கு இவ்வளவு வரி போடுவதா என்று கேட்டார்கள். மிளகாய், மஞ்சள் போடுகின்றவர்களுக்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்ற கணக்கைப் பார்த்துத் தான் வரியை விதித்திருக்கிறோம். என்னுடைய மாவட்டத்திலிருந்து இந்த வரி போடப்பட்டிருப்பதைப் பற்றிச் சொன்னார்கள். நான் முதலமைச்சர் அவர்களின் அனுமதியின்பேரில் மஞ்சள், மிளகாய்க்கு இந்த வரியினின்று விலக்களிக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உள்ளபடியே அதிகமான விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்பட வேண்டிய அவசியம் இல்லை. சொல்ல வேண்டிய சலுகைகளை எல்லாம் சொல்லிவிட்டேன்.

ஸ்பில் ஓவர் பயிர்களைப் பற்றிச் சொன்னார்கள். வாழையைப் பற்றி சுப்பையா முதலியார் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். "பதினாறு மாத காலப் பயிராயிற்றே, மூன்றாண்டுக் காலத்தைத் தாண்டிப் போகும்போது எப்படி வரி விதிப்பீர்கள்?" என்று கேட்டார்கள். அதைப் பற்றியெல்லாம் அரசாங்கம் அவரிடத்தில் நேரிலேயே விவாதித்திருக்கிறது. அதிகாரிகளிடத்திலும் இதுபற்றி விவாதித்து விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்படாத வகையில்





அரசாங்கம் ஆணையாகப் பிறப்பிக்க இருக்கிறது. எந்த ஒரு பயிராக இருந்தாலும் கரும்பாக இருந்தாலும், வேறு எந்தப் பயிராக இருந்தாலும் அரசாங்க வரி ஆண்டு 31-ம் தேதி மார்ச் மாதம் என்று சொன்னால் பிப்ரவரியிலிருந்து ஏப்ரல் வரை பயிர் போகும் என்றால், ஸ்பில் ஓவர் ஆகுமானால் ஏதாவது ஒரு ஆண்டு வரி விதிக்கப்படுமே தவிர, இரண்டு ஆண்டுகளுக்கு விதிக்கப்படக்கூடாது என்பதைத் தெளிவாகக் கூறியிருக்கிறோம். அரசாங்கம் விவசாயிகளைக் கசக்கிப் பிழிய வேண்டுமென்ற நோக்கத்தோடு சட்டத்தைக் கொண்டுவரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சுப்பையா முதலியார் அவர்கள் செங்கோட்டைப் பகுதிக்கும் இதை விஸ்தரிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது திருவாங்கூரிலிருந்து தமிழ்நாட்டில் சேர்க்கப்பட்ட பகுதியாகும். அந்தப் பகுதியில் கேரள அரசாங்கத் தீர்வை என்ன இருந்ததோ, அதைக் கட்டி வருகிறார்கள். அந்தப் பகுதியில் சட்டத்தை அமலாக்க சர்வே செய்திருக்கிறார்கள். சர்வே முடிந்திருக்கிறது. இன்னும் சில மாதங்களில் அமலாகும். அப்படி அமலாக்கும் நேரத்தில் இந்தச் சட்டத்தையும் சேர்த்து அமலாக்குவதில் காலதாமதம் இருக்காது.

<u>திரு. ஏ. ஆர். சுப்பையா</u>: வாழையும் 16 மாத வித்து, கரும்பும் 16 மாத வித்து. இரண்டுக்கும் நோய் ஏற்படும் நிலை இருக்கிறது. இரண்டையும் ஒரே தரப்பு ஆக்க வேண்டும்.

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்</u>: மேற்கொண்டு இதிலே சலுகை கொடுத்துக் கொண்டே போனால் கடைசியில் எதுவும் மிஞ்சாது. அரசாங்கம் வரி போட்டதன் பொருளே இல்லாமல் போய்விடும். கொடுக்க வேண்டிய சலுகைகளைப் பற்றியெல்லாம் துவக்கத்திலேயே கூறிவிட்டேன்.

<u>திரு. ஏ. ஆர். சுப்பையா</u>: வாழைக்கு 33-1/3 சென்ட் ஒரு ஏக்கர் என்று சொல்லுகிறார்கள். இது எப்படிக் கணக்கு பண்ண முடியும்?

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்</u>: ஒரு ஏக்கரில் வாழைப் பயிர் வைத்திருந்தால் மூன்று ஸ்டாண்டர்டு ஏக்கராகக் கணக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. அதிலே அவ்வளவு சிரமப்பட வேண்டிய அவசியம் இல்லை. (குறுக்கீடு) 50 ஏக்கரில் யாரும் வாழை போடமாட்டார்கள். அப்படியே இருந்தாலும் 7½ ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு வரி இல்லை. அந்தச் சிரமம் ஏற்படாதபடி அரசாங்கம் பாதுகாத்துக் கொள்ளும்.

தென்னையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். வரப்பு ஓரங்களில் வைக்கப்பட்டிருக்கும் தென்னையைப் பற்றி அரசாங்கம் கணக்கில் எடுத்துக்கொண்டு வரி விதிக்காது என்று ஏற்கனவே தெரிவித்தேன்.

விவசாயத்திற்கு என்ன செய்து விட்டீர்கள் என்றார்கள். வேளாண்மைத் துறையைப் பற்றியெல்லாம் பேசிவிட்டு, வேளாண்

[திரு. ப. உ. சண்முகம்] [1971 ஜூலை 30

மைக்கு இவ்வளவெல்லாம் செய்திருக்கிறோம் என்பதைத் தெரிந்து கொண்ட பிறகு ஒன்றுமே வேளாண்மைத் துறைக்குச் செய்யவில்லை என்று சொல்லுவது சரியல்ல.

நெல்லைப் பொறுத்தவரை கை வைக்கவில்லை. அப்படியே விட்டு விட்டோம். நாட்டில் முக்கிய தேவையான உணவுப் பொருளுக்கு அதிக வரி போடக்கூடாது என்ற வகையில் அதற்கு வரி எதுவும் போடவில்லை.

திரு. ஏ. ஆர். சுப்பையா: "க்ரோயிங் ஆஃப் கோகோநட்" என்பதற்கு விளக்கம் தர வேண்டும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: "க்ரோயிங்" என்பதற்கு விளக்கம் கேட்கிறார்கள். தென்னை அல்லது வாழை போன்ற பயிர்களை வைத்தால் சில ஆண்டுகள் கழித்துத்தான் பலன் கிடைக்கும். இந்த ஆண்டு தென்னை வைத்தால் உடனே காய் காய்க்க ஆரம்பிக்காது. ஐந்து ஆண்டுகள், பத்தாண்டுகள் ஆகக் கூடும். எந்த ஆண்டில் காய் காய்க்கிறது என்ற கணக்கை எடுத்துக் கொண்டு அந்த ஆண்டில் இருந்து வரி விதிக்கப்படும். நட்ட தேதியிலிருந்து வரி என்ற முறையில் தவறான முறையில் அரசாங்கம் வரி விதிக்காது என்பதைத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அங்கத்தினர்கள் கேட்ட எல்லாச் சலுகைகளையும் ஒத்துக் கொண்டு விட்ட காரணத்தால் மேற்கொண்டு விவாதத்தை நீட்ட விரும்பவில்லை. பல மசோதாக்கள் இன்று நிறைவேற்றப்பட இருக்கின்றன. அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் சொன்ன கருத்துக்கள் பதிவாகி இருக்கின்றன. பொதுவாக அரசாங்கம் அளிக்கின்ற சலுகைகளைப் பற்றி எல்லாம் சொல்லிவிட்டேன். ஆகவே, இந்த மசோதாவைச் சட்டமாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE: The Hon. Minister said "விதிவிலக்கு" would be given for failure of crops. But I do not find anything here. May I know what is the total revenue expected by Government from this taxation measure? I think hon. Members are entitled to know it. If the Hon. Minister has the details, he can give it to us.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: எவ்வளவு மொத்தம் இதில் வரி வரும் என்று கேட்கிறார்கள். எவ்வளவு வரும் என்று கணக்கிடவில்லை. விதிவிலக்கு பற்றி சட்டத்தில் போட வேண்டிய அவசியமில்லை. பயிர் காற்று அல்லது பூச்சியால் அடிக்கப்பட்டுவிட்டால் எழுதிக் கொடுத்தால் போதும். கணக்கு கொடுப்பதற்குக் கூட ஒரு பாரம் தயாரிப்பதாக ஏற்கனவே ஒத்துக்கொண்டு அதிகாரிகளுக்குச் சொல்லியிருக்கிறோம். அந்தப் பாரத்தை ஃபில் அப் செய்து கொடுத்தால் போதும் என்று தெரிவித்திருக்கிறோம். அந்த பாரத்தை பூர்த்தி செய்வதில் சங்கடம் எதுவும் இருக்காது. ஆகவே இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன். இதில் எதிர்பார்க்கும் வருமானம் பற்றி,



1971 ஜூலை 30]

முதல் அமைச்சர் அவர்களால் தகவல் தரப்பட்டிருக்கிறது. அரசாங்கத்திற்கு ஏறக்குறைய இரண்டு கோடி ரூபாய் வருமானம் இதில் எதிர்ப்பார்க்கிறோம்.

THIRU K. T. K. THANGAMANI: In view of the many concessions announced by the Hon. Minister I am not pressing my amendment for referring the Bill to a Select Committee.

The amendment was, by leave, withdrawn.

MR. SPEAKER: What about Mr. James?

THIRU J. JAMES: I am pressing my amendment.

The amendment of Thiru J. James was put to vote and lost.

MR. SPEAKER: The question is:—

"That the Tamil Nadu Agricultural Income-tax Bill, 1971 (L.A. Bill No. 19 of 1971) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration clause by clause.

*Clause* 2.

MR. SPEAKER: The question is—

"That clause 2 do stand part of the Bill.

THIRU K. T. K. THANGAMANI: Sir, I move the following amendment:—

In sub-clause (a) of clause 2, for item (iv-m) substitute the following:—

"(iv-m) one and one-fifth acres of land used for growing cardamom, or ".

The amendment was duly seconded.

THIRU J. JAMES: Sir, I move:—

In sub-clause (a) of clause 2 for items (i) to (iii), (iv-a), (iv-d), (iv-g) and (iv-h), substitute the following:—

(i) one-third of an acre of lan used for growing arecanut, or

(ii) one-fourth of an acre of land used for growing betel-vine, or

(iii) one-third of an acre of land used for growing grapes, or

(iv-a) one acre of land used for growing banana, or

(iv-b) one and one-fifth acre of land used for growing rubber, or

(iv-d) one acre of land used for growing chillies, or

(iv-g) one acre of land used for growing coconut, or

(iv-h) three-fifths acre of land used for growing tea, or

The amendment was duly seconded.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I am moving my amendment only with regard to 'banana'. I move the following amendment :—

"In entry (*a*) in item (iv-*a*) for the word "one-third" substitute the words "one-half".

The amendment was duly seconded.

THIRU K. P. GOPAL : Sir, I move the following amendment :—

In clause 2, (*b*) under Explanation III, for the words "reduced to standard acres calculated according to minimum of such proportions" substitute the words "calculated according to maximum of such proportions".

The amendment was duly seconded.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move—

"In clause 2—

(1) in sub-clause (*a*), for items (i) to (iv-g), substitute the following items, namely :—

"(i) one-sixth of an acre of land used for growing arecaunut, or

(ii) one-fourth of an acre of land used for growing betelvine, or

(iii) one-fourth of an acre of land used for growing grapes, or

(iv) one-third of an acre of land used for growing turmeric, or

(iv-a) one-third of an acre of land used for growing banana, or

(iv-b) two-fifths of an acre of land used for growing rubber, or

(iv-c) one-half of an acre of land used for growing sugarcane, or

(iv-d) one-half of an acre of land used for growing chillies, or

(iv-e) three-fourths of an acre of land used for growing groundnut (irrigated), or

(iv-f) three-fourths of an acre of land used for growing cotton (irrigated), or

(iv-g) three-fourths of an acre of land used for growing coconut, or";



(2) in sub-clause (*b*), for Explanation III, substitute the following Explanation, namely :—

"*Explanation III*—Where in any previous year, more than one kind of crop mentioned in items (i) to (iv-k) and item (iv-m) of clause (vv) are grown in any land—

(*a*) in case such crops are grown at the same time, the extent of the land on which different crops are grown, shall be reduced to standard acres calculated according to the proportion applicable to the crop concerned; and

(*b*) in any other case, the entire land aforesaid shall be reduced to standard acres calculated according to the minimum of the proportions applicable to the crops concerned"

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :* அரசாங்கத் தரப்பில் கொடுக்கப்பட்டிருக்கிற இந்தத் திருத்தங்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. கே. டி. கே. தங்கமணி :* கார்டமம் சற்று அதிக வருவாய் கொடுக்கக்கூடிய பயிர். ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பது மூன்றில் ஒரு பங்கு ஏக்கர் என்றிருந்தால் கூட பரவாயில்லை.........

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* அமைச்சர் அவர்கள் திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். டர்மரிக்-கை எடுத்துவிட்டார்கள். ஸ்லாப்ஸ் எல்லாம் மாறி வருவதால் இந்தக் கிளாஸ், க்ளாஸ் 5 இவற்றில் வரும்படியான திருத்தங்களைப் பிரேரேபித்தால்தான் தங்கள் கருத்துக்களுக்கு ஒத்ததாக சட்ட வரைவு அமைய முடியும்.

What is here is contrary to what the Hon. Minister has said at the outset. He has said that he had exempted turmeric, etc., and certain other crops.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :* நான் ஏற்கனவே முதல் அமைச்சர் அவர்கள் அனுமதி பெற்றுச் சொன்ன, டர்மரிக் (மஞ்சள்) மீது விதிக்கப்பட்டுள்ள வரி விலக்கப்பட்டுள்ளதால் அதை இதிலிருந்து விலக்கி விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சில்லீஸ் (மிளகாய்) மீது போடப்பட்டிருப்பதற்கும் விலக்கு அளிக்கவேண்டுமென்று பிரேரேபிக்கிறேன்.

மாங்காய் மீது போடப்பட்டிருப்பதற்கும் இந்த வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

So, I move—

"That the following item in the amendment moved by me be deleted :—

(1) iv) one-third of an acre of land used for growing turmeric, or

(2) (iv-a) one-half of an acre of land used for growing chillies, or"

Sir, I also move—

" That in clause 2—Item (iv-i) one acre of land used for growing mango, or " be deleted.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஏலக்காய் தோட்டம் வைத்திருப்பவர்கள் பெரிய தனவந்தவர்களாக இருக்கிறார்கள். அதன் மூலம் அதிகப்படியான வருமானம் வருகிறது. ஆகவே ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பது ஒரு ஏக்கருக்குக் கூட கம்மியாக இருந்தால் பொருத்தமாகயிருக்கும். ஏற்கனவே வரிபோட்டு நிறைவேற்றிய சட்டத்தில் ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பது 1 1/5 ஏக்கர் என்றிருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : "கன்வர்ஷன் பாக்டரில்" இவைகள் எல்லாம் விலக்களிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். வரி விலக்கு என்றால், "கன்வர்ஷன் பாக்டரில்" விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஏற்கனவே மூலச் சட்டத்தில், In the original Act, 1 1/5)என்று கூறப்பட்டிருக்கிறது. இப்போது நமக்கு திருத்தமாக வந்திருப்பது 1 2/3 என்றிருக்கிறது. அது இன்னும் குறைவாக யிருந்திருக்கும் என்று எதிர்பார்த்தேன். ஏற்கனவேயிருந்ததைவிட அதிகப்படுத்திக் காட்டியிருப்பதால் வருவாய் அதிகமுள்ள சில பயிர்கள்பற்றி இம்மாதிரி கருத்தோட்டம் வந்திருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட என் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது கன்வர்ஷன் பாக்டருக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கரில் எவ்வளவு வருமானம் வரும் என்று கணக்கெடுத்து ஒவ்வொரு பயிருக்கும் எவ்வளவு வரும் என்று கணக்கெடுத்து ஸ்டாண்டர்ட் ஏக்கரைப் பிரித்திருக்கிறோம். ஏலக்காய் பற்றி சொல்லப்பட்டது. அது கன்வர்ஷன் பாக்டருக்காக, கம்பவுண்டிங்குக்காக தவிர வேறு எதற்கும் இல்லை. குறைந்த அளவிற்கு வைத்திருப்பவர்களுக்குத்தான் வரும். பெரிய அளவில் உள்ளவர்கள் வரியின்கீழ் வந்துவிடுவார்கள். ஆகவே இதில் பெரிய தவறுதல் ஏற்பட்டு விடாது.

திரு. சோ. அழகர்சாமி : தேயிலைத் தோட்டங்களுக்குச் சலுகை அளிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னேன் முன்னால் 15 ஏக்கர் தேயிலை வைத்திருந்தால் 25 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று வந்தது பழைய கணக்குப்படி. இப்போது அது 19 ஸ்டாண்டர்ட் ஏக்கராக குறைந்து விடுகிறது. நம் வரி விகிதப்படி முன்னால் ரூ. 437.50 என்றிருந்த வரி இப்போது ரூ. 225 குறைகிறது. கம்பவுண்டிங் ஸிஸ்டத்தில் முன்னாலிருந்த சத விகிதத்தை மாற்றியிருப்பதால் ரூ. 225, 15 ஏக்கர் தேயிலைத் தோட்டம் போட்டவர்களுக்கு வரி குறைகிறது. அதுபற்றி என்ன சொல்கிறார்கள்?



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கார்டமம்-க்குச் சொன்னது தேயிலைக்கும் பொருந்தும். குறைக்க வேண்டுமென்று குறைக்கவில்லை. கன்வர்ஷன் பாக்டருக்காக எடுத்துக்கொள்ளப் பட்டதே தவிர, சலுகை கொடுத்ததாக ஆகாது. வருமானத்தைக் கணக்கெடுத்து அதன் பிரகாரம் திருத்தப்பட்டிருக்கிறது. பெரிய மாறுதல் ஏற்பட்டுவிடாது. தேயிலையைப் பொறுத்து, சாதாரணமாக 30 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்குள் இருப்பவர்கள் இருக்கிறார்கள். பெரிய எஸ்டேட்காரர்களுக்கு அதிக வரி விதிக்கப்படுகிறது. 60 பைசா என்று கூட வரி போட்டிருக்கிறார்கள். ஆகவே இந்த வரி அவர்களுக்குச் சலுகை கொடுத்ததாக இருக்காது. ஆகவே அரசாங்கம் கொடுத்துள்ளதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Hon. Minister is so generous enough to exempt the mangoes from the conversion factor. He should have shown the same sympathy to bananas. It is also an equally tasty fruit. It is very important fruit and it is supposed to be the poor man's apple. It is not proper on the part of the Government not to revise the conversion table for bananas. The same sympathy is to be shown to bananas also.

So far as tobacco is concerned, one standard acre is equal to one acre. I am sure tobacco growers get more money than the banana growers. Banana has to face many risks and definitely extends upto 15 or 16 months. You cannot harvest the crop within 12 months. So, it suffers so many difficulties. I hope and still believe and expect the Hon. Minister to show some sympathy to the bananas and see that the conversion table is amended.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, புகையிலைக்கு ஒரு ஏக்கருக்கு ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று கன்வர்ஷன் பாக்டர் வைத்து இருக்கிறோம். அதேபோல் பனைவுக்கு ஏன் சலுகை கொடுக்கக் கூடாது என்று சொன்னார்கள். புகையிலைக்கு எக்சைஸ் டியூட்டி இருக்கிறது. பனைக்கு எக்சைஸ் டியூடி கிடையாது. இதை ஆராய்ந்து பார்த்துத்தான் இந்தச் சலுகை கொடுத்து இருக்கிறோம். அதையும் திருத்திக்கொண்டு கன்வர்ஷன் பாக்டர், வாழைப்பழத்திற்கு விலக்களிக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். அதற்கு வரி விலக்கு இல்லை, என்று சொல்லி, திருத்திய வாறு இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : கனம் அமைச்சர் அவர்கள் ம, மா, மி-க்கு விலக்கு அளித்து இருக்கிறபோது, மெய் எழுத்தில் முதல் எழுத்தான க-க்கு ஏன் விலக்களிக்கக் கூடாது என்று கேட்கிறேன். (மஞ்சள், மாங்காய், மிளகாய் : ம, மா, மி):

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாமிக்கு கொடுத்து விட்டார்கள் என்று சொல்லி விடாதீர்கள்.

The amendments of Thiru K. T. K. Thangamani, Thiru James, Thirumathi T. N. Anandanayaki and Thiru K. P. Gopal were, by leave, withdrawn.

MR. SPEAKER : The question is—

That the following items in the Government amendment, viz.—

(1) "(iv) one-third of an acre of land used for growing turmeric, or " and

(2) " (iv-d) one half of an acre of land used for growing chillies, or " be deleted and

(3) " In clause 2 item (iv-i) one acre of land used for growing mango, or" be deleted.

The amendment was put and carried.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் இன்னும் கொஞ்சம் பெரிய மனது படுத்தி வெற்றிலைக்கு விதி விலக்கு அளிக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். அந்தத் திருத்தத்தை அரசாங்கத் தரப்பில் முன்மொழிகிறேன்.

"வெற்றிலைக்கு கம்பௌண்டிங் பாக்டரிலிருந்து ஒன் போர்த் ஆப் தி ஏக்கர் என்று இருக்கிறது. இப்போது அதை நீக்கி விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்." இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Sir, I move—

That item (ii) "one-fourth of an acre of land used for growing betel-vine, or" be deleted.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, வெற்றிலைக்கு கனிவு காட்டும்போது, முக்கனிகளில் ஒன்றான வாழைக்கு கனிவு காட்டக்கூடாதா? எதிர்க்கட்சிக்காரர்கள் கேட்கிறார்கள் என்பதற்காக இல்லை என்று சொல்கிறீர்களா? கொஞ்சம் கருணை காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, எதிர் கட்சி, ஆளும் கட்சி என்ற பாகுபாடு இல்லாமல், எல்லோரும் சேர்ந்து சட்டசபையில் உட்கார்ந்து கொண்டு, எல்லோருக்கும் ஏற்றதாக எது நல்லது, கெட்டது என்று பரிசீலித்து செய்து இருக்கிறோம். எல்லோரும் சொன்ன கருத்தை ஏற்றுக்கொண்டு பலவற்றிற்கு சலுகை தந்து இருக்கிறோம். அதற்குப் பாராட்டி இருக்கலாம். அதை விட்டு எது முடியாது என்று சொன்னோமோ அதையே திரும்பக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.



MR. SPEAKER : The question is—

That item (ii) "one-foudth of an acre of land used for growing betel-vine, or " be deleted.

The amendment was put and carried.

The Government amendment as amended, was put and carried.

Clause 2, as amended, was put and carried.

Clause 3 was put and carried.

*Clause* 4.

MR. SPEAKER : The question is—

" That Clause 4 do stand part of the Bill ".

THIRU J. JAMES : Sir, I move—

" In the proposed sub-section (1) of Section 65 of the Principal Act, for the words " twenty standard acres ", substitute the words " fifty standard acres ".

The amendment was duly seconded.

THIRU K. P. GOPAL : Sir, I move—

" In the proposed sub-section (1) of Section 65 of the Principal Act, for the words " twenty standard acres, whether such land is grown with plantation or non-plantation " substitute the words " thirty standard acres grown with plantation crop."

The amendment was duly amended.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I move—

For the words in the proposed sub-section (1) " twenty standard acres " substitute the words "sixty standard acres ".

The amendment was duly seconded.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move—

" That in clause 4, in the proposed sub-section (1) of section 65, for the words "twenty standard acres", substitute the words "thirty standard acres "

The amendments of Thiru James and Thiru Gopal were, by leave, withdrawn.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I am really extremely happy that the Government came forward to raise the compounding standard acres from 20 to 30. I appreciate the Hon. Minister for this kind gesture. I feel that there should be some difference between plantation and non-plantation crops. That could have really helped smaller agriculturists. As the Hon. Minister mentioned, nobody can have an economic plantation area, if it is

below 50 acres. They can come under the slab system. So far as the agriculturists are concerned, they could have been shown some more preference by dividing these two classes—plantation and non-plantation crops.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்கள் சொல்கிற திருத்தத்தை ஏற்றுக்கொள்வதற்கு இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி பாகுபாடு படுத்துவதற்கு இல்லை. வருமானத்தை பொறுத்தவரையில் விவசாய வருமான வரி போடுகிறோமே தவிர விளைவைப் பொறுத்து அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

The amendment of Thirumathi T. N. Ananthanayaki was, by leave, withdrawn.

The Government amendment was put and carried.

Clause 4, as amended, was put and carried.

### *Clause 5.*

MR. SPEAKER: The question is—

"That clause 5 do stand part of the Bill".

THIRU J. JAMES: Sir, I move—

In the proposed Part II of the Schedule for the entries (2), (3) and (4), substitute the following—

(2) On the next 2½ standard acres—3 00.

(3) On the next 5 standard acres—6 00.

(4) On the next 5 standard acres—9 00.

The amendment was duly seconded.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, I move—
"Delete entry (b)"

The amendment was duly seconded.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I move—

In the Schedule to the Principal Act, for items (5) to (9) substitute the following :—

"(5) On the next Rs. 5,000 of total agricultural income—Twenty paise in the rupee.

(6) On the next Rs. 10,000 of total agricultural income—Twenty-five paise in the rupee.

(7) On the next Rs. 20,000 of total agricultural income—Thirty paise in the rupee.

(8) On the next Rs. 50,000 of total agricultural income—Thirty-five paise in the rupee.

(9) On the balance of total agricultural income—Forty paise in the rupee".

The amendment was duly seconded.



THIRU K. P. GOPAL: Sir, I move—

"In the proposed amendment to Part II of the Schedule, for the words and figure "On the next 5 standard acres" in item (4) substitute the words "On the balance of standard acres".

The amendment was duly seconded.

THE HON. THIRU P. U. SHANMUGHAM: Sir, I move the following amendment—

"In Clause 5,—

(1) in sub-clause (*a*), for items (6) to (9), substitute the following items, namely :—

"(6) On the next Rs. 5,000 of total agricultural income—Thirty-five paise in the rupee.

(7) On the next Rs. 10,000 of total agricultural income—Forty-five Paise in the rupee.

(8) On the next Rs. 15,000 of total agricultural income—Fifty Paise in the rupee.

(9) On the balance of total agricultural income—Fifty five Paise in the rupee:";

(2) in sub-clause (*b*), in the proposed Part II, for items (3) and (4), substitute the following items, namely :—

"(3) On the next 5 standard acres—Rs. 25.00.

(4) On the next 5 standard acres—Rs. 35.00.

(5) On the next 5 standard acres—Rs. 45.00.

(6) On the next 5 standard acres—Rs. 60.00:".

தலைவரவர்களே, இந்தப் பிரிவை நான் முன்மொழிந்துள்ள திருத்தப்படி திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முதல் 7 1/2 ஸ்டாண்டர்ட் ஏக்கர் வரை வரி இல்லை.
அடுத்த, 2 1/2 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு ரூ. 15.

அதற்கு அடுத்த, 5 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு ரூ. 30 என்று இருப்பதை ரூ. 25 என்று திருத்திக்கொள்ளவேண்டும்.

அதற்கு அடுத்த 5 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு ரூ. 45 என்று இருப்பதை ரூ. 35 என்று திருத்திக்கொள்ளவேண்டும்.

அதற்கு அடுத்த 5 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு ஸ்லாப் எதுவும் சொல்லவில்லை. புதியதாக திருத்தம் சொல்வது ரூ. 45.

அதற்கு அடுத்த 5 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு ஸ்லாப் இந்த பில்லில் இல்லை. அதற்கு புதியதாக ரூ. 60 என்று திருத்திக்கொள்ள வேண்டுமென்று திருத்தத்தை முன்மொழிகிறேன்.

அதே போல், முதல் ரூ. 4,000-க்கு இப்போது வரியில்லை.

அதற்கு அடுத்து இருக்கும் ரூ. 1,000-க்கு 5 பைசா வரி விதிக்கப்படும்.

[1971 ஜூலை 30

அதற்கு அடுத்து இருக்கும் ரூ. 5,000-க்கு 15 பைசா வரி விதிக்கப்படும்.

அதற்கு அடுத்து இருக்கும் ரூ. 5,000-க்கு 20 பைசா வரி விதிக்கப்படும்.

அதற்கு அடுத்து இருக்கும் ரூ. 5,000-க்கு 30 பைசா வரி விதிக்கப்படும்.

அதற்கு அடுத்து இருக்கும் ரூ.5,000-க்கு 35 பைசா வரி விதிக்கப்படும்.

அதற்கு அடுத்து இருக்கும் ரூ. 10,000-க்கு 45 பைசா வரி விதிக்கப்படும்.

அதற்கு அடுத்து இருக்கும் ரூ. 15,000-க்கு 50 பைசா வரி விதிக்கப்படும்.

அதற்கு மேல் வருகிற வருமானத்திற்கு 55 பைசா வரி விதிக்கப்படும்.

இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று முன் மொழிகிறேன்.

The amendment of Thiru J. James was, by leave, withdrawn.

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்தத் திருத்தங்களைப் பற்றி ஏற்கனவே மொத்தமாக சட்டத்தைப் பற்றிப் பேசும்போது பேசியிருக்கிறேன். மீண்டும் இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுவதெல்லாம், முன்பு 12½ ஸ்டாண்டர்ட் ஏக்கர் வரையில் வைத்திருந்ததை இப்போது 7½ ஸ்டாண்டர்ட் ஏக்கருக்குக் குறைத்துவிட்டீர்கள். இதற்கு முன்பிருந்த சட்டத்தில் 7½ ஏக்கருக்கு மேல் 12½ ஏக்கருக்குள் இருப்பதற்கு ரூ. 11.25 என்று இருந்தது, இப்போது ரூ. 15 ஆக உயர்த்தப்பட்டுவிட்டது. அதற்கு மேலே 10 ஏக்கர் வரையில் ரூ. 18.75 வரை போட்டிருந்தது, இப்போது ஐந்து ஏக்கர் வரையில் குறைக்கப்பட்டு ரூ. 25 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. முன்பெல்லாம் "பணப்பயிர் வைப்பதற்குத் தான் வரி போடுவோம்" என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு உள்ளநிலை எப்படி இருக்கிறது என்றால், ஏழரை ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு மேல் வைத்திருந்தால் அந்த விவசாயி நெற்பயிர் போட்டால்கூட வரி கட்ட வேண்டிய நிலை இப்போது ஏற்படுகிறது. பணப்பயிர் போடுகின்றவர்களுக்குத்தான் வரி என்று சொல்லிவிட்டு இப்போது நெற்பயிற் போடுகின்றவர்களுக்கும் வரி என்று இருந்தால் விவசாயத்தை விளங்கவைக்கப் போகிறோமோ அல்லது விவசாயத்தை ஒடுக்கப்போகிறோமோ என்று யோசித்துப் பார்க்க வேண்டும். உணவுப் பிரச்சினை மிகமிக முக்கியமானது. உணவு உற்பத்தி அதிகமாகிக் கொண்டே போகும் போது விலையும் ஏறிக்கொண்டே போகிறது. உற்பத்திச் செலவும் நாளுக்கு நாள் ஏறிக்கொண்டே போகும் இந்த நேரத்தில் இப்படி மேலும் மேலும் புதிய அல்லது கூடுதலான வரிகளைப் போட்டுக் கொண்டிருந்தால் விவசாயிகள் மிகவும் கஷ்டத்திற்குள்ளாவார்கள். இந்த வரிபற்றி



1971 ஜூலை 30] [திருமதி த. ந. அனந்தநாயகி]

வரவு செலவு திட்டத்தில் சொல்லப்படவில்லை. எந்தக் காரணத்தினாலோ அதற்குப் பிறகு யோசித்துப் போட்டிருக்கிறார்கள். எனவே இதை எதிர்க்கிறேன். இப்போதுகூட இதுபற்றி சற்று யோசித்துப் பார்த்து உணவு உற்பத்தியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு பழைய வரிகளே போதும். புதிய வரிகள் தேவையில்லை என்று அறிவிப்பதற்கு அரசாங்கம் முன்வந்தால் நன்மையாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவரவர்களே, சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்று விரும்புகின்றவர்கள் புதிய வரிவிதிப்புகளை எதிர்க்கமாட்டார்கள் என்றுதான் அரசாங்கம் எதிர்பார்த்தது. போடப்பட்டுள்ள இந்த வரிகள் ஏழைகளை எந்தவிதத்திலும் பாதிக்கக்கூடியதல்ல. பெரிய நிலச்சுவான்தாரர்களைத் தான் இது தொடஇருக்கிறது. ஏன் ரூ. 11.25 என்று இருந்ததை ரூ. 15 என்று உயர்த்தினார்கள் என்று கேட்டார்கள். அரசாங்கத்தின் வருமானத்திற்காகத்தான் ஏற்றினோம் என்று சொல்லிக்கொண்டு அம்மையார் அவர்களுடைய திருத்தத்தை ஏற்பதற்கில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி த. ந. அனந்தநாயகி அவர்கள் தங்கள் திருத்தத்தை வற்புறுத்துகிறார்களா?

THIRUMATHI T. N. ANANDANAYAKI : No amount of argument is going to cut ice. So, I am not pressing my amendment.

திருமதி த. ந. அனந்தநாயகி, திரு. கே. பி. கோபால் திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோர் கொண்டுவந்துள்ள திருத்தங்கள் வற்புறுத்தப்படவில்லை. பேரவையின் அனுமதியுடன் அவை திரும்பப் பெறப்பட்டன.

அரசினர் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

Clause 5, as amended, was put and carried.

*Clause* 1.

MR. SPEAKER : The question is—

"That clause 1 do stand part of the Bill".

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Sir, I move the following amendment :—

For Clause 1, substitute the following clause, namely :—

"1. *Short title and commencement*.—(1) This Act may be called the Tamil Nadu Agricultural Income-tax (Amendment) Act, 1971—

(2) It shall come into force on the 1st April 1972".

The amendment was put and carried.

[Thiru P. U. Shanmugham] [1971 ஜூலை 30

Clause 1, as amended, was put and carried.

The Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGHAM: Sir, I move—

"That the Bill, as amended, be passed."

MR. SPEAKER: The hon. Member Dr. H. V. Hande may now speak.

DR. H. V. HANDE: I just want to seek an information whether the Central Government or Planning Commission had asked this Government to raise the resources of this State through this agricultural income-tax or on what basis. I suppose the Hon. Chief Minister who is also the Finance Minister will enlighten us on this point. May I know whether instructions were received by this Government that agricultural income-tax should be levied and our resources should be augmented? If it is possible to give the details, I would like the Hon. Minister to give them...............

MR. SPEAKER: The hon. Member cannot ask such questions. How can he ask whether the Central Government had asked the State Government to raise resources? That is not correct.

DR. H. V. HANDE: Even during the third reading of the Bill, we can object to the Bill. The Bill is before the House and we are entitled to express our views.

MR. SPEAKER: The hon. Member is not expected.........

DR. H. V. HANDE: I request the Chair also to allow us to let us know this particular information viz., on what basis they want this tax to be levied. If the Hon. Minister is willing to give the answer, I would be happy. I think the Chair need not be rigid.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவரவர்களே, மத்திய அரசுக்கும் நாம் இப்போது விதிக்க இருக்கும் இந்த வரிகளுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. நமது வருவாயை பெருக்குவதற்காகத்தான் நாம் வரியை விதிக்கிறோம்.

திரு. ஏ. எம். இராஜா: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள், பல விதிவிலக்குகளை அளித்திருக்கிறார்கள். பாராட்டவும் நன்றிசொல்லவும் கடமைப்பட்டிருக்கிறோம். அதே நேரத்தில் நிலங்கள்—பயிர்கள் பற்றிய குறிப்புகள் அடங்கல்கள், சிட்டாக்கள் எல்லாம் கிராம மணியமும் கணக்குப் பிள்ளையும் வைத்திருக்கின்றார்கள். அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், ஒரு புதிய "பாரம்" தயார் செய்து விவசாயிகளுக்கு அளிக்கப்படும் என்று. அதில் என்ன பயிர் வைக்கின்றார்கள் என்று கிராம கணக்குப்பிள்ளைகள் எழுதும்போது, விவசாயிகளுடைய கையெழுத்தும் வாங்கப்பட்டால் நன்றாக இருக்கும்.



1971 ஜூலை 30]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் நடத்தும்போது, கீழ் மட்டத்தில் உள்ள அதிகாரிகளை நம்பித்தான் அரசாங்கம் நடத்தமுடியும். எனவே அவர்கள் தயாரிக்கும் ரெகார்டுகளில் விவசாயிகளுடைய கையெழுத்தை வைப்பது என்பது இயலாது. அரசாங்கம் பாரம் தயார் செய்து கொடுக்கும் என்று சொன்னது, வருமான வரி கட்டுவதற்கான அறிக்கையை வருமானவரி அதிகாரிகளுக்கு அனுப்பபடும் ரிப்போர்டை எப்படி தயாரிக்க வேண்டும் என்பதற்காகத் தான் ஒரு பாரம் தயார் செய்து தரப்படும் என்று குறிப்பிட்டேன். இதை விவசாயிகள் பூர்த்தி செய்துகொடுத்தால் அதற்குப் பிறகு வரி விதிப்பு அதிகாரிகள் மணியக்காரர்—கணக்குப்பிள்ளையிடமுள்ள ரெகார்டுகளுடன் ஒப்பிட்டுப்பார்த்து அதிகாரிகள் வரி விதிப்பார்கள்.

திரு. ஏ. ஆர். சுப்பையா: பேரவைத் தலைவரவர்களே, சலுகைகளுக்காக நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த ரிட்டர்ன்கள் சம்பந்தப்பட்ட வரையில் இன்கம்டாக்ஸ் கணக்கில் "டிப்ரீசியேஷன் வால்யூ", "மெய்ன்டனென்ஸ் ஆஃப் மெஷின் டிராக்டர் இவற்றையெல்லாம் ஒரு ஐடமாகக் கொடுக்கிறார்கள். அரசாங்கம் பாரம் போடும்போது இவற்றையும் அவற்றில் குறிப்பிட்டால் பிரயோசனப்படும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இது ஒரு யோசனை. அதன் மீது ஒரு உத்தரவாதமும் கொடுப்பதற்கில்லை.

பேரவைத் தலைவரவர்களே, "இச் சட்டமுன் வடிவு திருத்தப் பட்டபடி சட்டமாக்கப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்டமுன் வடிவு, திருத்தப்பட்டபடி, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## (ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு விற்பனை வரி (மேல்வரி) சட்டமுன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1971)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவரவர்களே

"தமிழ்நாடு 1971-ம் ஆண்டு விற்பனை வரி (மேல்வரி) சட்ட முன் வடிவு *(சட்டப் பேரவை சட்டமுன் வடிவு எண் 22/1971) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

THIRU A. SUBRAMANIAM: Sir, I move the amendment standing in my name, viz.—

"That the Tamil Nadu Sales Tax (Surcharge) Bill, 1971 (L.A. Bill No. 22 of 1971) be circulated for eliciting public opinin thereon".

The amendment was duly seconded.

* 1971-ம் ஆண்டு ஜுலை மாதம் 12-ந்தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

THE HON. THIRU P. U. SHANMUGAM: On 19th June 1971, the Chief Minister announced in his Budget Speech the proposal of the Government to levy a surcharge of 10 per cent on the tax payable by dealers in respect of the sale or purchase of goods in the City of Madras. However, during the general discussion on the Budget, some members pleaded that the rate was very stiff and it might be reduced and some Members said that there was need to extend the levy to the belt area around the City of Madras and also to other areas to avoid discrimination. Our Chief Minister, as a gesture, announced in his reply on the 29th June 1971, the decision of the Government to reduce the rate of surcharge to 5 percent and also to extend the levy to the suburban areas of the City of Madras, to the city of Madurai and also to the municipal towns of Salem, Coimbatore and Tiruchinappli. As the Honourable Members are aware, the revenue realised on account of this levy will be utilised by the Government for the improvement of the above Cities and Municipal towns through measures like slum improvement and for providing necessary infrastructure such as roads, water supply, etc.

In clause 3 of the Bill, provision has been made for the levy of the surcharge on the tax payable under the Tamil Nadu General Sales Tax Act, 1959, on the sale or purchase of goods within the limits of the area in which the levy will be in force. Clause 4 of the Bill provides for the levy of similar surcharge on the tax payable under the Tamil Nadu Sales of Motor Spirit Taxation Act, 1939.

The Bill also provides for the levy of the surcharge in the City of Madras, from the 19th June 1971. In respect of other areas, viz., the City of Madurai and the municipal towns of Salem, Coimbatore and Tiruchirappalli the levy of surcharge will take effect from the 29th June 1971. In the suburban areas of the City of Madras namely an area within 32 Kilometres of the City, the levy will take effect from the 12th July 1971, the date of the publication of the Tamil Nadu Sales Tax (Surcharge) Bill, 1971, in the *Tamil Nadu Government Gazette*. The rate of surcharge will be 5 per cent from the 29th June 1971, but in respect of the City of Madras for the period from the 19th June 1971 to the 28th June 1971, the rate of surcharge will be 10 per cent.

Provision is also made in the Bill to extend the levy of surcharge to any other municipal town or township or their suburban areas and also to the suburban areas of the City of Madurai and of the Municipal towns of Salem, Coimbatore and Tiruchirappalli. Such extension has to be done by notification issued by Government with the approval of this House.

Sir, I commend the motion for the acceptance of the House.



THIRU K. M. SUBRAMANIAM: Mr. Speaker, Sir, I am very thankful to the Hon. Chief Minister for having reduced the surcharge to 5 per cent. But still I have to point out certain anomalies that will arise out of the imposition of this surcharge. First of all I do not know whether it is a discriminatory tax. That has to be examined later. But one think I would like to say is, that the imposition of this type of tax on sales tax creates a lot of difficulties. Particularly, lately there was an announcement that this tax can be collected from the consumers. First of all we are not sure that prices will not go up by the imposition of this tax. It seems that the Government have allowed the collection of surcharge as an additional levy. The billing is difficult. First you have to say sales tax, then add surcharge and this billing itself is a difficult thing for the ordinary retailer.

Secondly, in these days of prices going up, it is very necessary that there should be minimum incidence of taxation. After all if the revenue warrants such a taxation, I can appreciate it. The revenue must warrant it. If you calculate the total revenue that can be collected out of this surcharge, you will find that revenue will not warrant such a surcharge at all. It is not an income-tax on which a surcharge can be levied. It is a sale. There is no profit. When a man makes a profit there is a tax. But this is a tax just in the process of sales. To have a surcharge on sales tax is certainly unholy.

(Mr. Deputy Speaker in the Chair.)

I think the Government should have an open mind in this. What is going to happen to our economy if such small taxes are added on to the consuments? I think the Hon. Minister for Revenue would have seen that in Britain they have reduced the consumer tax one week back with the explanation that it is for generating economy. Two factors have to be considered. One is consumers' factor and the other is the producers' factor. If prices are going up by this levy like this, what will happen? There will be consumer resistance. When consumer resistance is there, the industrial output cannot be sold. If industrial output cannot be sold, there is going to be unemployment. It is a vicious circle. On the one hand the consumption goes down. On the other hand you have got industries closing down or reducing their output. Two things we are trying to achieve today. One is reduction in prices of essential commodities and creation of employment. This surcharge is going to completely cut down both.

One other point I would like to make is this. This surcharge is on sales tax. The establishment cost of the shop-keeper is already high. In Madras the rent is high, staff salary is high. And when that is the case I think any reasonable Government would accept my suggestion that when the rent is high on the one side, when the establishment charges are high, particularly in cities, to have a surcharge on sales tax is not proper. It is not

right. I can only take the horse to the river, but I cannot make it drink water. I have been trying my utmost to tell them that this surcharge is one of the evils of taxation. It will definitely result in prices going up. It is going to create a lot of inconvenience to traders, particularly in cities where the cost of trading is high, establishment charges are high. It is unfair to have a higher rate of tax in cities. I have already stated that the establishment cost is high and then it will result in lesser consumption, lesser industrial production, lesser sales, consumers' resistance and unemployment. I hope that the Hon. Minister will certainly accept to withdraw this taxation measure completely because 5 per cent is nothing, as it will unnecessarily create trouble. Thank you, Sir.

திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு முதலமைச்சரவர்கள் வியாபாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க வரியைக் குறைப்பதற்கு ஒப்புக்கொண்டார். ஒரு பெரிய மாநாட்டிலே கலந்து கொண்ட கலைஞர் அவர்களிடம் வியாபாரிகள் இந்த வரியினால் வியாபார சமூகத்தின் பாதகங்களை எடுத்துச் சொன்னார்கள். இந்த சர் சார்ஜ் விதிக்கப்பட்டதால் வியாபார சமூகத்தினிடையே பெரும் அதிருப்தி நிலவுகிறது. அதைப் போக்குவதற்கு இந்தச் சட்டத்தைத் திருத்தி அவர்களைத் திருப்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் சேலம், கோவை, மதுரை ஆகிய நகரங்களுக்கு 15 சத விகிதம், சர்சார்ஜ் 3½ சதவிகிதம் என்று இருப்பதை மாற்றி இந்த ½ சத விகிதம் கட்டியோ குறைத்தோ மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டு அமருகிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வகாப் அவர்கள் வியாபாரிகளின் சார்பாகப் பேசினார். ஆனால் சோஷலிச சமுதாயத்தை அமைக்கப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் தாங்கக் கூடியவர்கள் அதிகம் தர வேண்டும். இந்த சர் சார்ஜ் போட்டிருப்பதை மாற்றியமைக்க வேண்டும். இது சோஷலிசக் கொள்கைகளுக்கு மாறானது. வரிகள் போடப்படும்போது அவைகள் நேர்முக வரிகளாகத் தான் இருக்க வேண்டும். சோஷலிச சமுதாயத்தில் மறைமுக வரிகள் போடப்படக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மறைமுக வரிகள், இன்டைரக்ட் டாக்ஸ் போடப்பட்டால் அவைகள் கண்டிப்பாக மக்கள் தலைமேல் தான் ஏறும். இது நடைமுறையில் பார்க்கிற உண்மை. அதே போல சர்சார்ஜ் தாங்கக்கூடியவர்களுக்குப் போடப்பட்டதாக அரசாங்கம் கூறுகிறது. ஏற்கனவே விலைவாசிகள் ஏறிக் கொண்டிருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். அந்த விலைவாசிகள் மேலும் உயர்வதற்கு இந்த சர்சார்ஜ் வழி செய்யும். எனவே இதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்வேன். ஏற்கனவே சென்னை நகருக்கு 10 சத விகிதம் என்று போட்டிருந்தார்கள். அந்த சர்சார்ஜ் கூடாது என்று சொல்லப்பட்டது. நான் ஏற்கனவே சுட்டிக்காட்டியதுபோல் முதல் அமைச்சர் அவர்கள் சாமர்த்தியமாக சென்னை நகருக்கு மட்டும் போடுவது தானே கூடாது, இது 5 சத விகிதம் ஆகக் குறைக்கப்பட்டு மற்ற கோவை, திருச்சி, சேலம் ஆகிய நகரங்களுக்கும் விஸ்தரிப்பதாகச் சொல்லிவிட்டார்கள். இது சோஷலிச அரசு செய்யக்கூடாத ஒன்று என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். சென்னையைவிட கோவை, திருச்சி, சேலத்தில் வாழ்க்கைச் செலவு 40 புள்ளி, 50 புள்ளி அதிகமாகியிருக்கிறது. இந்த சர்சார்ஜினால் மேலும் ஏறும். விலைவாசிகள் ஏறும். சம்பளம் போதாது என்று கூக்குரல் கிளம்பும். நாமும் சும்மா இருக்க முடியாது. சம்பளத்தை உயர்த்தவேண்டிய நிலை வரும். இந்த வரியினால் நம்முடைய கஜானாவுக்கு வருமானம் வருகிறது என்றால் அது வேறு வகையில் போய்விடும். இதனால் பெரிதும் சாதாரண மக்கள் பாதிக்கப்படுவார்கள். பிக்சட் இன்கம் க்ரூப் வெகுவாக பாதிக்கப்படும். தயவு செய்து இந்த முயற்சியினைக் கைவிடுங்கள். நான்கு கோடி மக்களுடைய நன்றிப் பெருக்கினுக்கு ஆளாகுங்கள் என்று சொல்லிக்கொண்டு, இந்த மசோதாவினை பொதுக் கருத்தினுக்குவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.



DR. H. V. HANDE : Hon. Deputy Speaker, Sir, I oppose this Bill strongly with all the emphasis at my disposal on two grounds. (1) It is inflationary for the simple reason that though this is called a surcharge, it is only a direct tax on the consumer in reality. It is indirectly a tax on them though it is to be paid by businessmen for augmenting his income, it will definitely have its repercussions on the price of commodities. Therefore, it is not necessary for us to be delighted by this. It is highly inflationary. This has not been done in the way in which it should be done.

Secondly it is unconstitutional. It is indirectly an income-tax and not sales tax. This we have brought home to the Government several times but they have not accepted it. It is a tax on income. It is a tax on turnover. It is called surcharge. It is a tax on the businessman as Mr. Wahab pointed out and he has to pay it on the basis of his income. How is it constitutional? There are so many lawyer members in this House and it would be better if they enlighten the Government on this.

It is also highly inflationary, as already pointed out by me. That is why the Central Minister, Mr. Sethi had condemned it and questioned it. Though the Centre supports the State Government on several points and both of them see eye to eye on several points, in this taxation measure with regard to sales tax, the Centre is not satisfied with the way in which the taxation is levied by Tamil Nadu Government. That is why Mr. Sethi, the Central Minister has said so. That is why he has voiced his objections. So on these grounds I oppose this Bill.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த மசோதாவின் பேரில் என் கருத்துக்களை வெகு சுருக்கமாகச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 ஜூலை 30

பொதுவாக, விற்பனை வரியை 3 சதவிகிதத்திலிருந்து $3\frac{1}{2}$ சத விகிதமாக உயர்த்தியதையும், சர்சார்ஜ் போடுவதையும் எங்கள் கட்சியின் சார்பில் நாங்கள் எதிர்க்கிறோம். சர்சார்ஜ் போடுவதே சரியில்லை என்று சொன்ன நேரத்தில் 10 சதவிகிதத்தை 5 சதவிகித மாக ஆக்கியிருப்பதை ஆட்சேபிக்கவில்லை. ஆனால் வந்திருக்கக் கூடிய தவறு என்ன வென்றால் இந்த சர்சார்ஜை 5 சத விகிதமாகக் குறைத்து மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகிய நகரங்களுக்கும் இதை விஸ்தரித்திருக்கிறார்கள். பின்னால் மற்ற பெரிய இடங்களுக்கும் இது விஸ்தரிக்கப்படும் என்று சொல்வதைப் பார்த்தால் தமிழகம் பூராவும் இது வந்துவிடுமோ என்ற ஐயப் பாடு வருகிறது. இம்மாதிரி ஏற்கனவே சொன்னதுபோல சர் சார்ஜை சென்னை நகருக்கு கொள்கை அளவில் போட்டுவிட்டாலும் மற்ற நகரங்களுக்குப் போடுவது சரியில்லை என்ற ஆட்சேபணையைக் கொடுத்திருக்கிறேன். இந்த சர்சார்ஜ் போடுவதனால் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபோல சாதாரண மக்கள் வாங்குகிற சாமான்கள் விலை உயரும்.

இந்த வரி எந்த அளவு இன்கம்டாக்ஸ் போல ஆகும் என்பது எனக்குத் தெரியவில்லை. சென்னை நகரில் இப்போதே மக்களிடத்தில் இந்த 10 சதவிகிதம் சர்சார்ஜையும் சேர்த்து வாங்கிக்கொண்டிருக் கிறார்கள். இது மக்களை பாதிக்கும் என்கிற அடிப்படையில் எங்க ளுடைய எதிர்ப்பை ரெக்கார்டு பண்ண வேண்டும் என்பதற்காகத் தான் இதைச் சொல்கிறேன்.

திரு. என். கணபதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள விற்பனை வரி திருத்த மசோதாவை நான் ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

நம்முடைய கலைஞர் அவர்கள் கொண்டு வந்த நிதிநிலை அறிக்கை யின் மீது பெரிய விவாதம் நடந்தது. அந்த விவாதத்தில் குறிப் பிட்ட முக்கியமான விஷயம் சோஷலிச சமுதாயத்தை விஞ்ஞான ரீதியாக அமைத்து எல்லா மக்களும் ஏற்றத்தாழ்வு இன்றி எல்லா நலன்களும் பெற வகை செய்யப்படவேண்டும் என்பதாகும்.

நம்முடைய அரசாங்கத்தின் அந்தக் கொள்கையைச் செயல் படுத்த வேண்டுமானால் வருவாய் இல்லாது என்ன செய்வது? இது வரை நம் அரசு போடுகிற வரிகள் எல்லாம் ஏழை மக்களைப் பாதிக்காது, தாங்குகிறவர்கள் மீது தாங்கக் கூடிய அளவு போட வேண்டும் என்கிற அடிப்படைக் கொள்கையின் மீதுதான் போடப் பட்டு வந்திருக்கிறது.

அந்தவகையில் இப்போது சர்சார்ஜ் என்று போட முன்வந் திருப்பது திரு. ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டதுபோல எந்த வகையிலும் இன்கம்டாக்ஸ் என்ற முறையில் மத்திய அரசாங்கத்தின் உரிமையில் தலையிட்டதாக ஆகாது. ஆகவே, இந்த மசோதாவை நான் ஆதரித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன்.



1971 ஜூலை 30]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, பேரவையில் முன் கொண்டுவரப்பட்டிருக்கிற திருத்த மசோதாவின் மேல் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்தைத் தெரிவித் தார்கள்.

திரு. ஹாண்டே அவர்கள் பேசும்போது ஒரு கருத்தைச் சொன் னார்கள். மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த அமைச்சர் சேத்தி அவர்கள் "நாட் கண்டுயூசிவ்" என்பதாக நம்முடைய விற்பனை வரியைப் பற்றி பொதுப்படையாக குறிப்பிட்டது போலப் பொருள் படும்படி சொன்னார்கள். தமிழ்நாடு அரசாங்கத்தின் விற்பனை வரிக் கொள்கையே ஒத்துவரவில்லை என்று அவர்கள் சொல்லவில்லை. அவர்கள் ரிபைனரி பற்றி மட்டும்தான் குறிப்பிட்டார்கள். திரு ஹாண்டே அவர்களே கேட்டிருந்தால் நான் அதுபற்றிய சிக்கலை எடுத்து விளக்கியிருப்பேன்.

இன்றையதினம் ரிபைனரிக்கும் 3 சதவிகிதம் வரி என்ற அளவில் நாம் போடுகிறோம். அதற்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தில் இருந்து கேட்கப்பட்டது. சில மாநிலங்கள் விலக்குக் கொடுத்திருக்கிறார்கள். சில மாநிலங்கள் விலக்குக் கொடுக்கவில்லை. நம் மாநிலத்தைப் பொறுத்த அளவிலும் விலக்கு அளிக்க முடியாது என்றுதான் சொல்லிக்கொண்டிருக்கிறோம். விலக்கு அளிக்காவிட்டால் சர்சார்ஜ் என்று போடப்போவதாகக் கூட அவர்கள் சொன்னதற்கு நாம் கூடாது என்று வாதிட்டுக் கொண்டிருக்கிறோம். இதுபற்றிப் பேசவேண்டும் என்பதாக நிதி அமைச்சர் திரு. சவான் அவர்கள் நமது முதல் அமைச்சருக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்கள். தம்முடைய அலுவல்களை எல்லாம் கவனித்து, நமது முதல்வர் அதற்கும் கடிதம் எழுத இருக்கிறார்கள். ஆக மத்திய அமைச்சர் ரிபைனரியைப் பற்றி மட்டும் கூறிய கருத்தை நமது விற்பனை வரி சம்பந்தமாக பொதுவாகச் சொன்ன கருத்தாக எடுத்துக்கொள்வது சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இது அரசியல் சட்டப்படி செல்லுமா என்றார்கள். செல்லும். ஏற்கனவே ஒரு சர்சார்ஜ் போட்டிருக்கிறோம். அந்த சர்சார்ஜை வியாபாரிகள் கட்ட வேண்டும். வாங்குவோரிடம் "பாஸ்ஆன்" பண்ணக்கூடாது என்று சொன்னோம். சிலர் கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள். அதன்மீதுகூட ஹைக் கோர்ட்டுக்குப் போய் இருக்கிறார்கள். ஹைக்கோர்ட் இன்னும் தீர்ப்பு அளிக்கவில்லை. வழக்கு நடந்துகொண்டிருக்கிறது. இந்த சர்சார்ஜ் வாங்குபவர்கள் கொடுக்க வேண்டுமென்று நாம் சொல்லி யிருக்கிறோம். It can be passed on to the consumer. என்று சட்டம் போட்டிருக்கிறோம். விலைவாசிகள் எல்லாம் ஏறி விடப் போகிறது என்று சொல்வதில் பொருள் இல்லை. பத்து ரூபாய்க்கு பொருள்கள் வாங்குகிறான் என்றால் அதற்கு இப்போது விற்பனை வரி $3\frac{1}{2}$ சதவீதம். அடுத்த பில்லில் $\frac{1}{2}$ சதவீதம் வர இருக் கிறது. பத்து ரூபாய்க்கு இப்போது பொருள்கள் வாங்கினால் விற்பனை வரி 35 பைசா கொடுக்க வேண்டும். 35 பைசா மீது 5 சத வீதம் சர்சார்ஜ். அதாவது 2 பைசா வருகிறது. ஆக, 35 பைசா

வரியாகக் கொடுக்கிறவன் 37 பைசாவாகக் கொடுக்க வேண்டும். இந்த இரண்டு பைசா கொடுப்பதாலேயே விலைகள் எல்லாம் ஏறி விட்டன என்று சொல்வது பொருத்தமாக இருக்காது. நம்முடைய நண்பர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் தன்னுடைய பேச்சை முடிக்கும்போது, Five per cent is after all nothing என்று ஆங்கிலத்தில் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்த வரி விதிப்பினால் விலை ஏறிவிடாது என்று சொல்லி, நேரம் அதிகமாகின்ற காரணத்தினால் சீக்கிரத்தில் இந்த மசோதாவை நிறைவேற்றி விட்டு, அடுத்த மசோதாவுக்குப் போகலாம் என்று சொல்லிக் கொண்டு, இந்த மசோதாவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : I do not know whether I have spoken like that or whether it has been wrongly reported. I have opposed it tooth and nail. I did not say such a thing. If it is reported like that it is a slip of the tongue, or, if it is otherwise, it is a mistake.

Another point which I want to clarify is this. The Hon. Minister said "After all only 5 per cent tax on the sales tax". The sales tax is 14 per cent and I will explain it later after the Hon. Minister finishes his speech.

DR. H. V. HANDE : The Hon. Minister said that those who are paying 35 paise are going to pay 37 paise. Is it correct? That means the consumer is going to pay 37 paise. So, he accepts that the consumer pays.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இது வாங்குபவர்கள்தான் கொடுக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பத்து ரூபாய்க்கு பொருள்கள் வாங்கினால் 35 பைசா வரி கட்டவேண்டும். மேற்கொண்டு 2 பைசாதான் வருகிறது. ஆகவே, 37 பைசா என்று வருகிறது. இரண்டு பைசாவினால் விலைகள் விஷம்போல் ஏறுகிறது என்று சொல்வது பொருத்தமல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Finally on a point of clarification. That is not 2 per cent. There are 3 turnovers before the goods are sold to the consumers. On those three turnovers 14 per cent is already there. It is another 3-1/2 per cent and 5 per cent on the 14 per cent. That is the ultimate thing.

THE HON. THIRU P. U. SHANMUGAM : It is not correct. It is not 2 per cent. It is 2 paise.

THIRU K. M. SUBRAMANIAM : Suppose the cost of an article at a retail shop is Rs. 10. Already three times there has been turnover. It is a muli-point tax. That has come to 14 per cent—3-1/2 plus 3-1/2 plus 3-1/2 plus 3-1/2—and on that we have got another 5 per cent plus 5 per cent plus 5 per cent plus 5 per cent which will ultimately result in 2 per cent extra.



One more point. The tax is discriminatory. People living in Madras are paying a different tax. My only fear is—I do not say I am right—people in Madras City are paying certain sales tax, people in Poonamallee are paying certain sales tax, people living in Sriperumbudur are paying certain sales tax. Is it legal? I do not know. It is for the Department to find out.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இந்த வரி நான் ஏற்கெனவே சொல்லியதுபோல் பொருள் வாங்குபவர்களுக்குத்தான். பத்து ரூபாய்க்குச் சாமான்கள் வாங்கினால் 35 பைசா வரியாக வருகிறது. பலமுனை வரி வேண்டாம் என்று சொல்வது வேறு விஷயம். சர்சார்ஜ் சேல்ஸ்டாக்ஸ் மேல் போடுவதால் பெரிய பாரமாக இருக்காது. ஆகவே, இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : I think I am failing in my language. First when the manufacturer sells to the wholesaler there is a surcharge. When the wholesaler sells to the retailer there is a surcharge. When the retailer sells to the consumer there is a surcharge. It is not an innocent 5 per cent. It is 15 per cent or 20 per cent. That the Hon. Minister has to clarify, or I am not able to clarify myself to him.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மீண்டும் மீண்டும் என்னுடைய விளக்கத்தைப் புரிந்துகொள்ளாமல் அதையே கேட்கிறார். கன்ஸ்யூமர்ஸ்க்காகத்தான் பேசுகிறேன். ப்ரொடக்ஷன் செய்பவர்கள், ஹோல்சேலர்ஸ் இவர்களுக்காகப் பேசவில்லை. பத்து ரூபாய்க்கு பொருள்கள் வாங்கினால், 35 பைசா வரி இருக்கும். முப்பந்தைந்து பைசாவுக்கு 2 பைசா என்று சொன்னார்கள். பல முனைகளில் இப்படி வருகிறது. அது தவிர்க்க முடியாதது.

The amendment of Thiru A. Subramaniam was, by leave, withdrawn.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Tamil Nadu Sales Tax (Surcharge) Bill, 1971 (L.A. Bill No. 22 of 1971) be taken into consideration."

DR. H. V. HANDE : I am opposing it. I want division.

The motion was put to voice vote and declared carried, and the Bill was taken into consideration clause by clause.

*Clause 2.*

MR. DEPUTY SPEAKER : The question is—

"That Clause 2 do stand part of the Bill".

THIRU K. T. K. THANGAMANI : Sir, I move—

"In Clause 2, delete sub-clauses (a) (ii), (a) (iv) and (c) (ii)."

The amendment was duly seconded.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I move—

(i) In Clause 2, delete sub-clause (a) (ii) and (iv).

(ii) In Clause 2, sub-clause (c) (i), for the words "thirty-two kilometres" substitute the words "fifteen kilometres".

(iii) In clause 2, delete sub-clause (c) (ii).

The amendments were duly seconded.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னது மாதிரியாக இந்தத் திருத்தத்தின் நோக்கம்,

"This Act shall be deemed to have come into force in the City of Madurai and the municipal towns of Salem, Coimbatore and Tiruchirappalli on the 29th June 1971."

என்று இந்தப் பகுதியும், அதே மாதிரி சுற்றியிருக்கக்கூடிய பகுதிகளையும் நீக்க வேண்டுமென்பது. இந்தத் திருத்தத்தின் நோக்கத்தைத் தெரிவித்தேன். சென்னை நகரத்திற்கு. சென்னை நகரத்தோடு இல்லாமல் மற்ற முக்கியமான நகரங்களையும் சேர்ந்து வைத்துப் பின்னால், மற்ற நகரங்களுக்கு விரிவு படுத்தலாம் என்ற ஐயப்பாடு இருக்கிறது. எனவே சென்னையைத் தவிர மற்ற நகரங்களுக்கு இப்போது விரிவுபடுத்த வேண்டாமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, நான் கொடுத்திருக்கிற திருத்தங்களை ஆதரித்து ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். வரவு-செலவுத் திட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னை நகரத்திற்கு மாத்திரம் 10 சதவிகிதம் என்று சொன்னார்கள். ஒருசில நாட்கள் கழிந்தபிறகு 10 சதவிகிதம் என்பது 5 சதவிகிதம் ஆகி, மற்ற நகரங்களுக்கும் அமல் நடத்தியிருக்கிறார்கள். இதை நான் கடுமையாகக் கண்டிக்கிறேன். முதலில் சென்னைக்கு மட்டும் என்று சொல்லிவிட்டு, மற்ற முனிசிபல் டவுன்களுக்கும் விஸ்தரிப்பது என்பது நியாயம் இல்லை. வரவு-செலவுத் திட்டத்தில் சென்னைக்கும் பல இடங்களுக்கும் விஸ்தரிப்போம் என்று சொல்லியிருந்தால் நலமாயிருந்திருக்கும். முதலிலேயே இதைச் சொல்லியிருந்தால் சேலம், கோவை, மதுரை, திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களிலுள்ள வியாபாரிகள் இங்கு வந்து எப்படி எப்படியெல்லாம் பாதிக்கப்படும் என்பதைச் சொல்வதற்காவது வாய்ப்பு இருந்திருக்கும். வியாபாரிகளின் நியாயமான கோரிக்கைகளைக் கேட்பதற்குக் காலம் இல்லாமல் இருப்பது வருத்தத்திற்குரியது. இந்த நான்கு இடங்களை—மதுரை, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி—மட்டும் ஏன் தேர்ந்தெடுத்தார்கள்? அந்த நான்கு ஊர் வியாபாரிகள் மட்டும் என்ன பாவம் செய்தார்கள்? அந்த நான்கு ஊர்களின்மேல் மட்டும் அரசாங்கத்திற்கு என்ன கோபம் என்று தெரியவில்லை. எதற்காக அந்த நான்கு ஊர்களை மாத்திரம் எடுத்தார்கள்? பாபுலேஷன் பேஸிஸைப் பார்த்தா, வியாபார பேஸிஸைப் பார்த்தா? எதைப்பார்த்து



இந்த முடிவுக்கு வந்திருக்கலாம் என்பதும் எங்களுக்குத் தெரியவில்லை. இதுவெல்லாம் முன்னரேயே அவர்களுக்குத் தெரிந்திருந்தால் அவர்கள் எல்லாத் தடுப்பு முறைகளையும் ஆரம்பித்திருப்பார்கள். நான் முன்னமேயே சொன்னபடி இது வியாபாரிகள் மீது போடுகின்ற வரியல்ல. வாங்குவோர் மீது போடுகின்ற வரி. வாங்குவோர் வரி கொடுத்து வரிகொடுத்து வளைந்துவிட்டார்கள்.

It will be the last straw on the camel's back.

ஆகவே வரிப்போட்டு வரிப்போட்டு அவர்களுடைய முதுகை ஒடித்துவிடாதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, சென்னை நகரத்தைச் சுற்றிலும் 32 கிலோ மீட்டர் அளவுக்கு அதாவது 20 மைல் சுற்றளவுக்கு அது போகும் என்று நினைக்கிறேன், இந்த வரியைப் போட்டிருக்கிறார்கள். சென்னை நகரத்தைச் சுற்றி 15 கிலோ மீட்டர்கள் என்ற அளவுக்கு 10 மைல்கள் என்ற அளவுக்குப் போடலாம். முப்பத்திரண்டு கிலோ மீட்டர் என்று போட்டு இருப்பது தூரத்தை அதிகமாக்கியிருக்கிறது. சபர்பன் ஏரியாஸ் என்ற அளவிலே சுற்றி 10 மைல் அளவிலே இருக்கின்ற மக்களுக்கே வசதிகளை நம்மால் செய்துகொடுக்க முடியாத நிலைமையிலே 32 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு சபர்பன் ஏரியாக்கள் என்று எடுத்துக் கொண்டு வசதிகள் செய்வதிலே அக்கறை காட்டாவிட்டாலும் வரி வாங்குவதிலே அக்கறை காட்டுகிறதே என்று வருத்தப்பட வேண்டியிருக்கிறது. அரசாங்கம் மற்ற நகரங்களை யோசித்துச் செய்யலாம், முதலிலே நகரத்தைச் சோதித்துப் பார்க்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10 சதவீதம் என்று அறிவித்த பொழுது மாண்புமிகு உறுப்பினர்கள் அது அதிகம், குறைக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10 சதவீதம் என்பதை 5 சதவீதமாகக் குறைத்து அறிவிப்புச் செய்தார்கள். மற்ற நகரங்களிலும் முதலமைச்சர் அறிவித்த நாளிலிருந்தே ஆங்காங்குள்ளவர்கள் வசூலிக்க ஆரம்பித்து விட்டார்கள். சென்னையின் சுற்றுப்புறத்திலே, அவ்வளவு தூரம் ஏன் என்று கேட்டார்கள். அப்படிப் போட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதலில் கருதவில்லை. ஆனால் உறுப்பினர் கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் அன்றைக்குப் பேசினார்கள், சென்னையிலே என்று வைத்துவிட்டால் பக்கத்திலே கொண்டுபோய் வியாபாரம் செய்துவிடுவார்கள், என்ன செய்வீர்கள் என்று கேட்டார்கள். அவர்கள் அப்படிப் பேசியதற்குப் பிறகுதான் முதலமைச்சர் அவர்களுக்கும் தோன்றி ஆமாம் அப்படிச் செய்தால் என்ன, எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்கிறார்களே செய்வோம் என்ற முறையிலேதான் அதைப் போட்டோமே தவிர வேறு காரணம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருபது மைல் என்று அளவு வைத்ததற்குக் காரணம் சுற்றுப்புறத்திலே சென்று வியாபாரம் செய்து அதன்மூலம் வரியை ஏமாற்றி விடக்கூடாது என்பதற்காகத்தான் அப்படிச் செய்தோம். வியாபாரி

களுக்காக அளிக்கப்பட்டு இருக்கின்ற விதிவிலக்குகளின் கீழே வருகின்றவர்களுக்கு அதனால் பாதகம் எதுவும் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான்கு நகரங்களை எப்படித் தேர்ந்தெடுத்தீர்கள் என்று கேட்டார்கள். அங்கே வியாபாரம் அதிகமாக நடப்பதால் எடுத்துக் கொள்ளப்பட்டது. தமிழ்நாட்டில் வேறு இடங்களுக்கு விஸ்தரிப்பதற்கும் நாம் அதிகாரம் எடுத்து இருக்கிறோம். மீண்டும் மற்ற இடங்களுக்கு அதை விஸ்தரிக்க வேண்டுமென்றால் இந்த அவையிலே அதற்காக ஒரு தீர்மானம் கொண்டுவந்துதான் நிறைவேற்ற வேண்டியுள்ளது. எனவே இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி, திருமதி த. ந. அனந்தநாயகி ஆகியோருடைய திருத்தங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

Clause 2 was put and carried.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் அலுவல் நேரம் பேரவையின் அனுமதியோடு நீடிக்கப்படுகிறது.

பிரிவு 3

MR. DEPUTY SPEAKER: The question is—

"That Clause 3 do stand part of the Bill".

THIRU A. SUBRAMANIAM: Sir, I move the following amendments—

(i) In sub-clause (1), for the words "at the rate of five per cent", substitute the words "at the rate of half per cent."

(ii) Delete the first proviso to sub-clause (1).

The amendment was duly seconded.

திரு. ஏ. சுப்பிரமணியம்: நான் அந்தத் திருத்தத்தைப் பிரேரேபிக்கின்ற நேரத்திலே அமைச்சர் அவர்களிடத்திலே ஒரு சிறிய வேண்டுகோள். சர்சார்ஜை கைவிடமாட்டேன் என்று சொன்னார்கள் அதனுடைய அளவையாவது குறைக்க வேண்டுமென்ற முறையிலே தான் நான் இதை வேண்டுகோளாகத் தெரிவித்துக்கொள்கிறேன் என்பதைச் சொல்லிக்கொள்கின்றேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, I move the following amendment:—

In clause 3, in the first proviso for the words "ten per cent" substitute the words "five per cent".

The amendment was duly seconded.

திருமதி த. ந. அனந்தநாயகி: இந்த 10 சதவீதத்தை 5 சதவீதமாகக் குறைக்க வேண்டுமென்று கொடுத்து இருக்கிறேன். கட்டாயம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள், ஏற்கனவே வியாபாரிகள் வாங்கியிருக்கிறார்கள், ஏன் வருமானத்தை அரசாங்கம்



விடவேண்டும் என்று சொல்வார்கள். இருந்தாலும் ஒரு வாரத்திலே நாம் அப்படிச் செய்தால் அதிகமாக வருமானம் பெறப் போவது கிடையாது. அப்படி அவர்கள் வாங்கியிருந்தாலும் ஒரு வாரத்திற்காக பத்து சதவீதம் என்று போடவேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் வரவு-செலவுத் திட்டம் தாக்கல் செய்த நாளிலிருந்து அவர்கள் அப்படி வசூலிக்க ஆரம்பித்துவிட்டார்கள். அப்படி அவர்கள் வாங்கியதை ஒன்று அரசாங்கத்திற்குத் தர வேண்டும், அல்லது வாங்கியவர்களிடம் திருப்பித் தந்துவிட வேண்டும். வாங்கியவர்களிடம் திருப்பிக் கொடுக்க முடியாது. எனவே, அரசாங்கத்தைக் காட்டி அவர்கள் லாபம் அடைவதற்கு வசதி செய்து கொடுக்க அரசாங்கம் தயாராக இல்லை. முதல் அமைச்சர் அவர்கள் 10 சதவீதம் என்று அறிவித்த நாளிலிருந்து 5 சதவீதம் என்று குறைத்த நாள் வரையில் உள்ள இடைப்பட்ட நாளில் 10 சதவீதம் என்று வசூலிக்கப்பட்டதை அரசாங்கம் பெறுவதற்குத்தான் இது. முதலமைச்சர் அவர்கள் 5 சதவீதம் என்று குறைத்து அறிவிப்புச் செய்த நாளிலிருந்து 5 சதவீதம் என்ற அளவுக்குத்தான் வசூலிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. சுப்பிரமணியம் அவர்கள் அரை சதவீதமாகக் குறைக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

Surcharge on such tax at the rate of five per cent of such tax என்ற முறையிலே அதிகமாக மக்களைப் பாதிக்காது என்பதால் அதை ஏற்றுக்கொள்வதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

The amendments of Thiru A. Subramaniam and Thirumathi T. N. Anandanayaki were, by leave, withdrawn.

Clause 3 was put and carried.

*Clause 4.*

THIRUMATHI T. N. ANANDANAYAKI: In view of the clarification given by the Hon. Minister previously, I am not moving my amendment to this clause.

Clause 4 was put and carried.

Clauses 5 to 7 were put and carried.

*Clause 1.*

MR. DEPUTY SPEAKER: In view of the replies given here I think the hon. Members are not moving their amendments.

Clause 1 was put and carried

The Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGAM: Sir, I move—

"That the Bill be passed".

The motion was put and carried and the Bill was passed into law.

அரசினர் சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1971.)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, " தமிழ் நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு எண் 29/1971) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

The motion was put and carried and the Bill was taken into consideration clause by clause.

Mr. DEPUTY SPEAKER: There are no amendments to the clauses.

Clauses 2 to 6 were put and carried.

Clause 1 and the Enacting Formula Long Title were put and carried.

The Hon. Thiru P. U. SHANMUGAM: Sir, I move :—

"That the Bill be passed".

The motion was put and carried and the Bill was passed into law.

(ஈ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நீதிமன்றக் கட்டணங்கள், வழக்குகள், மதிப்பீடுகள், (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1971).

The Hon. Thiru S. J. SADIQ PASHA: Sir, I move :—

"That the Tamil Nadu Court Fees and Suits Valuation (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 23 of 1971) be taken into consideration."

Thirumathi T. N. ANANDANAYAKI: Sir, I only want to mention one thing. They are now raising the court fee for filing writ proceedings to Rs. 100. It is only Rs. 25 now. At least Government could think of reducing the fee from the proposed Rs. 100 to Rs. 50. Otherwise we will be denying justice to those who want to have justice by going to High Court,

* 27—7—1971-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

‡ Published in the Tamil Nadu Government Gazette Extraordinary, dated 14th July 1971.



the highest judicial authority. Suddenly increasing it from Rs. 25 to Rs. 100 will be too harsh and excessive. So I would request that Government may consider the question of increasing the fee from Rs. 25 to Rs. 50.

திரு. என். கணபதி : சட்டப்பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த ஆர்டிகிள் 226 என்னும் அரசியலமைப்புச் சட்டத்திலிருக்கும் அந்தப் பிரிவு தற்பொழுது எங்கே விடப்பட்டுவிடுமோ என்ற அச்சத்தில் மத்திய அரசு ஒரு திருத்தத்தைக்கூட பாராளுமன்றத்தில் கொண்டுவந்திருக்கிறது. இருந்தாலும் அந்த அரசியலமைப்புச் சட்டத்திலே இடம் பெற்று அதனால் நடைபெறும் வழக்குகள் நாளுக்குநாள் அதிகமாகப் போகின்றன. நீதி மன்றமே இந்தப் பிரச்னையைப் பரிசீலித்து 25 ரூபாய் என்றிருப்பதால்தான் இவ்வளவு கூட்டமாக அல்லது மொத்தமாக வழக்குகள் வருகின்றன. எனவே, அந்தப் பணத்தை, கட்டணத்தை உயர்த்தினால் நிச்சயமாக யாரும் பாதிக்கப்பட மாட்டார்கள் என்று நீதி சொல்ல வேண்டிய அந்த நீதிமன்றமே முடிவெடுத்து ரெக்கமெண்டேஷன் செய்திருக்கிறது. எனவே 25 ரூபாய் என்பதை 100 ரூபாய் என்று ஆக்குவதால் எந்த ஒருவிதமான கஷ்டமும் யாருக்கும் இருக்காது என்று தெரிவித்துக் கொண்டு, வேண்டுமானால் எங்களைப்போன்ற வழக்கறிஞர்களுக்கு சற்றுக் கட்டணம் குறையலாமேதவிர 100 ரூபாயாக ஆக்குவதால் யாருக்கும் எந்தவிதமான பாதகமும் கட்சிக்காரர்களுக்கு ஏற்படாது என்று கூறி மசோதாவை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 226-ல் சாதாரணமாக, பாதிக்கப்பட்டவர்கள் நேரடியாக ஹைகோர்ட்டுக்குப் போகச் செய்யப்பட்ட வசதி. அதில் என்னைக் கேட்டால் 25 ரூபாயேகூட இல்லாமல் செய்திருந்தால் உதவியாக இருந்திருக்கும். 25 ரூபாயாக இருப்பதால் இப்பொழுது கேஸ்கள் ஜாஸ்தி வருகின்றன. ஆக்வே 100 ரூபாயாக்க வேண்டுமென்று ஹைகோர்ட் சிபாரிசு செய்திருப்பது உண்மையிலே ஆச்சரியமாக இருக்கிறது. அந்தச் சிபாரிசை உண்மையிலேயே அரசு பரிசீலனை செய்து, கொண்டு வராமல் இருந்திருக்கலாம். 25 ரூபாய் போதும் என்ற முறையில் Too late in the day என்று இருந்தாலும், என்னுடைய அபிப்பிராயம் Law Department கொஞ்சம் பரிசீலித்து நமது நீதித்துறை சொல்லக்கூடிய ஆலோசனை பூராவையும் நிதி சம்பந்தமாகயிருந்தாலும்கூட ஏற்றுக்கொள்வது என்றால் சாதாரணமாகக் கோர்ட்டுகளில் ஆஜர் ஆகின்றவர்கள் இலவசமாக ஏழைகளுக்கு வசதி செய்ய வேண்டுமென்றும் Litigation must be made very cheep என்று சொல்லும் இந்தக் காலகட்டத்தில் 25 ரூபாய் என்பதை 100 ரூபாய் என்று ஆக்குவது சரியல்ல என்ற கருத்தை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

Thiru M. A. LATHEEF: With regard to the Writ jurisdiction, it is an extraordinary remedy awarded to the common people to seek in the highest Judicial Tribunal. But recently

[1971 ஜூலை 30

the number of cases that are filed in the High Court as per the High Court's opinion is rather unscrupulous. That is how the High Court feels. So, in order to reduce the number, the unscrupulous filing of the Writ petitions . . . .

THIRU R. PONNAPPA NADAR: Sir, I consider that the word 'unscrupulous' is not parliamentary. Hence, it may be expunged from the proceedings.

THIRU M. A. LATHEEF: This word is not used by me.

MR. DEPUTY SPEAKER: You can replace the word by 'vexatious'. That is the legal term I think. You can say 'frivolous' or 'vexatious'. That is the word used in the Court.

THIRU M. A. LATHEEF: If the House feels so, I will say that there is frivolous filing and in order to curb or reduce the frivolous filing of the writ petitions, the opinion of the High Court itself is to increase the rate of fee to Rs. 100. But one thing that I would like to submit to the Hon. Minister for consideration is this. So far as habeas corpus petition is concerned, we know that the common people, poorest sections of the community, are also affected. Those who cannot afford to seek remedy in the High Court—in such cases, I submit, that they may be given facility to file Writ of Habeas Corpus without their paying any Court fee. With regard to other writs, Rs. 100 will be reasonable.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I just wish to read the statement of objects and reasons. I only want to refer to this portion, namely, "The High Court, Madras, has proposed that this fee of twenty-five rupees may be raised to one hundred rupees for the reasons that the sum of one hundred rupees is not excessive in the present circumstances and that the person with a real grievance will not be deterred by a fee of one hundred rupees. The Government have examined the proposal of the High Court and have decided to accept the same on these petitions." So far as the Writ jurisdiction is concerned, it has been elaborately said that it is an extraordinary jurisdiction. The only remedy open to a citizen who has been wronged by the executive or by other quasi-judicial body is to approach the High Court. When you are raising the fees for filing of writ petitions, it would be really placing an embargo on litigation. It may be that certain cases may be frivolous or vexatious and so on and so forth. There is the Admission Court. The admission stage is there and if there is a prima facie case, then only notice will issue. There is no necessity for this increase. No compunction need be held by our hon. Members that the fee that has been suggested by the High Court is reasonable. It is four times. I do not think that our cost of living has gone up four times. So, it would be unfair



1971 ஜூலை 30]

Another suggestion which I want to make is this. So far as habeas corpus is concerned, the present fee is only Rs. 2 and the fee that is leviable so far as habeas corpus petitions are concerned, that should be taken away. That is a point which will have to be taken note of. That may not be germane to the issue that is now before the House. But I would suggest that in the matter of habeas corpus, as this matter affects the liberty of the subject, no fees should be levied. That may be examined at a later stage, even though it will not be possible to do away with it at this stage.

So far as Rs. 100 is concerned, it should be reduced to at least Rs. 50 and it should not be Rs. 100. The Hon. Minister who is also a lawyer should agree with me and sympathetically view all the aspects of the rights of the citizens and I expect that he will accept my view.

* மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்தத் திருத்தத்தின்பேரில் இவ்வளவு தூரம் விவாதம் நடைபெறும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. விவாதித்தவர்களிலே வழக்கறிஞர்களெல்லாம் விவாதித்திருக்கிறார்கள். அவர்கள் எவ்வளவு ஃபீஸ் வாங்குகிறார்கள், கட்சிக்காரர்கள் எவ்வளவு செலவு செய்கிறார்கள் என்பதெல்லாம் தெரிந்த விஷயம்.

சாதாரணமாக இப்படிப்பட்ட ரிட் பெட்டிஷன்களுக்கு இப்பொழுது 25 ரூபாய் என்றிருப்பதை உயர் நீதிமன்றம் பரிசீலித்து பிறகு 100 ரூபாய் விதிப்பது சரி என்று கருத்துத் தெரிவித்ததன்பேரில், உயர் நீதிமன்றம் தெரிவித்ததன் பேரில்தான், அந்தக் கட்டணத்தை உயர்த்த வேண்டியதாகிறது. அண்டை மாநிலமான ஆந்திராவிலும் 100 ரூபாய் என்று இருக்கிறது.

ஒரு ரிட் பெட்டிஷன் தாக்கல் செய்யப்படும் நேரத்தில் செய்யப்படும் செலவு எவ்வளவு என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படிச் செலவழிக்கும்பொழுது 25 ரூபாய்க்குப் பதில் 100 ரூபாய் கொடுப்பதற்கு ஆட்சேபனை செய்யமாட்டார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இந்தக் கட்டணத்தை உயர்த்துவதால், வருகின்ற வழக்குகள் குறைந்துவிடும் என்றோ, அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகளைக் குறைத்து விடுவார்கள் என்றோ எதிர்பார்ப்பதற்கில்லை. ஒவ்வொருவரும் தங்களுடைய உரிமைகளை நிலைநாட்டிக் கொள்வதற்கு எவ்வளவு செலவானாலும், பெரிய வக்கீல்களை வைத்து வாதாடுவார்கள் என்ற நம்பிக்கை உண்டு. எனவே, இந்தக் கட்டணம் நியாயம்தான் என்று தெரிவித்துக்கொண்டு, இதைக் குறைப்பது நியாயம் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். write of Habeas Corpus பற்றிச் சொன்னார்கள். இப்பொழுதும் கூட விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திருத்தத்திலே Habeas Corpus பொறுத்தவரையில் சேர்க்கப்படவில்லை. எனவே அந்தப் பிரச்னையை வற்புறுத்த வேண்டியதில்லை என்று கனம் அங்

பகத்தினர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, இந்தத் திருத்தப் பிரேரணையை ஆதரித்து நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: The question is:—

"That the Tamil Nadu Court Fees and Suits Valuation (Amendment) Bill 1971 (L.A. Bill No. 23 of 1971)" be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration clause by clause.

MR. DEPUTY SPEAKER: There are no amendments to the clauses.

Clauses 2 and 3 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. THIRU S. J. SADIQ PASHA: Sir, I move:—

"That the Bill be passed".

The motion was put and carried and the Bill was passed into law.

## (உ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1971).

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1971) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

The motion was put and carried and the Bill was taken into consideration clause by clause.

MR. DEPUTY SPEAKER: There are no amendments to clauses.

Clause 2 was put and carried.

Clause 1 the enacting Formula and the Long Title were put and carried.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இந்த சட்ட முன்வடிவு மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

The motion was put and carried and the Bill was passed into law.

* 27—7—1971-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



## (ஊ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1971)

THE HON. THIRU P. U. SHANMUGAM: Mr. Speaker, Sir, I beg to move—

"That the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, @ 1971 (L.A. Bill No. 15 of 1971) be taken into consideration.

Under the existing proviso to section 3 (*d*) of the Tamil Nadu Inam Estaes (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 and as per the existing procedure prescribed in rule 5 of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Rules, 1965, only such occupants of the lands in an inam estate who are considered by the manager to be *prima facie* entitled to a ryotwari patta are allowed to be in possession of the land, until the Settlement Officer, the Tribunal and the Special Appellate Tribunal, on appeal, if any, decide the question finally as to who is entitled to ryotwari patta. As the existing provision in the Act regarding determination about *prima facie* entitlement to patta has led to complications and as there is already a special machinery provided for under the Act for deciding the question of grant of patta, the Government consider it unnecessary for the Manager to conduct a parallel enquiry for deciding the same question just to find out whether the occupant of any land is *prima facie* entitled to ryotwari patta or not. The Government also consider that if a person is dispossessed of any land in an inam estate on the basis of a decision arrived at by the manager as a result of the parallel enquiry conducted by the manager, his chances for getting a patta before the regular machinery provided by the Act, will become remote in many cases. The Government have, therefore, proposed to suitably modify the existing proviso to section 3 (d) of the Act. So as to provide that the Government shall not dispossess anyone who is personally cultivating any land in the inam estate, until the Settlement Officer, the Tribunal and the Special Appellate Tribunal, on appeal, if any, decide that such person is not acutally entitled to a ryotwari patta in respect of that land under the provisions of the Act. The Amendment is proposed to be given retrospective effect from the date of the commencement of the principal Act, that is, the 1st January 1964.

The present Bill is intended to give effect to the above proposals.

Sir, I have now briefly indicated the object of the measure. I commend the motion for the acceptance of the House.

@ 6—7—1971-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

MR. DEPUTY SPEAKER: The question is:—

"That the Tamil Nadu Inam Estates (Abolition and conversion into Ryotwari) Amendment Bill 1971 (L.A. Bill No. 15 of 1971) be taken into consideration.

The motion was put and carried and the Bill was taken into consideration clause by clause.

MR. DEPUTY SPEAKER: There are no amendments to the clauses.

Clause 2 was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGHAM: Sir, I move:—

"That the Bill be passed."

The motion was put and carried and the Bill was passed into law.

(எ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சிறு இனும்கள் (எடுத்து விடுதல், ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1971).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சிறு இனும்கள் (எடுத்து விடுதல், ரயத்து வாரியாக மாற்றுதல்) திருத்த சட்ட முன்வடிவு* (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1971) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று கோருகிறேன்.

இப்போது நிறைவேற்றப்பட்ட அதே சட்டம் போல்தான் இதுவும். சிறு இனும்கள் பற்றிய சட்டம். இதையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: The question is:—

"That the Tamil Nadu Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1971 (L.A. Bill No. 34 of 1971) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration clause by clause.

MR. DEPUTY SPEAKER: There are no amendments to the clauses.

Clause 2 was put and carried.

*28—7—1971-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டது.



Clause 1 the enacting Formula and the Long Title were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGHAM: Sir, I move:—

"That the Bill be passed."

The motion was put and carried and the Bill was passed into law.

## (6) அறிவிப்புகள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தமிழ்நாடு 1971-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்கல்) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1971) ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

## (5) அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி

(ஏ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோக தாரர்கள் (உரிமை வழங்கல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1971).

THE HON. THIRU P. U. SHANMUGAM: Mr. Chairman, Sir, I beg to move that the Tamil Nadu Occupants of Kudiviruppu (Conferment of Ownership) Bill,* 1971 (L.A. Bill No. 30 of 1971) be taken into consideration.

As a further measure of agrarian reform, the Government have decided that agriculturists and Agricultural labourers occupying any Kudiyiruppu, that is to say, the site of any dwelling house or hut, should be conferred ownership rights in respect of such kudiyiruppu. If the superstructure in respect of such Kudiyiruppu belongs to any person other than the agriculturist or agricultural labourer, such superstructure also will vest in the agriculturist or agricultural labourer. Compensation is proposed to be given for the property vesting in the agriculturists or agricultural labourers. As it may not be possible for the agrisculturists or the agricultural labourers who are very poor to pay in a lump sum the compensation to the landowners or other persons interested, the Government have taken over the liability to pay the compensation to the landowners or other person interested. The compensation will be payable either in cash or in bond. But, the agriculturists or agricultural labourers should

* Published in the *Tamil Nadu Government Gazette*, Extraordinary, dated 27th July 1971.

[திரு. கே. டி. கே தங்கமணி] [1971 ஜூலை 30

reimburse the Government the amount paid by the Government as compensation. Such reimbursement may be made in such instalments as may be prescribed under the rules.

(Mr. Speaker in the Chair)

The Government have taken power to acquire lands used for common purposes by the occupants of kudiyiruppu and make them available to the occupants of kudiyiruppu to be used for the same common purposes for which they were used. The lands so acquired will vest with the Government and compensation for such lands will be paid by the Government and this amount will not be recovered from the occupants of Kudiyiruppu.

The object of the legislation is to give the large number of agriculturists and agricultural labourers in the State economic security, thus creating conditions that will favour the orderly growth of the agricultural economy and also increased agricultural production.

Sir, I commend the motion for the acceptance of the House.

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்தில் இன்னொரு கருத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையைப் படிக்கும்போது தஞ்சை மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு அவர்கள் குடியிருக்கும் நிலங்கள் சொந்தமாக்கித் தரப்படும் என்று அறிவித்தார்கள். அதையொட்டி இந்தச் சட்டம் வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதுமே இந்தச் சட்டம் அமலாகும். அரசாங்கம் நோட்டிஃபை செய்கிற இடத்தில் எல்லாம் இது அமலாகும்.

தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகள் வாழ்கின்ற குடிசைகள் அல்லது வீடுகள் அவர்களுக்குச் சொந்தமாகவும், நிலம் சொந்தம் இல்லாத நிலையில் வாழ்கின்றவர்களுக்கு அந்த நிலத்தை அரசாங்கம் விலைக்கு வாங்கி உழவர்களுக்குப் பட்டா செய்து கொடுத்துவிட்டு அவர்களிடத்திலிருந்து அந்தப் பணத்தை 15 தவணைகளில் வசூலிக்க இருக்கிறோம். ஒருவேளை மேலே இருக்கும் கட்டடமும் குடியிருப்பவர்களுக்குச் சொந்தமாக இல்லாமல் இருக்குமானால் அதையும் அரசு சொந்தக்காரர்களிடத்தில் இருந்து சேர்த்து விலைக்கு வாங்கி உழவர்களிடத்தில் கொடுத்து 15 இன்ஸ்டால்மென்டில் அதை உழவர்களிடத்திலிருந்து வசூலித்துக்கொள்வது என்று சட்டம் போட்டிருக்கிறோம்.

இடையில் உள்ள நடைபாதை யாருக்கும் சொந்தமில்லாமல் இருக்கக்கூடாது என்பதற்காக அதை அரசாங்கமே அக்வயர் செய்து வைத்துக்கொள்வது என்றும் அதற்குண்டான பணத்தை விவசாயிகளிடம் வாங்குவது இல்லை என்றும் கொண்டு வந்திருக்கிறோம். மிக முக்கியமான இந்தச் சீர்திருத்தச் சட்டத்தை அவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1971 ஜூலை 30]

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, இந்தக் குடியிருப்புச் சட்டம் கொண்டு வருவதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். வரவேற்கிறேன். வெகு காலமாக மனைக்கட்டுக்கள் இல்லாதவர்கள் எல்லாம் சொந்த இடத்தில் இருப்பதற்கான வழிவகை செய்ய வேண்டும் என்று எல்லோராலும் பேசப்பட்டு வந்த ஒன்று. இன்று இந்தச் சட்டத்தின் மூலம் நடைமுறைக்குக் கொண்டு வரப்படுகிறது. எதுவும் சொந்தம் இல்லாத ஒரு குடிமகனுக்கு இது ஒரு பெரிய வரப்பிரசாதமாகும். ஆகவே இதைப் பாராட்டுகிறேன். குடியிருப்பு என்பதற்கு டெபனிஷனில் either as tenant or as licensee என்றிருக்கிறது. சாதாரணமாக குடியிருக்கிறவர்கள் என்றால் பத்திரம் போக்குவரத்து எதுவும் இல்லாது குடியிருந்து வந்திருப்பவர்கள். லைசென்ஸி என்பதில் ஒன்றும் விளங்கவில்லை. ஒருவர் ஒரு நிலத்தில் இருக்கிறார் என்றால் அனுமதி இல்லாமல் இருந்திருக்க முடியாது. ஆகவே யாருடைய நிலத்திலும் இல்லாதவர்களுக்குத் தான் இது பொருந்தும் என்று கருதுகிறேன். ஆகவே அதற்கு ஒரு விளக்கம் தரவேண்டும். அடுத்து, எவ்வளவு இடம் கொடுக்க வேண்டும் என்பது விரிவாக இல்லை.

"Kudiyiruppu" means the site of any dwelling house or hut occupied, either as tenant or as licensee, by any agriculturist or agricultural labourer and includes suchother area adjacent, to the dwelling house or hut as may be necessary for the convenient enjoy ment of such dwelling house or hut".

ஒரு பெரிய இடத்தில் ஒருவர் குடியிருக்கிறார் என்றால் எவ்வளவு இடம் வைத்துக்கொள்ளலாம் என்பது தெளிவாக இல்லை. எவ்வளவு இடம் கொடுக்கப்போகிறார்கள் என்பது தெளிவாக இல்லை. ஆகவே விதிகள் வரும்போது தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டும். கீழத் தஞ்சைப் பகுதியில் சின்ன இடங்களில் குடியிருக்கிறார்கள். குறைவான இடம் உள்ள இடங்களில் பத்து சென்ட் என்று கொடுக்க இடமில்லாமலிருக்கலாம். ஆனால் அதிகமான இடம் உள்ள இடங்களில் பத்து சென்டாவது கொடுக்கவேண்டும். அடுத்து, ஒருவருக்கு பத்து அல்லது இருபது சென்ட் நிலம் இருக்கலாம். அவர் வேறு இடத்தில் இருக்கலாம். அவர் இடத்தில் ஒருவர் குடி இருந்தால் அவரது நிலத்தை குடியிருப்பவருக்கு கொடுக்கவேண்டும். அப்படி வரும்போது அவருக்கு காம்பன்சேஷன் அதிகமாகக் கொடுக்கவேண்டும் என்பது என் கருத்து. ஏனெனில் அவருக்கு அந்த நிலம்தான் சொந்தம். நிலவரி போல 100 மடங்கு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது சொற்பத் தொகையாகும். அதைக் கொண்டு வேறு இடத்தில் அவர் நிலம் வாங்க முடியாது. ஆகவே அவருக்கு மார்கட் வால்யூ காம்பன்சேஷனைக் கொடுக்கவேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில் முதலில் அமலாக்கிவிட்டு பிறகு கொஞ்சங் கொஞ்சமாக எடுத்துக்கொள்ளலாம் என்று கருதுகிறார்கள். முதல் அமைச்சர் அவர்களும் குறிப்பிட்டார்கள். இந்தப் பிரச்னையை இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள் முடித்து விடுங்கள். காம்பன்சேஷன் நிலம் இல்லாதவர்களிடமிருந்து தவணைகளில் வாங்குவது

என்றிருக்கிறது. அப்படி வாங்குவது அவர்களின் சக்திக்கு அப்பாற்பட்டதாக இருக்கக்கூடாது. ஒருவன் தினசரி இரண்டு ரூபாய் சம்பாதிக்கிறான் என்றால் பெரிய தொகையை அவனால் எப்படிக் கொடுக்கமுடியும். ஆகவே முதலில் சர்க்காரிலிருந்து கொடுத்து விடுங்கள். பின்னர் அந்த நிலம் இல்லாதவர், சாதாரணமாகக் கொடுக்கக்கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத் தொடரில் கடைசி நாள் அன்று கடைசி நிகழ்ச்சியாக ஒரு சிறந்த மசோதாவை நாம் விவாதித்துக்கொண்டிருக்கிறோம் என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் இந்த மசோதாவை நான் முழுமனதுடன் வரவேற்கிறேன்.

சென்ற தொடரில்கூட விவசாயிகள் ஒவ்வொருவருக்கும் குடியிருப்பிற்காக ஐந்து சென்ட், விவசாயம் செய்வதற்காக 50 சென்ட் தமிழகத்தில் உள்ள எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய முறையில் பணியாற்றுவேன் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது அதன் ஆரம்பமாக குடியிருப்பிற்காக சில பகுதி நிலங்கள் ஒதுக்கவேண்டும் என்று இந்த மசோதா வந்திருக்கிறது. நடைமுறையில் எந்தளவிற்கு இதை துரிதமாகவும், சீக்கிரமாகவும் கொண்டு வர முடியுமோ அந்த அளவிற்கு அது விவசாயிகளுக்கு பெரிய வசதியாகவும், நன்மையாகவும் இருக்கும். பலரும் இதை எதிர்பார்க்கிறார்கள். இது சட்டமான பிறகு, மற்ற சட்டங்கள் பற்றி எவ்வளவு பிரசாரம் அல்லது விளம்பரம் இவற்றை அரசாங்கம் செய்கிறதோ அதைவிட அதிகமான அளவிற்கு விளம்பரம் செய்யப்பட்டு அவர்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

சமீபத்தில் நற்செய்திகள் எல்லாம் வந்துகொண்டிருக்கின்றன, டெல்லியிலிருந்து. மார்க்கெட் வால்யூ என்றால் நஷ்டஈடு என்பது நம் கொள்கையை கைவிடும் அளவிற்கு நம் நிதி நிலைமை இடம் கொடுக்காமல் போகலாம். சட்டமன்றத்திற்கு அதிகாரம் இருக்கிறது, அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. காம்பன்சேஷன் என்பதை எமௌண்ட் என்று கொண்டுவர முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இங்கு காம்பன்சேஷன் என்று போட்டிருக்கிறார்கள். 7, 11 பிரிவுகள் மற்ற மசோதாக்களில் போடுவதுபோல் போடப்பட்டிருக்கின்றன என்று கருதுகிறேன். ஆகவேதான் அப்பிரிவுகளுக்கு திருத்தங்கள் கொண்டு வந்திருக்கிறேன். ஏழாவது பிரிவின்படி, சாதாரணமாக நஷ்டயீடு நிச்சயித்தவுடன் கோர்ட்டுக்கு அப்பீல் செய்வது என்றிருக்கிறது. கோர்ட் என்றால் சப்-கோர்ட் என்றிருக்கிறது. சப்-கோர்ட்டுக்கு அப்பீல் செய்யவேண்டும். திருப்தி இல்லை என்றால் இரண்டாம் அப்பீல் ஹைகோர்ட்டுக்கு வருவார்கள். இப்போது பலவிதமான அப்பீல்கள் இருக்கும் என்ற முறையில் நியாயமான பணம் கொடுக்கிறார்கள். இதற்காக, பிறகு ஏதாவது ஒரு அமைப்பு ஏற்படுத்த வேண்டும். அவர்கள் முடிவுதான் பைனல் என்றிருக்கவேண்டும்.



"லான்ட் ரிக்கார்ட் ஆப் டெனன்஬ி ஆக்ட், 1968" (18/1968)-ல் என்ன பகுதியிருக்கிறதோ அதையே திருத்தமாகக் கொடுத்திருக்கிறேன். ரெவின்யூ போர்டில் ஆயிரக்கணக்கான மனுக்கள் தேங்கிக் கிடந்தாலும் இந்த மெஷினரி செய்யும் முடிவு கடைசி முடிவு என்றிருக்கவேண்டும். குடியிருப்பிற்கு வருபவர்கள், அவர்கள் தவணையாகக் கொடுப்பது அவர்களின் சக்திக்கு அப்பாற்பட்டதாக இருக்கக்கூடாது. கூடுமான வரையில் அவர்களுக்கு இலவசமாக அளிக்கவேண்டும், நாம் பட்ட கஷ்டத்திற்கு இது கிடைத்திருக்கிறது என்றளவில். ஆக, கொள்கை ரீதியில் கொண்டுவரப்பட்டுள்ள இந்த சிறப்பான மசோதாவை வரவேற்று துரிதமாக இதை அமுல்படுத்த ஆவன செய்யவேண்டும், அதற்கான தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என்று என் விருப்பத்தைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: விவசாயிகளுக்கு இந்த நிலத்தைக் கொடுக்கிறோமென்று சொன்னால் அவர்களே அதை வாங்கிக் கொண்டு குடியிருப்பார்கள் என்று பொருளல்ல. நாம் பி.ப.
ஏற்கெனவே குடியிருப்போரை வெளியேற்றக்கூடாது என்று சட்டம் 2-30
நிறைவேற்றியிருக்கிறோம். அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. நிலத்தை அவர்களுக்குச் சொந்தமாக்கும் சட்டத்தைக் கொண்டு வருகிறோம். இரண்டுக்கும் பெரிய வித்தியாசமில்லை. இரண்டு சட்டங்களில் ஒன்று கோர்ட்டுக்குப் போய் அடிபட்டுப் போய்விடுமானால் ஒரு சட்டம் பாதுகாப்பாக இருக்கும் என்று இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறோம். பாதுகாப்புச் சட்டத்தை நிறைவேற்றி விட்டு இந்தச் சட்டத்தை நிலத்தைச் சொந்தமாக்குவதற்குக் கொண்டு வருகிறோம். தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே ஒரு புதிய திருப்பத்தை இதன் மூலம் உண்டாக்குகிறோம்.

கலைஞர் அவர்களின் தலைமையில் உள்ள இந்த அரசு ஏழைகளுக்கு நிலம் கொடுக்க வேண்டும், அவர்களுக்கு நிலத்தைச் சொந்தமாக்க வேண்டும் என்று பாடுபடுகிறது. இதிலே காம்பன்சேஷன் கொடுக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். காம்பன்சேஷன் கொடுக்காமல் எடுக்க முடியாது. விவசாயிகளிடமிருந்து காம்பன்சேஷன் வாங்கிக் கொடுக்கப்படவில்லை, அரசாங்கமே இதற்கு பொறுப்பு ஏற்றுக் கொள்கிறது. அரசாங்கமே பொறுப்பு ஏற்றுக் கொள்ளவேண்டுமா என்று குறிப்பிட்டார்கள். அப்படிச் செய்தால் அரசாங்கமே காம்பன்சேஷன் சட்டத்தின்படி பெரிய தொகையைக் கொடுக்க வேண்டி வரும் என்றார்கள். நேரிடையாக எடுத்தால் கோர்ட்டுக்கு போனால் செல்லாமல் போனால் நம்முடைய நோக்கம் நிறைவேறாமல் போய் விடும். அதனால் இப்படி விலை கொடுத்து வாங்கி அவர்களுக்கு சொந்தமாக்குகிறோம்.

எவ்வளவு நிலம் அவர்களுக்குக் கொடுக்கப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் மாரிமுத்து அவர்கள் கேட்டார்கள். அவரவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் அந்த நிலம் அவர்

களுக்கு சொந்தமாக்கப்படும். அவர்களுக்கு எவ்வளவு நிலம் தேவை படுகிறது என்பதல்ல, இப்போது எவ்வளவு நிலத்தில் குடியிருக்கிறார்களோ அந்த நிலம் அவர்களுக்குச் சொந்தமாக்கப்பட வேண்டும் என்பதற்காக இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறோம்.

அரசாங்கம் எந்த எந்த இடத்திற்கு இதை அமுலுக்குக்கொண்டு வர இருக்கிறது, தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும் தான் இது கொண்டு வரப்படுமா என்று கேட்டார்கள். நோடிபிகேஷன் மூலம் எந்த எந்த இடங்களுக்குத் தேவைப்படுகிறதோ அங்கு எல்லாம் இது அமுலுக்குக் கொண்டு வரப்படும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: எவ்வளவு நிலம் கொடுக்கப்படும் என்று திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: முடிந்த அளவிற்குக் கொடுப்போம். ஒரு ஏக்கரா அநுபவத்தில் இருந்தால் அந்த ஒரு ஏக்கராவையும் எடுத்துக் கொடுத்து விடுவது என்பதில்லை. எவ்வளவு தேவையோ அதைக் கொடுப்போம். அந்த அளவிற்கு அடமானம் செய்து கொடுப்போம்.

நீதி மன்றத்திற்குப் போவதைப்பற்றிச் சொன்னார்கள். டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டிலே இருக்கிறது. அதன் பிறகு உயர்நீதி மன்றத்திற்குப் போவார்கள் என்று குறிப்பிட்டார்கள். நீதி மன்றத்திற்குச் சென்று பாதுகாப்புச் சட்டம் செல்லாமல் போனால் இவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்குத்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறோம். ஏழை எளிய மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்று செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிலத்தை அரசாங்கமே வாங்கிக் கொடுப்பதால் நீதி மன்றத்திற்கு அழைத்தாலும் விவசாயிகள் வரத் தேவையில்லை. அரசாங்கமே நீதி மன்றத்திற்கு வரும். விவசாயிகளுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்குக் கொண்டு வரப்படும் வரலாறு காணாத சட்டம், இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

Mr. SPEAKER: The question is—

"That the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Conferment of Ownership) Bill, 1971 (L.A. Bill No. 30 of 1971), be taken into consideration".

The motion was put and carried and the Bill was taken into consideration clause by clause.

Clauses 2 to 7 were put and carried.

*Clause 8.*

Mr. SPEAKER: The question is—

"That Clause 8 do stand part of the Bill."



Thiru K. T. K. THANGAMANI: Sir, I move the following amendment:—

For Clause 8, substitute the following:—

"8. *Appeal against order of compensation.*—Any person aggrieved by an order made under sub-section (2) of section 7 may appeal to such authority within such period as may be specified by the Government in this behalf and the decision of such authority, on such appeal, shall be final."

The amendment was duly seconded.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்வதற்கில்லை. அப்படியே நீதி மன்றத்திற்குப் போனாலும் அதனால் பெரிய பாதகம் ஏற்பட்டு விடாது. காரணம் அரசாங்கமே நிலத்தைப் பெற்று, உழவர்களுக்குக் கொடுக்கிறது. அதனால் உழவர்கள் நீதி மன்றத்திற்குப் போக வேண்டியதில்லை. அப்படியே நீதி மன்றத்திற்கு அழைக்கப்பட்டாலும் அரசாங்கத்தை அழைக்க வேண்டியிருக்கும். அரசாங்கம் அழைக்கப்பட்டால் அரசாங்க வழக்கறிஞர் பார்த்துக் கொள்வார்கள். இந்தத் திருத்தத்தை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருத்தம் வற்புறுத்தப்படவில்லையாதலால் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்படுகிறது.

Clause 8 was put and carried

Clauses 9 and 10 were put and carried.

*Clause 11.*

Mr. SPEAKER: The amendment of Thiru K. T. K. Thangamani to this Clause is a consequential amendment to the amendment given by him to Clause 8. As that amendment to Clause 8 had been withdrawn, by leave of the House, this amendment to Clause 11 is disallowed.

Clause 11 was put and carried.

Clauses 12 to 27 was put and carried.

The Schedule was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

The Hon. Thiru P. U. SHANMUGAM: Sir, I move—

"That the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Conferment of Ownership) Bill, 1971 (L.A. Bill No. 30 of 1971), be passed."

The motion was put and carried and the Bill was passed into law.

[திரு. ப. உ. சண்முகம்] [1971 ஜூலை 30

## (3) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

### (ஆ) தமிழ் நாடு 1931-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் விவர அட்டவணைகளைத் திருத்த அரசு பிறப்பிக்கவிருக்கும் வரைவு விதிகள்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் : "தமிழ்நாடு 1931-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1931) 17-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ், மேற்படி சட்டத்தின் 11, 111இ விவர அட்டவணைகளைத் திருத்தும் வண்ணம் மாநில அரசு பிறப்பிக்கவிருக்கும் கீழ்க் காணும் வரைவு விதிகள் மேற்படி பிரிவின் (3) உட்பிரிவில் கண்டுள்ளவாறு ஏற்பளிக்கப்பட வேண்டுமென", முன் மொழிகிறேன்.

#### வரைவு விதி

தமிழ்நாடு 1931-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1931) 17-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு மேற்படி சட்டத்தின் 11, 111 விவர அட்டவணைகளில் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் பின்வரும் திருத்தங்களைச் செய்கிறார்.

#### திருத்தங்கள்

(1) மேற்சொன்ன 11 விவர அட்டவணையில் (1) பத்தியில் 4 இனத்திற்கெதிராக உள்ள (2), (3) பத்திகளில் உள்ள பதிவுகளுக்குப் பதிலாகப் பின்வரும் பதிவுகள் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும் .—

| | |
|---|---|
| "100.00 | 150.00" |

(2) மேற்படி 111 விவர அட்டவணையில் (1) பத்தியில் (4) இனத்திற்கெதிராக உள்ள (2) முதல் (5) வரையுள்ள பத்திகளில் காணும் பதிவுகளுக்குப் பதிலாக, பின்வரும் பதிவுகள் அமைத்துக் கொள்ளப் பட வேண்டும் :—

| | | | |
|---|---|---|---|
| "12.00 | 36.00 | 18.00 | 54.00 |

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

### (இ) தமிழ்நாடு 1966-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் கீழ் வெளியிடப்படவிருக்கும் வரைவு அறிவிப்பு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"தமிழ்நாடு 1966-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 1-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (b) பகுதியின் கீழ் வெளியிடப்பட இருக்கிற அறிவிப்பின் கீழ்க்காணும் வரைவு அப்பிரிவின் (4) உட்பிரிவில் சொல்லியுள்ளபடி ஏற்கப்படுவதாக."



1971 ஜூலை 30]

#### வரைவு அறிவிப்பு.

தமிழ்நாடு 1966-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 12/1966) இந்த அறிவிப்பு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுகிற நாள் முதற்கொண்டு, திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய நகராட்சி நகர்களில் செயலுக்கு வரவேண்டுமெனத் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் அச்சட்டத்தின் 1-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (b ) பகுதியின் கீழ் இதனால் கட்டளையிடுகிறார்.

#### விளக்கக் குறிப்பு.

இம்மாநில அரசின் நிதி வாயில்களைப் பெருக்குவதற்கு அரசு மேற்கொள்ளும் முயற்சியின் பகுதியாக, தமிழ்நாடு 1966-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) விதித்துறைகளைத் திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய நகராட்சி நகர்களுக்கு நீட்டிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. அச்சட்டத்தின் 1-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் ( பகுதியில் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, அரசு அறிவிப்பு வெளியிட்டு குறிப்பிட்ட நகராட்சி நகரில் அல்லது நகரியத்தில் இச் சட்டம் அந்த அறிவிப்பில் குறிப்பிடக் கூடிய நாள்முதல் செயலுக்கு வரவேண்டுமெனக் கட்டளையிடலாம். மேற்கூறியவாறு குறிப்பான விதித்துறை இருப்பதால், மூலச் சட்டத்தைத் திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய நகராட்சி நகர்களுக்கே நீட்டிக்கலாமேயன்றி, மதுரை மாநகருக்கு நீட்டிக்க இயலாது. 1971-ம் ஆண்டு 18-ம் எண் சட்டமன்றப் பேரவை மசோதாவின் 2-வது பகுதியைச் சேர்ந்த ( ) உட்பகுதியில், "நகராட்சிநகர்" என்பதற்கு மதுரை மாநகரையும் உட்படுத்தும் வகையில் பொருள் விளக்கம் கூறப்பட்டுள்ளது. எனவே இத்திருத்த மசோதா சட்டமாக இயற்றப் பட்டபின், மூலச்சட்டம் மதுரை மாநகருக்கு நீட்டிக்கப் படலாம்.

தமிழ்நாடு 1966-ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 1-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (b ) பகுதியின் கீழ் வெளியிடக் கருதியுள்ள அறிவிப்பின் வரைவு, சட்ட மன்றப் பேரவைமுன் வைக்கப்பட வேண்டுமென்றும், சட்டப் பேரவை மாறுதல் அல்லது சேர்க்கை இன்றியோ, மாறுதல் அல்லது சேர்க்கையுடனோ, அவ்வரைவுக்கு ஏற்பளித்தாலொழிய அதனை வெளியிடக் கூடாதென்றும், அத்தகைய ஏற்பு அளிக்கப் படுவதன் மேல் அந்த அறிவிப்பு ஏற்பு அளிக்கப்பட்ட வடிவில் பிறப்பிக்கப்பட வேண்டுமென்றும், அந்த அறிவிப்பு அவ்வாறு பிறப் பிக்கப்படுவதன் மேல், தமிழ்நாடு அரசு இதழில் வெளியிடப்பட வேண்டுமென்றும், அதன் பிறகு அது பயனும் திறனும் உடைத்தாயிருக்குமென்றும் அச்சட்டத்தின் 1-வது பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவில் சொல்லப்பட்டுள்ளது.

எனவே, அவ்வாறே தீர்மானம் கொண்டுவருவதென அரசு கருதுகிறது.

**தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.**

## அறிவிப்புகள்—தொடர்ச்சி.

## (ஆ) வரவு-செலவு கூட்டத் தொடரில் பேரவை நிகழ்ச்சிகள் பற்றிய புள்ளி விவரங்கள்.

MR. SPEAKER : I announce some statistics before the conclusion of this Session.

I. Number of days the Assembly met—36 days.

II. Number of hours the Assembly met—166 hours and 54 minutes.

Number of days allotted for General Discussion—7.
Number of speakers—101.
Number of days the Demands were discussed—21.
Number of Demands discussed—49.
Number of Speakers participated in the Demands—383.
Number of Demands guillotined—one only.

III. Cut Motions—

Number admitted—1,025.

Number of cut motions moved—161.

IV. Rule 41 Notices—

Number for which statements were made—36.

V. Rule 42—Adjournment Motions—

Number received—52.

Number of motions raised in the House and consent withheld—35.

VI. Bills—

Number introduced—26.

Number considered and passed so far—25.

Number referred to Joint Select Committee—1.

Number pending—1.

VII. Rule 82 statements—

Number made—2.

VIII. Government motions—

Number received—9.

Nuumber considered and passed—9.

IX. Reports presented—

Joint Select Committee—1.
Public Accounts Committee—2.
Estimates Committee—3.
Subordinate Legislation Committee—2.
Committee on Government Assurances—1.



X. Questions—

Number answered (starred)—575.
Number answered (unstarred)—84.
Short Notice Questions—4.
Number of Supplementaries—
Tamil—2,281.
English—360
Total number of supplementaries—2,641.

XI. Papers laid on the Table of the House—

A. Statutory Rules and Orders—187.

B. Reports, Notifications and other Papers—205.

பேரவைக் கூட்டம் இன்றோடு முடிவடைகிறது. மீண்டும் கூடும் நாள் குறிப்பிடாமல் பேரவை ஒத்திவைக்கப்படுகிறது.

பின்னர், பேரவை மீண்டும் கூடும்நாள் குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டது.

## (7) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

**Nil.**

### *B. Reports, notifications and other papers.*

196. Return of Assets submitted to the House by the Hon. Speaker, Hon. Minister for Public Health, Hon. Minister for Public Works, Hon. Minister for Electricity and Members of the Legislative Assembly (*vide* names below) :
As on 31st March 1971—

1. Hon. Thiru K. A. Mathialagan, Speaker.
2. Hon. Thiru K. Anbazhagan, Minister for Public Health.
3. Hon. Thiru S. J. Sadiq Pasha, Minister for Public Works
4. Hon. Thiru O. P. Raman, Minister for Electricity.

*Members.*

1. Thiru S. Alagarswamy.
2. Thiru K. Andi alias Gurusamy.
3. Thirumathi Alda M. Fowler.
4. Thiru S. Arumugam.
5. Thiru M. Raman.
6. Thiru N. Kittappa.
7. Thiru O. N. Sundaram.
8. Thiru A. K. Subbiah.
9. Thiru Kuzha Chelliah.
10. Thiru P. Soundarapandian.
11. Thiru S. Duraisamy.

12. Thiru M. C. Thooyamani.
13. Dr. R. Nainamalai.
14. Thiru N. S. Balaraman.
15. Pulavar C. Palanisamy.
16. Thiru R. Ponnappa Nadar.
17. Thiru T. Ponnumalai.
18. Thiru N. Marudachalam.
19. Thiru P. S. Muthuselvan.
20. Thiru R. R. Munusamy.
21. Thiru E. Ramasamy.
22. Thiru C. V. Velappan.
23. Thiru K. Vezhavendan.
24. Thiru K. S. Kothandaramiah.

197. Eleven Return of Assets as on 31st March 1971 submitted to the House by the Hon. Members of the Legislative Council.

@ 198. The Tamil Nadu General Sales Tax (Third Amendment) Bill, 1971 (L.A. Bill No. 29 of 1971) with Annexure.

@ 199. The Tamil Nadu Occupants of Kudiyiruppu (Conferment of Ownership) Bill, 1971 (L.A. Bill No. 30 of 1971).

@ 200. The Tamil Nadu Agricultural University (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 31 of 1971) with Annexure.

£ 201. " Tamil Nadu—An Economic Appraisal 1971 "

£ 202. Report of the Joint Select Committee on the Tamil Nadu Town and Country Planning Bill, 1971 (L.A. Bill No. 1 of 1971) (Tamil).

£ 203. Report of the Committee on Estimates on the Industrial Development Corporation.

& 204. The Tamil Nadu Fleet Operators Stage Carriages (Acquisition) Bill, 1971 (L.A. Bill No. 33 of 1971).

& 205. The Tamil Nadu Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1971 (L.A. Bill No. 34 of 1971) with Annexure.

---

@ Despatched to Members on 28th July 1971.
£ Placed on the Table of the House on 29th July 1971.
& Despatched to Members on 29th July 1971.